உர்தூக் கதைகள் I

கிருஷ்ண சந்தர்

ராஜேந்திர சிங் பேதி

இஸ்மத் சுக்தாயீ

தமிழாக்கம்

ரா. வீழிநாதன்

நேஷனல் புக் ட்ரஸ்ட், இந்தியா

புது தில்லி

First Published 1978 (1900)

Reprinted 1987 (1909)

விலை ரூ.16-50

URDU SHORT STORIES I (TAMIL)

Published by the Director, National Book Trust, India, A-5, Green Park, New Delhi-110016 and Printed by J.K. Offset Printers, Matia Mahal, Delhi-110006

முன்னுரை

உர்தூ இலக்கிய வளத்துக்கு மூவகை ஊற்றுக்கள் காரணம். ஒன்று சம்ஸ்கிருத–பிராகிருத ஊற்று, இரண்டாவது அரபி–பார்ஸி ஊற்று, மூன்றாவது ஆங்கிலம்–அந்நிய ஐரோப்பிய மொழிகளை ஆதாரமாகக் கொண்டு பெருகிய ஊற்று. ஆசியப் பரம்பரையின் சொத்தாக உர்தூ மொழிக்கு நாடோடிக் கதைகள், இலக்கியக் கதைகள், கவிநயம் கொண்ட உரைநடைக் கதைகள் ஆகியவை கிடைத்துள்ளன. அவற்றினூடே சின்னஞ்சிறு உபகதைகளும் மதிப் பில்லா மாணிக்கமெனப் பொதிந்துள்ளன.

வாழ்க்கையில் ஆகட்டும், இலக்கியத்தில் ஆகட்டும்; பரம்பரை யும் புதிய மாற்றங்களும் ஓர் ஒழுங்குமுறையில் விரவியுள்ளன. இவ் விரண்டுக்கும் இடையே சில சமயம் மோதல் நிகழ்வதுண்டு. சில சமயம் ஒருமைப்பாடும் இணைந்து செல்லும் பாங்கும் காணப்படுவ துண்டு. இன்றைய உர்தூ இலக்கியத்துக்கு முதலீடாகப் பழைய பரம்பரைகளும் புதிய மாற்றங்களும் பெரு நிதியெனச் சேர்ந் துள்ளன.

நாம் நமது ஆராய்ச்சி நோக்கைக் கடந்தகாலத் தொலைவுக்கு இட்டுச் செல்வோமானால், 1857-ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த உர்தூ மொழியில் வாரச் செய்தித் தாள்கள் வடநாட்டிலிருந்தும் தென்னாட்டிலிருந்தும் வெளிவந்துள்ளதைக் காண்போம். அவற்றில் செய்திகள்கூடக் கதைகளாகவே தரப்பட்டுள்ளன. சில சமயம் சின்னஞ்சிறு புனைகதைகளும் இடம் பெற்றுள்ளன. 'ஃபவாயதுல் நாஜரின்' பத்திரிகையின் ஆசிரியர் மாஸ்டர் ராமசந்திர தேஹல்வியின் பணிகள் இந்தத் துறைக்குப் பெருமதிப்புச் சேர்த் துள்ளன.

மேலைநாட்டுக் கதைகள் உர்தூச் சிறுகதை இலக்கியத்தின் உருவ அமைப்பு, படைப்புமுறை, சீரமைப்பு ஆகியவற்றுக்கு இந்த இரு பதாம் நூற்றாண்டில் வெகுவாக உதவியுள்ளன. சொல்லப் போனால் தன் நிறமே ஏற்றியுள்ளன. இதில் சிறிதும் ஐயம் இல்லை. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் கற்பனைமிகு புனைகதைகளே ஓங்கி யிருந்தன. மேலைநாடுகளிலுங்கூட முதலில் இத்தகைய புனைகதைப் போக்குத்தான் வளம் பெற்றிருந்தது. அதே போக்கு உர்தூச் சிறு

கதைகளிலும் படிந்து தன் முத்திரையைப் பதித்தது. பொதுவாக உர்தூ இலக்கியத்தின் போக்கே அதீதக் கற்பனையில் நாட்டம் கொண்டதாயிருந்தது. அதுவும் கதைகளும் புனைகதைகளும் கற்பனைச் செழுமையையே தம் பிரதான இயல்பாகக் கொண்டிருந்தன. எனவே, இருமுறைகளும் கைகோத்துக்கொண்டு வளர்ந்தன. கற்பனைப் புனைகதைகளுக்குப் பின் ஐரோப்பாவில் யதார்த்தவாதம் தொடங்கியது. உர்தூக் கதை உலகிலும் கரையில் மோதும் கடல் அலையென இந்தப் போக்குத் தலை எடுத்தது. யதார்த்தவாதம் தோன்றிப் புனைகதைகளின் கற்பனைச் செழுமையை வேரோடு வெட்டி வீழ்த்திவிட்டது என்று கூறுவது உசிதமாகாது. இருபதாம் நூற்றாண்டில் வெகுகாலம்வரை கற்பனைப் புனைகதைகளும் யதார்த்தவாதமும் இடைவெளிவிட்டு ஓடும் இரு ஆறுகளென இணைந்து பிணைந்தே ஓடின. சில சமயம் ஒன்றையொன்று தழுவித் தன் நிறம் ஏற்றியதும் உண்டு. இலக்கியம், வாழ்க்கை இவற்றுக்கிடையே அப்படி என்ன இரும்புச் சுவர், தாண்ட முடியாது, தீண்ட முடியாது என்று சொல்லும் அளவுக்கு? இன்னொரு விரிவான நோக்கையும் மனத்தில் கொள்ளவேண்டும். கலைஞன் யதார்த்தத்தின் ஆழத்தில் முக்குளித்தால், புனை கற்பனையின் புதிய புதிய நீரோட்டங்களையும் காணமுடியுமே! யதார்த்தத்தின் ஆழத்தில் படிப்படியாக இறங்கினால், அதற்குள்ளே வியக்கத்தகு புதுக் கற்பனைகள் அலைபுரண்டு அதிசயிக்கவைக்குமே! எனவே, இரண்டும் இணைந்து படிப்பவர்களைப் பரவசப்படுத்திப் புதுக் கற்பனைகளையல்லவா கிளறிவிடும்! பார்க்கப் போனால் புனைக் கற்பனைக்குள்ளும் உறுதியானதோர் உண்மை ஒளிந்திருக்கிறது. பரந்த நோக்குக் கொண்ட கலைஞன் புனைகதைக் கற்பனைநிலையிலுங்கூட யதார்த்தத்தின் அற்புதங்களைக் காணவும், காட்டவும் செய்கிறான்.

உர்தூக் கதை உலகத்தை மற்றுமொரு மகத்தான புவிசூழ் இயக்கமும் ஆட்கொண்டது. அதனை முற்போக்கு இயக்கம் என்பர். உண்மையைக் கேட்டால், இந்த இயக்கம் உலக இயக்கத்தில் ருஷ்யாவின் மக்கட் புரட்சிக்கு முன்பே தொடங்கிவிட்டது. ருஷ்ய, பிரஞ்சு, ஆங்கில, உர்தூ இலக்கியங்களில் 1918-ஆம் ஆண்டுக்கு முன்பே இந்த முற்போக்கு வழக்குகள் காணக் கிடைக்கின்றன. ஆனால் முற்போக்கு இயக்கம் ஓர் ஒழுங்குமுறையுடன் இயங்கத் தொடங்கியது ருஷ்யப்பொதுவுடைமைப் புரட்சிக்குப்பின்பே ஆகும். இதில் எள்ளளவும் ஐயம் இல்லை. இந்த இயக்கத்தைத் தோற்று

வித்தவர்கள் ஆய்வில் சிறந்து சமூகத்துக்கு உகந்து புரட்சி புரியும் யதார்த்தம் இலக்கியத்துக்கு இன்றிமையாதது எனக் கண்டனர்; அவ்வாறே பிரகடனப்படுத்தினர். உர்தூக் கதையில் இவ்வியக்கம் 1936-ஆம் ஆண்டிலிருந்து முழுமூச்சுடன் வலுவாக ஒலிக்கிறது. இன்றுவரை முற்போக்கு எழுத்தாளர்கள் இத்துறைப் படைப்புத் தொண்டில் ஈடுபட்டிருக்கிறார்கள். 1936 முதல் 1946 வரையில் இந்த முற்போக்குச் சாகுபடியில் நிறை செல்வமே கிட்டியிருக்கிறது. இதற்கிடையிலும் இதற்குப் பின்னரும் இந்த இயக்கத்தை எதிர்த்துப் பல்முனை எதிர்ப்புகளும் எழுந்ததுண்டு.

முற்போக்கு இயக்கத்தைச் சேர்ந்த எல்லாக் கதை ஆசிரியர்களுமே பொதுவுடைமையாளர்கள் அல்ல. உர்தூ முற்போக்கு வட்டம் பல்வகை வண்ணக் கலவை கொண்டது. ஆயினும் முற்போக்கு எழுத்தாளர்களுக்கும், கவிஞர்களுக்கும் இடையே சில பொதுவான உடன்பாடுகளையும் மதிப்பீடுகளையும் காண்கிறோம். ஓர் அடிப்படை விஷயத்தைப்பற்றி முன்பே குறிப்பிட்டோம். அதைத் தவிர நமது முற்போக்கு எழுத்தாளர்களும் கவிஞர்களும் நாட்டுப்பற்றுக் கொண்டவர்கள் என்பதோடு பாஸிஸ விரோதிகள்; ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள். உர்தூக் கதாசிரியர்களிடமும் இதன் விளைவு தன் நிறம் காட்டியுள்ளது.

முற்போக்கு உச்சநிலையில் இருந்த காலத்திலேயே உர்தூக் கதையில் உள்ளப்பாங்கை விண்டு வைக்கும் முறைதோன்றி ஆழ வேரும்விட்டு விட்டது. நாளடைவில் இந்த மன ஆராய்ச்சிப் போக்கு தீவிரமுற்று இரகசியவாதத்துடன் கலந்து புதியதொரு புதுமைப் போக்கையும் படைத்துக்கொண்டது. இந்தப் புதுமை ஓரளவு முற்போக்கு மிகத் தீவிரமுற்றதன் விளைவே. இந்த நாட்களில் இளம் உர்தூ எழுத்தாளர்கள் பலர் இப்புதுமை மோகத்தில் உயிராக இருக்கிறார்கள்; உயிரையே விடுகிறார்கள். என்றாலும் இப் புது யுகத்தில், நாம் உர்தூ எழுத்தாளர்களிடையே மேற்கூறிய போக்கும் இயக்கமும் ஆக்க பூர்வமான சாதனைகளுக்கு அடிகோலியிருப்பதைக் காண்கிறோம்.

உர்தூவில் கற்பனைப் புனைகதைகள் எழுதுவதில் தேர்ந்தவர்களாக ஸஜ்ஜாத் ஹைதர் 'யல்தரம்', நியாஸ் ஃபதேஹ்புரி, லதீஃப் அஹ்மத் அக்பராபாதி, ஹிஜாப், இம்தியாஜ் அலீ தாஜ், மஜ்னூ கோரக்புரி, மீர்ஜா அதீப், குர்ரதுல் ஐன் ஹைதர் ஆகியவர்களைக் குறிப்பிடலாம். இவர்களைத் தவிர, இன்னும் எத்தனையோ எழுத்தாளர்கள் புனைகதைகள் எழுதிவந்துள்ளார்கள். ஆனால் யதார்த்த வாதத்தின் முன்னோடியாகப் பிரேம்சந்த் அவர்களைத்தான் கூற

வேண்டும். அவருடன் சுதர்சன், ஆஜம் குரைவீ, அலி அப்பாஸ் ஹுஸைனீ போன்ற வேறு பல நல்ல எழுத்தாளர்களும் தோன்றினார்கள். இதில் சுவையானதொரு விஷயம் என்னவென்றால், யதார்த்தவாத இயக்கம் கற்பனைப் புனைகதைகளையும் பற்றுக் கொண்டது. எனவே, புனைகதையாளர்களில் பலர் ஓரளவுக்குச் சமுதாய யதார்த்தவாதத்தின்மீதும் அக்கறை காட்டினார்கள். பிரேம்சந்த், அலி அப்பாஸ் ஹுஸைனீ இவ்விருவரது பல கதைகள், முற்போக்கு வெள்ளத்திலும் கலைப் படகை வெகு நயமாக இவர்கள் செலுத்திப் புகழ் ஓச்சியிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றன. உர்தூக் கதை உலகத்துக்கு முற்போக்கு இயக்கம் பல நல்ல எழுத்தாளர்களைத் தந்திருக்கிறது. ஸ்ஆதத் ஹஸன் மண்டோ, அக்தர் ஹுஸைன் ராய்புரீ, ரஷீத்ஜஹான், கிருஷ்ண சந்தர், ராஜேந்திர சிங் பேதீ, இஸ்மத் சுக்தாயீ, அஹ்மத் நதீப் காஸிமீ, மும்தாஜ் முத்ஃபீ, ஹயாதுல்லாஹ், அன்ஸாரி முதலியவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். தவிர, முற்போக்கு இயக்கம் கொடி கட்டிப் பறந்த காலத்தில், உர்தூ இலக்கியத்திலும் காவியத்திலும் மட்டும் அன்றி, நான் அறிந்தவரையில் இந்தியாவின் ஏனைய மொழி இலக்கியங்களிலும் காவியங்களிலுங்கூட முற்போக்கு மேகங்கள் சூழ்ந்து மூட்டம் போட்டு ஆட்டம் காட்டியுள்ளன.

இலக்கியத்திலும் வாழ்க்கையிலும் காணப்படும் போக்குகளையோ, காலநிலைகளையோ, வரன்முறைகளையோ வரையறுத்து ஓர் எல்லைக்கோடு கட்டமுடியாது. எனக்குத் தெரிந்தவரையில் உர்தூக் கதைகளில் மனத்தத்துவப் பாகுபாடும் ஒருமைப்பாடும் ஓர் எல்லைக்கு முற்போக்கு உச்சகட்டத்தில் இருந்த காலத்திலேயே புதுமை நாட்டம் காண முற்பட்டுவிட்டது. புகழ் பெற்ற பல முற்போக்கு எழுத்தாளர்கள் மனித மனத்தின் சுக—துக்க உணர்வுகளையும், ஆசாபாசங்களையும் அற்புதமான முறையில் ஆழம், அகலம், பரப்பு, கோணம் என்று பலவகையிலும் சிறப்புற எடுத்துக் காட்டத் தொடங்கிவிட்டனர். ராஜேந்திர சிங் பேதீ, ஸஆதத் ஹஸன் மண்டோ, கிருஷ்ண சந்தர், இஸ்மத் சுக்தாயீ, மும்தாஜ் முத்ஃபீ போன்றவர்களின் பல கதைகள் மனத்தத்துவ அடிப்படையில் அபூர்வச் சாதனை புரிந்து சிறப்புப் பெற்றுள்ளன என்பதை இங்கு இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது சாலப்பொருந்தும். உள்ளக் கிடக்கை ஆராய்ச்சியில் அதிகக் கவனம் செலுத்தி, அதற்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தவர்கள் ஹஸன் அஸ்கரீ, மோஹ்ஸீன் அஜீமாபாதீ இருவரும் ஆகும். ஹஸன் அஸ்கரீ அவிவேகத்தினின்று

தோன்றும் அலைகளை விவேகத்தின் தரத்துக்கு இட்டுச் சென்று வளையவிடுவதில் வல்லவர். அவருடைய கதை 'ஹராம் ஜாதீ' (பாவிப் பெண்) இதற்கு நல்லதோர் உதாரணம். ஆனல் மோஹ்ஸின் அஜீமாபாதீ மனத்தத்துவப் புதிர்களைத் தம் கதைகளின் தலைப்பாக்கி, கருப்பொருளாக்கிக் கதைகள் புனைவதில் தேர்ந்தவர். அவரது 'அநோகீ முல்குராஹட்' (அதிசயப் புன்முறுவல்) என்னும் கதை சிறப்பும் சீர்மையும் பெற்றது. ஷஹீத் அஹ்மத் தேஹ்ல்வீ வெளியிட்டுள்ள 'ரேஜா ஐ மீனு' என்னும் கதைத் தொகுப்புக்குப் பெருமை சேர்க்கிறது இக்கதை. சொல்லப் போனல் குர்ரதுல் ஐன் ஹைதரின் ஆரம்பகால கதைகளில் அவிவேகமும் விவேகமும் பெருக்கெடுத்து ஓடி இயல்பான இணைப்பின்மையை எடுத்துக் காட்டுகின்றன. ஆனல் வெறியை விரட்டித் தெளிவைப் படைத்து உயருகின்றன.

மண்ணின் பாண்மையும் இயற்கையின் இயல்பான மணத்தையும் நன்கு உணர்ந்து பாத்திரப் படைப்பு, சம்பவக் கோப்பு, சூழ்நிலைச் சிருஷ்டி ஆகியவற்றில் தன் அறிவைக் கலைநயத்தோடு பயன்படுத்தினல்தான் எந்த ஒரு சிறந்த கதை எழுத்தாளனும் வெற்றி காண முடியும் என்பது தெளிவு. என் கருத்துக்கு எட்டியமட்டில், ராஜேந்திர சிங் பேதீக்கு மனத்தத்துவம்பற்றிய ஆராய்ச்சியில் அபார அறிவாற்றல் இருக்கிறது. தமது இவ்வாற்றலை அவர் கலைநயத்தோடு பயன்படுத்தி வெற்றி காண்கிருர். அவருடைய ஒரு சில கதைகள் தொய்ந்து தளர்வு கண்டுள்ளன என்பது உண்மையே. மோஹ்ஸின் அஜீமாபாதீயின் கலைச்செழுமையை அவருடைய மனத்தத்துவம் அழுத்திவிட்டுப் பெரும்பாலும் மேலோங்கி நிற்கிறது. ஆனல் மண்டோ, மும்தாஜ் முத்ஃபீ, கிருஷ்ண சந்தர், இஸ்மத் சுக்தாயீ முதலியவர்கள் மிகக் குறைவாகவே இந்தப் பலவீனத்துக்கு இறையாகிருர்கள்.

இந்தத் தொகுப்பில் கிருஷ்ண சந்தர், பேதீ, இஸ்மத் சுக்தாயீ ஆகியவர்களது கதைகள் இடம் பெற்றிருப்பதால், அவர்களைப் பற்றிச் சிறிது விரிவாகச் சொல்ல விரும்புகிறேன். அதற்குமுன் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்திவிடவும் விரும்புகிறேன். அதாவது மற்றக் கலைஞர்களின் படைப்புத்திறன் மங்கிவிடவில்லை; மடிந்தும் போகவில்லை. உர்தூக் கதை உலகில் அவர்களது பரம்பரை ஏற்படுத்திய விளைவு எள்ளளவும் அழியவோ ஒழியவோ இல்லை. இன்றைக்கும் புது மெருகு குலையாமல், ஏற்றமும் மாற்றமும் கூட்டித் தனித் தகைமையோடு தன்னொளி பளிச்சிட எழுதி, குர்ரதுல் ஐன்

ஹைதர், காஜீ அப்துஸ் ஸத்தார், கயாஸ் அஹ்மத் கத்தீ போன்ற இன்னெரன்ன நல்ல பல புதிய எழுத்தாளர்கள் உர்தூக் கதைக் களஞ்சியத்தை விரிவாக்கிப் பெருமை சேர்த்து வருகிருர்கள். புதுமைப்பற்றுக் கொண்ட குழுவிலுங்கூடச் சில நல்ல கதையாசிரியர்கள் தோன்றியுள்ளார்கள். அவர்கள் புதுப்புது வடிவங்களில், புதுப்புது வகைகளில், புதுப்புது உத்திகளில் சங்கேதக் கதைகளும் பகுத்துணர்வுப் படைப்புகளும் வழங்கி இலக்கிய மணம் கூட்டுகிருர்கள்.

கிருஷ்ண சந்தர் ஏராளமாக எழுதியிருக்கிருர். அவரது ஆரம்ப காலக் கதைகள் கற்பனைவளம் கொண்ட புனைகதைகள். ஆயினும் அவர் படைப்புகளில் ஆரம்பம் முதற்கொண்டே, யதார்த்தத்தை ஊடுருவிப் பார்க்கும் ஆற்றல் கற்பனைப் புனைகதைகளையும் மேவி நிற்பது புலனுகிறது.

ஆற்றல்மிகு சிறந்த எழுத்தாளன் கற்பனைப் பெருக்கையும் யதார்த்தத்தையும் ஒருங்கிணைத்து அற்புதம் நிகழ்த்திக் காட்ட முடியும் என்பதே என் கருத்து.

கிருஷ்ண சந்தர் உர்தூவில் மட்டும் புகழ் பெற்ற எழுத்தாளர் அல்ல. அவருடைய கதைகளில் பெருமளவு கதை உலகிற் சிறந்த கதைகளாக இடம் பெறத் தக்கவை. கிருஷ்ண சந்தர் நுண்ணிய நோக்குக் கொண்ட சிந்தனையாளர், மனிதத்தன்மை மிக்கவர், யதார்த்தத்தை யதார்த்தமாக அணுகித் திறம்படச் சித்திரித்திருக்கும் சிறந்த சிறுகதை எழுத்தாளர். அவருடைய நடையிலே நல்ல ஓட்டம் உண்டு. இனிமை, எளிமை, ஒளி, நறுமணம் எல்லாமே உண்டு. அதோடு அவர் வாழ்வின் கறுமைக் கறை படிந்த பகுதிகளையும் திறம்படச் சித்திரிப்பதில் வல்லவர்.

ராஜேந்திர சிங் பேதீயின் கலை தட்டிக் கொட்டிச் செப்பனிடப் பட்டது; மெருகேற்றப்பட்டது. அவர் கதைகளில் ஆழமும் வீச்சும் கம்பீரமும் காணப்படும். அவரும் உயர்ரக யதார்த்தவாதி. ஆனுல் அவருடைய முற்போக்கு நோக்கும் மனிதாபிமானம் காட்டும் உபதேசப் போக்கும் வெகு அடக்கமானவை. கலையென்னும் மதுக் கலசத்திலிருந்து வழிந்து கோப்பையில் யாரும் அறியாமல் நிறைந்து தன்னை மிகப்படுத்திக் காட்டிக்கொள்வதில்லை. பேதீயின் கதைகளில் கலை அம்சம் அவருடைய இயல்புக்கும் கலையார்வத்துக்கும் ஏற்பக் கச்சிதமாக அமைந்திருக்கிறது. அவர் மனத்தத்துவ ஆராய்ச்சியை வெகு கலைநயத்தோடு அணுகுகிருர். கிருஷ்ண சந்தரின் நடை பேதீயின் நடையைக் காட்டிலும் மாறுபாடானது. ஆனுல்

இருவருமே கலையின் நியதியைக் கதையின் இயல்போடு பொருத்தித் தேவையைத் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டுபவர்கள்.

இஸ்மத் சுக்தாயீயும் உயர்ந்த கலைஞர்களில் ஒருவர். அவர் உர்தூ இலக்கியத்திற்குப் பெருமதிப்புச் சேர்க்கும் பல கதைகளை உருவாக்கி யுள்ளார். அவர் சமூகத்தை ஆழநோக்கும் ஆற்றல் பெற்றவர். அதோடு மனத்தத்துவத்தின் சிக்கலான பிரச்னைகளை நன்கு உணர்ந்தவர். அவர் நடையில் தனித்தன்மையைக் காணலாம். பெண்களின் நாவை நயம்பட எடுத்துக் காட்டுவதில் இணையற்றவர்.

கிருஷ்ண சந்தர், பேதீ, இஸ்மத் மூவருமே உர்தூக் கதை என்னும் பூச்செண்டுக்குப் பெருமை சேர்க்கும் மிகச் சிறந்த நறுமலர் கள். அவர்களுடைய சிறப்பு மிகுந்த கதைகளின் தேர்ந்தெடுப்பு விஷயத்தில் கருத்து வேறுபாடு இருக்கலாம். இருந்தாலும் இத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் கதைகள் உர்தூ மொழியில் உயர்ந்து நிற்கும் மூன்று கலைஞர்களின் முதல்தரக் கதைகள் என் பதில் ஐயம் இல்லை.

தலைவர், உர்தூத் துறை,
பட்னா பல்கலைக் கழகம்

அக்தர் ஔரேன்வி

எழுத்தாளர் அறிமுகம்

கிருஷ்ண சந்தர்

கிருஷ்ண சந்தர் உர்தூவில் மிகப் புகழ் வாய்ந்த கதையாசிரியர். இவருடைய கதைகளில் பெருமளவு முதல்தரமானவையாகக் கருதப்படுகின்றன. கிருஷ்ண சந்தர் வாழ்க்கைப்பற்றும் மனிதாபிமானமும் கொண்ட ஆசிரியர். இவருடைய கதை நடையிலே ஓர் அபூர்வ ஓட்டமும் பிடிப்பும் இருக்கும். அதில் இனிமை, எளிமை, ஒளி, மணம் ஆகியவை உண்டு. இவர் வாழ்க்கையின் கருமைக்கறை படிந்த பகுதிகளையும் தரமாகத் திறம்படச் சித்திரிக்கும் வல்லமை பெற்றவர்.

ராஜேந்திர சிங் பேதீ

ராஜேந்திர சிங் பேதீயும் உர்தூ இலக்கியத்துக்குப் பெருமை சேர்க்கும் புகழ் பெற்ற கதாசிரியர். இவருடைய கலைத்திறன் கீர்த்தியானது; செம்மையானது. இவருடைய கதைகளில் ஓர் அழுத்தத்தையும் ஆழத்தையும் காணலாம். பேதீ முதல்தரமான உண்மை விரும்பி. இவருடைய நடை, கலை ஆகியவை இவர் இயல்புக்கு இயந்தவை. இவர் மனிதனின் யதார்த்த வாழ்க்கையைக் கலை நுணுக்கத்துடன் விமரிசிப்பதில் வல்லவர்.

இஸ்மத் சுக்தாயீ

இஸ்மத் சுக்தாயீ ஓர் உயர் தரப் பெண் எழுத்தாளர். இவர் உர்தூ இலக்கியத்துக்குப் பல நல்ல கதைகள் தந்துள்ளார். இவர் வாழ்க்கையை, அதன் யதார்த்த நிலையை நன்கு ஆழ்ந்து பயின்றிருக்கிறார். மனிதனின் மனநிலையையும் அதன் முடிச்சுகளையும் நன்கு உணர்ந்தவர். இஸ்மத்தின் நடையில் திறமை பளிச்சிடுகிறது. பெண்களின் இயல்பையும் நாவையும் அப்படியே படம் பிடித்துக் காட்டுவதில் இணையற்றவர்.

கிருஷ்ண சந்தர், பேதீ, இஸ்மத் மூவரும் உர்தூக் கதை உலகத்தின் எழில்மிகு மலர்கள். இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள இவர்களது கதைகள் உர்தூ மொழிக்கும் இலக்கியத்துக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் மூன்று மாபெரும் முதல்தர ஆசிரியர்களின் படைப்புகள் ஆகும்.

பொருளடக்கம்

முழு நிலவு

ஏப்ரல் மாதம். வாதுமைக் கிளைகள் பூக்களால் கனத்தன. காற்றில் கடும் பனிக்குளிர் தோய்ந்திருந்தாலும் இளவேனிலின் எழில் கூடத் தொடங்கியிருந்தது. உயர்ந்த மலைச் சிகரங்களின் அடிவாரத்தில் வெல்வெட்டை நிகர்த்த பசும்புற்களின்மீது அங்கங்கே பனித்துளிகள் வெண்ணிற மலர்களுக்கு நிகராகப் புன்னகை பூத்து நின்றன. அடுத்த மாதத்துக்குள் இவ்வெள்ளைப் பனி மலர்கள் இதே பசும்புற்களுக்குள் அடங்கி ஐக்கியமாகி விடும். ஆம், பசும்புற்கள் தலைதூக்கி மேலும் பசுமை பெற்று மிளிரும். வாதுமைக் கிளைகளில் பச்சை நிற வாதுமைப் பிஞ்சுகள், புஷ்பராகத்தின் நிறம் ஏற்றுப் பளிச்சென்று காட்சி தரும். நீலநிற மலை முகடுகளை மூடியிருக்கும் வெண்பனி விலகி ஓடி விடும். அதோ ஏரிப் பாலத்தை ஒட்டினாற்போல் ஓடுகிறதே, ஒற்றையடிப் பாதை, அது தூசியைக் கிளப்பத் தொடங்கிவிடும். செம்மறி ஆட்டுக் கூட்டம் பழக்கமான 'பாஆ'க் குரல் எடுத்துக் கூவி அப்பாதையை நிறைக்கும். அப்புறம்...? வானளாவிய மலைச் சிகரங்களின் அடிவாரத்தில் ஆடு மேய்ப்பவர்கள் ஐப்பசி–கார்த்திகை மாதங்களிலிருந்து அவற்றின் 'உடல்களில் வளர்ந்து தொங்கும் அடர்த்தியான ரோமங்களைக் கத்தரிக்கத் தொடங்குவார்கள்; கத்தரித்தவண்ணமே இனிய குரல் எடுத்துப் பாடவும் செய்வார்கள்.

ஆனால் இது ஏப்ரல் மாதத் தொடக்கந்தானே? அதனால் இன்னும் மலைச் சிகரங்களில் முளைத்திருந்த மரங்கள் துளிர்விடக் கூடத் தொடங்கியபாடில்லை. இன்னும் மலைகளில் உறைபனி படிந்தேயிருந்தது. ஒற்றையடிப் பாதையில் ஆடுகள் இன்னும் நடமாடவோ குரல் எடுத்துக் கூவவோ தொடங்கவில்லை. இன்னும் டைமல் ஏரியில் தாமரைத் தீபங்கள் பொருத்தப்படவில்லை. ஏரி நீர் உருகிப் பெருகிக் கரும்பச்சை நிறம் ஏற்றால்தானே தன் இதயப் பரப்பில், வசந்தம் காட்டும் வண்ணக் கோலங்களை ஏந்திக் கணத்துக்குக் கணம் களுக்குச் சிரிப்பை உதிர்க்க முடியும்? ஏரி நீர்ப்

பரப்பு அழகின் அத்தனை உருவங்களையும் எங்கேதான், எப்படித் தான் ஒளித்து வைத்திருந்ததோ தெரியவில்லை! பாலக்கரையை ஒட்டினாற்போல வாதுமைக் கிளைகளில் மொட்டு வைக்கத் தொடங்கியிருந்தது என்னவோ மெய்தான். ஏப்ரல் மாதத்துப் பின்னிரவில், வாதுமை மலர்கள் கண் விழிக்கும்பொழுது இள வேனிலின் வருகையை அறிவிக்கிறாற்போல் ஏரி நீரில் தங்கள் மலர்ப் படகுகளை மிதக்கவிடும். சின்னஞ்சிறு மலர் ''ஷிகாரா''க்கள், நீரின் மேற்பரப்பில் நடனமாடியவண்ணம் வசந்தத்தின் வருகையை எதிர்நோக்கி நிற்கும் என்பதும் உண்மைதான்.

பாலத்தின் கிராதியில் சாய்ந்தவாறு நான் வெகுநேரமாக அவளை எதிர்பார்த்துக்கொண் டிருந்தேன். மூன்றாவது யாமமும் கழிந்து மாலைப்போது மலை இறங்கி வரத் தொடங்கியிருந்தது. புல்லர் ஏரிக்குப் போகவேண்டிய ''ஹௌஸ் போட்''கள் பாலத்தின் கருங்கல் வளைவுகளின் இடைவழியே வெகுதூரம் சென்றுவிட்டன. இப்பொழுது தொடுவானத்தின் கோட்டில் குழந்தைகள் விடும் காகிதப் படகுகளைப் போலத் தோற்றம் அளித்தன. அந்திச் சிவப்பு சிறுகச் சிறுகக் கருத்து மையிருட்டாகி விட்டது. ஒற்றையடிப் பாதைகூட வாதுமை மரங்களின் மறை விலே கண் உறங்கிவிட்டது. அப்புறம் இரவின் மௌனத்தில் முதல் நட்சத்திரம் வழிப்போக்கனின் பாடலெனப் பளிச் சிட்டது. குளிர் காற்று பொறுக்க முடியாமல் வீசியது. அதன் சில்லிப்பில் முகம், மூக்கு எல்லாம் மரத்துவிட்டன.

அப்புறம் சந்திரன் உதயமானான்.

அதற்குப் பின்னரே அவள் வந்தாள்.

வேகம் வேகமாக அடி எடுத்துவைத்து, ஒற்றையடிப் பாதை யின் இறக்கத்தில் ஓட்டமும் நடையுமாக ஓடி எனக்கு வெகு அருகில் வந்து நின்றவள் மெதுவான கிறீச்சிட்ட குரலில் ''ஐயையோ!'' என்றாள்.

அவளுக்கு மூச்சு இறைத்தது, மேல்மூச்சும் கீழ்மூச்சுமாக. நடு நடுவில் நின்று பெருமூச்சாக எழுந்தது. அவள் என் தோள் பட்டையைத் தன் விரல்களினால் தொட்டாள். அப்படியே தன் தலையை என் தோளில் சாய்த்துக்கொண்டாள். அவளது கருங் கூந்தல் அடர்ந்த காடென என் இதயத்துக்குள்ளே ஊடுருவி வெகுதூரத்துக்கு வெகுதூரம் பரவியது.

''மூன்றும் யாமத்திலிருந்தே நான் உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேனாக்கும்!'' என்றேன் அவளிடம்.

''இப்பொழுது இருட்டிவிட்டது. இருந்தாலும் ரொம்ப நல்ல இரவு இது!'' என்றாள் அவள் சிரித்துக்கொண்டு.

அவள் தனது மிருதுவான இளம் கரத்தை எனது மற்றொரு தோள்மீது வைத்தாள். பூச்சுமை தாங்காது வாதுமை மரத்தின் கிளை வளைந்து என் தோளில் இறங்கினாற்போன்ற உணர்வில் மிதந்தேன்.

வெகுநேரம் அவள் பேசாமல் இருந்தாள். நானும் வெகுநேரம் பேசாமல் இருந்தேன். பிறகு அவள் தானாகவே சிரித்துக்கொண்டாள். அந்தச் சிரிப்பினூடே அவள் சொன்னாள்: ''என் அப்பா என்னோடு ஒற்றையடிப் பாதையின் திருப்பம் வரையில் துணை வந்தார், எனக்குப் பயமாயிருக்கிறது என்று நான் சொன்னதால். 'இன்று என் தோழி ரஜ்ஜோயின் வீட்டில் உறங்கப் போகிறேன். இல்லை, இல்லை; உறங்கப் போவதில்லை. இராக் கண் விழிக்கப் போகிறேன். வாதுமை மரங்கள் முதற் பூ வைத்திருக்கும் மகிழ்ச்சியை நாங்கள், தோழிகள் எல்லாரும் சேர்ந்து கொண்டாடப் போகிறோம்; இரவு முழுவதும் கண் விழித்துப் பாடப் போகிறோம்' என்று கூறினேன்.''

''மூன்றாம் யாமத்திலிருந்தே புறப்பட்டு வர ஆயத்தம் செய்தேன். ஆனால் நெல் சுத்தம் செய்யவேண்டியிருந்தது. அதோடு நேற்றுத் தோய்த்து உலர்த்திய உடை சிறிதும் காயாமல் ஈரமாகவே இருந்துவிட்டது. அதைக் கணப்பில் உலர்த்தினேன். அம்மா வேறு விறகு ஒடித்து வரக் காட்டுக்குச் சென்றிருந்தாள். வெகுநேரம் ஆகியும் அவள் வீடு திரும்பவில்லை. அவள் வீடு திரும்பாத வரையில், நான் உங்களுக்குச் சோளக் கொண்டை, உலர்ந்த வாதுமைக்கொட்டை, அல்பகோடா எல்லாம் எப்படிக் கொண்டு வரமுடியும்? இதோ பாருங்கள், எல்லாம் உங்களுக்காகக் கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் நிஜமாகவே கோபித்துக் கொண்டு நிற்கிறீர்களே? என்னைப் பாருங்கள்! இதோ நான் வந்து விட்டேன். இன்று முழுவதுமே நிலவு இரவு. வாருங்கள், கரையில் கட்டியிருக்கும் படகை அவிழ்த்துக்கொண்டு ஏரியில் உலாவி வருவோம்!''

அவள் என் விழிகளில் ஏதோ எட்டிப்பார்த்தாள். நான் அன்பிலும் ஆர்வத்திலும் தோய்ந்த அவளுடைய கண்மணிகளை நோக்கினேன். அதனுள் அப்பொழுது முழுமதி தண்ணொளி பாய்ச்சிக் கொண்டிருந்தது. அந்த முழுமதி என்னிடம் கூறியது: ''போ! போய்ப் படகை அவிழ்த்துக்கொண்டு இவளோடு ஏரியில் உலாவி

விட்டு வா! இன்று வாதுமை முதல் பூ பூத்திருப்பதற்காகக் கொண்டாடும் மகிழ்ச்சி விழா. இன்று உனக்காக இவள் தன் தோழிகள், தந்தை, தங்கை, அண்ணன் எல்லாரையும் ஏமாற்றிவிட்டு இங்கே வந்திருக்கிருள். ஏன் தெரியுமா? இன்று முழு நிலவு இரவு. வெண்மையும் தண்மையும் கொண்ட வாதுமை மலர்கள் நாற்புறமும் ஆய்ந்த பஞ்சுபோல் விரவியிருக் கின்றன. காஷ்மீரத்துக் கீதங்கள் குழந்தைப் பாலென இவள் இதயத்தில் சுரந்துள்ளன. நீ இவள் கழுத்தில் தொங்கும் ஏழு வட முத்துமாலையைப் பார்த்தாயா? மாதுளம் மொக்கைப் போல் சிவந்த ஏழு வட மாலையை அவள் கழுத்தில் பூட்டியாகி விட்டது. 'இன்று இரவு முழுவதும் நீ கண் விழித்தாக வேண்டும். காஷ்மீரத்திலே இன்று வசந்தம் தொடங்குகிறது. வசந்தத் தொடக்கத்துக்கு இன்று முதல் இரவு. எடுப்பான குரல் எடுத்து நீ காஷ்மீரப் பாடல்களைப் பாடவேண்டும். நிலவு இரவில் மகிழம் பூக்கள் மலர்ந்து மணம் பரப்புவதுபோல், உன் பாடல்கள் மணம் பரப்பவேண்டும். இந்தா, ஏழு வட மாலை! இதை அணிந்துகொள்!' என்றும் கூறியாகிவிட்டது.''

ஆர்வம் தவழும் அவளது விழிகளில் புகுந்து புறப்பட்ட சந்திரன் இவை எல்லாவற்றையும் கண்டான் போலும்! திடீரென்று ஏதோ ஒரு மரத்தில் வானம்பாடி ஒன்று சிறகு அடித்துக்கொண்டது. தொலைவில் படகுகளில் விளக்குகள் மினுமினுத்தன. மலை யுச்சிக்கு அப்பாலிருந்த கிராமங்களிலிருந்து மையக் குரலில் இனிய பாடல்கள் மிதந்து வந்தன. பாடல்களோடு பாலகர் களின் கலகலப்பான சிரிப்பு, ஆண்களின் கனத்த குரல், இளஞ் சிறுர்களின் இனிய முனகல் எல்லாம் கலந்து வந்தன. கூரைகள் வழியே வடிகட்டிப் போந்த மென்புகையில் மாலைச் சமையல் மணத்தது. மீன், சோறு, சுவை கூட்டும் கீரை மசியல்! எல்லா வற்றுக்கும் மேலாக யௌவன வாளிப்புடன் கூடிய முழு நிலவு இரவு! என் கோபம் கரைந்துவிட்டது நான் அவள் கையை என் கையில் ஏந்திக்கொண்டேன். ''வா, ஏரிகரைக்குட் போவோம்'' என்றேன் அவளிடம்.

பாலம் தாண்டியது. ஒற்றையடிப் பாதை தாண்டியது. வாதுமை மரத் தோப்பு தாண்டியது. மலையடிவாரம் தாண்டியது. இப்பொழுது நாங்கள் ஏரிகரையோடு நடந்துகொண் டிருந் தோம். புதர்களில் தவளைகள் கத்திக்கொண் டிருந்தன. தவளை கள், சில்வண்டுகள், சுவர்க்கோழிகள்! அவற்றின் முரண்பாடான

சத்தத்திலும் ஒருவகை இசை இழையோடியது. சொப்பன மயமானதொரு சூழ்நிலை. உறங்கும் ஏரிக்கு மத்தியிலே, ஆடாமல் அசையாமல் சந்திரப் படகு நின்றுகொண்டிருந்தது, காதலை எதிர்நோக்கி! பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இப்படியே தான் நின்றுகொண்டிருந்தது, என் காதலையும் அவள் காதலையும் எதிர்நோக்கி. உன் இளநகையையும் உன் காதலனின் புன்னகையையும் எதிர்நோக்கி. மனிதன் மனிதனிடம் கொள்ளும் ஆசையை எதிர்நோக்கி. முழு நிலவு பாய்ச்சும் அழகிய இத்தூய இரவு, கன்னியொருத்தியின் கரம் படாத உடலைப்போல அன்பின் புனிதமான ஸ்பரிசத்தை எதிர்நோக்கி நிற்பதுபோல் தோன்றியது.

ஏரிகரையை ஒட்டினாற்போல் வளர்ந்திருந்த ஒரு சர்க்கரை பாதாமி (கூபானீ) மரத்தோடு படகு பிணைத்துக் கட்டப்பட்டிருந்தது. மரத்தடி மண் மிகவும் மிருதுவாக இருந்தது. இலைகளின் இடுக்கு வழியே நிலவு வடிகட்டி வழிந்துகொண்டிருந்தது. தவளைகள் மெதுவான குரல் எடுத்துப் பாடிக்கொண்டிருந்தன. ஏரி நீர் அடிக்கடி கரையை முத்தமிட்டுச் சென்றது. அதன் முத்தமிடும் ஒலி அடிக்கடி செவியை நிறைத்தது. நான் எனது இரண்டு கைகளையும் அவளது இடுப்பில் போட்டேன். ஆவேசத்தோடு அவளை மார்புறத் தழுவிக்கொண்டேன். ஏரி நீர் அடிக்கடி கரையை முத்தமிட்டது. முதலில் நான் அவள் கண்களை முத்தமிட்டேன். ஏரிப் பரப்பில் இலட்ச இலட்சம் தாமரைகள் பூத்தன. அப்புறம் அவள் கன்னத்தை முத்தமிட்டேன். தூய்மையான காற்றின் மென்மையான அலைகள் திடீரென்று உயர்ந்து நூற்றுக்கணக்கில் பாடல்கள் பாடி மகிழ்ந்தன. அடுத்தபடியாக நான் அவள் உதடுகளை முத்தமிட்டேன். இலட்சக்கணக்கான கோயில்கள், மசூதிகள், மாதா கோயில்கள் ஆகியவற்றில் பிரார்த்தனை ஒலி எழுந்தது. மண்ணில் பூக்கும் மலர்கள், விண்ணில் விளக்கேற்றும் தாரகைகள், காற்றில் பறக்கும் கழுகுகள்—எல்லாமே ஒன்று சேர்ந்து ஆனந்த நர்த்தனமாடின. அப்புறம் நான் அவள் மோவாயை முத்தமிட்டேன். அப்புறம் கழுத்தை! தாமரை மலர்கள் மொட்டவிழ்ந்து செவ்விதழ் விரித்துக் குவித்து விளையாடின! பாடல்கள் பிறந்து சிறந்து மௌனமாயின. நடனம் வேகம் குறைந்து கடைசியில் நின்றே போய்விட்டது. இப்பொழுதோ மீண்டும் அதே தவளைக் குரல்கள்! ஏரி அலைகள் எழுப்பும் மெல்லிய முத்த ஒலிகள்! யாரோ மார்பில் முகம் புதைத்து விசித்துக்கொண்டிருந்தார்கள்.

சுவையும் மணமும் பச்சை வாதுமையைக் காட்டிலும் குறைந்ததில்லை. சென்ற இளவேனிலில் நான் இல்லை. ஆனால் சர்க்கரை பாதாமியின் சிவந்த பழங்கள் மதர்த்த காஷ்மீரக் கன்னிகளைப் போலவே எடுப்பாக, அழகாக இருந்தன. இலை மறை, காய் மறையாக அவை எட்டிப் பார்க்கும்பொழுது நாணத்தினால் சிவந்த நங்கையை நினைவூட்டி இன்பக் கிளுகிளுப்பை ஏற்படுத்தின. அப்புறம் அறியாப் பேதைப் பெண்கள் முற்றத்தில் ஆடத் தொடங்கினார்கள். அவள் தம்பி மரத்தில் ஏறிச் சர்க்கரை பாதாமிகளைப் பறித்துப் பறித்துத் தோழிகளை நோக்கி வீசினான். போன இளவேனிலில் பழுத்த சர்க்கரை பாதாமிக்குத் தான் என்ன இனிப்பு, என்ன இனிப்பு! ஆனால் அப்பொழுது நான் இல்லை! சர்க்கரை பாதாமி தின்றபின் அவள் சோளக் கொண்டையை எடுத்தாள். என்ன இதமான நறுமணம்! . . . பொன் வறுவலாக வறுத்த சோளக் கொண்டை! முத்தை நிகர்த்த சோள மணிகள்! என்ன கறகறப்பு! என்ன இனிப்பு!

''இந்தச் சோளம் சீனிக் கற்கண்டாக்கும்!'' என்றாள் அவள்.

''ஆமாம், கற்கண்டைக் காட்டிலும் ருசியாக இருக்கிறது!'' சோளத்தைச் சுவைத்துக்கொண்டே கூறினேன் நான்.

''போன விளைச்சலின்பொழுது விளைந்தது. அம்மாவுக்குத் தெரியாமல் ஒளித்து வைத்திருந்தேன்!'' என்றாள் அவள்.

நான் ஒருபுறமாகச் சோளக் கொண்டையைச் சுவைத்தேன். சோள மணிகளில் சில வரிசையை அதிலேயே விட்டுவைத்தேன். அவள் அதிலிருந்து சில மணிகளைத் தின்றாள். எனக்காகச் சில வரிசைகளை அதிலேயே விட்டுவைத்தாள். அதை நான் சாப்பிட்டேன். இப்படியாக நாங்கள் இருவரும் ஒரே சோளக் கொண்டையை மாறி மாறிச் சுவைத்து மகிழ்ந்தோம். நான் நினைத்தேன்: ''நிஜமாகவே இது கல்கண்டுச் சோளந்தான்! இல்லாவிட்டால் இப்படி இனிக்குமா? இது போன விளைச்சலின் பொழுது அறுவடையானது. அப்பொழுது நீ இருந்தாய். ஆனால் நான் இல்லை. அப்பொழுது உன் அப்பா ஏர் பிடித்து உழுதிருப்பார். வயலைக் கொத்தியிருப்பார். விதை விதைத்திருப்பார். அப்புறம் மழை பொழிந்திருக்கும். புவியன்னை விதையை முளைக்க வைத்துச் செடி பயிராக்கி வயல் முழுவதும் பசுமை ஓடச் செய்திருப்பாள். நீ புல் பூண்டுகளைப் பிடுங்கிக் களையெடுத்திருப்பாய். அந்த மகிழ்ச்சியில் செடி வளர்ந்திருக்கும். அதன் கொண்டையிலே பூ வைத்திருக்கும். அது காற்றிலே சல

சலத்து அசைந்தாடியிருக்கும். அப்புறம் சோளச் செடிகளில் பசுமையான கொண்டைகள் பூரித்திருக்கும். அவற்றின் மெல்லிய தோலில் சிறிது நகம் பட்டாலும் போதும், பால் வடிந்திருக்கும். அவ்வளவு நேர்த்தியான, மிருதுவான கொண்டைகளை இந்த மண் படைத்திருக்கும். ஆனால் அப்பொழுது நான் இல்லையே! பிறகு இந்தச் சோளக் கொண்டைகள் பருத்துப் பெரிதாகியிருக்கும். அதன் பாலும் கெட்டித்திருக்கும். அப்புறம் நகம் பட்டாலும் ஒன்றும் ஆகாது. நம் நகம் ஒடிந்துவிட்டால் என்ன ஆவது என்று பயப்பட வேண்டியதுதான். சோள மணிகள் முதலில் மஞ்சளாயிருந் திருக்கும்; அப்புறம் பொன்னிறம் பெற்றிருக்கும். கடைசியில் கறுப்பாகவே ஆகியிருந்திருக்கும். சோளக் கொண்டை மண் நிறம் பெற்று அறுவடைக்குத் தயாராகும்பொழுதுகூட நான் வரவில்லையே! அப்புறம் வயல்களில் களம் போட்டிருப்பார்கள். களத்திலே காளைகள் போர் அடித்திருக்கும். கொண்டைகளி லிருந்து சோள மணிகள் பிரிந்திருக்கும். நீ உன் தோழிகளுடன் காதல் பாடல்கள் பாடியிருப்பாய். சில சோளக் கொண்டை களைத் திருட்டுத்தனமாக ஒளித்து வறுத்துத் தனியாகவும் எடுத்து வைத்திருப்பாய், எனக்காக. ஆனால் நான் அப்பொழுது வரவில்லை. இம் மண் இருந்தது; இதில் விளைந்த பொருள் இருந்தது. காதல் பாடல்கள் இருந்தன. நெருப்பில் வாட்டிய சோளக் கொண்டைகள் இருந்தன. ஆனால் நான்தான் இல்லை.''

நான் மகிழ்வோடு அவளை நோக்கினேன். ''இன்று முழு நிலவு இரவு. எல்லாமே முழுமையுற்றுவிட்டாற்போலத் தோன்றுகிறது. நேற்றுவரை முழுமையுறவில்லை. ஆனால் இன்று முழுமை பெற்றுவிட்டது!'' என்று மிழற்றினேன்.

அவள் சோளக்கொண்டையை என் வாயில் வைத்துவிட்டாள். அவளது உதடுகளைத் தீண்டி மகிழ்ந்த கதகதப்பு அந்தச் சோளக் கொண்டையில் அப்படியே இருந்தது. ''நான் உன்னை முத்த மிடவா?'' என்று கேட்டுவிட்டேன்.

''உஷ்! . . . படகு மூழ்கிவிடும்!'' என்ருள் அவள்.

''அப்படியாளுல் என்ன செய்யலாம்?'' என்று கேட்டேன்.

''மூழ்கிளுல் மூழ்கட்டும்!'' என்ருள் அவள்.

அந்த முழு நிலவு இரவு இன்னும் எனக்கு மறக்கவில்லை. எனக்கு இப்பொழுது கிட்டத்தட்ட வயது எழுபது. ஆனால்

அந்த முழு நிலவு இரவு என் மூளையில் சிறிதும் கருக்கு அழியாமல் அப்படியே பளிச்சிடுகிறது. நேற்று நடந்தாற்போலவே தோன்று கிறது. அதுபோன்ற தூய அன்பு இன்றுவரை நான் செலுத்திய தில்லை. அவளும் செலுத்தியிருக்கமாட்டாள். முழு நிலவு இரவிலே எங்கள் இருவரையும் ஒருவரோடு ஒருவர் இணைத்துப் பிணைத்த மாயமந்திர சக்தியே தனி. அவள் என்னைப் பிரிந்து வீட்டுக்குப் போகவில்லை. அன்றிரவு என்னுடனேயே ஓடி வந்து விட்டாள். நாங்கள் நான்கைந்து நாட்கள் அன்பில் இழைந்து குழந்தைகளைப் போல் காட்டில் அங்கும் இங்கும் அலைந்தோம். ஆறு வாய்க்கால்களின் கரையிலே அக்ரோட் மரங்களின் நிழலிலே சுழன்று சுழன்று வந்தோம். அப்புறம் நான் அதே ஏரிகரையில் ஒரு சிறிய வீடு விலைக்கு வாங்கிக்கொண்டேன். நாங்கள் இருவரும் அதிலேயே வசிக்கலானோம். சுமார் ஒரு மாதத்துக் கெல்லாம் நான் ஸ்ரீநகர் போனேன். மூன்றே நாட்களில் திரும்பி வந்துவிடுவதாக அவளிடம் கூறிச் சென்றேன். சொன்ன படி மூன்றும் நாளே திரும்பியும் வந்தேன். ஆனால் நான் கண்ட காட்சி . . .! அவள் ஓர் இளைஞனுடன் உறவாடி உரையாடிக் கொண்டிருந்தாள். அவர்கள் இருவரும் ஒரே தட்டில் உணவு அருந்திக்கொண் டிருந்தார்கள். ஒருவர் வாயில் இன்னொருவர் ஊட்டியவாறு சிரித்துப் பேசிக்கொண் டிருந்தார்கள். நான் அவர்களைப் பார்த்தேன். ஆனால் அவர்கள் என்னைப் பார்க்க வில்லை. அவர்கள் தங்களுக்குள்ளேயே லயித்துப் போயிருந் தார்கள். வேறு எங்கும் அவர்கள் பார்வை செல்லவே இல்லை.

இவன் சென்ற இளவேனிலிலோ அல்லது அதற்கும் முந்திய இளவேனிலிலோ வந்து உறவாடிய காதலனாயிருப்பான் என்று என் உள்ளத்திலே எண்ணம் ஓடியது. ''அந்த இளவேனிலுக்கு நான் இல்லை. வருங்காலத்தில் இதுபோல் இன்னும் எத்தனையோ இளவேனில் வரலாம். எத்தனையோ முழு நிலவு இரவுகள் வந்து போகலாம். அன்பு, ஒரு நடத்தை கெட்ட பெண்ணைப் போல வசமிழந்து, நிர்வாணமாகி நடனமே புரியலாம். இன்று உன் வீட்டுக்கு இலையுதிர் காலம் வந்துவிட்டது. ஒவ்வோர் இளவேனிலுக்குப் பின்னும் இலையுதிர்காலம் வருவது நடை முறைதானே? இனி உனக்கு இங்கு என்ன வேலை?'' இப்படி எண்ணியவன் அவர்களைச் சந்திக்காமலேயே திரும்பிவிட்டேன். அப்புறம் நான் எனது முதல் இளவேனிலை மீண்டும் சந்திக்கவே இல்லை.

இப்பொழுது நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்குப் பின் திரும்பி வந்திருக்கிறேன். என்னோடு என் பிள்ளைகளும் வந்திருக்கிறார்கள். என் மனைவி இறந்துவிட்டாள். ஆனால் என் பிள்ளைகளின் மனைவி மார்களும் அவர்களுடைய குழந்தைகளும் என்னோடு வந்திருக் கிறார்கள். நாங்கள் உலாவியவாறே ஸமல் ஏரிகரைக்கு வந்து விட்டோம். ஏப்ரல் மாதம் மூன்றும் யாமத்திலேயே மாலை நேரம் வந்துவிட்டது. நான் வெகுநேரம் பாலக்கரையிலே நின்று கொண்டு வாதுமை மரங்களின் வரிசையைப் பார்த்துக்கொண் டிருக்கிறேன். குளிர்ந்த காற்றில் வெண்மையான மலர்க் கொத்துக்கள் அசைந்து ஆடுகின்றன. ஒற்றையடிப் பாதைப் புழுதியில் தெரிந்த கால்கள் நடமாடும் ஒலி கேட்கவில்லை. ஓர் அழகி கையில் ஒரு சிறு பொட்டணத்தை எடுத்துக்கொண்டு விரைந்து செல்கிறாள். என் இதயம் படபடக்கிறது. தொலைவில் மலைச் சிகரங்களைத் தாண்டிய குடியிருப்பிலிருந்து யாருடைய மனைவியோ தன் கணவனுக்குக் குரல் கொடுக்கிறாள். அவள் அவனை உணவருந்த அழைக்கிறாள். எங்கோ கதவு சார்த்தப்படும் சத்தம் வருகிறது. அழுகின்ற குழந்தை ஒன்று சட்டென்று அழுகையை நிறுத்துகிறது. கூரைகள் வழியே புகை வந்து கொண்டிருக்கிறது. பறவைகள் கிறீச்சிட்டுக்கொண்டு மரங் களின் அடர்த்தியான கிளைகளில் சிறகு அடித்துக்கொள்ளு கின்றன. அப்புறம் ஒரேயடியாக அமைதியாகிவிடுகின்றன. யாரோ படகோட்டி பாடுகிறான். அவன் குரல் எதிரொலித்த வண்ணம் தொடுவானத்துக்கப்பால் சென்று கரைந்து ஒன்றி விடுகிறது.

நான் பாலத்தைத் தாண்டி முன்னேறுகிறேன். என் பிள்ளைகள், அவர்களது மனைவிமார்கள், குழந்தைகள் எல்லோரும் என் பின்னாலேயே வருகிறார்கள். தனித் தனிக் குழுவாகப் பிரிந்து வருகிறார்கள். இங்கு வாதுமை மரங்களின் வரிசை முடிந்து விட்டது. மலைத் தாழ்வரையும் தீர்ந்துவிட்டது. ஏரிகரைதான் தென்படுகிறது. அதோ சர்க்கரை பாதாமி மரம்! ஆனால் எவ்வளவு பெரிதாகிவிட்டது! ஆமாம், இந்தப் படகு . . .? இந்தப் படகு அதே படகுதானா அல்லது . . .? எதிர்த்தாற் போல் வீடு! முதல் இளவேனிலில் எனக்கு இன்பம் தந்த அதே வீடு! முழு நிலவு இரவில் எனக்கு முழுமையான அன்பை வாரி வழங்கிய வீடு!

வீட்டில் வெளிச்சம் இருக்கிறது. குழந்தைகளின் கூச்சல்—கொம்மாளம் வேறு கேட்கிறது. யாரோ கனத்த குரலில் பாடத் தொடங்குகிறார்களே! யாரோ கிழவி அதட்டிப் பாட்டை நிறுத்திவிடுகிறாள். என் மனம் சிந்தனையில் மூழ்குகிறது: ''அரை நூற்றாண்டு ஆகிவிட்டது. இதுவரை நான் அந்த வீட்டைப் பார்க்கவில்லை. ஒரு தடவை பார்ப்பதில் என்ன தவறு? அதை விலைக்கு வாங்கினவனே நான்தானே? பார்க்கப் போனால் இன்று வரை நானே அந்த வீட்டுக்குச் சொந்தக்காரன். பார்ப்பதில் என்ன குற்றம்?'' நான் வீட்டுக்குள்ளே நுழைந்துவிடுகிறேன்.

அழகுமிக்க அன்புக் குழந்தைகள் அந்த வீட்டுக்கு அணி சேர்க்கின்றன. இளம் பெண் ஒருத்தி தன் கணவனுக்குத் தட்டில் உணவு பரிமாறிக்கொண்டிருக்கிறாள். என்னைக் கண்டதும் திகைத்து நின்றுவிடுகிறாள். இரு குழந்தைகள் சண்டை போட்டுக்கொண்டிருந்தன. என்னைக் கண்டதும் வியப்பினால் வாய் அடைத்துச் சண்டையிடுவதை நிறுத்தி விடுகின்றன. கோபத்தில் கடிந்துகொண்டிருந்த கிழவி தூணுக்கு அருகில் நின்றுகொள்கிறாள். என்னைப் பார்த்து, ''யார் நீங்கள்?'' என்று கேட்கிறாள்.

''இது என் வீடு!'' என்கிறேன் நான்.

''உங்கள் தகப்பனார் வீடோ?'' கிழவி கேட்கிறாள்.

''இல்லை, என் தகப்பனாரின் வீடு இல்லை; என்னுடைய வீடுதான்! கிட்டத்தட்ட நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் நான் இதை விலைக்கு வாங்கினேன். இப்பொழுது நான் இங்கே வந்தது, சும்மாப் பார்ப்பதற்காகத்தான். உங்களையெல்லாம் வெளியேற்றுவதற்காக அல்ல. இந்த வீடு இனிமேல் உங்களுடைய வீடுமாதிரிதான். நான் சும்மா . . .'' என்று கூறிய வண்ணம் நான் திரும்பலானேன். கிழவியின் விரல்கள் கெட்டியாகத் தூணைப் பற்றிக்கொண்டன. அவள் உரக்கப் பெருமூச்சு ஒன்றை உள்ளுக்கு இழுத்துக்கொண்டாள். பிறகு, ''நீங்களா? . . . இத்தனை ஆண்டுகள் கழித்து ஒருவர் எப்படிச் சட்டென்று அடையாளம் கண்டுகொள்ள முடியும்?'' என்றவள் தூணைத் துணையாகக் கொண்டு வெகுநேரம் மௌனமாக நின்றாள். நான் கீழே முற்றத்தில் நின்று பேசாமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தேன். அப்புறம் அவளாகவே சிரித்துக் கொண்டு, ''வாருங்கள்! எங்கள் வீட்டவர்களை உங்களுக்கு அறிமுகம் செய்துவைக்கிறேன். இதோ பாருங்கள், இவன்

தான் என் மூத்த பிள்ளை. இதோ இவன், இவனுக்குச் சின்னவன். இவள் என் மூத்த மகனின் மனைவி. இவன் என் பெரிய பேரன். வணக்கம் சொல்லடா குழந்தை! இவள் பேத்தி . . . இவர் . . . இவர் என் கணவர் . . . உஷ்! அவரை எழுப்பாதே. முந்தாநாளிலிருந்து அவருக்கு ஏதோ ஜுரம் வந்து கொண்டிருக்கிறது. தூங்கட்டும் அவர்!'' என்றாள். பிறகு என்னைப் பார்த்து, ''உங்களுக்கு நான் என்ன தர? என்ன சாப்பிடுகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

நான் சுவர் ஆணியில் மாட்டியிருந்த சோளக் கொண்டை களைப் பார்த்தேன். சுட்ட சோளக் கொண்டைகள் அவை. பொன்னிற முத்துப்போல் அதன் மணிகள் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

நாங்கள் இருவரும் இலேசாகப் புன்னகைத்துக் கொண்டோம்.

''எனக்குப் பல பற்கள் விழுந்துவிட்டன. சொச்சம் இருப் பவை பயன் இல்லாதவை!'' என்றாள் அவள்.

''என் நிலைமையும் அதுவேதான். என்னாலே சோளம் தின்ன முடியாது!'' என்றேன் நான்.

நான் வீட்டுக்குள் நுழைந்ததைப் பார்த்து, என் வீட்டவர் களும் வீட்டுக்குள் வந்தார்கள். வீடு கலகலவென்று ஆகிவிட்டது. குழந்தைகள் விரைவிலேயே ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொண்டு சொந்தம் கொண்டாடத் தொடங்கிவிட்டன.

நாங்கள் இருவரும் மெதுவாக வெளியே வந்தோம். மெது வாக நடந்து ஏரிகரைக்குச் சென்றோம்.

''நான் ஆறு ஆண்டுகள் உங்களை எதிர்பார்த்தேன். நீங்கள் சொன்ன அன்று ஏன் வரவில்லை?'' என்று கேட்டாள் அவள்

''நான் வந்திருந்தேன், சொன்னபடியே. ஆனால் இன்னோர் இளைஞனுடன் நீ உறவாடிக்கொண் டிருப்பதைப் பார்த்துவிட்டு வந்தபடியே திரும்பிவிட்டேன்!'' என்றேன் நான்.

''என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்?'' என்று கேட்டாள் அவள்.

''ஆமாம். நீ ஒருவனோடு உணவு அருந்திக்கொண் டிருந்தாய், ஒரே தட்டில். உனக்கு அவன் ஊட்டிவிட்டான். நீ அவனுக்கு ஊட்டிவிட்டாய், கவளம் கவளமாக!''

அவள் ஒரேயடியாக வாய் அடைத்துப் போய்விட்டாள். ஆனால் அடுத்த கணமே கடகடவென்று சிரிக்கலானாள்.

''ஏன், என்ன ஆயிற்று?'' நான் வியப்போடு கேட்டேன்.

''அடேடே! அவன் எனக்குச் சொந்த அண்ணன் அல்லவா?'' என்றவள் மீண்டும் கடகடவென்று சிரித்தாள். ''அவன் அன்றைக்குத்தான் என்னைக் காண வந்திருந்தான். அன்றைக்கே நீங்களும் வருவதாக இருந்தீர்கள். அவன் திரும்பிப் போக வேண்டும் என்றான். உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று நான்தான் அவனை நிறுத்தியிருந்தேன். ஆனால் நீங்கள் வரவில்லை.''

அவள் ஒரேயடியாகக் கம்பீரமாகிவிட்டாள். ''ஆறு ஆண்டுகள் நான் உங்களை எதிர்நோக்கியிருந்தேன். நீங்கள் போனபின் ஆண்டவன் எனக்கு ஒரு மகனை அளித்தான். ஆமாம், உங்கள் மகன்தான். ஆனால் ஓராண்டுக்கெல்லாம் அவன் இறந்து விட்டான். அப்புறம் நான்கு ஆண்டுகள் நீங்கள் வருவீர்களோ என்று பார்த்தேன். ஆனால் நீங்கள் வரவில்லை.''

அப்பொழுது விளையாடிக்கொண் டிருந்த ஓர் ஆண் குழந்தை இன்னொரு பெண் குழந்தைக்குச் சோளக் கொண்டை தின்னக் கொடுத்தது.

''அது என் பேரன்!'' என்றாள் அவள்.

''அது என் பேத்தி!'' என்றேன் நான்.

அவர்கள் இருவரும் ஏரிகரையோடு வெகுதூரத்துக்கு ஓடி விட்டார்கள். நாங்கள் இமைகொட்டாமல் அவ்வளவு தூரமும் அவர்களைப் பார்த்துக்கொண் டிருந்தோம். அவள் என்னை நெருங்கி வந்து, ''இன்று நீங்கள் வந்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. நான் இப்பொழுது என் வாழ்க்கையை ஒருவாறு சீரமைத்துக்கொண்டுவிட்டேன். வாழ்நாளில் எத்தனையோ இன்பங்களையும் துன்பங்களையும் கண்டாகிவிட்டது. முழுமையான வாழ்க்கை வாழ்ந்து நிறை குடும்பம் கண்டு விட்டேன். இத்தனை நாட்கள் கழித்து இன்று நீங்கள் வந்திருக் கிறீர்கள். எனக்குத் துளிக்கூடத் தவறாகப்படவில்லை!'' என்றாள்.

''அதே நிலைமைதான் என்னுடையதும். வாழ்நாள் முழுவதும் உன்னைப் பார்ப்பதில்லை என்றிருந்தேன். அதனால்தான் இத்தனை ஆண்டுகளும் நான் இந்தப் பக்கம் மறந்துகூட வரவில்லை. ஆனால் இப்பொழுது வந்திருக்கிறேன். துளிக்கூட எனக்கும் தவறாகத் தோன்றவில்லை!'' என்றேன்.

நாங்கள் இருவரும் மௌனமானோம். குழந்தைகள் விளையாடியவாறே திரும்பவும் எங்களை வந்து அடைந்தன. அவள் என் பேத்தியைத் தூக்கிக்கொண்டாள். நான் அவள்

பேரனைத் தூக்கிக்கொண்டேன். அவள் என் பேத்தியை முத்தமிட்டாள். நான் அவள் பேரனை முத்தமிட்டேன். நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் மகிழ்ச்சி நிறைவோடு பார்த்துக்கொண்டோம். அவள் விழி மணிகளில் சந்திரன் பளிச்சிட்டான். அந்தச் சந்திரன் வியப்பும் மகிழ்ச்சியும் பொங்கக் கூறினான்: ''மனிதர்கள் மரிப்பதுண்டு, ஆனால் வாழ்க்கை மரிப்பதில்லை. இளவேனில் பருவத்துக்கு இறுதிக் கட்டம் உண்டு. ஆனால் வாழ்க்கையிலே மகத்தான உண்மை அன்புக்கு ஒரு நாளும் இறுதிக் கட்டம் கிடையாது. அது என்றென்றும் நிலைபெற்றிருக்கும். நீங்கள் இருவரும் போன இளவேனிலில் இங்கு இல்லை. எங்கெங்கோ இருந்தீர்கள். இவ்வாண்டு இளவேனிலைக் கண்டீர்கள். அடுத்த இளவேனிலில் நீங்கள் இருப்பீர்கள் என்று என்ன நிச்சயம்? ஆனால் வாழ்வு உண்டு, அன்பு உண்டு, இளமை உண்டு, அழகு உண்டு, இனிமை உண்டு, எளிமை உண்டு . . . நசிக்கும் மானிட வாழ்வில் நசிக்காத பேருண்மைகள் பல உண்டு . . .''

குழந்தைகள் எங்கள் மடியைவிட்டு இறங்கிவிட்டன. ஏனென்றால் அவை தனியாக விளையாட விரும்பின. இறங்கியதும் ஒரே ஓட்டமாகச் சர்க்கரை பாதாமி மரத்தை நோக்கி ஓடின. அதன் வேரில்தான் படகு கட்டப்பட்டிருந்தது.

''இது அதே மரந்தானா?'' என்று கேட்டேன் நான்.

அவள் முறுவலித்த வண்ணம், ''இல்லை, இது வேறு மரம்!'' என்றாள்.

குப்பைச் சாமயார்

அவன் ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தபொழுது அவன் கால்கள் நடுங்கிக்கொண் டிருந்தன. அவன் உடல் முழுவதும் நனைந்த பஞ்சாகக் கனத்தது. அவனுக்கு நடக்கவே பிடிக்க வில்லை. அப்படியே நடைபாதையில் உட்கார்ந்துவிடலாமா என்று எண்ணினான்.

நியாயப்படி அவன் இன்னும் ஒரு மாதம் ஆஸ்பத்திரியில் இருந் திருக்கவேண்டும். ஆனால் ஆஸ்பத்திரிக்காரர்கள் அவனுக்கு விடை கொடுத்து வெளியே அனுப்பிவிட்டார்கள். நாலரை மாதம் அவன் ஆஸ்பத்திரியில் பிரைவேட் வார்டில் இருந்தான். ஒன்றரை மாதம் ஜெனரல் வார்டில் இருந்தான். இதற் கிடையில் அவனுடைய ஒரு மூத்திரக்காயை எடுத்துவிட்டார் கள். மலக்குழாயில் ஒரு பகுதியை வெட்டிப் பெருங்குடல் இயக் கத்தைச் சரிசெய்தார்கள். இன்னும் ஈரலைச் செப்பனிட வேண்டிய வேலை பாக்கியிருந்தது. அதற்குள் அவன் ஆஸ்பத் திரியிலிருந்து வெளியேறும்படியாகிவிட்டது. ஏனென்றால், அவனைவிட மோசமான நிலையில் இருந்தவர்கள் தங்கள் முறையை எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள்.

டாக்டர் அவனிடம் ஒரு நீண்ட மருந்துப் பட்டியலை நீட்டி, ''இந்த டானிக்குகளைக் குடி. புஷ்டி தரும் உணவாகச் சாப்பிடு. நன்றாகக் குணமாகிவிடுவாய். இனி ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டிய தேவையில்லை!'' என்றார்.

''ஆனால், என்னால் நடக்கமுடியவில்லையே, டாக்டர் ஐயா!'' என்று அவன் பலவீனமான குரலில் கூறினான்.

''வீட்டுக்குப் போ! கொஞ்ச நாட்கள் மனைவியின் பணிவிடை யில் இருந்தால் நன்றாகத் தேறிவிடுவாய்'' என்றார் டாக்டர்.

மிகவும் மெதுவாக தடுமாறும் கால்களுடன் நடைபாதையில் நடக்கும்பொழுது அவன் யோசித்தான்: ''வீடா? . . . ஆனால் எனக்கு வீடு எங்கே இருக்கிறது?''

சில மாதங்களுக்கு முன்னால் எனக்கும் வீடு, வாசல் என்று ஏதோ இருந்தது உண்மைதான். எனக்கு ஒரு மனைவியும் இருந்

தாள். அவளுக்கு ஒரு குழந்தையும் பிறப்பதாயிருந்தது. கணவன்—மனைவி இருவரும் பிறக்கப் போகிற குழந்தையைப் பற்றிக் கற்பனைகள் பல புரிந்து எத்தனை மகிழ்ந்தார்கள்? உலகத்தில் ஜனப்பெருக்கம் அதிகமாகலாம்; மக்கட்தொகை கூடலாம். ஆனால் அவர்கள் இருவருக்கும் பிறக்கப் போவது முதல் குழந்தைதானே? அவர்களைப் பொறுத்தவரையில் உலகத்துக்கே முதல் குழந்தையாகத்தான் பட்டது!

துலாரி பிறக்கப் போகும் தன் குழந்தைக்காக அழகழகாக உடைகள் தைத்தாள். ஆஸ்பத்திரிக்கே எடுத்து வந்து அவனிடம் காட்டினாள். அவ்வுடைகளைக் கையால் தொட்டுத் தடவிப் பார்த்தபோது, அவனுக்குத் தன் குழந்தையையே மடியில் ஏந்தி அன்போடு கொஞ்சுவதாகத் தோன்றியது

ஆனால், அடுத்த ஒரு சில மாதங்களில் எத்தனையோ கொள்ளை போய்விட்டது. அவனுக்கு முதலில் மூத்திரக்காய் அறுவைச் சிகிச்சை நடந்தபோது துலாரி தன் நகைகளை விற்று விட்டாள். நகைகள் இதுபோல் ஆபத்து சம்பத்துக்கு உதவுவதற்குத்தானே இருக்கின்றன. நகைகள், நங்கை நல்லாளின் அழகைக் கூட்டுவதாக மக்கள் நினைக்கிறார்கள். ஆனால், அது பிறர் துயரத்துக்கு மருந்தாக உதவுகிறது! கணவனுக்கு அறுவைச் சிகிச்சை, குழந்தையின் கல்வி, மகளின் திருமணம்—இதுபோன்ற தருணங்களில் இந்த நகை வங்கிகள் திறக்கின்றன; தீர்ந்தும் போகின்றன. பெண் என்பவள் நகைகளின் பாதுகாப்பாளி. வாழ்க்கையில் அதிகபட்சம் ஐந்தாறு தடவை இந்த நகைகளைப் பூட்டிக் கொண்டு அழகுறும் வாய்ப்பு அவளுக்குக் கிட்டுகிறது!

மறுமுறை மூத்திரக்காய் ஆப்பரேஷன் நடப்பதற்குள்ளே துலாரியின் குழந்தை குறைப் பிரசவத்தில் போய்விட்டது. இது எதிர்பார்த்ததுதான். இரவு பகல் எந்நேரமும் ஒருத்தி மாடாக உழைத்தால் . . . அதுவும் பிள்ளைத்தாய்ச்சி . . . இந்த ஆபத்து தவிர்க்க முடியாதுதானே? துலாரியின் துறுதுறுக்கும் பொன் உடல் இதுபோன்ற கடுமையான உழைப்புக்கு ஆக்கப்பட்டதாகவே தெரியவில்லை. அதனால்தான் அந்தப் புத்திசாலிக் குழந்தை அரைகுறையாகவே தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டுவிட்டது. அவலச் சூழ்நிலையையும், தாய்—தந்தையரின் சிரம தசையையும் உணர்ந்து அது இவ்வுலகில் பிறந்து வளர்வதே தவறு என்று முடிவு கட்டிவிட்டது. சில குழந்தைகள் அதி மேதாவிகளாகத்தான் இருக்கின்றன. துலாரி பல நாட்கள்

ஆஸ்பத்திரிக்கு வரமுடியவில்லை. அவள் வந்து இந்தச் செய்தியைச் சொன்னதும் அவன் எப்படி அழுதுவிட்டான்? பின்னால் இதைக் காட்டிலும் அதிகம் அழவேண்டும் என்று தெரிந்திருந்தால், அவன் இந்த நிகழ்ச்சிக்கு அழுகையை நிறுத்தி ஆனந்தப் பட்டிருப்பான்.

இரண்டாவது முறையாக மூத்திரக்காய அறுவைச் சிகிச்சை நடந்தபோது அவன் வேலை பறிபோய் விட்டது. நீண்ட நாட்கள் ஒருவன் நோயில் விழுந்தால் இப்படி நடப்பது சகஜம் தானே? ஒருவன் எத்தனை நாள்தான் ஒருவனை எதிர்நோக்கிக் காத்திருப்பான்? நோய் என்பது மனிதனின் சொந்த விஷயம். ஒருவன் தன் வேலை நிலைத்திருக்கவேண்டும் என்று நினைத்தால், அதிக நாள் நோய்வாய்ப்படக்கூடாது. சட்டுப்புட்டென்று வேலைக்குப் போய்விடவேண்டும். மனிதன் மெஷினைப் போல. ஒரு மெஷின் வெகு நாட்கள் பழுதுபட்டுக் கிடந்தால், அதைத் தூக்கி ஒரு மூலையில் ''கடாசி'' விடுகிறார்கள். அதற்குப் பதில் புதிய மெஷினை வைத்து விடுகிறார்கள். ஏன்? ''வேலை தடைப் படக்கூடாது; பிஸினஸ் நிற்கக்கூடாது; காலம் வீணாகக்கூடாது'' என்ற நல்ல எண்ணமே காரணம். அவனுக்குத் தன் வேலை போய்விட்டது என்று தெரிந்தபொழுது, அவன் பேரதிர்ச்சிக்கு ஆளானான். இரண்டாவது மூத்திரக்காயும் எடுக்கப்பட்டு விட்டதுபோலத் துடிதுடித்தான். ஆனால் இந்த அதிர்ச்சியினால் அவனுக்குக் கண்களில் துளிக்கூட நீர் வரவில்லை. உள்ளத்துள் ஒரு சூன்யம் வெறிச்சோடியதாக, காலடியிலிருந்த பூமி கன வேகமாக நழுவுவதாக, இரத்த நாளங்களில் இரத்தத்துக்குப் பதில் அச்சம் புரையோடுவதாக உணர்ந்து நிலைகுலைந்து போனான். எனவேதான் அவன் விழிகள் நீர் பெருக்கும் தன் இயல்பை மறந்துவிட்டன.

பல நாட்கள் அவன் தன் வருங்கால வாழ்க்கையை நினைத்து அச்சத்தில் அலமலந்து தாங்கமுடியாமல் தூக்கம் வராமல் தவித்தான். நீண்ட நாள் நோய் என்றால், செலவும் அதிகமாவது இயல்பு தானே? சிறுகச் சிறுக வீட்டில் உள்ள உயர்ந்த பொருள்கள் எல்லாம் போயின. ஆனால் அதற்காகத் துலாரி துணிவை இழக்கவில்லை; நம்பிக்கையை நழுவவிடவில்லை. நாலரை மாதங்கள் தன் கணவனைத் தனி வார்டில் வைத்தாள்; நல்ல முறையில் சிகிச்சை செய்வித்தாள். வீட்டில் உள்ள ஒவ்வொரு பொருளையும் விற்றாள். பொருள் தீர்ந்தபின் பொருளுக்காக வேலையும்

பார்த்தாள். ஆம், அவள் ஒரு கம்பெனியில் வேலைக்கு அமர்ந்தாள். ஒரு நாள் தன் கம்பெனி முதலாளியையே அழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்கும் வந்தாள். அவன் ஒல்லியாக, ஒடிசலாக, குள்ளமாக இருந்தான். நடுத்தர வயதும், நாணும் குணமும் உள்ளவனாகத் தோன்றினான். குறைந்த பேச்சும் இனிய இள நகையும் கொண்டவனாக இருந்தான். உருவத்தை வைத்துப் பார்த்தால் அவனை ஒரு கம்பெனி முதலாளி என்று கூறுவதைக் காட்டிலும், ஒரு புத்தகக் கடை முதலாளி என்று சொல்லலாம் போலிருந்தது. துலாரி அவன் கம்பெனியில் இருநூறு ரூபாய் மாதச் சம்பளத்தில் வேலைக்கு அமர்ந்திருந்தாள். அவள் அதிகம் படித்தவள் அல்ல. ஆதலால், உறைகளில் தபால் பில்லைகள் ஒட்டும் வேலையே அவளுக்கு அளிக்கப்பட்டிருந்தது.

''இது மிகவும் எளிதான வேலையாயிற்றே!'' என்றான் துலாரியின் கணவன்.

''எளிதான வேலைதான். இருந்தாலும் நாள் ஒன்றுக்கு ஐந்நூறு அறுநூறு உறைகளுக்குப் பில்லைகள் ஒட்டுவதென்றால்...? என்னதான் எளிய காரியம் என்றாலும் சிரமமாகவே தோன்றும்!'' என்றான் கம்பெனி முதலாளி.

''மெய்தான்! ரொம்பக் களைப்பாகப் போய்விடுகிறது!'' என்று துலாரி புன்னகையுடன் கூறினாள்.

''நீ குணமாகி வந்ததும், உன் மனைவிக்குப் பதிலாக நீயே பில்லைகள் ஒட்டு. உனக்கு வேலை போட்டுத் தருகிறேன்!'' என்று ஆறுதல் கூறினான் கம்பெனி முதலாளி.

கம்பெனி முதலாளி புறப்பட்டதும், துலாரியும் அவனுடனேயே புறப்பட்டாள். அன்று அவள் அடி எடுத்துவைக்கும் முறையிலே விந்தையானதொரு தன்மானம் கொப்புளிப்பதை அவன் கண்டான். அவள் உடல் ஒரு பூங்கிளையென அசைந்து எழில் கூட்டியது. அறைக்கு வெளியே போகும்பொழுது, முதலாளி, துலாரிக்காக ஒரு கையினால் கதவைத் திறந்தான். பிறகு சிறிது வளைந்து மரியாதை காட்டித் துலாரியை வெளியே வருமாறு அவன் விட்ட அழைப்பு இருக்கிறதே, இன்றெல்லாம் அதைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம். அடுத்த கணம் அவன் கை துலாரியின் இடுப்பை அணைத்தபொழுது...! துலாரியின் கணவனுக்குத் திடுக்கென்றது. கம்பெனி முதலாளியின் முதற் கை செய்த காரியம் மட்டும் பிடித்தது. இரண்டாவது கை செய்த காரியம் மட்டும் பிடிக்காமல் போவானேன்?

ஆனால் அடுத்த கணமே அவன் தன் மனத்தைச் சமாதானம் செய்துகொண்டான்; சிற்சில சமயம் ஒரு கை செய்கிற காரியம் இன்னொரு கைக்குத் தெரியாது. இது அந்த வகையாக இருந் தால் . . .? அதோடு அவன் கண்களே மோசம் போயிருக்கலாம்; கண்கள் கண்டது வெறும் பிரமையாகவும் இருக்கலாம். எனவே, அவன் தைரியமாகத் தன் இரு கண்களையும் இறுக மூடிக் கொண்டான். மெத்தென்றிருந்த தலையணையில் தலையை ஊன்றிப் பதித்துக்கொண்டு, குளுகோஸ் இன்ஜெக்ஷனை எதிர் பார்க்கலானான்.

அவனுக்கு மூன்றாவது அறுவைச் சிகிச்சை ஆஸ்பத்திரியின் ஜெனரல் வார்டில் நடைபெற்றது. அதற்குள் துலாரி கம்பெனி முதலாளியுடன் டார்ஜிலிங்குக்குப் போய்விட்டிருந்தாள். ஆமாம், ஒருத்தி எத்தனை நாள்தான் பொறுத்திருக்கமுடியும்? வாழ்வோ சிறியது; வாழ்வின் வசந்தமும் இன்பமும் அதைக் காட்டிலும் சிறியவை. இன்பப் பெருக்கில் உணர்ச்சிகள் கொப் புளித்து வரும்பொழுது, விழிகளில் சந்திரன் பவனி வரும் பொழுது, விரல்களில் தீயின் வெம்மை படரும்பொழுது, இதயத் திலே இனிய இன்ப வேதனை சுரக்கும்பொழுது, பூவிதழ்களை முத்தமிடும் வண்டென மெல்லிதழ் உதடுகளிலே முத்தம் பதியும் போது, உருண்டு திரண்ட நெளிவு சுளிவுகள் தெரிந்த கழுத்துப் பகுதி ஒருவருடைய மூச்சுச் சூட்டினால் ஒத்தடம் பெறும்போது எத்தகைய இன்பம் பேரின்பமாகச் சித்திக்கிறது? இந்த அரிய வாய்ப்பை உதறிவிட்டு ஒருத்தி எத்தனை நாட்கள்தான் பிணியில் நாற்றத்தையும் மூத்திர நாற்றத்தையும் முகருவது? எச்சில், சீழ், இரத்தம்—இவை காட்டும் நிறபேதங்களைக் காணச் சகியாமல் கண்டுகொண் டிருப்பது? மரண வாசலுக்குச் சென்று மீளும் சிணுப்பைக் கேட்டுக்கொண் டிருப்பது? பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு அல்லவா? அதுவும் இருபதே வயது ஆகும் ஒரு பெண்ணின் பொறுமைக்கு! அவளுக்கு மணமாகி இரண்டு ஆண்டுகள்கூட ஆகவில்லை. அந்த இரண்டு ஆண்டுகளிலும் அவள் கட்டிய கணவனோடு துயரத்தைத் தவிர வேறு எதையுமே காணவில்லை. அவள் தன் கனவு நூலில் கட்டுண்டு டார்ஜிலிங் வரை போய்விட்டாள் என்றால், அது யார் குற்றம் அல்லது என்ன குற்றம்?

பிறரைக் குற்றவாளியாக்கும் நிலையை அவன் எப்பொழுதோ கடந்துவிட்டான். அடிக்குமேல் அடியாக இடையறாமல் விழவே,

அவன் மனம் பேதலித்துவிட்டான்; செய்வதறியாது திகைத்து விட்டான்; திக்பிரமை பிடித்தவன்போலச் சமைந்துவிட்டான். இனி அவனுக்குத் துன்பத்திலும் துயரத்திலும் எவ்விதமான உணர்ச்சியும் எழாது; கண்களும் நீரைப் பெருக்கா. சிவந்து கொதிக்கும் இரும்புத் துண்டம் சுத்தியலின் தாக்குதலில் பட்டை யாகிக் குளிர்ந்துபோகுமே, அப்படி அவன் மனம் மரத்து விட்டது. அதனால்தான் அவன் இன்று ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேற்றப்பட்டபோது டாக்டரிடம் தன் மனத்துயர் எதை யும் வெளியிடவில்லை. ஆஸ்பத்திரியிலிருந்து எனக்குப் போக் கிடம் ஏது என்றுகூடக் கேட்கவில்லை. அவனுக்கு இப்பொழுது வீடு இல்லை, வாசல் இல்லை, மனைவி இல்லை, மக்கள் இல்லை, வேலை இல்லை, வெட்டி இல்லை; அவன் மனம் வெறிச்சோடிக் கிடந்தது. அதைப் போலவே, சட்டைப் பையும் சூன்யமாகியிருந் தது. அவன் எதிரே வெறிச்சோடி விரிந்து கிடந்தது வருங்காலம் ஒன்றே.

இதையெல்லாம்பற்றி அவன் வாய் திறந்து எதுவுமே சொல்ல வில்லை. ''டாக்டர்! என்னால் அடியெடுத்து வைத்து நடக்க முடியவில்லையே, டாக்டர்!'' என்று மட்டுமே சொன்னான்.

இந்த ஓர் உண்மை மட்டுந்தான் அவனுக்கு அப்பொழுது நினைவு இருந்தது. மற்ற விஷயங்கள் எல்லாம் அவன் மனத்தை விட்டு அந்த நேரத்துக்கு அகன்று விட்டிருந்தன. உடல் முழுவதும் ஈரப் பஞ்சால் ஆனதுபோல் கனப்பதாகவும், முது கெலும்பு மடிந்து மக்கிப்போன பழைய கட்டில் கால் முறிவது போல முறிவதாகவும் அவனுக்குத் தோன்றியது. வெயிலோ கொளுத்திக்கொண் டிருந்தது. வெங்கதிர்கள் அம்புபோல உடலில் தைத்துக்கொண் டிருந்தன. வானத்தில் அழுக்கேறிய மஞ்சள்நிற வர்ணம் பூசியிருப்பதுபோலத் தோன்றியது. சுற்றுப் புறச் சூழலிலே திட்டுத் திட்டாகக் கரிய வட்டங்களும், நெளி நெளியாகப் பூச்சி பறப்பதுபோன்ற கோடுகளும் தெரிந்தன. ஈ மொய்க்கிறாற் போன்ற உணர்வில் மாய்ந்து போனான். அழுக்கு இரத்தமும் சீழும் உடலில் பிசுபிசுவென்று ஒட்டிக்கொண்டால் எத்தனை அருவருப்பு ஏற்படுமோ, அத்தனை அருவருப்பு மக்களின் பார்வையைக் கண்டாலே அவனுக்கு ஏற்பட்டது. ஓடிவிட வேண்டும், எங்கேயாவது கண்காணாத தொலைவுக்கு ஓடிவிட வேண்டும். நீண்டு பின்னிப் பிணைந்து ஓடும் மின்சாரக் கம்பங் களையும் அவற்றுக்கிடையே குறுக்கே பாய்ந்து குளறுபடி செய்யும்

சாலைகளையும் கடந்து எங்கேயாவது தொலைவுக்கு ஓடிவிட வேண்டும் என்று தோன்றியது. அப்பொழுது அவனுக்கு அவன் தாயாரின் நினைவு வந்தது. அவள் எப்பொழுதோ இறந்து விட்டாள். தந்தையின் நினைவு வந்தது. அவரும் எப்பொழுதோ இறந்துவிட்டார். உடன் பிறந்தவனின் நினைவு வந்தது. அவன் ஆப்பிரிக்காவில் இருந்தான். "சன்" என்று சப்தித்துக்கொண்டு அவன் அருகாக ஒரு டிராம் வண்டி ஓடியது. டிராமின் மின்சாரக் கொம்பு, மின்சாரக் கம்பத்தில் நீண்டு ஓடிக்கொண் டிருந்த கம்பியோடு உரசிக்கொண்டு ஓடியது. அது தன் உடலுக்குள் புகுந்து ஓடுவதுபோல் உணர்ந்தான். முழு டிராம் வண்டியுமே தன் உடலுக்குள் ஓடுவதாகத் தோன்றவும், அவனுக்குத் தான் ஒரு மனிதன் இல்லை, தேய்ந்து சுவடு தட்டிய ஒரு பாதை என்றே தோன்றியது.

வெகுநேரம் அவன் நடந்துகொண் டிருந்தான்; மூச்சிறைக்க நடந்துகொண் டிருந்தான். ஓர் உத்தேசத்தில் தன்னையறியாமல் ஒரு பக்கம் போய்க்கொண் டிருந்தான். ஏதோ ஒரு காலத்தில் அந்தப் பக்கத்தில்தான் அவன் வீடு இருந்ததாக அவன் எண்ணம். இப்பொழுது அவனுக்கென்று வீடு வாசல் எதுவும் கிடையாது என்பது அவனுக்குத் தெரியும். தெரிந்திருந்தும் அவன் அந்தப் பக்கமே சென்றுகொண் டிருந்தான். வீட்டுக்குப் போய்ப் போய்ப் பழக்கமான பாதையாயிற்றே! அந்தப் பழக்கந் தான் அவனை அப்படி ஆட்டிப் படைத்தது. ஆனால் நல்ல கடும் வெயில். உடலிலே எறும்பு ஊர்வதுபோன்று வெயிலின் சுள்ளிப்பு அவனைத் தாக்கியது. அவன் வழியும் மறந்து விட்டான். இது நகரத்தின் எந்தப் பகுதி என்று போகிறவர்கள், வருகிறவர்களைக் கேட்கலாம் என்றாலும், அதற்கான தெம்பு அவனிடம் இல்லை. சிறுகச் சிறுக அவன் செவிகளில் டிராம்கள், பஸ்கள் ஓடும் சப்தம் உரக்க ஒலிக்கலாயிற்று. சுவர்கள் அவன் பார்வையில் கோணிக் கோணிப் போயின. கட்டிடங்கள் இடிந்து விழலாயின. மின்சாரக் கம்பங்கள் மடமடவென்று முறிந்து விழுந்தன. பிறகு அவன் கண்களுக்கெதிரே இருட்டு, கால்களுக் கடியிலே பூகம்பம் என்று என்ன என்னவோ நிகழலாயின. அவற்றைத் தொடர்ந்து தொப்பென்று தரையில் விழுந்து விட்டான்.

அவனுக்கு நினைவு திரும்பியபொழுது நன்கு இருட்டிவிட்டிருந் தது. குளிர்ச்சியான கும்மிருட்டு நாற்புறமும் சூழ்ந்திருந்தது.

அவன் கண்களைத் திறந்து பார்த்தான். எங்கே விழுந்தானோ, அங்கேயே அத்தனை நேரமும் கிடப்பதை உணர்ந்தான். அது நடைபாதையின் ஒரு திருப்பம். அதற்குப் பின்புறம் இரு பக்கங்களிலும் இரண்டு மதில் சுவர்கள் எடுக்கப்பட்டிருந்தன. ஒரு சுவர் நடைபாதையை ஒட்டினாற்போல வடக்கிலிருந்து தெற்கே சென்றது. மற்றொன்று வடக்கேயிருந்து மேற்கே சென்றது. அவன் இரு சுவர்களும் இணையும் இடத்தில் படுத்துக் கிடந்தான். இரு சுவர்களும் ஏறக்குறைய நான்கு அடி உயரம் இருக்கும். அந்தச் சுவர்களுக்கு அப்பால் மூங்கில் கொத்துக்கள் இருந்தன. மோஞெலியாக் கொடிகள் இருந்தன. கொய்யா, நாவல் போன்ற மரங்கள் இருந்தன. அவற்றுக்குப் பின் என்ன இருந்தன என்பது அப்பொழுது தெளிவாகத் தெரியவில்லை. மறுபுறம் மேற்புரத்து மதில் சுவருக்கு எதிர்த்தாற்போல் இருபத்தைந்து அல்லது முப்பது அடி இடைவெளிவிட்டு ஒரு பழைய கட்டடத்தின் புழக்கடை தெரிந்தது. மூன்று அடுக்குக் கட்டிடம் அது. ஒவ்வொரு மாடியிலும் பின்புறத்தில் ஒரே ஒரு ஜன்னல் மட்டும் இருந்தது. ஆறு பெரிய பெரிய குழாய்கள் இருந்தன. கடைசிக் குழாய்க்கும் மேற்கு மதில் சுவருக்கும் இடையில் இருபத்தைந்து முப்பது அடி அகலமுள்ள குருட்டுச் சந்து ஒன்று இருந்தது. அதன் மூன்று பக்கங்களிலும் சுவர்கள். நான்காவது பக்கத்தில் மட்டும் சாலை.

எங்கோ தொலைவிலிருந்து மாதாகோவில் மணி ஒன்று அடித்தது. அப்பொழுது இரவு மணி மூன்று என்பதை உணர்த்தியது. நடைபாதையில் படுத்துக் கிடந்த அவன் தன் முழங்கைகளை ஊன்றிக் கொஞ்சம் எழுந்திருந்தான். அந்த நிலையிலேயே சுற்றுமுற்றும் பார்க்கலானான். சாலை வெறிச்சோடிக் கிடந்தது. எதிர்த்தாற்போலிருந்த கடைகள் மூடியிருந்தன. நடைபாதையின் இருளில் ஓரிரு இடங்களில் மின்சார பல்புகள் எரிவதற்கு அடையாளமாக ஒளி வட்டம் மங்கலாகத் தெரிந்தது. சில கணங்களுக்கு அந்தக் குளிர்ந்த இருட்டு அவனுக்கு இதமாகத் தோன்றியது. அவன் தன் கண்களை மூடிக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தான். கருணை வெள்ளம் பாய்ச்சும் கடல் நீரில் மூழ்குவது போன்றதொரு பிரமையில் மிதந்தான்.

ஆனால் இந்த உணர்வில் அவன் சில கணங்களே தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ள முடிந்தது. ஏனென்றால், கடும்பசி அவனை வாட்டிக்கொண் டிருந்தது. இதமான குளிரின்

இன்பத்தைப் பருகியவனுக்குப் பசியின் கொடுமை துன்பத்தை அளித்தது. குடல் அறுவைச் சிகிச்சைக்குப் பின் அவனுக்கு நல்ல பசி எடுக்கத் தொடங்கியிருந்தது. குடலின் இயக்கத்தைச் சீரமைத்து உதவினாலும் டாக்டர்கள், அவன் விஷயத்தில் நல்லது செய்யவில்லை என்றே அவனுக்குப் பட்டது. அவன் வயிற்றைச் சுருட்டிச் சுருட்டி இழுத்தது. குடல், ஒரு வாய் ரொட்டிக்காக அவனை ஏங்கித் துடிக்க வைத்தது. அவன் மூக்கு நாகரிகம் வாய்ந்த ஒரு மனிதனின் மூக்காக இயங்கவில்லை; காட்டுமிருகத்தைப்போல இயங்கியது. விந்தையான வாசனைகள் அவன் மூக்கைத் துளைத்தன. அறுசுவை உண்டியின் நறுமணக் கலவை, ஸ்வரச் சேர்க்கைபோல அவன் அறிவு முழுதையும் ஆக்கிரமித்துக்கொண் டிருந்தது.

இதில் இன்னும் ஒரு வேடிக்கை என்னவென்றால், இத்தனை கலவையிலும் அந்த அந்த ஸ்வரத்தின் உயிர்நாடியைப் பகுத்துணர்ந்து பாராட்டும் பரம ரசிகனைப் போல ஒவ்வொரு சுவையையும் பிரித்துணரும் ஆற்றல் அவனுக்குக் கிட்டி விட்டாற்போலத் தோன்றியது. ''இது நாவல்பழ வாசனை, இது கொய்யாப்பழ வாசனை, இது இருவாட்சி மலரின் மணம், இது எண்ணெயில் குளித்தெழும் பூரியின் வாசனை, இது வெங்காயம், பூண்டு தாளித்த உருளைக்கிழங்கு, இது முள்ளங்கி, இது தக்காளி, இது அழுகிப் போன பழம், இது சிறுநீர், இது மூங்கில் இலை நீரில் கிடந்து மடிந்ததனால் ஏற்பட்ட வாசனை'' என்று எதையும் பகுத்து அறியும் ஆற்றலைப் பெற்றுவிட் டிருந்தான். அவன் ஒவ்வொன்றின் வடிவம், உணர்வு, போக்கு, தன்மை எல்லாவற்றையும் கனகச்சிதமாகக் கரைகண்டிருந்தான். திடுமென்று இவ்வாற்றல் அவனுக்குக் கிட்டியிருந்தது. எப்படி? நினைத்துப் பார்த்தவன் துணுக்குற்றான். பசிக்கு இத்தனை ஆற்றலா? அவனிடம் ஒளிந்து கிடந்த ஏதேதோ சக்திகளை அல்லவா கிளறிவிட்டிருக்கிறது! ஆனால் இதில் அதிகக் கவனம் செலுத்தாமல், அவன் பூரி மசாலா வாசனை வந்த திக்கை நோக்கித் தன் பலம் அனைத்தையும் திரட்டிக்கொண்டு ஊர்ந்து செல்லலானான். பூண்டு போட்ட உருளைக்கிழங்கும், பூரியின் எண்ணெய் மணமும் அவனை அப்படி இழுத்தன. எழுந்து நடக்கும் சக்தி தளர்ந்துவிட்டதனால் அவன் அந்தக் குருட்டுச் சந்தை நோக்கி ஊரலானான். ஒவ்வொரு கணமும் ஆழமான நீருக்கடியில் மூழ்கிப் போவதுபோலத் தோன்றியது. சலவைத்

தொழிலாளி அவன் வயிற்றைக் கசக்கிப் பிழிந்து எறிவது போலத் துடித்துப் போனான் பசியினால். பூரியும் உருளைக்கிழங்கும் பசியைக் கிளப்பிவிடும் வண்ணம் அவன் மூக்கில் மணக்க வேறு செய்தன. அவன் பாதி மூடிய கண்களோடு, உயிரற்றுப் போய் விட்டாற்போன்ற தன் உடலை இழுத்துக் கொண்டு உருளைக் கிழங்கும் பூரியும் வாசனை பரப்பிய இடத்துக்குச் செல்வதில் முழுமூச்சாக முனைந்தான். குருட்டுத் தைரியந்தான்! இருந்தாலும் சிறிது நேரத்துக்கெல்லாம் கனகச்சிதமாக மோப்பம் பிடித்துக்கொண்டு அந்த இடத்தை அடைந்து விட்டான்.

மேற்புறத்துச் சுவரை ஒட்டினாற்போல நடந்து சிறிது தொலைவில் அதற்கு எதிர்த்தாற்போலிருந்த கட்டடத்தின் புழக் கடைக் குழாய்களுக்கு மத்தியில் சென்றால், இருபத்தைந்து, முப்பது அடிகள் தள்ளி இரும்பாலான ஒரு பெரிய குப்பைத் தொட்டி வைத்திருந்தது. இந்தத் தொட்டி பதினைந்து அடி அகலமும் முப்பது அடி நீளமும் இருக்கும். அதில் எத்தனையோ வகையான குப்பை கூளங்கள் நிறைந்திருந்தன. அழுகிப் போன பழத்தோல்கள், வீணாய்ப் போன ரொட்டித் துண்டங்கள், தேயிலை வடிகட்டிய தூள்கள், துணிகள், கிழிசல் ஜாக்கெட்டுகள், குழந்தைகளின் கழிவு துடைத்துப் போட்ட கந்தல்கள், முட்டை ஓடுகள், காகிதக் குப்பைகள், ஓட்டை உடைசல் தகரங்கள், துருவேறிய இரும்புச் சாமான்கள், கவைக்குதவாது உடைந்து போன பிளாஸ்டிக் விளையாட்டுக் கருவிகள், பட்டாணித் தோல்கள், புதினாக்கீரை வேர்கள், வாழைப்பழத் தோல்கள், எச்சில் பூரிகள், தின்னமுடியாமல் ஒதுக்கிய உருளைக்கிழங்குகள்— இப்படி எத்தனை எத்தனையோ!

பூரியையும் உருளைக்கிழங்கையும் ...ண்டதும் அவன் குடல் கொம்மாளம் போட்டது. பொறுமை இழந்து துறுதுறுக்கும் தன் கைகளை அவன் எப்படியோ தடுத்து நிறுத்தினான். அந்தத் தொட்டிக்குள்தான் எத்தனைவித மணங்கள், நாற்றங்கள்! அத்தனையையும் அடக்கிப் பூரி—உருளைக்கிழங்கின் வாசனையே தூக்கி நின்றது. அவன் மூக்குக்குத்தான் எத்தனை மோப்ப சக்தி! அது பசியை எப்படிக் கிளறிவிட்டது!

''சிம்பனி'' இசைக் கலவையில் திடுமென்று ஒரு ஸ்வரம் உரத்து ஒலிப்பதுபோல், பூரி கிழங்கின் வாசனை மேவி நின்றது. பசியும் வாசனையும் நாகரிகச் சுவரைத் தகர்த்துத் தரைமட்டமாக்கின.

அவனது நடுங்கும் கரங்கள் பொறுமை குலைந்து எச்சில் வாழை இலையை லபக்கென்று கவ்விப் பிடித்தன. அவன் அசுரப் பசிக்கு ஆளாகி அந்த எச்சில் பூரிகளின்மீது பாய்ந்தான். பூரியும் கறியும் தின்றபின் அவன் வாழை இலைகளைப் பலமுறை நக்கினன். அப்பொழுதுதான் பறித்து வந்த இலைபோல் அது அத்தனை சுத்தமாகிவிட்டது. இலையை நக்கியபின் அவன் தன் விரல்களை நக்கினன். நீண்டு வளர்ந்திருந்த நக இடுக்குகளில் ஒட்டிக் கொண்டுவிட்ட உருளைக்கிழங்கை நாக்கு நுனியினல் நெருடி எடுத்துச் சுவைத்துத் தின்றுன். அப்படியும் பசி ஆருமற்போகவே, குப்பைத் தொட்டியில் கையை விட்டுத் துழாவிக் கைக்கு எட்டிய புதினச் சட்டினியைத் தின்றுன். முள்ளங்கித் தான்களைத் தேடிப் பிடித்துச் சுவைத்தான். அப்புறம் அதிலிருந்து கிடைத்த அரைத் தக்காளியை ஆனந்தமாக உறிஞ்சி உறிஞ்சிச் சாறு பருகினன். இவ்வளவும் தின்று தீர்த்தபின் அவனுக்கு உண்ட மயக்கம் தோன்றியது; தூக்கம் கண்களைச் சுழற்றிக்கொண்டு வந்தது. அப்படியே குப்பைத் தொட்டிக்கு அருகில் விழுந்தான். அப்படியே உறங்கியும் போனன்.

எட்டு, பத்து நாட்கள் இப்படியே ஓடின. ஆழ்ந்து உறங்குவது, அரைகுறையாக விழிப்பது, விழிப்புக் கொடுத்த வேளைகளில் அப்படியே கால்களைத் தொட்டிக்கு இழுத்துச் சென்று கிடைத்ததை உண்டு களைப்பாறுவான். பசியைக் கிளறிவிடும் மணம் தன் கைவரிசையைக் காட்டித் திருப்தி அடையும் வரையில், அவனுக்கு அந்தத் தொட்டியின் மற்ற நாற்றங்கள் தெரியா. வயிறு திருப்தி சொல்லிவிட்டால், குப்பைத் தொட்டி நாற்றம் குமட்டிக்கொண்டு வரும். அவன் கால்களை இழுத்துக்கொண்டு, அந்தத் தொட்டியிலிருந்து நகர்ந்து விடுவான். நடைபாதைத் திருப்பத்தை நாடிச் சென்று மதில் சுவரில் சாய்ந்து உட்கார்ந்துகொள்வான் அல்லது தூங்கிப் போவான்.

பதினைந்து, இருபது நாட்களுக்கெல்லாம், சிறுகச் சிறுக அவன் உடலில் தெம்பு ஏறலாயிற்று. கொஞ்சம் கொஞ்சமாக அவன் தன் நிலையை, தன் சூழ்நிலையை உணரலானன். இது எவ்வளவு நல்ல இடம்! அதிக வெயில் இல்லை. மர நிழல் இருந்தது. சில சமயம் பின்னலிருக்கும் கட்டடத்து ஜன்னல் கதவு திறக்கும். ஜன்னல் இடுக்கு வழியாகக் குப்பைத் தொட்டியில் யாராவது எதையாவது எறிவார்கள். அந்தக் குப்பை கூளங்கள்தான்

அவனுக்கு அன்னதானம்; இரவு–பகல் எந்நேரமும் அவனுக்கு உணவு அளிப்பது. அவன் உயிரையே காத்து இரட்சிப்பது!

பகலில் சாலையில் நடமாட்டம் இருக்கும். கடைகள் திறந்திருக்கும். மக்கள் இங்கும் அங்கும் போய்வந்த வண்ணம் இருப்பார்கள். குழந்தைகள் குருவிபோலக் கூவிக் கொம்மாளம் அடித்துக்கொண்டு தெருவுக்கு உயிர் ஊட்டுவார்கள். பெண்கள் வண்ணத்துப் பூச்சிபோலச் சிறகடித்துப் பறந்து செல்வார்கள். ஆனால் அது ஒரு தனி உலகம். அந்த உலகத்துக்கும் அவனுக்கும் ஒருவிதமான சம்பந்தமும் கிடையாது. இந்த உலகத்தில் இப்பொழுது அவனுக்கென்று யாரும் கிடையாது. அதேபோல அவனிடம் பந்தபாசம் காட்டுபவர்களும் யாரும் இல்லை. இந்த உலகத்தைக் கண்டாலே அவனுக்கு வெறுப்பு. இதன் 'சங்காத்தியமே' வேண்டாம் என்று அவன் முகத்தைத் திருப்பிக்கொண்டு விட்டான். நகரத்துத் தெருக்களும், கடைத் தெருக்களும் அவனைப் பொறுத்தவரை ஒரு மங்கிய புழுதியடித்துப் போன கனவாகி, நிழலாகிப் போய்விட்டன. வயல், வெளி, வானம் எல்லாமே அவனுக்கு வெறும் வீண் கற்பனையெனத் தோன்றலாயின. வீடு, வேலை வெட்டி, வாழ்க்கை, சமூகம் இவற்றைத் தழுவிய போராட்டம் எல்லாமே பொருளற்ற சொற்களாகி, அழுகி நாறிப் போய் இந்தக் குப்பைக் கூடையிலே கழிவுப்பொருளாக வீழ்ந்துவிட்டன. அவன் தனக்கு எட்டாக் கனியாகிவிட்ட அந்த உலகத்தை அறவே புறக்கணித்து விட்டான். இப்பொழுது அவன் ஊர் உலகம் எல்லாம் இந்தப் பதினைந்து அடி அகலமும் முப்பது அடி நீளமும் கொண்ட இந்தக் குப்பைத் தொட்டிதான்! இதை விட்டால் அவனுக்கு வேறு உலகம் தெரியாது.

மாதங்கள், வருடங்களாகி ஓடிவிட்டன. அவன் நடைபாதைத் திருப்பமே கதியாக உட்கார்ந்திருந்தான், பழைய பட்டுப் போன மரமாக, பாழடைந்து சிதிலமாகிவிட்ட ஒரு நினைவுச் சின்னமாக. அவன் பலர் பார்வையிலும் படலானான். அவன் யாருடனும் பேசுவதில்லை; பழகுவதில்லை. யாருக்கும் நன்மையோ தீமையோ செய்வதில்லை. யாரிடமும் கையேந்திப் பிச்சை கேட்பதும் இல்லை. ஆனால் என்றைக்காவது அவன் அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டால், அந்தப் பக்கத்து மனிதர்களுக்கு வியப்பாயிருக்கும். இதயம் இனம் தெரியாத ஒரு வேதனையில் விழுந்து தத்தளிக்கும்.

எல்லாரும் அவனைக் 'குப்பைச் சாமியார்' என்று கூறிவந்தார்கள். ஏனெனில் அவன் குப்பைத் தொட்டியிலிருந்தே தனக்கு வேண்டிய உணவை எடுத்துச் சாப்பிடுகிறான் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். குப்பைத் தொட்டியில் என்றைக்காவது ஒன்றுமே கிடைக்கவில்லையென்றால், அவன் பட்டினியாகவே படுத்து உறங்கிவிடுவதையும் அவர்கள் கண்டிருந்தார்கள். பல ஆண்டுகளாக வழிப்போக்கர்களும், ஈரானி ரெஸ்டாரண்ட் நடத்துபவர்களும் அவனுடைய இந்த வழக்கத்தை அநுபவத்தால் அறிந்திருந்தார்கள். அதனால் அவனுக்கு ஏதாவது கொடுக்க வேண்டுமென்று தோன்றினால், குப்பைத் தொட்டியிலேயே போட்டுவந்தார்கள். பெரும்பாலும் மூன்று அடுக்கு வீட்டுக்காரர்கள், ஜன்னல் கதவுகளைத் திறந்து குப்பை கூளங்களை எறியும்போது, அவற்றோடு நல்ல நல்ல உணவுப் பொருள்களையும்கூட விட்டெறியலானார்கள். யாரும் தின்னாத முழு ரொட்டிகள், காய்கறி, கீரை வகைகள், இறைச்சித் துண்டங்கள், மாம்பழங்கள், சட்டினி வகைகள், பாயசத் தொன்னைகள் என்று போட்டார்கள். கிடைத்தற்கரிய உணவு வகைகள் எல்லாம் குப்பைச் சாமியாருக்கு அந்தத் தொட்டிக்குள்ளேயே கிடைத்தன. சில சமயம் சிறிது கிழிந்த பைஜாமாக்கள், கிழிந்து போன நிக்கர்கள், தாறுமாறாகக் கிழிந்த சட்டைகள், பிளாஸ்டிக் கோப்பைகள்கூடத் தொட்டியில் இருக்கும். இந்தக் குப்பைத் தொட்டி அவனைப் பொறுத்தவரையில், எந்த நேரமும் திறந்திருக்கும் கடைத்தெரு. பட்டப்பகலில் எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதும் அவன் அங்கேயே சுற்றித் திரிவான். எந்தக் கடையில் என்ன பொருள் வேண்டுமானாலும் அவன் இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். சொல்லப்போனால் அந்தக் கடைத் தெருவுக்கு அவன் ஒருவனே எசமானன். மற்ற எவருக்கும் அதில் பாத்தியதை கிடையாது. ஆரம்பத்தில் சில பூனைகளும் சொறிநாய்களும் அவனை எதிர்க்குரல் எழுப்பி விரட்டி அடிக்க முனைந்தன. ஆனால் அவன் அவற்றை அடித்து விரட்டிவிட்டான். இப்பொழுது இந்தக் குப்பைத் தொட்டிக்கு அவன் ஒருவனே வில்லங்கமற்ற எசமானன். அவனுடைய உரிமையை அனைவரும் ஒப்புக்கொண்டு விட்டனர்.

மாதத்துக்கு ஒருமுறை நகரசபைச் சிப்பந்திகள் அங்கு வருவார்கள்; குப்பைத் தொட்டியைச் சுத்தமாகக் காலிசெய்து விட்டுப் போய்விடுவார்கள். குப்பைச் சாமியார் எவ்விதமான

எதிர்ப்பும் காட்டுவதில்லை. ஏனென்றால், அவனுக்குத் தெரியும், மறுநாள் முதற்கொண்டே குப்பைத் தொட்டி நிறைந்து வழியத் தொடங்கிவிடும் என்று! இந்த உலகத்தில் நன்மை அறவே ஒழிந்து போகலாம், நன்றி குன்றிப் போகலாம், நட்பு நசித்துப் போகலாம், ஆனால் குப்பை ஒருநாளும் தீராது என்பது அவன் அசைக்கமுடியாத நம்பிக்கை. உலகத்தையே வெறுத்து வாழும் வகையை—அற்புதமான கடைசி அஸ்திரத்தை—அவன் நன்கு கற்றுத் தேர்ந்து வைத்திருந்தான்.

ஆனால் வெளியுலகைப்பற்றி அவனுக்கு எதுவுமே தெரியாது என்று கூறிவிடுவதற்கில்லை. உலக நடப்பு அத்தனையும் தெரிந்துவைத்திருந்தான் அவன். நகரத்தில் சர்க்கரைக்குத் தட்டு ஏற்பட்டால்,. மாதக்கணக்கில் குப்பைத் தொட்டியில் இனிப்புப் பண்டங்களே விழுவதில்லை. கோதுமை கிராக்கியாகி விட்டால்,ரொட்டித் துண்டைக் காண்பது அபூர்வம். சிகரெட்டுக் குப் பஞ்சம் வந்துவிட்டால் எரிந்துபோன சிகரெட்டுத் துண்டு மிக மிகச் சிறியதாயிருக்கும். அவனால் அதைப் பற்றவைத்துக் குடிக்கமுடியாது. தோட்டிகள் வேலைநிறுத்தம் செய்திருந்த பொழுது, அந்தத் தொட்டியைச் சுத்தம் செய்ய இரண்டு மாதங்கள்வரை யாருமே அந்தப் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை.

பக்ரீத் அன்று இறைச்சி கிடைப்பதுபோல் மற்ற நாட்களில் கிடைத்ததில்லை. தீபாவளியன்று தொட்டியில் தனித்தனியாக எத்தனை எத்தனையோ பலகார வகைகள் விழுவதை அவன் கண் டிருக்கிறான். குப்பைத் தொட்டி மூலம் அவன் அறியாத, அறிய முடியாத வெளியுலகச் சம்பவங்களே கிடையாது என்று தைரிய மாகச் சொல்லலாம். சென்ற உலகப் போர் தொடங்கிப் பெண் களின் இரகசிய நோய்கள் வரை அங்கு அம்பலமாகிவிடும். ஆனாலும் அவனுக்கு வெளியுலக விவகாரங்களில் எள்ளளவும் ஈடுபாடு கிடையாது.

இருபத்தைந்து ஆண்டுகள் இதே குப்பைத் தொட்டியின் அருகில் அமர்ந்து அவன் தன் வாழ்க்கையைக் கழித்தான். இரவுகள், பகல்கள், மாதங்கள், வருடங்கள் ஆகியவை அலைக் காற்றாக அவன் தலையை வருடிக்கொண்டு சென்றன. அவன் தலைமயிர் வறண்டு ஆலம் விழுதெனத் திரண்டு தொங்கலாயின. அவன் கறுப்புத் தாடி நரை கண்டது. அவன் உடல் தோல் சுருங் கித் தொங்கி, அழுக்கேறி மண் நிறம் பெற்று என்னவோபோல் ஆகிவிட்டது. தன் சிக்குப் பிடித்து நாறும் கேசங்கள், கிழிந்த

கந்தல்கள், நாறும் உடல் ஆகியவற்றின் காரணமாகப் போகிற வர்கள் வருகிறவர்களின் பார்வையில் அவன் ஒரு குப்பைத் தொட்டியாகவே காணப்பெற்றான். ஆனால் ஒரு வேறுபாடு: அவனுள் ஒவ்வொரு சமயம் ஓர் இயக்கம் இருந்தது. அவன் பேசுவான், பிறரிடம் அல்ல; தனக்குத்தானே பேசிக் கொள்ளு வான் அல்லது குப்பைத் தொட்டியோடு உரையாடி மகிழ்வான்.

குப்பைச் சாமியார் குப்பைத் தொட்டியோடு பேசுவதைக் கண்டு மக்கள் வியந்து போயினர். ஆனால் இதில் வியப்பதற்கு என்ன இருக்கிறது என்பதுதான் விளங்கவில்லை. குப்பைச் சாமியார் இதுபற்றி அவர்களிடம் ஏதும் கேட்கவில்லை. ஆனால் அவர்களுடைய வியப்பைக் கண்டு அவன் மனத்தில் கட்டாயம் ஒன்று மட்டும் நினைத்துக்கொண் டிருப்பான்.

இந்த உலகத்தில் எவன் பிறரோடு பேசுகிறான்? உண்மையில் இந்த உலகத்தில் நிகழும் பேச்சுவார்த்தைகள் எல்லாம் மனிதர்களிடையே நிகழ்வதில்லை. யாருமே தனக்குத்தானே தன்னலத்துக்காகத் தன்னுடன்தான் பேசிக்கொள்ளு கிறார்கள். இரு நண்பர்களுக்கிடையே நடைபெறும் பேச்சு வார்த்தைகூட உண்மையில் பார்க்கப் போனால் ஒருவிதத்தில் ''தனக்குள்'' பேசிக்கொள்ளுவதாகத்தான் முடிகிறது. இந்த உலகமே ஒரு மாபெரும் குப்பை மேடு. இதில் ஒவ்வொரு மனித னும் தன்னலமென்னும் ரொட்டித் துண்டையோ, தனக்குப் பயன் தரும் என்று எண்ணும் பழத்தோலியையோ அல்லது தனக்கு லாபம் தரும் என்று கருதும் கந்தல் துணியையோ அமுக்கிப் பறிக்க எந்த நேரமும் தயாராயிருக்கிறான். ஊஹூம், என்னைப் பரதேசி, பக்கிரி, ஈனன், நீசன் என்று எண்ணும் இவர்கள், சிறிது நேரம் தங்கள் ஆத்மாவையே பின்னாலிருந்து எட்டிப் பார்த்தால், அங்கேயும் எத்தனை அழுக்கு கப்பல்போல் நிறைந்திருக்கிறது என்பதை அறிவார்கள். அவர்களது அழுக்கை எமதர்மன் ஒருவனே எடுத்துச் செல்ல முடியும்.

இதேபோல் நாட்களுக்குமேல் நாட்கள் ஓடிச் சென்றன. நாடு கள் விடுதலை பெற்றன; பெற்ற விடுதலையை இழக்கவும் செய்தன. ஓர் ஆட்சி வந்தது. இன்னோர் ஆட்சி போயிற்று. இத்தனை மாறு தல்களுக்கு இடையிலும் அந்தக் குப்பைத் தொட்டி இருந்த இடத் தில் அப்படியே ஆடாமல் அசையாமல் இருந்தது. அதன் அருகில் அமரும் குப்பைச் சாமியாரும் அதேபோல அரைகுறை நினை வோடு, உலகத்தை வெறுத்து, உலகத்துப் பொருள்களைத் தின்று

கொண்டு வாய்க்குள் என்ன என்னவோ முணுமுணுத்துக் கொண்டிருந்தான். தேவைப்படும்போதெல்லாம் குப்பைத் தொட்டியைக் கிளறிக்கொண் டிருந்தான்.

ஒரு நாள் இரவு அவன் குருட்டுச் சந்தில் குப்பைத் தொட்டியிலிருந்து சிறிது தொலைவில் சுவரில் முதுகைச் சாய்த்துக்கொண்டும் கிழிசல் கந்தைகளுக்குள் தன்னை மூடி மறைத்துக்கொண்டும் உறங்கிக்கொண் டிருந்தான். வீறிட்ட ஒலி ஒன்று அவன் உறக்கத்தைக் கலைத்தது. பதறிப் போய்த் தொட்டியை நோக்கி ஓடினான். அந்த அவலக் குரல் அங்கிருந்தே வந்துகொண் டிருந்தது.

குப்பைத் தொட்டியை அவன் தடவிப் பார்த்தான். மென்மையானதொரு பொருள் துணிகளில் சுற்றப்பட்டு அவன் கையில் தட்டுப்பட்டது. அது இன்னும் உரக்கக் குரல் எழுப்பிக் கத்தியது. தொட்டிக்குள் ரொட்டித் துண்டங்கள், உறிஞ்சிச் சுவைத்தபின் உலர்ந்துபோன எலும்புத் துண்டங்கள், பழைய செருப்புக்கள், உடைந்த கண்ணாடிச் சில்லுகள், மாம்பழத் தோலிகள், வாடிய பூக்கள், உடைந்துபோன நாட்டுச் சாராயப் பாட்டில்கள் ஆகியவற்றுக்கு மத்தியில் புதிதாகப் பிறந்த குழந்தையொன்று நிர்வாணமாகக் கிடப்பதையும், அது தன் கைகால்களை உதைத்துக்கொண்டு பிடிபடாமல் அழுவதையும் குப்பைச் சாமியார் கண்டான்.

சிறிது நேரம் வியப்பே உருவாகி, இப்புவிக்கு வந்த அந்த மானிடப் பிறவியைக் குப்பைச் சாமியார் பார்த்துக்கொண்டே இருந்தான். சின்னஞ்சிறு ஜீவன்தான் என்றாலும், அது இந்த உலகத்துக்குத் தன் வருகையை எப்படி உரத்த குரல் எடுத்து இயம்பிக்கொண் டிருந்தது! வியப்பால் விரிந்த விழிகளைக் காட்டாமல், வெகுநேரம்வரை வாயே திறக்காமல் மனம் பதைக்க அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண் டிருந்தான். பிறகு சட்டென்று குனிந்து குப்பைத் தொட்டியிலிருந்து அந்தக் குழந்தையை வாரி எடுத்து மார்புறத் தழுவிக்கொண்டான். அப்புறம் சீக்கிரம் சீக்கிரமாகத் தன் பழைய கந்தைத் துணிகளில் அதை மறைத்துக்கொண்டான்.

ஆனால் அந்தக் குழந்தை அவன் மடிக்கு வந்த பின்னுங்கூட அழுகையை நிறுத்தவில்லை. அது இந்த உலகத்துக்குப் புதிதாக வந்திருந்தது. கதறிக் கதறித் தன் பசியை விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தது! புவியில் பிறந்ததுமே இப்படி ஓர் அசுரப்

பசியா? இன்னும் அதற்கு ஏழைமை என்றால் என்ன என்று தெரிய வில்லை. தாயன்புகூட இப்படி அஞ்சிச் சாகும் பயங்கொள்ளி என்பதும் அதற்கு விளங்கவில்லை. வாழ்க்கை எப்படிக் கெடு கிறது? அது எண்ணெய்ச் சிக்கு ஏறிக் கசமாக்கப்பட்டுக் கந்தல் துணியெனக் குப்பைத் தொட்டியில் எறியப்படுகிறது? இதெல் லாம் எதுவுமே அதற்குத் தெரியவில்லை. அதற்குத் தெரிந்திருந் தது பசி ஒன்றுதான். அந்தப் பசியைப் பறைசாற்ற அழுது அழுது வயிற்றைக் கையால் அடித்துக்கொண் டிருந்தது; கால்களை உதைத்துக்கொண்டு கதறிக்கொண் டிருந்தது.

குழந்தையின் இந்த அழுகையை எப்படி நிறுத்துவது என்று குப்பைச் சாமியாருக்குப் புரியவில்லை. அவனிடம் எதுவுமே இல்லை. பால், சீப்பான் எதுவுமே இல்லை. அவனுக்குத் தாலாட்டுப் பாட்டுக்கூட நினைவு இல்லை. அவன் கைகால் எதுவும் ஓடாத நிலையில் குழந்தையை மடியில் போட்டுக்கொண்டு தட்டிக் கொடுக்கலானான். இரவின் இருளில் பெருத்த ஏமாற்றத் தோடு நாற்புறமும் நோக்கலானான். ''இந்த நேரத்துக்குக் குழந்தைப் பால் எங்கே கிடைக்கும்?'' ஒன்றும் புரியாத நிலையில் ஒரு யோசனை ஓடியது அவனுக்கு. சட்டென்று குப்பைத் தொட்டி யைத் துழாவி ஒரு மாங்கொட்டையை எடுத்தான். அதன் ஒரு முனையைக் குழந்தையின் வாயில் கொடுத்தான்.

பாதி தின்ற மாம்பழத்தின் இனிய சாறு குழந்தையின் வாயில் போனதும் அது சிறுகச் சிறுக அழுகையை நிறுத்தியது. அப் படியே விசித்தவாறே குப்பைச் சாமியாரின் மடியில் உறங்கியும் போய்விட்டது. மாங்கொட்டை நழுவித் தரையில் விழுந்தது. குழந்தை தன்னை மறந்து அவன் மடியில் தூங்கியது. மஞ்சள் நிற மாம்பழச் சாறு அதன் உதடுகளில் இன்னும் வழிந்துகொண் டிருந்தது. அதன் சின்னஞ் சிறிய கை குப்பைச் சாமியாரின் கட்டை விரலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண் டிருந்தது.

ஒரு கணநேரத்துக்குக் குப்பைச் சாமியாரின் மனத்தில் இந்தக் குழந்தையை இப்படியே விட்டெறிந்துவிட்டு எங்கேயாவது ஓடிவிட்டால் என்ன என்ற எண்ணம் ஓடியது. மெதுவாகத் தன் கட்டை விரலைக் குழந்தையின் கையிலிருந்து விடுவித்துக் கொள்ள முயன்றான் குப்பைச் சாமி. ஆனால் குழந்தையின் பிடி மிகவும் அழுத்தமாக இருந்தது. வாழ்க்கை மீண்டும் பற்றி இழுப்பதாகக் குப்பைச் சாமியாருக்குப் பட்டது. அடிக்கொரு தடவை வெட்டி வெட்டி இழுப்பதுபோலவும், விலகி ஓடுவது

முடியாத காரியம்போலவும் குப்பைச் சாமியாருக்குத் தோன்றியது. திடீரென்று அவனுக்குத் துலாரியின் நினைவு வந்தது. அதோடு கர்ப்பத்திலேயே கலைந்துபோன குழந்தையின் நினைவும் அவனை ஆட்கொண்டது. திடுமென்று குப்பைச் சாமியார் விம்மி விம்மி அழலானான். அவன் கண்கள் பெருக்கிய கண்ணீரின் அளவுக்குக் கடல் நீர் இருக்குமா என்பதே சந்தேகமாக இருந்தது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக அவன் ஆத்மாவில் படிந்துவிட்ட அழுக்கும் கசடும் இந்த ஒரு புயல் வீச்சிலேயே கழுவப்படும்; துப்புரவு பெறும் என்று யார்தான் எதிர்பார்த்திருக்க முடியும்?

இரவு முழுவதும் புதிதாகப் பிறந்த அந்தப் பச்சிளம் குழந்தையைத் தன் மடியிலும் கையிலும் தூக்கிக்கொண்டு பரபரப்பும் பரிதவிப்புமாகக் குப்பைச் சாமியார் நடைபாதையில் நடைபயின்றுகொண்டிருந்தான். பொழுது புலர்ந்து சூரியன் உதித்த பின் பார்த்தால், குப்பைச் சாமியாரைக் குப்பைத் தொட்டிக்கு அருகில் காணோம். சாலையைத் தாண்டிப் புதிதாகக் கட்டப்பட்டுக் கொண்டிருந்த கட்டிடத்துக்குக் கீழே செங்கல் சுமந்து சிற்றாள் வேலை செய்துகொண்டிருந்தான். அந்தக் கட்டிடத்துக்கு அருகிலேயே தங்க அரளி மரம் ஒன்றின் நிழலில், பூப்போன்ற துணியில் சுற்றப்பட்டுப் பால்போன்ற பச்சிளங் குழந்தை ஒன்று வாயில் பால்சீப்பானுடன் முறுவலித்துக் கொண்டிருந்தது.

சமுக்காளம்

இப்பொழுது இந்தச் சமுக்காளம் பழசாகிவிட்டது. ஆனால், இரண்டு வருஷங்களுக்கு முன்னால், ஹஜ்ரத்கஞ்சில் உள்ள ஒரு கடையில் நான் இதை வாங்கியபொழுது, இது புத்தம் புதிதாக இருந்தது; இதன் உடல் நேர்த்தியாக இருந்தது; இதன் புது முறுவல் கவர்ச்சியாக இருந்தது; இதன் ஒவ்வொரு நிறமுமே அச்சாக இருந்தது, சூதுவாது அறியாத சிசுவைப் போல! இப்பொழுது இல்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால். இப்போதெல்லாம் இதில் நஞ்சு கலந்து வீணாகிவிட்டது. இதன் ஒவ்வோர் இழையிலும் நஞ்சும் நாற்றமும் தோய்ந்துவிட்டன. நிறமும் மங்கிவிட்டது. இதன் முறுவலில் இப்போது கண்ணீர்த் துளி மின்னுகிறது. இதன் உடலில் பெண் நோய் வாங்கிக் கொண்டவன்போலப் பல இடங்கள் இற்றுக் கரைந்துவிட்டன. முன்பு இந்தச் சமுக்காளம் புது மெருகு அழியாமல் நேர்த்தியாக இருந்தது. இப்பொழுதோ ஏமாளியாகி எல்லாவகையிலும் நம்பிக்கை இழந்து காணப்படுகிறது. எதற்கும் ஒரு நச்சுச் சிரிப்புச் சிரிக்கிறது. உலகத்துக் குப்பை கூளங்கள் அனைத்தையும் தன் இதயத்துள் ஒளித்துக்கொண் டிருக்கிறாற்போலப் பெரு மூச்சும் குறுமூச்சும் விட்டுப் பொருமுகிறது.

இந்தச் சமுக்காளத்தின் நீளம் ஒன்பது அடி, அகலம் ஐந்து அடி. ஒரு சாதாரணக் கட்டிலின் அகலம் எவ்வளவோ, அவ்வளவுதான். கரையின் நாற்புறமும் வாதுமை நிறம், ஒன்றரை அங்குலத்துக்கு இறங்கியிருக்கிறது. அதற்குப் பின்தான் சமுக்காளத்தின் உடல் தொடங்குகிறது. ஆரம்பம் நல்ல சிவப்பு நிறம். இந்த நிறம் முழு அகல வாட்டத்துக்கும் ஓடுகிறது. நீள வாட்டத்தில் இரண்டு அடிக்கு ஒருமுறை, அதாவது இரண்டு அடிகளுக்கு ஒருமுறை ஐந்து அடி நீளத்துக்கு ஒரு பட்டை, சிவப்பு வண்ணத்தில் ஓர் ஏரியை உருவாக்கிக்கொண்டு. அந்த ஏரியிலும் சிவப்பு வண்ணம் எத்தனை நிற ஜால வித்தைகள் புரிந்துவிடுகிறது! நல்ல சிவப்பு, ரோஜா நிறம், வெளிர் ரோஜா நிறம், அழுக்கு இரத்தத்தைப் போலக் கருஞ்சிவப்பு என்று எத்தனை வண்ணக் கலவைகள்! படுக்கும்பொழுது நான்

சமுக்காளத்தின் கருஞ்சிவப்புப் பக்கத்தில்தான் தலைவைத்துப் படுப்பேன். அப்படிப் படுக்கும் நேரங்களில் எல்லாம் என் தலையில் அட்டைகள் ஒட்டிக்கொண் டிருப்பதுபோலவும், என் அழுக்கு இரத்தத்தை உறிஞ்சுவதுபோலவும் உணர்ந்து நிம்மதி பெற முயல்வேன்.

இந்த இரத்தச் சிவப்புப் பட்டையைத் தொடர்ந்து கீழே இன்னும் ஐந்து பட்டைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் தனி நிறம். சமுக்காளத்தின் அகலவாட்டில் இவையும் விரவியிருக்கின்றன. இப்படியாகக் கடைசிப் பட்டை சமுக்காளத்தின் நீள வாட்டத்தையும் விழுங்கி முடிந்துவிடுகிறது. அப்புறம் சமுக்காளத்தின் நுனி தொடங்குகிறது. இரத்தச் சிவப்புப் பட்டைக்கு நேர் கீழே மூன்று சிறு சிறு பட்டைகள் இருக்கின்றன. முதலில் வெளுப்பும் கறுப்பும் கலந்த வண்ணம், இரண்டாவதாக வெளுப்பும் நீலமும் கலந்தது, மூன்றாவதாகக் கருநீலமும் காக்கி நிறமும் கலந்தது. இந்தப் பல வண்ணக் கலவையைத் தொலைவிலிருந்து பார்க்கும்பொழுது அம்மை வடுக்களெனத் தோற்றம் அளிக்கின்றன. அதைத் தவிர்க்க அருகில் சென்று பார்த்தாலும் இதன் அழகில் வளமையைக் காணமுடிவதில்லை. ஏலத்துக்கு வரும் பழைய கோட்டின் உடலைப்போல அழுக்காகவும் அசிங்கமாகவுமே தோன்றுகிறது. முதல் பட்டையை ரத்த ஏரி என்று கொண்டால், இந்த மூன்று சிறிய பட்டைகளும் ஒன்று சேர்ந்து சீழ் ஏரியாகப் பரிணமித்துக் காட்சி தருகின்றன. இப்பட்டைகளில் உள்ள வெளுப்பு, கறுப்பு, நீலம், மஞ்சள், கருநீலம் முதலிய நிறங்கள் பாவ ஏரியில் குழம்பி ஒரே சகதியாகக் காட்சி தருகின்றன. இந்த ஏரிச் சகதியில்தான் என் தோள்பட்டை, என் இதயம், என் சுவாசப்பைகள் ஆகியவை எலும்புப் பேழைக்குள் அடைக்கலம் புகுந்து புரளுகின்றன:

நான்காவது பட்டையின் நிறம் மஞ்சள். ஐந்தாவது பட்டையின் நிறம் பச்சை. பச்சை என்றால் ஆழ்கடலின் பச்சை நிறம். வசந்த ருதுவின் இலைப்பச்சை அல்ல. அச்சமூட்டும் நிறம் இது. இந்தப் பச்சையைப் பார்க்கும்பொழுது சுறுமீன்களின் நினைவு வருகிறது. மூழ்கும் கப்பல்களிலிருந்து எழும் அவலக்குரல் ஒலித்துக் காதைத் துளைக்கிறது. பொங்குமாங் கடலின் ஆர்ப்பரிக்கும் அலைகள் குலைநடுக்கம் உண்டுபண்ணுகின்றன. மஞ்சள் நிறமோ பார்க்கச் சகிக்கவில்லை. மண் நிறமும், மகிழம்பூ நிறமும் கலந்த ஓர் ஆபாசக் கலவை நிறம். இளவேனிலின் எழில்

கூட்டும் பசுமஞ்சள் நிறம் அல்ல. மக்கிப் போன மண்ணைப் போன்ற மஞ்சள் நிறம்; எலும்புருக்கி நோய் வந்து இரத்தம் செத்துப் போனவனின் படுசோகை நிறம். பயந்து புரியும் முதல் பாவச் செயலைப் போல நாணிக் கூசி வெளிறிப் போனது. அந்த மஞ்சள் நிறத்தில் பச்சாத்தாப உணர்வும் இலேசாக அடக்கம். ''நான் எதற்கு? நான் எதற்கு?'' என்று அடிக்கொரு தடவை அந்த மஞ்சள் பட்டை கேட்பதாக எனக்குப் படும்.

நான் என் உணர்வைக் கிடத்தும் இடத்துக்கு வலப்புற மூலையில் நீலமும் மஞ்சளுமாகப் பத்து நேர்க்கோடுகள் இருக்கின்றன. கால் நீட்டி உறங்கும் இடத்திலே பதினேரு நேர்க்கோடுகள் இருக்கின்றன. அவை மஞ்சளும் நீலப்பச்சை நிறமும் கொண்டவை. சமுக்காளத்துக்கு மத்தியில் ஆறு நேர்க்கோடு கள், சிவப்பும் வெள்ளையுமாக. அவற்றுக்கு நடுவில் ஆழ்ந்த கறுப்புப் புள்ளி ஒன்று. நான் சமுக்காளத்தில் படுக்கும்போ தெல்லாம், தலையிலிருந்து கால்வரை நேர்க்கோட்டுக் கொக்கி களில் யாரோ இழுத்து மாட்டிவிட்டதுபோன்ற உணர்வில் மாய்ந்துபோகிறேன். என்னைக் கழுவில் ஏற்றித் தொங்கவிட்டு, என் மனத்தில் அழுத்தமானதொரு கறுப்பு ஆணியை அறைந்து அடித்துவிட்டாற்போலத் துடிக்கிறேன். என்னைச் சுற்றி நாற்புற மும் அழுக்கு இரத்தமும் சீழும் குளம் கட்டி நிற்கின்றன. சுறு மீன்களும் நீர்ச் சிலந்திகளும் ''வதவத''வென்று நிறைந்த பாசி வண்ணக் கடலாக அது எனக்குக் காட்சி தருகிறது. நான் துடி துடித்துப் போகிறேன். கழுவில் ஏற்றப்பட்ட ஏசுநாதருக்குக்கூட இத்தனை துன்பம் நேர்ந்திராது. அத்தனை துன்பம் அந்தச் சமுக்காளத்தில் படுக்கும்போது எனக்கு ஏற்படுகிறது. ஆனுல், துயரக்கடலைத் தாண்டுவதுதானே மனித சாதனை? அதை மனிதன் தன் வாழ்க்கை நியதியாகக் கொள்ளத் துடிக்கிருனே! இதை எண்ணி நான் என்னை அந்தச் சமுக்காளத்திலிருந்து விடுவித்துக்கொள்ள விரும்பவில்லை; முயலவும் இல்லை. இந்த ஒரு சமுக்காளம் இருக்கும்பொழுது இன்னெரு சமுக்காளம் வாங்கவேண்டும் என்ற துணிவோ எண்ணமோகூட எனக்கு ஏற்படவில்லை. என்னிடம் இந்த ஒரே சமுக்காளந்தான் இருக் கிறது. சாகும்வரை இதுவேதான் இருக்கும் என்றும் எண்ணு கிறேன்.

உண்மையில் இந்தச் சமுக்காளத்தை ஓர் இளம்பெண் வாங்க விரும்பினுள். ஹஜ்ரத்கஞ்சில் ஒரு கடைக்குள் நுழைந்து அவள்

இதைப் பிரித்துப் போடச் சொல்லிப் பார்த்துக்கொண்டிருந் தாள். அப்பொழுது என் கண்கள் இதைத் தேர்ந்தெடுத்தன. அந்த இளம்பெண் ஒரு முடிவுக்கு வராமல், தன் ரவிக்கைக்காக வேண்டிப் பட்டுத் துண்டு பார்க்கப் போயிருந்தாள்.

அந்தச் சமயம் பார்த்து, ''இந்தச் சமுக்காளத்தை நான் வாங்க விரும்புகிறேன்!'' என்று கடை மானேஜரிடம் கூறினேன்.

அவன் அந்த இளம்பெண்ணைச் சுட்டிக்காட்டி, ''மிஸ் ரூபவதி, அதைத் தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறார்கள் போலிருக்கிறதே! சற்று இருங்கள், கேட்டு வருகிறேன்!'' என்றான்.

''ப்ரவாயில்லை சமுக்காளம்!'' என்றாள் ரூபவதி.

''பரவாயில்லையா? என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்!'' நான் பொங்கி எழுந்து கூறினேன்: ''இதுபோன்ற சமுக்காளம் உலகத்தில் எங்கே போனாலும் கிடைக்காது. தாந்தேயின் கற் பனையில்கூட இத்தனை அழகான டிஸைன் தோன்றியிராது. இந்தச் சமுக்காளம் ஆஸ்பத்திரியின் அமுக்கு வாளியைப்போல் அழகாயிருக்கிறது. பைத்தியம் தலைக்கேறிய நோயாளியைப் போல் தன் விளக்கத்தைத் தானே தருவதாயிருக்கிறது. இந்த நெருப்பு ஆறும் இந்தச் சீழ் ஓடையும் ஹாதிம் தாயியின் யாத்தி ரையை நினைவுபடுத்துவதாயிருக்கிறது. பண்டைய காலத் தில் ஓவிய விற்பன்னர்களாகத் திகழ்ந்த இத்தாலியத் துறவி களின் ஈடு இணையற்ற படைப்புச் செல்வங்களின் நினைவைப் புதுமைப்படுத்திக் கிளறிவிடுகிறது. இது சமுக்காளம் அல்ல; ஒரு வரலாறு. மக்கள் தன்மையின் ஆத்மா இதனுள் உறைந்து கிடக்கிறது!''

அவள் புன்னகை புரிந்தாள். அவள் பற்கள் மிகவும் வெண்மை யாக இருந்தன. ஆனால் கொஞ்சம் கோணல் மாணலாக, ஒன்றில் ஒன்று ஏறினாற்போல் இருந்தன. இருந்தாலும் அந்தச் சிரிப்பில் ஓர் அழகு இருந்தது. ''நீங்கள் எப்போதாவது இத்தாலிக்குப் போயிருக்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

''இத்தாலியா? நான் இன்னும் ஹஜ்ரத்கஞ்சைத் தாண்டி அந்தப் பக்கங்கூடப் போனதில்லை. இத்தனை நாளும் இந்தப் பாதியில்தான் வாழ்க்கை ஓடியிருக்கிறது. இதோ, இந்த வெற்றிலைக் கடை, அதோ எதிர்த்தாற்போல் இருக்கிறதே, அந்தக் காபிக் கடை . . . அவ்வளவுதான், எனக்குத் தெரியும்'' என்றேன்.

மானேஜர் எங்கள் இருவரையும் அறிமுகம் செய்துவைப்பது உசிதம் என்று எண்ணினுன். ''இவர் ஓர் கலைஞர். காகிதங்களில் அற்புதமாக ஓவியம் வரைகிருர். இவர் மிஸ் ரூபவதி. இங்கே பெண்கள் கல்லூரிக்குப் பிரின்சிபாலாக வந்திருக்கிருர். இப்போதுதான் இங்கிலாந்தில் படிப்பை முடித்துக்கொண்டு இங்கே . . .'' என்ருன்.

''நீங்களே அந்தச் சமுக்காளத்தை வாங்கிக் கொள்ளுங்கள். எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை'' என்ருள் அவள்.

''மிக்க நன்றி!'' என்று கூறி நான் சமுக்காளத்துக்கான தொகையைக் கொடுத்தவாறே, ''என்னேடு தாங்கள் காபி அருந்தப் பிரியப்படுவீர்களா? தவருக எடுத்துக்கொள்ளாமல் இருந்தால், வாருங்கள் காபி ஹவுஸ் வரை போய்வருவோம்!'' என்றேன்.

''தாராளமாக. ஆனுல் ஒரு நிமிஷம், இந்தப் பிளவுஸைப் பார்த்துவிட்டு வருகிறேன்!'' என்று கூறியவாறே முறுவல் செய்தாள்.

அவள் முறுவலும் நன்ருக இருந்தது. வட்டவடிமான அழகிய முகம். சந்தன நிறம். இலேசாகச் சிவந்த உதடுகள். எல்லாமாகச் சேர்ந்து அவளை ஒரு ரசக்கலவையாக என் கண்முன் நிறுத்தின. காணக் காண மதி கிறங்கியது. ரவிக்கைத் துணி வாங்கிக் கொண்டு அவள் என்னேடு புறப்பட்டாள். நடை தடுமாறியது. நான் கையைப் பற்றி அவளுக்கு உதவினேன். ''என்ன விஷயம்? எப்போதும் நீங்கள் இப்படி நொண்டித்தான் நடக்கிறீர்களா?'' என்று கேட்டேன்.

''இல்லை, இல்லை!'' என்ருள் அவள்.

நான் கவனமாகப் பார்த்தேன். காலில் ஒரு கட்டுப் போட்டிருந்தது.

''காயமா?'' என்று கேட்டேன் நான்.

''ஆமாம், கட்டை விரல் நகம் வளர்ந்திருந்தது. அதைக் கத்தரிக்கச் சொல்லப்போய் . . . கப்பல் சர்ஜன் படுமுட்டாள்!'' அவள் புடைவைத் தலைப்பை முன் நெற்றிப் பக்கம் சிறிது இழுத்துவிட்டுக்கொண்டாள். அவள் முதல் முறையாகத் திரும்பியபோது கழுத்தருகில் வலப்புறமாக அவள் மஞ்சள் ரோஜாப் பூ செருகிக் கொண்டிருப்பதைக் கண்டேன். அப்புறம் அவள் திரும்பியபோது நெற்றிக் குங்குமப் பொட்டு பளிச்சென்று தெரிந்தது. ''ஆமாம், இதற்கு முன்னல் அந்தக் குங்குமப் பொட்டு

ஏன் இவ்வளவு அழகாயில்லை?'' என் மனம் எண்ணிப் பார்த்தது.

காபி ஹவுஸில் உட்கார்ந்து பார்த்தபோது அவள் இன்னும் அழகாக விளங்கினாள். காபி ஹவுஸில் விளக்குகள் பொருத்தி யிருக்கும் முறையிலேயே ஒரு விசேஷம். ஆண்கள் அழகற்றவர் களாகவும் பெண்கள் அழகில் சிறந்தவர்களாகவும் காணப்படு கிறார்கள். இது பொது. இவள் விஷயத்தில் வேறு விசேஷமும் இருந்தது. இயற்கையிலேயே இவள் அழகி. இந்த விளக்கும் சேர்ந்துகொண்டு இவளை எடுத்துக் காட்டியது. இல்லாவிட்டால் ஜனங்கள் அடிக்கடி கழுத்து வலிக்க அவளைத் திரும்பித் திரும்பிப் பார்ப்பானேன்? பெண்கள் தங்கள் கூரிய பார்வையை அவள் மீது பதிப்பானேன்? பைராக்கள் மேஜைக்கு இப்படி விரைந் தோடி வருவானேன்?

அவள் புன்முறுவலோடு ஆர்டர் செய்தாள்: ''இதோ பார், பைரா, கொஞ்சம் சூடான பால், அப்புறம் ஒரு தனி கிளாஸில் கொஞ்சம் சுடுதண்ணீர்!''

''சுடு தண்ணீரா . . .'' பைரா இழுத்தான்.

''கொஞ்சமாகப் போதும் சுடுதண்ணீர்.'' அவள் மறுபடியும் முறுவலித்தாள். பைரா தலையிலிருந்து கால்வரை உருகிவிட் டான். அவன் உடல் என்ன, கண்ணாடியில் ஆனதா? நான் அவன் உருகிப் பெருகுவதைப் பார்த்துச் சமைந்துவிட்டேன். அவள் உதடுகளில் நெளிந்த முறுவலுக்கு இத்தனை ஆற்றலா? அவன் உடலை உருக்கிவிட்டதே, உருக்கி! இந்தப் பார்வை என்ன? இது உமிழும் ஒளி என்ன? இதுவும் காபி ஹவுஸில் உள்ள மின்சார ஒளி புரியும் விந்தை விசித்திரந்தானோ?

''இன்னும் பைரா, முட்டை ஸாண்ட்விச் . . .'' அவள் மீண்டும் சொன்னாள்.

பைரா திரும்பி வந்து, ''முட்டை ஸாண்ட் விச்சுகள் தீர்ந்து விட்டனவே!'' என்றான்.

"கொஞ்சங்கூட இல்லையா?" அவனுடைய பெரிய பெரிய பேதை விழிகள், காயமுற்றாற்போலக் கலங்கிச் சிவந்த விழிகள் இன்னும் சிரித்தாற்போலத் தோன்றின, தன் கையாலாகாத்தனத்தைப் பறைசாற்றுவதுபோல. ''ஒரு பிளேட் கூடவா இல்லை?''

ஸாண்ட்விச்சுகளும் கிடைத்துவிட்டன.

''ஊஹூம், நான்தான் பில் தருவேன்!''

''அதெப்படி முடியும்? நான் ஆண் பிள்ளை!''

''ரொம்பப் பழங்கால விஷயம்!'' சிரித்தாள் அவள். கடையில் பில்லுக்குப் பணம் கொடுத்தவள் அவள்தான்.

வீட்டில் வேலைக்காரனுக்குச் சமுக்காளம் பிடிக்கவில்லை. அப்பொழுது என் வீட்டில் ஒரு கோபக்காரக் கவிஞன் விருந்தாளியாக இருந்தான். சந்தக் கட்டுப்பாட்டுக்கு அடங்காத கவிதைதான் எழுத வரும் அவனுக்கு. சாராயமும் குடிப்பான். ஐந்து வேளை தொழுகையும் நடத்துவான். அவனுக்கும் சமுக்காளம் பிடிக்கவில்லை. நான் கேட்டதற்கு ''ஹூம்'' என்ற உறுமலோடு பதில் சரி. அவன் எத்தனைக் கெத்தனை நீளமாகக் கவிதை எழுதுவானோ, அத்தனைக் கத்தனை குறைவாகப் பேச்சை முடித்துக் கொள்ளுவான்.

''ஹூம் என்றால் என்ன அர்த்தம்?'' நான் கோபித்துக் கொண்டேன். ''உன் கருத்தைச் சொல்லு. வர்ணச்சேர்க்கை எப்படி என்று சொல்லு.''

''ஹூம்!''

ரூபவதி அவனையே கவனமாகப் பார்த்துக்கொண் டிருந்தாள். பிறகு கல கலவென்று சிரித்தாள். ''உங்கள் புதுக் கவிதை ஒன்றைக் கூறுங்கள். இப்பொழுது எல்லாம் அஸ்பாண்டரும் லாடனும் எந்தப் பொருள்மீது கவிதை எழுதுகிறார்கள், தெரியுமா?'' என்று அந்த அழுகுணிப் பயல் கவியிடம் கேட்டாள்.

''ஹூம்!'' அவன் தாடியை நீவி விட்டுக்கொண்டே உறுமினான்.

''அவர்கள் உனக்குத் தங்கள் கவிதைகளைப் படித்துக் காட்டினார்களா?'' என்று நான் ரூபவதியிடம் கேட்டேன்.

''இல்லை, ஆனால் எனக்கு ஜோ சொன்னார்.''

''ஜோவா? யார் அது?''

''ஜோ பிரௌன்! பெயரைக் கேள்விப்பட்டதில்லையா? இப்பொழுது ஆக்ஸ்போர்டில் எல்லாருக்கும் பிடித்த கவி அவர்தாம். இந்தியாவுக்கு அவர் கவிதைகள் இன்னும் வரவில்லை. லண்டனில் அவர் என்மீது மோகம் கொண்டார்.'' அவள் சிறிது வெட்கமும், சிறிது வெட்கமின்மையும் கலந்த விசித்திர நகையொலி எழுப்பிக் கூறினாள். அவள் நெற்றிக் குங்குமம் செக்கச் சிவந்த ரத்தினப் பொட்டெனக் காட்சி அளித்தது.

''உன் வாழ்க்கை வெற்றி வாய்ப்புகள் நிறைந்ததாகத் தோன்றுகிறதே!'' என்றேன் நான்.

''இல்லை!'' அவள் ஒரு பெருமூச்சுவிட்டுக் கூறினாள். அந்தப் பெருமூச்சில் கண்ட ஏக்கம், அவளை அப்படியே மார்புறத் தழுவிக்கொள்ளலாமா என்று எண்ண வைத்தது.

''ஹும்!'' கவி ''உம்'' கொட்டினான்.

அவள் முறுவலித்து, ''உங்கள் இந்தக் கவி பெரும் வாயாடி. நான் ஒரு கவிதை கூறுகிறேன், கேட்கிறீர்களா?'' என்றாள்.

என் வியப்பு வளர்ந்தது: ''நீகூட ஒரு கவியா?'' என்று கேட்டேன்.

''இல்லை! இந்தக் கவிதை என் அம்மா எழுதியது!''

''சற்று இரு, இந்தச் சமுக்காளத்தை விரித்துப் போடுகிறேன்.''

சமுக்காளத்தை விரித்தாயிற்று. ரூபவதி தன் கவிதையைப் பாடியே காட்டினாள். வங்காளிக் கவிதை அது. பிரிவுத்துயர் வாட்டும் இரவுபோல, எரிந்து தீர்ந்த விளக்குப்போல அழகாயிருந்தது. குரலில் தீச்சுடரின் ஆட்டம் தெரிந்தது. கள்ளுண்ட மயக்கம் கண்களைக் கிறக்கியது. இளம் நங்கைகள் வரிசையாகக் குடம் ஏந்தி நீர்த் துறைக்குச் சென்றுகொண் டிருந்தார்கள். கடலின் நீல அலைகள் எழும்பி எழும்பிக் குதித்துக்கொண்டிருந்தன. நிசப்தமான சூழ்நிலை. ரூபவதியின் கண்களில் கொப்புளித்த கண்ணீர், கன்னங்களின் வழியே உருண்டு சமுக்காளத்தில் விழுந்தது. சிவப்புக் கட்டம் தீப்பிழம்பாகத் தோற்றம் தந்தது.

''உனக்கு ஜோ பிரெளனிடம் காதல் ஏற்படவில்லையா?'' என்று கேட்டேன் நான்.

ரூபவதி கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, ''நான் காதலித்த பையனுக்கு லண்டனிலேயே க்ஷயரோகம் கண்டுவிட்டது. அவன் என்னோடு கப்பலில் வந்துகொண் டிருந்தான். ஆனால் வழியிலேயே அவன் இறந்துவிட்டான். ஏடனைத் தாண்டிச் செங்கடலுக்கு அருகில்'' என்றாள்.

''செங்கடலா?'' என் நினைவு ஓடியது. சமுக்காளத்தின் சிவப்புப் பட்டைச் செங்கடலாகிவிட்டது. அதன் ஆழமான நீர்ப்பரப்பில் இரத்தம் செத்து வெளிறிப்போன ஒரு முகம் இருமியவாறே என் கண்களில் தோன்றியது. அப்புறம் சுழலில் சிக்கி மறைந்தது. ரூபவதியின் காதலன் கனவுலகில் இருக்கிறான். செங்கடல் நீரில் மிதக்கிறான். ரூபவதி பெருக்கும் கண்ணீர் என் சமுக்காளத்தை நனைக்கிறது.

''ஹும்!'' கவி உறுமினான். நான் ஒரு புத்தகத்தால் அவன் தலையைத் தட்டினேன்.

ரூபவதி கண்ணீரிலும் மென்னகை புரிந்தாள். கண்ணீர் பெருக்குவதைக் காட்டிலும் கண்ணீரை அடக்குவதுதான் கஷ்டமாகிவிடுகிறது.

ரூபவதி!

எத்தகைய விந்தைப் பெண் இவள்! இலண்டனில் கவி ஜோ பிரௌன் அவளைக் காதலித்திருக்கிறான். இங்கே லக்னௌவில் ஹஜ்ரத்கஞ்சில் வாழும் ஊர் சுற்றித் திரியும் ஏழைக் கலைஞன் அவள் காதல் தளையில் கட்டுண்டு மாய்கிறான். இது விஷம், நஞ்சு என்று தெரிந்திருந்தும் எப்படி இவள் இந்த விஷக் கோப்பையைப் பருகினாள்? ஏமாற்றம்! இயலாமை! காதலுக்கு விடை எப்போதும் ஏன் காதலாகவே இருப்பதில்லை? இது என்ன நெருப்பு? ஒருவனை எரிக்கிறது; இன்னொருவன் இதயத்தில் பாறாங்கல்லை வைக்கிறது; ஒருவனைக் கண்ணீர் வடிக்கச் செய்கிறது; இன்னொருவனின் உதடுகளில் இளநகையின் நிழலாட்டத்தைக்கூடக் காணவிடுவதில்லையே!

நான் சமுக்காளத்தைத் தட்டியவாறே கேட்டேன்.

சமுக்காளம் பதில் அளித்தது: ''நான் ஒரு சிலுவை. நான் துயரையும் வேதனையையும் அறிவேன். ஆனால் துயரத்துக்கும் வேதனைக்கும் மருந்து அறியேன்.''

ரூபவதி அதைத் தொடர்ந்து கூறினாள்: ''இதுதான் விதி. விதி உன்னைச் சமுக்காளம் வாங்க அங்கே இட்டு வந்தது. உனக்கும் எனக்கும் சந்திப்பை ஏற்படுத்தியது. ஆனால் உன்னிடம் எனக்கு அந்தக் காதல் ஏற்படவிடவில்லை. இது விதியின் சதி. ஆயிரம் முயன்றாலும் நமது இந்த நட்பு காதலாக உருப்பெறமுடியாது. இது விதியின் விளையாட்டு இல்லை என்றால் வேறு என்ன?''

பிறகு கவியை நோக்கி, ''புலவரே! தங்கள் கவிதையைக் கூறுங்கள்!'' என்றாள்.

சில நாட்களுக்குப் பின் திடீரென்று ஒரு நாள் அவள் என்னிடம் வந்து, ''நான் உங்கள் கவிஞரைக் காதலிக்கிறேன்!'' என்றாள்.

''பொய். மடையன் அவன். அவனை. . .

''அவர் கண்களைப் பார்க்கவில்லையா நீங்கள்?'' அவள் பெருமூச்சு விட்டவாறே கேட்டாள்: ''சிலுவையில் அறைந்த ஏசுநாதரைப்போலத் தோன்றவில்லை? எத்தனை வருத்தம் அவர் விழிகளில் குமிழியிடுகிறது?''

''நீ மட்டும் ஒரு வார்த்தை சொல்லு! நான் இந்தக் கண்களையே குருடாக்கிக்கொண்டு விடுகிறேன்'' என்றேன் நான்.

அவளுக்கு எனது இந்தப் பேச்சுப் பிடிக்கவில்லைபோலும். ''என்ன செய்வது?'' என்று முகத்தில் கம்பீரத்தைத் தேக்கிக் கேட்டாள்.

''ஆமாம், இது மனசு இல்லையா?'' என்றேன் நான் குத்தலாக.

''ஹூம்.'' கவிஞன் உறுமினான்.

அவர்கள் விடைபெற்ற அன்று நான் என் வீட்டில் ஒரு சிறு விருந்து வைத்தேன். ரூபவதி கருப்பு நிற டாக்காப் புடைவை உடுத்தியிருந்தாள். கண்களில் கனமாக மையிட்டிருந்தாள். பட்டுக் குஞ்சங்கள் கறுப்பு; கை வளையல் ஓரங்கூடக் கறுப்பு. தினமும் அவளைப் பார்க்கும்பொழுது ஓர் ஒளி பரவுவதுபோல் உணர்ந்தேன். சூரியன், சந்திரன், நிலவு எல்லாம் ஏக காலத்தில் ஒளி பரப்புவதாக மகிழ்ந்தேன். ஆனால் இன்று? ஏனோ அவளைப் பார்க்கப் பார்க்க ஓர் இருள் பரவுவதாகத் தோன்றியது. அவள் மகிழ்ச்சி கொப்புளிக்கும் இந்த நிலையில் எனக்கு மட்டும் துயரச் சிலையாக, நிராசையின் வடிவாகக் காட்சி தருவானேன்? ஏழைக் கலைஞனின் மனத்துள் படர்ந்த இருள் காரணமோ? அவள் முதல் நாள் பாடினாளே, அதே பாடலை இன்று மீண்டும் பாடுமாறு அவளை வேண்டினேன். பாடிய பிறகு அவள் ஆடியதாகவும் ஞாபகம். நான் அவள் முகத்தைப் பார்க்கவில்லை. நான் அவள் கால்களைப் பார்த்துக்கொண்டிருந்து விட்டேன். மங்கலாகத் தெரிந்த பாதங்களில் மருதாணிச் சிவப்பு மின்னலெனப் பளிச்சிட்டது. அவள் ஆடிக்கொண் டிருந்தாள். நான் அந்த இருளில் மருதாணி நிறக் கோட்டின் நடனத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நடனம் முடிந்ததும் அந்தப் பாதங்களை எடுத்து என் மார்பிலே ஒத்திக்கொண்டேன். அந்தப் பாதங்கள் இன்றும் என் மார்பிலே ஏன் பத்திரமாக இருக்கின்றன? இந்த இதயக் கல்லறைக்குள்ளே ''மம்மி''களைத் தவிர வேறு எதற்குமே இடம் கிடையாதா?

அவள் சென்றபின் நான் மீண்டும் சமுக்காளத்தில் வந்து உட் கார்ந்தேன். மஞ்சள் ரோஜாமொட்டு ஒன்று அவள் முடியிலிருந்து உதிர்ந்து சமுக்காளத்தில் கிடந்தது. என் மனத் தில் ரூபவதியின் நினைவாக வேறு எதுவுமே இல்லை, இரண்டு பாதங்களையும் இந்த மஞ்சள் ரோஜாமொட்டையும் தவிர. இது என்ன ஓவியமோ? ஓவியக் கலைஞனாக இருந்தும் நான் இது வரை இதுபோன்ற விந்தை ஓவியம் தீட்டியதில்லை. அதோடு...!

நான் சமுக்காளத்தை வினவுகிறேன்.

சமுக்காளம் மறுமொழி அளிக்கிறது: ''நான் சிலுவையில் இருக்கிறேன். சிலுவைச் சாவையே தரும். அதற்கு வாழ்க்கை முறைபற்றி எதுவுமே தெரியாது.''

சரி, அது போகட்டும். நடந்தது நடந்துவிட்டது. வாழ்க்கையில் கல்லறையின் இன்பந்தான் துய்க்கவேண்டுமென்ருல், அதை ஏன் சௌகரியமாகப் பெறக்கூடாது? தேனில் நஞ்சைக் கலந்து தான் பருகவேண்டுமென்ருல் கலப்படமற்ற நல்ல நஞ்சையே ஏன் குடிக்கக்கூடாது? எளிமையும் நிலைக்காது என்று உறுதிப்பட்டு விட்டால், பாவத்தின் மடியிலேயே ஏன் அடைக்கலம் புகக் கூடாது? வா, உன் ஆன்மாவில் இலேசாகச் சிமிட்டுகிறதே, சின்னஞ்சிறு ஒளி முத்து, அதை அமுக்கிவிடுவோம். படரும் இருட்டில் பாவம் விரவுவதைக் காண்போம். வாழ்க்கையைச் சீண்டி அதற்கு எரிச்சலூட்டுவோம். அது படும் அவஸ்தையைக் கண்டு கல கலவென்று கை தட்டிச் சிரிப்போம். அன்பு வேண்டாம், காதல் வேண்டாம்! ஆசை—நசை இருக்கட்டுமே!

கலைஞன் வேறு ஒரு பெண்ணோடு அறிமுகம் செய்து கொண்டான். அவள் படுசோகை. சிறிதும் தெம்பற்றிருந்தாள். பெயர் தான் ஆஷா. ஆனல் நிராசையின் வடிவம். அவளைப் போன்ற கொடும்பசி கொண்டவளைக் காணவே முடியாது. நாயைப்போல எப்பொழுதும் கூடவே சுற்றித் திரிவாள். பாவம்! கலைஞனுக்கு அவள்மேல் இரக்கம் ஏற்பட்டது. அவளை அவன் நேசிக்கலானன். அவன் போகும் இடங்களுக்கெல்லாம் அன்போடு இட்டுச் செல்லலானன். மக்கள் அவனது இந்தத் தேர்தலை வஞ்சப் புகழ்ச்சி செய்து, ''வாரு''வார்கள். அவன் அந்தப் புகழ்ச்சியை நல்லபடியாக எடுத்துக்கொண்டு மரியாதை செலுத்துவான். ''இந்த அவலட்சணத்தை நீ எப்படித்தான் . . .?'' என்று வம்புக்கு இழுப்பான் ஒருவன். அவன் பொங்கி யெழுந்து அவனோடு சண்டை பிடிக்கத் தொடங்கிவிடுவான். மணிக்கணக்கில் அவள் அழகை வர்ணித்து விமர்சிப்பான். கரிக்கட்டியினல் அவன் ஆஷாவின் சித்திரம் ஒன்று வரைந்தான். தன் ஸ்டூடியோவுக்கு வரும் ஒவ்வொருவருக்கும் அதைக் காட்டினன். அவன் தன் காயத்தை, மனப்புண்ணைக் காட்டினன், ''பாருங்கள், பாருங்கள்'' என்று! நீங்கள் எனக்குப் பொறுப்பே அல்ல; என் ஆத்மாதான் எனக்கு எசமானன். நஞ்சு . . . சரி . . .

ஆனால் ஹஜ்ரத்கஞ்சைத் தாண்டி அறியாத அவன் எங்கேயாவது ஓடிவிடவேண்டும் என்று எண்ணமிட்டான். நடைபாதையில் நடக்கும்பொழுது ஆயிரக்கணக்கில் தாறுமாறான கனவுகளைக் காணலானான். வழியில் உள்ள ஒவ்வொரு கல்லிலும், யாருடைய மங்கிய காலடி நிழலோ ஆடுவதுபோலத் தோன்றும். கோப்பையை உதடுகளில் பதிக்கும்பொழுது எல்லாம் அவனுக்கு யாருடைய சுடுமூச்சோ தீண்டுவது போன்ற உணர்வு உண்டாகும். மின்சார பல்புகளின் ஒளியில் ஆயிரக்கணக்கான குங்குமப் பொட்டுகள் நீந்தி வட்டமடிப்பதுபோலத் தோற்றம் ஏற்படும். அந்தச் சிரிப்பு, அவன் திரும்பிப் பார்ப்பான், எங்கிருந்து வந்தது என்று! வானம்பாடி கூண்டுப் பூட்டை உடைத்துக் கொண்டு பறந்துவிட்டது. ஆனால் அவன் மட்டும் ஏன் இதுவரை ஹஜ்ரத்கஞ்சின் பாழில் சிறைப்பட்டுக் கிடந்தான்? ஏன், ஏன்? மருதாணி நிறக்கோடு மின்னல்போலப் பிரகாசித்து அவனிடம் இந்தக் கேள்வியை விடாமல் அடிக்கொரு தடவை கேட்டுக் கொண்டே இருந்தது.

நகரத்தைவிட்டுப் போய்விடுவது என்று அவன் தீர்மானித்தபின் தன் நண்பர்களுக்கும் அந்த "வீக்" பெண்ணுக்கும் அவள் தோழிமார்களுக்கும் ஒரு விருந்து வைத்தான். விருந்துக்குப் பின் எல்லாரும் விடைபெற்றுச் சென்றுவிட்டனர். ஆனால் அந்த "வீக்" பெண் மட்டும் வியப்பும் பதற்றமுமாக அந்தச் சமுக்காளத்தில் உட்கார்ந்திருந்தாள். பிறகு திடுமென்று அவன் மார்பில் முகம் புதைத்து அழலானாள். அவளுடைய சூடான கண்ணீர் அவன் மார்பில் பட்டதும் பனிக்கட்டியென உறைந்துகொண்டிருந்தது. காதலின் பதில் ஏன் காதலாக இருப்பதில்லை? இந்த அன்பில் என்ன நெருப்பு இருக்கிறது? ஒருவனை எரிக்கிறது, இன்னொருவனின் உள்ளத்தைக் கருங்கல்லாக்கி வேடிக்கை பார்க்கிறது.

ஒரு பெண் சமுக்காளத்தில் படுத்திருந்தாள். கைகள் மேலே உள்ள நேர்க்கோட்டைத் தொட்டுக்கொண்டிருந்தன. கால்கள் கீழே உள்ள நேர்க்கோட்டைத் தொட்டுக்கொண்டிருந்தன. சமுக்காளம் பேசாமல் அவள் மனத்திலே ஒரு கறுப்பு ஆணியை அடித்து இறக்கிவிட்டது. கல்லறைக்கு இன்னுமொரு மம்மி தயாராகி விட்டது. ஆனால் அங்கே இடம் எங்கே இருந்தது? இதயத்தில் இன்றுங்கூட அந்த இரு கால்கள் நடம் புரிந்துகொண்டிருந்தன. அதே மஞ்சள் ரோஜா மொட்டும் . . .

நான் சமுக்காளத்தைக் கேட்டேன்: ''இது என்ன விளையாட்டு? நான் யாருக்கு எரிச்சல் மூட்டிக்கொண் டிருக்கிறேன்? இந்தக் காயம் யாருடையது? இந்தப் பெண் ஏன் அழுகிறாள்? இதெல்லாம் விதியென்றால், சவத்துக்கும் உயிர் ஊட்ட நடைபெறும் இந்த முயற்சியை என்னவென்பது?''

சமுக்காளம் விடை அளித்தது: ''எனக்குத் தெரியாது. நான் ஒரு சிலுவை. இதயத்தில் இரும்பு ஆணியைப் பாய்ச்சுவதே சிலுவையின் வேலை. ஒளி பாய்ச்சுவது அல்ல. விதியின் முடிவைக் காட்டத் தெரியும். ஆனால் அதன் தொடக்கத்தையோ இளமைப் பருவத்தையோ காட்டத் தெரியாது!''

உன்னை எரித்துச் சாம்பலாக்கி விடட்டுமா?

அந்தப் புது நகரத்தில் . . .

நான்கு பேர் அந்தச் சமுக்காளத்தில் அமர்ந்து சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

இருவர் நடிகர்கள் . . .

வேடிக்கை காட்டுபவனே அந்தக் கலைஞன் .

சீட்டு ஆடும்பொழுது இடையில் நடிகர்களும் வியாபாரிகளும் சண்டை போட்டுக்கொள்ளத் தொடங்குகின்றனர். கை கலக்கும் அளவுக்கு நிலைமை முற்றிவிட்டது. சமுக்காளத்தைப் பிராண்டுகின்றனர். ஏனென்றால் ஓர் ஆட்டத்தின்பொழுது வியாபாரி மறந்தோ தெரிந்தோ எட்டணு அதிகமாக எடுத்துக்கொண்டு விட்டான். என் கழுத்துப்பட்டை தாறுதாறுகக் கிழிக்கப் பட்டது. ஏனென்றால், இடையில் புகுந்து விலக்க முயல்பவனுக்குத்தானே அடி அதிகமாக விழும்?

இந்தத் தவறான கருத்தை, கோபதாபத்தைப் போக்க என்ன வழி என்று நான் யோசிக்கிறேன். பேச்சு வார்த்தை பயன் படாது. கிராமபோன் . . .? பிதற்றல்; தேநீர்? அபத்தம்; சாராயம் . . .? பேஷ்! பேஷ்!

எல்லாரும் சாராயம் குடித்துக்கொண் டிருக்கிறார்கள். கலைஞனின் கண் சிவந்துவிட்டது. எப்பொழுதும் சிரித்துப் பேசி மகிழ்ச்சியே உருவாக இருக்கும் அழகிய நடிகன், எப்பொழுதும் வாய்மூடி மௌனியாக அழகில் குறைந்த நடிகனிடம் சவால் விடுகிறான். ''காதலா? காதலா? ஏண்டா மரமண்டை! உனக்குக் காதல் என்னடா தெரியும்? இப்பொழுதுதான் கல்லூரியில் படிக்கும் சின்னப்பயல் நீ! ஏய்! காதல் வெறியைப்பற்றி என்

னிடம் கேள்! இந்தச் சாராயம் சுத்த மட்டம்! சப்பென்றிருக்கிறது. ராணியைப் பார்த்திருக்கிறாயா நீ?''

''ராணி 1944-இல் முதல் நம்பர் நடிகையாயிருந்தாள் இல்லே?'' என்று நான் கேட்டேன்.

''ஆமாம், அவளேதான்! அவள், எலே. பயலே, உனக்கு என்ன தெரியும்? அவள் என் காதலியடா. தெரிந்துகொள்! அவளுக்காக நான் என் அப்பா அம்மாவிடம் திட்டுகள் வாங்கிக் கட்டிக்கொண்டேன். பகைவர்களுடன் பலமுறை மோதினேன். வீடு வாசலைத் துறந்து வெளியேறினேன். இந்த மோதிரம்... பார்த்தாயாடா பயலே! இந்தச் சட்டைப் பொத்தான்... எல்லாமே பொன்னால் ஆனவையடா பயலே! உனக்கு என்ன தெரியும்? எல்லாம் அவள் தந்ததடா, அன்பளிப்பாக! ஆனால் நான் அவளைக் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன், ஒரு நாளும் மாட்டேன்!'' அவன் உறுதியான குரலில் முடித்தான்.

''ஏன்?''

''அவள் என்னைக் காதலிக்கிறாள், மெய்தான். ஆனால் என்னைக் காட்டிலும் அவள் பணக்காரி. என்னைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறாள். நான் செத்தாலும் சாவேனே தவிர அவளைக் கல்யாணம் செய்துகொள்ளமாட்டேன்.''

''நீ அவளைக் காதலிக்கவில்லையா?'' ஒரு வியாபாரி கேட்டான்.

நடிகன் கைகளைக் கெட்டியாக மூடிக்கொண்டு, ''நான் இப்பொழுது எப்படி இருக்கிறேனோ, அப்படியிருந்தாலே போதும். நான் அவளைக் காதலிக்கிறேன். ஆனால் அவளுக்கு அடிமையாக என்னால் வாழமுடியாது. நான் அவள் காதலை விரும்புகிறேன், பணத்தை விரும்பவில்லை; புரிந்ததா?'' என்றான். அந்த ஆத்திரத்தில் சமுக்காளத்தை ஒரு குத்து விட்டான். அப்புறம் சுற்றுச் சூழ்நிலை கிடுகிடுக்கக் கடகடவென நகைத்தான்.

சமுக்காளம் நடுங்கியது. அதன் நிறம் விசித்திரமாக ஆகி விட்டது.

''அடே, பாவிப்பயல் மகனே! இன்னும் கொஞ்சம் சாராயம் கொடுடா!'' அவன் தன் வெற்றுக் கிளாஸைத் தடவித் தேடிய வாறே கேட்டான்.

''ராணியைப்பற்றி நண்பா! இன்று செய்தித்தாளில் கூடப் படித்தேனே! ராணி யாரோ அமெரிக்கனை மணந்துகொண்டு விட்டாளாமே!'' என்றேன் நான்.

நடிகன் மெதுவாகச் சாராயக் கிளாஸைச் சமுக்காளத்தில் உருட்டிவிட்டான். அவன் விரல்கள் பலம் கொண்ட மட்டில் கிளாஸை அழுத்தின. கண்ணாடி அவன் விரல்களையும் பதம் பார்த்துவிட்டே உடைந்தது.

அவன் தொண்டை அடைக்கக் கூறினான்: ''இது பொய்! சுத்தப் பொய்!''

கலைஞன் மேஜையிலிருந்து செய்தித்தாளை எடுத்துப் படித்துக் காட்டினான்.

நடிகனின் முகம் தொங்கிவிட்டது. அவன் சமுக்காளத்தில் இரு முழங்கைகளையும் ஊன்றி என்னைப் பார்த்தான். அவன் முகத்தின் நிறம் பேயறைந்தாற்போல் வெளிறிவிட்டது; சவக்களை தாண்டவ மாடியது. மம்மிக்கு இருக்கவேண்டிய அறிகுறிகள் அத்தனையும் வந்துவிட்டன.

''இது பொய்! சுத்தப் பொய்!''

அவன் மீண்டும் கூச்சலிட்டான். அப்புறம் திடுதிப்பென்று அப்படியே மௌனமாகிவிட்டான். இன்னொரு நடிகன் அவன் கிளாஸில் சாராயம் ஊற்றத் தொடங்கினான். அவன் அப்போதும் வாய் திறக்காமலேதான் இருந்தான். ஆனால் முதல் நடிகன் சமுக்காளத்தில் புரண்டு விசித்து விசித்து அழலானான். அப்புறம் அவன் சமுக்காளத்தில் வாந்தி எடுத்துவிட்டான். எனக்குச் சமுக்காளத்தின் நிறம் வெளிறுவதாகத் தோன்றியது. சிவப்பிலிருந்து வெள்ளை; வெள்ளையிலிருந்து மஞ்சள் என்று நிறம் மாறுவதாகத் தோன்றியது. எனக்கு அது சமுக்காளமாகப் படவில்லை; சவத்துக்குப் போர்த்தும் சல்லாத் துணியாகத் தோன்றியது.

ராணி! ராணி! ராணி!

காலையில் நான் சமுக்காளத்தைத் துவைத்துச் சுத்தப்படுத்தச் சொன்னேன். உலர்த்தி அறையில் கொண்டு வைத்ததும் என் காதலி அறைக்குள் நுழைந்தாள். அவள் இந்தப் புதிய நகரத்தில் நான் ஏற்படுத்திக்கொண்ட காதலி. இங்கே வந்து கலைஞன் மீண்டும் காதல் புரியத் தொடங்கியிருந்தான். காதலிப்பது எத்தனை கஷ்டம்! ஆனால் ஒரு தடவை காதல் மரித்துவிட்டால், அப்புறம் காதலிப்பது எவ்வளவு எளிதாகிவிடுகிறது! என்ன நான் சொல்வது? அட, சாவாடு செத்த பயலே! ஏண்டா பேசமாட்டேன் என்கிறாய்? சொல்லேண்டா பதில்! என் காதலியின் உதடுகள் கனமானவை; கன்னங்களும் பருமனானவை

உடலும் நல்ல பருமன்! சன்னமாகச் சிரிக்க வராது அவளுக்கு! இடி முழக்கம் கெட்டுது, போயேன்! அறிவும் உலக்கைக் கொழுந்து! அவள் பெண் இல்லை; பெண் என்று கூறுவதைக் காட்டிலும் இரண்டு மூன்று மடிப்புக் கொண்ட சமுக்காளம் என்று சொல்வதுதான் பொருத்தம். இன்று அவள் இரட்டைப் பின்னல் பின்னிக்கொண்டு மல்லிகைப் பூ சூடிக்கொண்டு வந்திருந்தாள்.

அவள் சமுக்காளத்தில் வந்து உட்கார்ந்துகொண்டாள்.

நான் அவள் முகத்தை முத்தமிட்டு, ''இன்று நீ கிளியோபாட்ராவுக்கே மண் காட்டிவிட்டாய், போ!'' என்றேன்.

''கிளியோபாட்ராவா? அது என்ன?'' என்று கேட்டாள் அவள்.

''எகிப்து நாட்டு மகாராணி!''

''எகிப்தா?''

''ஆமாம், எகிப்து! அந்த நாட்டிலே செத்தபிறகு கல்லறை கட்டுகிறார்கள்! அங்கே செத்தவர்களின் சவங்களை அணி செய்து வைக்கிறார்கள். ஆண்டவன் உனக்கும் கிளியோபாட்ராவைப் போல மரணத்தை அருளட்டும்!''

''ஐயோ! என்ன பேச்சுப் பேசுகிறீர்கள்? அவளுக்கு என்ன வாயிற்று?''

''பாம்பு கடித்துச் செத்துப் போய்விட்டாள் அவள்.''

இலேசாக வீறிட்டவள் என்னை நெருங்கி வந்து, என் கைகளைப் பற்றிக்கொண்டுவிட்டாள். ''என்னை அச்சுறுத்துகிறீர்களா?'' என்று கேட்டுக் கடகட வென்று சிரித்தாள். என்ன அசிங்கம்! என்ன கோரம்! எருமை மாடு அசை போடுகிறாற்போல! அப்புறம் அவள் தன் உதடுகளை என் முன்னே நீட்டினாள். உதார குணம் படைத்த ஜாட்—எச்சிற்கையால் என்ன, ஈரக் கையால்கூடக் காக்காய் ஓட்டமாட்டார்கள் என்று புகழ் பெற்ற வர்கள் இந்த வகுப்பினர்—அப்படிப்பட்ட ஒரு ஜாட் பெரிய மனசு பண்ணி, முன்பின் அறிமுகமில்லாத வழிப்போக்கனுக்குக் கரும்பு தின்னக் கொடுத்தால், அந்தக் கரும்பில் சாறு இருக்குமா? அத்தகைய கரும்பை அவள் அதரங்களில் சுவைத்த வண்ணம் நான் சொன்னேன்: ''இந்தச் சமுக்காளம் உயிர் பிழைக்கிறது ஒரு தடவைதான். ஆனால் அடிக்கடி இறக்கிறது. ஐயோ! இப்படிச் சாவு அடிக்கடி வருவானேன்? இதுவே கடைசிச் சாவாக இருக்கக்கூடாதா?''

''இன்றைக்கென்ன நீங்கள் பேச்சுக்குப் பேச்சு மரணத்தை இழுக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் அவள்.

''ஒன்றும் இல்லை. உனக்குப் புரியாது!'' என்றவன், ''ஆமாம், இன்று உன் உதடுகளில், கண்களில், கேசங்களில் இது என்ன எழில் மணம் கூடித் தெரிகிறது?'' என்று கேட்டேன்.

''ஒன்றும் இல்லை.'' அவள் சிரித்துக்கொண்டே கூறினாள்: ''இன்று வாசனைத் தேங்காய் எண்ணெய் தடவியிருக்கிறேன்.''

நான் சமுக்காளத்தை ஓரக் கண்ணால் பார்த்தேன். அதன் நிறம் மங்கிக்கொண்டே வந்தது. அதன் இறுதிக் காலத்தை என்னால் கண்கொண்டு காணமுடியாதுபோல் இருந்தது. நான் பதறிப் போய் அறையிலிருந்து வெளியேறி வந்துவிட்டேன்.

நேரே ஸ்டேஷனை அடைந்தேன். முடிந்த அளவு பீர் குடிப்பது என்று எண்ணினேன். இந்த உடலுக்கு மட்டுமின்றி ஆத்மாவுக்கும் பேதிக்குக் கொடுப்பது, துப்புரவாகக் குப்பை கூளம் முழுதையும் வெளியேற்றிவிடுவது, உடலையும் உள்ளத்தையும் இலேசாக்கிக் கொள்ளுவது என்று திட்டமிட்டேன்.

ஸ்டேஷனில் பீரைப் பார்ப்பதற்கு முன்னால் ரூபவதியைப் பார்த்துவிட்டேன்.

''அட, நீ எங்கே இங்கே?''

''ஜானகட் போயிருந்தேன், மலைவாசத்துக்கு!''

''கவிஞன் எங்கே?''

''அவர் என்னை விட்டுவிட்டார்.'' இருமலுக்கிடையே சொன்னாள் அவள்.

''விட்டுவிட்டானா? ஏன்?''

''எனக்கு எலும்புருக்கி நோய் வந்து அதற்காக ஜானகட் போயிருந்தேன். அதனால் . . .''

அவள் விழிகளில் பசுங்கடல் பொங்கியது. அதில் வெளிறி வறண்டு போன முகம் ஒன்று சுழலில் சிக்கி மூழ்கிக்கொண்டிருந்தது. அப்புறம் அந்த முகமும் மறைந்துவிட்டது. இப்பொழுது கவிஞனின் பாழாய்ப் போன சாவாடு செத்த முகம் அலைகளில் மிதக்கத் தொடங்கியது, கவிஞனின் முகம் தலையை ஆட்டி, ''ஹூம்'' என்று ஹூங்காரமிட்டது.

''அந்தப் பாவிப் பயல் இப்பொழுது எங்கே இருக்கிறான்?'' என்று கேட்டேன்.

''போகட்டும், விடுங்கள்!'' அவள் அடக்கமாகக் கூறினாள்: ''அவரைத் திட்டாதீர்கள். இன்னும் நான் அவரைக் காதலிக்கிறேன்!''

''ஆனால் . . .

''ஆமாம், இந்த ஆனாலுக்குப் பிறகும் கூடத்தான் . . .'' என்றவள், ''நான் இப்பொழுது என் பிறந்த வீட்டுக்குப் போகிறேன். அங்கே சென்று சுகமாகச் சாவேன்'' என்றாள்.

''கூடாது, கூடாது.'' நான் கடுமையாகச் சொன்னேன். ''இனி நான் உன்னைப் போகவிடமாட்டேன். வாழ்வு என்னிடமிருந்து உன்னைப் பிடுங்கிக்கொண்டது. இனி, சாவின் வாயில் வரை நாம் சேர்ந்தே செல்வோம். இந்த உலகத்துக்கு அப்பாலும் ஏதாவது உலகம் இருந்தால் ஒருவேளை . . .''

அவள் சிரித்தாள். பளிச்சென்றிருந்தது அந்தச் சிரிப்பு. அதே சந்தன நிற முகம், அதே சுடர்விடும் குங்குமப் பொட்டு.

நான் அவள் கைகளைப் பற்றிக்கொண்டு, ''வீட்டுக்கு வா, ரூப்! உயிருடன் இருக்கும்பொழுது நீ என்னை உன்னுடன் இருக்க விடவில்லை. இப்பொழுது மரணத்தின்போதாவது சில கணங்களை எனக்குத் தா!''

அவள் முறுவலித்தாள். ''உங்களுக்குத் தெரியாது. அன்பும் காதலும் வாழ்விலும் சாவிலும் ஒரே மாதிரியாகத்தான் நடந்துகொள்கின்றன. இரட்டை வேடம் போடத் தெரியாது காதலுக்கு!'' என்றாள்.

வண்டி ஊதியது.

''உங்களைச் சந்திக்கமுடியும் என்று நான் நினைக்கவே இல்லை. நான் இங்கே தங்க முடியாதது குறித்து வருந்துகிறேன். இந்தப் புத்தகத்தை உங்களுக்குத் தருகிறேன். அரல்கேயின் கவிதைகள் இவை!'' என்றாள் அவள்.

கார்டு கொடி காட்டினார்.

அவள் தன் பெட்டியை நோக்கிப் போய்விட்டாள். நான் அவள் முகத்தைப் பார்க்க முடியவில்லை. என் கண்கள் மீண்டும் அவள் பாதங்களில் பதிந்தன. அந்தப் பாதங்கள் நடந்தன, நடந்தன, நடந்துகொண்டே இருந்தன. அவை விலகிப் போனாலும் அருகில் வருகிறாற்போலத் தோன்றின. நெருங்கி என் மார்புக்கே வந்துவிட்டன. நான் அவற்றை எடுத்து என் இதயத்துள் மறைத்துக்கொண்டேன்.

நான் பார்வையை நிமிர்த்தினேன்.

வண்டி போய்விட்டிருந்தது.

காதலி என்னை இத்தனை நேரமும் எதிர்நோக்கிக் கொண்டிருந் தாள். என்னைக் கண்டதும், ''எங்கே போய்விட்டீர்கள்?'' என்று கேட்டாள்.

நான் பேசாமல் இருந்தேன்.

''இது என்ன புத்தகம்?''

''அரல்கேயின் கவிதைகள்!''

''என்ன?''

''ஒரு கவிஞனின் கவிதைத் தொகுப்பு!''

''எனக்குப் படித்துக் காட்டுங்கள்! என்ன எழுதியிருக்கிறன் அவன்?''

நான் புத்தகத்தைத் திறந்தேன். பதினைந்தாவது பக்கம் என் கண்கள் எதிரே வந்தது. நான் மெதுவாகப் படிக்கலானேன். ''ஏ கடவுளே! உன் இஷ்டத்துக்கு நீ பிறப்பைக் கொடுத்தாய், இப்பொழுது என் இஷ்டத்துக்குச் சாவைக் கொடேன். வேறு எதுவும் நான் உன்னை வேண்டவில்லை, கடவுளே!''

''திரும்பவும் சாவா? என்ன அபசகுனம்?'' என்றாள் அவள். என் கையிலிருந்து புத்தகத்தைப் பறித்துக்கொண்டாள். அதே கையோடு தன் உதடுகளை என் அருகே கொண்டு வந்தாள். சமுக்காளம் கொதித்தது, நெருப்பாக! நெருப்பு ஆறு! சீழ்க் கடல்! கொதிக்கும் நஞ்சு ஊற்று! ''நீ சிலுவை. நீ மனிதக் குஞ்சை 'மசீஹா' (தேவதூதன்) ஆக்கிறாய். என்னை என்ன ஆக்குவாய், சொல்லு?'' என்று அவளைக் கேட்டேன்.

சமுக்காளம் கூறியது: ''நீதான் கல்லறை ஆகிவிட்டாயே! வெறுங் கல்லறையாக! உன் மார்பில்தான் எத்தனை மம்மிகள் புதைந்திருக்கின்றன!''

நான் என் காதலியைப் பார்த்து, ''இந்தச் சமுக்காளத்தை எரித்துச் சாம்பலாக்கிவிடலாமா என்று தோன்றுகிறது'' என்றேன்.

''ஆமாம், ரொம்பப் பழையதாகப் போய்விட்டது'' என்றாள் அவள்.

''ஆனால் . . .'' நான் தடுமாறி வருத்தம் தோயக் கூறினேன். ''என்னிடம் இந்த ஒரே சமுக்காளந்தானே இருக்கிறது. இது தானே என் வாழ்க்கை. இதை மாற்ற என்னால் முடியாது. இதை மாற்ற . . .'' இப்படிக் கூறிக் கலைஞன் கரும்பைச் சுவைக்கலானான்.

நாற்சந்திக் கிணறு

என் குழந்தை நோய்வாய்ப்பட்டிருந்தது. அது சிறுகச் சிறுகச் செத்துக்கொண் டிருப்பதாகவே எனக்குப் பட்டது. ''உன் குழந்தையை நாற்சந்திக் கிணற்றடிக்கு எடுத்துச் சென்று, அந்தக் கிணற்று நீரைச் சேந்தி ஒரு மிடறுவது தொண்டைக் குழியில் இறக்கினால், உன் குழந்தை உயிர் பிழைக்க வழி உண்டு'' என்று ஊரார் சொன்னார்கள்.

''நாற்சந்திக் கிணறு எங்கே இருக்கிறது?'' என்று கேட்டேன் நான்.

''அது 'எங்கும் இல்லை' என்னும் கிராமத்தில் இருக்கிறது!'' என்றார்கள் அவர்கள்.

'''எங்கும் இல்லை' என்ற கிராமம் எங்கே இருக்கிறது?'' என்று மீண்டும் கேட்டேன் நான்.

எங்கள் கிராமத்தைச் சேர்ந்த கிழட்டு வைத்தியன் சொன்னான்: ''இங்கு இருந்து அங்கே போ. அங்கிருந்து ஆங்கு போ. ஆங்கு இருந்து எங்கு போ. எங்கிருந்து எங்கோ போ. எங்கோ போன பின் திரும்பு. அங்கிருந்து மூக்குக்கு நேராக நடந்தால் எதிர்த் தாற்போல 'எங்கும் இல்லை' கிராமம் வரும். அந்தக் கிராமத்துக்கு மத்தியில்தான் நாற்சந்திக் கிணறு இருக்கிறது!''

நான் வைத்தியனுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, நோயாளிக் குழந்தையைத் தோளில் போட்டுக்கொண்டு கிராமத்திலிருந்து புறப்பட்டேன்.

நான் இங்கிருந்து அங்கே போனேன். அங்கிருந்து ஆங்கு போனேன். ஆங்கிருந்து எங்கு போனேன். எங்கிருந்து எங்கோ போய்த் திரும்பினால், என் எதிரே நாலு சாலைகள் தெரிந்தன.

ஒன்று சிவப்புச் சாலை.

ஒன்று நீலச் சாலை.

ஒன்று கறுப்புச் சாலை.

ஒன்று வெளுப்புச் சாலை.

இந்த நான்கு சாலைகளையும் வெட்டிக்கொண்டு வட்ட வடிவமாக அந்த ''எங்கும் இல்லை'' கிராமம் அமைந்திருந்தது. அந்தக் கிராமத்துக்கு மத்தியில் நாற்சந்திக் கிணறு இருந்தது.

நாற்சந்திக் கிணற்றடியில் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். ஆண்கள்—பெண்கள், கிழவர்கள்—குழந்தைகள் என்று ஏராளமாகக் கூடியிருந்தனர். ஒரே தேர்த் திருவிழாக் கூட்டம். அவர்களுள் ஆஜானுபாகுவாக ஒரு கிழவன். நறைத்த தலை. இங்கும் அங்கும் சுற்றிக்கொண் டிருந்தான். ஒழுக்கத்தில் சிறந்தவனாகத் தோன்றினான். அங்குக் கூடியிருந்த ஒவ்வொருவருமே அவனுக்கு மிகவும் மரியாதை செலுத்தினர். கிழவன் அவர்களுடைய மரியாதையை ஏற்றுக் கண்ணியம் மிகுந்த போக்கில் விநயம் தவழக் கைகளை மேலும் கீழும் ஆட்டிக்கொண் டிருந்தான். அத்தகைய விநயத்தைப் பழுத்துக் குலுங்கும் மரக் கிளைகளிடமே காணமுடியும்.

''இந்தக் கிராமத்துக்கு நீ புதிதோ?'' என்று கிழவன் என்னிடம் கேட்டான்.

நான் மிகுந்த மரியாதையோடு ''ஆம்'' என்று தலையாட்டினேன்.

''நீ எங்கிருந்து வருகிறாய்?'' என்று கேட்டான் கிழவன்.

''நான் இங்கேதான் எங்கோ கிராமத்திலிருந்து வருகிறேன். என் குழந்தை நோயால் அல்லல்படுகிறது. நாற்சந்திக் கிணற்றிலிருந்து ஒருவாய்த் தண்ணீர் புகட்டினால் என் குழந்தை உயிர் பிழைத்துவிடும் என்று வைத்தியர் சொன்னார்!'' என்றேன்.

''வெறும் தண்ணீரினால் என்ன பயன்?'' கிழவன் ஏமாற்றம் நிறைந்த குரலில் கேட்டான்.

''நீருக்கும் பெரும் சக்தி உண்டு தாத்தா!''

''நெருப்புக்கும் பெரும் சக்தி இருக்கிறது குழந்தாய்!''

''நீர், நெருப்பு இரண்டுமே மிகுந்த சக்தி வாய்ந்தவை தாத்தா. நெருப்பு மனிதனின் மனத்துள்ளே இருக்கிறது. நீர் கண்களில் இருக்கிறது. நெருப்பினால் நிறைவேற்றமுடியாத காரியத்தை நீர் நிறைவேற்றிவிடுகிறது என்று வைத்தியர் சொன்னார், தாத்தா!''

கிழவன் என் பேச்சைக் கேட்டு இளநகை புரிந்தான். என் தோளில் கையை வைத்து, ''உன் கிராமத்து வைத்தியன் கெட்டிக்காரனாகத் தோன்றுகிறான். ஆனால், இப்பொழுது இந்தக் கிணற்றிலிருந்து ஒரு சொம்புத் தண்ணீர்கூடக் கிடைக்காது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்'' என்றான்.

''ஏன்?''

''நாங்கள் கிணற்றைத் துப்புரவு செய்துகொண்டிருக்கிறோம். நீ பார்க்கவில்லை?''

கிழவன் இந்தக் கேள்வியைக் கேட்டுக்கொண்டிருந்த நேரத்தில், நீரில் மூழ்கித் தூர் வாருபவன் கிணற்றிலிருந்து வெளியே வந்து, வலையைக் கவிழ்த்தான். வலையிலிருந்து சகதி சிதறித் தரையில் நாற்புறமும் பரவியது. எத்தனையோ பேர் பறந்து விழுந்து ஓடிச் சகதிக்குள் கையைவிட்டுக் களையலாயினர். அந்தச் சகதியில் அவர்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. நீர் மூழ்கித் தூர் வாருபவன் வெறும் வலையைக் கையில் எடுத்துக்கொண்டு மறுபடியும் கிணற்றுக்குள் குதித்துவிட்டான்.

''நீரில் மூழ்கி இந்த ஆள் என்ன தேடுகிறான்?'' என்று நான் கிழவனிடம் கேட்டேன்.

''ஒன்றும் தேடவில்லை!'' கிழவன் விடையிறுத்தான்: ''இவன் கிணற்றில் உள்ள அழுக்குத் தூர்களை வாரி வெளியே கொட்டுகிறான். எல்லாச் சேறும் எடுத்த பின்தான் இந்தக் கிணறு துப்புரவாகும். அப்புறமே நீ உன் குழந்தைக்கு இதன் நீரைக் குடிக்கக் கொடுக்கலாம்.''

''நான் குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஓர் ஓரமாக நின்றுவிட்டேன். நீர் மூழ்குபவன் வலையோடு கிணற்றிலிருந்து வெளியே வந்தான். அதிலிருந்த சகதியைத் தரையில் போட்டான். அந்தச் சகதியில் ஒரு சீப்புக் கிடைத்தது.''

''இந்தச் சீப்பு யாருடையது?'' நீர் மூழ்குபவன் கேட்டான்.

புது மணம் புரிந்துகொண்டிருந்த பெண் ஒருத்தி நாணத்துடன் நீர் மூழ்குபவனிடமிருந்து சீப்பை வாங்கிக்கொண்டாள். பிறகு தன் கணவனின் தோள்மீது சாய்ந்துகொண்டாள். அந்தப் பெண்ணின் கேசங்கள் பொன்னிறமாக நீண்டிருந்தன. முகம் கோதுமை நிறம், கண்கள் பெரியவை, பழுப்பு நிறமாகத் தோன்றின. அவற்றில் எப்பொழுதாவது கண்ணீர் பெருகினால் இளங்காலை வானத்தின் செக்கர் படிந்து பிரகாசித்தன.

''நினைவிருக்கிறதா?'' அவள் தன் கணவனிடம் மெதுவாகக் கேட்டாள். அவள் விரல்கள் சீப்பை வருடிக் கொடுத்தன. சீப்பின் ஒவ்வொரு பல்லும் காலத்தின் இனிய கணமாகத் தோன்றின. போனது திரும்பி வராது என்பதையும் நினைவுறுத்தின.

''நினைவிருக்கிறது!'' அவளது இளங் கணவன் மெதுவாகக் கூறினான். அப்படியே கனவில் தன்னை இழந்தான். இந்தக்

கிணற்றின் அடியில்தான் அவன் தன் இதயத்துக்கு இனியாளை முதல் முறையாகப் பார்த்தான். அப்பொழுது அவள் குளிப்பதற்குமுன் தன் பொன்னிறக் கேசங்களை வாரி நீவிக்கொண்டிருந்தாள். அவனுக்குத் தாகமான தாகம். இந்தக் கிணற்றடியில் தன் குதிரையை நிறுத்தி அவன் குடிக்கத் தண்ணீர் கேட்டான்.

தண்ணீர்!

தண்ணீரில் பெரும் சக்தி இருக்கிறது!

தண்ணீரில் ஆழ்ந்த அன்பு இருக்கிறது!

இளங் கணவன் தன் புது மனைவியிடமிருந்து சீப்பை வாங்கித் தன் உதடுகளில் ஒத்திக்கொண்டான். அப்புறம் தன் சட்டைப் பையில் போட்டுக்கொண்டான்.

பெண் அவனுக்குப் பருக நீர் கொடுப்பதற்கு முன்னுல் அந்தச் சீப்பைக் கிணற்றின் மேடையில் வைத்தாள். அவளது பொன்னிறக் கேசங்கள் அவள் தோள்களில் தவழ்ந்தன. அவள் தண்ணீர் கொடுத்துத் திரும்பியபொழுது இளைஞன் அவள் கரங்களைச் சட்டென்று பற்றிக்கொண்டான். இவன் இழுக்க, அவள் இழுக்கச் சீப்பு எகிறிக் கிணற்றுக்குள் விழுந்துவிட்டது.

''நினைவிருக்கிறதா?''

முதல் கரஸ்பரிசம் ஆயிற்றே! யாருக்காவது நினைவில்லாமல் போகுமா? சீப்பு கிணற்றுக்குள் விழுந்தபொழுது, அன்புப் பார்வை உள்ளத்துள் ஊடுருவியபொழுது, கேசத்தின் ஒவ்வோர் இழையும் ஆதவனுகக் காட்சி தந்தபொழுது . . . யாருக்குத்தான் நினைவிராது?

நீர் மூழ்குபவன் மீண்டும் வெளியே வந்தான். வெளியே வந்து அவன் மீண்டும் வலையைப் புரட்டிப் போட்டான். இம்முறை அதற்குள்ளிருந்து நீண்டதொரு கத்தி வெளிப்பட்டது.

வெள்ளி நரைக்கிழவன் கத்தியைக் கையில் எடுத்துக்கொண்டு, ''இந்தக் கத்தி யாருடையது?'' என்று கேட்டான்.

சிறிது நேரம் அந்தக் கூட்டத்தில் யாருமே பேசவில்லை. எல்லோருக்கும் அந்தக் கத்தியின் கதை தெரியும். அதன் கைப்பிடி யானை தந்தத்தினுல் ஆனது. வெகு அழகாயிருக்கும் அது. அந்தக் கத்திக்கு உடையவன் ஓர் இளைஞன். அவனும் அந்தக் கூட்டத்தில் இருந்தான். எல்லாரும் அவனையே பார்க்கலாயினர். கொடுமையே உருவான காவல் அதிகாரியைத் தீர்த்துக் கட்டிய கத்தி அது என்பது எல்லாருக்கும் தெரியும். அந்த

அதிகாரி கிராமத்து இளம் பெண்களில் எத்தனை பேரைக் கெடுத்து வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண் டிருந்தான்! அவனுக்கு ஒரு முடிவை ஏற்படுத்திய கத்தியை மறக்க முடியுமா? ஆனால் இளைஞனுக்கு எதிராக எவ்விதச் சந்தர்ப்ப சாட்சியங்களும் கிடைக்கவில்லை. போலீஸ் வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. கிராமத்துக் கௌரவத்தைச் சூறையாடியவனின் பெயர்—பூண்டே இப்புவியிலிருந்து அழிந்து ஒழிந்துவிட்டது. கிணற்று நீர் அந்தக் கத்தியை மக்கள் பார்வையில் படாமல் மறைத்து வைத்து இளைஞனைக் காப்பாற்றிவிட்டது, விஷமக்காரக் குழந்தையின் தாய் அதைத் தந்தையின் தண்டனையிலிருந்து தப்புவிக்க ஒளித்து மறைப்பதுபோல!

நீர்மைக்கு ஒரு நேர்மை உண்டு, வல்லமை உண்டு;
பழியும் பாவமும் களையும் பெருமை உண்டு.

அந்த இளைஞனின் விழிகள் செக்கச் சிவந்துவிட்டன. திடுமென்று முன்னேறி, அவன் கிழவன் கையிலிருந்து கத்தியைப் பறித்துக்கொண்டு தன் இடுப்புப் பட்டையில் செருகிக்கொண்டான். அவன் அன்னை அன்பும் ஆதரவும் பொங்க அவன் கரங்களைப் பற்றிக்கொண்டாள்.

நீர் மூழ்கி மீண்டும் வலையை வெளியே கொண்டு வந்தான். இம்முறை கன்னங்கரேல் என்றிருந்த களி மண்ணில் யானை தந்தத்தினால் ஆன பல வளையல்கள் இருந்தன.

வயதிற் சிறிய இளம் கைம்பெண் ஒருத்தி மெதுவாக விசிக்கலானாள். ஏனென்றால் திருமணத்தன்று அவள் கணவன் விஷம் தின்று தன்னுயிரை மாய்த்துக்கொண்டுவிட்டான். காரணம், அவன் வேறு கிராமத்துப் பெண் ஒருத்தியோடு காதல் கொண்டிருந்தான்; அவள் அவன் உடைமையாக ஆகவில்லை. அந்த ஏக்கத்தில்தான் இந்த முடிவுக்கு வந்துவிட்டான். சாந்தி முகூர்த்தத்தன்று இரவு படுக்கையறையில் கணவனின் பிணத்தைக் கண்டு பயந்து அலறியவாறு வெளியே ஓடிவந்தவள் இந்தப் பெண்! ஆசையனைத்தும் நிராசையாகி இந்த அவலத்தை அடைந்ததற்கு அறிகுறியாகக் கைவளையல்களையெல்லாம் கழற்றிக் கிணற்றில் போட்டுவிட்டாள் அவள்.

கிழவன் பேசாமல் நின்றுகொண் டிருந்தான்.

இளம் கைம்பெண் மெதுவாக முன்னே வந்து குனிந்து ஒவ்வொரு வளையலாகப் பொறுக்கித் தன் முந்தானையில் பத்திரப் படுத்திக்கொண்டாள். அவள் ஒவ்வொரு வளையலையும்

பொறுக்கிய விதம், தான் காணாத ஆசைக் கனவுகளையெல்லாம் எண்ணிப் பார்ப்பதுபோலத் தோன்றியது. எல்லா வளையல்களையும் பொறுக்கிக்கொண்டவள், குனிந்த தலை குனிந்தபடியே அங்கிருந்து சென்றுவிட்டாள். அவள் போன பின்னருங்கூட மக்கள் பேசாமல் அங்கே நின்றனர், மௌன அஞ்சலி செலுத்துபவர்களைப் போல!

''இது நமது மூதாதையரின் கிணறு. இது நமக்கு வாழ்வும் அளிக்கிறது, சாவும் அளிக்கிறது. இந்தக் கிணற்றின் தீர்ப்பிலிருந்து யாரும் தப்பமுடியாது'' என்றான் கிழவன்.

நீர் மூழ்கித் தூர் எடுப்பவன் மீண்டும் வெளியே வந்தான் இம்முறை அவன் முகம் நீலம் பாரித்துப் போயிருந்தது. இதயம் படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது. இந்தத் தடவை அவன் அடித்தளத்துக்கும் கீழே சென்று ஆழ்ந்த நீரிலிருந்து எதையோ தேடி எடுத்து வந்திருப்பதாகப் பட்டது.

தூர் எடுப்பவன் வெகு ஜாக்கிரதையாக வலையைப் பிரித்தான். இந்தத் தடவை வலையில் சேறு கொஞ்சமாகவும் மணல் அதிகமாகவும் இருந்தது. அந்த மணலில் ஒரு சிறு குழந்தையின் சவம் காணப்பட்டது.

தீயை மிதித்தாற்போலச் சட்டென்று எல்லாரும் பின்னால் இரண்டடி துள்ளிக் குதித்தனர். பிறகு கவனமாக அந்தக் குழந்தையின் சவத்தைப் பார்க்கலாயினர். அவர்கள் அனைவரின் பார்வையும் விழி பிதுங்கிவிடுகிறாற்போல விரிந்திருந்தது. ஒளிரும் உடல் படைத்த அந்தக் கிழவன் இறந்த குழந்தையை இரு கைகளிலும் ஏந்தி, ''இந்தக் குழந்தை யாருடையது?'' என்று கேட்டான்.

யாரும் விடை அளிக்கவில்லை.

யாரும் அதைப் பெற முன்னே வரவில்லை.

ஆண்களின் முகம் வெளிறியது. மணமான பெண்கள் முகத்தைச் சேலைத் தலைப்பினால் இழுத்து மூடிக்கொண்டார்கள். இளம் கன்னிப் பெண்களின் கண்கள் கீழே குனிந்தன.

''இந்தக் குழந்தை யாருடையது?'' ஒளிரும் உடல் படைத்த கிழவன் குரலில் கடுமையைத் தேக்கி மீண்டும் கேட்டான்.

எல்லாரும் பேசாமல் பேயறைந்தாற்போலக் கிணற்றைச் சுற்றி நின்றுகொண்டிருந்தார்கள். யாரும் எதுவும் பேசவில்லை; தன் குழந்தை என்று கூறி வாங்கிக்கொள்ளவும் இல்லை.

கிழவன் இறந்த அந்தக் குழந்தையைத் தூர் எடுப்பவனிடம் திரும்பத் தந்து வருத்தம் தோய்ந்த குரலில், ''ஐயா! தூர் எடுப்பவரே! இந்தக் குழந்தையை மீண்டும் கிணற்றுக் குள்ளேயே போட்டுவிடும்!'' என்றான்.

அதன் பின்னர் என் பக்கம் திரும்பி வருத்தமும் வாட்டமும் தோய்ந்த பார்வையுடன், ''ஐயா! மிகுந்த வருத்தத்துடன் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கிணறு சுத்தமாகாது. இதன் நீரைக் குடிக்க வைத்து உம்மால் உம் குழந்தையைப் பிழைக்க வைக்க முடியாது'' என்று கூறினான்.

தூர் எடுப்பவன் குழந்தையின் சடலத்தைக் கிணற்றில் போட்டுவிட்டான்.

அடுத்த கணம் என் குழந்தை என் மடியிலிருந்து திமிறியபடி குதித்துக்கொண்டு கிணற்றை நோக்கி ஓடியது. ''பொறு, பொறு! நான் இந்தக் குழந்தையோடு விளையாடுவேன்!'' என்றது.

நான் ஓடிப் பிடிப்பதற்குள்ளாக என் குழந்தையும் கிணற்றுக் குள் குதித்துவிட்டது!

''என் குழந்தை! என் குழந்தை!'' என்று கதறிக்கொண்டு நான் கிணற்றை நோக்கி ஓடினேன். ஆனால் கிராமத்தார்கள் என்னைப் பிடித்துத் தடுத்து நிறுத்திவிட்டார்கள்.

''பார்க்கவில்லையா நீங்கள்? என் குழந்தை கிணற்றுக்குள் விழுந்துவிட்டதே!'' என்று நான் திமிறிக்கொண்டு கத்தினேன்.

''உன் குழந்தை அந்த இன்னொரு குழந்தையுடன் விளையாடிக் கொண்டிருக்கிறது!'' என்று அந்தக் கிழவன்வெகு அமைதியாகக் கூறினான்.

நான் கிணற்றுக்குள் குனிந்து எட்டிப் பார்த்து, ''மகனே! திரும்பி வா!'' என்று குரல் கொடுத்தேன்.

கிணற்றுக்குள்ளிருந்து நச்சுச் சிரிப்பு ஒன்று வெடித்தது. கிணற்றுக்குள் தண்ணீர் இருப்பதாகப் படவில்லை; நஞ்சு நுரைத்துக்கொண்டு நிற்பதாகத் தோன்றியது. அது பொங்கிப் பெருகி உலகத்தில் உள்ள மேடு—பள்ளம்—மைதானம் எல்லா வற்றையும் கபளீகரம் செய்யத் துடிப்பதாகப் பட்டது!

ஜனங்கள் என்னை அங்கிருந்து தனியாகப் பிடித்து இழுத்துச் சென்றனர். நான் இரு முழங்கால்களையும் மண்டியிட்டுக் கொண்டு, கிழவனின் சட்டை நுனியைப் பிடித்துக்கொண்டு கெஞ்சலுற்றேன்: ''என் குழந்தை . . . தாத்தா! என் குழந்தை

யைத் திருப்பிக் கொடுத்துவிடு, தாத்தா! நானுகத் தேடி உன் கிணற்றண்டை வந்தேன். இது அடுக்காது. என் குழந்தையைத் திருப்பித் தந்துவிடு!'' என்றேன்.

''உன் குழந்தை உனக்குக் கிடைக்கவேண்டுமானுல் . . .'' கிழவன் நிமிர்ந்து நின்று கூறினுன். அவன் கண்களில் அப் பொழுது விசித்திர ஒளி பளிச்சிட்டது. உறுதியும் அமைதியும் தொனிக்கும் குரலில் அவன் தொடர்ந்தான்: ''உன் குழந்தை உனக்குக் கிடைக்கவேண்டுமானுல், கல்யாணமாகாத கன்னிப் பெண் ஒருத்தி இந்தக் கிணற்று மேடைக்கு வரவேண்டும். கிணற்றுக்குள் எட்டிப் பார்த்து, அந்த இன்னொரு குழந்தையைக் கூப்பிடவேண்டும். 'என் மகனே!' என்று உறவு முறை பிறழாது கூப்பிடவேண்டும். மறுகணமே உன் குழந்தை உனக்குக் கிடைத்துவிடும்!''

நான் அங்கிருந்து எழுந்து கிராமத்துப் பெண்களிடம் சென்று, ''என் குழந்தையை எனக்குக் கொடுங்கள்!'' என்று மன்ருடினேன்.

மணமான பெண்கள் முகத்தைச் சேலைத் தலைப்பால் போர்த்திக் கொண்டு முதுகைக் காட்டி நின்ருர்கள்.

''என் குழந்தையை எனக்குக் கொடுங்கள்!''

கன்னிப் பெண்கள் முகம் சுளித்தார்கள். அவர்கள் உதடுகள் துடித்தன; இமைகள் நீர் கோத்து நின்றன.

''என் குழந்தையை எனக்குக் கொடுங்கள்!''

கிழவிகள் வெறுப்பால் அட்டகாசச் சிரிப்புச் சிரித்தார்கள். ஆம், அவர்கள் வெறுப்பினுல் சிரிக்கமுடியும். ஏனென்ருல் அவர் களுடைய வயிறுதான் வளம் குன்றிப் போய்விட்டதே!

நான் இரு கைகளாலும் என் முகத்தை மூடி மறைத்துக்கொண் டேன், அவர்கள் என் கன்னங்களில் வழியும் கண்ணீரைப் பார்த்துவிடக்கூடாது என்பதற்காக.

வெகுநேரம் கழித்து நான் என் கைகளை முகத்திலிருந்து அகற்றினேன். அங்கு யாருமே இல்லை. நான் மட்டும் அந்தக் கிராமத்தில் தனியாக இருப்பதாக உணர்ந்தேன். அதுதான் ''எங்கும் இல்லை'' கிராமம் ஆயிற்றே. நாற்சந்தியில் இருக்கும் அதன் கிணற்றடியில் நான் நிற்கிறேன், ''யாராவது கன்னிப் பெண் ஒருத்தி வரமாட்டாளா, என் குழந்தைக்கு உயிர்ப் பிச்சை தரமாட்டாளா, என் குழந்தை அந்தக் கிணற்றிலிருந்து மீண்டும் வராதா?'' என்று!

''எங்கும் இல்லை''யோ இந்த நாற்சந்திக் கிணறு?

"நோ"வும் "எஸ்"ஸும்

கடைசி உலகப் பெரும் போர் 2165 கி.பி.யில் நடந்தது. அதில் உலகமே அழிந்துவிட்டது. மூன்றே மூன்று பேர் உயிர் பிழைத்தனர்.

1. பேராசிரியர் மெஹ்தாப்.

2. நான்கு வயது ஆன நீக்ரோப் பையன்.

3. ஆறு மாதம் ஆகாத பிரெஞ்சுப் பெண். மிஸ் ''நோ'' என்று பெயர்.

பேராசிரியர் மெஹ்தாப் தன் காலத்தில் மிகப் பெரிய ஜீனியஸ் என்று கருதப்பட்டான். போட்டோன் ராக்கெட் அவன் கண்டு பிடித்ததுதான். கிட்டத்தட்ட ஒளி வேகத்தில் இயங்கக்கூடியது அது. வான வீதியில் எங்கும் கிடைக்கும் ஈதரின் கச்சாப் பொருளிலிருந்து ஆக்ஸிஜன், ஹைட்ரஜன், நைட்ரஜன் போன்ற பரமாணுக்களை அதனுல் படைக்கமுடியும். அவற்றிலிருந்து தனக்கு வேண்டிய சக்தியை உற்பத்தி செய்துகொள்ளவும் முடியும். அவன், புவிஈர்ப்பைக் கூறிட்டுக் கட்டுப்படுத்தவும் மட்டுப்படுத்தவும் அறிந்திருந்தான். செயற்கைப் புவிஈர்ப்புச் சக்தியை உண்டு பண்ணவும் தெரிந்து வைத்திருந்தான்.

வெள்ளைக் கதிர்பற்றியும் அவன் ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டுபிடித்திருந்தான். வெயிலைப் போலவே வெள்ளைக் கதிரும் எந்த நேரத்திலும் கதிரவனிடமிருந்து புறப்பட்ட வண்ணமே இருக்கிறது. ஆனுல் அந்தக் கிரணங்கள் பகலிலும் புலனுவதில்லை; இரவிலும் புலனுவதில்லை. அதை வானவில்லின் நிறம்போலப் பகுத்துக் காட்டவும் முடியாது. எக்ஸ்ரே, ராடார், அணுதர்சினி, ரேடியோ, மின்னணுப் பொறிகள் போன்ற எந்த யந்திரச் சாதனமும் அதைத் தன்வசப்படுத்த முடியாமல் தவித்தன. பேராசிரியர் மெஹ்தாப் ஒரு புதுவகை ''ஆண்டி மீட்டர்'' என்ற யந்திரத்தின் உதவியால், வெள்ளைக் கதிர் என்று ஒன்று உண்டு என்பதை நிரூபித்துவிட்டான்; உலகத்துக்கு அதன் பெருமையை உணர்த்தியும் விட்டான்.

மனிதர்களது உள்ளத்தில் ஒருவருக்கொருவர் பிடிக்காமல் எழும் வெறுப்புணர்ச்சிக்குப் பொறுப்பாளி, கண்களுக்குப் புலனாகாத இந்த வெள்ளைக் கதிரே என்பதையும் பல சோதனைகள் மூலம் நிரூபித்துவிட்டான். இந்த வெள்ளைக் கதிர் கதிரவனின் உட்பகுதியிலிருந்து சிறுகச் சிறுக வெளியேறுவதாகவும், அது மனிதனின் ஒவ்வொரு நரம்பிலும் ஊடுருவிப் புகுந்து பாதிப்பதாகவும் அவன் ஆராய்ந்து முடிவுக்கு வந்திருந்தான்.

ஆனால் பேராசிரியர் மெஹ்தாப் வெள்ளைக் கதிரின் தீமையை அகற்ற மாற்றுக் கண்டுபிடிப்பதற்கு முன்பாகவே, பாழாய்ப் போன கடைசி உலகப் போர் 2165-இல் நடந்து உலகத்தையே அழித்துவிட்டது. மேலே கூறிய மூவரைத் தவிர யாருமே உயிர் பிழைக்கவில்லை. அதாவது பேராசிரியர் மெஹ்தாப், மிஸ் "நோரா", நீக்ரோப் பையன்—அவன் பெயர் எஸ். இம்மூவர் மட்டுமே தப்பிப் பிழைத்தவர்கள்.

பேராசிரியர் மெஹ்தாப் இவ்வுலகை உதறிவிட்டு, இப்புவியிலிருந்து பறந்து, இந்தச் சூரிய மண்டலத்தையே ஒதுக்கிவிட்டு, ஆகாச கங்கைக்கு மறுபுறமிருந்து "டிரோமேதா"க் கிரகத்துக்குக் குடி பெயர்ந்து விட்டான். "டிரோமேதா"க் கிரகத்துக்கு இரண்டு சூரியன்கள் வெயில் அளித்துக்கொண்டிருந்தனர். ஆனால் அந்த வெயில் கொளுத்தவில்லை. இளஞ்சூடாக இதமாக இருந்தது. காரணம், இரண்டு சூரியன்களும் நடுத்தர வயதானவை. அதுவும் தவிர, இவ்விரண்டு சூரியன்களும் இரு வெவ்வேறு வகையான கதிர்களைப் பாய்ச்சிக்கொண்டிருந்தன.

ஒரு சூரியனிலிருந்து பூவுலகத்துச் சூரியனைப் போல் கண்ணுக்குப் புலனாகாத வெள்ளைக் கதிர்கள் வெளிவந்துகொண்டிருந்தன. அவை அடுத்த சூரியனிலிருந்து வரும் கதிர்களை மாய்த்தன. அதனால் இந்தக் கிரகத்தின் சீதோஷ்ண நிலை சமமாக, இதமாக, ரம்யமாக இருந்தது. மனத்தில் அதிகக் கோபமும் எழுவதில்லை; வெறுப்புணர்ச்சியும் அவ்வளவாகத் தலைகாட்டுவதில்லை. எனவே, மனிதன் மனிதனின் உயிரைக் குடிக்கும் அளவுக்குப் பகைமை பாராட்டவில்லை. சூடும் மிகக் குறைவு. குளிரும் மிகக் குறைவு. ஈர்ப்புச் சக்தியும் வெகு வெகு குறைவு. இரண்டு குழந்தைகள் அந்தக் கிரகத்தை அடைந்து அதன் தரையிலிருந்து குதித்தால், தரையிலிருந்து ஆயிர கஜம் உயரம் எழும்பிவிடுவார்கள்.

அந்தக் கிரகத்தைப் பூமி என்று கொண்டால், தரையின் அடிமட்டத்தில் குதித்தால். எவரெஸ்ட் சிகரத்தையே தொட்டு விடு

வார்கள். வெயில் மிக மெதுவாக வடிகட்டி வந்தது. மிஸ், நோ அதன் கிரணங்களை நூல் நூற்றுப் பொன்னிற ஸ்வெட்டர் தயாரித்து விடலாம். மெது என்ருல் அத்தனை மெது. மாஸ்டர் எஸ் எதையாவது நினைத்துக் கடகடவென்று சிரித்தால், அந்தச் சிரிப்பின் அலைகள் வானவெளியில் ஐஸ்கிரீமாகிப் பறந்தன.

பகல் முழுதும் இவ்விரு குழந்தைகளும் சிரித்து விளையாடி, அந்தச் சிரிப்பில் தயாராகும் ஐஸ்கிரீமைத் தின்று.மகிழ்ந்தார்கள். அந்தக் கோளின் மலைகள் எவரெஸ்டைக் காட்டிலும் உயரமாக இருந்தன. ஆனுல் மிகவும் இலேசான ஸ்பாஞ்சுப் பொருளால் ஆனவை. இலேசு என்ருல் சாதாரண இலேசு அல்ல, கட்டை விரலினுல் அதன் உச்சியில் அழுத்திஞல் முழு மலையும் அழுந்திப் பூமியோடு ஒட்டிக்கொண்டு விடும். அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாக வேறு இடத்தில் எழுந்து உயர்ந்து மலையாகும். மாஸ்டர் எஸ்ஸூக்கும் மிஸ் நோவுக்கும் இந்த விளையாட்டு வேடிக்கையாக இருக்கும். இருவரும் தினமும் அந்தக் கோளின் மலைகளில் விளையாடுவார்கள். அதற்குத் தக்கவாறு சீதோஷ்ண நிலை மாறிக்கொண்டே இருக்கும். அதைக் காண அவர்களுக்கு வேடிக்கையாக இருக்கும்.

பேராசிரியர் மெஹ்தாப் நன்கு யோசித்தே அந்தக் கிரகத்தைத் தேர்ந்தெடுத்திருந்தான். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்த வெறுப்புணர்ச்சி மனிதர்களின் ரத்தத்தில் மட்டும் அல்ல; எலும்புகளுக்குள்ளுங்கூடப் புரையோடியிருக்கிறது. என்றைக் காவது ஒரு நாள் வெள்ளைக் கதிர் தன் பிரபாவத்தைக் காட்டி அதிர்ஷ்டம் கெட்ட இந்த மானிட இனத்தையே தீர்த்துக் கட்டி விடும் என்பதை அவன் எப்போதோ அறிந்திருந்தான். ஆனுல் இந்தக் கதிருக்குச் சரியான மாற்று அவனுல் கண்டுபிடிக்க முடிய வில்லை. காலமும் குறுகிக்கொண்டே போயிற்று. அதனுல் அவன் மெதுவாகத் தனது கண்டுபிடிப்பான பெரிய போட்டோன் ராக் கெட் மூலம் பல முறை இந்தச் சூரிய மண்டலத்தையும் தாண்டிப் பறந்தான். மனித இனம் அழிவை நோக்கிச் செல்லும் வெறுப் புணர்ச்சியிலிருந்து தப்பி வாழக்கூடிய வேறு கோளைத் தேடித் திரிந்தான். அதிர்ஷ்டவசமாக அவனுக்கு இந்தக் கோள் சீக்கிரமே கிடைத்துவிட்டது. அடுத்த பத்து ஆண்டுகள் அவன் மனிதனது அறிவு, கலை, பண்பாடு, நாகரிகம் போன்ற விலை மதிப்பற்ற அநுபவத்தில் ஊறிய கலைச் செல்வங்களையும் இன்னேரன்ன தேவைப் பொருள்களையும் பிறருக்குத் தெரியாமல் ரகசியமாகப்

புவியிலிருந்து இந்தக் கோளில் கொண்டு சேர்க்க முழு மூச்சோடு முனைந்திருந்தான். எல்லா ஏற்பாடுகளையும் செவ்வனே செய்து முடித்தபின், அவனுக்குத் தன் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் காரணமாக உறுதியான நம்பிக்கை பிறந்தது. டிரோமேதாக் கோள் மனிதன் வாழ உகந்ததே என்ற முடிவுக்கு வந்தான். இந்தக் கோளில் மானிட நாகரிகத்தையும் பண்பாட்டையும் மேலும் வளப்படுத்த முடியும் என்ற உறுதியோடு, இந்த நற் செய்தியைத் தெரிவிக்க அவன் நம் புவிக்கு இறங்கி வந்தான்.

ஆனால் துயரம் தரும் செய்தியையே அவன் எதிர்கொண்டான். டிரோமேதாக் கோளிலிருந்து அவன் இந்தப் புவிக்கு வந்த பொழுது, கடைசி உலகப் பெரும் போர் தனது இறுதி மூச்சை முறித்துப் பிராணனை விட்டுக்கொண் டிருந்தது. மனித இனம் முழுதுமே நசித்துவிட் டிருந்தது. அதன் நாகரிகம் குழி தோண்டிப் புதைக்கப்பட் டிருந்தது. பேராசிரியர் மெஹ்தாபின் இந்த நற்செய்தியைக் கேட்கவோ, செயல்படுத்தவோ யாருமே உயிருடன் இல்லை. வெகு சிரமப்பட்டுத் தேடியதில் பேராசிரியர் மெஹ்தாபுக்கு இந்த இரண்டு குழந்தைகள் மட்டுமே இந்தக் கோடிக்கு அந்தக் கோடி தனித் தனிப் பகுதிகளில் எப்படியோ உயிருடன் கிடைத்தன. அவன் அவற்றை எடுத்துக்கொண்டு தன் போட்டோன் ராக்கெட்டில் அமர்ந்து புதுக் கோளை நோக்கிப் பயணமானான்.

டிரோமேதாக் கிரகத்தை அடைந்து அவன் அந்த இரு குழந்தைகளையும் காப்பாற்றி அவற்றுக்குக் கல்வியறிவு புகட்டுவதில் இராப்பகலாக முனைந்தான். இந்த இரு குழந்தைகள்தாமே மனித இனத்தை நசிக்காமல் காத்துப் பயிர் செய்து வளப்படுத்த வேண்டியவை. இவற்றில் ஒன்று இறந்துவிட்டாலும் அல்லது ஒன்றின் கல்வி—கேள்வியில் தவறு நேர்ந்துவிட்டாலும், அதே பழைய பிரச்னைகள் மீண்டும் காளாளுக முளைத்துவிடும். இருபத் தோராவது நூற்றுண்டு மனித இனத்தை மரணத்தின் வாயில் கொண்டு தள்ளியதே, அதே நிலை தலையெடுத்துவிடும். அப்புறம் அவனது முயற்சிகள் அத்தனையும் விழலுக்கு இறைத்த நீராகி விடும்.

அதனால் பேராசிரியர் மெஹ்தாப் இந்த இரு குழந்தைகளின் கல்வி அறிவு, பாதுகாப்பு, கவனிப்பு ஆகிய விஷயங்களில் எள்ளளவும் குறை நேரவிடவில்லை. அவன் தான் இறப்பதற்கு முன்னால் மனித இனத்தின் பிரதிநிதிகளான இவ்விரு குழந்தை

களுக்கும் மானிட அறிவு, நாகரிகம், பண்பு போன்ற முழு முதலையும் ஒப்படைத்துவிடத் திட்டமிட்டான். இனிப் பூமியில் மூளைவிட முடியாது, இனி அது களர்நிலந்தான் என்னும் அளவுக்கு அல்லவா போர் கோரத் தாண்டவமாடிவிட்டது! இருக்கும் முதலுக்காவது மோசம் நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மனிதனுகிய அவன் கடமை அல்லவா?

விஞ்ஞானம், வரலாறு, இலக்கியம், தத்துவம், பொருளாதாரம் எதிலுமே, வாழ்க்கையின் எந்தத் துறையும் விடுபட்டுவிடக்கூடாது என்பதில் அவன் குறியாயிருந்தான். முதலில் உயிர்-மெய்யெழுத்தில் தொடங்கி, ஷேக்ஸ்பியர், காளிதாசன், தாந்தே, துளசிதாஸ், காலிப் வரையிலும், ஸயன்ஸில் ஆப்பிள் விழுவதிலிருந்து தொடங்கித் தாரகைகள் பறக்கும் வரையிலும், அதாவது நியூட்டனில் தொடங்கி, ஐன்ஸ்டீன், பேராசிரியர் மெஹ்தாப் வரையில் எத்தனை விலைமதிப்பற்ற பெருஞ்செல்வம் பொக்கிஷமாகச் சேர்ந்திருக்கின்றனவோ, அத்தனையையும் சில ஆண்டுகளுக்குள் இந்தப் பிஞ்சு மூளைகளுக்குள் எப்படியாவது திணித்து நிரப்பிவிடவேண்டும்.

காலமோ வெகு குறைவாக இருந்தது. அவனுக்கோ நாளுக்கு நாள் வயதாகிக்கொண்டிருந்தது. ஆறு மாதத்துச் சின்னஞ்சிறு பிஞ்சுப் பெண் இப்போது பதினாறு பிராயம் நிறைந்த அழகு சுந்தரியாகத் துறுதுறுத்து மதர்ப்புடன் நின்றாள். சுருட்டை மயிரும், போதையூட்டும் விழிகளும், இலேசான நாணப் புன்னகையும் எழில் கூட்ட நீக்ரோப் பையன் ஆறு அடி உயரம் வளர்ந்திருந்தான். அகன்று திரண்ட மார்பு அவன் ஆண்மைக்குக் கட்டியம் கூறியது. அவன் தனது இருபத்தோராவது வயதில் அடி எடுத்துவைத்துக்கொண்டிருந்தான்.

இருவருக்கும் சேர்ந்தாற்போல் கல்வியறிவு புகட்டப்பட்டுக் கொண்டிருந்தது. இருவரும் பேராசிரியர் பார்வையில் சமமாகவே கருதப்பட்டனர். எள்ளளவும் ஏற்றத்தாழ்வு கண்டுகொண்டு அவர்களை அவன் நோக்கவில்லை. இருவரையும் அவன் ஒரே மாதிரியாக நேசித்தான். எலெக்ட்ரானிக் மூளை மூலம் இருவருக்கும் சீரான மானிட அறிவை வழங்கினான். இருவருமே கெட்டிக்காரர்கள், நல்ல அறிவாளிகள். சென்ற பதினைந்து ஆண்டுப் படிப்பில் இருவருடைய மூளையும் பதினைந்தாம் நூற்றாண்டு வரையுள்ள மானிட அறிவைத் துல்லியமாகப் பெற்றுத் துலங்கியது.

பேராசிரியருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. இன்னும் இரண்டொரு ஆண்டுகளுக்குள் இருவரும் இருபதாம் நூற்ருண்டின் அறிவையும் தாண்டிவிடுவார்கள். அப்புறம் அவர்களது அரைகுறைக் கல்வி முழுமை பெற்றுவிடும். பல்லாயிரம் ஆண்டுகள் அநுபவத்தில் உழன்று மூளைக்கு வேலை கொடுத்து மனிதன் சேகரித்த அறிவு வீணுகாது. மனிதனின் வளர்ச்சி நிற்காது. மனிதன் தனது புது நாட்டில் வளம் கண்டு முன்னேறி வாழ்வான். இந்த எண்ணமே அவனுக்கு இனித்தது.

ஆனுல் மனித இனம் எங்கிருந்து வளரும், எப்படி வளரும்? வழி வழி வளமுறும்?

இதுவரை இந்தக் கிரகத்தில் மூன்றே மூன்று பேர் இருந்தார்கள். அறிவு, கல்வி என்னும் நூலால் ஒருவரோடு ஒருவர் இணைந்திருந்தனர்; பிணைக்கப்பட்டிருந்தனர். ஆனுல் ஒரு குடும்பத்தில் இருக்கவேண்டிய நெருக்கம் எங்கிருந்தது? அன்பு தான் எங்கிருந்தது? கீழே பூமியிலேயே இழந்துவிட்ட அந்தக் குடும்பப் பாசம், இல்லற ஞானம், அதனுல் கிடைக்கக்கூடிய இன்பம் இவையெல்லாம் இவ்விரு இளம் உள்ளங்களில் படியவில்லையே. பேராசிரியர் மெஹ்தாப் திகைத்தான்.

என்ன விந்தை! மிஸ் நோவும் மாஸ்டர் எஸ்ஸும் ஒன்றே போல் வளர்ந்தனர்; ஒன்றேபோல் போஷிக்கப்பட்டனர். இருவரும் இணைந்தே இருக்கும் நிர்ப்பந்த நிலையிலும் வாழ்ந்தனர். இருவருக்கும் ஒருவரைவிட்டால் இன்னொரு துணை கிடையாது; பொழுதுபோக்குக் கிடையாது. ஆம், பேராசிரியர் இருந்தான். ஆனுல் அவன் ஒரு தந்தையின் நிலையில், ஓர் ஆசானின் நிலையில், இரக்கக் குணம் கொண்ட ஒரு பெருமகனின் நிலையில்தான் இருந்தான். இயற்கையின் விதிப்படி பார்த்தால், அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் காதலித்து மானிட சாதியைப் பயிரிட்டு வளர்த்திருக்கவேண்டும். பேராசிரியர் மெஹ்தாப் பலமுறை அவர்களுக்குக் குறிப்பால் இதை உணர்த்தவும் செய்தான். அவர்கள் புரிந்துகொள்ள முடியாத அளவுக்குச் சிறு குழந்தைகளும் இல்லை. ஒருவரையொருவர் சீக்கிரம் மணந்து கொள்ளாவிட்டால், முடிவு பயங்கரமாக இருக்கும் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். இம் முழு மண்டலத்திலும் கட்டுக்கோப்பான நல்ல விளக்கம் தரும் மானிட வாழ்க்கை எக்காலத்துக்கும் இல்லாமல் அஸ்தமித்துவிடும் என்பதும் அவர்கள் அறியாததல்ல. ஆனுல் என்ன விஷயமோ, ஏது விஷயமோ,

இருவரும் ஒருவரையொருவர் விரும்பவில்லை; ஒருவரை ஒருவர் காதலிக்கவில்லை. ஒருவரோடு ஒருவர் இணைந்து வாழ்ந்தனர். இருவருக்கும் ஒருவரையொருவர் பிடித்தும் இருந்தது. ஆனால் காதல்தான் இருவரிடையிலும் துளிர்க்கவில்லை.

நோ மிகவும் சிவப்பு. மிஸ்டர் எஸ்ஸூக்கு இது ஓர் ஆட்சேபம். எனக்கு இத்தனை சிவப்புப் பெண் வேண்டாம் என்று சொல்லி வந்தான்.

நோவுக்கு எஸ்ஸின் கறுப்பு நிறத்தில் அவ்வளவு ஆட்சேபம் இல்லை. ஆனால் அவனுடைய சுருட்டை மயிர் பிடிக்கவில்லை. எனக்கு நீண்ட கேசமுள்ள பையன்தான் வேண்டும் என்று கூறி வந்தாள்.

''எனக்குக் கரிய விழிகள் கொண்ட பெண்தான் வேண்டும். அவள் எவ்வளவு கறுப்பாயிருந்தாலும் பரவாயில்லை. நன்றாக அவள் வாய் ஆடட்டும். ஆனால் கடைசியில் அவள் தோல்வியை ஏற்கவேண்டும்!''

''நன்றாயிருக்கிறதே! நான் எதற்காகத் தோல்வியை ஏற்க வேண்டும்? ஊஹூம், முடியாது!'' நோ கடிந்துரைப்பாள். ''அதுவும் உன்னிடம் தோற்பதா? நடக்காது!''

''இதோ பார், நோ! எடுத்ததற்கெல்லாம் கவிதை படிக்காதே!'' என்பான் எஸ்.

எஸ்ஸூக்கு ஸயன்ஸ், கணக்கு, அல்ஜிப்ரா ஆகியவற்றில் ஆர்வம் அதிகம். நோவுக்குக் கவிதை என்றால் உயிர். இலக்கியம், தத்துவம், வம்பு இவற்றில் பொழுதைப் போக்குவாள். சொல்லப் போனால் அவளுக்கு எத்தனையோ மொழிகள் தெரியும். ராக்கெட்கூட ஓட்டுவாள்! ''நீ என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாய்? உன்னைப்போல் அல்ஜிப்ராவும் கணக்கும் போட்டுப் போட்டு ரசனையற்றுப் போன அசட்டைக் கல்யாணம் செய்துகொள்ளுவேன் என்று கனவு காண்கிறாயா?'' என்று கேட்பாள்.

''எஸ்!'' என்று எஸ் விடையளிப்பான்.

''நோ'' என்பாள் நோ. ''நான் விரும்பும் பையன் எப்படி இருக்கவேண்டும், தெரியுமா? நீர்க்குமிழிபோல நயம் மிகுந்தவனாக இருக்கவேண்டும். சூரியனைப்போலப் பொன்னிறமாக, ராக்கெட்டைப்போல வேகம் கொண்டவனாக இருக்கவேண்டும். எந்த நேரமும் உன்னைப்போல 'பார்முலா, பார்முலா' என்று பார்முலாவைக் கட்டி மாரடிக்கும் முட்டாளாக இருக்கக் கூடாது!'' என்று சுடச் சுடக் கொடுப்பாள்.

'ஆனால் அப்படிப்பட்ட பையன் எங்கிருந்து கிடைப்பான்?' பேராசிரியர் கையைப் பிசைந்துகொண்டு "நோ"வைக் கேட்பார், "இருப்பதே நீங்கள் இருவரும் மட்டுந்தானே? நீங்கள் இருவரும் கூடிய விரைவில் திருமணம் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அடுத்த இருபது ஆண்டுக்குள் நீங்கள் இருவரும் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்தால் . . . " பேராசிரியர் கணக்குப் போடுவதில் இறங்கிவிடுவார்.

"எனக்கு இவளிடம் அன்போ காதலோ இல்லை!" நோ அழாக் குறையாகக் கூறுவாள்: "இவன் தன் கைகளால் என் கரங்களைப் பற்றும்போது இவன் கைகள் மிகவும் சில்லிப்பாகவே எனக்குப் படுகின்றன. என் கைகளில் ஏதோ பனிக்கட்டியை வைத்தாற்போலவே உணருகிறேன். எனக்கு நெருப்பாகத் தகிக்கும் பையன்தான் வேண்டும்!"

"இவளுக்குச் சிறிதும் அழகே இல்லை!" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு கூறுவான்: "இவள் நீல விழிகளும், கழுத்தில் படை படையாகத் தெரியும் எண்ணற்ற சிறு சிறு மச்சங்களும், சிவந்த உதடுகளும் துளிக்கூட நன்றாயில்லை. தோல் வழுமூண்டு இரத்தம் பெருக்கும் சதையை அல்லவா இவள் உதடுகள் நினைப் பூட்டுகின்றன. பார்க்கச் சகிக்கவில்லையே! நான் இவளைக் காதலிக்கவில்லை. இவளைக் காதலிக்க என்றால் முடியவும் முடியாது."

பேராசிரியர் நம்பிக்கை இழந்து தலைமயிரைப் பிய்த்துக் கொண்டான். வாழ்க்கை முழுவதும் அவன் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் வீணாக அல்லவா போய்க்கொண் டிருந்தன! அவன் உலகத்து மேதாவிகளுக்கெல்லாம் மேலான மகா ஜீனியஸ். இப்பொழுது இந்தப் படைப்பில் கடைசியாக எஞ்சி யிருந்த ஒரே அறிவாளி. அவன் எல்லாம் அறிந்திருந்தான். எல்லா ஞானமும், எல்லா விஞ்ஞானமும், சகல கலைகளும் அவ னுக்குள் அடக்கம்!

ஆனால் காதலைப்பற்றி அவனுக்கு எதுவுமே தெரியவில்லை.

அவன் தன் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்தான். அவ னுக்குத் தன் பிள்ளைப் பிராயம் நினைவுக்கு வந்தது. அவன் தெருக் களிலே வளர்ந்தான். ஒரு பிச்சைக்காரி அவனை எடுத்து வளர்த் தாள். யர்ர் அவன் தாய்? யார் அவன் தந்தை? அவனுக்கு எதுவுமே தெரியாது. அப்படி ஒரு தாய் தந்தையின் தேவையை யும் அவன் உணரவில்லை. மிகச் சிறு பிராயத்திலேயே அவன்

தன் வாழ்வில் பல விஷயங்களைக் கற்றுத் தேற வேண்டியிருந்தது. எத்தனை இருளில் வாழ்ந்தார்கள், அவன் வகுப்பைச் சேர்ந்தவர்கள்? தெருப் புழுதியில் புரண்டு, நாற்றமடிக்கும் மரப்படிகளுக்குப் பின்னால் முடங்கிப் படுத்து, பாதிரிமார்கள் தரும் பிச்சையில் வாழ்ந்து காலத்தை ஓட்டவேண்டியிருந்தது! பிறந்து நன்கொடையின் உதவிகொண்டு கல்வியறிவு பெற்ற கணங்கள் ஒளிக் கணங்கள்! இருட்டிலும் ஒளிகூட்டிய நல்லோரை அவை. கடும் முயற்சியாலும் பயிற்சியாலும் அவன் பட்டை தீட்டிய வைரம்போல் பிரகாசித்தபோது எத்தனையோ பெருமைகள் அவனை வந்து அடைந்தன, செல்வங்கள் வந்து சூழ்ந்தன, ஆற்றல்கள் பல கூடிவந்தன. ஆனால் இவ்வளவுக்கும் இடையே அவனுக்கு அன்பு கிட்டவில்லை; காதல் கை கூடவில்லை. அவன் மேற்கொண்டிருந்த பணி, பூவுலகில் அவன் பொறுப் பேற்று நடத்திய பணி மிக மேன்மையானது. அப்பணியில் மூழ்கி விட்டவனுக்குக் காதல் நினைவே உண்டாகவில்லை; அது கட்டாயம் தேவை என்றும் தோன்றவில்லை. இந்த உணர்வு அவனைப் பீடித்து விரட்டவும் இல்லை.

எனவே, காதலை அநுபவபூர்வமாக அறியாதவனாகவே அவன் வளர்ந்தான்; வாழ்ந்தான். ஆனால் காதல் உணர்வைப் பற்றி அவன் நிறையப் படித்திருந்தான். இரு இளைஞர்களுக்கும் அதைப் படித்துப் படித்துப் புகட்டியும் இருந்தான். ஆனால் படிப் பதும் படிப்பிப்பதும் வேறு விஷயம், உய்த்து உணர்வது வேறு விஷயம் அல்லவா? அவன் ஒரு நாளும் காதல் உணர்வைப் புரிந்துகொள்ளவில்லை. தன் உள்ளத்துத் தீயைத் தீக்குச்சி போலப் பயன்படுத்தினானே ஒழியத் தன் விரல்களைச் சுட்டுக் கொள்ளவில்லை. அதனால் காதல்பற்றி எடுத்துரைத்து அவர்களை இணங்க வைக்க இயலாமல் தவித்தான்.

என்ன செய்வது என்று அவனுக்கு விளங்காமல் போகவே, மீண்டும் ஒருமுறை பூமியைச் சுற்றிவந்தால் என்ன என்று தோன்றியது. ஒருவேளை அவனைப்போலவே ஓரிருவர் இணைந்தோ, தனித் தனியாகவோ அல்லது மூலைக்கு ஒருவராகவோ அழிந்து பாழாகிவிட்ட பூமியில் கிடைக்கலாகாதா? ஒரு காலத்தில் உயர்ந்த நாகரிகத்துக்கு உறைவிடமாயிருந்த உலகம் ஆயிற்றே! அப்படி யாராவது கிடைத்து மணந்துகொள்ளவும் அவர்கள் சம் மதித்தால் இந்தக் கிரகத்துக்கு அவர்களை இட்டுவந்து மானிட இனத்தை வளர்த்து விருத்தி செய்யலாமே என்ற ஒரு

போட்போன் ராக்கெட் மிகவும் மெதுவாகப் பூமிக்கு அருகில், மிக மிக நெருக்கமாகப் பறந்துகொண் டிருந்தது. பேராசிரியர் மெஹ்தாப் விசனமே உருவாகிவிட்டான். பிறகு தொண்டை அடைக்க, குரல் தழுதழுக்க, ஏதோ ஒரு சோகக் கதையின் கடைசி அத்தியாயத்தைக் கூறுபவன்போல மெதுவாகச் சொல்லத் தொடங்கினன்:

''இங்கே நியூ யார்க் நகரத்தின் வானளாவிய அடுக்குமாடிக் கட்டடங்கள் இருந்தன. இதோ, இதுதான் பாரிஸ் நகரம்; மெல்லிய மேனி படைத்த எழிற் கன்னிகள் வாழ்ந்த இடம். இது மாஸ்கோ; செகாவ், தோஸ்தோவஸ்கி, டால்ஸ்டாய் ஆகியவர் களின் ஆருயிர்க் காதலியாகத் திகழ்ந்தது. இது பீகிங்; நீலக்கல் பதித்து எழிலார்ந்த கட்டடங்கள் நிறைந்த நகரம். இங்கேதான் டோக்கியோ இருந்தது. மீஷா, செர்ரி மலர்கள் மலிந்த நகரம் இது. இதுதான் டெஹ்ரான். எழில்மிகு ரோஜாக்களின் ஊஞ்சல் என்று பெயர் பெற்றது. இது லாகூர்; கவிதையும் இலக்கியமும் கொம்மாளமிடும் கலைத்தேவியின் உறைவிடம். இது தில்லி; இந்தியாவின் தலைநகரம். ஏழு நாகரிகங்களைக் கண்ட தலைநகரம். ஏழு நாகரிகங்களுக்கே தலைநகரம். ஏழு நாகரிகங் களுக்கும் உறைவிடம். ஆனால் இப்பொழுது எல்லாமே இடிந்து பாழாகக் கிடக்கின்றன. சந்தடியற்று, அழிந்தொழிந்து, ஒலி குன்றி, ஒளி குன்றி இடிந்து பாழாகிச் சிதிலமாகிக் கிடக்கும் பாழ்கள். பெயருக்குக்கூட ஒரு கட்டடம் இல்லை. உறுதியான, நிலைகுலையாத ஒரு மாளிகை இல்லை. இருப்பதெல்லாம் பாழடைந்த இடிபாடுகளே.''

பேராசிரியரின் குரல் மூழ்கி முக்குளித்து மௌனமாகி விட்டது. உள்ளத்தை வருத்தி வாட்டும் நினைவுகளில் அவன் தன்னை மறந்து போனன். ஆனல் சிறிது நேரத்துக்கெல்லாம் தூக்கிப் போட்டாற்போல் உணர்வு பெற்று வியப்புடன் கீழே நோக்கலானன்.

''அடே!'' வியப்பில் பெருங் கூச்சலே போட்டுவிட்டான் அவன்.

எஸ்ஸாும் நோவும் அவன் கூச்சலைக் கேட்டு அவன் அருகில் ஓடி வந்தனர். அவர்கள் பார்வையும் கீழே குனிந்து விரிந்தது. பேராசிரியரின் பார்வை போன திக்கிலேயே வட்டமிட்டுத் தேடியது.

உண்மையில் ஒரே ஒரு கட்டிடம் மட்டும் தன் புதுக் கருக்கு அழியாமல், உறுதி குலையாமல், கம்பீரமாகப் பூமியில் நின்று கொண்டிருந்தது. அவர்கள் இருவரும் வியப்பால் அதிர்ந்தனர். கண்களைக் கசக்கிக்கொண்டு மீண்டும் பார்த்தனர். உண்மை யிலே ஒரு கட்டிடம் தெரிந்தது, சிறிதும் உருக் குலையாமல். அவர்கள் கண்கள் ஏமாறவில்லை. முழுப் புவியிலும் ஒரே ஒரு கட்டடம் மட்டும் எஞ்சியிருந்தது.

பேராசிரியர் தன் ராக்கெட்டை மெதுவாக அந்தக் கட்டடத் துக்கு எதிரே இறக்கினான். பிறகு அதிலிருந்து இறங்கி மூவரும் அந்தக் கட்டடத்தை நோக்கி நடந்தனர். மனிதனின் படைப் பாற்றலைப் பறைசாற்றிக்கொண்டு மிடுக்கோடு நின்ற கைவண்ணக் கட்டிடம் அது ஒன்றே. அன்றலர்ந்த மேனியாக இன்னும் நிலையாக அப்படியே நின்றுகொண் டிருந்தது.

இருள் சூழத் தொடங்கிய நேரம். ஆனால் அந்தக் கட்டடம் நின்ற இடத்தில் மட்டும் இருள் இல்லை. இருட்டும் அந்தக் கட்டடத்தைத் தீண்டவே அஞ்சியதுபோலும்!

நதிக்கரை நீரோட்டம் காட்டும் எழிற் கனவு. எழிற் கன்னி ஒருத்தி தனது மழுமழுப்பான புயங்களைத் தூக்கிச் சோம்பல் முறித்துவிட்டு, காதல் தர்பாரில் தொழுகை புரிகிறாற்போன்ற எழிற் காட்சி!

''தாஜ்மகல்!''

நோ அடையாளம் கண்டுகொண்டு உரக்கக் கூவினாள். அப் புறம் ஓடிப் போய் வாசற்புற வழியாக உள்ளே நுழைந்து விட்டாள். பேராசிரியர் தாஜ்மகலைப்பற்றி இருவருக்கும் முன்பே விவரமாகச் சொல்லியிருந்தான். அதன் படத்தையுங்கூட அவர்களுக்குக் காட்டியிருந்தான். அதே கட்டடம் இப்போது உண்மையாக அவர்கள் எதிரில் தெரிந்தது.

எல்லாம் அழிந்துபோன பின்பும் தாஜ்மகல் மட்டும் தப்பிப் பிழைத்திருந்தது. இது விந்தைதான். மூவரும் வியப்பும் மகிழ்ச்சியும் பொங்க, உள்ளத்தைத் தாளமிடவைக்கும் உணர்வை உள்ளத்தில் தேக்கி மறைத்துக்கொண்டு தாஜின் எதிரே நின்றனர். திடுமென்று ஒரு சலவைக் கல் மினாருக்குமேலே நாலாம் பிறைச் சந்திரன் வந்து நின்றான். யாருடையவோ மென்மையான வெறியூட்டும் விரல்களில் வெள்ளி மோதிரம் அணிந்தாற்போன்றிருந்தது அந்தக் காட்சி.

''ஆஹ்! நோவின் உள்ளத்தில் அடங்கிய பெருமூச்சு ஒன்று தன்னையும் மீறி எழுந்தது.'' அவள் எஸ்ஸின் கையைப் பற்றிக் கொண்டாள். பிறகு மெதுவாக அவன் கையைத் தடவிக் கொண்டே, ''உன் கை ஏன் நெருப்பாகக் கொதிக்கிறது?'' என்று கேட்டாள்.

''ஓஹ்! நீதான் எத்தனை அழகு!'' என்றான் எஸ் நோவைப் பார்த்து. ''நீ இவ்வளவு கொள்ளை அழகு என்று எனக்கு இது வரை தெரியாமல் போய்விட்டதே!'' என்றவன் நோவின் முகத் தையே வைத்த விழி வாங்காமல் பார்த்தான், முதல் முதலாக ஒரு பெண்ணைப் பார்ப்பவனைப் போல்!

''நான் எஸ்ஸை மணந்துகொள்ளுகிறேன். நாங்கள் கீழே தாஜ்மகலின் அடியில் வாழ்வோம். இங்கேயே எங்களுக்குக் குழந்தைகள் பிறக்கும்!'' என்று பேராசிரியர் மெஹ்தாவைப் பார்த்துக் கூறினாள் நோ.

''நீ என்ன சொல்லுகிறாய்?'' பேராசிரியர் பதறிப் போய்க் கேட்டான்: ''இது வெறுப்புணர்ச்சி நிறைந்த போர்க்களம். புழுதியும் இரத்தமும் புரண்டோடிய இடம். உடன்பிறந்தவர் களின் உயிரைக் குடிக்கத் துடித்த கொடிய பூமி. மீண்டும் அதே பழைய கதையைத் தொடர விரும்புகிறாயா?''

''தாஜ்மகல் இருக்கிறவரைக்கும் மனிதனின் நம்பிக்கையும் வாழும்!'' என்று கூறி, நோ தாஜ்மகலையே அன்போடுபார்க்கலா னாள்.

''நான் உன் பொருட்டு இந்தத் தாஜ்மகலைப் பெயர்த்து எடுத்துப் போட்டோன் ராக்கெட் மூலம் டிரோமேதாக் கிரகத் துக்கே எடுத்துச் செல்லமுடியும்!''

''இதைக் காட்டிலும் வேறு என்ன அநியாயம் இருக்கமுடியும் புரொபஸர்?'' எஸ் பதறிக் கொதித்துக் கேட்டான்.

''தாஜ்மகலைப் பாருங்கள்! இதை மனிதனின் கரங்கள் படைத்ததாகத் தோன்றவில்லை. இது புவியில் தானாகவே முளைத் திருப்பதாகத் தோன்றுகிறது. இது இந்தப் புவியின் கனவு, புரொபஸர்! கனவுகளைக் களவு செய்யமுடியாது!''

''ஆனால் இந்தப் புவியில் வெறுப்புக் கதிர்கள் பொழி கின்றனவே! அவை மனிதனின் எலும்புகளில் ஊடுருவித் தாக்கு கின்றனவே!'' என்று பேராசிரியர் பெருங் கூச்சல் போட்டான்.

''அப்படியிருந்தும் இந்தத் தாஜ்மகல் எப்படி உருவாயிற்று?'' என்று எஸ் கேட்டான்.

''வெறுப்புணர்வை வளமுறப் பயிர் செய்யும் இந்தப் பூமியில் அன்பின் இந்த அற்புதம் எப்படி வளர்ந்தது?'' நோ, பேராசிரிய ரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டு, எஸ்ஸின் கையைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டாள். ''அப்படிச் சொல்லா தீர்கள் புரொபஸர், அப்படிச் சொல்லாதீர்கள்! எப்போதாவது அன்பின் குரல் ஒலிக்கும். எப்போதாவது அன்பின் மணம் கமழும். எப்போதாவது அன்பும் காதலும் உணர்ச்சி பெற்று விழித்தெழும். ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு தெருவி லும் தோன்றி இந்த உலகம் முழுவதிலும் ஆட்சி செலுத்தும். அன்பின் ஆட்சியை அழிக்க முடியாது, முடியவே முடியாது!'' என்று முடித்தாள்.

பிறகு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு நோ தன் தலையை எஸ்ஸின் மார்பில் புதைத்துக்கொண்டாள். பிறகு இரு கண்களையும் மூடிக்கொண்டு அமைதியான குரலில் கேட்டாள்: ''இங்கு நான் என் குழந்தைகளைக் காணலாமா?''

தாஜின் இந்தச் செய்தியை ஏந்தி அவை இவ்வுலகம் முழுவதும் பரவி விரிந்துகொண்டே போகின்றன.

இலை

கடைத்தெருதான் பெருத்துவிட்டதோ அல்லது வியாபாரந் தான் சிறுத்துவிட்டதோ? மேற்புறத்துச் சாலை சற்று உயர்ந்து வானத்துடன் இணைவதுபோலத் தோன்றியது. அப்புறம் ஒரே யடியாகக் கீழே இறங்கியது. அதுவே உலகத்தின் ஒரு கோடி யாக இருக்குமோ? அங்கிருந்து குதித்தால், இந்த வாழ்விலிருந்து தப்பி மரணத்தைத் தழுவலாமோ என்ற பிரமையை ஏற்படுத் தியது.

நாள் முழுதும் மண்டையை உடைத்துக்கொண்டபின் காயலான் கடை மகன்லாலுக்கு இரண்டே பொருள்கள் கைக்குக் கிட்டின. ஒன்று புளோரண்டீன், இன்னொன்று ஜைமனீராய். புளோரண்டீனையாவது ஒருவேளை எவனாவது மூளை பிறழ்ந்த பிலிம் தயாரிப்பாளர் வாடகைக்கு எடுத்துப் போகலாம். ஆனால் ஜைமனீராயை . . .? வேண்டாமே! இன்று அதை ஒளித்துப் பாதுகாத்து வைத்தால், நாளை அவனுடைய பேரன்களோ, கொள்ளுப் பேரன்களோ கோடி கோடியாகச் சம்பாதித்து விட்டுப் போகிறார்கள்! இன்றைக்குக்கூட மேல் நாட்டில் யாரிட மாவது லியோநார்டின் ஸ்கெச் ஏதாவது கிடைத்துவிட்டால், கலைச் சந்தையில் இலட்சக்கணக்கில் அல்லவா பேரம் அது பேசப் படுகிறது!

இந்த இலட்சம், கோடி நினைவிலேயே மகன்லாலின் கண்களில் மின்னல் வெட்டிப் பறித்தது! நாற்பது நாற்பத்திரண்டு வயதான காயலான் கடைக்காரன்; வழுக்கை விழும் அளவுக்கும் கல்யாணம் ஆகாமலே இருந்திருக்கிறான். அதனால் பேரன் பேத்திப் பேச்சுக்கே இடம் இல்லை என்பதை அறவே அவன் மறந்துவிட்டான். மகன்லால் என்ன செய்வான், பாவம்! அவன் ஒரு சாதாரண ஹிந்து. ஹிந்து என்ற முறையில் மாபெரும் தத்துவங்களுக்கு உடைமைக்காரன். ஆனால் உள் மனத்தில் உறைந்திருந்த வியாபார புத்தி போகவில்லை. பேச்சுக் குக் காசைத் திருணமாக மதித்து ஒதுக்குவான், மாயையில் உழலக்கூடாது என்று வேதாந்தம் பேசுவான். ஆனால் உள்ளுக்

குள் உயிருக்கும் மேலாகப் போற்றுவான். உலகத்திலேயே பணம் காசை யாராவது தெய்வமாக வழிபடுகிறார்கள் என்றால், அவர்கள் ஹிந்துக்கள்தான். தீபாவளியன்று, பெரிய தாம்பாளத்துக்குக் கீழே ஜோதி விளக்குடன், பாலும் நீரும் அபிஷேகம் செய்து, குங்குமம் இட்ட ரூபாய் கிடக்கும். தசராவின்பொழுது வண்டி நிறைய மல்லிகை மாலைகளுடன் ஆண்—பெண் அடங்கலாக எல்லாரும் பூஜை செய்து வணங்கிவர லக்ஷ்மியின் கோயிலுக்குச் செல்வார்கள். காசுக்காக யூசுப் போன்ற உடன்பிறப்பையும், பத்மினி போன்ற அழகு மனைவியையும் விற்கக்கூடத் தயங்கமாட்டார்கள்.

எதிரே கடை வைத்திருந்தவன் சிராஜா. ஈவ்ஸ் பாட்டரிக்கு ஏஜென்ட். அவன் கடை அரச மரத்துக்குப் பின்னால் சிறிது உள்ளடங்கியிருந்தது. பக்திசிரத்தை கொண்ட ஹிந்துக்கள் விடியற்காலையில் வந்து அந்த மரத்துக்குப் பாலும் நீரும் ஊற்றி வழிபட்டுச் செல்வார்கள். அதனால் கடையும் சாலையின் நடுப் பகுதியும் கசகசவென்று ஒரே சகதியாகிவிடும். பிரிவினைக்குப் பின் இந்தியாவில் தங்கிவிட்ட சிராஜா, ஹிந்துக்களின் இந்தப் பழக்கத்துக்கு மதிப்புக் கொடுத்து மரியாதை செலுத்தவேண்டியவன் ஆனான். மரியாதை செலுத்தாதவை தெருவில் திரியும் நாய்களே. அவை கல் என்றும் பாராமல் காலைத் தூக்கி அந்த மரத்தின்மேல் சிறுநீர் அபிஷேகம் செய்த வண்ணம் இருந்தன. இந்த மரத்தைப்பற்றித்தானே கண்ணபெருமான், ''தளிர் மரங்களுள் அரச மரம்'' என்று சொன்னான். முற்பிறவியில் இந்த நாய்கள் முஸல்மான்களாக இருந்திருக்கவேண்டும். 1857 கலகத்தில் ஹிந்துக்களின் கையால் கொலையுண்டிருக்கவேண்டும். இல்லாவிட்டால், இப்படித் திட்டமிட்டுப் பழிவாங்குமா?

சிராஜா எப்பொழுது பார்த்தாலும் அரசம் பழங்களைத் தின்ற வண்ணம் காணப்படுவான். இதற்குக் காரணம் வியாபார மந்தமோ பசியோ அல்ல. வீரியத்தைக் கெட்டிப்படுத்தும் என்று சொல்லப்படும் எந்தப் பொருளையும் தின்று வைப்பது சிராஜாவின் பழக்கம். உண்பது, குடிப்பது, இன்பம் துய்ப்பது—இதுதான் அவன் வேலை. மூளை வளர்ச்சியிலே அவன் படுமட்டமாகச் சண்டை போடும் ஊர்சுற்றும் நாடோடிக் கும்பலை ஒத்தவன். இந்தியாவில் இருந்தால் பாகிஸ்தானைப்பற்றிப் பேசுவதும், பாகிஸ்தானில் இருந்தால், ''என் ஆண்டவனே! என்னை அழைத்துக் கொள்ளேன் மதீனாவுக்கு'' என்று வேண்டுவதும் உடன்

பிறந்த குணம். எதிலும் ஈடுபாடு கிடையாது. காயலான் கடை மகன்லால் எத்தனையோ முறை சிராஜாவின் விடலை வாழ்வைக் கண்டு பெருமூச்சு விட்டிருக்கிறான். ''இவர்களுடைய அல்லாஹ் நல்ல குஷால் பேர்வழி. நம் கடவுள் இருக்கிறானே! இவன் கீழே பார்க்காமல் ஆகாயத்தைப் பார்க்கிறான். திரிகூட மலைச்சாரலிலே உயரப் போய் உட்கார்ந்துவிடுகிறான்'' என்று எண்ணி மாய்ந்து போயிருக்கிறான்.

சிராஜா தெரியாமலேயே ஒரு தாந்திரிகன் ஆகியிருக்க வேண்டும். வீரியத்தைக் காக்கக் குண்டலினியை எழுப்பாமலேயே அறிந்து மேலுலகத்துக்கு வழி அமைத்துக்கொண்டிருக்க வேண்டும். தாந்திரிகர்கள் பெண்களோடு நெருங்கி உறவாடி, அவர்களுடனேயே ஐக்கியமாகி இருந்தாலும், வீரியத்தை வெளியேற்றி வாழ்வை வீணாக்கமாட்டார்களாமே! இப்படித் தன்னல முறையில் முக்தியை விரும்புபவர்கள், பெண்களை ஒரு கருவியாகக் கொண்டு வீடு பெற நினைப்பவர்கள் எப்போதாவது சிந்தித்துப் பார்த்திருப்பார்களா, பாவம், அந்தப் பெண்ணின் நிலை என்ன ஆகியிருக்கும் என்று? ஒரு பெண்ணின் பசியை உசுப்பி விட்டு, அவளை அழ வைத்து, ஏங்க வைத்து ஒருவன் எப்படித் தான்மட்டும் மோக்ஷத்தை அடையமுடியும்? எப்படி ஆண்டவனை அணுகமுடியும்? ஆண்களுக்கு வீரியத்தை அடக்கி ஆள்வதனால் முக்தி கிட்டும் என்றால், பெண்களுக்கு . . .? அவர்கள் முக்தி பெற விரும்பினால் என்ன செய்வது? சுவாதி நீர் மட்டும் முத்து ஆகி விடுவதில்லை; சிப்பி மட்டும் முத்து ஆகிவிடுவதில்லை. சுவாதி நீர் சிப்பிக்குள்ளே சரியானபடி விழுந்து, சிப்பி அதைத் தன்னுள்ளே அடக்கி மூடிக்கொண்டால்தான் முத்து உண்டாகிறது! இது தாந்திரிகர்களுக்குத் தெரியாதோ?

இரவு விரைந்து வந்துகொண்டிருந்தது. வெளியே, உலகத்தின் கரையாகத் தோன்றிய அந்த இடம், இருளோடு இன்னும் அருகில் வந்துவிட்டாற்போலத் தோற்றம் காட்டியது. பட்டு வியாபாரி விலாயதி ராம், காஷ்மீரீ பட்ஷாஹ், உடுப்பிச் சக்கரபாணி ஆகியவர்களுடைய கடைகளெல்லாங்கூடக் கட்டியாகிவிட்டது. அது மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமையானதால் அவனுடைய இட்டிலி, தோசை, சாம்பார், ரவா கேசரி முதலியவை விற்றுத் தீர்ந்துவிட்டனபோலும்! சிராஜா

வின் கடை மட்டுமே திறந்திருந்தது. அவனுக்கு என்ன குறியோ? ஒருவேளை பாட்டிரி தேவைப்படுவது இரவு நேரங்களில்தான் என்று இருக்கும். ஆனால் அவன் விடிகாலையிலுங்கூட ஏதாவது ஒரு சாக்கில் கடையைத் திறந்து வைத்திருப்பான். ''விடியற்காலையும் இரவின் ஒரு பகுதி, கடைசிப் பகுதி'' என்ற நினைப்பு! ஆமாம், பொழுது யாருக்குத்தான் எப்பொழுதுதான் விடிந்திருக்கிறது? அதுதான் கம்யூனிஸ்ட்களுக்குத் துணை போய் விட்டதே!

சிராஜா ஒருவேளை டூரிஸ்ட் ஏஜென்ட் மைக்கேலை எதிர்பார்த்திருந்தானோ, என்னவோ? இருவரும் மறுநாள் ஆக்ரா, கஜுராஹோ என்று பயணத் திட்டம் போடலாம் அல்லவா? கொஞ்சம் காசும் சம்பாதித்துக்கொள்ளலாமே! சிராஜா பணம் காசை உத்தேசித்துப் போவதில்லை; மேல் நாட்டுப் பெண்களை உத்தேசித்துத்தான் போவான். பெரும்பாலும் அவர்கள் திருமணத்தில் ஏமாற்றமுற்று, திருமண விலக்கினால் நொந்து தொய்ந்து பசி மேலிட்டவர்களாக வருவார்கள். இங்கு வந்து, தங்களது மும்தாஜ் காதலை, அங்கே கிடைக்கும் ஷாஜஹான் மனம்கொண்ட ஆண்களிடம் பரீட்சிப்பார்கள். கஜுராஹோவின் மிதுன ஓவியங்களுக்கு உயிர் கொடுத்து மகிழ்வார்கள்.

சிராஜாவின் குரல் மகன்லாலைத் தூக்கிவாரிப் போடவைத்தது: ''ஹலோ ஸ்வீட்டி பை!'

சொல்லப் போனால் சிராஜா கல்வி அறிவு அற்றவன். ஆனால் டூரிஸ்ட்களோடு பழகிப் பழகி ஆங்கிலம் கற்றுக்கொண்டிருந்தான். அவன் குரலிலிருந்தே கீர்த்தி வந்திருக்கிறாள் என்று மகன்லால் புரிந்துகொண்டான்.

நிசமாகவே கீர்த்திதான் வந்திருந்தாள். சின்ன உருவம். கட்டமைந்த உடல். பருத்த தோற்றம். முகத்திலே ஒரு வாட்டம். நல்ல கறுப்பு. போதாதற்கு நாவல் பழநிற ஆடை உடுத்து வந்திருந்தாள். அவள் வந்தபோது இருளின் ஒரு துண்டு தான் உயிர் பெற்று வந்திருக்கிறதோ என்று தோன்றியது. அவள் எப்பொழுதுமே இரவு நேரங்களில்தான் வருவாள், தன்னைத்தானே ஒளித்துக்கொள்ள விரும்புகிறவளைப்போல! சிராஜா, தன் கடைக்கெதிரே நின்றுகொண்டிருந்தான். கீர்த்தி எப்போதும்போல அவன் பக்கம் பாராமலே, அவனுடன் பேச்சுக் கொடுக்காமலே அவனைத் தாண்டி வந்துவிட்டாள்.

இருந்தாலும் அவன் தன் பழக்கத்தை விடாமல் சீழ்க்கை அடித்தான்.

ஆனால் கீர்த்திதான் பேசுவதில்லையே, யாருடனும்! அவளைப் பேச வைக்கவேண்டுமானால் ''ஆம், இல்லை'' என்று விடை வரக் கூடிய கேள்விகளாகத் தயாரிக்கவேண்டும். அப்போதும் அவள் மேலும் கீழும் வலமும் இடமும் தலையை ஆட்டிச் சமாளித்து விடுவாள்; வாய் திறக்கமாட்டாள். சிராஜா அவளைச் சீண்டு வதைக் காண மகன்லாலுக்குக் கட்டோடு பிடிப்பதில்லை. இதை அறிந்த சிராஜா எத்தனையோ முறை மகன்லாலிடம் கூறியிருக் கிறான்:

''நீயும் எங்கேயாவது காதல் சக்கரத்தில் சிக்கிக்கொண்டு விட்டாயா, தம்பி? இளம் பெண்; இழுத்துப் போட்டுக்கொள். ரொம்ப இப்படியும் அப்படியும் அலைக்கழித்தால் மணிப்புறு மாதிரி பறந்துபோய்விடும்!'' மகன்லால் அவனை அதட்டி அடக்கியிருக்கிறான்.

உண்மையில் மகன்லாலின் தொழில் மிகவும் சள்ளை பிடித்த தொழில். கீர்த்தி, மரத்தில் ஏதாவது சிற்ப வேலைப்பாட்டையோ, கலைப் பொருளையோ தன் முடைக்குப் பணம் ஆக்கக் கொண்டு வந்தால், அவன் அதில் ஆயிரம் குறை சொல்லுவான். இந்த மாதிரி பொருள்களுக்கெல்லாம் இப்பொழுது கிராக்கி இல்லை என்பான் ஒரு சமயம். இதிலே அந்தக் கலை நயமும் நுணுக்கமும் வரவில்லை; இது விலை போகாது என்பான் இன்னொரு சமயம். முன்பே குனிந்த தலை நிமிராத கீர்த்தியின் தலை இன்னும் தொங்கிவிடும். மகன்லால் இப்படியெல்லாம் நுரிசு கண்டு பிடிப்பதன் ஒரே நோக்கம், நூறு ரூபாய்ப் பொருளை அவள் ஐந்து பத்துக்குக் கொடுத்துவிட்டுப் போகவேண்டும். அப்புறம் அவன் அதைப் பதனப்படுத்தி நூற்றுக்கணக்கில் பணம் பண்ண வேண்டும் என்பதே.

கீர்த்தி இந்தக் கலை நுணுக்கங்களெல்லாம் எந்த ஆர்ட் ஸ்கூலிலும் கற்கவில்லை. அவள் தந்தை நாராயணன் ஒரு சிற்பி. அவன் மாலூ தாஜீ, ஜேம்ஸ் வர்கீஸ், போன்றவர்களுடன் நேபால், போபால் இன்னும் எங்கெங்கெல்லாமோ சுற்றி இந்தியாவின் கலைப் பொக்கிஷங்களைத் தேடித் திரிந்தான். அவை உண்மையில் லண்டன் மியூசியம், நியூயார்க், சிகாகோ போன்ற அருங் கலைப் பொருள் விற்கும் கடைகளில் சிரழிந்துகொண் டிருந்தன. ஆண்டுதோறும் நமது கோயில்களிலிருந்தும் சிற்பக் கூடங்களி

லிருந்தும் நூற்றுக்கணக்கான சிலைகள் மறைந்து வந்தன. ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் சென்று விந்தைப் பொருள் சந்தையில் விலைபோய்க்கொண் டிருந்தன.

நாராயணன் இந்த ஊர் சுற்றிப் பிழைப்புப் பிடிக்காமல் ஊர் திரும்பிவிட்டான். வீட்டிலேயே கலைச் சிற்பங்கள் செய்யலானான். கீர்த்தி அவன் கைவண்ணத்தை உன்னிப்பாகக் கவனிப்பாள். இடையிடையே தேவைப்படும் ஆயுதங்களை எடுத்துக் கொடுப்பதும், மேம்போக்கான நகாசு வேலைகளைச் செய்து தருவதிலும் தந்தைக்கு உதவியாக இருந்தாள். இப்படி வீட்டில் உட்கார்ந்து விட்ட நாராயணன், பாரம்பரியக் கலைச் செல்வங்களில் இழந்ததற்குக் கிடைத்த பொருளைக் காட்டிலும் அவை எவ்வளவோ விலையுயர்ந்தவை. அவற்றுக்கு இரண்டு மூன்று மடங்கு என்ன, நூறு மடங்கு அதிக விலையே கிடைத்திருக்கும் என்ற விஷயத்தை மறந்துவிட்டான். ஒருவேளை தெரிந்தேதான் அப்படி நடந்துகொண்டானோ? ஆனால் அவன் பணத்தின் மதிப்பைப் புரிந்துகொண்டுவிட்ட, வாழ்க்கையின் அகல நீளம் பாராதவர்களின் வரிசையில் ஒருவனாகத் திகழ்ந்தான்.

அவன் சிற்பங்கள் செய்வான். சிரமப்பட்டு வயிற்றுப்பாட்டுக்குச் சம்பாதிப்பான். கடைசியில் ஒரு நாள் இந்த வயிற்றுப்பாட்டு வேலையே அவனுக்கு எமனாக முடிந்தது. அவன் ஜகதம்பாவின் சிலை செதுக்கிக்கொண் டிருந்தபோது அவன் உளியே அவன் கையில் பாய்ந்துவிட்டது. அதனால் ''டிடினஸ்'' கண்டது. பக்கத்தில் உள்ள கன்டோன்மென்ட் ஆஸ்பத்திரியில் சேர்ந்து மரணமுற்றான். நாய்ச் சாவு செத்தான் என்று பேசிக்கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட சாவு ஏன் செத்தான்?

தேவியின் சிலையைச் செதுக்கும்போது மாதக்கணக்கில் அதன் மார்பகம், இடை, தொடை, தொப்பூழ் இவற்றுடனேயே போராடிக்கொண்டு கிடந்தானே! சின்னச் சிற்பங்களில் மார்பகங்கள் சூன்யத்தில் சுற்றும் பம்பரமெனத் தோன்றும். ஆனால் பெரியவற்றில் அடியிலிருந்து நுனிவரை சிறு பால் செம்பாக இருக்கும். ஆனால் உண்மையில் அவை பெரும் பெரும் பாற்குடங்கள்தாம், அணுவைத் துளைத்துக் கடலைப் புகுத்தினாற் போல. நிதம்பப் பகுதி பெண் யானையின் நெற்றியைப் போலப் புடைத்திருக்கும். ஒரு துதிக்கைக்குப் பதில் இரண்டு துதிக்கைகளாக வளர்ந்தாற்போன்ற தொடைகளும் கால்களும். போர்ப் பெரும் தெய்வமான துர்க்கையின் சிலைகூட அவன் வடித்த

துண்டு. இப்படிப்பட்ட தெய்வங்களின் சிலை வடித்த நாராயணன் நாய்ச் சாவு சாகாமல் உங்களையும் எங்களையும் போலவா சாவான்?

“என்ன கொண்டு வந்திருக்கிறாய்?” மகன்லால் கீர்த்தியைக் கேட்டான். கீர்த்தி தன் ஆடைத் தலைப்பிலிருந்து மரவேலைப் பாடு ஒன்றை எடுத்தாள். மெதுவாக மகன்லாலுக்கு எதிர்த் தாற்போலிருந்த “ரோல்டாப்” வட்ட மேஜையில் வைத்தாள். ஏனென்றால் அங்கேதான் மேலிருந்து விளக்கின் ஒளிவட்டம் விழுந்துகொண் டிருந்தது. அதைப் பார்ப்பதற்கு முன்பே மகன்லால் கைப்பிடியில்லாத நாற்காலி ஒன்றைக் கீர்த்திக் கெதிரே இழுத்துப் போட்டான். ஆனால் கீர்த்தி நின்றவண்ணமே இருந்தாள்.

“உன் அம்மா எப்படி இருக்கிறாள்?”

கீர்த்தி ஒரு பதிலும் சொல்லவில்லை. அவள் ஒரு முறை திரும்பிப் பாதை சரிந்து செல்லும் இடத்தைப் பார்த்தாள். பிறகு மகன்லாலின் பக்கமாக முகத்தைத் திருப்பியவளின் கண்கள் ஈரமாக இருந்தன.

கீர்த்தியின் தாயார் கன்டோன்மென்ட ஆஸ்பத்திரியில் கிடந்தாள். அங்கேதான் அவள் தந்தை நாராயணன்கூடக் கடைசி மூச்சை முறித்துக்கொண்டான். கிழவிக்குச் சிறு நீரகத் தில் ஏதோ கோளாறு. அவள் வயிற்றைத் துளைத்து ஒரு குழாய் பொருத்தியிருந்தார்கள். அதோடு ஒரு பாட்டிலைக் கட்டி விட்டிருந்தார்கள், மல மூத்திரம் கீழே போகாமல் அதன் வழியே வெளியேறிப் பாட்டிலில் சென்றுவிடவேண்டும் என்பதற்காக. என்ன காரணமோ, பாட்டில் கெட்டிருந்தது. அதை எடுத்து விட்டு வேறு ஒன்று பொருத்த அவளுக்கு இப்போது பணம் வேண்டும். இதை அவள் மகன்லாலுக்குச் சொல்லிவிட்டால், அவன் பேச்சே வேறுவிதமாகிவிடும். ஆகவேதான் கீர்த்தி கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. ஆனால் மரவேலைப்பாட் டைப் பார்த்ததுமே மகன்லால் விறைத்துக்கொண்டான்.

“திரும்பவும் அதேதானா? உன்னிடம் நான் எத்தனை முறை சொல்லியிருக்கிறேன், இப்போதெல்லாம் இது போன்ற பொருள் களுக்குக் கிராக்கி இல்லை என்று! படுத்திருக்கும் இந்த விஷ்ணு, பாம்புப் படுக்கை, கால்பிடிக்கும் லக்ஷ்மி இவற்றைச் சீந்துவார் இல்லை!”

கீர்த்தி விரிந்த விழிகளோடு மகன்லாலை நோக்கினாள்: 'வேறு என்ன செய்வதாம்?' என்ற கேள்வி அவள் பார்வையில் தொக்கி நின்றது.

''இந்தக் காலத்துக்கு ஏற்றபடி செய்யவேண்டும்!''

''இந்தக் காலத்துக்கு ஏற்றது எது?'' ஒரு வழியாகக் கீர்த்தி வாய் திறந்தாள். அவள் குரலை வெகு சிரமப்பட்டுத்தான் கேட்க முடிந்தது. வானம்பாடியின் அலகுபோல வாய் அசைந்தாலும், குரல் எங்கோ போய்விட்டது.

மகன்லால் சற்றுத் தயங்கிப் பேச்சுக்கு ஒரு வழி தேடிக் கொண்டு சொன்னான்: ''வேறு ஒன்றும் முடியாவிட்டால் காந்தி செய்கிறது, நேரு செய்கிறது . . .'' என்று ஆரம்பித்தவன் வழி தவறிவிட்டவன்போலச் சூள் கொட்டி முடித்தான்: ''ஏதாவது நியூட் . . .!''

''நியூடா?''

''ஆமாம், இந்த நாட்களில் ஜனங்கள் அதைத்தான் மிகவும் விரும்புகிறார்கள்!''

கீர்த்தி மௌனமானாள். கன்னிப் பெண் ஆனதால் அவள் நாணிக் கோணி வெட்கியிருக்கலாம். ஆனால் இதெல்லாம் அவளைப் பொறுத்தவரையில் பொழுதுபோகாதவர்களின் பொழுதுபோக்குச் சாதனங்கள். அவள் அந்த நேரம் கவலைப் பட்டதெல்லாம் ஒரே ஒரு விஷயத்துக்குத்தான். ''மகன்லால் இந்த மரவேலைப்பாட்டை வாங்குவானா, மாட்டானா? பணம் தருவானா, மாட்டானா?'' இந்த யோசனையில் தயங்கித் தயங்கி அவள் சொன்னாள்:

''எனக்கு அதெல்லாம் செய்ய வராது!''

''என்ன சொல்கிறாய் நீ? உன் அப்பா எத்தனையோ செய்திருக்கிறாரே!''

''அவையெல்லாம் அம்பிகையின் சிற்பங்கள்!''

''ஆனால் என்ன வித்தியாசம்?'' மகன்லால் கேட்டான்: ''அம்பிகையும் பெண்தானே? நீயும் அதையே செய். ஆனால் கடவுளுக்காக வேண்டி அந்தச் சிற்பத்துக்கு மாலை கீலை போட்டு, அணி கிணி செய்யாதே! இந்த மாதிரி காவியங்களைச் செய்து விட்டுத்தான் உன் அப்பா அப்படிச் செத்து விண்ணுலகு சென்றார் . . .''

கீர்த்தி தன் வாழ்வைப் பின்நோக்கிப் பார்த்தாள். அவளால் நிற்கமுடியவில்லை. ஏதோ ஒரு கிலியில் அவள் உடலே நடுங்கிக்

கொண்டிருந்தது. என்ன நேரலாம் என்பதை அவள் அறிந்திருந் ததுபோல் பிறர் அறிய நியாயம் இல்லை. அவள் நாற்காலியில் உட்காரவில்லை, என்றாலும் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நின்றாள். அப்படி நின்றதால் அவளது உடலின் எழில் கூடிக் கவர்ச்சிப் பகுதி கனஜோராகக் காட்சி அளித்தது. என்ன வடிவம்! மேலுலக நாராயணனையும் விஞ்சிக் கீழுலக நாராயணன் வடித்தது! அற்புதம், அற்புதம்! மகன்லாலின் மூளை வேலை செய்தது. ''இதை விரும்பி ஏற்பதா? வேண்டாம் என்று ஒதுக்குவதா?'' என்ற போராட்டத்தில் மூழ்கினான். பக்கத்தில் நிற்கும் பெண்ணின் உள்ளத்திலும் இப்படி ஓர் உள் போர் நிகழும், தனது நிலையையும் இயலாமையையும் எடை போட்டுப் பார்ப்பான் என்று அவள் நினைத்துக்கூடப் பார்க்க வில்லை. அவளது வாய் உலர்ந்துவிட்டது. நா வறண்டுவிட்டது. அந்த வறட்சியைப் போக்க எதையோ பருகுபவள்போல எச்சிலை விழுங்கிக்கொண்டு அவள் கூறினாள்:

''எனக்கு மாடல் ஏதும் இல்லையே!''

''மாடல்தானே?'' மகன்லால் அவளை நெருங்கி வந்து சொன்னான்: ''எத்தனையோ கிடைக்கும். ஓர் அழகிய இளம் பெண்ணுக்குக் காசைக் காட்டினால் தன்னாலே . . .''

கீர்த்தி ஒன்றும் கூறவில்லை. இருந்தாலும் மகன்லாலுக்குத் தெளிவாகச் செவிகளில் விழுந்தது, ''காசு?'' என்ற கேள்வி. அதற்கு மறுமொழி கூறும் வகையில் அவனே பேசினான்:

''மனிதன் காசைச் செலவு செய்தால்தான் காசு சம்பாதிக்க முடியும்!''

இந்த விஷயம் கீர்த்தியை மேலும் கவலைக்குள்ளாக்கி வாட்டி யது. அவளது ஆத்மா வாழ்க்கையின் இறுக்கத்தில் சிக்கித் துடித்தது. அவள் கண்கள் பனித்தன. ஆண் மகனின் உள்ளத்திலே தந்தை, கணவன் போன்ற உணர்வை உசுப்பி எழுப்பிவிடும் பெண்ணின் நிலை இது. சாராம்சம் என்ன வெனில், மகன்லால் அவளைத் தன் புஜங்களில் ஏந்தி மார்புறத் தழுவி, ''என் அன்பே! கவலைப்படாதே, நான் இருக்கிறேன்!'' என்று ஆறுதல் கூறக் கையை நீட்டினான்.

ஆனால் கீர்த்தி அவனை உதறிவிட்டாள். மகன்லாலுக்குப் பெரும் ஏமாற்றமாகிவிட்டது. ஆயினும் ஒன்றுமே நடக்காதது போலக் காட்டிக்கொண்டான். துடுப்பு அவன் கையில் அல்லவா இருந்தது! வட்ட மேஜையிலிருந்து அவன் அந்த மரவேலைப்

பாட்டை எடுத்துக் கீர்த்தியிடம் நீட்டி, ''எனக்கு இது தேவையில்லை!'' என்றான்.

இதற்குள் கீர்த்தி ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள். அவள் முதலில் கீழே பார்த்தாள். பிறகு சட்டென்று தலையை நிமிர்த்தி, ''அடுத்த தடவை நான் 'நியூட்' கொண்டு வருகிறேன், இப்போது இதை எடுத்துக்கொள்!'' என்றாள்.

''நம்பலாமா?'' மகன்லால் முறுவலுடன் கேட்டான்.

கீர்த்தி தலையாட்டிச் சம்மதம் தெரிவித்தாள். அவள் இன்முகம் காட்டிச் சிரிப்பாள் என்று மகன்லால் எண்ணினான். ஆனால் அவள் முன்னைக் காட்டிலும் கம்பீரமாகிவிட்டாள். அவன் மேஜை டிராயரைத் திறந்து கரகரக்கும் புதுப் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கீர்த்தியிடம் நீட்டினான்: ''இந்தா!''

''பத்து ரூபாய் தானா?'' கீர்த்தி கேட்டாள்.

''எனக்கு இதெல்லாம் தேவையில்லை என்றுதான் நான் முன்பே கூறிவிட்டேனே! இதற்கு அதிகமாகத் தரமுடியாது!''

''இதைக் கொண்டு. . .'' கீர்த்தி வாக்கியத்தை முடிக்கவில்லை. அவளுக்குப் பேசும் சக்தி குன்றிவிட்டது; வாய் கூறவேண்டிய சொற்கள் களைத்துப் படுத்துவிட்டன. இருந்தாலும் அவள் சொல்ல வந்ததன் பொருள் தெளிவாயிருந்தது. மகன்லாலும் புரிந்துகொண்டான்.

'இதைக் கொண்டு பாட்டில் வாங்கமுடியாது. மருந்துச் செலவு ஈடேறாது. உணவு ஒருவேளைகூடக் கிடைக்காது.' இது போன்ற வாக்கியங்களாகத்தான் இருக்கும். இயலாமையும் ஏழைமையும் தொனிக்கப் புறப்படும் சொற்களாகத்தான் இருக்கும். அவன் கீர்த்தியைப் பார்த்தவாறே சொன்னான்: ''என் திருப்திக்கு நீ நடந்துகொண்டால், நான் உனக்கு நல்ல பணம் தருவேன்!''

இப்படிக் கூறும்பொழுது அவன் இரு விரல்களை இணைத்து வட்டம் காட்டினான். கொஞ்சம் கண் அடித்தான். ஆடும் குறத்திக்குப் பக்கவாத்தியம் வாசிப்பவர்கள் பாராட்டுத் தெரிவிக்கக் கண் ஜாடை காட்டுவார்களே, அதுபோல!

கீர்த்தி இரு உதடுகளையும் இறுகக் கடித்துக்கொண்டு வெளியே வந்தாள். அவளுக்கு மூச்சுப் படபடத்தது. திரும்புகாலில் கீர்த்தி எப்போதுமே வந்த வழிக்கு எதிர் வழியாகத்தான் செல்லுவாள். இவ்வளவுக்கும் ஒரு மைல் ஒன்றரை மைல் சுற்றான வழி அது. சிரானாவை எதிர்கொள்ளப் பிடிக்காததே

காரணம். ஆனால் இன்று வந்த வழியாகவே போனாள். ஏதோ பிறருக்குச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டதுபோலவும், அதைக் களைய விரும்பியே அவள் அம் முயற்சியை மேற்கொண்டதுபோலவும் தோன்றியது.

அவள் போகும்போது மைக்கேல் அங்கு, வந்துவிட் டிருந்தான். சிராஜாவுடன் சேர்ந்து ஏதோ தின்றுகொண் டிருந்தான். கீர்த்தி முகத்தை நிமிர்த்தி மூக்குப் புடைத்து நிற்க, அவர்களைத் தாண்டிச் சென்றாள். சிராஜா ஏதோ சொன்னான். அது மகன்லாலின் காதுகளில் விழவில்லை. கீர்த்தியிடம் எதிர்ப்பு உணர்வு தலைதூக்கி நின்றதா? அல்லது யார் உதவி எப்போது தேவைப்படுமோ என்ற எண்ணத்தில், இக்கட்டில் சிக்கிக் கொண்டவர்கள் எதிராளிகளைத் தம்மவர்களாக்கிக்கொண்டு பகைமையையும் நட்பாக மாற்றிக்கொள்ள முயல்வார்களே, அந்த நோக்கம் தலையெடுத்து நின்றதா? இல்லை, ஒருவனால் தனக்கு ஆகவேண்டியது ஒன்றும் இல்லை என்று இருந்தாலும் அவனையும் மடக்கிப் போட்டு, அவன் தன்னைச் சுற்றிச் சுற்றி வருவதில் மகிழ்ச்சி கொள்வது பெண் இயல்பின் விசேஷமோ? அதுவும் இல்லையேல், தன்னைப் பார்த்துச் சீழ்க்கை அடித்தவன் மார்பில் கைவைத்துப் பெருமூச்சுவிட்டு, குறுமூச்சுவிட்டு மறுகட்டும் என்ற பழி நோக்கமோ?

சிராஜா ''அப்ரோடிஸ்யாக்''கோ எதுவோ அருந்திக் கொண் டிருந்தான். அவன்தான் வாங்கியிருந்தானோ அல்லது மைக்கேல்தான் அவனுக்காகக் கொண்டு வந்திருந்தானோ தெரியாது. இருவரும் ஒருவேளை மகன்லாலிடம் போகலாம், அவனுக்கு வழி வகைகள் சொல்லிக் கொடுக்கலாம். ஆனால் மகன்லால் கடை கட்டிவிட்டான். கதவை உட்புறமாகத் தாளிட்டுக்கொண்டு அவன் கீர்த்தியின் மரவேலைப்பாட்டைப் பார்த்துக்கொண் டிருந்தான். அது மிக மிக நேர்த்தியாக அமைந் திருந்தது. ஆதிசேஷனின் அடிப்பகுதி அழகாயிருந்தது. அதில் பாம்புத் தோலுக்கு ஏற்ற வண்ணம் தீட்டிப் புள்ளிவைத்து அசல் பாம்புத் தோலாகவே தோன்றும்படி வேலைப்பாடு செய்யப் பட்டிருந்தது. விஷ்ணுவின் உருவம், பெண் ஒருத்தி ஆண் அழகனிடத்தில் காணவிழையும் அத்தனை அங்கலாவண்யங் களையும் உடையதாயிருந்தது. லக்ஷ்மி களைத்துச் சளைத்து ஆய்ந்து ஓய்ந்துபோய் அமர்ந்திருந்தாள். அவளது உடல் கோடுகள் தெளிவாக இல்லை. ஒருவேளை கீர்த்திக்கு, லக்ஷ்மி

யையோ அவளது வேறு உருவ அமைப்புகளையோ தெரியாது போலும்! அவளைச் சுவைபடச் சித்தரிப்பது எத்தனை சுலபம்! ஒரு பெண் காலைப் பிடிப்பதற்காகக் குனிகிறாள் என்றால், தோளிலிருந்து அவளது கை உடலோடு ஒட்டாமல் விலகியிருக்க வேண்டாமோ? அப்படி விலகியிருந்தால், பெண்ணின் அழகு எவ்வளவு எடுத்துக் காட்டும்? பக்கத்தில் மேற்புறம் உட்கார்ந்திருக்கும் பெண், கீழ்ப்புறம் இருக்கும் பெண்ணைக் கண்டு வெட்கிக் கூனிக் குறுகிப் போகமாட்டாளோ? ஆணின் கண்களுக்கு என்ன என்ன வளைவுகளையும் நெளிவுகளையும் மேடுகளையும் பள்ளங்களையும் காட்டிச் சொக்க வைப்பாள், கால் பிடிக்கும் நங்கை!

கீர்த்தியே ஒரு பெண் ஆதலால் பெணகளைக் காட்டிலும் அவளுக்கு ஆணிடந்தான் அதிக ஆர்வம் இருக்கும் என்று முடிவுக்கு வருவோமானால் அது தவறாக முடியும். ஏனென்றால், பெண் தனது அழகு விஷயத்தில் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை தனக்குத்தானே இன்பம் காணுபவளாகத்தான் இருக்கிறாள். அப்படித் தனக்குத்தானே துய்க்கும் இன்பம் கட்டுமீறிப் பொறுமையை இழக்க நேரிட்டால்தான் ஓர் ஆணின் உதவியை நாடி அதைத் தணித்துக்கொள்ளுகிறாள்.

மகன்லால் கீர்த்தியின் அந்த வேலைப்பாட்டை ஒரு கையில் எடுத்துக்கொண்டான். இன்னொரு கையில் கூரிய கத்தியை எடுத்து ''சித்தம் நம:'' என்ற எழுத்துக்களைப் பொறித்தான். பிறகு பின்கட்டில் உள்ள ஓர் அறைக்குச் சென்றான். அங்கே வெறும் மண்தரை. அதைத் தோண்டி அந்த மரவேலைப் பாட்டைப் புதைத்தான். அதே இடத்திலிருந்து வேறு ஒரு சிலையை எடுத்தான். அதுவும் கீர்த்தி செய்ததுதான். குழியை மண்ணைப் போட்டு நிரப்பிவிட்டுக் கடுக்காய், கத்தைக் காம்பு ஊறிய நீரை அந்த இடத்தில் தெளித்தான். பழைய சிலையில் படிந்திருந்த மண்ணைத் தட்டிவிட்டுப் பார்த்தான். அதில் பல பெரிய விரிசல்கள் ஏற்பட்டிருந்தன. பல நூற்றாண்டுகளுக்கு முந்திய பழைமையும் அதில் ஏறியிருந்தது.

மறுநாள் அதை எடுத்துக்கொண்டு அவன் உல்லாசப் பயணிகளை அணுகினான். அவர்கள் சிலையின் வேலைப்பாட்டைக் கண்டு மிகவும் மகிழ்ந்தனர். ''காளிதாசரின் ரகு வம்சத்தில் இதைப் பற்றிய வர்ணனை வருகிறது. ஒரு கோங்கணத்தில் திரிகூடம் என்ற பெயருள்ள ஒரு நகரத்தை நிர்மாணித்திருந்தான். அங்கே

தான் இந்த உருவச் சிலை கிடைத்தது. சில, மைசூர் மன்னர் 'உடையாரு'விடம் உள்ளன. சில என்னிடம் இருக்கின்றன!'' என்று அளந்தான். இப்படிப் பேச்சில் மயக்கி மகன்லால் அந்தச் சிலையை ஐந்நூற்று ஐம்பது ரூபாய்க்கு விற்றுவிட்டான். அந்தச் சிலையின் விலையாக அவன் கீர்த்திக்குக் கொடுத்தது ஐந்தே ஐந்து ரூபாய்தான்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின் ஒரு வாரத்துக்கெல்லாம் கீர்த்தி ''நியூட்'' எடுத்து வந்தாள். அவள் மிகவும் வெலவெலத்துப் போயிருந்தாள். அவள் அம்மாவுக்கு உடல் நலம் இல்லை என்பது ஒன்று. இரண்டாவது அவளே நோய்வாய்ப்பட்டுவிட்டாள். கிட்டத்தட்ட அவளுக்கு நிமோனியாவே கண்டுவிட்டது. அவள் அடிக்கடி இருமிக்கொண் டிருந்தாள்; தொண்டையைத் தொண்டையைப் பிடித்துக்கொண் டிருந்தாள். அதோடு கழுத்தைச் சுற்றி ஒரு கிழிசல் துண்டால் மூடிக்கொண் டிருந்தாள்.

கீர்த்தி மற்ற நாட்களைப் போலவே சிற்பத்தை மகன்லாலுக்கெதிரே வைத்தாள். இந்தத் தடவை அவள் மரத்தில் வேலை செய்யவில்லை; கல் வேலையாகவே செய்து வந்திருந்தாள். அச்சமும் நம்பிக்கையும் புடைசூழ அவள் மகன்லாலைப் பார்த்தாள். மகன்லால், அது பிடிக்கவில்லை, நன்றாயில்லை என்று சொன்னால் அது பொய்யாகவே முடியும். அதனால் அவன் அதை விரும்பி வரவேற்றதோடு வாயாரப் புகழவும் செய்தான். அவன் அதில் குறை கண்டதெல்லாம் இத்தனை சின்னதாகச் செய்துவிட்டாளே என்பதுதான்! அவள் அதை ஒரு மனித ஆகிருதிக்குச் சமைத்திருந்தாளானால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்? அவளுக்கு மட்டும் அல்ல; மகன்லாலுக்குங்கூடக் கைநிறையப் பலன் கிட்டியிருந்திருக்கும்.

அவன் அந்த யக்ஷக் கன்னியின் சிற்பத்தைக் கையில் எடுத்துக் கவனமாகப் பார்க்கலானான். என்ன இருந்தாலும் கீர்த்தியினால் உண்மையாகவே ''நியூட்'' வடிக்க முடியவில்லை. சிற்பத்தின் உடலில் துணி உண்டு. ஆனால் அது ஈரத்துணி. அந்தத் துணியிலிருந்து நீர்த்துளிகள் சொட்டுவதுபோல் அபார வேலைப்பாடு செய்திருந்தாள். துணி சில இடங்களில் உடலோடு ஒட்டியிருந்தது. சில இடங்களில் விலகியிருந்தது. மேலுக்கு உடலை மறைக்கும் முயற்சியில் அந்தப் பெண்ணின் உடல் இன்னும் பூரித்துக் காட்டியது. அப்போதுதான் குளித்தெழுந்தவள்போல் நிற்கும் அந்தச் சிலையைக் கண்டு மயங்கினான் மகன்லால்.

சிலையிலிருந்து பார்வையை அகற்றிய மகன்லால் கீர்த்தியைப் பார்த்தான். அவனையறியாமலே அவன் வாயிலிருந்து, ''பலே, பலே'' என்ற சொல் வந்துவிட்டது. கீர்த்திக்கு ஒரே வெட்கமாகிவிட்டது. அவள் தன் நாவல்பழ நிறப் புடைவையை முன்னுக்கு இழுத்துப் பின்னுக்கு மூடிக்கொண்டாள். மகன்லாலுக்கு விஷயம் விளங்கிவிட்டது. 'அவள், தானே கண்ணுடிக்கு எதிரில் நிர்வாணமாக நின்று தன்னையே பார்த்துப் பார்த்து அந்தச் சிற்பத்தைப் படைத்திருக்கவேண்டும். எத்தனை முறைகள் துணியை நனைத்து நனைத்துத் தன் உடலில் போட்டுக்கொண்டாளோ? அதனுல்தான் அவளுக்குச் சளி பிடித்திருக்கிறது. இருமலும் வந்திருக்கிறது!'' என்று முடிவு கட்டிவிட்டான். கேவலம் பணத்துக்காக மட்டும் அவள் இத்தனை சிரமத்தை மேற்கொள்ளவில்லை. பெண்ணுக்குத் தன்னைக் காட்டிக்கொள்வதிலும், தன்னைத்தானே சமர்ப்பணம் செய்வதிலும் ஓர் அலாதி ஆர்வம் உண்டு. அதுதான் அவளை இப்படியெல்லாம் செய்ய வைத்திருக்கிறது என்பதை மகன்லால் புரிந்துகொண்டுவிட்டான். ஆனுல் வேண்டுமென்றே புரியாதவன்போல நடித்துக் கேட்டான்: ''அம்மா எப்படி இருக்கிருள்?''

கீர்த்திக்கு ஒரேயடியாகக் கோபம் வந்துவிட்டது. அந்தக் கோபத்தில் பிடித்துக்கொண்ட இருமல் அவளை உலுக்கி எடுத்துவிட்டது. இருமிய இருமலில் அவளுக்கு உயிர் போய் உயிர் வந்தது. இருமலை அடக்கிக்கொள்ள அவளுக்கு வெகுநேரம் பிடித்தது. இதைக் கண்ட மகன்லால் பதறிப் போய்விட்டான். ஏன்டா அந்த வார்த்தையைச் சொன்னேம் என்ற வெட்கம் வேறு. அதற்குப் பின் தலையசைத்து அவன் ஒரு கேள்வி கேட்டானே, அதுவும் தேவையில்லாததுதான்.

''அப்படியானுல் உனக்கு மாடல் கிடைத்துவிட்டதா?''

கீர்த்தி முதலில் பார்வையைக் கீழே தணித்துக்கொண்டாள். பிறகு கடைக்கு வெளியே தெருவைப் பார்க்கலானுள். வானத்தை எட்டித் தொட்டுவிட்டுச் சாலை கீழே விழுந்ததே, அந்த இடத்தில் போய் அவள் பார்வை பதிந்தது. ''அந்தப் பலவீன நிலையில் அவளைப் பிடித்துவிடவேண்டும், அவளுக்கு உரிமை உள்ள அந்தப் பாராட்டைத் தெரிவித்துவிடவேண்டும். அவளும இந்தச் சமயம் ஒருவேளை அதை விரும்பி ஏற்கலாம்'' என்று எண்ணினுன் மகன்லால். ஆனுல் அப்படிச் செய்தால் பொருளின் விலை ஏறிவிடுமே என்ற அச்சம் அவனை ஆட்கொண்டது. அவன்

கீர்த்திக்கு நூறு ரூபாய் கொடுத்துவிடுவது என்று தீர்மானித்தான். பாட்டிலும் மற்றப் பொருள்களும் வாங்க நூறு ரூபாய்க்கு மேல் ஆகாது என்ருலும் நூறு கொடுத்துவிடுவது என்றிருந்தான். உள்ளூறக் கீர்த்தி அதிகமாகக் கேட்டுவிடாமல் இருக்கவேண்டுமே என்றும் பயந்துகொண் டிருந்தான்.

''இதற்கு நான் என்ன விலை தர?'' என்று மெதுவாகக் கேட்டு வைத்தான் அவன்.

கீர்த்தி வேண்டாத பார்வையோடு அவனைப் பார்த்தாள். ''இந்தத் தடவை ஐம்பது ரூபாய் தந்தாகவேண்டும்!'' என்று கண்டித்த குரலில் சொன்ஞள்.

''ஐம்பதா?''

''ஆமாம், ஒரு பைசாக்கூடக் குறையாது!''

மகன்லால் நிம்மதியாக மூச்சுவிட்டு ரோல் டாப்பைத் தூக்கிஞன். நாற்பது ரூபாயை எடுத்துக் கீர்த்திக்கெதிரே வைத்தான்.

''நீ என்ன சொன்ஞலும் இப்போது என்னிடம் நாற்பது ரூபாய்தான் இருக்கிறது! பத்து ரூபாயைப் பின்ஞல் வாங்கிக் கொள்!'' என்ருன்.

கீர்த்தி ரூபாயைக் கையில் எடுத்துக்கொண்டு ''சரி'' என்ருள்.

அவள் புறப்படவே மகன்லால், ''ஒரு விஷயம் கேட்டு விட்டுப் போ!'' என்று அவளைத் தடுத்து நிறுத்திஞன்.

கீர்த்தி நடந்தவள் நின்ருள், ''என்னைப் பிடித்துக்கொள்'' என்று கூறும் பாவனையில் அவனைப் பார்த்தாள். அவள் முகத்தில் வருத்தம் விலகுவதற்குப் பதிலாகத் தேங்கியது. ''இந்த ரூபாயிலே உன் காரியங்கள் எல்லாம் ஆகிவிடுமா?'' என்று மகன்லால் அவளைக் கேட்டான்.

கீர்த்தி தலையசைத்தாள், கையை விரித்தாள், ''வேறு வழி என்ன?'' என்று கேட்பதுபோல. பிறகு, ''அம்மாவுக்கு ஆப்பரேஷன் நடக்கணும். அதற்கு நூற்றுக்கணக்கில் ரூபாய் வேண்டும்!'' என்ருள். அதைத் தொடர்ந்து, ''நான் சொல்கிறது என்னவென்ருல் . . .'' என்று ஆரம்பித்தவள் இடையில் நிறுத்தி, ''அம்மா எத்தனைக்கெத்தனை சீக்கிரம் சாகிருளோ, அத்தனைக்கத்தனை நல்லது!'' என்று கூறிவிட்டு, நின்ற இடத்திலேயே நின்றுகொண்டு கால் கட்டைவிரலிஞல் மண்ணைத் தோண்டலாஞள். கடைசியில் அவளே மீண்டும் பேசி முடித்தாள்: ''இப்படிச் சாகாமல் செத்து அல்லலுறுவதைக் காட்டிலும் ஒரேயடியாக ஒழிந்துவிடுவது நல்லதில்லையா?''

மகன்லால் அவளை ஏறிட்டு நோக்கவில்லை. என்றாலும் பதினெட்டு, பத்தொன்பது வயதுக் கன்னிப் பெண்ணாக இருந்தவள் சட்டென்று முப்பத்தைந்து, நாற்பது வயதான இல்லக் கிழத்தியாகிவிட்டதாகத் தோன்றியது. வாழ்க்கைத் தரும் ஒவ்வொரு துன்பத்தின் அடியையும், தானே ஏற்று அதைப் பயனுறச் செய்யும் அநுபவம் பெற்ற பேரிளம் பெண்ணாகக் கீர்த்தி எப்பொழுது ஆனாள் என்று வியந்தான்.

''ஒன்று சொல்கிறேன், கேட்கிறாயா?'' என்று மகன்லால் கீர்த்தியை நெருங்கிக் கேட்டான். ''நீ ஒரு காதல் இணை செய்து தா. நான் ஆப்பரேஷன் செலவு முழுவதையும் ஏற்றுக் கொள்ளுகிறேன்'' என்றான்.

''இணையா?'' கேட்கும்பொழுதே கீர்த்தியின் குரல் நடுங்கியது.

''ஆமாம். அதற்கு ரொம்பக் கிராக்கி. உல்லாசப் பயணிகள் அதற்கு ஒரே பைத்தியம் பிடித்து அலைகிறார்கள்!'' என்றான் மகன்லால்.

''ஆனால் . . . ''

''எனக்குப் புரிகிறது.'' மகன்லால் தலையை ஆட்டிக் கூறினான்: ''உனக்கு அது என்னவென்று தெரியாவிட்டால் ஒரு முறை கஜுராஹோ போய்ப் பார்த்து வா! அதற்காக உனக்கு முன்பணம் வேண்டுமானாலும் நான் தருகிறேன்.''

''நீ . . . '' கீர்த்தி அவன்மீது வெறுப்புப் பார்வையை உமிழ்ந்தாள். பிறகு சிறிது நேரம் கழித்து, ''உன்னிடம் பணமே இல்லை என்று நீ சொல்லிக்கொண்டிருந்தாயே!'' என்றாள்.

மகன்லால் உடனே ஒரு பொய்யைப் படைத்தான்.

''நிசமாக என்னிடம் பணம் இல்லைதான். கடை வாடகைக்காகத் தனியாக எடுத்து வைத்திருந்தேன். அதைத் தருகிறேன்!'' என்று கூறி, அவளுக்குப் பணம் கொடுக்க முயன்றான் அவன். ஆனால், கீர்த்தி தன்மானச் செருக்கில் அவனிடமிருந்து பணத்தை வாங்கிக்கொள்ளாமல் அங்கிருந்து நடந்தாள்.

மகன்லால் திரும்பி வந்து யக்ஷக் கன்னியைப் பார்த்தான். பிறகு ஒரு சிறு சுத்தியலை எடுத்து அதன் மூக்கை மூளியாக்கினான். பிறகு காலை உடைத்தான். அப்புறம் தலைச் சிங்காரத்திலே இலேசாக இரண்டு தட்டுத் த[illegible]டினான், அதிலிருந்து சில சில்லுகள் உதிர்ந்தன. அதன்பின் உள்ளே சென்று அதை ஒரு கயிற்றில் கட்டினான். உப்பு அமிலம் ஒன்றில் முழுக்காட்டினான். புகை மேகங்கள்

கிளம்பிப் பறந்தன. மகன்லால் கயிற்றை இழுத்துச் சிற்பத்தை எடுத்துத் தண்ணீரில் போட்டான். அப்புறம் அதை எடுத்துப் பார்த்தான், யக்ஷக் கன்னியின் அலங்காரம் எல்லாம் மங்கலாகத் தெரிந்தன. சிற்சில இடங்களில் பொறிந்து துளை விழுந்திருந்தது. இனி அது ஆயிரம் ரூபாய்க்கு விலை போகத் தயாராயிருந்தது!

இந்தத் தடவை கீர்த்தி கொண்டு வந்த சிற்பம் காதல் இணை தான். ஆள் உயரத்துக்குச் செய்திருந்தாள். ஒரு சாக்கில் கட்டித் தள்ளு வண்டியில் கொண்டுவந்திருந்தாள். சில கூலிகள் அதைத் தூக்கி மகன்லாலின் கடைக்குள் கொண்டுவந்து வைத்தார்கள்; தங்களுக்குரிய கூலியைப் பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள்.

கீர்த்தியும் தானும் மட்டும் தனியாகிவிடவே, மகன்லால் வேகமாக மூச்சைச் சுவாசித்துக்கொண்டு, கயிறுகளைக் கத்தரித்துக் கட்டைப் பிரிக்கலானான். வெறும் ஆவலுடன் சிற்பத்தை மூடியிருந்த சாக்கை அகற்றினான். சிலை நேராகக் கண்ணெதிரே நின்றது. ''பர்ஃபெக்ட்!'' மகன்லால் அதைப் பார்த்த பார்வையில் தொண்டைத் தண்ணீர் உலர்ந்துவிட்டது. கீர்த்தி தன் எதிரே அந்தச் சிற்பத்தைப் பார்க்கவிடமாட்டாள் என்றே அவன் நினைத்தான். ஆனால், அவள் அருகிலேயே நின்றுகொண்டிருந்தாள். அவள் எதிரே எவ்விதமான உணர்வையும் காட்டாமல், சிற்பத்தில் இருந்த பெண் முழுமை பெற்று நின்றாள். ஆனால், ஆணோ தன்னை மறந்த நிலையில் அவளது தோள்களைப் பற்றிக் கொண்டிருந்தான். மகன்லால் மகிழ்ந்து போய் அதைப் பார்த்தான்; பார்த்துக்கொண்டே இருக்க நினைத்தான்.

''எத்தனை ரூபாய் வேண்டும், ஆப்பரேஷனுக்கு?''

''ஆப்பரேஷனுக்கு இல்லை. எனக்கு!''

''உனக்கா? . . . அம்மா . . . ''

''செத்துவிட்டாள் ஒரு வாரத்துக்கு முந்தி!''

மகன்லால் முகத்தில் சோக உணர்வையும், துயர பாவத்தையும் தேக்கி அநுதாபம் தெரிவிக்க முயன்றான். ஆனால், கீர்த்தி அதையெல்லாம் விரும்புவதாகத் தெரியவில்லை. அவள் உதடுகளை இறுகக் கடித்துக்கொண்டிருந்தாள். உணர்ச்சிகளை அடக்கி, அலட்சிய பாவத்துடன், ''இதற்கு விலையாக ஆயிரம் ரூபாய் வேண்டும்!'' என்றாள்.

மகன்லால் பிரமித்துவிட்டான். அவனுக்கு நாக் குழறியது: ''இதற்கு ஆயிரம் ரூபாய் யாராவது கொடுப்பானா?'' என்றான்.

''கொடுப்பான்!'' கீர்த்தி கூறினாள்: ''நான் பேசி வைத்து விட்டு வந்திருக்கிறேன். ஆயிரத்தைக் காட்டிலும் அதிகமாகவே கூடக் கிடைக்கலாம். ஆனால், உனக்குத் தருவதாக நான் வாக்கு அளித்திருந்ததால் வந்தேன்.''

''நான் இதற்கு ஐந்நூறுதான் தர முடியும்.''

''உன் பணத்தை நீயே வைத்துக்கொள்!'' கீர்த்தியின் கண்கள் வாசற்புறம் கூலிகளைத் தேடச் சென்றுவிட்டன. மகன்லால் அவளைத் தடுத்து, ''நூறு இருநூறு கூட வாங்கிக்கொள்!'' என்றான்.

''ஆயிரத்துக்குக் குறையாது!''

மகன்லால் வியப்புடன் கீர்த்தியைப் பார்த்தான். இன்று அவள் பார்வையே வேறு விதமாக இருந்தது. அவள் கஜுராஹோ போயிருந்திருப்பாளோ? டூரிஸ்ட்களைப் பார்த்திருப்பாளோ? எத்தனை ரூபாய் செலவானாலும் கலைஞர்களைச் சந்தைக்குப் போக வொட்டாமல் பிரித்தே வைக்கவேண்டும். அதுதான் வியாபாரம்! சரி, இருக்கட்டும். அவன் மேஜையின் வட்ட மூடியைத் திறந்தான். எண்ணூறு ரூபாயை எண்ணிக் கீர்த்தியின் எதிரில் வைத்தான். கீர்த்தி சட்டுப்புட்டென்று அதை எண்ணிப் பார்த்துவிட்டு அவன் முகத்திலேயே விட்டெறிந்தாள்.

''ஆயிரத்துக்குக் குறைந்து வாங்கமாட்டேன் என்று நான் சொன்னேனா, இல்லையா?''

''சரி, தொள்ளாயிரமாக வைத்துக்கொள்! இந்தா!''

முடியாது.

''தொள்ளாயிரத்து ஐம்பது . . . தொள்ளாயிரத்து எழுபத்தைந்து.'' கீர்த்தியின் பார்வையில் அலட்சிய பாவம் தொனிப்பதைக் கண்டு அவன் நூறு நூறு ரூபாய் நோட்டாகப் பத்தை எண்ணிக் கீர்த்தியின் கையில் வைத்தான். வெறி மயக்கத்தில் அந்தக் காதல் இணையின் பக்கம் பாய்ந்தான். கீர்த்தி நின்று கொண்டிருந்தாள். தன் கலை வண்ணத்தைப்பற்றிய புகழுரையைக் கேட்பதற்காக நிற்பவள்போலிருந்தது. மகன்லால் சிற்பத்தில் உள்ள பெண்ணைப் பார்த்தான். அவள் அவனுக்குக் கீர்த்தியாகக் காட்சி அளித்தாள். அவள் கண்களில் இந்தக் கண்ணீர் ஏன்? இன்ப உணர்வின் மேலீட்டாலா, இல்லை, ஏதாவது பலாத்காரத்தாலா? அது துன்பமும் இன்பமும் காட்டும் கலவை உறவா? கஷ்டமும் இஷ்டமும் காட்டும் இன்ப நிலையா? இது தானோ முழுமைப் படைப்பு? பிறகு அவன் ஆணின் பக்கம்

பார்வையைத் திருப்பினன். மேலாகப் பார்த்தால் அவன் நயம் மிக்கவனுகத் தோன்றினன். ஆனல், கவனித்துப் பார்த்தால் ஓர் அசிங்கமாக, ஆபாசமாகத் தோன்றினன். கீர்த்தி ஏன் ஆணை மட்டும் கடுமையும் கொடுமையுமாகச் சித்தரிப்பதில் இப்படி அழுத்தம் காட்டவேண்டும்? இதுவும் ஆண் பெண் இணைதான். ஆனல், பிரகிருதியும் புருஷனும் காட்டும் இன்பத்தின் எல்லையைத் தொடும் இணையற்ற இணையாக இல்லையே! ஏன்? அதனல் என்ன? நிறையப் பணம் கிடைக்கும், பரவாயில்லை!

மகன்லால் மேலே தொங்கிக்கொண் டிருந்த விளக்கைக் கீழே இழுத்து ஆணின் உருவத்தை உற்றுப் பார்த்தான். ''இவன்... இவனை நான் எங்கேயோ பார்த்திருக்கிறேனே!'' என்று தன்னையும் மீறிக் கூவிவிட்டான்.

கீர்த்தி ஒன்றும் மறுமொழி கூறவில்லை.

''நீ...'' மகன்லால் எதையோ தெரிந்துகொண்டுவிட்டவன் போல, ''நீ சிராஜாவுடன் வெளியே போயிருந்தாயா?'' என்று கேட்டான்.

கீர்த்தி விடுவிடு என்று அருகில் சென்று மகன்லாலின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை வைத்தாள். அப்படியே ரூபாய் நோட்டுக்களை எடுத்துக்கொண்டு கடையைவிட்டு வெளியே விரைந்தாள்.

தங்கள் துயரை எனக்குத் தாருங்கள்!

திருமணத்தன்று இரவு மதன் நினைத்தது நடக்கவில்லை. சக்லி அண்ணி இனிக்க இனிக்கப் பேசி மதனை நடு அறைக்குள் தள்ளி விட்டாள். இந்து எதிரே கம்பளிப் போர்வையால் உடல் முழு வதையும் இழுத்து மூடிக்கொண்டு, இருளின் ஓர் அங்கமாகவே ஆகிக் கிடந்தாள். வெளியே சக்லி அண்ணி, தரியாபாத் அத்தை, மற்றும் பல பெண்மணிகளின் சிரிப்பு இரவின் மோன நீரில் கற் கண்டென மெதுவாகக் கரைந்துகொண் டிருந்தது. இத்தனை பெரியவனுகியும் மதனுக்கு எதுவுமே தெரியவில்லை என்றே பெண்கள் அனைவரும் எண்ணினர். ஏனெனில் நள்ளிரவில் அவனை உறக்கத்திலிருந்து எழுப்பியபொழுது, ''எங்கெங்கோ என்னைக் கொண்டுபோகிறீர்களே!'' என்று அவன் முணுமுணுத்தான்.

இந்தப் பெண்மணிகளின் அந்த நாட்கள் ஓடிவிட்டன. முதல் இரவைப்பற்றி இவர்களது குறும்புக்காரக் கணவன்மார்கள் சொன்னதும் சொல்ல வைத்ததும் . . . அவற்றின் எதிரொலிகூட இவர்களது செவிகளில் எஞ்சி நிற்கவில்லை. அவர்கள் ஆடியோடித் தீர்ந்துவிட்டார்கள். இப்பொழுது தங்களது இன்னொரு சகோ தரிக்கு இன்பம் சேர்ப்பதில் முனைந்திருந்தார்கள்.

மடந்தைகள் ஆணை ஒரு மேகத்துண்டு என்றே எண்ணினுர்கள். மழைக்கு மேகத்துண்டின் முகத்தைத்தான் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது! மழை பெய்தால் சரி, பெய்யாவிட் டால் வேண்டுதல் வேண்டிக்கொள்ள வேண்டியிருக்கிறது; பூசை கள் பல போட்டு ஆடிப் பாடி மகிழ்விக்க வேண்டியிருக்கிறது. ஏன், மந்திரம் மாயங்கூடப் போட வேண்டியிருக்கிறது. இத் தனைக்கும் மதன், கால்காஜீயின் புதுக் குடியிருப்பில், வீட்டுக்கு எதிரே திறந்த வெளியில் படுத்து இந்த வேளை எப்போது வரும் என்று எதிர்நோக்கித் தனியே கிடந்தான். போதாக் குறைக்கு அவன் கட்டிலுக்கு அருகிலேயே கட்டிக் கிடந்த அடுத்த வீட்டு ஸிப்தேயின் எருமை அடிக்கடி காலைக்குக் கத்தி மதனை மோந்து மோந்து பார்த்தது. அவன் கையை ஓங்கி ஓங்கித்

தன் அருகில் வரவிடாமல் விரட்டிய வண்ணம் படுத்திருந்தான். இந்த நிலையில் அவனுக்கு உறக்கம் கொள்ளுமா?

கடல் அலைகளுக்கும் காரிகைகளின் இரத்தத்துக்கும் பொங்கிப் பெருகி மகிழ இன்ப வழிகாட்டும் சந்திரன் ஒரு ஜன்னல் வழியே நுழைந்து, கதவுக்கு மறுபுறத்தில் நிற்கும் மதன் தனது அடுத்த அடியை எங்கு வைக்கிறான் என்பதைக் காண ஆவலுடன் காத்துக்கொண் டிருந்தான். மதனுக்குத் தன்னுள்ளே ஒரு மேகக் கர்ஜனை கேட்டாற்போலிருந்தது. மதனின் உள்ளுணர்வு, காதைப் பொருத்திக் கேட்டால், இடையறாது ஒலி எழுப்பும் மின்சாரக் கம்பமாக அவனை நிறுத்தி வைத்தது. சிறிது நேரமே அவன் அப்படி நின்றிருப்பான். அப்புறம் முன்னே அடி எடுத்து வைத்து, கட்டிலை இழுத்து நிலவொளியில் போட்டான், மணப் பெண்ணின் முகத்தைக் காணும் ஆவலுடன். அதற்கு மேல் செய்வதறியாது சிறிது திகைத்து நின்றான். திகைத்து நின்ற அதே வேளையில் எண்ணம் ஓடியது: ''இந்து என் மனைவி. அந்நியப் பெண் இல்லை. பிற மாதரைத் தொடக்கூடாது என்று பிள்ளைப்பிராயத்தில்படித்தபாடம் இவள் விஷயத்தில் சொல்லத் தக்கது அல்ல.'' போர்வையினுள் முடங்கிக் கிடந்த மணமகளைப் பார்த்த மாத்திரத்திலே, அவள் முகம் எங்கு இருக்கும் என்பதை ஊகித்துக் கொண்டான். கையை நீட்டி அவன் அந்த மூட்டையைத் தொட்ட இடம் இந்துவின் முகந்தான். அவள் தன்னை அத்தனை சுலபமாகப் பார்க்கவிடமாட்டாள் என்றே அவன் எண்ணினான். ஆனால் இந்து அப்படியெல்லாம் செய்யவில்லை.

பலஆண்டுகளாக அவளும்இதேவேளையைஎதிர்நோக்கித் தவம் கிடந்திருக்க வேண்டும். அவளையும் ஒரு கற்பனை எருமை மோந்து மோந்துப் பார்த்துத் தூக்கம் வராமல் செய்திருக்க வேண்டும் என்றே தோன்றியது. ஓடி ஒளிந்த தூக்கமும் வேண்டுமென்றே கண்களை மூடிக்கொண் டிருந்ததால் ஏற்பட்ட வலியும், இருட்டா யிருந்தாலும் அவள் கண்களைத் திறந்து கொட்டக் கொட்ட விழிக்க வைத்தது. மோவாய்க்கட்டை வரை போகும்பொழுது பொதுவாக முகம் நீட்டுப் போக்கானதாக ஆகிவிடும். ஆனால் இங்கோ எல்லாம் வட்டமாக இருந்தது. நிலவொளியில் கன்னத் துக்கும் உதடுகளுக்கும் இடையில் ஒரு நிழல் குகைபோல உரு வானதனால் ஒருவேளை அப்படித் தோன்றுமோ? செழுமையும் பசுமையும் கொண்ட இரண்டு குன்றுகளுக்கிடையே தோன்றும் எழிற்காட்சியைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்தினாற்போல்

இருந்தது. நெற்றி சிறிது குறுகல். ஆனால் அதன்மேல் குப்பென்று கருத்து வளர்ந்திருந்த சுருட்டை மயிர் . . .

இதே நேரத்தில் இந்து தன் முகத்தை விடுவித்துக்கொண்டாள். பார்க்க அநுமதி கொடுப்பவளாகத் தோன்றினாலும், வெகுநேரம் கொடுப்பவளாகத் தோன்றவில்லை. கடைசியில் வெட்கத்துக்கும் ஓர் எல்லை உண்டு அல்லவா? மதன் சற்று முரடான தன் கையினால், ''ஆகாகா'' என்ற வண்ணம் மணமகளின் முகத்தை மீண்டும் உயர்த்தினான். பிறகு குடிகாரனைப் போன்ற போதைக் குரலில், ''இந்து!'' என்று மிழற்றினான்.

இந்து சிறிது அஞ்சிவிட்டாள். வாழ்க்கையில் ஓர் அந்நியன் அவள் பெயரை இப்படி உணர்வுச் சுழிப்போடு அழைத்தது இது தான் முதல் தடவை. அந்நியனாயினும் அவன் தெய்வீக உரிமையோடு இரவின் இருளில் சிறுகச் சிறுகத் தனியாக ஆதரவின்றி அநாதைபோல விடப்பட்ட அவளுக்கு ஆதரவு தரும் நாதனாக ஆகிக்கொண் டிருந்தான். இந்து முதல் முறையாக அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு அதே நேரத்தில் நாணத்துடன் கண்களை மூடிக்கொண்டாள். ''உம்'' என்ற மறுமொழியோடு நிறுத்திக் கொண்டாள். அவளுக்கே தன் குரல் அதல பாதாளத்திலிருந்து வருவதாகத் தோன்றியது.

வெகு நேரம் வரை இத்தகையதொரு நாடகமே நடந்து கொண்டிருந்தது. பிறகு மெதுவாகப் பேச்சுத் தொடங்கியது. தொடங்கியது தொடங்கியதுதான். அப்புறம் அந்தப் பேச்சு நிற்கிற வழியாயில்லை. இந்துவின் அப்பா, அம்மா, உடன் பிறந்தவர்கள், மதனுடைய தம்பி—தங்கைகள், தந்தை, அவர் பார்க்கும் ரெயில்வே மெயில் சர்வீஸ் உத்தியோகம், அவருடைய குணம், போக்கு, துணிமணியில் உள்ள ஆர்வம், உணவுப் பழக்கம் என்று எல்லாவற்றுக்கும் கணக்கு வழக்கு எடுக்கப்பட்டது. இடையிடையே மதன் பேச்சைத் தவிர்த்து வேறு ஏதோ செய்ய விழைந்தான். ஆனால் இந்து அதைச் சாமர்த்தியமாகத் தள்ளிப் போட்டாள். வேறு வழியின்றி நிர்ப்பந்தமாக மதன் தன் தாயாரைப்பற்றிய பேச்சை எடுத்தான். அவனுக்கு ஏழு வயதாக இருக்கும்போது எலும்புருக்கி நோயில் அவள் செத்துப் போய் விட்டாள். ''பாவம், அவள் உயிருடன் இருந்த வரையில் . . .'' மதன் நினைவுகூர்ந்தான்: ''அப்பா மருந்துப் பாட்டிலும் கையுமாகத்தான் இருந்தார். நாங்கள் ஆஸ்பத்திரிப் படிக்கட்டுகளிலும் சின்னவன் பாஷி வீட்டு எறும்பு வளைகளிலுமே தூங்கி

னேம். கடைசியில் ஒரு நாள், இருபத்தெட்டாந்தேதி மார்ச் மாலே . . .''

மதன் மௌனமானுன். சில சமயங்களில், அவன் விசித்து விசித்து அழுததஞல் அவன் உடம்பு நடுங்கி ஆடத் தொடங்கியது. இந்து நடுங்கிப் போய் மதனின் தலையைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டாள். அந்த அழுகை இந்துவை நெருக்கி மதனேடு நீக்கமற நெருக்கமுறச் செய்துவிட்டது. மதன் இந்த நெருக்கத்தைப் பயன்படுத்தி இந்துவைப்பற்றி இன்னும் என்ன வெல்லாமோ தெரிந்துகொள்ள முயன்ருன். ஆனுல் இந்து அவன் கைகளேப் பிடித்துக்கொண்டு, ''நான் படிப்பு வாசனே யற்றவள்தான். ஆயினும் அப்பா அம்மாவைப் பார்த்திருக்கிறேன். அண்ணன்—அண்ணிகளேப் பார்த்திருக்கிறேன். இன்னும் எத்தனேயோ பேர்களேப் பார்த்திருக்கிறேன். அதஞல் நான் ஓரளவு அறிவும் பெற்றிருக்கிறேன். இனி நான் உங்களுக்கே சொந்தம். எனக்குப் பதிலாக, உங்களிடம் நான் ஒன்றே ஒன்று தான் விரும்புகிறேன்!'' என்ருள்.

அழும்போதும் அதற்குப் பின்னரும் ஒரு போதை ஏறினுற் போலிருந்தது. மதன் பொறுமையிழந்து இரக்க உணர்வு மேலிட, உணர்ச்சிக் கலவையாகக் குழைந்தான். ''என்ன வேண்டும், சொல்! நீ விரும்புவதைத் தருகிறேன்!'' என்ருன்.

''நிச்சயமாக?'' இந்து கேட்டாள்.

மதன் அவசரக் குரல் காட்டி, ''ஆமாம், ஆமாம்! நிச்சயமாக!'' என்ருன்.

ஆனுல் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே மதனின் மனத்தில் ஒரு குழப்பம். 'ஏற்கெனவே, நமது தொழில் மந்தமாகிவிட்டது. இந்து நமது சக்திக்கு அப்பாற்பட்ட ஏதாவது பொருளேக் கேட்டால் என்ன செய்வது?' என்று பயந்தான். ஆனுல் இந்து அவனது விரிந்த முரட்டுக் கைகளேத் தனது மெதுவான கரங்களில் ஏந்தி, அவற்றில் தன் கன்னங்களேப் பதித்துக் கூறினுள்:

''தாங்கள், தங்கள் துயரத்தை எனக்குத் தந்து விடுங்கள்!''

மதன் பெரும் வியப்பில் ஆழ்ந்தான். அதே நேரத்தில் ஒரு பெருஞ்சுமை தன்மீதிருந்து இறங்குவதாகவும் உணர்ந்தான். அப்புறம் நிலவொளியில் ஒருமுறை இந்துவின் முகத்தைப் பார்க்க முயன்ருன். அவன் கண்ட முகபாவத்திலிருந்து அவனுல் எதையும் அறிந்துகொள்ள முடியவில்லே. இது அம்மாவோ அல்லது வேறு யாராவது தோழியோ சொல்லிக் கொடுத்த சொல்லா

யிருக்கும். அதை அப்படியே இந்து கிளிப்பிள்ளையாகச் சொல்லி விட்டாள் என்று எண்ணினான். அப்பொழுது கொதிக்கும் கண்ணீர்த் துளி ஒன்று அவன் புறங்கையில் விழுந்தது. அவன் இந்துவை இழுத்துத் தன்னோடு அணைத்துக்கொண்டு, ''தந்தேன்!'' என்றான். இவையெல்லாம் சேர்ந்து மதனின் தயக்கத்தை நீக்கி வரம்பு மீறச் செய்துவிட்டன.

விருந்தினர்கள் ஒவ்வொருவராக எல்லாரும் விடை பெற்றனர். சக்லி அண்ணி தன் இரு குழந்தைகளையும் விரல்களைப் பற்றி அழைத்துக்கொண்டு, படிகளின் ஏற்ற இறக்கத்தில் வயிற்றில் வளரும் மூன்றாவதையும் தாங்கியவாறு புறப்பட்டுப் போனாள். தரியாபாத் அத்தை, தனது கல் அட்டிகை காணாமற் போய்விட்டதாகக் கூக்குரலிட்டு ஊரைக் கூட்டி அந்தச் சோகத்தில் மயக்கம் போட்டே விழுந்துவிட்டாள். அது குளியலறையில் பத்திரமாக இருந்து கிடைத்தபின், வரதட்சணையில் வந்தவற்றிலிருந்து, தன் பங்காக மூன்று துணிகளை எடுத்துக்கொண்டு போய்ச் சேர்ந்தாள். அப்புறம் சிற்றப்பா போனார். ஜே.பி. ஆன சமாசாரம் தந்தி மூலம் கிடைக்கவே, அந்த மகிழ்ச்சி மயக்கத்தில், மதனுக்குப் பதிலாக அவன் மனைவியின் முகத்தை முத்தமிட முனைந்துவிட்டார்!

வீட்டில் வயசான தந்தையும், அவனுக்கு வயதில் சிறிய தம்பி தங்கைகளுமே எஞ்சியிருந்தனர். சிறிய தங்கை துலாரி எந்த நேரமும் அண்ணியின் அருகிலேயே, அவள் சேலைத் தலைப்பைப் பிடித்த வண்ணம் நிற்கலானாள். தெருப் பெண்களில் யார் தன் வீட்டு மருமகளைப் பார்க்கலாம், யார் பார்க்கக்கூடாது, பார்த்தால் எத்தனை நேரம் பார்க்கலாம் என்பன போன்ற அதிகாரங்கள் அவள் கையில்தான் இருந்தன. கடைசியில் ஒருவாறாக இந்தக் களேபரம் எல்லாம் முடிந்தன. இந்து நாளடைவில் பழைய நாட்டுப் பெண்ணாகிவிட்டாள். ஆனால் காஸ்காஜியில் இந்தப் புதுக் குடியிருப்பில் உள்ள மக்கள் இன்னும் வரும் போதும் போகும்போதும் மதனின் வீட்டு வாசலில் நிற்பார்கள்; ஏதாவது சாக்கில் வீட்டுக்குள்ளேயே கூட வருவார்கள். இந்து அவர்களைக் கண்டதும் சரேலென முகத்திரையை இழுத்து மூடிக் கொள்ளுவாள். அந்தச் சிறு இடைவெளியில் அவர்களுக்குத் தெரிந்தவையெல்லாம் முகமூடியின்றியோ மறைப்பின்றியோ காணவே முடியாது.

மதன் மட்டரகக் கோந்து வியாபாரம் செய்து வந்தான். நிறையக் கோந்து கிடைக்கும் இரண்டு மூன்று காடுகளைத் தீ தன் உணவாக்கிக் கொண்டுவிட்டது. சீர், தேவதாரு போன்ற மரங்கள் அந்தக் காட்டுத் தீயில் எரிந்து கருகிவிட்டன. மைசூர், அஸ்ஸாம் மாநிலங்களிலிருந்து வரும் கோந்து விலை அதிகமாக இருந்தது. அத்தனை அதிக விலை கொடுத்து வாங்க மக்கள் தயாராயில்லை. அதனால் வியாபாரம் படுத்துவிட்டது. வருவாய் குறைந்துவிடவே, மதன் கடையையும் கடையை ஒட்டினாற் போலிருந்த காரியாலயத்தையும் சீக்கிரம் மூடிவிட்டு வீட்டுக்கு ந்து விடுவான். வீட்டுக்கு வந்ததும் முதல் வேலையாகச் சாப் பாட்டுக் கடையை எல்லாரும் முடித்துக்கொள்ளவேண்டும், அவரவர்கள் படுக்கையை விரித்துப் படுத்துவிட வேண்டும் என்று ஒரே குறியாக முனைவான். அதனால் தந்தை, தம்பி, தங்கை முதலியவர்களுடைய உணவுத் தட்டுகளை எடுத்துப் போடு வதையும், உணவு அருந்தி முடிந்தபின் அவர்களது எச்சில் தட்டு களை எடுத்துச் சென்று குழாயடியில் போடுவதையும் தன் பணி யாகக் கொள்ளுவான். ''அண்ணி, அண்ணனின் காதில் ஏதோ ஓதியிருக்கிறாள். அதனால்தான் இன்று அவன் வீட்டு வேலையில் இவ்வளவு நாட்டம் காட்டுகிறான்'' என்று எல்லாருமே எண்ணி னார்கள். அவன் தந்தையும் இந்தக் கருத்துக்கு உடந்தைதானோ என்னவோ? மதன்தான் வீட்டுக்குப் பெரிய பிள்ளை. குந்தன் அவனுக்குச் சின்னவன். பாஷி எல்லாருக்கும் சின்னவள். எல்லாருடனும் அண்ணியும் சேர்ந்து சாப்பிட வேண்டும் என்று குந்தன் பிடிவாதம் பிடிப்பான். தந்தை தளீராம், ''நீ சாப்பிடு'' என்று அதட்டுவார். ''அவர்களும் சாப்பிடட்டுமே'' என்பான் அவன். சமையலறையில் அண்ணியை அங்கும் இங்கும் தேடித் திரிவான்.

உணவை முடித்துக்கொண்டு, உள்ளே கழுவிவிட்டு இந்து பாத் திரம் பண்டங்களைத் தேய்க்கப் போவாள். தளீராம் அவளைத் தடுத்து, ''இருக்கட்டும், அம்மா! காலையில் தேய்த்துக்கொள்ள லாம்!'' என்பார். ''இல்லை, அப்பா! இதோ ஒரு நொடியில் தேய்த்து முடித்துவிடுகிறேன்!'' என்பாள் மருமகப் பெண். அப் பொழுது தளீராம் நடுங்கும் குரலில், ''மதனின் அம்மா இருந் தால், உன்னை இதெல்லாம் செய்யவிடுவாளா, அம்மா?'' என் பார். இந்து அப்படியே தன் கைவேலையைப் போட்டுவிட்டு எழுந்துவிடுவாள்.

சிறியவன் பாஷிக்கு அண்ணியிடம் ஒரே வெட்கம். மருமகளின் மடியில் சீக்கிரமே ஒரு குழந்தை விளையாடவேண்டும் என்பதற்காகச் சக்லி அண்ணியும் தரியாபாத் அத்தையும் ஒரு நடைமுறைச் சடங்கில் பாஷியை இந்துவின் மடியில் போட்டார்கள். அதுமுதல் இந்து பாஷியைத் தன் மைத்துனன் என்பதைக் காட்டிலும், குழந்தையாகவே பாவிக்கலானாள். அவள் அன்போடு பாஷியைத் தன் ''உக்கலே''யில் எடுத்துக்கொள்ளப் போனால், அவன் திமிறிக்கொண்டு அஞ்சி ஓடுவான். ஒரு முழம் தள்ளி நின்று சிரிப்பான், அருகிலும் வரமாட்டான்; தூரவும் போகமாட்டான். இதில் விந்தையானதொரு தற்செயல் என்னவென்றால், பெரும்பாலும் தந்தை தளீராம் அங்கே எங்கேயாவது இருப்பார். ''போடா, போ! அண்ணி அன்பாக அழைக்கிறாள். இப்பொழுதே பெரிய ஆண் பிள்ளையாகி விட்டாயோ நீ?'' என்று கடிவார். ஆனால் துலாரி, அண்ணியை விட்டு அங்கு இங்கு எங்குமே நகரமாட்டாள். ''நான் அண்ணி கிட்டத்தான் தூங்குவேன்'' என்று பிடிவாதம் பிடிப்பாள். அவளது இந்தப் பிடிவாதம் அப்பாவுக்குள் ஒடுங்கிக் கிடந்த ''ஜனார்த்தன'' உணர்வைத் தட்டி எழுப்பிவிட்டது.

ஒரு நாள் இந்தப் பிடிவாதத்துக்காக அவர் துலாரியை ஓங்கி அடித்துவிட்டார். அவள் மண்ணும் கல்லுமாக இருந்த சாக்கடையில் போய் விழுந்தாள். இந்து பாய்ந்து விரைந்து அவளைப் பிடித்தாள். தலையை மறைத்திருந்த புடைவைத் தலைப்பு பறந்து விட்டது. கூந்தலில் சூடியிருந்த பூ, திருகுப்பூ, நெற்றிக் குங்குமம், காதுத்தோடுகள் எல்லாமே பளிச்சிட்டன.

''அப்பா!'' மூச்சை இழுத்துக் கூறினாள் இந்து. சேர்ந்தாற்போல் துலாரியைப் பிடிக்கும் முயற்சியிலும், புடைவைத் தலைப்பைச் சரி செய்துகொள்ளும் முயற்சியிலும் இந்துவுக்கு வேர்த்து விறு விறுத்துவிட்டது. அந்தத் தாயில்லாக் குழந்தையை அப்படியே அலக்காகத் தூக்கி இதயத்தோடு அணைத்துக்கொண்டு ஒரு படுக்கையில் கிடத்தித் தூங்கச் செய்தாள். கால்மாட்டிலும் தலைமாட்டிலும் தலையணைகளைப் பரப்பினாள். கால்மாடு எது, தலைமாடு எது, கைப்பிடிச் சட்டம் எது என்று தெரியாமல் செய்து விட்டாள். எங்கும் காயம் கீயம் படவில்லை. புடைக்கவோ, பள்ளம் விழவோகூட இல்லை. இருந்தாலும் துலாரியின் தலையை அவள் தன் விரல்களால் அழுத்தப் பிடித்துவிட்ட முறை, மோதி விட்டதனால் வீங்கிப் புடைத்துவிட்ட தலையை அமுக்கி விடுவது

போலிருந்தது. துலாரிக்கு அது வேதனையாகவும் இருந்தது; வேடிக்கையாகவும் இருந்தது. களுக்கென்று சிரித்தாள். கன்னங்களில் பெரிய பெரிய அழகான குழிகள் விழுந்தன. குழிந்த கன்னங்களைக் கண்டவள் மகிழ்ச்சியில் மாய்ந்தே போனாள். ''உன் மாமியார் சொக்கிச் சாக! எப்படிக் குழி விழு கிறது கன்னங்களிலே!'' என்றாள்.

குழந்தை குழந்தையாகவே பதில் சொன்னாள்:

''உன் கன்னங்களிலும் குழி விழுகிறதே, அண்ணி!''

''ஆமாம், குழந்தை!'' என்று கூறி இந்து ஒரு பெருமூச்சு விட்டாள்.

மதனுக்கோ ஏதோ கோபம். அவன் அருகில் நின்று இதை யெல்லாம் கேட்டுக்கொண் டிருந்தான். தன் ஆத்திரத்தைக் காட்டிக்கொள்ள இத்தருணத்தைப் பயன்படுத்திக்கொண் டான். ''என்னைக் கேட்டால் ஒருவிதத்தில் இது நல்லது என் பேன்'' என்றான்.

''எது நல்லது? ஏன் நல்லது?'' என்று கேட்டாள் இந்து.

''எதுவா? உன் தலை! தலை இருந்தால்தானே தலைவலி? சுவர் இருந்தால்தானே சித்திரம்? மூங்கில் இருந்தால்தானே புல்லாங் குழல்? மாமியாரே இல்லாவிட்டால் சண்டைக்கு ஏது வழி?''

இந்துவுக்குக் கனத்த கோபம் வந்துவிட்டது. ''நீங்கள் போங் கள், போய்த் தூங்குங்கள்! பெரிதாகப் பேசவந்துவிட்டீர்களே! மனிதன் உயிரோடு இருந்தால், இப்படிச் சண்டை கிண்டை வருவது சகஜந்தான்! இப்படி மயான அமைதிக்குச் சண்டை எவ்வளவோ தேவலை! போங்கள், உங்களுக்குச் சமையலறையில் என்ன வேலை?'' என்று கடிந்து விரட்டினாள்.

மதன் புழுங்கிப் போய் நின்றான். பாபூ தளீராம் அதட்டின அதட்டலில் மற்றக் குழந்தைகள் எல்லாம், தங்கள் தங்கள் படுக்கையில் போய்ப் படுத்துவிட்டன, அஞ்சல் நிலையத்தில் தபால்கள் பிரித்துப் போடுகிறாற்போல! ஆனால் மதன் அங்கேயே நின்றுகொண் டிருந்தான். அவன் தேவைகள் அவனைப் பிடிவாதக் காரனாகவும் வெட்கத்தை விட்டவனாகவும் செய்திருந்தன. ஆனால் இந்து கடிந்து அதட்டவே, அவனுக்கு என்னவோபோல் ஆகிவிட்டது. முகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டு உள்ளே சென்றுவிட்டான்.

வெகு நேரம் மதன் படுக்கையில் கிடை கொள்ளாமல் புழுங்கிக் கொண்டிருந்தான். ஆனால், அப்பா வீட்டுக்குள் இருந்து

விட்டதனால் இந்துவைக் குரல் கொடுத்து அழைக்க அவனுக்குத் துணிவு உண்டாகவில்லை. ''கண்ணே, கண்மணியே! கண் வளராய் நீயே!'' என்று இந்து, துலாரியைத் தூங்கச் செய்வதற்காகத் தாலாட்டுப் பாடத் தொடங்கியதும் அவன் பொறுமை எல்லை மீறிவிட்டது.

அந்தத் தாலாட்டு துலாரியைத் தூங்கச் செய்ய முயன்றது. ஆனால், அதே கையோடு மதனின் தூக்கத்தை விரட்டும் பணியையும் மேற்கொண்டிருந்தது. அலுத்துக்கொண்டு அவன் போர்வையை இழுத்துக் காலிலிருந்து தலைவரை போர்த்திக் கொண்டான். வெள்ளைப் போர்வையைத் தலைவரையில் இழுத்துப் போர்த்திக்கொண்டவனுக்கு, சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் ஒரு சவத்தின் நினைவு வந்தது.

மதனுக்குத் தான் இறந்துவிட்டதுபோலவும் அவன் மனைவி இந்து அவன் அருகில் அமர்ந்து தலையில் அடித்துக்கொண்டு அழுது புலம்புவது போலவும் தோன்றியது. அவனுக்கு ஏற்பட்ட பிரமையில், அவன் மனைவி சுவரில் தன் கரங்களை மோதி மோதி வளையல்களை உடைத்துப் போடுவதுபோலவும், உருண்டு புரண்டு அழுது புலம்பியவாறே சமையலறைக்குச் சென்று அடுப்புச் சாம்பலை அள்ளித் தலையில் போட்டுக்கொள்வதுபோலவும், பிறகு வெளியே வந்து கைகளைத் தூக்கித் தூக்கி ஊர், தெருப் பெண்களிடம் தன் வாழ்வே கொள்ளை போய்விட்டதாகக் குமுறுவது போலவும் காணலானான். அவளுக்குத் துணி போனது தெரியவில்லை; ரவிக்கை விலகியது தெரியவில்லை; நெற்றிப் பொட்டு அழிந்தது தெரியவில்லை. தலையில் சூடியிருந்த பில்லை, திருகுப்பூ எல்லாம் கலைந்து உணர்ச்சியற்ற சடமாக, சிந்திக்கும் ஆற்றலை இழந்தவளாக அவனுக்குத் தோன்றினாள்.

மதனின் விழிகளிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. அதே நேரத்தில் இந்து சமையல் அறையில் சிரித்து மகிழ்ந்துகொண்டிருந்தாள். கணநேரத்தில் அவள் பூவிழந்து பொட்டிழந்ததும, கணநேரத்தில் மீண்டும் அவற்றைத் திரும்பப் பெற்றுச் சுமங்கலியாகிவிட்டதும் அவளுக்குத் தெரியாது. மதன் யதார்த்த உலகுக்கு மீண்டதும் கண்களைத் துடைத்துக்கொண்டு தனது இந்த அசட்டுப் பிரமையை எண்ணிச் சிரிக்கலானான். அதே நேரத்தில் அங்கு இந்துவும் சிரித்துக்கொண்டிருந்தாள். ஆனால், ஓசைப்படாமல் உதடுகள் நெளிய மோனச் சிரிப்புத்தான் சிரித்துக்கொண்டிருந்தாள்.

வீட்டில் பெரியவர்கள் இருக்கும்போது ஒரு பெண் நாணத்தை விட்டு உரக்கச் சிரிக்கலாமா? அதுவும் மதனுக்கு அப்பா வீட்டில் இருக்கும்பொழுது . . . ? வாய்விட்டு உரக்கச் சிரிப்பது நாண மற்ற ஒரு நிர்வாணத் தன்மை, மௌனப் புன்னகையோ ஒரு மேல் தாவணி, அடக்கமாக உதடுகளில் நெளியும் சிரிப்பு அழகுக்கு அழகு சேர்க்கும் ஒரு முகத்திரை. இப்படியெல்லாம் எடை போட்டு வைத்திருந்தது அவள் மனம்.

அப்புறம் மதன், இந்துவின் ஒரு கற்பனை உருவத்தைத் தன் கண்முன் கொண்டு வந்து நிறுத்திக்கொண்டு, அதோடு எத்தனையோ பேச்சுக்களைப் பேசித் தீர்த்தான். காதல் கனிமொழி களை அள்ளி வீசினான். இதுவரை செய்யாத காதலை எல்லாம் செய்து காட்டினான். அவன் மீண்டும் தன் உலகத்துக்குத் திரும்பியபொழுது பக்கத்துப் படுக்கை காலியாகவே இருந்தது. அவன் மிகவும் மெதுவாக "இந்து" என்று அழைத்தான். அப்புறம் மௌனமாகிவிட்டான். அதற்குமேல் உரக்கக் குரல் கொடுக்க அவனுக்கு நா எழவில்லை. எண்ண அலைகள் அவனைத் தாலாட்டித் தட்டிக் கொடுத்து, "கண்ணே கண்மணியே! கண்வளராய் நீயே!" என்று பாடி உறங்க வைத்துவிட்டன. அந்த உறக்க மயக்கத் தில், திருமணத்தன்று இரவு அடுத்த வீட்டு ஸிப்தேயின் எருமை முகத்துக்கருகில் வந்து மூச்சுவிட்டு உசுப்பிவிட்டதே, அது போன்றதொரு நிலையை அடைந்து உடனே எழுந்து உட்கார்ந் தான். மிரள மிரளச் சமையலறைப் பக்கம் பார்த்தான். பிறகு தலையைச் சொறிந்துகொண்டு இரண்டு மூன்று கொட்டாவிகள் விட்டுவிட்டுப் படுக்கையில் படுத்தான்; படுத்தவன் தூங்கியும் போய்விட்டான்.

மதன் தூங்கும்பொழுது செவிகளுக்கு ஒரு செய்தி சொல்லி விட்டுத்தான் தூங்கினான்போலும்! இந்துவின் வளையல்கள் படுக்கைச் சுருக்கத்தைச் சரி செய்யும்போது கணகணத்தன. அந்த ஒலியில் அவன் பரபரத்து எழுந்தான். ஒரேயடியாகக் கண் விழித்திருந்தபொழுது காதல் உணர்வு ஓர் உச்சநிலைக்கு ஏறியிருந்தது. அந்த அன்புக்கு ஈடு கொடுக்காமல் மனிதன் படுத்து உறங்கிவிடுவானாகில், உறக்கத்திலிருந்து திடுதிப்பென்று விழிக்க நேர்ந்தால், காதல் குமைந்து கருகிப்போகிறது. மதனின் உடல் முழுவதும் உள் தீயினால் பொசுங்கிக்கொண் டிருந் தது. காதல் உணர்வே கோபத்துக்குக் காரணமாகவும் ஆகி விட்டது. அவன் வெறிபிடித்தவன்போலக் கேட்டான்:

''அப்போ? நீ வந்துவிட்டாயா?''

''ஆமாம்!''

''துலாரி தூங்கித் தொலைந்தாளா? இல்லை, ஒரேயடியாகச் செத்துத் . . .''

இந்து குனிந்தவள் சட்டென்று நிமிர்ந்து நின்றாள். ''ஐயோ, ராமா!'' அவள் மூக்கில் விரலை வைத்துக் கேட்டாள்: ''நீங்கள் என்ன பேச்சுப் பேசுகிறீர்கள்? அவள் அப்படித் தொலைவானேன்? அப்பா அம்மாவுக்கு ஒரே பெண்!''

''ஆமாம்!'' மதன் தொடர்ந்தான்: ''அண்ணிக்கு ஒரே நாத்தி!'' அப்புறம் உத்தரவிடும் குரலில், ''அதிக இடம் கொடுத்து அந்தப் பிசாசைத் தலையில் வைத்துக்கொள்ளாதே. ஆமாம், சொல்லிவிட்டேன்!'' என்றான்.

''ஏன்? இதில் என்ன பாவம்?''

''அவளே ஒரு பாவம்தான்!'' மதன் கொதிப்புடன் கூறினான்: ''உன்னை ஒரு நிமிஷங்கூட விடமாட்டாள். அட்டையாக ஒட்டிக் கொண்டு கழுத்தை அறுப்பாள்! தொலையக்கூடாதோ?''

''ஐயையோ!'' இந்து மதனின் கட்டிலில் உட்கார்ந்து கொண்டே, ''உடன்பிறந்த சகோதரிகளையும் பெண்களையும் இப்படிக் கரித்துக் கொட்டக்கூடாது. அப்பாவிப் பெண்கள் பிறந்த வீட்டுக்கு வந்து இரண்டொரு நாள் தங்கும் விருந்தாளி களே! இன்று இல்லாவிட்டால் நாளை, நாளை இல்லாவிட்டால் மறுநாள் விடைபெற்றுப் போய்விடுகிறவர்கள்!'' என்றாள். அதற்கு மேலும் இந்து ஏதோ சொல்ல நினைத்தாள். ஆனால் என்ன நினைத்தாளோ, மௌனமாகிவிட்டாள். அவள் கண்களுக்கெதிரே அவளுடைய தாயார், தந்தை, உடன்பிறந்த சகோதர சகோதரிகள், சிற்றப்பா, பெரியப்பா எல்லாரும் ஒருமுறை சுழன்றனர். ஒரு நாள் அவளும் அவர்களுக்கெல்லாம் செல்லக் குழந்தையாக இருந்திருக்கிறாள். திருமண வயது வந்ததும் எல்லாருக்குமே வேற்றவள் ஆகிவிட்டாள்.

இராப்பகல் அவளை வீட்டைவிட்டு வெளியேற்றுவதற்கான முயற்சியே நடக்கலாயிற்று. வீட்டுக்குள் ஒரு பெரிய பாம்புப் புற்று இருப்பதுபோலவும், அதில் ஒரு பெண் நாகம் வாழ்வதுபோல வும், அதைப் பிடித்து அப்புறப்படுத்தாவிட்டால், வீட்டில் உள்ள வர்கள் நிம்மதியாகத் தூங்க முடியாததுபோலவும் செயற் பட்டனர். அதற்காக எங்கிருந்தெல்லாமோ பாம்பாட்டிகள் தருவிக்கப்பட்டனர். மந்திரம் போட்டு, மகுடி ஊதி, மூக்குக்

குத்தி, நச்சுப் பல்லைப் பிடுங்கி, இங்கிருந்து எங்கேயாவது கொண்டு போனால் சரி என்று நினைத்தனர். மருத்துவம், மாயம், மந்திரம், தந்திரம் எதையுமே விட்டு வைக்கவில்லை. கடைசியில் வடமேற்கிலிருந்து செம்மண் புழுதியைக் கிளப்பிக்கொண்டு ஒரு புயல் வந்தது. அது விலகியதும் பார்த்தால் ஒரு லாரி நின்றுகொண்டிருந்தது. அதில் அடைக்கரைப் புடைவை உடுத்தி ஒரு மணப் பெண் அமர்ந்தாள். வீட்டு வாசலில் ஒரே சுரம் எழுப்பி வாசித்துக்கொண்டிருந்த "ஷஹனாயீ" (நாகஸ்வரம்) வாத்தியம் மகுடியின் ஒலியை நினைவுபடுத்தியது. அப்புறம்? விசுக்கென்று ஓர் அதிர்ச்சிக் காட்டி லாரி புறப்பட்டுவிட்டது!

மதன் கோபவெறியில் மீண்டும் தொடர்ந்தான்:

''நீங்கள், பெண்களே பலே தந்திரசாலிகள்! இப்பொழுது தான் நேற்று இந்த வீட்டுக்கு வந்திருக்கிறாய் நீ! இங்கு இருக்கிறவர்கள் எல்லாரும் உனக்கு என்னைக் காட்டிலும் அதிக அன்பர்களாகிவிட்டார்கள்!''

''ஆமாம்!'' இந்துவின் குரலில் உறுதி தொனித்தது.

''இதெல்லாம் பொய்! அப்படி இருக்கவே முடியாது!''

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால் நான் . . .''

''எல்லாம் வெளி வேஷம்! ஆமாம்.''

இந்துவின் கண்களில் நீர் முட்டிவிட்டது. ''சரி, நான் வேஷந்தான் போடுகிறேன். இதுதானே உங்கள் கருத்து?'' என்று கேட்டவாறே எழுந்து தன் படுக்கைக்குப் போய்விட்டாள். தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விசித்து விசித்து அழலானாள். மதன் வெலவெலத்துப் போய் அவளைச் சமாதானப் படுத்துவதற்குத் தயாரானான். அதற்குள்ளாகவே இந்து எழுந்து மதனின் அருகில் வந்தாள். கெட்டியாக அவன் கையைப் பற்றிக் கொண்டு, ''எந்த நேரமும் இப்படி எரிந்து விழுகிறீர்களே, உங்களுக்கு என்ன வந்துவிட்டது?'' என்றாள்.

கணவனைப் போன்று அதிகாரம் செலுத்த மதனுக்கு நல்லதொரு சாக்குக் கிடைத்துவிட்டது. ''போ, போ! போய்ப் படு! உன்னால் ஆகவேண்டியது எனக்கு ஒன்றும் இல்லை'' என்று சாடினான்.

''என்னால் ஆகவேண்டியது உங்களுக்கு ஒன்றும் இல்லை. ஆனால், எனக்கு எத்தனையோ ஆகவேண்டியிருக்கிறது! வாழ் நாள் முழுவதும் இருக்கிறது!'' என்று கூறிய இந்து அவனைச் சமாதானப்படுத்த முயன்றாள். மதன் அவ்வளவுக்கு அவ்வளவு

முரண்டு பிடித்தான். அவன் முரண்டு பிடிக்க, முரண்டு பிடிக்க அவள் குழைந்தாள். அவனை அணைத்து அரவணைத்துக் கோபத்தைத் தணிக்க முயன்றாள். நீரோட்டத்தின் போக்கில் போகாமல் அருவியின் வேகத்தை எதிர்த்துச் செல்லும் மீனைப்போல் அவள் இயங்கினாள். கையைப் பிடித்துக் காலைப் பிடித்து அழுது சிரித்து முரண்டுபிடித்து என்னவெல்லாமோ சாகசங்கள் செய்தாள்.

''அப்புறம் என்னைச் சண்டைக்காரி, சாகசக்காரி என்பீர்கள்!'' என்றாள்.

''கேட்பானேன்? பெண்கள் எல்லாருமே சாகசக்காரிகள் தான்!''

''இருங்கள், சொல்லுகிறேன், உங்களை . . .'' இந்து பேசிய முறையில் ஏதாவது வசவு, திட்டு உபயோகிப்பாளோ என்று தோன்றியது. அவள் அதைத் தொடர்ந்து ஏதோ முணு முணுக்கவும் செய்தாள். மதன் திரும்பி, ''என்ன சொன்னாய்?'' என்று கோபத்துடன் கேட்டான். இந்து இந்தத் தடவை காது கேட்கும்படியாகவே முணுமுணுத்ததைச் சொல்லிவிட்டாள். மதன் கலகலவென்று நகைத்தான். அடுத்த கணம் இந்து மதனின் பிடியில் இருந்தாள். அவன்மீது துவண்டு சாய்ந்த வண்ணம், ''உங்களைப் போன்ற ஆண் பிள்ளைகளுக்கு என்ன தெரியும்? யாரிடம் நாங்கள் அன்பு செலுத்துகிறோமோ, அவர்களுக்குச் சொந்தமான சிறியவர்களையும் பெரியவர்களையும் நேசிக்கிறோம். அப்பா, அண்ணன், தம்பி, நங்கை . . .'' என்றவள் தொலைவில் எதையோ பார்ப்பவள்போலத் தொடர்ந்தாள்: ''நான் குழந்தை துலாரிக்குத் திருமணம் செய்து வைப்பேன்!''

''போச்சுடான்னா! முளைச்சு மூன்று இலை விடவில்லை. அதற்குள் இந்த மரப்பாச்சிக்குக் கல்யாணம் செய்துவைக்கப் போய் விட்டாயே!'' என்றான் மதன்.

''உங்களுக்கு என்னவோ மரப்பாச்சியாகத் தோன்றுகிறது!'' என்ற இந்து தனது இரு கைகளையும் மதனின் கண்களில் வைத்து, ''கொஞ்சம் கண்களை மூடிக்கொள்ளுங்கள். அப்புறம் திறந்து பாருங்கள்!'' என்றாள். மதன் நிஜமாகவே கண்களை மூடிக்கொண்டான். சிறிது நேரம் அவன் கண்களைத் திறக்காமல் போகவே, ''கண்களைத் திறவுங்கள்! உடனே நீங்கள் கண்களைத் திறக்காவிட்டால், நான் படுகிழவியாகிவிடுவேன்!'' என்றாள். மதன் கண்களைத் திறந்தான். ஒரு கணத்துக்கு எதிரே உட்கார்ந்

திருப்பது இந்துவல்ல, வேறு யாரோ என்று அவனுக்குத் தோன்றியது. அவன் மதி மயங்கிப் போனுன்.

''நான் இப்பொழுதே அவளுக்குச் சில பண்டம் பாத்திரங்கள் எடுத்துத் தனியாக வைத்துவிட்டேன்!'' என்ருள் இந்து. மதன் பதில் ஒன்றும் சொல்லாமற் போகவே, அவனைப் பிடித்து உலுக்கி, ''நீங்கள் எதற்காகக் கவலைப்படுகிறீர்கள்? உங்கள் வாக்குறுதி உங்களுக்கு நினைவில்லையா? நீங்கள் உங்கள் துயரத்தையெல்லாம் எனக்குத் தந்துவிட்டீர்கள்!'' என்ருள்.

''ஏ . . . என்ன?'' துணுக்குற்றுக் கேட்டான் மதன். அவனுக்குக் கவலையெல்லாம் தீர்ந்தாற்போலிருந்தது. இந்துவை இறுகத் தழுவிக்கொண்டபொழுது ஓர் உடல் ஆகிவிட்டதாக உணர்ந்தான். அதோடு ஆத்மாவும் இரண்டறக் கலந்து ஒன்ருகி விட்டதுபோலத் தோன்றியது.

மதனைப் பொறுத்தவரையில் இந்து அவனது ஆத்மாவாகவே ஆகிவிட்டாள். ஓருயிர் ஆகிவிட்டாலும் இந்துவுக்கென்று ஓர் உடல் இருந்தது. ஆனுல், அது எப்பொழுதும் ஏனே மதனின் பார்வைக்குப் படாமலே இருந்தது. ஒரு திரை இருந்தது. கனவு என்னும் இழைகளால் நெய்து, பெருமூச்சு என்னும் புகையில் சாயம் தோய்த்து, பெருஞ்சிரிப்பு என்னும் ஜரிகையினுல் வேலைப்பாடு செய்து, கண்களைப் பறிக்கும் பொன்னென ஒளி வீசியவாறு, எந்த நேரமும் இந்துவை மூடி மறைத்திருந்தது அந்தத் திரை. மதனைப் போன்றவர்களின் பார்வையும், கரங்களும் துச்சாதனனுகிப் பலராலும் பத்தினியென்று போற்றப் படும் திரெளபதியின் ஆடையைப் பல பல ஆண்டுகளாகக் களைந்து வந்திருக்கின்றன. ஆனுல், எப்பொழுதும் திரெளபதியை நிர்வாணமாக்க முடியாமல், வானமென்னும் விந்தைத் துணி கஜம் கஜமாக நீண்டு மானத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறது. துச்சாதனர்கள்தாம் களைத்துச் சோர்ந்து இங்கும் அங்கும் விழுந்து கிடந்தார்கள். திரெளபதியோ துளியும் மேனி மெருகு அழியாமல் இருந்த இடத்திலேயே நின்றிருந்தாள். பெருமைக் கும், தூய்மைக்கும் எடுத்துக்காட்டாக வெள்ளாடை உடுத்தி அவள் தெய்வச் சிலையெனத் தோன்றினுள்.

மதனின் ஒய்ந்து போன துச்சாதனக் கரங்கள் வெட்கத் தினுல் வேர்த்து விறுவிறுத்துவிட்டன. வேர்வைக் காய்வதற் காக அவன் கைகளை உயரத் தூக்கிக் காற்றில் காட்டுவான். பிறகு உள்ளங்கைகளை நன்கு அகல விரித்து, ஒரு முறுக்கேறிய

நிலையில் அகன்று விரிந்த தன் விழிமணிகளுக்கெதிரே கொண்டு செல்வான். விரல் இடுக்கு வழியாகக் கூர்ந்து நோக்குவான். இந்துவின் சலவைக் கல் போன்ற மழுமழுப்பான உடல், அழகும் மென்மையும் துலங்கக் கண்ணெதிரே கிடக்கும். அநுபவித்து இன்பம் துய்க்க அருகில் இருக்கும் அது, காமவெறி என்றால் காத தூரத்தில் ஓடி நிற்கும். எப்போதாவது இந்து தடையுத்தரவு பிறப்பித்தால், இதுபோன்ற வாக்கியங்கள் அங்கு விளையாடும்:

''ஐயையோ! வீட்டில் சிறியவர்கள் பெரியவர்கள் எல்லாரும் இருக்கும்பொழுது . . . என்ன சொல்வார்கள்? அல்லது என்ன நினைப்பார்கள்?'' என்பாள் இந்து.

''ஒன்றும் சொல்லமாட்டார்கள், நினைக்கமாட்டார்கள். சிறியவர்களுக்குப் புரியாது. பெரியவர்கள் புரிந்துகொண்டு விலகிவிடுவார்கள்!'' என்பான் மதன்.

இதற்கிடையில் பாபூ தளீராமுக்கு ஸஹாரன்புருக்கு மாற்றல் ஆகிவிட்டது. அங்கு அவர் ரெயில்வே மெயில் சர்விஸில் ஸெலெக்ஷன் கிரேடு ஹெட் கிளார்க்காகப் பதவியுயர்ந்து சென்றார். அவருக்குக் குடியிருக்கப் பெரிய குவார்ட்டர்ஸ் கிடைத்தது. எட்டுக் குடும்பங்கள் இருக்கலாம் அதில். ஆனால், பாபூ தளீராம் ஒண்டிக்கட்டையாக அதில் காலை நீட்டிப் படுத்திருப்பார். தம் வாழ்நாளில் அவர் இதுவரை குழந்தைகுட்டிகளைப் பிரிந்து இருந்ததே இல்லை. பந்தபாசம் மிகுந்த குடும்பஸ்தர் அவர். கடைசிக் காலத்தில் இப்படித் தன்னந்தனியாக வாழ்வது அவருக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. இங்கிருந்து ஓடிவிட்டால் என்ன என்றுகூட எண்ணுவார். ஆனால், உத்தியோகம் ஒரு கால் கட்டாகி அவரைக் கட்டிப் போட்டுவிட்டது. குழந்தைகள் அனைவரும் தில்லியில் மதனுடனும் இந்துவுடனும் இருந்தனர். அங்கே பள்ளியில் படித்து வந்தனர். வருஷம் முடிவதற்குமுன் அவர்களை அழைத்து வருவது படிப்புக்குக் குந்தமாக முடியும் என்ற எண்ணத்தில் மனத்தை அடக்கிக்கொண்டார். அங்கே போன பின் அவருக்கு அடிக்கடி இதய நோய் வேறு ஏற்பட்டு வந்தது.

கடைசியில் ஒருவாறாகக் கோடை விடுமுறை வந்தது. அவர் அடிக்கடி கடிதம் எழுதவே மதன், இந்துவைக் குந்தன், பாஷி, துலாரி முதலியோர்களுடன் ஸஹாரன்புருக்கு அனுப்பிவைத்தான். தளீராமின் வாழ்க்கையில் கலகலப்பு உண்டாயிற்று. முன்பெல்லாம் அலுவலக வேலை முடிந்தால் அவருக்கு ஒரே ஓய்வுதான். ஆனால் இப்போதோ ஒன்றில்லாவிட்டால், மற்

றென்று, ஏகப்பட்ட வேலை. குழந்தைகள் குழந்தைகளாகவே இருந்தன. களையும் ஆடையைக் களைந்த இடத்திலேயே போட்டு விட்டுப் போய்விடும். பாபூ தளீராம் அவற்றைப் பொறுக்கித் தட்டிக் கொட்டி மடித்து வைப்பார். கணவன் மதனிடமிருந்து விலகி வந்துவிட்ட சோர்வில், மதனுக்கு ரதியான இந்துவும் ஆடைகள் விஷயத்தில் கவனக் குறைவாகவே இருக்கலானுள். அவள் சமையலறையில் வளைய வருவதைக் காணும்பொழுது, பட்டியில் அடைக்கப்பட்ட பசு வெளிப்பக்கம் கழுத்தை நீட்டி நீட்டித் தன் எசமானனைத் தேடுமே, அந்த நினைவு வரும். அடுக்களை வேலைகளை முடித்துக்கொண்டு, அவள் அப்படியே அங்கேயுள்ள டிரங்குப் பெட்டிகளின்மேல் படுத்து உறங்கிவிடுவாள் அல்லது வெளியே தங்க அலரிச் செடிக்கு அருகிலோ அல்லது மாமரத்தடியிலோ படுத்துக் கிடப்பாள். நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் மனங்களைக் கவர்ந்த மாமரம் அது.

ஆவணி புரட்டாசியாகியது. முற்றத்திலிருந்து வெளிப்புற ஜன்னலைத் திறந்து பார்த்தால், கன்னிப் பெண்களும், புதுமணப் பெண்களும் வேகமாக ஊஞ்சலாடியவண்ணம் பாடிக்கொண்டிருப்பார்கள்: ''ஊஞ்சல் போட்டது யாரையா? மாமரத்தில் ஊசலாடுவது ஏனையா?'' பாடலுக்கும் தாளத்துக்கும் ஏற்ப இருவர் ஆடுவார்கள், இருவர் ஆட்டுவார்கள். இருவருக்கு நால்வராகிவிட்டால், ''திக்குத் தெரியாத காட்டிலே'' கண்ணுமூச்சி விளையாடுவார்கள். நடுத்தர வயதுள்ள பெண்களும் கிழவிகளும் ஒருபுறம் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பார்கள். இந்துவுக்குத் தானும் அவர்களுடன் சேர்ந்துகொண்டாற்போலத் தோன்றும். அப்புறம் அவள் முகத்தைத் திருப்பிக்கொண்டு பெருமூச்சும் சிறுமூச்சும் விட்டவாறு தூங்கிவிடுவாள்.

பாபூ தளீராம் அந்தப் பக்கமாகப் போனுல் அவளை எழுப்பமாட்டார். ஆனுல், அவள் மாற்றுடை தரித்துக்கொண்டபின், அநேகமாகக் களைந்த சல்வாரை மாமியாரின் சந்தனப்பெட்டியின்மீது விட்டெறிந்திருப்பாள். அதை மிகவும் ஜாக்கிரதையாக எடுத்து உறி ஆணியில் மாட்டிவிட்டுச் செல்வார். அப்படிச் செய்யும் பொழுது பிறர் பார்வையில் படாமல் தப்ப முயல்வார். ஆனுல் சல்வாரைச் சுருட்டி எடுத்துக்கொண்டு திரும்புபவரின்

பார்வையில் மருமகளின் ரவிக்கை படும். அதை எடுக்க அவருக்குத் தைரியம் ஏற்படாது. சிறு பாம்புக்குட்டி புற்றிலிருந்து வெளியே வந்தால் எப்படிப் பறக்கப் பறக்க ஓடுமோ, அப்படி அந்த அறையிலிருந்து வெளியேறிவிடுவார். அப்புறம் வராந்தாவில் அவர் குரல் கேட்கும்: ''ஓம் நமோ பகவதே வாசுதேவா!''

அக்கம்பக்கத்துப் பெண்மணிகள் பாபூ தளீராமின் மருமகளின் அழகைப்பற்றி வெகுதூரத்துக்கு வெகுதூரம் புகழ்ந்து பாராட்டியிருந்தார்கள். பெண் ஒருத்தி, அவரது மருமகளின் அழகையும் உடல் கட்டையும்பற்றி வருணித்தால், அவருக்கு மகிழ்ச்சி பிடிபடாது. ''எங்கள் குடும்பத்துக்கும் உடல் நலமுள்ள பிறவி வந்ததே, அதற்கு நாங்கள் எவ்வளவோ கொடுத்துவைத்திருக்கவேண்டும், அமீசந்துக்கு அம்மா!'' என்று கூறுவார்.

இதைக் கூறும்போது அவரது விழிகள் வெகு தொலைவுக்கு ஓடும். எலும்புருக்கி நோயும், மருந்துப் பாட்டில்களும், ஆஸ்பத்திரிப் படிகளும், எறும்புப் புற்றுக்களுமே தென்படும். பார்வை அருகில் வந்தால், அவருக்கு நன்கு உருண்டு திரண்டு பருத்த ஆரோக்கியமான பல குழந்தைகள் மடியிலும், தொடையிலும், காலிலும், தோளிலும் ஏறி இறங்கி விளையாடுவதுபோலத் தோன்றும். மேலும் சில பிறக்கப் போவதாகக் கற்பனையில் திளைப்பார். பக்கத்தில் படுத்திருக்கும் மருமகளின் இடுப்பு பூமியோடும், வயிறு கூரையோடும் ஒட்டியுறற்போன்ற தோற்றம் ஏற்படும். அவர்களிலும் அந்தக் குழந்தைகளின் வயதில் வேறுபாடு அதிகம் இராது. எதுவும் பெரியதாகவோ சிறியதாகவோ இராது. எல்லாம் ஒன்றேபோல இரட்டைக் குழந்தைகளாக . . . ஓம் நமோ பகவதே . . .

இந்து, மாமனாரின் அருமந்த மருமகள் என்பதை அக்கம்பக்கத்தவர்கள் அனைவரும் புரிந்துகொண்டார்கள். பால், தயிர், மோர்ச்சட்டிகள் தளீராமின் வீட்டைத் தேடி வரலாயின. ஒரு நாள் சலாம்தீன் கூஜர் துணிந்து ஒரு விண்ணப்பத்தை முன் வைத்தான்: ''அம்மா! என் மகனை ஆர். எம். எஸ்.ஸில் ஒரு கூலியாகவாவது வைத்து விடு. அல்லாஹ் உனக்கு அருள் புரிவான்!'' என்றான். இந்துவின் சமிக்ஞை கிடைத்ததுதான் தாமதம், சலாம்தீனின் மகனுக்கு வேலை கிடைத்துவிட்டது. அதுவும் சார்ட்டர் வேலை! கிடைக்க முடியாத வேலை; அவனுக்கு இருந்தது அதிர்ஷ்டம்! இல்லாவிட்டால் அவருக்கு ஒன்றும் அவ்வளவு செல்வாக்கு இல்லை.

மருமகளின் உணவு விஷயத்திலும் உடல் நல விஷயத்தி லும் பாபூ தளீராம் அதிக அக்கறை காட்டினார். பால் என்றால் இந்துவுக்குப் பிடிக்காது. அவரோ இரவு வேளைகளில் பாலைச் சுண்டக் காய்ச்சிப் பதமான சூட்டில் கிளாஸில் ஊற்றி எடுத்துக்கொண்டு மருமகளுக்குக் குடிக்கக் கொடுப்பதற்காக அவள் கட்டில் வரை வருவார். இந்து சுருட்டி மடக்கிக்கொண்டு எழுந்து அவருக்கு மரியாதை காட்டுவாள்: ''வேண்டாம், அப்பா! எனக்குப் பால் பிடிக்காது!'' என்பாள்.

''பிடிக்காதாவது? பேசாமல் குடிக்கிறாயா? இல்லை, நான் குடித்துவிடட்டுமா?'' என்று அச்சுறுத்துவதுபோல வேடிக்கை யாகக் கேட்பார் அவர்.

''நீங்களே குடித்து விடுங்கள் அப்பா!'' என்று இந்து இதழ் களில் நகையை ஓட விட்டவாறே கூறுவாள். பாபூ தளீராம் ஒரு செயற்கைக் கோபத்தை வருவித்துக்கொண்டு, ''உன் மாமியாருக்கு வந்த நிலை உனக்கும் வரவேணும் என்று நினைக் கிறாயா?'' என்று கடிந்து கொள்ளுவார்.

''ஹூம், ஹூம்!'' இந்து முகத்தைத் தூக்கிக்கொண்டு விடு வாள். ஆமாம், ஏன் கோபித்துக்கொள்ள மாட்டாள் அவள்? சமாதானப்படுத்த ஆள் இல்லாதவர்கள்தான் கோபித்துக் கொள்ள மாட்டார்கள். அவளைச் சமாதானப்படுத்தத்தான் "நான், நீ" என்று எத்தனையோ பேர் இருந்தார்களே! கோபித்துக் கொள்ளுகிறவள் அவள் ஒருத்திதானே? இந்து பால் கோப்பையை அவர் கையிலிருந்து வாங்கிக்கொள்ளவில்லை என்றால், பாபூ தளீராம் அதைக் கட்டிலுக்கு அருகில் தலைமாட்டில் வைத்து மூடிவிட்டு, ''இதோ பார்! பால் இதோ வைத்திருக்கிறது. இஷ்டமிருந்தால் குடி, இல்லாவிட்டால் வேண்டாம்!'' என்று சொல்லியவாறே அங்கிருந்து போய்விடுவார்.

தம் படுக்கைக்குச் சென்று தளீராம் குழந்தை துலாரியுடன் விளையாடத் தொடங்குவார். துலாரிக்குத் தந்தையின் வெற்றுடலில் தன் உடலை உராய்வதும், வயிற்றில் வாயை வைத்து ஊதி ஒலி எழுப்புவதும் ஒரு வேடிக்கை. தளீராமும் துலாரியும் இப்படி விளையாடிச் சிரித்து மகிழ்ந்துகொண் டிருக்கும் போது, துலாரி அண்ணியின் பக்கம் திரும்பி, ''பால் கெட்டு விடும், அப்பா! அண்ணி குடிக்கவே இல்லை!'' என்பாள்.

''குடிப்பாள், அம்மா! குடிப்பாள்!'' இன்னொரு கையால் பாஷியை அருகில் இழுத்து அணைத்துக்கொண்டே, ''பெண்

களுக்கு வீட்டுப் பொருள்கள் வீணுவதைக் காணப் பொறுக்காது!'' என்பார் அவர். இதைச் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே, இன்னொரு புறத்திலிருந்து, ''சூச்சூ! விடியாமூஞ்சி!'' என்று விரட்டும் குரல் கேட்கும். மருமகள் பால் குடிக்க வந்த பூனையை விரட்டிக்கொண்டிருக்கிருள் என்பது விளங்கும். அப்புறம் கடகட வென்ற ஒலி எழும். அதைக் கொண்டு எல்லாரும் அண்ணி பால் அருந்திவிட்டாள் என்பதைப் புரிந்துகொள்ளுவார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் குந்தன் தந்தையிடம் வருவான். ''அப்பா! அண்ணி அழுதுகொண்டிருக்கிருள்!'' என்பான்.

''அட கஷ்டமே!'' என்று கூறித் தந்தை எழுந்து உட்காருவார். இருட்டில் தொலைவில் கிடக்கும் மருமகளின் கட்டிலை நோக்கிப் பார்வையை ஓட்டுவார். கண்களுக்கு எதுவும் தெரியாவிட்டாலும் சிறிது நேரம் உட்கார்ந்திருந்துவிட்டுப் படுத்து விடுவார். குந்தனைத் தட்டிக் கொடுத்து, ''போ! நீ போய்ப் படுத்துத் தூங்கு! அவளும் தூங்கிவிடுவாள் தானுக!'' என்பார்.

தளீராம் அண்ணுந்து படுத்து நட்சத்திரப் பூக்களாகப் பூத்துக் குலுங்கும் ஆண்டவனின் விந்தைமிகு வானமலர்ப் பூங்காவை வியப்புடன் நோக்குவார். அப்புறம் தம் உள்ளத்து உறையும் ஆண்டவனை நோக்கி, ''மலர்ந்து மூடும் இந்த வெள்ளி மலர்களுக்குள் என் மலர் எங்கே இருக்கிறது?'' என்று கேட்பார். அப்புறம் அவருக்கு வானம் முழுவதுமே துயரக் கடலாகத் தோன்றும். காதுகளில் ஹோ என்ற தொடர் ஒலி கேட்டவண்ணம் இருக்கும். அதைச் செவிமடுத்தவாறே, ''இந்த உலகம் தோன்றியது முதல் மனிதன் எத்தனை அழுதிருக்கிருன்?'' என்று கேட்பார்; அப்புறம் அழுது புலம்பியவாறே அவரும் உறங்கிவிடுவார்.

இந்து போன இருபது இருபத்தைந்து நாட்களுக்கெல்லாம் மதன் வெறியாட்டம் ஆடத் தொடங்கிவிட்டான். ''எனக்கு ஹோட்டல் உணவு ஒத்துக்கொள்ளவில்லை. மலச்சிக்கல் ஏற்பட்டு விட்டது. வயிற்று வலி உயிர் போகிறது'' என்றெல்லாம் கடிதங்களுக்கு மேல் கடிதங்கள் எழுதினுன். அதுமட்டுமா? அலுவலகத்தில் பணிபுரிபவர்கள் விடுமுறை வேண்டி டாக்டர் சர்டிபிகேட் அனுப்புவார்களே, அதுபோல அப்பாவின் ஒரு நண்பரைக் கொண்டே கடிதம் எழுதச் செய்தான். அதற்கும்

பலன் ஏற்படாமல் போகவே டபிள் தந்தி அடித்தான்; அதாவது, பதிலுக்கும் பணம் கட்டி.

பதில் தந்திக்குக் கட்டிய பணம் விரயமாயிற்று. விரயமானாலும் இந்துவும் குழந்தைகளும் திரும்பி வந்துவிட்டார்கள். மதன் இரண்டு நாட்கள் இந்துவுடன் முகம் கொடுத்துப் பேசவில்லை. அதற்காக வருந்தித் துயருற்றவள் இந்துதான். ஒரு நாள் மதன் தனியாக மாட்டிக்கொண்டபோது இரு கைகளையும் இறுகப் பற்றிக்கொண்டு, ''இப்படி முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டிருக்கிறீர்களே! என் தவறு என்னவாம்?'' என்று கேட்டாள்.

மதன் தன்னை விடுவித்துக்கொள்ளும் முயற்சியில், ''போ, போ! என் கண்முன் நில்லாதே! தொலை!'' என்று உறுமினான்.

''இதைச் சொல்வதற்குத்தான் இத்தனை தொலைவிலிருந்து வரவழைத்தீர்களா?''

''ஆமாம்!''

''நானாகத் தொலைய முடியாது. என்ன செய்வீர்களாம்?''

''ஜாக்கிரதை! வாய் ஆடாதே. எல்லாம் உன்னாலே வந்த வினை! நீ இங்கே வரவேண்டும் என்று நினைத்திருந்தால், அப்பா தடுத்திருப்பாரா?''

இந்து வேறு வழி தோன்றாமல், ''ஐயோ! குழந்தைகள் மாதிரி பேசுகிறீர்களே, நீங்கள்! நானாகப் போய் அவரிடம் எப்படிச் சொல்ல முடியும்? உண்மையைக் கேட்டால், நீங்கள் என்னை இங்கே தருவித்து அப்பாவுக்குக் கொடுமை புரிந்து விட்டீர்கள் என்றுதான் சொல்லுவேன்!'' என்றாள்.

''என்ன சொல்கிறாய் நீ? விளங்கச் சொல்லேன்!''

''விளக்கம் என்ன? குழந்தை குட்டிகளிடம் அவர் மனத்தைக் கொடுத்திருந்தார்.''

''நான் யாரிடம் கொடுத்திருந்தேனாம்?''

''உங்களுக்கு என்ன, நீங்கள் யாரிடம் வேண்டுமானாலும் கொடுக்கலாம்!'' இப்படிக் குறும்பு தொனிக்கக் கூறிய இந்து பார்வையாலேயே ஒரு சொடுக்குச் சொடுக்கி இழுத்தாள். மதனின் எதிர்ப்பு உணர்ச்சிகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிந்தன. சொல்லப் போனால் அவனும் இப்படி ஒரு நல்ல சாக்குப் போக்கையே தேடித் திரிந்துகொண்டிருந்தான். அவன் இந்துவைப் பற்றி இழுத்து மார்புறத் தழுவிக் கொண்டான்.

''அப்பா உன்னிடம் பிரியமாக நடந்துகொண்டாரா?'' என்று கேட்டான்.

''ஓ!'' என்ற இந்து, ''ஒரு நாள் நான் கண்விழித்துப் பார்க்கிறேன், தலைமாட்டில் நின்று என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்!'' என்றாள்.

''அப்படி இருக்காது!''

''என்மேல் ஆணை!''

''உன்மேல் ஆணையிடாதே. என்மேல் ஆணையிடு!''

''உங்கள்மேல் நான் ஆணையிட முடியாது, யார் என்ன தருவதாயிருந்தாலும் . . . !''

''இருக்கலாம்!'' மதன் சிறிது யோசித்தவாறே, ''புத்தகங்களில் இதைத்தான் செக்ஸ் என்கிறார்கள்!'' என்றான்.

''ஸெக்ஸ்?'' இந்து கேட்டாள்: ''அப்படி என்றால் என்ன?''

''ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உறவு இருக்கிறதே அதுதான்!''

''ஐயோ, ராமா!'' இந்து சட்டென்று பின் நகர்ந்து, ''சுத்த அழுக்கு நீங்கள்! பெற்ற தகப்பனைப்பற்றி இப்படி நினைக்கவே வெட்கமாயில்லை உங்களுக்கு?'' என்று கேட்டாள்.

''அப்பாவுக்கு உன்னைப் பார்க்கும்போது வெட்கமாக இல்லையே!''

''எதற்கு அவர் வெட்கப்படணும்?'' இந்து அவர் கட்சியில் பேசினாள்: ''தம் மருமகளைப் பார்த்து அவர் மனம் மகிழ்ந்திருக்கலாம்!''

''ஆமாம், உன்னைப் போல் ஒரு மருமகள் கிடைத்ததற்கு!''

''உங்கள் மனத்தைப் போன்ற அழுக்கு மனத்தை நான் கண்டதே இல்லை!'' இந்து வெறுப்பை உமிழ்ந்தாள்: ''உங்கள் மனம்போலவே இருக்கிறது, உங்கள் கோந்து வியாபாரமும்! நாற்றம் ஊரைக் கூட்டுகிறது. உங்கள் புத்தகங்களில் எல்லாம் கூட ஒரே அழுக்குத்தான் நிறைந்திருக்கும்போலிருக்கிறது. உங்களுக்கும் உங்கள் புத்தகங்களுக்கும் இது ஒன்றை விட்டால் வேறு எதுவுமே தெரியாதுபோலும்! நான் பெரியவள் ஆனபிறகு என் அப்பா என்னிடம் ரொம்ப அன்பாக இருக்க ஆரம்பித்தார். அதற்கும் நீங்கள் இப்பொழுது ஏதோ பெயர் சொன்னீர்களே, அந்தக் குப்பைதான் காரணம் என்பீர்களோ?''

இப்படிச் சாடியவள் சற்றுத் தணிந்து, ''அப்பாவை இங்கேயே தருவித்து விடுங்கள்! அவருக்கு அங்கே மனமே நிலை

கொள்ளவில்லை, குழந்தைகளையும் குட்டிகளையும் விட்டுவிட்டு! அவருக்கு வருத்தம் என்றால் உங்களுக்கும் வருத்தமாயிராதா?'' என்றாள்.

மதனுக்குத் தன் தந்தையிடம் ரொம்பப் பிரியம். வீட்டுக்குப் பெரிய பிள்ளை ஆனதால், அம்மாவின் மரணம் மதனைத்தான் அதிகம்பாதித்தது. அவனுக்கு நன்றாக நினைவு இருந்தது. தாயார், நோய்வாய்ப்பட்டிருந்தபோது, அவள் இறந்து விடுவாளோ என்ற எண்ணம் எழும்பொழுதெல்லாம், அவன் கண்களை இறுக மூடிக்கொண்டு, ''ஓம் நமோ பகவதே வாசுதேவா, ஓம் நமோ . . .'' என்று ஜபிக்கத் தொடங்கிவிடுவான். இப்போது அவன் தன் தந்தையின் குடை நிழல் தன் தலையிலிருந்து அகன்று செல்வதை விரும்பவில்லை. ''அதுவும், அவன் தொழில் சரியாக வேரூன்றாமல் இருக்கும்போது அவர் போய்விட்டால் என்ன ஆவது?'' என்றும் பயந்தான். அவன் நம்பிக்கை இழந்த குரலில் இந்துவை நோக்கி, ''தற்சமயம் அவர் அங்கேயே இருக்கட்டும். திருமணத்துக்குப்பின் இப்பொழுதுதான் நாம் சுதந்தரமாகச் சந்திக்க முடிந்திருக்கிறது'' என்றான்.

மூன்றாம் நாளோ, நான்காம் நாளோ கண்ணீரில் குளித்தெழுந்த தந்தையின் கடிதம் வந்தது. ''என் அன்புள்ள மதன்'' என்று எழுதியிருந்த இடத்தில் கண்கள் பெருக்கிய உவர் நீரால் ''என் அன்புள்ள'' என்ற சொற்கள் கரைந்திருந்தன. பிறகு எழுதப்பட்டிருந்ததாவது: மருமகள் இங்கிருந்த வரைக்கும் என் பழைய நாட்கள் திரும்பி வந்தாற்போலிருந்தன; உன் அம்மாவின் நினைவு அடிக்கடி வந்தது. கல்யாணமான புதிதில் அவளும் இப்படித்தான் அலட்சியமாக இருப்பாள். அவள் அவிழ்த்துப் போட்ட துணிகள் போட்டது போட்டபடி கிடக்கும். அப்பா தான் எல்லாவற்றையும் எடுத்து ஒழுங்குபடுத்தி வைப்பார் . . . இப்பொழுது எல்லாம் அதே பெட்டியடி வாசம்! அதே பழைய அலுப்புச் சலிப்பு! கடைத் தெருவுக்குப் போகிறேன், வருகிறேன். ஒன்றும் இல்லையென்றாலும் தயிர்வடையோ பாஸந்தியோ வாங்கி வருகிறேன். ஆனால் வீட்டில்தான் இப்பொழுது யாரும் இல்லை. சந்தனப் பெட்டி இருந்த இடம் இப்பொழுது வெறிச்சோடிக் கிடக்கிறது . . . மேலே இரண்டொரு வாக்கியங்கள் அழிந்திருந்தன. கடைசியில் எழுதியிருந்தது: அலுவலகத்திலிருந்து திரும்பி வந்தால், பெரிய பெரிய இருட்டறைகளுக்குள் நுழையும் போது என் மனம் ''பக், பக்'' என்று அடித்துக்கொள்ளு

கிறது . . . அப்புறம்: மருமகளை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். சாதாரண மருத்துவச்சிகளை நம்பி ஒப்படைக்காதே.

இந்து இரு கைகளாலும் கடிதத்தைப் பற்றிக்கொண்டாள். நீள் மூச்சுவிட்டு, விழிகளை விரித்து, வெட்கத்தினால் வேர்த்து விறுவிறுத்துப் போய் நின்றாள். ''தொலைந்தேன் நான்! அப்பாவுக்கு இதெல்லாம் எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டாள்.

மதன் கடிதத்தை மெதுவாக விடுவித்த வண்ணம், ''அப்பா என்ன குழந்தையா? உலகம் பார்த்திருக்கிறார், நம்மைப் பெற்றிருக்கிறார்!'' என்றான்.

''அது சரி, இருந்தாலும் இப்போது நாள் என்ன அப்படிப் பிரமாதமாக ஆகிவிட்டது?'' என்ற இந்து, சட்டென்று தன் வயிற்றில் கூறிய ஒரு பார்வையை ஓட்டினாள். இன்னும் வயிறு தெரியத் தொடங்கவில்லை. இருந்தாலும் அப்பாவோ, வேறு யாரோ நின்று பார்க்கிறார் போன்ற உணர்வில் கூசிக் குறுகி, அவள் புடைவைத் தலைப்பை இழுத்து வயிற்றுப் பகுதியை மூடிக் கொண்டாள். அப்புறம் ஏதோ யோசிக்கலானாள். திடீரென்று அவள் முகத்தில் ஓர் ஒளிக்கீற்று ஓடியது. ''உங்கள் வேட்டகத்திலிருந்து சீராக இனிப்புப் பண்டங்கள் வரும்!'' என்றாள்.

''என் வேட்டகத்திலிருந்தா? ஆமாமாம்!'' என்ற மதனுக்குத் தன் மனத்தில் உள்ளதைச் சொல்ல ஒரு சாக்குக் கிடைத்தது. ''எத்தனை வெட்ககரமான விஷயம். கல்யாணமாகி ஏழெட்டு மாதங்கள்தான் ஆகியிருக்கின்றன. அதற்குள் இது வந்துவிட்டதே!'' என்றவன் இந்துவின் வயிற்றுப் பக்கம் சுட்டிக் காட்டினான்.

''அதுவாக வந்ததா? இல்லை, நீங்கள் கொண்டு வந்ததா?''

''நீ கொண்டு வந்தது! தவறு முழுதும் உன்னுடையதுதான். சில பெண் பிள்ளைகளே இப்படித்தான் . . .!''

''சரி, உங்கள் தவறு இல்லை என்றே வைத்துக்கொள்வோம். இது வந்தது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?''

''கட்டோடு பிடிக்கவில்லை!''

''ஏன்?''

''நாலு நாள் வாழ்வின் இன்பத்தைத் தனிமையில் அநுபவிக்கலாம் இல்லையா?''

''அப்படியென்றால் இது வாழ்வின்பம் இல்லையா?'' இந்து துயரம் தொனிக்கும் குரலில் கேட்டாள்: ''பின்னே ஆண்களும் பெண்களும் எதற்காகக் கல்யாணம் செய்து கொள்ளுகிறார்

களாம்? கடவுள் கேட்காமல் இருக்கிறபோதே கொடுத்து விட்டார் இல்லையா? ஆனால் எவர்களுக்கு இது வரவில்லையோ, அவர்களைக் கேட்டுப் பாருங்கள்! என்ன வேண்டுதல்கள் எல்லாம் செய்கிறார்கள் என்று தெரியும்! சாது—சந்நியாசி, பீர்—பக்கரி இவர்களிடம் எல்லாம் போவார்கள். சமாதிகளுக்கு, கோயில் குளங்களுக்குப் போய் முடி போடுவார்கள், முடி எடுப்பார் கள். வெட்கம் மானத்தை விட்டு ஆறு குளம் கடல்களிலே போய் நீராடுவதோடு, நாணல் புல்லைக் கடித்துக்கொண்டு நிற்பார்கள். மயானத்துக்குப் போய் மந்திரம் தந்திரம் எல்லாம் செய்து பார்ப்பார்கள்.''

''சரி, சரி! ஆரம்பித்துவிட்டாயா உன் இராமாயணத்தை! குழந்தை வரம் கேட்டுத் திரிய அப்படி என்ன வயசு ஆகி விட்டது?'' என்றான் மதன்.

''அப்படிப் பிறந்தால்'' ... இந்து எரிச்சலோடு கையை ஆட்டி, ''அதை நீங்கள் உங்கள் கையாலே தொடவேண்டாம். அது உங்களுடையதாக இல்லாமல் என்னுடையதாக இருந்துவிட்டுப் போகட்டும். உங்களுக்குத் தேவை இல்லை அது. ஆனால் அதன் தாத்தாவுக்கு அது ரொம்பத் தேவை. எனக்குத் தெரியும் இது!'' என்றாள்.

இருந்தாலும் அவள் வருத்தம் அவளுக்கு. வேதனை தாங்காமல் அவள் இரு கைகளாலும் தன் முகத்தை மூடிக்கொண்டாள். வயிற்றில் வளரும் இந்தச் சின்னஞ்சிறு உயிரை வளர்க்கும் விஷய மாக, அந்த உயிருக்குக் காரணமானவன் கொஞ்சமாவது ஆசை, அன்பு, அநுதாபம் என்று ஏதாவது காட்டுவான் என்று அவள் எண்ணினாள். ஆனால் மதனோ பேசாமல் இரும்பு உலக்கையை விழுங்கியவனைப்போல் உட்கார்ந்திருந்தான். அவன் வாயி லிருந்து ஒரு வார்த்தைகூட வெளிவரவில்லை. இந்து முகத்தி லிருந்து மூடியிருந்த கைகளை அகற்றி மதனைப் பார்த்தாள். பிறகு தலைப் பிரசவக்காரி என்ற தோரணையில் பேசினாள்: ''நான் சொல்கிறதெல்லாம் பின்னால் நடக்கவேண்டிய விஷயம். முதலில் நான் பிழைப்பேனா என்று பார்ப்போம். எனக்குப் பிள்ளைப் பிராயத்திலிருந்தே இந்த அச்சம் உண்டு'' என்றாள்.

மதன் பயந்துவிட்டான். இந்த அழகி, கர்ப்பவதி ஆனபின் மேலும் மெருகிட்டு எழில் கூடி நிற்கும் இவள் இறந்து விடுவாளா? அவன் முதுகுப்புறமாக இந்துவைப் பற்றிக்கொண் டான். அப்படியே இழுத்துத் தன் புஜங்களில் சாத்திக்கொண்

டான். "உனக்கு ஒன்றும் நேராது, இந்து. நான் உன்னை மரணத்தின் வாயிலிருந்து மீட்டு வந்துவிடுவேன். இது சாவித்திரியின் முறையில்லை; சத்தியவானின் முறை!'' என்று கூறினான்.

மதனோடு ஒட்டிக்கொண்ட இந்து, அவளுக்கென்று ஒரு துயரம் உண்டா என்பதையே மறந்துவிட்டாள்.

அதற்குப் பின் தந்தை கடிதம் எதுவும் எழுதவில்லை. ஆனால் ஸஹாரன்புரிலிருந்து ஒரு சார்ட்டர் வந்தான். மீண்டும் அவருக்கு இதய நோய் வந்து கஷ்டப்படுவதாக மட்டும் கூறினான். ஒரு முறை வந்த இதய வலியிலே அவர் எமன் ஊரை எட்டியே பார்த்துவிட்டாராம். இதைக் கேட்டு மதன் நடுநடுங்கி விட்டான். இந்துவோ பிழியப் பிழிய அழலானாள். சார்ட்டர் போன பிறகு எப்போதும் போல மதன் கண்களை மூடிக் கொண்டான். மனத்தில் "ஓம் நமோ பகவதே . . .'' என்று ஜபிக்கலானான். மறுநாளே மதன் தந்தைக்குக் கடிதம் எழுதினான், உடனே புறப்பட்டு வந்துவிடுங்கள் என்று! குழந்தைகள் அவர் நினைவாகவே இருப்பதாகவும், மருமகளும் வாய்க்கு வாய் அவர் பேச்சையே பேசுவதாகவுங்கூட அந்தக் கடிதத்தில் கண்டிருந்தான். ஆனாலும், உத்தியோகம் ஆயிற்றே! கடிதம் கண்டவுடன் புறப்பட்டு வருவது அவர் கைக்குள்ளா இருந்தது? தளீராம் எழுதியிருந்த பதில் கடிதத்தில், விடுமுறைக்கு முயன்றுகொண் டிருப்பதாகவும், கிடைத்தவுடன் வருவதாகவும் எழுதியிருந்தார். அவர் விஷயத்தில், தான் நடந்துகொண்ட முறை சரியல்ல என்ற குற்ற உணர்வு மதனுக்கு நாளுக்கு நாள் வலுத்தது. "இந்துவை நான் அங்கேயே இருக்கவிட்டிருந்தால், எனக்கு என்ன குறைவு ஏற்பட்டிருக்கும்?'' என்று உருகினான்.

விஜயதசமிக்கு முதல் நாள் இரவு மதன் மிகுந்த பரபரப்புடன் நடு உள்ளுக்கு வெளியே வராந்தாவில் அலைபாய்ந்து நடை பயின்றுகொண் டிருந்தான். உள்ளே இருந்து குழந்தை அழும் குரல் கேட்டது. அவன் பறந்து விழுந்துகொண்டு கதவண்டை ஓடினான். அதற்குள் வெளியே வந்த மருத்துவச்சி, "வாழ்த்துக்கள் ஐயா! பிள்ளை பிறந்திருக்கிறது!'' என்றாள்.

"பிள்ளையா?'' என்று கேட்ட மதன் சட்டென்று கவலை தோய்ந்தவனாய், "மனைவி எப்படி இருக்கிறாள்?'' என்று கேட்டான்.

''நலமாக இருக்கிறுள். இதுவரை அவளுக்குப் பெண் என்று சொல்லியிருக்கிறோம். பிரசவித்தவள் அதிக மகிழ்ச்சி காட்டிஞல், 'நஞ்சு' விழுவதில்லே. அதனுல்தான் . . .'' மருத்துவச்சி கூறினுள்.

''அப்படியா?'' என்ற மதன் அசடுபோலக் கண் இமையைக் கொட்டிக்கொண்டு, அறைக்குள் செல்ல முயன்றுன். மருத்துவச்சி அவனைத் தடுத்து நிறுத்தி, ''உள்ளே உங்களுக்கு என்ன வேலே?'' என்று கேட்டவள், சட்டென்று கதவைச் சாத்தித் தாளிட்டுக்கொண்டு உள்ளே போய்விட்டாள்.

மதனின் கால்கள் இன்னும் வெடவெடவென்று நடுங்கிக் கொண்டிருந்தன. ஏதோ பயத்தினுல் அல்ல; ஒருவகை ஆறுதலினுல் அல்லது இந்த உலகத்துக்குப் புதிதாக ஒரு ஜீவன் வரும்போது அக்கம்பக்கத்தில் உள்ளவர்களின் உணர்வில் ஒரு பெருக்கம் காணுமே, அதனுல் என்றும் சொல்லலாம்.

பிள்ளே பிறந்தால் வீட்டின் வாசற்படி சுவர் எல்லாம்கூட நடுங்கும் என்று கேள்விப்பட்டிருந்தான். பெரியவனுன பின் அவன் நம்மை விட்டு விடுவாஞ, பாதுகாப்பாஞ என்னும் அச்சத்தில் அவை அப்படி நடுங்குமாம். பிரசவத்துக்கோ, அறைத் தீட்டுக் கழித்துத் தலேக்கு நீர் போடுவதற்கோ சக்லி அண்ணி வரவில்லே. ஏனென்றுல் அப்பொழுது அவள் கைக்குழந்தைக் காரி. ஆனுல் தரியாபாத் அத்தை வந்திருந்தாள். அவள் குழந்தை பிறக்கும் நேரத்தில், ''ராம், ராம், ராம், ராம்'' என்று நாம ஜபம் செய்த வண்ணம் இருந்தாள். அந்த ஜபம் சற்று அடங்கி ஒலித்தது, குழந்தை பிறந்ததும்.

வாழ்நாள் முழுதும் மதனுக்குத் தன் நிலே இப்படி ஆகும் என்ற எண்ணமே எழுந்ததில்லே. ஒருத்தி செத்துப் பிழைக்கும் இந்த மாதிரி சமயத்தில்கூட அவன் தேவையே யாருக்கும் ஏற்படவில்லே. இப்படி ஒன்றுக்கும் உதவாத வாழ்க்கை என்ன வாழ்க்கை என்று அவன் வருந்தினுன். இதே நேரத்தில் மீண்டும் கதவு திறந்தது. அத்தை வெளியே வந்தாள். வராந்தாவில் எரிந்து கொண்டிருந்த நடுத்தரமான மின்சார ஒளியில் அவள் முகம் பேயறைந்தாற்போல வெளிறிக் காட்சி தந்தது. மதன் அவளே மடக்கி, ''இந்து நலமாயிருக்கிறுளா, அத்தை?'' என்று கேட்டான்.

''நலமாயிருக்கிறுள், நலமாயிருக்கிறுள், நலமாயிருக்கிறுள்!'' என்று அத்தை இரண்டு மூன்று முறை சொன்னுள். அப்புறம்

தன் நடுங்கும் கையை மதனின் தலையில் வைத்து அவன் முகத்தைக் குனியவைத்தாள். அவனை உச்சி மோந்து ஆசீர்வதித்து விட்டு வெளியே பாய்ந்து சென்றாள்.

அத்தை வராந்தாவில் இருந்த நிலைவழியே வெளியேறிக் கூடத்துக்குச் சென்றாள். அங்கே குழந்தைகள் தூங்கிக்கொண்டிருந்தன. அத்தை ஒவ்வொன்றின் தலையிலும் அன்போடு கைவைத்து ஆசி கூறினாள். கூரையின் பக்கம் பார்வையைத் தூக்கி ஏதோ வேண்டினாள். அப்புறம் சோர்வு மேலிடத் தடால் என்று துலாரியின் அருகில் படுத்துக்கொண்டாள். குப்புறப் படுத்துக் கொண்டவளின் உடல் ஆட்டத்திலிருந்து அவள் அழுகிறாள் என்று தோன்றியது. மதன் வெலவெலத்துப் போனான்: ''எத்தனையோ பிரசவங்களைப் பார்த்தவள் ஆயிற்றே! அவள் உயிர், ஆத்மாகூட இப்படி நடுங்கிச் சாவானேன்?''

பிறகு அந்த அறையிலிருந்து ''கவிச்சு'' நாற்றம் அடித்தது. அந்த அறையில் போட்டிருந்த புகைமூட்டத்திலிருந்து ஓர் அலை வெளியே வந்து மதனைச் சூழ்ந்துகொண்டது. அவனுக்குத் தலை சுற்றியது; மூச்சு முட்டியது. மருத்துவச்சி துணியில் எதையோ சுற்றி எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். துணி முழுதும் ஒரே ரத்தமாகக் காட்சி அளித்தது. அதிலிருந்து இரண்டொரு துளிகள் தரையில் சிந்தின. மதனுக்கு அதைக் கண்டு உயிரே போய்விட்டாற்போலிருந்தது. நாம் எங்கு இருக்கிறோம் என்பதே அவனுக்கு விளங்கவில்லை. கண்கள் நன்கு திறந்துதான் இருந்தன. ஆனால் எதிரில் உள்ளது எதுவுமே தெரியவில்லை. இடையில் இந்துவின் முனகல் ஒலி ''ஐ . . . யோ!'' என்று கேட்டது. அப்புறம் குழந்தை ''குவா, குவா'' என்று அழத் தொடங்கிவிட்டது.

மூன்று நான்கு நாட்களில் என்ன வெல்லாமோ நடந்தன. மதனின் வீட்டுத் தோட்டத்தில் ஒருபுறம்குழிதோண்டி ''நஞ்சு'' புதைக்கப்பட்டது. நாய்கள் வந்து தோண்டிவிடாமல் காவல் போடப்பட்டது. ஆனால் அவனுக்கு எதுவுமே நினைவில்லை. ''கவுச்சு'' நாற்றம் மூளையில் மண்டி விட்டபிறகு இன்றுதான் நினைவு திரும்பியிருப்பதாக அவனுக்குப் பட்டது. அறையில் அவனும் இந்துவும் மட்டும் அன்று தனியாகஇருந்தார்கள், நந்த கோபனும் யசோதையும்போல. இன்னொரு புறத்தில் நந்தலால்

படுத்திருந்தான். இந்து குழந்தையைப் பார்த்தாள். பிறகு ஏதோ தெரிந்துகொள்ள எண்ணியவளைப்போல, ''உங்களே அச்சு'' என்றாள்.

''இருக்கலாம்!'' பிடிக்காத பார்வை ஒன்றைக் குழந்தை மீது வீசிவிட்டு மதன் கூறினான்: ''ஆண்டவனுக்கு என் நன்றிகள். மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன் அவனுக்கு! நீ செத்துப் பிழைத்தாயே!''

''ஆமாம்!'' இந்து தொடர்ந்தாள்: ''நான் நினைத்துக்கொண்டிருந்தேன் . . .''

''நல்லதையே பேசு!'' மதன் உட்கார்ந்து அவளைப் பேசவொட்டாமல் தடுத்து, ''இங்கு நடந்ததைப் பார்த்தபின், நான் இனி உன்னிடம் அண்ட மாட்டேன்!'' என்று கூறி நாக்கைப் பற்களால் கடித்துக்கொண்டான்.

''கன்னத்தில் போட்டுக்கொள்ளுங்கள்!'' என்றாள் இந்து.

மதன் காதைப் பிடித்துக்கொண்டு தோப்புக்கரணமே போடத் தயாராகிவிட்டான். அதைக் கண்ட இந்து இலேசாக ஒலி எழுப்பிச் சிரித்தாள்.

குழந்தை பிறந்த பிறகு பல நாட்கள்வரை இந்துவின் வயிறு சரியாகவில்லை. அது சுற்றிச் சுற்றி வெளியுலகுக்கு அனுப்பி விட்ட குழந்தையைத் தேடிக்கொண்டிருந்தது. ஆனால் அந்தக் குழந்தையோ தனது உண்மைத் தாயான அந்த வயிற்றை அடியோடு மறந்துவிட்டது.

இப்பொழுது உண்மை நிலை உணர்ந்து எல்லாம் சரியாகி விட்டது. இந்து அமைதியோடு இந்த உலகத்தைப் பார்க்கலானாள். அவள் மதனை மட்டும் இல்லை; அவனைப் போன்ற உலகத்துக் குற்றவாளிகள் அனைவரையும் மன்னித்து விட்டாற் போலத் தோன்றியது. அவள் இப்பொழுது தெய்வமென மருந்தும் கருணையும் பிரசாதமாக வழங்கிக்கொண்டிருந்தாள். மதன் இந்துவின் முகத்தைப் பார்த்தான். இத்தனை இரத்தம் போய் இளைத்துக் களைத்துப் போனாலும் இந்து முன்னைக் காட்டிலும் அழகாகத் தோன்றுவதாக அவனுக்குப் பட்டது. வைத்த கண்களை எடுக்கத் தோன்றவில்லை அவனுக்கு. அப்போது தான் இந்து இரண்டு கைகளையும் தன் மார்பில் அழுத்திக் கொண்டாள், எதையோ மறந்துவிட்ட பாவனையில்.

''என்ன ஆயிற்று?'' என்று மதன் கேட்டான்.

''ஒன்றுமில்லை!'' இந்து எழுந்திருக்க முயன்றவாறே, ''அவனுக்குப் பசிக்கிறது!'' என்று கூறிக் குழந்தையைச் சுட்டிக் காட்டினாள்.

''இவனுக்குப் பசிக்கிறதா?'' மதன் முதலில் குழந்தையைப் பார்த்தான். பிறகு இந்துவைப் பார்த்துக் கேட்டான்: ''உனக்கு எப்படித் தெரிந்தது?''

''பார்க்கவில்லையா?'' இந்து தன் பார்வையைக் கீழாக்கித் தன் ரவிக்கையைப் பார்த்தவாறு, ''எல்லாம் நனைந்து விட்டது!'' என்று கூறினாள்.

மதன் இந்துவின் தளர்ந்த ரவிக்கையைப் பார்த்தான். பால் சுரந்து நனைந்திருந்தது. ஒருவிதமான வாசனையும் வந்துகொண்டிருந்தது. இந்து குழந்தையின் பக்கம் கைநீட்டி, ''அதை என்னிடம் கொடுங்கள்!'' என்றாள்.

மதன் தன் கையை அந்த நனைந்த ரவிக்கையிடம் கொண்டு போனான். ஆனால் சட்டென்று இழுத்துக்கொண்டான். பிறகு துணிந்து அந்தக் குழந்தையைத் தூக்கினான், செத்த எலியைத் தூக்குபவனைப் போல. கடைசியில் மிக ஜாக்கிரதையாகக் குழந்தையை இந்துவின் மடியில் போட்டான். இந்து மதனைப் பார்த்து, ''நீங்கள் சற்று வெளியே போங்கள்!'' என்றாள்.

''ஏன்? எதற்காக நான் வெளியே போகவேண்டும்?'' என்று கேட்டான் மதன்.

''போங்கள் என்றால் போங்களேன்!'' இந்து கொஞ்சம் கெஞ்சிக் கொஞ்சம் நாணிச் சொன்னாள்: ''உங்கள் எதிரே நான் குழந்தைக்குப் பால் கொடுக்கமுடியாது!''

''அட!'' மதன் வியப்போடு, ''என்னெதிரே கொடுக்க முடியாதா?'' என்று கேட்டான். அப்புறம் ஏதும் அறியாதவன் போலத் தலையை ஓர் ஆட்டு ஆட்டிவிட்டு வெளியே போனான். கதவுவரை போனவன் திரும்பி ஒரு முறை இந்துவின்மீது தன் பார்வையை வீசினான். இந்து இத்தனை அழகு என்று இன்றளவும் அவனுக்குப் பட்டதே இல்லை.

பாபூ தளிராம் விடுமுறையில் வீடு திரும்பினார். முன்னுக்கு இப்பொழுது பாதியாகிவிட்டிருந்தார். இந்து பேரனை அவர் மடியில் போட்டபோது மகிழ்ச்சியில் பூரித்துப் போனார். அவர் வயிற்றுக்குள் ஏதோ புண் ஏற்பட்டிருந்தது. அது இருபத்து

நான்கு மணி நேரமும் அவரைக் கழுவில் ஏற்றிஞற்போல வதைத்தது. இந்தக் குழந்தைமட்டும் இல்லையென்ருல், இதைக் காட்டிலும் பத்து மடங்கு வேதனைப்பட்டுத் துடித்திருப்பார். அவர் நோய்க்கு மருந்தாக உதவியது அந்த மழலை.

எத்தனையோ சிகிச்சைகள் செய்யப்பட்டன. கடைசிக் கட்டத்தில் டாக்டர் அரை ரூபாய் அளவுக்குப் பெரிய மாத்திரைகளாகக் கொடுத்தார்; நாளொன்றுக்குப் பதினைந்தும் இருபதும் விழுங்கச் சொன்ஞர். முதல் நாளே அந்த மாத்திரைகளை விழுங்கும்பொழுது மூச்சு முட்டி வேர்த்துக் கொட்டியது. அன்றுடம் மூன்று முறை நான்கு முறை உடை மாற்றிக்கொள்ளும்படி ஆயிற்று. ஒவ்வொரு முறையும் மதன் அவர் களைந்த உடைகளைப் பிழிவான் ஒரு வாளியில். கால் வாளியை வேர்வை நீரே நிறைத்துவிடும் என்ருல் அதிகம் கூறுவானேன்? அன்றிரவு அவருக்கு வயிற்றைக் குமட்டிக்கொண்டு வந்தது. அவர் மருமகளை அழைத்து, ''அம்மா! கொஞ்சம் பல் குச்சி கொண்டு வாயேன்! வாயை ரொம்பக் கசக்கிறது!'' என்ருர். இந்து ஓடிப் போய்ப் பல் குச்சி கொண்டு வந்து கொடுத்தாள். அவர் பல் குச்சியை மென்றுகொண் டிருந்தபோதே ஒரு குமட்டல் வந்தது. அந்தக் குமட்டலில் இரத்த ஆறே பெருகியது. மதன் அவரை மெதுவாகத் தலைப்புறமாகப் படுக்கவைத்தான். அதற்குள்ளாக அவர் விழிகள் தூங்கிவிட்டன. ஒரு கணத்தில் அவர் மேலே வானப் பூங்காவை அடைந்துவிட்டார். பூத்துக் குலுங்கும் அந்தப் பூங்காவில் தன் மலரையும் இனம் கண்டு கொண்டுவிட்டார்.

பேரன் பிறந்து இருபது இருபத்தைந்து நாட்களே ஆகியிருந்தன. இந்து முகத்தைப் பிராண்டிக்கொண்டு, தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு தன் உடல் அனைத்தையும் நீல இரத்தம் கட்டச் செய்துவிட்டாள். மதனின் கண்களெதிரே அதே பழைய காட்சி விரிந்தது. அன்று ஒரு நாள், தான் இறந்துவிட்டாற்போல எண்ணிப் பார்த்தானே, அதே காட்சி! அதற்கும் இதற்கும் ஒரு வேறுபாடு என்னவென்ருல், இந்து வளையல்களை நொறுக்குவதற்குப் பதிலாகக் கழற்றி வைத்துவிட்டாள். தலையிலே சாம்பலையோ மண்ணையோ அள்ளிப் போட்டுக்கொள்ளவில்லை. ஆனல் தரைப்புழுதி தலைவரை ஒட்டிக்கொண்டதனுலும், கேசங்கள் கலைந்து போனதனுலும் முகம் பார்க்கப் பயங்கரமாகியிருந்தது. ''இப்படி ஆகிவிட்டதே

என் நிலை'' என்பதற்குப் பதிலாக ''இப்படியாகிவிட்டதே எங்கள் நிலை!'' என்று மாற்றிக்கொண் டிருந்தாள்.

குடும்பத்துச் சுமை தன்மீது எத்தனை விழுந்துள்ளது என்பதை மதனால் சரியாகக் கணிக்கமுடியவில்லை. பொழுது விடிவதற்குள் துயரச் சுமை அவனைப் படாத பாடு படுத்திவிட்டது, இதயமே வெடித்துவிடும்போல. அவன் வீட்டுக்கு வெளியே வாய்க்கால் கரையில் குப்புறப் படுத்துக் குமைந்து குமைந்து அழுது உள்ளத்தைத் தேற்றிக்கொள்ளாமல் இருந்திருந்தால் ஒருவேளை பிழைத்தே இருக்கமாட்டானோ, என்னவோ?

புவியன்னை தன் குழந்தையை மார்புறத் தழுவிக்கொண்டு ஆறுதல் அளித்துக் காப்பாற்றிவிட்டாள். சிறு பிள்ளைகளான குந்தன், துலாரி, பாஷி ஆகியவர்கள், கூட்டில் இருக்கும் பறவைக் குஞ்சுகளைக் கழுகு தாக்கினால் இளஞ்சிவப்பு மாறாத தங்கள் அலகுகளைத் திறந்து எப்படிக் கத்தித் தீர்க்குமோ, அப்படி அலறித் தீர்த்துவிட்டார்கள். அவர்களைத் தன் இறக்கைகளுக்கு அடியில் அணைத்துக்கொண்டு ஆறுதல் சொன்னவள் இந்துதான். வாய்க்கால் கரையில் கிடந்த மதன் தன்னைப் பொறுத்தவரையில் உலகமே தீர்ந்துவிட்டதாக நினைத்தான். ''இனி தான் வாழமுடியுமா? இனி வாழ்க்கையில் தான் சிரிக்க முடியுமா? மகிழ்ச்சியாயிருக்க முடியுமா?'' என்றெல்லாம் எண்ணமிட்டான். அப்புறம் எப்படியோ எழுந்து வீட்டுக்குள் சென்றான்.

படிக்கட்டுகளுக்கடியில் குளியலறை இருந்தது. அதில் நுழைந்து உட்புறம் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டவன் மீண்டும் ஒருமுறை அதே கேள்விகளைத் திருப்பிக் கேட்டுக்கொண்டான்: ''இனி வாழ்க்கையில் நான் சிரிக்கமுடியுமா?''—அந்தக் கேள்வியைத் தொடர்ந்து அவன் கலகலவென்று நகைத்தான். இத்தனைக்கும் தந்தையின் சடலம் இன்னும் பக்கத்து அறையிலேயேதான் இருந்தது.

தந்தையைத் தீயிடம் ஒப்படைப்பதற்குமுன், மதன் பாடையில் இருந்த சடலத்துக்கு வணக்கம் தெரிவிக்கப் பூமியில் விழுந்தான். இது அவன் தன்னைப் பெற்றெடுத்த தந்தைக்குச் செய்யும் கடைசி வணக்கம். ஆயினும் அவன் அழுது புலம்பவில்லை. இதைக் கண்டு துக்கம் கேட்க வந்திருந்த உறவினர்களும் ஊர்க்காரர்களும் வியந்து விதிர்த்து நின்றனர்.

பின்பு, ஹிந்துக்களின் சம்பிரதாயப்படி, குடும்பத்துக்கு மூத்தவன் என்ற முறையில் மதன் தான் சிதையில் தீ வைக்க நேர்ந்தது. எரிகிற மண்டையில் ''கபாலக் கிரியை'' என்ற பெயரால் தடிகொண்டு அடிக்க வேண்டியிருந்தது. பெண்கள் வெளியிலேயே சுடுகாட்டுக் கிணற்றில் தலைமுழுகி விட்டுப் போய் விட்டனர். மதன் வீட்டை அடைந்தபோது நடுநடுங்கி வெலவெலத்துப் போனான். புலியன்னை சிறிது நேரத்துக்கு மகனுக்கு அளித்திருந்த ஆற்றல் இரவாகி இருள் சூழ்ந்ததும் எங்கோ பறந்து விட்டது. அவன் மீண்டும் பித்தம் பிடித்தாற் போலானான். அவனுக்கு ஒரு பற்றுக்கோடு தேவைப்பட்டது. அந்தப் பற்றுக்கோடு மரணத்தையும் மிஞ்சிய சக்தியுள்ளதாக இருக்கவேண்டும். அப்போதுதான் அவன் பயமும் பித்தமும் தெளியும் என்று தோன்றியது. அப்போது புலியன்னையின் பெண் ஜனகநந்தினியாக, இந்து ஒரு குடத்திலிருந்து தோன்றி மதனை—ராமனைத் தன் அரவணைப்பில் ஏற்றுக் கொண்டாள். அன்று இரவு மட்டும் இந்து தன்னையே மதனுக்கு அர்ப்பிக் காமல் இருந்திருந்தால், இத்தனை பெரும் துயரம் மதனை குலுக்கி வீழ்த்தியிருக்கும்.

பத்து மாதங்களுக்குள்ளாகவே இந்துவுக்கு இரண்டாவது குழந்தை பிறந்தது. மனைவியை இந்த நரகத் தீயில் தள்ளி விட்டு மதன் தன் துயரத்தை மறந்து விட்டான். திருமணத்துக்குப் பின் தந்தையிடம் போயிருந்த இந்துவை, தான் வற்புறுத்தி வர வழைத்திராவிட்டால், ஒருவேளை அவர் இத்தனை சீக்கிரம் இறந்திருக்கமாட்டாரோ என்ற எண்ணம் சில சமயம் அவன் உள்ளத்தில் தலையெடுக்கும். உடனே அவன் அவரது சாவினால் ஏற்பட்டு விட்ட நஷ்டத்தைச் சரிக்கட்ட முழுமூச்சுடன் முனைவான். ஏற்கெனவே அலட்சியம் காரணமாக நொடித்துப் போன தொழில், இப்போது அவன் காட்டிய அக்கறை காரணமாகப் பிடித்துக் கொண்டு வலுத்தது.

அந்த நாட்களில்தான் பெரிய குழந்தையை மதனிடம் விட்டு விட்டுச் சிறிய குழந்தையோடு இந்து தாய் வீட்டுக்குப் போயிருந் தாள். அவள் இல்லாத அந்த வேளைகளில், குழந்தை எதற் கெல்லாமோ பிடிவாதம் பிடிக்கும். மதன் சிலவற்றைக் கவனிப்பான், சிலவற்றை ஒதுக்கி விடுவான். பிறந்த வீட்டி லிருந்து ஒரு நாள் இந்துவின் கடிதம் வந்தது. "என் குழந்தை அழும் குரல் எனக்கு இங்கே கேட்கிறது. அதை யாரும்

அடிக்கவில்லையே?'' என்று அதைக் கேட்டு எழுதியிருப்பாள். மதனுக்கு அது பெருத்த வியப்பை அளித்தது. ''படிப்பறிவில்லாத ஒரு பட்டிக் காட்டுப் பெண் இப்படியெல்லாம் எப்படி எழுதமுடியும்?'' என்று எண்ணியவன், ''இது யாராவது சொல்லிக் கொடுத்த சொல்லாயிருக்குமோ?'' என்று எண்ணிக் கொண்டான்.

ஆண்டுகள் சென்றன. சுகபோகங்களைப் பெருக்கிக் கொள்ளும் அளவுக்கு வருமானம் பெருகவில்லை. ஆனால் எப்படியும் செவ்வனே வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான வரும்படி மட்டும் வந்துகொண்டிருந்தது. எப்போதாவது ஏதாவது பெரும் செலவு வந்து விட்டால் மட்டும் சிரமமாக இருந்தது. குந்தனைக் கல்லூரியில் சேர்க்கவேண்டும். தங்கை துலாரிக்கு வரன் தேட வேண்டும் என்னும் நிலை ஏற்பட்டபோதெல்லாம் மதன் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து விடுவான். அந்த நேரம் பார்த்து முகத்தில் முறுவல் நெளிய இந்து தோன்றுவாள். ''எதற்காக இப்படி வாட்டமாயிருக்கிறீர்கள்?'' என்று கேட்பாள். மதன் நம்பிக்கை ஒளிரும் பார்வையை அவள்மீது வீசி, ''வாட்டமுறாமல் என்ன செய்வதாம்? குந்தனை பி.ஏ.யில் சேர்க்க வேண்டும். துலாரியை . . .''என்று இழுப்பான். இந்து மீண்டும் நகைப்பாள். பிறகு ''வாருங்கள், என்னுடன்!'' என்று அழைப்பாள். மதன் ஆட்டுக்குட்டி போல் இந்துவைப்பின் தொடருவான். இந்து சந்தனப் பெட்டியண்டை போவாள். மதன் உள்பட யாருக்குமே அதைத் தொட அநுமதி கிடையாது. இரண்டொரு சமயம் மதன் இதற்காக அவளைக் கடிந்துகூடப் பேசியிருக்கிறான். ''சாகும்பொழுது இதையும் கட்டி எடுத்துக்கொண்டு போ! மறந்துவிடாதே!'' என்று ஏசியிருக்கிறான். ''மறக்காமல் கட்டாயம் எடுத்துக்கொண்டு போகிறேன்!'' என்று இந்துவும் அதற்குப் பதிலடி கொடுத்திருக்கிறாள். அதோடு அந்தப் பெட்டிக்குள்ளிருந்து தேவைக்கேற்ற ரூபாயை எடுத்து அவனிடம் கொடுத்திருக்கிறாள்.

''இது எங்கிருந்து வந்தது? ''

''எங்கிருந்து வந்தால் உங்களுக்கு என்ன? உங்களை வடையைத் தின்னச் சொன்னார்களா, இல்லை . . . ?''

''இருந்தாலும் . . . ''

''இருந்தாலும் கிருந்தாலும் பேச்சு இங்கே வேண்டாம். போங்கள், போய் நடக்க வேண்டியதைக் கவனியுங்கள்!''

மதன் மீண்டும் மீண்டும் விடாமல் பிடிவாதம் பிடித்தால், ''எனக்கு ஒரு சேட்டின் சிநேகம் உண்டு. தெரியுமோ, இல்லையோ?'' என்று கூறிச் சிரிப்பாள் இந்து. பொய் என்று தெரிந்தாலும் மதனுக்கு அந்தக் கேலிப் பேச்சு பிடிக்காது. ''நான் ஒரு பெரும் கொள்ளைக்காரி. அது உங்களுக்குத் தெரியாது. அதோடு நான் ஒரு கொடை வள்ளலுங்கூட. என் ஒரு கை கொள்ளையடிக்கும். இன்னொரு கை ஏழை எளியவர் களுக்கு வாரி வழங்கிவிடும்!'' என்று கூறிப் பேச்சை மாற்று வாள். பெட்டிக்குள் பொத்திப் பாதுகாத்து வைத்திருந்த அவள் சொன்ன கொள்ளை நகையை விற்றுத்தான் துலாரிக்குத் திருமணம் நடந்தது. இப்படி எத்தனையோ கடன் ஏறியது, ஏறிய படியே இறங்கவும் இறங்கியது.

இதே முறையில்தான் குந்தனுக்கும் திருமணம் ஆயிற்று. இந்தக் கல்யாணங்களுக்கு இந்துதான் கைகொடுத்து உதவினாள்; அன்னையின் ஸ்தானத்தில் நின்று எதையும் நிறைவேற்றி வைத்தாள். வானத்திலிருந்து தந்தையும் தாயும் இதைக் கண்டு மகிழ்ந்து மலரைச் சொரிந்தார்கள். ஆனால் அம்மலர்கள் மட்டும் யார் கண்ணிலும் படுவதில்லை.

ஒரு நாள் என்னடா வென்றால், அப்பாவும் அம்மாவும் மேலே சண்டை போட்டுக் கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். ''நீங்கள் மருமகள் கைச் சமையலைச் சாப்பிட்டு விட்டு வந்திருக்கிறீர்கள். அவள் இன்பவாழ்வைக் கண்டு வந்திருக்கிறீர்கள். நான்தான் அதிர்ஷ்டக் கட்டை, எதுவுமே பார்க்கவில்லை!'' என்று அம்மா சொல்லியிருக்கிறாள் அப்பாவிடம். பேச்சுத் தடித்து அந்த வழக்கு விஷ்ணு சிவன் வரையில் போய்விட்டது. அவர்கள் அம்மா வுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கிவிட்டார்கள். இப்படியாக அம்மா மண்ணுலகத்துக்கு வந்து மருமகளின் வயிற்றில் வளர்ந் தாள். இதன் பலனாக இந்துவுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

எல்லாவற்றுக்கும் இந்து தெய்வப் பிறவி இல்லையே! கொள்கை யளவில் ஏதாவது பேச்சு வந்தால், நாத்தி மைத்துனன் என்ன, மதனாகவே இருந்தாலும் மோதத் தயங்கமாட்டாள் அவள். மதன் அவளது இந்த உண்மைப் பற்றைக் கண்டு கொதிப்பும் கேலியும் துள்ள, ''அட ஹரிசந்திரன் மகளே!'' என்று சாடுவது

கூட உண்டு. இந்துவின் பேச்சுக்களில் என்னதான் சிக்கல்கள் தலையெடுத்தாலும் மெய்யும் அறமும் வழுவின்றி நிலைத்திருந்தன. எனவே, மதனும் மற்றுமுள்ள குடும்பத்தினரும் அவள் எதிரே தாழ்ந்தே போனார்கள். குடும்பச் சண்டை எவ்வளவு வலுத்தாலும், மதன், கணவன் என்ற ஆணவத்தில் எத்தனைதான் ஆதிக்கம் செலுத்தி மடக்கினாலும் கடைசியில் எல்லாரும் தலைகுனிந்து இந்துவின் காலடிகளில் வந்து விழுந்து மன்னிப்பே கோருவார்கள்.

புது அண்ணி வீட்டுக்கு வந்தாள். சொல்லப் போனால் அவளும் மருமகள்தான், இந்துவும் மருமகள்தான். ஆனால் இந்து ஒரு பெண். அவளை மருமகள் என்பர். அதற்கு நேர் எதிரிடை சின்ன அண்ணி ராணி. அவள் ஒரு மருமகள். பெண் என்ற பெயர் அவளுக்கும் பொருந்தும். ஆனால் பெண்ணுக்கும் பெண்ணுக்கும் இவ்வளவு வேறுபாடா? வியக்கவே தோன்றும். ராணியின் காரணமாகச் சகோதரர்களிடையே சண்டை மூண்டது. ஜே. பி. சிற்றப்பாவின் மூலம் சொத்துப் பிரிவினை நடந்தது. அதில் அப்பா—அம்மா சொத்து ஒருபுறம் இருக்க, இந்து கொண்டு வந்திருந்த பொருள்களும் பிரிவினையில் அடிபட்டன. இந்து இதயத்தைப் பிடித்துக்கொண்டு வருத்தத்தை அடக்கிக்கொண்டாள்.

எல்லாம் கிடைத்துத் தனிக்குடித்தனம் போயுங்கூடக் குந்தனும் ராணியும் மனமொத்து இன்பமாக வாழமுடியவில்லை. தன் சொந்தப் பொருளைப் பறிகொடுத்தாலும், இந்துவின் குடித்தனம் கொஞ்ச நாட்களுக்கெல்லாம் நிலைமை திருந்தி ஒளி பெருக்கி விளங்கலாயிற்று.

அடுத்தடுத்துக் குழந்தைகள் பிறந்தபின் இந்துவின் உடல் நலம் முன்னைப்போல் இல்லை. கைக்குழந்தை எப்போதும் இந்துவின் மார்பிலேயே ஒட்டிக்கொண்டிருந்தது. வீட்டில் உள்ளவர்கள் எல்லாரும் அந்த மாமிச பிண்டத்தைக் காறி உமிழாத தோஷமாக வெறுத்தார்கள். ஆனால் இந்து அதை இதயத்தோடு அணைத்துக்கொண்டே வளைய வந்தாள். எப்போதாவது அலுத்துச் சலித்துப் போனால் மட்டும், விட்டெறியாத தோஷமாக அதைத் தூளியில் போட்டுவிட்டு, ''நீ என்னை உயிரோடு இருக்கவிடமாட்டாயாடி அம்மா!'' என்று நொந்து கொள்ளுவாள்.

குழந்தை பெருங்குரல் எடுத்து அழத் தொடங்கிவிடும்.

மதனும் இந்துவிடமிருந்து விலகிப் போகலானான். திருமணத்துக்குப் பின் இந்த நாள்வரை அவனுக்கு அவன் தேடிய பெண் கிடைக்கவில்லை. மட்டரகக் கோந்து வியாபாரம் சூடு பிடிக்கவே, மதனின் கையில் ரூபாய் துள்ளலாயிற்று. இந்துவுக்குத் தெரியாமலே வெளியில் செலவு செய்யத் தொடங்கிவிட்டான் அவன். அப்பா கண்களை மூடிய பிறகு அவனைத் தட்டிக் கேட்பார் யாரும் இல்லை. பூர்ண விடுதலை கிடைத்துவிட்டது.

அண்டை வீட்டு ஷிப்தேயின் எருமை மதனின் முகத்துக்கருகில் வந்து மோந்து பார்க்கலாயிற்று. அதுவும் அடிக்கடி மோந்து பார்க்கத் தொடங்கியது. கல்யாணத்தன்று இரவு இருந்த எருமை விற்றுப் போய் விட்டது. ஆனாலும் அதற்குச் சொந்தக்காரன் உயிருடன் இருந்தானே! ஒளியும் நிழலும் ஒழுங்கற்ற விந்தை உருவங்கள் படைத்து ஆட்டம் காட்டும் பல இடங்களுக்கு மதன் அவனோடு போய் வரலானான். தெரு முனையில் எப்போதாவது இருள் முக்கோணம் சமையும். சட்டென்று மேலிருந்து வெளிச்சம் ஒரு நாற்கோண ஒளி காட்டி அதை வெட்டி வீழ்த்திவிடும். எந்த ஓவியமும் முழுமையாக உருப்பெறுவதில்லை. பக்கத்திலிருந்து ஒரு பைஜாமா எழுவதுபோலத் தோன்றும். அது அப்படியே வான்வீதியில் பறந்துவிடும். வெறித்துப் பார்ப்பவர்கள் முகத்தைச் சட்டென்று ஒரு கோட்டு வந்து விழுந்து முழுதும் மறைத்துவிடும். அதற்குள் மூச்சு முட்டித் திணறுவதுபோன்ற உணர்வு தோன்றித் துடிக்கவைக்கும். அதற்குள் ஒளி வெள்ளம் வழங்கிய நாற்கோணம் நாற்புறத்துச் சட்டமாக உருப்பெற்றுத் தோற்றமளிக்கும். அந்தச் சட்டத்துக்குள் ஓர் உருவம் வந்து நிற்கும். அதைப் பிடிக்க வேண்டிப் பார்ப்பவன் கை நீட்டினால் அது ஓரத்தில் ஒதுங்கி விடும். அங்கு எதுவுமே இராது. பின்னால் ஒரு நாய் ஓலக்குரல் எழுப்பி அழத் தொடங்கும். அதையும் மேவித் தபலா ஒலித்து அழுகைச் சத்தத்தை அமுக்கி விடும்.

மதனுக்கு அவன் எதிர்பார்த்த கற்பனை உருவம் கிடைத்து விட்டது. ஆனால் இதென்ன? ஒவ்வோர் இடத்திலும் ஓவியன் ஏதோ தவறாகக் கோடு இழுத்துக் கிறுக்கிவிட்டாற்போலத் தோன்றுகிறதே! அவன் கேட்கும் சிரிப்பொலி தேவைக்கு அதிகமாக ஒலித்துச் சுவையைக் கெடுப்பதாகத் தோன்றும். மதன் வழுவில்லாத, தரம் குறையாத சமன் தூக்கிய சீரான சிரிப்பைத் தேடினானே ஒழிய, எல்லாவற்றையும் விட்டுவிட்ட வெட்கம், மானம் கெட்ட சிரிப்பை விரும்பவில்லை.

ஸிப்தே அப்பொழுது தன் மனைவியோடு பேசிக்கொண்டிருந் தான். அவன் மனைவி மதனை ஓர் ஆதரிசக் கணவனாகப் படம் பிடித்துக் காட்டினாள். படம் பிடித்து மட்டும் காட்டவில்லை; முகத்தில் அறைந்தாற்போலக் கணவனையே சாடினாள். ஸிப்தே அதை அப்படியே திருப்பிவிட்டான், மனைவியின் முகத்தில் அடித் தாற்போல. வட்டியும் முதலுமாக வாங்கிக் கட்டிக்கொண் டாள். இரத்த நிறம் வாய்ந்த தர்பூசாப் பழத்தின் உட்சதை யும் விதையும் அவள் மூக்கு, கண், காதில் வழிந்தாற்போன்ற தொரு விகாரத் தோற்றம் பெற்று விதிர்விதிர்த்துப் போனாள். வாய் கொள்ளாத வசவு மாரிகளைப் பொழிந்த வண்ணம் ஸிப்தே யின் மனைவி, நினைவு என்னும் கூடையிலிருந்து சதையும் விதையு மாக எடுத்து இந்துவின் தூய்மையான வீட்டு முற்றத்தில் வாரி இறைத்து விட்டாள்.

ஓர் இந்துவுக்குப் பதிலாக இரண்டு இந்துக்கள் ஆயினர். ஓர் இந்து அவளே. இன்னொருத்தி நடுங்கும் வரைகோடென இந்துவின் உடல் முழுவதையும் வளைத்து நின்று கண்களுக்குப் புலனாகாத ஒரு பொய்த் தோற்றம்.

மதன் எங்கேயாவது வெளியில் போவதாயிருந்தால்கூட வீட்டிலிருந்துதான் போவான். குளித்துக் களித்து நல்ல உடை தரித்துக்கொண்டு, வாசனைப் பாக்கு, வெற்றிலையை வாய் நிறையக் குதப்பிக்கொண்டுதான் போவான். ஆனால் அன்று மதன் வீட்டுக்கு வந்தபொழுது இந்துவின் உருவமே வேறு விதமாக இருந்தது. அவள் முகத்தில் ஒரு கலம் பவுடரைப் பூசிக்கொண் டிருந்தாள். கன்னங்களுக்கு "ரூஸ்" போட்டிருந்தாள். உதட்டுச் சாயம் இல்லாத நிலையில் நெற்றிக்கு இடும் குங்குமச் சாந்தைத் தடவிக்கொண்டிருந்தாள். தலைக்கொண்டை போட்டிருந்ததும் புதுமையாக இருந்தது. மதனின் விழிகள் அவ்வலையிலிருந்து விடுபடமுடியாமல் வகையாக மாட்டிக்கொண்டன.

''இன்று என்ன விசேஷம்?'' மதன் வியப்புடன் கேட்டான்.

''ஒன்றும் இல்லை!'' இந்து மதனின் பார்வையிலிருந்து தப்பு பவள் போலச் சொன்னாள்: ''இன்று கொஞ்சம் ஒழிந்து ஓய்வு கிடைத்திருந்தது.''

திருமணமாகிப் பதினைந்து ஆண்டுகள் ஓடியபின் இந்துவுக்கு இன்றுதான் ஓய்வு கிடைத்திருந்தது. அதுவும் எப்பொழுது? கன்னங்களில் கருமை நிழல் படர்ந்தபின்! மூக்கின்மேல் கறுப்பாக ஏதோ கட்டி தட்டி நின்றபின்! ரவிக்கைக்குக்

கீழே வயிறு தெரியும் இடத்தில் இடுப்பில் இரண்டு மூன்று மடிப்புத் தெரியத் தொடங்கியபின்! அன்று இந்து குற்றங் குறை எதுவும் தெரியாமல் தன்னைச் சிங்காரித்துக்கொண் டிருந் தாள். அவள் செய்துகொண் டிருந்த ஆடை அணி அவளை எல்லையற்ற அழகியாக எடுத்துக் காட்டின. ''அப்படியிருக்க முடியாது!'' அதை நினைத்த மாத்திரத்தில் மதனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் மீண்டும் ஒருமுறை திரும்பி இந்துவைப் பார்த்தான்; குதிரை வியாபாரி, ஜாதிக் குதிரையைப் பார்ப்பதுபோன்ற பார்வையை வீசினன். அங்கே குதிரையும் இருந்தது, அதை அடக்கி ஓட்டும் கடிவாள மும் இருந்தது. இங்கே கண்ட தவறான தோற்றம் குடிகாரனின் கண்களுக்குச் சரியாக விளங்கவில்லை. இந்து உண்மையிலேயே பேரழகியாகத் தோன்றினள். இன்று பதினைந்து ஆண்டுகள் ஓடிய பின்பும், பூலோன், ரஷீதா, மிஸஸ் ராபர்ட், அவளுடைய சகோதரிகள் ஏன், எல்லாப் பெண்களையுமே அவள் காலில் கட்டித்தான் அடிக்கவேண்டும். மதனுக்கு ஓர் இரக்கம் தோன்றலாயிற்று. அதோடு ஓர் அச்சமும் உதித்தது!

வானத்தில் அப்படி ஒன்றும் மேகம் சூழ்ந்திருக்கவில்லை. இருந் தாலும் மழை பிடித்துக்கொண்டுவிட்டது. வீட்டுக் கங்கை வெள்ளத்தில் மிதந்தது. அந்த வெள்ளம் கரையை உடைத்துக் கொண்டு, பள்ளமான பகுதிகளில் நிரம்பிக் கிராமங்களையும் குடியிருப்புகளையும் தன் சுழலில் முழுக்காட்டிக்கொண் டிருந்தது. இந்த வேகத்தில் நீர் ஓடுமானல் கைலையங்கிரியே மூழ்கிவிடும் போலத் தோன்றியது. இந்த நேரத்தில் குழந்தை அழத் தொடங்கி விட்டாள். இன்றுவரை இப்படி ஓர் அழுகை அழுததில்லை.

மதன் அந்த அழுகைக் குரலைக் கேட்டுக் கண்களை மூடிக் கொண்டான். கண்களைத் திறந்து பார்த்தால் குழந்தை எதிரே நின்றுகொண் டிருந்தாள். குழந்தையாக அல்ல; வயது வந்த மங்கையாக. இல்லை, இல்லை. இது இந்து. தன் தாய்க்குப் பெண், தன் பெண்ணுக்குத் தாய்! விழிகளைக் காக்கும் கரும் புருவத்தின் வழியே அவள் சிரித்தாள், உதடுகளின் ஓரத்தால் ஊர்ந்து பார்த்தாள்!

இந்த அறையில் தான் அன்று ஒரு நாள் புகைமூட்டம் போட்ட போது மதன் திக்குமுக்காடிப் போனன். இன்று விளாமிச்சை வேரின் வாசனை அவனை வெறி கொள்ளச் செய்தது. நசநச

வென்று பெய்யும் இலேசான மழை, தாரையாக ஊற்றும் பெருமழையைக் காட்டிலும் ஆபத்தானது. எனவேதான் வெளியே விழவேண்டிய நீர் மேலே உள்ள ஏதோ இணைப்பில் இறங்கி இந்துவுக்கும் மதனுக்கும் இடையே சொட்டலாயிற்று. ஆனால் மதன் குடிவெறியனாகிக்கொண் டிருந்தான். அந்த மயக் கத்தில் அவனது விழிகள் சுழன்று மூடின. மூச்சு வேகமாகியது; மனிதனது மூச்சாகவே தோன்றவில்லை.

''இந்து!'' மதன் அழைத்தான். அவன் குரல், திருமணத் தன்று ஒலித்த குரலைக் காட்டிலும் இரண்டு ஸ்வரம் அதிகமாக ஒலித்தது. இந்து வெளியே பார்த்தவண்ணமே, ''உம்'' கொட்டினாள். அவள் குரல் இரண்டு ஸ்வரம் தாழ்ந்திருந்தது. இன்று முழுநிலவுக்குப் பதில் அமாவாசை இருட்டாக இருந்தது.

மதன் இந்துவின் பக்கம் கைநீட்டுவதற்கு முன்பாகவே இந்து தானாகவே மதனோடு ஒட்டிக்கொண்டாள். மதன் தன் கையினால் இந்துவின் மோவாயைப் பிடித்து உயர்த்தி, அவள் இழந்த தென்ன, அடைந்ததென்ன என்று பார்க்கலானான். இந்துவும் மதனின் கருத்துக்கொண் டிருக்கும் முகத்தின்மீது ஒரு முறை தன் பார்வையை வீசினாள். அப்புறம் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

''இதென்ன இது! உன் கண்கள் வீங்கியிருக்கின்றனவே?'' என்று மதன் நடுங்கிப் போய்க் கேட்டான்.

''சும்மாத்தான்!'' என்ற இந்து குழந்தையின் பக்கம் சுட்டிக் காட்டி, ''இரவு முழுவதும் கண் விழிக்க வைத்துவிட்டாள் இந்தப் பேய்ச்சி அம்மாள்!'' என்றாள்.

குழந்தை அப்போது அழுகை ஓய்ந்து மௌனமாயிருந்தாள். இப்போது என்ன நடக்கப்போகிறது என்பதை மூச்சை அடக்கிக்கொண்டு அவள் பார்ப்பதுபோலத் தோன்றியது. வானத்திலிருந்து மழை பொழிவதும் நின்றிருந்தது. மதன் மீண்டும் கவனமாக இந்துவின் கண்களைப் பார்த்தான். ''ஆமாம், ஏன் இந்தக் கண்ணீர்?'' என்று கேட்டான்.

''ஆனந்தக் கண்ணீர்!'' என்ற இந்து, ''இன்றைய இரவு எனக்கே சொந்தம் அல்லவா?'' என்று முடித்தாள். அப்புறம் ஒரு விந்தைச் சிரிப்பை ஓடவிட்டு அப்படியே மதனை ஆரத் தழுவிக் கொண்டாள். ஓர் ஆனந்த உணர்வில் மதன் பேசினான்: ''இன்று பல ஆண்டுகளுக்குப்பின் என் ஆசை நிறைவேறி இருக்கிறது, இந்து! நான் எப்போதுமே விரும்பியது . . .''

''ஆனால் நீங்கள் என்னிடம் கூறவே இல்லையே!'' இந்து கேட்டாள்: ''நான் திருமணத்தன்று இரவு உங்களிடம் என்ன கேட்டேன், நினைவிருக்கிறதா?''

''ஓ! உங்கள் துயரத்தை எனக்குத் தாருங்கள் என்றாய்!'' மதன் விடை அளித்தான்.

''ஆனால் நீங்கள் என்னிடம் எதுவுமே கேட்கவில்லையே?''

''நானா?'' மதன் வியந்த குரலில் சொன்னான். ''நான், என்னத்தைக் கேட்பது? நான் கேட்டுப் பெறக்கூடியதைத்தான் நீயே வலியக் கொடுத்துவிட்டாயே! என் குடும்பத்தாரிடம் பாசம், என் தம்பி தங்கைகளுக்குக் கல்வி—கேள்வி, கல்யாணம்—கார்த்திகை, இந்த அழகான அன்பான குழந்தைகள் என்று நீ எத்தனை வாரி வழங்கிவிட்டாய். அப்புறம் கேட்க என்ன இருக்கிறது?''

''நானும் அப்படித்தான் எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் அப்படி இல்லை என்பது இப்போதுதானே தெரிந்தது!'' என்றாள் இந்து.

''நீ என்ன சொல்கிறாய்?''

''ஒன்றும் இல்லை!'' என்று தயங்கி நிறுத்திய இந்து, ''நானும் ஒரு பொருளை அமுக்கி வைத்துக்கொண்டு விட்டேன்!'' என்றாள்.

''என்ன பொருளை அமுக்கி விட்டாய்?''

இந்து சிறிது நேரம் பேசாமல் இருந்தாள். பிறகு தன் முகத்தை விலக்கிக்கொண்டு, ''என் மானத்தை—என் மகிழ்ச்சியை. அப்போதே நீங்களும், 'உன் இன்பத்தை எனக்குக் கொடு' என்று கேட்டிருந்தால், நானும்... நானும்...!'' என்றாள். வாக்கியத்தை முழுதும் முடிக்க முடியாமல் அவளுக்குத் தொண்டையை அடைத்துக்கொண்டது.

பிறகு சிறிது நேரம் கழித்து அவள் மெதுவாகக் கூறினாள்: ''இப்போது என்னிடம் எதுவுமே இல்லையே!''

மதனின் கைப்பிடி தளர்ந்துவிட்டது. அவன் கூனிக் குறுகி விட்டான். பூமிக்குள்ளே புதைந்து விட்டாற்போன்ற உணர்வில் கூசி நின்றான். ''இந்தக் கல்வியறிவில்லாத பெண்! யாரோ சொல்லிக் கொடுத்த சொல்...?''

இல்லை... அவன் பூமிக்குள் புதைந்து போகவில்லை. அவன் இப்போதுதான் எதிர்த்தாற்போல், வாழ்வென்னும் உலையிலிருந்து வெளிவந்திருக்கிறான். இப்போதுதான் அவன்மீது விடாமல் சுத்தியல் அடிகள் விழுந்துகொண்டிருக்கின்றன. அந்த

அடியில் நாற்புறமும் நெருப்புப் பொறிகள் பறந்துகொண்டிருக்கின்றன!

சிறிது நேரத்துக்குப் பின், மதனுக்கு அறிவு தெளிந்தது. ''நான் இப்போதுதான் உணர்ந்து கொண்டேன், இந்து!'' என்முன்.

பிறகு அழுதவாறே மதனும் இந்துவும் ஒருவரை யொருவர் அணைத்துக் கொண்டனர். இந்து மதனின் கையைப் பற்றிக் கொண்டாள்; மனிதன் மரித்தபின்பே அடையக்கூடிய உலகுக்கு இட்டுச் சென்முள். உண்மை இன்பம் என்பது எப்படி இருக்கும் என்று கோடி காட்டுவதுபோல் இருந்தது!

தொட்டாற்சுருங்கி

''தொட்டாற் சுருங்கிச் செடி அம்மா,
கை பட்டால் வாடி விடும் அம்மா!''

பிரிவினை ஆயிற்று. காயமுற்ற எண்ணற்ற மக்கள் எழுந்து தங்கள் உடல்மீதிருந்த இரத்தத்தைத் துடைத்து விட்டுக் கொண்டார்கள் அப்புறம் எல்லாரும் சேர்ந்து உடல் நன்ருகவும் உள்ளம் புண்பட்டும் போயிருந்த மக்களிடம் கவனம் செலுத்தலானுர்கள்.

தெருவுக்குத் தெரு, வட்டத்துக்கு வட்டம் புனர்வாழ்வுக் குழுக்கள் ஏற்பட்டன. ஆரம்பத்தில் பெருமுயற்சியோடு ''வேலை அளி'', ''நிலம் அளி'', ''வீடு அளி'' போன்ற திட்டங்கள் தொடங்கப்பட்டன. ஆனுல் ஒரே ஒரு திட்டத்தின்மீது யாருமே கவனம் செலுத்தவில்லை. கடத்தப்பட்ட பெண்கள் சம்பந்தப்பட்ட திட்டமே அது. ''இதயத்தில் இடம் அளி'' என்பது அதன் கோஷம். இந்தத் திட்டத்தை நாராயண பாபா கோவில், அதைச் சுற்றியுள்ள பகுதிகள் ஆகியவற்றில் வசித்து வந்த பழைய சம்பிரதாயங்களில் பிடிப்புள்ளவர்கள் ஏற்காததோடு பலமாக எதிர்த்தும் வந்தனர்.

இந்தத் திட்டத்தைச் செயலாக்குவதற்காகக் கோயிலுக்கு அருகில் இருந்த ''மூல்லா ஷகூர்'' ப் பகுதியில்ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. பதினேரு வாக்குரிமைகள் அதிகம் பெற்ற சுந்தர்லால் பாபு இந்தக் கமிட்டியின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வக்கீல் ஐயா, பஞ்சாயத்துத் தலைவர், சுங்கச் சாவடி எழுத்தர்—மற்றும் அந்தப் பகுதியைச் சேர்ந்த பிரமுகர்கள் அனைவருமே, இந்தப் பணியைச் சுந்தர்லாலைக் காட்டிலும் வேறு யாருமே வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது என்று எண்ணினுர்கள். சுந்தர்லாலின் மனைவியே கடத்திச் செல்லப்பட்டவள் என்பதனுல் ஒருவேளை அவர்கள் அப்படி எண்ணியிருக்கலாம். அவள் பெயர் லாஜோ; லாஜவந்தி என்பது முழுப் பெயர்.

இதற்காகக் காலை ஊர்வலம் செல்லும்போது சுந்தர்லால் பாபுவும் அவருடைய தோழர்களான ரிசாலு, நேகீராம் ஆகியவர்களும் கோஷ்டி கானம் இசைப்பார்கள்: ''தொட்டாற் சுருங்கிச் செடி அம்மா, கை பட்டால் வாடி விடும் அம்மா!'' என்று. சுந்தர்லாலின் வாய் இருந்தாற்போலிருந்து சட்டென்று அடைத்துவிடும். அவன் மௌனமாக நடந்த வண்ணமே லாஜவந்தியைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்குவான்: 'அவள் எங்கு இருப்பாளோ? என்ன நிலையில் இருப்பாளோ, என்னைப்பற்றி என்ன எண்ணிக்கொண்டிருப்பாளோ, அவள் எப்பொழுதாவது வருவாளோ, அதுவும் மாட்டாளோ?' கப்பிச் சாலையில் செல்லும்போது அவன் கால்கள் தடுமாறத் தொடங்கும், இந்தச் சிந்தனை காரணமாக.

இப்போது நிலை மாறி விட்டது. அவன் லாஜவந்தியைப்பற்றி நினைத்துப் பார்ப்பதையே அடியோடு மறந்துவிட்டான். அவனது சொந்தத் துயரம் இப்பொழுது உலகத் துயரமாக மாறிவிட்டது. அவன் தன் துயரத்திலிருந்து விடுபடுவதற்காகப் பொதுப் பணியில் தன்னை வெகுவாக ஈடுபடுத்திக்கொண்டான். அப்படியும் மற்றத் தோழர்களின் குரலோடு சேர்ந்து கோஷ்டி கானம் இசைக்கும்போது அவனுக்கு இந்த நினைவு வந்துவிடும்: 'மனித மனம் எத்தனை மென்மையானது! சிறு விஷயமானாலும் எப்படித் துயருற்று விடுகிறது? மனித மனம் தொட்டாற்சுருங்கிச் செடிதான். அருகில் கை வந்தாலும் தொட்டாற்சுருங்கி இலைகள் எப்படிக் குவிந்துவிடுகின்றன? அது போலவே!''

ஆனால் அவன் லாஜவந்தியிடம் நடந்துகொண்ட முறை இருக்கிறதே, அது கொடுமையிலும் கொடுமை. கொடுமையாக நடந்து கொள்வதில் அவன் ஒரு குறையும் வைக்கவில்லை. உட்காரத் தெரியவில்லை, எழுந்திருக்கத் தெரியவில்லை, நடக்கத் தெரியவில்லை, உணவு ஆக்கத் தெரியவில்லை, படைக்கத் தெரியவில்லை, உண்ணத் தெரியவில்லை என்பனபோல் சின்னஞ்சிறு விஷயங்களுக்கெல்லாம் இல்லாத குறைகளெல்லாம் கண்டுபிடித்து அடித்துத் துன்புறுத்துவான்.

லாஜோவோ மெலிந்த முசுக்கட்டை மரக்கிளைபோல் மென்மையான கிராமத்துப் பெண். வெயிலில் வெகுவாக அடிபட்டதால், அவள் நிறம் கறுத்துத் தோன்றியது. அவள் உடலில் ஒரு விசித்திரமான பரபரப்புக் குடிகொண்டிருந்தது. தாமரை இலையில் பனி நீர் திரண்டு ஓரிடத்திலும் நிலைபெற்று

நில்லாமல் ஓடியவண்ணம் இருக்குமே, அதுபோல் அவள் துறுதுறு வென்று இருப்பாள். அவளது இளைப்பு, உடல் நலக் குறைவுக் கான அறிகுறி அல்ல. உடல் நலம் பேணுவதற்கான அடையாளமே. அதைப் பார்த்துப் பருத்த உடல் படைத்த சுந்தர்லால் முதலில் பயந்தான். ஆனால் லாஜோ எந்தச் சுமையையும், எந்தத் துயரையும், ஏன்? அடி உதையையும் கூட அநாயாசமாகத் தாங்குகிறாள் என்பதைக் கண்டதும், அவன் தன் கொடுந்தவறைச் சிறுகச் சிறுக வளர்த்துக் கொண்டே போனான். பொறுமைக்கும் எல்லையுண்டு. எல்லை மீறிவிட்டால் பொறுமைக் கரையும் தகர்ந்துபோகும் என்பதை அவன் நினைத்தே பார்க்கவில்லை. எல்லை மங்கு வதற்கு லாஜவந்தியும் உறுதுணையாக இருந்தாள். அவளால் வெகுநேரம் வரை வாட்டமே உருவாக உட்கார்ந்திருக்க முடிவதில்லை. பலத்த சண்டைக்குப் பின் சுந்தர்லால் ஒருமுறை இலேசாகச் சிரித்துவிட்டால் போதும், அவளால் தன் சிரிப்பை யும் மகிழ்ச்சியையும் அடக்கிக்கொள்ள முடியாது. பாய்ந்து அவன் அருகில் செல்லுவாள். அவன் கழுத்தில் கைகளைப் போட்டுக்கொண்டு, ''இனியும் நீங்கள் அடித்தால் நான் உங்க ளோடு பேசவேமாட்டேன்!'' என்பாள். அவள் அடி உதையை யெல்லாம் அடியோடு மறந்துவிட்டாள் என்று தெளிவாகத் தெரியவரும்.

கிராமத்து மற்றப் பெண்களைப் போல அவளும் ஆண் பிள்ளைகள் இப்படித்தான் நடந்துகொள்ளுவார்கள் என் பதைப் புரிந்துவைத்திருந்தாள். பெண்களில் யாராவது எதிர்த்துச் சண்டை கிண்டை போட்டால், அவள் இனத்தைச் சேர்ந்த பெண்களே மூக்கின்மேல் விரலை வைத்து, ''இவள் புருஷனும் ஓர் ஆண் பிள்ளையா? ஒரு பெண்ணை அடக்கிவைத்துக் கொள்ளத் தெரியவில்லையே!'' என்று வியப்புத் தெரிவிப்பார்கள் என்றும் அறிந்து வைத்திருந்தாள். அந்த அடியும் உதையும் அவர்களுடைய பாடலிலும் வழங்கலாயிற்று. லாஜோவே கூடப்பாடியதுண்டு: ''நான் நகர்ப் பகுதிப் பையனைத் திருமணம் செய்துகொள்ளமாட்டேன். ஏனெனில் அவன் பூட்ஸ் போட் டிருப்பான். என் இடையோ மிக மெலிந்தது!'' என்னும் பொருள்படப் பாடுவாள். ஆனால் முதல் பார்வையிலேயே லாஜோ ஒரு நகரத்து வாலிபனிடம் மோகம் கொண்டு விட்டாள். அவன் பெயர்தான் சுந்தர்லால். அவன் ஒரு

கல்யாண கோஷ்டியுடன் லாஜவந்தியின் கிராமத்துக்கு வந்திருந்தான். அவன் மணமகனின் செவிகளில் ஓதியது இவ்வளவு தான். "உன் மைத்துனியே மிகமிக அழகி, நண்பா! உனக்கு வரப் போகிற மனைவியும் படே ஜோராகத்தான் இருக்கணும்!"

லாஜவந்தி சுந்தர்லாலின் இந்த வார்த்தைகளைக் கேட்டு விட்டாள். ஆனால் அதே நேரத்தில் சுந்தர்லால் எத்தனை பெரிய ஆபாசமான பூட்ஸ் அணிந்துகொண்டிருக்கிறான், அவளுடைய இடை எவ்வளவு சிறுத்தது என்பதை அடியோடு மறந்தே விட்டாள்.

காலை ஊர்வலத்தின்பொழுது சுந்தர்லாலுக்கு இதுபோன்ற எத்தனையோ விஷயங்கள் நினைவுக்கு வரும். அதைத் தொடர்ந்து சிந்தனை ஓடும். 'ஒரு தடவை, ஒரே ஒரு தடவை இந்த லாஜோ கிடைத்துவிட்டால், நான் உண்மையிலேயே அவளை என் உள்ளத்துள் குடிவைப்பேன். இந்த அப்பாவிப் பேதைப் பெண்கள் ஓடியதற்கு இவர்கள் குற்றம் ஏதும் இல்லை. போர் வெறிக்கும் ஏமாற்றுச் செயலுக்கும் இலக்கானதில் இவர்கள் தவறு ஏதும் இல்லை என்று மக்களுக்கு எடுத்துச் சொல்வேன். பாவம் ஏதும் அறியாத, குற்றம் ஏதும் புரியாத இந்த அப்பாவிப் பெண்களை ஏற்றுக்கொண்டு இடம் கொடுக்கச் சமூகம் முன்வர வில்லையென்றால், அந்தச் சமூகம் ஓர் அழுகிப் போன சமூகம். அதை ஒழித்துக் கட்டவேண்டும் என்றும் அடித்துக் கூறுவேன்.'

அவன் அத்தகைய பெண்களுக்குக் குடும்பங்களில் இடம் கொடுக்கவேண்டிய அவசியத்தை உபதேசித்தான். வீட்டில் ஒரு பெண்ணுக்கு, ஒரு தாய்க்கு, மகளுக்கு, உடன்பிறந்தவளுக்கு, மனைவிக்கு எத்தகைய மதிப்பும் இடமும் கொடுக்கப்படு கின்றனவோ, அதே இடமும் மதிப்பும் அவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று ஆணித்தரமாக எடுத்துக் கூறுவான். அப்புறம் அதைத் தொடர்ந்து, "ஜாடைமாடையாகக்கூட அவர்களுக்கு அவர்கள் வாழ்க்கையில் நடந்துபோன நிகழ்ச்சிகளை நினைவு படுத்தக்கூடாது. ஏனெனில் அவர்கள் மனம் புண்பட்டிருக் கிறது. பூப்போன்ற உள்ளம், தொட்டாற்சுருங்கியைப் போன்றது. கைபட்டால் வாடிவிடக்கூடியது. எனவே மூச்சு விடக்கூடாது!" என்றும் மனத்தில் தைக்கும்படியாகக் கூறுவான்:

"இதயத்தில் இடம் அளி." திட்டத்தை நடைமுறையில் செயற்படுத்துவதற்காக "முல்லா ஷகூர்"ப் பகுதியில் நிறுவிய

குழு பல காலை ஊர்வலங்களை நிகழ்த்தியது. விடியற் காலையில் நான்கு அல்லது ஐந்து மணிக்கு ஊர்வலம் தொடங் கும். சொல்லப் போனால் அதுதானே சரியான நேரம். ஜனச் சந்தடி அதிகம் இராது; போக்குவரத்துச் சிக்கலும் இராது. இரவு முழுவதும் காவல்புரியும் நாய்கள்கூட அணைந்துபோன அடுப்புச் சாம்பலின் கதகதப்பில் தலையை நெட்டுக்கொண்டு உறங்கிப் போகும் நேரம் ஆயிற்றே. தங்கள் தங்கள் படுக்கை களில் சுருட்டி மடக்கிக்கொண்டு படுத்திருக்கும் மக்கள் காலை ஊர்வலத்தின் கோஷத்தைக் கேட்டு, ''ஓ! அந்த மண்டலி!'' என்று இழுத்தாற்போலக் கூறிவிட்டு இழுத்துப் போர்த்திக் கொள்ளுவார்கள். அப்புறம் பொறுமையுடனோ, சினத்துடனோ பாபு சுந்தர்லாலின் பிரசாரப் பேச்சை விதியே என்று செவி மடுப்பார்கள். எப்படியோ ஜாக்கிரதையாக இந்தப் பக்கம் வந்துவிட்ட பெண்கள், மலர்ந்த முட்டைக்கோஸைப் போலப் பரந்து கிடப்பார்கள். அவர்களுடைய கணவன்மார்கள் அவர் கள் பக்கத்தில் தண்டாக விறைத்துப் படுத்துக் காலை ஊர்வலத் தின் இந்தக் கூச்சலை விமரிசனம் செய்தவாறு பொரிந்து தள்ளி விடுவார்கள் அல்லது எங்காவது ஒரு குழந்தை சிறிது நேரத் துக்குக் கண்களைத் திறக்கும். :'இதயத்தில் இடம் அளி'' பற்றித் தொண்டை கம்ம, துயரம் பொங்கச் செய்யப்படும் பிரசாரத் தைத் தாலாட்டுப் பாட்டென எண்ணி மீண்டும் கண் உறங்கிவிடும்.

ஆனால் காலை வேளைகளில் காதில் விழும் சொற்கள் வீணாவ தில்லை. பகல் முழுதும் நடத்தும் வாழ்க்கைப் போராட்டத் தின் போதுகூட அது மூளையில் வண்டாக வட்டமிட்டுக்கொண் டிருக்கும். சில சமயங்களில் மனிதன் அதன் பொருளைப் புரிந்து கொள்ளாமலேகூடத் திருப்பித் திருப்பி முணுமுணுத்துக் கொண்டே இருப்பதுண்டு. இப்படியாகக் காலை நேரத்து அந்தப் பிரசார ஒலி மூளையில் குடி புகுந்துவிட்டதனால், மிருதுரை சாராபாயி அந்த நாட்களில் பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே கடத்தப்பட்ட பெண்களைத் திரும்பவும் மாற்றி அழைத்து வரும் பணியில் ஈடுபட்டபொழுது, ''முல்லா ஷகூர்''ப் பகுதியைச் சேர்ந்த சிலர், அத்தகைய பெண்களுக்கு மீண்டும் இடம் அளிக்கத் துணிந்து தயாராகிவிட்டனர். அவர்களைச் சேர்ந்தவர்கள் நகரத்துக்கு வெளியே உள்ள பெரியச் சுங்கச் சாவடிக்கு அத்தகைய மாற்றுப் பெண்களைக் காணச் சென்றனர்.

கடத்தப்பட்ட பெண்களும் அவர்களைக் காணச் சென்றவர்களும் சிறிது நேரம் ஒருவரை ஒருவர் உற்று நோக்கியவண்ணம் நிற்பர். பிறகு தலையைக் குனிந்தவாறு குட்டிச் சுவராகிவிட்ட தங்கள் குடும்பங்களைக் கட்டிக் காத்து மீண்டும் சமைத்துக்கொள்ளப் புறப்படுவார்கள். ரிசாலு, நேகீராம், சுந்தர்லால் ஆகியவர்கள் ஆட்களைப் பார்த்து அவர்களுக்கேற்ப, ''மகேந்திரசிங் வாழ்க!'' என்று கோஷிப்பார்கள். இன்னொரு சமயம் ''சோஹன்லால் வாழ்க!'' என்று வாழ்த்தொலி எழுப்புவார்கள். இப்படி வாழ்த்தொலி எழுப்பியே அவர்கள் தொண்டை உலர்ந்து விட்டது!

ஆனால் கடத்தப்பட்ட பெண்களில் சிலரை அவர்கள் கணவன் மார்களோ, தாய் தந்தையரோ, சகோதர சகோதரிகளோ அடையாளம் கொண்டுகொள்ளவே மறுத்துவிட்டனர். ''ஏன் அவர்கள் செத்துத் தொலையவில்லை? தன் கற்பையும் மானத் தையும் காத்துக்கொள்ள இவர்கள் விஷத்தை ஏன் தின்ன வில்லை? கிணற்றில் ஏன் குதிக்கவில்லை? சுத்தப் பயங்கொள்ளிகள்! இவர்களுக்கு இவர்கள் உயிர்தான் வெல்லமாகிவிட்டது! நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் எத்தனை பெண்கள் கற்புப் பறிபோவதற்கு முன்னால் உயிரையே கொடுத்திருக் கிறார்கள்! இவர்கள் இப்படி இந்த அவல வாழ்வைப் பிடித்துக் கொண்டு தொங்குகிறார்களே!'' என்று உள்ளங் குமுறியிருக் கிறார்கள். ஆனால் இப்படிப் புலம்புபவர்கள், உயிர் வாழ்ந்து காட்டுவதற்கு அவர்கள் எத்தகைய நெஞ்சுரத்தையும் வீரத்தை யும் பயன்படுத்தினார்கள் என்பதையோ, கல்லாகிவிட்ட தங்கள் வழிகளால் மரணத்தை எப்படி எதிர்கொள்ளுகிறார்கள் என்ப தையோ அறியவில்லை. தங்கள் சொந்தக் கணவன்மார்கள்கூடத் தங்களை அடையாளம் கண்டுகொள்ளாத உலகில் வாழ்வது என்ன, சாதாரணச் செயலா? அப்படியும் அவர்களில் இரண் டொருத்தி மனத்தால் தன் பெயரை முணுமுணுத்து இன்னார் மனைவி என்பதைக் காட்டிக்கொள்ள முயல்வாள் அல்லது தன் தம்பியை அந்தக் கூட்டத்தில் கண்டு கடைசி அஸ்திரமாக, ''நீகூட என்னை அடையாளம் கண்டுகொள்ள வில்லையாடா பிஹாரி? உன்னை என் மடியில் போட்டுக்கொண்டு எத்தனையோ விளையாட்டுக் காட்டியிருக்கிறேனேடா!'' என்பாள். பிஹாரி கேவிக்கொண்டு அவளிடம் தாவத்தான் நினைப்பான். இருந்தாலும் அதற்குமுன் அப்பா அம்மாவின் முகத்தை ஒரு

முறை பார்ப்பான். அப்பா—அம்மா இதயத்தில் கைவைத்து அழுத்திக்கொண்டு நாராயண் பாபாவைப் பார்ப்பார்கள். வகையற்றுத் தொகையற்று வேறுவழி தோன்றாமல் நாராயண் பாபா வானத்தைப் பார்ப்பார். அவர் பார்வைக்கு உண்மையில் பொருள் ஏதும் இல்லை. வெறும் பார்வை மயக்கந்தான். பார்வைக்கும் ஓர் எல்லையுண்டு. அதைத் தாண்டிப் பார்வையும் செயற்படுவதில்லை.

ஆனால் மாற்றுக்கு மறுதலையாக சாராபாயி ராணுவ டிரக்கில் கொண்டு வந்த பெண்களில் லாஜோ இல்லை. சுந்தர்லால் இதயம் படபடக்கப் பரபரப்பு ஒருபுறமும், அச்சம் மறுபுறமு மாகக் கடைசிப் பெண் டிரக்கிலிருந்து இறங்கும் வரையில் பார்த்தான். ஓர் உறுதி ஏற்பட்டபின்தான் அவனுக்கு அமைதி பிறந்தது. மௌனமாகத் தலைநிமிர்த்திப் பெருமிதத்துடன் தன் குழுப் பணியைப் பன்மடங்குப் பெருக்குவதில் முனைந்தான். இப்பொழுதெல்லாம் அவர்கள் காலையில் மட்டும் ஊர்வலம் வருவதில்லை. மாலையிலும் ஊர்வலம் வரலாயினர். அதோடு இரண்டொரு சிறு கூட்டங்களேகூடப் போடலாயினர்.

கூட்டம் என்று போட்டுவிட்டால், குழுவின் பிராயம் முதிர்ந்த தலைவரான கால்கா பிரசாத் சொற்பொழிவு ஆற்றத் தவற மாட்டார். ''ஒருவனே தேவன்'' என்ற கொள்கையில் ஊறிய ''ஸூஃபி'' மதக் குருமார்களின் பாணியில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவார். ரிசாலு, அவர் தாம்பூலம் உமிழும் பாண்டத்தைக் கையில் ஏந்திச் சொற்பொழிவு முடியும் வரையில் ''டியூட்டி'' புரிவான். ஒலிபெருக்கியிலிருந்து அவர் பேசும்பொழுது பற்பல விந்தை ஒலிகள் எழும். அப்புறம் எழுத்தர் நேகிராம் இரண் டொரு வார்த்தைகள் பேச எழுந்திருப்பார். ஆனால் அது அனுமார் வாலாக நீண்டுகொண்டே போகும். சாஸ்திரங் களையும் புராணங்களையும் சான்று காட்டி எத்தனைக்கெத்தனை பேசுவாரோ, அத்தனைக்கத்தனை பேச்சு குழுவின் கொள்கையை விட்டுத் தடம் புரண்டு போகும். களம் கைநழுவிப் போவதைக் கண்டு சுந்தர்லால் பாபு எழுவான். ஆனால் இரண்டொரு வார்த்தைகளுக்குமேல் அவனால் பேச முடியாது. அவனுக்குத் தொண்டையை அடைக்கும். கண்கள் நீரைப் பெருக்கும்; அப்புறம் அழுகை வரும்; பேச்சு வராது. கடைசியில் அப்படியே பேசாமல் அமர்ந்து விடுவான். ஆயினும் கூடியிருக்கும் மக்க ளிடையே ஒரு விந்தையான மௌனம் நிலவும். சுந்தர்லால்

பாபுவின் இரண்டொரு வார்த்தைகளும் அழுகையில் அழுந்தி இதயத்தின் அடித்தளத்திலேயே தங்கி விடுவதாலும், வக்கீல் கால்கா பிரசாதின் ''ஸூஃபி'' முறை உபதேச மொழிகள் கரகரத்துக் கனத்துப் போய்விடுவதாலும் மக்களின் மனத்தில் பதியாது. அவர்களுடைய அழுகைக்கு ஆதரவு தரவேண்டி அவர்களும் அங்கேயே அழுது தீர்த்துவிடுவார்கள். அவர்கள் உணர்ச்சிக்கு மதிப்புத் தந்துவிட்டதாக மகிழ்ந்து வீடு திரும்புவார்கள். சிந்தனையொழிந்து மக்களின் மூளையும் வெறுமையோடி இலேசாகிவிட்டிருக்கும். இதுவே கூட்டம் கண்ட பலன்.

ஒரு நாள் கமிட்டியினர் மாலையிலும் பிரசாரம் செய்யப் போனபொழுது, பழைய கோட்பாடுகள் கொண்டவர்களின் கோட்டையில் நுழைந்துவிட்டனர். கோயிலுக்கு வெளியே அரசமரத்தடியைச் சுற்றிப் போட்டிருந்த சிமெண்ட்டு மேடையில் பக்தர்கள் அமர்ந்திருந்தனர். இராமாயணப் பிரவசனம் நடந்து கொண்டிருந்தது. நாராயண் பாபா, ராமாயணத்தில் ஒரு வண்ணான் தன் வண்ணாத்தியை வீட்டைவிட்டு வெளியேற்றின கட்டத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார். ' 'நான் ஒன்றும் ராமசந்திர சக்ரவர்த்தி அல்ல, இத்தனை ஆண்டுகள் இராவணனுடன் இருந்துவிட்டு வந்த சீதையைச் சேர்த்துக்கொண்டு குடித்தனம் நடத்த!' என்று வண்ணான் இலேசாகச் சொல்லிவிட்டான். அதைச் செவியுற்ற ஸ்ரீராமர் மகா பதிவிரதையான சீதையை வீட்டிலிருந்து வெளியேற்றிவிட்டார். அதுவும் அவள் கர்ப்பவதியாயிருக்கும் நேரத்தில்! 'இதைக் காட்டிலும் ராம ராஜ்யத்தின் பெருமைக்கு வேறு சான்று வேண்டுமா?' நாராயண் பாபா தொடர்ந்தார்: ராம ராஜ்யம் என்பது இதுதான்! ஒரு வண்ணானின் வார்த்தைக்குக்கூட எத்தனை மதிப்பு வைத்திருந்தார் ஸ்ரீராமர்!''

கமிட்டியின் ஊர்வலம் கோவில் அருகில் வந்து நின்றது. மக்கள் ராமாயணக் கதையையும் சுலோகத்தையும் கேட்க நின்றுவிட்டனர். சுந்தர்லால் கடைசி வாக்கியத்தைக் கேட்டதும் தன்னையும் மறந்து கூறினான்: ''எங்களுக்கு இத்தகைய ராம ராஜ்யம் தேவை இல்லை, அப்பனே!''

''பேசாதே ஐயா! யாரையா நீ? வாயை மூடு ஐயா!'' கூட்டத்திலிருந்து பல குரல்கள் ஒலித்தன. சுந்தர்லால் முன்னே

வந்து நின்றுகொண்டு, ''என்னைப் பேசாதே என்று யாரும் தடுக்கமுடியாது'' என்றான்.

பல குரல்கள் ஒன்று சேர்ந்து, ''பேசாதே! நாங்கள் பேச விடமாட்டோம் உன்னை!'' என்றன. ஒரு மூலையிலிருந்து, ''கொன்றுவிடுவோம். ஜாக்கிரதை!'' என்று யாரோ மிரட்ட வேறு செய்தார்கள்.

நாராயண் பாபா மிகவும் இனிய குரலில், ''உனக்குச் சாஸ்திரங்களின் பெருமை தெரியாது, சுந்தர்லால்!'' என்றார்.

''ஆனால் ஒன்று எனக்குத் தெரிகிறது, பாபாஜி! ராம ராஜ்யத்தில் வண்ணான் பேச்சு எடுபடக்கூடும். ஆனால் சுந்தர்லால் பேச்சைக் கேட்கத்தான் யாரும் இருக்கமாட்டார்கள்'' என்றான் சுந்தர்லால்.

சற்றுமுன் கொன்று போடக் குதித்து எழுந்த மக்கள், தங்களுக்குக் கீழே இருந்த அரசம்பழத்தையும் சருகுகளையும் அகற்றி விட்டு மீண்டும் உட்கார்ந்தவாறே, ''கேள், கேள்!'' என்றனர்.

ரிசாலுவும் நேகீராமும் சுந்தர்லாலை உசுப்பிவிட்டார்கள். சுந்தர்லால் கேட்டான்: ''ஸ்ரீராமர் நமது தலைவர். ஏன் பாபாஜி! அவர் ஒரு வண்ணானின் வார்த்தையை மெய்யென்று எண்ணி விட்டாரே, இத்தனை பெரிய மகாராணியின் பேச்சை நம்பாமல்? அது ஏன்?''

நாராயண் பாபா தமது தாடியைத் தடவி யோசித்தவாறே, ''ஏனென்றால் சீதை அவருடைய மனைவி, சுந்தர்லால்! இந்த விஷயங்களின் பெருமையெல்லாம் உனக்குப் புரியாது!'' என்றார்.

''ஆம், பாபா!'' சுந்தர்லால் கூறினான். ''இந்த உலகத்தில் எத்தனையோ விஷயங்கள் என் அறிவுக்கு எட்டாதவையாகவே இருக்கின்றன. நான் உண்மையான ராம ராஜ்யமாக எதை நினைக்கிறேன், தெரியுமா? மனிதன் தன் விஷயத்தில்கூடக் கொடுமை இழைத்துக்கொள்ளாமல் எங்கு இருக்கிறானோ, அதுவே ராம ராஜ்யம். பிறருக்கு அநீதி இழைப்பது எவ்வளவு பாவமோ, அவ்வளவு பாவம் தனக்குத்தானே கொடுமை இழைத்துக்கொள்ளுவதும். இன்றுங்கூடப் பகவான் ராமர், சீதையை வீட்டிலிருந்து வெளியேற்றிவிட்டார், அவள் ராவணனிடம் இருந்துவிட்டு வந்திருக்கிறாள் என்பதற்காக. இதில் சீதையின் குற்றம் என்ன? அவளும் நமது தாய்மார்களைப்போல, தங்கைமார்களைப்போல ஏதோ ஒரு மோசடிக்கும் ஏமாற்றத்

துக்கும் தானே இலக்காகி இருக்கிறாள்? இதில் சீதையின் கூற்று உண்மையா, பொய்யா என்பது ஒருபுறம் இருக்கட்டும். ராட்சசன் ராவணனுடைய காட்டுமிராண்டித்தனத்துக்கு இதில் ஒரு பங்கு உண்டா, இல்லையா? ராவணனுக்குப் பத்துத் தலையாம். அதில் ஒரு தலை கழுதைத் தலையாம்!''

''இன்று நமது குற்றமேதும் அறியாத சீதை, வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறாள். சீதை—அவள் ஒரு மானினி! சங்கோசி . . . !''

சுந்தர்லால் பாபு விசித்து அழ ஆரம்பித்துவிட்டான். ரிசாலுவும் நேகீராமும் சிவப்புக் கொடியைத் தூக்கிக்கொண்டார்கள். அவற்றில் அன்றுதான் பள்ளி மாணவர்கள் வெகு ஜாக்கிரதையாக கோஷங்கள் எழுதி ஒட்டியிருந்தார்கள். எல்லாரும், ''சுந்தர்லால் பாபு வாழ்க!'' என்று கோஷமிட்டுக்கொண்டு புறப்பட்டனர். கூட்டத்தில் ஒருவன், ''மகா பதிவிரதையான சீதை வாழ்க'' என்று கூச்சலிட்டான். இன்னொரு புறத்திலிருந்து ''ஸ்ரீ ராமர் . . .'' என்று குரல் வந்தது.

அப்புறம் எத்தனை எத்தனையோ குரல்கள், ''பேசாதே! பேசாதே!'' என்று கூவின. நாராயண் பாபாவின் மாதக் கணக்கான முயற்சியும் உழைப்பும் வீணாகின. எத்தனையோ பேர் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். அந்த ஊர்வலத்தை வக்கீல் கால்கா பிரசாத், எழுத்தர் ஹுகும்சிங் இருவரும் முன் நின்று நடத்திக்கொண்டு சுங்கச்சாவடியை நோக்கிச் சென்றனர். அவர்களுடைய கிழட்டுத் தடி தரையைத் தட்ட, வாய்கள் வெற்றிக் குரல் எழுப்ப, இருவருக்கும் இடையே சுந்தர்லாலும் போய்க்கொண்டிருந்தான். அவன் விழிகளிலிருந்து இன்னும் கண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது. இன்று அவன் மனத்துக்குள் மிக மிக வேதனை அடைந்திருந்தான். மக்களோ வீராவேசத்துடன் ஒருவரோடு ஒருவர் இணைந்து பாடிக்கொண்டிருந்தனர்:

''தொட்டாற்சுருங்கிச் செடி அம்மா!
கைபட்டால் வாடிவிடும் அம்மா!''

மக்களின் செவிகளில் இன்னும் பாட்டின் அடிகள் ஒலித்துக் கொண்டிருந்தன. இன்னும் பொழுது புலர்ந்து தரைகூடத் தெரியவில்லை. 'முல்லா ஷகூர்'ப் பகுதியில் 414 இலக்கம்கொண்ட இல்லத்தில் இருந்த கைம்பெண் இன்னும் தன் படுக்கையில் சோம்பல் முறித்தவண்ணம் பெருமூச்சுவிட்டுக் கொண்டுதான் இருந்தாள். சுந்தர்லாலின் கிராமத் தோழன் லால்சந்த் ஓடோடி

வந்தான். சுந்தர்லாலும் வக்கீல் கால்கா பிரசாதும் தங்கள் பொறிசையும் செல்வாக்கையும் பயன்படுத்தி அவனுக்கு ரேஷன் டிப்போ வாங்கிக் கொடுத்திருந்தார்கள். அவன் வந்ததும் வராததுமாகக் கறுப்புப் போர்வைக்குள்ளிருந்து கையை நீட்டி ஆட்டி, ''வாழ்த்துகள்! சுந்தர்லால், வாழ்த்துகள்!'' என்றான்.

சுந்தர்லால் தன் புகைக் குழாயில் பொடியைக் கிட்டித்த வண்ணம், ''எதற்காக வாழ்த்துகள், லால்சந்த்?'' என்று கேட்டான்.

''நான், லாஜோ அண்ணியைப் பார்த்தேன்!''

சுந்தர்லாலின் கையிலிருந்து குழாய் கீழே விழுந்தது; புகையிலைத் தூள்கள் தரையில் சிதறின. ''எங்கே பார்த்தாய்?'' லால்சந்தின் தோள்களைப் பற்றிக் கேட்டான். அவனிடமிருந்து பதில் சீக்கிரம் வராமற்போகவே, அவனை உலுக்கி எடுத்து விட்டான்.

''வாகா எல்லையில்.''

சுந்தர்லால், ''வேறு யாரையாவது பார்த்திருப்பாய்!'' என்று கூறி லால்சந்தைப் பிடித்திருந்த பிடியைத் தளர்த்திவிட்டான்.

''இல்லை, அண்ணா! அது லாஜோதான். சந்தேகமே இல்லை!'' என்று உறுதி கூறினான் லால்சந்த்.

''நீ அவளை எப்படி அடையாளம் கண்டுகொண்டாய்?'' சுந்தர்லால் தரையில் சிந்திக் கிடந்த புகையிலைத் தூள்களைத் திரட்டி, உள்ளங்கையில் வைத்துப் பிசைந்தவாறே கேட்டான்: ''அவளுக்கு என்ன அடையாளம் இருக்கிறது, சொல்!'' இடையே புகை பிடிக்க ரிசாலுவின் ஹுக்காவைப் பயன்படுத்திக் கொண்டான்.

''மோவாயில் ஒரு பச்சை; கன்னத்தில் ஒரு பச்சை!''

''ஆமாமாம்!'' சுந்தர்லால் அதற்குமேல் தானே முடித்து விட்டான்: ''மூன்றாவது நெற்றியில்!''

இனியும் ஐயப்படுவதை அவன் விரும்பவில்லை. லாஜவந்தியின் உடலில் அவன் அறிந்த அங்க அடையாளங்கள் அனைத்தும் அவனுக்கு நினைவு வந்தன. அவள் சிறுவயதில் ஆசைப்பட்டுத் தன் உடலில் பச்சைக் குத்திக்கொண்டிருந்தாள். தொட்டாற் சுருங்கிச் செடியில் தோன்றும் சிறு சிறு பச்சைப் புள்ளிகளை அவை நினைவுபடுத்தின. அந்தப் புள்ளிகளின் அருகில் கையைக் கொண்டுபோனாலே செடி வாடிவிடும். அதுபோலவே அவளும் தன் உடலில் குத்திக்கொண்டிருந்த பச்சையை யாரா

வது சுட்டிக் காட்டினால் நாணிக்கோணிப் போவாள்; கூனிக் குறுகி நிற்பாள். அவள் இரகசியங்கள் அவ்வளவும் அம்பலமாகி விட்டது போலவும், பொத்திப் பொத்திப் பாதுகாத்து வைத் திருந்த பொக்கிஷம் அனைத்தும் பறிபோய்விட்டது போலவும் துடிதுடித்துப் போவாள். சுந்தர்லாலின் உடல் முழுவதும் ஓர் அறியாத அச்ச உணர்வால், ஓர் அறியாத இன்பப் பெருக்கால், அவை உமிழும் தூய தீயின் சூட்டில் பொசுங்கிப் போவது போலத் தோன்றியது. அவன் மீண்டும் லால்சந்தைப் பிடித்துக் கொண்டு, ''லாஜோ வாகாவுக்கு எப்படிப் போனாள்?'' என்று கேட்டான்.

''இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பெண்கள் பரிமாற்றம் நடந்ததல்லவா?'' என்றான் லால்சந்த்.

''அப்புறம் என்ன ஆயிற்று?'' சுந்தர்லால் முழங்கால்களை மண்டியிட்டு உட்கார்ந்து மீண்டும் கேட்டான்: ''என்ன ஆயிற்று அப்புறம்?''

ரிசாலுவும் தன் கட்டிலிலிருந்து எழுந்து நின்றான். புகை பிடிப்பவர்களின் பிரத்தியேக பாணி இருமல் இருமி, ''நிஜ மாகவே வந்துவிட்டார்களா, லாஜவந்தி அண்ணி?'' என்று கேட்டான்.

லால்சந்த் தன பேச்சைத் தொடர்ந்து கூறினான்: ''வாகாவில் பதினாறு பெண்களைப் பாகிஸ்தான் திரும்பத் தந்துவிட்டது. அவர்களுக்குப் பதிலாகப் பதினாறு பெண்களைப் பெற்றுக் கொண்டது. ஆனால் இடையில் இருதரப்பினருக்கும் ஒரு சண்டை ஏற்பட்டுவிட்டது. நமது தொண்டர்கள் ஓர் ஆட்சேபத்தைக் கிளப்பினார்கள், 'நீங்கள் தந்திருக்கும் பெண் களில் பலர் நடுத்தர வயது உள்ளவர்கள், கிழவிகள், எதற்கும் பயனற்றவர்கள்!' என்று. இந்த இழுபறியைக் காண மக்கள் கூடிவிட்டார்கள். அப்பொழுது எதிர்த்தரப்புத் தொண்டர்கள், லாஜோ அண்ணியைக் காட்டி, 'நீங்கள் இவளைக் கிழவி என்று கூறமுடியுமா? பாருங்கள், நீங்கள் தந்திருக்கிற பெண்களில் இவளுக்கு இணையாக ஒருத்தியாவது இருக்கிறாளா?' என்று கேட்டார்கள். அப்பொழுது லாஜோ அண்ணி தனது பச்சைக் குத்துக்களைப் பிறர் கண்களில் படாமல் மறைக்க முயன்று கொண்டிருந்தாள்.

''அப்புறம் சண்டை வலுத்துவிட்டது. அவர்கள் தங்கள் தங்கள் பொருளைத் திருப்பிப் பெறத் தீர்மானித்துவிட்டார்கள்.

ஆனால், நான் கூப்பாடு போட்டேன், 'லாஜோ . . . லாஜோ அண்ணி!' என்று. பலன், நம் பக்கத்துப் படைவீரர்களே எங்களை நையப் புடைத்து அடித்து விரட்டினார்கள்!''

லால்சந்த் தடியடிபட்ட தன் முழங்கையைக் காட்டலுற்றான். ரிசாலுவும் நேகிராமும் பேசாமல் உட்கார்ந்திருந்தனர். சுந்தர் லால் எங்கோ தொலைவில் தன் பார்வையைப் பாயவிட்டான். ஏதாகிலும் யோசனையில் ஓடவிட்டானோ என்னவோ? லாஜோ வந்தும் வரவில்லை . . . சுந்தர்லாலின் முகம் போயிருந்த போக்கு, அவன் கொளுத்தும் வெயிலில் பிகானேர்ப் பாலைவனத்தைக் கடந்து வந்திருப்பதுபோலவும், எங்கோ மரநிழலில் நின்று நாக்கை நீட்டிக்கொண்டு மூச்சிரைக்க நிற்பதுபோலவும், குடிக்க ஒரு வாய் தண்ணீர்கூடக் கேட்கமுடியாமல் வாய் வறண்டுவிட்டதுபோலவும் தோன்றியது.

பிரிவினைக்கு முன்னும் பின்னும் கொடுமை குறையாமல் தொடர்ந்து இயங்கி வருவதாகவே அவனுக்குப் பட்டது. கொடுமையின் உருவம் மட்டும் மாறியிருந்தது. இப்பொழுது மக்களிடம் முன் போன்ற வருத்தமும் துயரமும்கூடக் காணோம். ''சாம்பர் வாலாவில் பஹ்ஞசிங் இருந்தானே, அவனுடைய அண்ணி பன்தோ . . .'' என்று யாரிடமாவது கேட்டால் போதும், ''இறந்துவிட்டார்களே!'' என்று டக்கென்று சொல்லிவிடுவார்கள். அப்புறம் சாவைப்பற்றியோ அதன் பொருளைப்பற்றியோ சிறிதும் சிந்திக்காமல் தங்கள் போக்கில் போய்விடுவார்கள்.

அவர்களைக் காட்டிலும் ஓரடி மேலே போய் வியாபாரிகள் வெகு குளுமையாக மனிதப் பொருள், மனித இறைச்சி, மனிதச் சதை, மனிதத் தோல் என்று வியாபாரம் செய்வார்கள், பண்ட மாற்றுப் புரிவார்கள். ஆடு மாடுகள் வாங்குபவர்கள், ஓர் எருமையையோ பசுவையோ அதன் தாடையைப் பிடித்து வாயைத் திறந்து பற்களைக் கொண்டு வயதைக் கணிப்பார்கள். இப்போதோ அவர்கள் இளம் பெண்களின் அழகு, மேனி, காதல் புரியும் விதம், மச்சம், பச்சை ஆகியவற்றைப் பட்டவர்த்தனமாகத் தெருக்களிலும் சந்துபொந்துகளிலும் காட்டியே வியாபாரம் செய்யலாயினர். வியாபாரம் செய்யும் ஒவ்வொருவனின் தரப்பிலும் இப்போதெல்லாம் கொடுமை குடி கொண்டுவிட்டது. முன்பெல்லாம் சந்தையிலே பொருள் விலை போகும். பேரம் பேசுபவர்கள் உருமாலைக்குள் கைவிட்டுக் கைமொழி வழியே பேசி முடிவுக்கு வருவார்கள். உருமாலைக்

குள் கைவிட்டுச் செய்யும் இரகசிய பேரம் எப்படியோ தகைந்து விடும். இப்போதெல்லாம் இலை மறை காய் மறைகூடக் கிடையாது. இப்பொழுது எதையும் நேருக்கு நேர் பேசித் தீர்த்துக்கொண்டு விடுகிறார்கள். மக்கள் அந்தப் பழைய வியாபார முறையையேகூட மறந்துவிட்டார்கள். இந்தக் கொடுக்கல் வாங்கல் எல்லாம், இந்தத் தொழில் முறைகள் எல்லாம் பழங்காலத்துக் கதையெனத் தோன்றின. பெண்களை இஷ்டப்படி வாங்குவதும் விற்பதும் சந்தை கூட்டி வியாபாரம் செய்வதும் கதை கதையாகவே கூறப்பட்டன.

தாத்தாரிய இனத்தவன், எண்ணற்ற நிர்வாணப் பெண்களுக் கெதிரே நின்று அவர்கள் உடலைச் சோதித்துப் பார்ப்பதும், அவன் ஏதாவது பெண்ணின் உடலில் விரலை வைத்தால், அந்த இடத்தில் ரோஜா நிறக் குழி விழுவதும், அதைச் சுற்றி மஞ்சள் வட்டம் ஒன்று தோன்றுவதும், மஞ்சளும் சிவப்பும் ஒன்றின் இடத்தை இன்னொன்று பற்றிக்கொள்ள விரைவதும் அந்தக் கதையின் விந்தை போலும். தாத்தாரியன் அந்த இடத்தைவிட்டு நகர்ந்துவிட்டால், அவள் ஏற்கத் தகுந்தவள் அல்ல என்று ஆகி விடும். அவள் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு, வெட்கிய நிலையில், ஒரு கையினால் பாவாடை நாடாவைப் பற்றிக்கொண்டு மற்றொரு கையினால் தன் முகத்தைப் பிறர் பார்வையிலிருந்து மறைத்துக்கொண்டு விசித்து விசித்து அழுவாள்.

சுந்தர்லால், அமிருத்சர் போக ஏற்பாடு செய்துகொண் டிருந்தான். அப்போது அவனுக்கு லாஜோ வந்துள்ள செய்தி கிடைத்தது. திடீரென்று இந்தச் செய்தி வரவே, சுந்தர்லால் பதற்றமடைந்தான். சட்டென்று தன்னையறியாமலே அவன் ஒரு காலை வாசற் பக்கம் எடுத்துவைத்தான். ஆனால் ஏதோ யோசித்தவனாய் அவன் மீண்டும் பின்னுக்கு இழுத்துக்கொண் டான். அவனுக்குச் சினந்துகொண்டால் என்ன, கமிட்டியின் பிளேகார்டுகள், கொடிகள் அனைத்தையும் பரப்பிக்கொண்டு ஒரு குரல் அழுதால் என்ன என்றெல்லாம் தோன்றியது. ஆனால் அங்கு உணர்வுகளை இப்படியெல்லாம் வெளியிடுவது எளிய காரியமாயில்லை. அவன் ஆண்மையோடு இந்த உட்போரை எதிர்கொண்டான். சுங்கச்சாவடியை நோக்கி மனத் திண்மை யோடு நடையைக் கட்டினான். அங்கேதான் கடத்தப்பட்ட பெண்களை மீட்டுத் தரும் அலுவல் நடைபெற்றது.

இப்போது லாஜோ எதிரே நின்றுகொண் டிருந்தாள். ஓர் அச்ச உணர்விஞல் உந்தப்பட்டு நடுங்கிக்கொண் டிருந்தாள். அவள் ஒருத்திக்குத்தான் சுந்தர்லாலைத் தெரியும். அவளைத் தவிர வேறு யாருக்கும் அவனைத் தெரியாது. அவன் முன்புகூட அவளிடம் கொடுமையோடுதான் நடந்துகொண்டான். இப் போது அந்நிய ஆடவனுடன் வாழ்க்கை நடத்திவிட்டு வந் திருக்கிறுள் என்பதை அறிந்தால் என்ன செய்வாரோ தெரியாது! சுந்தர்லால் லாஜோவைப் பார்த்தான். அவள் இஸ்லாமிய முறைப்படி சிவப்புத் துப்பட்டா போர்த்திருந் தாள். தலைப்பை இடது பக்கமாகத் தோளில் போட்டிருந்தாள். பழக்கம் காரணமாகத்தான். ஆம், பழக்கதோஷந்தான் காரணம். பிற பெண்களுடன் கலந்து ஒன்றிவிடுவதற்கும், தன் காதல் வேடனிடமிருந்து தப்புவதற்கும் இது எளிதாக உதவியது.

அவள் சுந்தர்லாலைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டதஞல், அவளுக்குத் தன் புடைவைத் தலைப்பைச் சரிசெய்துகொள்ளவோ, துப்பட்டாவை இழுத்துப் போர்த்திக்கொள்ளவோ தோன்ற வில்லை. அவளால் இந்து-முஸ்லீம்களின் அடிப்படை வேற்றுமையை அறிந்துகொள்ள முடியவில்லை. புடைவைத் தலைப்பை வலது தோளில் போட்டுக்கொள்வதா, இடது தோளில் போட்டுக்கொள்வதா என்பது புரியாமல் திணறித் தவித்தாள். இப்போது அவள் சுந்தர்லாலின் எதிரே நின்று நடுங்கிக்கொண் டிருந்தாள். ஒருபுறம் நம்பிக்கை, மறுபுறம் அச்சம்! உணர்ச்சிக் கலவையில் கரைந்துபோஞள்.

சுந்தர்லாலுக்கு ஓர் அதிர்ச்சி! லாஜவந்தியின் மேனி மெரு கிட்டிருப்பதைக் கண்டான் அவன். முன்னைக் காட்டிலும் கொஞ்சம் உடல் நலமுள்ளவளாகத் தோன்றிஞள். கொஞ்சம் என்ன? உடலில் நன்ருகவே சதை பிடித்திருந்தது. லாஜோ வைப்பற்றிச் சுந்தர்லால் யோசித்து வைத்திருந்ததெல்லாம் தப்புக் கணக்காகிவிட்டது. 'துயரத்தில் உருகிப் போய் லாஜ வந்தி ''சாவாடு செத்தவள்'' போல் காட்சியளிப்பாள். எத்தனை தான்' முயன்ருலும் அவள் வாயிலிருந்து 'முணுக்' சப்தங்கூட எழாது என்றே அவன் எண்ணியிருந்தான். அவள் பாகிஸ் தானில் மகிழ்ச்சியோடு வாழ்ந்திருக்கிருள் என்று நினைத்துப் பார்க்கவே அவனுக்கு வருத்தமாயிருந்தது. ஆஞல் அவன் பேசாமல் மௌனமாயிருந்தான். அவன் மௌனம் சாதிப்ப தென உறுதி பூண்டே அங்கு வந்திருந்தான். அவள் அங்கு

மகிழ்ச்சியோடு இருந்தால், இங்கு ஏன் திரும்பிவந்தாள்? இதைத்தான் அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. 'இந்திய சர்க்காரின் நிர்ப்பந்தம் காரணமாக மனமின்றியே அவள் இங்கு வர நேர்ந்திருக்குமோ?' என்று எண்ணினான். ஆனால் எத்தனை சிந்தித்தும் முக்கியமான ஒரு விஷயத்தை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. லாஜவந்தியின் கறுத்த முகம் மஞ்சள் ஆனதற்கும், அவள் உடலின் சதைப்பற்று எலும்புகளை விட்டு ஏறியிருப்பதற்கும் காரணம் துயரமே. துயரத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதை அவனால் ஊகித்து உணர முடியவில்லை. அவள் துயர மிகுதியால் பருத்திருந்தாள். உடல் நலமுள்ளவளாகத் தோற்றமளித்தாள். ஆனால் இரண்டு எட்டு எடுத்து வைத்தாலே மூச்சு முட்டித் திணறும் அளவுக்கு உடல் நலம் கெட்டுப் போயிருந்தது.

கடத்தப்பட்ட பெண்களின் முகத்தில் பார்வையை ஓட்டும் போது ஒரு விந்தை உணர்வு தோன்றியது. ஆனால் அவன் அந்த உணர்வுகளையெல்லாம் ஆண்மையின் வீர உணர்வோடு எதிர்த்து நின்றான். அதோடு அங்கு எத்தனையோ பேர் நின்று கொண்டிருந்தார்கள். "முஸல்மான்களின் எச்சிற் பாண்டத்தை நாங்கள் ஏற்கத் தயாரில்லை!" என்றான் ஒருவன் அழுத்தமாக.

அவன் குரல், ரிசாலு, நேகிராம், சுங்கச்சாவடி எழுத்தர் ஆகியவர்கள் போட்ட கூச்சலில் அமுழ்ந்திவிட்டது. இந்தக் குரல்களையெல்லாம் மேவித் தனியாகக் கால்கா பிரசாத் தின் கட்டைக் குரல் வானை முட்டியது. அவர் இருமிக்கொண்டே பேசினார். அவர் இந்தப் புதிய நிலையை, இந்தப் புதுமைமிகு தூய்மைப் பணியைத் தவிர்க்க முடியாத சிறப்புப் பணி என்று அழுத்தந்திருத்தமாக நம்பினார். அவர் ஏதோ புதிய வேதமோ, புதிய புராணமோ, புதிய சாஸ்திரமோ படித்து வந்திருக்கிறாற்போலத் தோன்றியது. தாம் அடைந்த இந்தப் பெரும் பேற்றினைப் பிறருக்குப் பகிர்ந்து அளித்து மகிழ முயல்வ தாகவும் பட்டது. அவர்களும் அவர்களுடைய கோஷங்களும் சூழ, லாஜோவும் சுந்தர்லாலும் தங்கள் இருப்பிடத்துக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். ஆயிரக்கணக்கான ஆண்டு களுக்கு முந்திய ராமரும் சீதையும் வனவாசத்தை முடித்துக் கொண்டு அயோத்திக்குத் திரும்புகிறாற்போன்ற உணர்வில் அந்தக் குழு மகிழ்ச்சியில் மிதந்தது. ஒரு பக்கம் மக்கள் மகிழ்ச்சி யைத் தெரிவிக்கத் தீபாலங்காரம் செய்கிறாற்போலவும்,

இன்னொருபுறம் இத்தனை கொடுந்துயர் அளித்ததற்காக வருந்துவது போலவும் தோன்றியது.

லாஜவந்தி திரும்பி வந்த பிறகும் சுந்தர்லால் இதயத்தில் இடம் அளிக்கும் திட்டத்தை வெகு உற்சாகத்தோடு ஏற்றுப் பரப்புவதில் முனைந்தார். சொல் செயல் இரண்டாலும் திட்டத்தை நிறைவேற்றிக் காட்டினார். சுந்தர்லாலின் இந்தப் பணி மேலெழுந்தவாரியானது, ஒப்புக்கு நடைபெறுவது என்று எண்ணியிருந்த மக்கள் உண்மையாகவே சுந்தர்லால் ஈடுபாடு காட்டுகிறார் என்று நம்பலாயினர். எத்தனையோ பேர்களின் உள்ளத்திலே மகிழ்ச்சி. ஆனால் பெரும்பாலானவர்களின் உள்ளத்திலோ துயரத்தின் மிகுதி. 414-ஆம் இலக்கமுள்ள இல்லத்தில் வாழ்ந்த கைம்பெண்ணைத் தவிர 'முல்லா ஷகூர்'ப் பகுதியில் உள்ள மற்ற எத்தனையோ பெண்கள் நாட்டின் அருந்தொண்டர் சுந்தர்லால் பாபுவின் வீட்டுக்கு வரவே அஞ்சினர்.

ஆனால் சுந்தர்லால் ஒருவருடைய துயரத்தையோ இன்பத்தையோ பொருட்படுத்தவில்லை. அவன் மனத்துக்கிசைந்த அரசி வந்துவிட்டாள். அவன் மனத்தில் உள்ள வெறுமை மூடி நிறைந்துவிட்டது. சுந்தர்லால் லாஜோவின் பொற்சிலையைத் தன் உள்ளக் கோயிலில் நிலைநாட்டிக்கொண்டான். தானே வாசலில் உட்கார்ந்து காவல் புரியவும் தொடங்கினான். ஆரம்பத்தில் அச்சத்தால் நடுங்கிச் செத்துக்கொண் டிருந்த லாஜோ, சுந்தர்லாலின் சிறிதும் எதிர்பாராத மென்மை உணர்வையும் நல்ல நடத்தையையும் கண்டு சிறுகச் சிறுகச் சங்கோசத்தை விட்டுக் கலகலப்பு நிலையை அடைந்தாள்.

சுந்தர்லால் இப்பொழுதெல்லாம் லாஜவந்தியை லாஜோ என்று அழைப்பதில்லை. 'தேவி' என்று மிக மரியாதையோடு அழைத்துவந்தான். லாஜோ இனந்தெரியாத மகிழ்ச்சியில் பித்தேறி மிதந்தாள். 'தன் வாழ்க்கையில் நடந்ததைச் சுந்தர்லாலிடம் கூறவேண்டும். கூறும்பொழுது பிழியப் பிழிய அழவேண்டும். அந்த அழுகையில் பாவம் எல்லாம் கழுவவேண்டும்' என்று அவள் எவ்வளவோ விரும்பினாள். ஆனால் சுந்தர்லால் அத்தகைய பேச்சுக்களைக் கேட்காமல் லாஜோவைக் கத்தரித்து விடுவான். லாஜோ கலகலப்பாகத் தோன்றினாலும் ஒருவிதத்தில் அடக்கமாகவே நடந்துகொண்டாள். ஆம், சுந்தர்லால் தூங்கிய பிறகுதான் அவனைப் பார்ப்பாள். இந்தத் திருட்டுப் பார்வையிலேயே பிடிபட்டும் விடுவாள். சுந்தர்லால் இதற்குக்

காரணம் கேட்டால், ''இல்லை'', ''சும்மாத்தான்'', ''ஊஹூம்'' என்பதைத் தவிர வேறு எதுவும் கூறமாட்டாள். நாள் முழுவதும் ஓடியாடிவிட்டுக் களைத்து வந்த சுந்தர்லால் மீண்டும் தூங்கி வழியத் தொடங்கிவிடுவான். ஆரம்பத்தில் ஒரே ஒரு முறை சுந்தர்லால், லாஜவந்தியின் இருண்ட நாட்களைப் பற்றிப் பேச்சு வந்தபொழுது, ''யார் அவன்?'' என்று ஒரு சிறு கேள்வி மாத்திரம் கேட்டான்.

லாஜவந்தி பார்வையைத் தொங்கவிட்டுக்கொண்டு, ''ஜும்மா'' என்று கூறினாள். அப்புறம் அவள் தன் பார்வையைச் சுந்தர்லாலின்மீது புதைத்து, மேற்கொண்டு ஏதோ சொல்ல நினைத்தாள். ஆனால், சுந்தர்லால் ஒரு விசித்திரப் பார்வையை லாஜவந்தியின்மீது வீசினான். அப்படியே அவள் கேசங்களைக் கோதிவிட்டான். லாஜவந்தி மறுபடியும் தன் தலையைக் குனிந்து கொண்டாள். சுந்தர்லால் கேட்டான்:

''நன்றாக நடந்துகொண்டானா?''

''உம்.''

''அடிக்கவில்லையே!''

''இல்லை!'' லாஜவந்தி தன் தலையைச் சுந்தர்லாலின் மார்பில் தவழவிட்டவண்ணம் கூறினாள்: ''அவன் அடிக்கவில்லை. ஆனால் என்னிடம் மிகவும் பயந்தான். நீங்கள் என்னை அடிந்தீர்கள். அதற்காக நான் உங்களிடம் பயப்படவில்லை. இனி அடிக்க மாட்டீர்களே!''

சுந்தர்லாலின் கண்களில் நீர் சுரந்து வந்தது. அவன் வெட்கிப் போய் மிகுந்த வருத்தத்துடன் சொன்னான்: ''மாட்டேன், தேவி! இனி கை ஓங்கி அடிக்கமாட்டேன்!''

''தேவி!'' லாஜவந்தி சிந்தித்தாள். அதைத் தொடர்ந்து அவளும் கண்ணீர் பெருக்கலானாள்.

அதற்குப் பின் லாஜவந்தி நடந்தது அத்தனையும் கூறிவிட விரும்பினாள். ஆனால் சுந்தர்லால் சொல்ல விடாமல் தடுத்து விட்டான். ''விடு, நடந்துபோன விஷயங்களை! அதில் உன் குற்றம் என்ன? நம் சமூகம் செய்யும் குற்றத்துக்கு நீ என்ன செய்வாய், பாவம்? உன்னைப் போன்ற 'தேவி'களுக்கு மரியாதை செலுத்தாத சமூகம் ஒரு சமூகமா? என்னைக் கேட்டால், அது உனக்குத் தீங்கு இழைக்கவில்லை; தனக்குத்தானே தீங்கு இழைத்துக்கொள்ளுகிறது!'' என்றான்.

லாஜவந்தி சொல்ல வந்ததைச் சொல்ல முடியாமல் மனத்துள்ளேயே மூடி மறைத்துக்கொண்டாள். சுந்தர்லால் சொல்ல விட்டால்தானே? அவள் பேசாமல் முடங்கிவிட்டாள். பிரிவினைக்குப் பின் தேவியின் உடலாகிவிட்ட தன் உடலை வைத்த கண் எடுக்காமல் பார்த்தாள். அது லாஜவந்தியினுடையதாகப் படவில்லை. அவள் மகிழ்ந்தாள்; மகிழ்ச்சியில் மிதந்தாள். முக்குளித்து எழுந்தாள். ஆனாலும் அந்த மகிழ்ச்சியில் ஓர் ஐயம், ஒரு கலக்கம் இருந்தது. உணர்ச்சி மிதப்பில் படுத்திருப்பவள் சட்டென்று எழுந்து உட்காருவாள். எல்லையற்ற மகிழ்ச்சியில் மிதக்கும் காலத்தில் ஒரு சிறு ஒலி கேட்டுத் துணுக்குற்றுப் பார்ப்பவள்போல் வெறித்துப் பார்ப்பாள்.

வெகு நாட்கள் கழித்த பின்பே மகிழ்ச்சியின் இடத்தை ஐயம் பற்றிக்கொண்டது. சுந்தர்லால் பாபு மீண்டும் பழைய படியே கொடுமையாக நடந்துகொள்ளத் தொடங்கிவிட்டான் என்பதற்காக அல்ல. ஆனால் அவன் லாஜோவிடம் மிகவும் நல்ல விதமாக நடந்துகொண்டான் என்பதனாலேயே சந்தேகம் வலுத்தது. லாஜோ அவனிடம் இதை எதிர்பார்க்கவில்லை. அவள் சுந்தர்லாலின் அதே பழைய லாஜோவாகத்தான் ஆக விரும்பினாள். காரட்டுக்குச் சண்டை, முள்ளங்கிக்கும் சேர்த்து! இப்படி ஊடலையும் கூடலையுந்தான் அவள் விரும்பினாள். ஆனால் சண்டை என்ற பிரச்னைக்கே இடம் இல்லாமல் அல்லவா வாழ்க்கை ஓடிற்று! சுந்தர்லால் லாஜவந்தியை ஒரு கண்ணாடிப் பொருளாக்கிவிட்டான். தொட்டால் உடைந்துவிடுமோ என்ற உணர்வைப் பெருக்கிக்கொண்டு அவளோடு கன ஜாக்கிரதையாய்ப் பழகலானான். லாஜவந்தி கண்ணாடியில் தன் உருவத்தைக் காலிலிருந்து தலைவரை ஒருமுறை பார்ப்பாள். 'தான் எல்லாம் ஆகலாம்; எது வேண்டுமானாலும் ஆகலாம். ஆனால் லாஜோவாக மட்டும் முடியாது' என்ற முடிவுக்குக் கடைசியில் வருவாள். அவளுக்கு இருக்க இடம் கிடைத்தது. ஆனால் வாழ்வு அழிந்துவிட்டது. அவள் கண்ணீரைக் காணச் சுந்தர்லாலுக்குக் கண் இல்லை; அவள் பெருமூச்சைக் கேட்கக் காது இல்லை. வழக்கம்போலக் காலை ஊர்வலம் புறப்பட்டுக் கொண்டிருந்தது. 'முல்லா ஷகூர்'ப் பகுதியின் சீர்திருத்தக்காரர்களான ரிசாலு, நேகீராமுடன் சேர்ந்து அவனும் குரல் எழுப்பிப் பாடி வந்தான்: ''தொட்டாற்சுருங்கிச் செடி அம்மா! கைபட்டால் வாடிவிடும் அம்மா!''

பப்பல்

தர்பாரிலால் மாலையிலிருந்தே வீட்டில் உட்கார்ந்து சீதை யோடு வெட்டிப் பொழுது போக்கிக்கொண் டிருந்தான்.

வெட்டிப் பொழுது போக்குவது என்றால் என்ன தெரியுமா? மேலெழுந்தவாரியாகப் பார்ப்பதற்கு ஒருவன் மாலைச் செய்தித் தாளையோ அல்லது காலிஃபின் கவிதைகளையோ படித்துக் கொண்டிருப்பதாகத் தோன்றும். ஆனால் அவனது உள்ளம் ஏதோ ஒரு சீதையின் நினைவில் மூழ்கி மிதந்துகொண் டிருக்கும்! இந்த நிலை தான் வெட்டிப் பொழுதுபோக்கு எனப்படுவது.

சரியாக ஆறு மணிக்கு அரோரா சினிமாவிலிருந்து வரும் சாலைத் திருப்பத்தில் நின்றுகொண் டிருப்பதாகச் சீதை சொல்லி யிருந்தாள். அவள் உடுத்திருக்கும் புடைவை காக்கரத்தம்பூ நிறமாயிருக்கும். ஆனால் . . .

தர்பாரி கிங்ஸ் சர்க்கிளில் இருந்தான். இப்பொழுது அதற்கு மாகேசுவரிப் பூங்கா என்று பெயர் மாறிவிட்டது. அவன் ஒலிப்பெருக்கிக் கம்பெனி ஒன்றில் வேலை பார்த்து வந்தான். வருமானம் அப்படி ஒன்றும் பிரமாதம் இல்லை. இருந்தாலும் காசுக்குக் குறைவில்லை; பணத் தட்டுப்பாடு கிடையாது. தந்தை கிரிதாரிலால் மேத்தா ஒரு நாள், 'ஃபார்வர்டு டிரேடிங்'கில் மூன்று நான்கு லட்சம் பணம் பண்ணிவிட்டார். அப்புறம் சட்டென்று நிறுத்திக்கொண்டுவிட்டார். அன்று கைக்குப் போட்ட கடிவாளந்தான்; அப்புறம் அந்தப் பக்கம் அவர் தலை வைத்துக்கூடப் படுக்கவில்லை. இன்றைக்குங்கூடக் 'காட்டன் எக்ஸ்சேஞ்சி'ல் அவருடைய நண்பர்கள் வெண்ணெய்க்குள் விழுந்த கேசம் நழுவிப் போவதுபோல் மேத்தா விலகிப் போகிறார் என்று கேலி செய்வார்கள்; திட்டித் தீர்ப்பார்கள். அவ்வளவையும் அவர் சிரித்து மழுப்பிவிடுவார். அந்த மாதிரி சிரிப்புச் சிரிக்கவேண்டுமானால், மனிதன் நான்கைந்து லட்ச மாவது ஏப்பம் விட்டிருக்கவேண்டும். அப்பொழுதுதான் அப்படிச் சிரிக்க முடியும்.

அண்ணா பிஹாரிலாலின் திருமணம் மார்வாடிகள் வீட்டில் நடைபெற்றது. அவர்கள் இருபது சேர் தங்கக் காப்பு அடித்து அவள் கைகளில் மாட்டி அனுப்பி வைத்தார்கள். இப்படித் தர்பாரிக்கு அண்ணி கிடைத்தாள். அதற்கு ஓராண்டு கழித்துத் தர்பாரியின் தங்கை, நங்கை நல்லாள் லட்சாதிபதி இஸ்லாமான ஸாவேஹ் முகம்மதுடன் ஓடிப் போனாள்: 'நிக்காஹ்' செய்து கொண்டு நல்லறம் நடத்தினாள். ஊரிலே, தெருவிலே எங்கே பார்த்தாலும் இதே பேச்சு!

புல் ஆண்டுகள் மேத்தா சாஹப் பெண்ணையும் மருமகனையும் 'பிரேம குபீரம்' என்னும் தம் வீட்டுக்குள் நுழைய விடவில்லை. கடைசியில் எப்படியோ சமாதானமாயிற்று. பிள்ளையைச் சேர்ந் தவர்கள் பெண்ணைச் சடங்குகள் மூலம் இஸ்லாத்தில் சேர்த்துக் கொண்டு விட்டதாகவும் இனி அவள் பெயர் கனீஸ் பாதிமா என்றும் கூறினார்கள். மேத்தா, சாஹப் பையனைப் புனிதப் படுத்திச் சர்தாரி மோகன் என்று பெயர் சூட்டிவிட்டதாகவும் கூறிவந்தார். ஆனால் சர்தாரி மோகன் என்கிற ஸாவேஹ் முகம்மது எப்போதும் தன் பெயரை எஸ். எம். நவாப் என்றே எழுதி வந்தான். ஆனால் பையனின் இந்தத் தீய போக்கைக் கடிந்து சாடுவதற்கு வேறு வழி தோன்றாமற் போகவே, தர்பாரி லாலின் நண்பர்கள் நங்கை நல்லாளின் கணவனைக் காணும் போதெல்லாம் 'ஸாலே, ஸாலே' என்று மச்சான் பட்டம் சூட்டி நையாண்டி செய்தனர்.

இன்று ஸாவேஹ் அதாவது சர்தாரியும் அவன் மனைவி சத்வந்தி என்னும் பெயர் தாங்கிய நங்கை நல்லாளும் வீட்டில் இருந்தார்கள். அவர்களோடு அவர்களுடைய இரண்டு குழந்தை களும் இருந்தன. அந்த நேரம் பார்த்து அண்ணன் பிஹாரியும் அண்ணி குணவதியும் சேர்ந்து தர்பாரியின் திருமணம்பற்றிப் பேச்சு எடுத்தனர். பெண்கள் ஆதரிசப் புருஷனையும் ஆண்கள் ஆதரிசப் பெண்களையும்பற்றிப் பேசிப் பேச்சைச் சிக்கலாக்கினர். தர்பாரி வராந்தாவில் உட்கார்ந்து தன்னைப்பற்றிப் படரும் பேச்சு முழுவதையும் கேட்டுக்கொண் டிருந்தான். சட்டென்று அவன் பாய்ந்து எழுந்தான். தனது வாயை ஒலிப்பெருக்கியாக்கி, ஜன்னல் வழியே முகத்தை உள்ளுக்குக் காட்டி உரக்கக் குரல் எடுத்து, ''பம்பரய்வாசியும் கிரிதாரிலால் மேத்தாவின் பிள்ளையு மான தர்பாரிலால் மேத்தா என்று அழைக்கப்படும் நான் ஒரு நாளும் திருமணம் செய்துகொள்ளப் போவதில்லை!'' என்று

பிரகடனப்படுத்தினான். எல்லாரும் சட்டென அவன் குரல் கேட்டுத் துணுக்குற்றனர். பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் உயிரே போய்விட்டாற்போல் இருந்தது!

தர்பாரிலால் மீண்டும் தன் இடத்தில் வந்து அமர்ந்து செய்தித் தாளின் பக்கங்களைப் புரட்டலானான். பிறகு அரோரா சினிமாவி லிருந்து திரும்பும் சாலை முனையைப் பார்க்கலானான். அங்கே தானே காக்கரத்தம்பூ நிறப் புடைவையைத் தேடியாக வேண்டும்!

உள்ளே எல்லாரும் சிரித்துக்கொண் டிருந்தார்கள். அன்னை யும் வந்து அவர்களோடு பேச்சில் கலந்துகொண்டார்கள். தர்பாரிதான் அந்த வீட்டுக்குப் பெரிய 'மைனர்'. தலைக்கு அவன் ஹேர் டானிக் தடவும் முறை, தலைமயிரை வாரிப் படிய வைக்கும் பாங்கு, கத்தரிக்கோலை எடுத்துக் கண்ணாடிக் கெதிரே நின்று மணிக்கணக்கில் மீசை நுனிக்குக் காட்டும் பாய்ச்சு—எல்லாமாகச் சேர்ந்து அவன் 'மைனர்'த்தனத் துக்குக் கட்டியம் கூறின. உண்மையில் விஷயம் என்னவென்றால், திருமணத்துக்கு முன்பு, வயது வந்த பையன்கள் பெண்களைப் போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள்; பெண்களும் ஆண்களுக் குச் சளையில்லை என்று காட்டிக்கொண்டு ஆண்களாகச் செயல் படுகிறார்கள். அப்புறம் திருமணம் நடைபெறுகிறது. ஒருவருக் கொருவர் கலந்து உறவாடி, எப்படியோ தங்கள் தங்கள் காரியத்துக்கே திரும்பிச் செயலாற்றுகிறார்கள். தர்பாரியின் இந்தக் குறும்புகளையெல்லாம் பார்த்துவிட்டு, இதெல்லாம் திருமணத்துக்கு அறிகுறி என்று பெண்கள் பேசிக்கொண்டார் கள். ஆண்களோ திருமணத்துக்கு, அதாவது அழிவுக்கு அறிகுறி என்று சாடினார்கள்.

அன்றுதான் வராந்தாவுக்கு வலைச்சட்டம் அடிக்கச் சீக்கியத் தச்சன் வந்திருந்தான். அவன் நாள் முழுவதும், கோணல்மாண லான, சிறிதும் ஒழுங்கில்லாத, சொறசொறவென்றிருந்த மரத் தைச் செதுக்கி, இழைப்புளி கொண்டு இழைத்துப் போட்டிருந் தான். அதனால் வீடு முழுதும் இழைப்புளிச் சிராயும் தூளும் இறைந்து கிடந்தன; கால் வைத்தால் உறுத்தி நெருடிக்கொண் டிருந்தன.

டான் பாஸ்கோ பள்ளியில் மணி அடித்தது. வெள்ளைச் சட்டையும் நீல நிக்கரும் சீருடையாக அணிந்த பையன்கள் ஒருவர்மீது ஒருவர் விழுந்து அடித்துக்கொண்டு ஹாஸ்டல் அறைகளிலிருந்து வெளியே வந்தார்கள். மாலைப் பிரார்த்தனைக் காக மாதாகோயில் பக்கம் போய்க்கொண் டிருந்தார்களோ, என்னவோ? பள்ளி மைதானத்தில் நீண்டு தொங்கும் வெள்ளைச் சீருடை தரித்த ஃபாதர் குழந்தைகளுக்குக் கால் பந்து ஆடக் கற்றுக் கொடுத்துக்கொண் டிருந்தார். அவரும் விசில் அடித்து விட்டார். விளையாட்டு முடிந்தது. ஆனால், சீதைதான் வரவில்லை.

சினிமாத் தியேட்டரிலிருந்து இந்தப் பக்கம் வரும் பாதையில் சில பசுக்கள் படுத்து அசை போட்டுக்கொண் டிருந்தன. அப்புறம் . . . ? அந்தப்புறமிருந்து ஒரு கார் வந்து உட்புறம் திரும்பியது. அது வலது கைப் பக்கத்துக் கட்டிடத்துக்குப் பின்னால் போய் நின்றது. அதே சமயம் ஒரு பருத்த பெண்மணி வருவதும் தெரிந்தது. அவளுக்குப் பின்னால் உடுப்பி ஹோட்டல் முதலாளி ராமஸ்வாமி வந்துகொண் டிருந்தார். இருவருக்கும் இடையே வேண்டிய இடைவெளி இருந்தது. இருந்தாலும் தர்பாரி இருந்த இடத்திலிருந்து பார்க்கும்போது ஒருவரை யொருவர் பிடித்துத் தள்ளிக்கொண்டு, வேடிக்கையும் விளை யாட்டும் புரிந்துகொண்டு வருவதாகத் தோன்றியது.

சீதைக்குப் பதில் எதிர்ப்புறமிருந்து மிஸ்திரி வந்தாள். எப் போதும்போல் அவள் இடுப்பில் குழந்தை இருந்தது—பப்பல்!

பப்பல் நல்ல ஆரோக்கியம் படைத்த குழந்தை. உருண்டு திரண்டு, மெத்தென்று மிருதுவாயிருக்கும், 'ஸ்பாஞ்சி'னால் ஆக்கப்பட்டதுபோல! பார்க்கப் போனால் அவனுக்கு எத்தனையோ பற்கள் முளைத்துவிட்டன. ஆனால், கீழ்வாய்ப் பற்கள் இரண்டு அளவுக்கு மீறிப் பெரிதாக இருந்தன. பாவிப் பயல் சிரித்தால் வால்ட் டிஸ்னியின் முயல்போல் இருக்கும். பப்பல் சிரிப்பதைப் பார்த்துவிட்டுத் தன்னையும் மீறிச் சிரிக்காமல் இருப்பவர்கள் இன்றுவரை யாரும் இல்லை என்றே கூறலாம்.

''பப்பல்!'' தர்பாரி கூப்பிட்டான். கூப்பிட்டபடி இரு கைகளையும் குழந்தையை நோக்கி நீட்டினான். புன்முறுவலோடு பப்பல் தர்பாரியைப் பார்த்தான். அப்புறம் என்ன நினைத்துக் கொண்டானோ, வில்லாக வளைந்து தர்பாரியைத் தாவி அடைய முயன்றான். அவன் அன்னை மிஸ்திரியினால் அவன் திமிறலைச் சமாளிக்க முடியவில்லை.

''இரு!'' என்று கூறிய தர்பாரி தின்பண்டம் எடுத்து வருவதற்காக உள்ளே ஓடினான். சீதா வருவாளே, வந்து போய்விடுவாளே என்பதைக்கூட அவன் அந்த நேரத்துக்கு மறந்துவிட்டான். பப்பலின் முகத்தில் இலேசான ஏமாற்றம் அலை பாய்ந்தது. இந்த உலகமே மோசக்கார உலகம் என்று அந்தக் கணம் அவன் முடிவு கட்டிவிட்டதாகப் பட்டது. ஆனால், அவன் ஏமாந்ததுபோலவே, தர்பாரி திரும்பி வருவதைக் கண்டு கணத்தில் முகமும் மலர்ந்து மகிழ்ச்சியைத் தெரிவித்தான்.

பப்பலின் தாய் மிஸ்திரி ஒரு பிச்சைக்காரி. இந்தச் சிறு வயதிலேயே பப்பலுக்குப் பிச்சை வாங்கும் கலையைக் கற்றுத் தந்துவிட்டாள். அப்படி ஒரு நிர்ப்பந்த நிலை அவளுக்கு. கடைத் தெருவில் போகும்போது, பசையுள்ளவர்கள் என்று தோன்றும் மனிதர்களுக்கெல்லாம் எதிரே போய் அவள் நிற்பாள். பப்பல் நன்றாக ஒத்திகை பார்த்துக்கொண்ட நடிகன்போல் அந்த மனிதனின் வேஷ்டியையோ சட்டையையோ பிடித்து இழுப்பான். அவன் கவனத்தைக் கவர்ந்தபின் தனக்குத் தேவை என்று படும் பொருளைச் சுட்டிக் காட்டுவான். அந்த மனிதன் அவனைப் பார்ப்பான். பார்த்தும் பார்க்காதவன்போல் இருக்க முயல்வான். மீண்டும் அவனையறியாமல் அவன் பார்வை காந்தமாக அவனை அங்கு இழுக்கும். வேறு வழியின்றிப் பப்பல் கேட்ட பொருளை வாங்கி அவன் கையில் தந்துவிட்டுப் போவான். அந்த மனிதன் மறைந்த பிறகு மிஸ்திரி பப்பலின் கையிலிருந்து அந்தப் பொருளை வாங்கிக் கடைக்காரனிடம் திருப்பித் தந்து காசாக்கிக் கொண்டுவிடுவாள். பப்பல் அழுது ஊரைக் கூட்டுவான். பலன் பூஜ்யந்தான்.

ஆனால் தர்பாரியுடன் பப்பல், தாய் மிஸ்திரி இருவருடைய உறவும் அத்தகையதல்ல. தின்பண்டத்தை வாங்கிக்கொண்டபின் அதை விற்கும் பிரச்னையே எழாது. தின்பண்டத்தோடு மிஸ்திரிக்கும் இரண்டு அணா, நாலணாக் காசு கிடைத்துவிடும். பப்பலுக்கு அதைப்பற்றி அக்கறையில்லை. அவனுக்குத் தின்ன ஏதாவது வேண்டும். அதை அவன் தாய் பிடுங்கிக்கொள்ள மாட்டாள்; கடைக்காரனிடம் கொடுத்து காசாக்கிக் கொள்ளவும் மாட்டாள். தின்பண்டத்தை அவன் வாயில் போட்டுக்கொண்டுவிடுவான். பற்களால் கடித்து வாயால் குதப்பி அவள் இடுப்பிலேயே குதித்துக் குதித்துத் தன் மகிழ்ச்சியை வெளிக்காட்டிக் கொள்ளுவான். இன்று தர்பாரி அவனை இடுப்பில் தூக்கிக்

கொள்ள முயன்றபோது ஒரே அள்ளாக ஓமப்பொடியைக் கையில் அள்ளிக்கொண்டு, அம்மாவின் பக்கம் திரும்பிப் பாய்ந்தான். தர்பாரி அவனை எவ்வளவோ தடுத்துப் பார்த்தான். கெஞ்சிக் கொஞ்சி அன்பு காட்டினுன். ஆனுல் அவன் அதற்கெல்லாம் மசிபவனுக இல்லை. 'ஊம், ஊம்' என்று முனகிய வண்ணம் அவன் தன் அன்னையின் பக்கமே சாய்ந்தான்.

''கெட்ட பயல் மவனே! ஸாலா!'' என்று திட்டினுன் தர்பாரி.

உள்ளிருந்து ஸாவேஹ் அதாவது சர்தாரி குரல் கொடுத்தான்:

''என்ன உத்தரவு, எசமான்!''

''இங்கு யாரும் ஐயாவைக் கூப்பிடவில்லை!'' தர்பாரி உள்பக்கமாக முகத்தைத் திருப்பிப் பதில் அளித்தான். பிறகு பப்பலின் அன்பான கன்னத்தில் ஆசையோடு தட்டித் திரும்பவும் அவன் தாயிடமே விட்டு, ''அட, என்ன சுயநலம்டா உனக்கு! வணக்கம் சொல்லவில்லை, நன்றி சொல்லவில்லை. உன் காரியம் ஆனவுடனே நீ யார் நான் யார் என்று போய் விட்டாயேடா!'' என்ருன்.

நடைபாதை வாழ்க்கை வெட்கத்தை வெட்கியோடச் செய்திருந்த காரணத்தால் மிஸ்திரி சிறிதும் கூச்சமின்றி, ''இவர்கள் எல்லாருமே இப்படித்தான், எ ச ம ா ன்!'' என்ருள். அப்புறம் பப்பலை மார்பில் புதைத்துக்கொண்டு தனக்குக் கிடைக்கவேண்டிய மாமூலை—இரண்டணு, நாலணுவை எதிர் நோக்கியவாறு நின்ருள்.

பப்பல் பிறந்த மேனியாக நின்ருன் என்று கூற முடியாது. அதற்காக உடை அணிந்திருந்தான் என்றும் சொல்ல முடியாது. ஏனென்ருல் அவன் உடலில் இடுப்புக்கருகில், இடையில் கறுப்பு அரைஞாண் கயிறு கட்டப்பட்டிருந்தது. அதில் ஒரு 'தாயத்து' தொங்கிக்கொண்டிருந்தது. இந்த உடையில் மகிழ்ந்து, அன்னையிடம் சென்றதும் அவன் தன் முகத்தை மிஸ்திரியின் மதர்த்த மார்பகங்களில் புதைத்துக்கொண்டான். அங்கிருந்த வண்ணம் வெற்றிவாகை சூடிய மாவீரனைப் போலத் திரும்பிப் பார்த்தான். பாதுகாப்பான பெருங் கோட்டையை அடைந்துவிட்ட பூரிப்பு அதில் தொனித்தது. அப்புறம் பார்வையென்னும் அம்பையும் அம்புருத்தூணியையும் சுமந்து, அந்தக் கோட்டையின் உச்சியில் ஏறி அமர்ந்து, எதிரே மேயுள்ள போர்ப் படையைக் கண்காணிப்பவனைப்போலத் தோற்றமளித்தான்.

போர் தொடுப்பதற்கு முன்பே எதிரிப் படை ஆயுதங்களைக் கீழே போட்டுத் தோல்வியைத் தழுவும்படியான நிலையை உண்டு பண்ணிவிட்டான். பிறகு திடீரென்று தேவதைக் கதைகளில் வரும் கற்பனைக் குதிரைமீது ஏறி அவன் வீரத் தலைவனாகப் பாய்ந்தான். இருந்த இடத்திலேயே மேலும் கீழும் தாவிக் குதித்துத் தன் வீரத்தைக் காட்டினான். போர்க்களங்கள் அனைத்துமே அவனுக்குப் பணிந்து அவன் காலடிகளில் சரிந்தன!

மிஸ்திரி கறுப்பு என்றால் நல்ல கறுப்பு. ஆயினும் கட்டமைந்த உடல்வாகு கொண்ட இளம் பெண். பப்பலோ நல்ல சிவப்பு! கறுப்புப் பெண்ணுக்குச் சிவப்புப் பிள்ளை! எப்படி? தர்பாரி ஒரு போதும் இதுபற்றிக் கேட்டதில்லை. 'பாவம், இந்த ஏழைப் பெண்கள்தான் எத்தனை அநாதைகள்! தெருவோரத்தில் கிடக்கும் இந்த மிஸ்திரிக்கு அரை ரூபாய் ஒரு ரூபாய் கொடுத்து இந்தப் பப்பலையும் கொடுத்துப் போயிருப்பான் எவனாவது!' என்று எண்ணினான்.

''சாமி, உங்களிடம் இவன் இப்படிக் கொஞ்சம் வரவாவது செய்கிறானே! பொல்லாப் பிள்ளை இவன்! எந்த ஆண்பிள்ளை கிட்டவும் போகிறதில்லை'' என்றாள் மிஸ்திரி.

''ஏன், ஏன்?'' வியப்புடன் கேட்டான் தர்பாரி.

''தெரியாது!'' என்ற மிஸ்திரி அன்போடு பப்பலின்மீது தன் பார்வையை ஓட்டி, ''பெண் பிள்ளைகள் என்றால் பாய்ந்து போய் விடுகிறான்!'' என்றாள்.

தர்பாரி வாய்விட்டுச் சிரித்தான். ''பொல்லாத பயல்தான்! இப்பொழுதே பெண் பிள்ளைகள் ருசி கண்டுவிட்டானா? பெரியவனானபின் என்ன செய்வானோ?'' என்றான்.

மிஸ்திரி ஒரேயடியாக வெட்கினாள்; ஒரேயடியாக மகிழ்ந்தும் போனாள். அவளுக்குத் தன் மடியில் எண்ணற்ற கோபிகள் சூழக் கண்ணனே தவழ்ந்து விளையாடுவதுபோலத் தோன்றியது. மிஸ்திரியின் கற்பனையில் தோன்றிய கோபிகளுக்குள் அவளுமே ஒரு கோபியாகி விட்டாள். மிஸ்திரியின் மனமே பப்பலாகி, மிஸ்திரியின் மனப்போக்குகளே கோபியாகி நாற்புறமும் நடனமாடின. பப்பல் இந்தக் கணத்தில் ஒரு கோபியுடன் இருந்தால் அடுத்த கணம் அநேக கோபிகள் புடைசூழ ஆனந்த நடனம் புரியலானான்!

தர்பாரி, மிஸ்திரியுடன் கொஞ்சம் கலகலப்பாகப் பழகுவது உண்டு. அவன் குரலில் பதற்றமும் ஆவலும் தொனிக்க,

''இவன் தகப்பன் என்ன செய்கிறுன், மிஸ்திரி?'' என்று கேட்டான்.

''இவன் தகப்பன்?'' மிஸ்திரிக்கு யோசிக்கச் சிறிது நேரம் பிடித்தாற்போல ''இல்லேயே!'' என்ருள்.

இந்தப் பதிலில் எத்தனேயோ விஷயங்கள் தொக்கி நின்றன. அவன் இறந்துவிட்டான் என்றும் கொள்ளலாம். இருந்தும் இறந்தவனேக் காட்டிலும் தாழ்ந்துவிட்டான் என்றும் கொள்ளலாம். மிஸ்திரி எங்கோ தொலேவில் நோக்கினுள். பிறகு தர்பாரியின் பார்வையில் துயரத்தைக் களேய நினேத்தவளாக, ''ஒரு முறை அவன் மீண்டும் வந்தான். எனக்கும் அவன்தானே என்றுகூடத் தோன்றியது. ஆனுல் நான் என்ன செய்யமுடியும், சாமி? நான் அவனே மனமார, கண்ணுரப் பார்க்கக்கூடவில்லே . . . இந்தக் குழந்தைக்குச் சரியாகப் பெயர்கூட வைக்கவில்லே. ஒரு சமயம் கோபு என்று கூப்பிடுவேன், இன்னெரு சமயம் நாராயண் என்று அழைப்பேன். அவன் என்னடாவென்ருல், இதன் கையில் ஐந்து ரூபாய்த் தாளேத் திணித்து அன்போடு பப்பல் என்று பெயர் வைத்துக் கூப்பிட்டான். அதுமுதல் நானும் இவனுக்குப் பப்பல் என்றே பெயர் வைத்துவிட்டேன்!'' என்ருள்.

இதைத் தொடர்ந்து மிஸ்திரி மீண்டும் யோசிக்கலானுள்: ''இவன் தகப்பன் இல்லேயென்ருல், அவன் ஐந்து ரூபாய் கொடுத்திருப்பானு?''

தர்பாரியும் சிந்திக்கலானுன்: ''இந்தக் குழந்தையின் தகப்பன் ஓர் ஆண்மகனுக இருக்க மாட்டானே? அந்த ஐந்து ரூபாய் நோட்டுத்தான் குழந்தையின் தந்தையாக இருக்குமோ?''

தர்பாரி இன்று எட்டணுவை மிஸ்திரியின் கையில் வைப்பதற்குப் பதிலாகப் பப்பலின் கையில் வைத்தான். பப்பல் நாணயத்தைக் கையில் வாங்கிக்கொண்டான். வேகமாகப் பந்து எறிபவன் போலக் கையைச் சுழற்றினுன். காசை வீசி எறிந்துவிட்டான்.

அந்த எட்டணுக் காசு தெருவில் இருந்த 'மேன்ஹோலில்' விழவிருந்தது. இத்தனே வறட்சியிலும் மிஸ்திரிக்கு அதிர்ஷ்டம் கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்தாற்போல் இருக்கிறது. ஒரு காய்ந்த மாம்பழத் தோலியில் மாட்டிக்கொண்டு விழாமல் தப்பியது. மிஸ்திரி குனிந்து அந்த எட்டணுவை எடுத்துக் கொண்டாள். பப்பலே மார்புறத் தழுவிக்கொண்டு, ''அட கீழ்ச்சாதிப் பயலே!'' என்று அன்போடு கடிந்துகொண்டாள். பிறகு ஒரு முத்தம் கொடுத்துவிட்டுத் தர்பாரிலாலேப்

பார்த்து, ''உண்மையைக் கேட்டால், எசமான், இவன்தான் எனக்கு ஆண் பிள்ளை!'' என்றாள்.

''உன் ஆண் பிள்ளையா?''

''ஆமாம்!'' தலையை மூடியிருந்த துணியை இழுத்துவிட்டுக் கொண்டிருந்த பப்பலைத் தடுத்த வண்ணம் அவள் கூறினாள்: ''இவன் சம்பாதித்துப் போடுகிறான், நான் சாப்பிடுகிறேன்!''

மிஸ்திரி பெரிய வாயாடி. அவள் இன்னும் எவ்வளவோ சொல்லுவாள். பப்பல் இன்னும் தின்பண்டங்கள் கேட்டான். ஆனால் தர்பாரியின் பார்வை பாய்ந்தது; தொடுவானம் சமைத்த இடத்திலே காயாம்பூ வண்ணம் காட்சி அளித்தாற்போல் இருந்தது. அவன் சட்டென்று மிஸ்திரியின் கருமேனி காட்டிய அழகையும் பப்பலின் சாமர்த்தியத்தையும் உதறிவிட்டான். ''நான் வருகிறேன் ஸாவேஹ அண்ணா! வருகிறேன் அண்ணி!'' என்று கூறிக்கொண்டே வெளியில் விரைந்து சென்றான். சாலையில் இறங்கியிருப்பான், அவன் பான்டின் கால்பக்கத்தில் மரச் சிராய் ஒட்டிக்கொண்டிருந்தாற்போலிருந்தது. தர்பாரி குனிந்து அதை வெளியே எடுத்துப் போட்டான். அப்புறம் சீதையின் அருகில் போய்ச் சேர்ந்தான்.

சிவாஜி பார்க் கடற்கரையிலே, கிளப்பையும், பேல்பூரிக் காரர்களையும் தாண்டிச் சற்றுத் தொலைவில் தர்பாரியும் சீதாவும் ஒரு சுவரில் சாய்ந்து அமர்ந்துகொண்டனர்.

சீதை பதினெட்டு பத்தொன்பது வயதுள்ள பெண். அவளுக்கு அம்மா மட்டுமே இருந்தாள்; அப்பா இல்லை. வீட்டின் பொருளாதார நிலை அப்படியொன்றும் மோசமானதில்லை. ஏனென்றால் சொந்த வீடு இருந்தது. அதில் குடியும் வைத்திருந்தார்கள். வாடகை வசூல் ஆவதும் உண்டு, ஆகாமற் போவதும் உண்டு. சீதையின் தாயார் லட்சுமண் தேவி, தன் மகளுக்குத் திருமணத்தை முடித்துவிடவேண்டும் என்று இருந்தாள். சொல்லப் போனால் திருமணத்தைக் காட்டிலும் முக்கியமாக நினைத்தது வேறு ஒரு விஷயம். திருமணம் செய்துவைத்து விட்டால், அதிகாரத்தோடு அந்த அந்த மாத வாடகையை வசூலிக்க ஒருவன் ஏற்பட்டுவிடுவான் இல்லையா? சீதை சொல்வதுபோல் வாசலில் ஒவ்வொரு மாதமும் வந்து நிற்கும் ஓநாய்ப் பசி மனிதர்கள் ஓடிவிடுவார்கள்; வாழ்க்கை இன்பகரமாக அமையும். லட்சுமண் தேவியிடம் சீதை தர்பாரியைப் பற்றிச்

கூடச் சொல்லியிருக்கிருள். முதலில் அம்மா என்னவெல்லாமோ சந்தேகப்பட்டாள்; குழம்பிப் போனுள். உடனே அவள் பேச்சைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. தர்பாரியின் முழுப் பெயர் தர்பாரிலால் மேத்தா என்றதும், அவள் சட்டென்று அநுமதி அளித்துவிட்டாள். ஏனென்ருல் பம்பாய் நகரத்தில் வாடகை வசூலிப்பவர்களையெல்லாம் மேத்தா என்றே கூறுவார்கள்.

சீதையின் உயரம் நடுத்தரம். ஆனுல் கட்டமைந்த நல்ல உடல்வாகு. ஆண்களின் உள்ளத்திலே உணர்ச்சியைக் கிளரச் செய்யும் சிவந்த மேனி. தங்களை அறியாமலே சீட்டி அடிக்க உதடுகளைக் குவித்துவிடும் எழில் மேனி. கருத்தோடு செதுக்கப் பட்ட முகலாவண்யம். ஆனுல் அருகில் வந்தால்தான் இமைகளில் நீர் கோத்திருப்பது தெரியும். ஏனென்ருல் சீதையின் கண்கள் சற்று உள்வாகில் குழிந்திருந்தன. அவற்றைப் போற்றிப் பாதுகாக்க இமைகள் அடிக்கடி குவியவேண்டியிருந்தது. ஆனுல் அந்தக் குழி விழுந்த கண்களின் காரணமாகவே சீதை ஆண்களின் உள்ளத்தை ஊடுருவி நோக்கும் அற்புத ஆற்றல் பெற்றிருந்தாள். அவள் யாரிடமாவது ஏதாவது சொல்லுவாளோ, மாட்டாளோ! அது வேறு விஷயம். ஆனுல் எதையும் நன்கு அறிந்து வைத்திருந்தாள். ஆம், சீதையின் கூந்தல் வெகு வெகு நீளமானது. அதைக் காரணம் காட்டித் தர்பாரி அவளிடம் கேட்பது உண்டு: ''உன் வீட்டில் யாராவது வங்காளப் பெண்மணியை மணம் புரிந்துகொண்டது உண்டா?''

அதற்குச் சீதை கூறுவாள்: ''நானே வங்காளப் பெண்தானே? என் பெயர் சீதா மஜும்தார் ஆக்கும்!''

''படா மஜாவாகப் பேசுகிருயே நீ!'' என்பான் தர்பாரி.

சீதைக்குச் சிரிப்பாக வரும். அவளுக்குத் தன் உயரத்தைப் பற்றி ஒரு கர்வம், ஒரு மகிழ்ச்சி. அவள் தன் அழகிய கருகருவென்று அடர்ந்து வளர்ந்துள்ள கூந்தலைத் தர்பாரியின் மார்பில் புரளவிடுவாள். தன் உடலுள் உறைந்திருக்கும் ஆத்மாவை ஒருவனுக்கு ஒப்படைத்துத் தன் துயரங்கள் அனைத்தையும் மறக்க முடியும். ஒரு சிறு வேறுபாட்டைக் காட்டிக் கணவனையும் தந்தையையும் ஒன்ருக்க முடியும் என்றெல்லாம் எண்ணி எண்ணி மகிழ்ந்து போனுள்.

சுவர் மறைவில் உட்கார்ந்திருந்த தர்பாரி சீதையிடம் காதல் கைவரிசையைக் காட்டினுன். அவன் காதல் சேஷ்டைகள் எல்லை மீறி விடுவதைச் சீதை விரும்பவில்லை. கை, இடுப்பைச் சுற்றிக்

கொள்ளத் தொடங்கியதும் சீதை ஜாக்கிரதையாகிவிட்டாள். அவள் தர்பாரியைப் பேச்சால் வசீகரிக்க முயன்றாள். தனது ரவிக்கையிலிருந்து ஒரு சிறு வெள்ளி டப்பியை எடுத்தாள். தர்பாரியின் முகத்துக்கெதிரே அதை நீட்டி, ''உங்களுக்காக நான் என்ன கொண்டு வந்திருக்கிறேன் என்று பார்த்தீர்களா?'' என்று கேட்டாள்.

''என்ன கொண்டு வந்திருக்கிறாய்?'' என்று கேட்ட தர்பாரி தன்னையறியாமலே சீதையின் இடுப்பிலிருந்து கையை அகற்றி டப்பியை வாங்கக் கையை நீட்டினான்.

சீதை டப்பியை அவன் கையில் அகப்படாமல் அப்பால் நகர்த்திக்கொண்டாள். ''அப்படித் தந்துவிட முடியாது. நானே காட்டுகிறேன்!'' என்றாள். பிறகு அதைத் தர்பாரியின் மூக்கின் அருகில் கொண்டு போய், ''மோந்து பாருங்கள்!'' என்றாள்.

வேறு வழியின்றித் தர்பாரி அந்த டப்பியை மோந்து பார்த்தான். அவனுக்குத் தும்மல் தும்மலாக வரலாயிற்று.

காதல் விளையாட்டுக்கள் அப்படியே அந்தரத்தில் நின்று விட்டன. தர்பாரி தும்மலுக்குமேல் தும்மலாக அடுக்கிக் கொண்டே போனான். சட்டைப் பையிலிருந்து கைக்குட்டையை எடுத்து மூக்கை மூக்கைத் துடைத்துக்கொண்டான். சீதை அருகில் அமர்ந்து சிரித்துக்கொண் டிருந்தாள்.

''இது . . .'' என்ற தர்பாரி பெருந் தும்மலாக ஒன்று போட்டு விட்டு, ''என்ன வேடிக்கை?'' என்றான்.

''இதை வேடிக்கை என்று சொல்லிவிட்டீர்களே! தோலா இருபது ரூபாய் விலையுள்ள மூக்குப் பொடியாக்கும் இது!'' என்றாள் சீதை.

''மூக்குப் பொடியா?''

''ஆமாம்!'' சீதை தொடர்ந்தாள்: ''நீங்கள் இருமும் போது மிகவும் அழகாகத் தோன்றுகிறீர்கள்!''

''அழகுதான் போ!'' தர்பாரி சீதையைப் பார்த்த பார்வை ஒரு பைத்தியக்காரன் பார்க்கும் பார்வையாகத் தோன்றியது. சீதை அவன்மீது அன்புப் பார்வையை அள்ளி வீசி, ''முதல் முதலில் நீங்கள் என்னை எங்கே சந்தித்தீர்கள், நினைவிருக் கிறதா?'' என்று கேட்டாள்.

''நினைவு இல்லை!'' தர்பாரி தலையசைத்துக் கூறினான்: ''எங்கோ முதல் முதலில் உன்னைச் சந்தித்தது மட்டும் நினை விருக்கிறது. இடந்தான் நினைவு வரவில்லை.''

''அங்கே!'' எதிரேயுள்ள மகாத்மா காந்தி நீச்சல் குளத்தைக் காட்டிச் சீதை சொன்னாள்: ''நீங்கள் குளித்துக்கொண் டிருந்தீர்கள். அதோடு அடுக்குத் தும்மலும் போட்டுக்கொண் டிருந்தீர்கள். என்னோடு மூன்று நான்கு தோழிகள் இருந்தார்கள். அன்று அலுவலகத்தில் எங்களுக்கு அரை நாள் விடுமுறை கிடைத்தது. நாங்கள் கால் போனவாக்கில் சுற்றிய வண்ணம் அந்தப் பக்கம் வந்தோம்.''

''அந்தப் பக்கம் வருவானேன்?''

''சும்மாத்தான்!'' சீதை விவரித்தாள்: ''விடுமுறை கிடைத்து விட்டால் பெண்களாகிய எங்களுக்கு ஓரிடத்தில் இருப்புக் கொள்ளுவதில்லை. வீட்டில் அடைபட்டுக் கிடக்கவும் தோன்றுவதில்லை. ஏதோ பெரிதாக நடக்கப் போவதாக எண்ணி வெளியே புறப்பட்டுவிடுகிறோம். ஆனால் ஒன்றும் நடப்பதும் இல்லை; கிடைப்பதும் இல்லை. கோக்கா கோலா குடிப்பதோடு சரி!''

இதைக் கூறிச் சீதை சிரித்தாள். அவளோடு தர்பாரியும் சிரித்தான். அவள் தன் பேச்சைத் தொடர்ந்தாள்:

''நாங்கள் எல்லாரும் உங்களைப் பார்த்துச் சிரித்துக்கொண் டிருந்தோம். ஏனென்றால் நீங்கள் தும்மிக்கொண்டே போர்டிலிருந்து நீருக்கும், நீரிலிருந்து கரைக்குமாக வந்து போய்க்கொண் டிருந்தீர்கள். அப்படிச் செய்யும்போது தலையிலிருந்து கால்வரை இரண்டு மூன்று மடங்கு உப்பினாற்போலத் தோன்றியது. குழந்தையைப் போல உங்களைப் பிடிக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றியது. பிடித்து உங்கள் முகத்தையும் மூக்கையும் புடைவைத் தலைப்பினால் அழுத்தித் துடைத்துவிட்டு, முதுகில் ஓர் அறை வைத்து 'போ, போய் ஆனந்தமாக விளையாடு!' என்று சொல்லவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது!''

தர்பாரிக்கோ இத்தனை பேச்சுக்கும் இடையிலும் ஒரே நினைவு தான்: ''அந்த மற்றப் பெண்கள் யாரோ?'' என்று கேட்டான்.

''ஒன்று குமுதம்!'' சீதை தொடர்ந்தாள்: ''இன்னொருத்தி ஜூலி . . . விரிகுடாவைத் தாண்டி மவுண்ட் மேரிக்கு அருகில் இருக்கிறாள் அவள். மூன்றாவது . . .'' சட்டென்று பேச்சை நிறுத்திவிட்டு, ''இதெல்லாம் நீங்கள் எதற்காகக் கேட்கிறீர்கள்?'' என்றாள்.

''சும்மாத்தான்!'' தர்பாரி பதில் இறுத்தான்: ''உன் தோழிகள் உன் கால் செருப்புக்கு ஈடாகமாட்டார்கள்!''

''நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?''

''பார்க்கவில்லை!''

சீதையின் முகம் சற்று மலர்ந்தது. அதே வேகத்தில் குவியவும் குவிந்தது. தர்பாரியின் முகத்தில் ஒரு தும்மல் அலை பாய்ந்து அப்படியே அடங்கிவிட்டது. அவன் எதிரே பார்த்தவண்ணமே, ''இன்று ஏனோ பொழுதே சாயவில்லையே?'' என்றான்.

கடலில் அலைகள் ஆளுயரம் எழும்பிக் கரையில் மோதின. பேல்பூரி தின்ற எண்ணற்ற எச்சில் இலைகள், கரும்புச் சக்கை, வேர்க்கடலைத் தோலி, தேங்காய்க் கொட்டாங்கச்சி முதலியவற்றை கடற் காற்று கொண்டு வந்து குவித்தன. அவற்றின் இடையே கரித் துண்டுகளும் காணப்பட்டன. தொலைவில் நின்ற நீராவிப் படகுகளும், பெரும் பெரும் கப்பல்களும் தங்கள் உள்ளக் குமுறல்களை ஒதுக்கியபொழுது வெளியேற்றப்பட்டவை அந்தக் கரித் தூள்கள். இயந்திரங்கள் தேயாமல் இருக்கப் போட்ட எண்ணெயும், சுத்தம் செய்வதற்காகக் காலி செய்த எண்ணெய் டாங்கிகளிலிருந்த கசடுகளும் மசலும் மிதந்து, கடலின் ஒரு பெரும் பகுதியை வழுவழுப்பாகவும் கன்னங்கரேல் என்றும் அடித்திருந்தன.

சீதை திரும்பிப் பார்த்தாள். தர்பாரி அவள்மீது ஒரு விந்தைப் பார்வையைப் பதித்துப் பார்த்துக்கொண் டிருந்தான். அவனுடைய எண்ணெய்ப் பசையுள்ள முகத்தில் கருமை ஒன்று ஒடிக் கடலின் சூழலைச் சிருஷ்டித்தது.

மாலைக் கதிரவன் மலைவாயில் விழுந்துகொண் டிருந்தான். அவன் தனது நீண்டு விரிந்த கதிர்களை உலகத்தின் இருபுறமிருந்தும் சுருட்டிக்கொண்டான். அவற்றைக் கட்கத்தில் இடுக்கிக்கொண்டு, குங்கும வண்ண மூட்டை போலாக்கித் தொலைவில் மேற்குக் கடலில் ஆழம் மிகுந்த பகுதியில் இறங்கத் தொடங்கிவிட்டான். சிறிது நேரத்துக்கெல்லாம் அவனது ஒளி, பூமி வட்டத்துக்குள்ளே ஒளிந்துகொண்டது. இப்பொழுது கரையிலும், கரையில் உள்ள வீடுகளிலும், அந்த வீடுகளில் வாழ்கிற மக்கள்மீதும் விழுந்த ஒளி, வானத்தில் சுற்றித் திரியும் மேகங்களின் வழியாக வடிகட்டி வந்த மங்கலான ஒளிதான். அதுவும் சிறுகச் சிறுக மெதுவாக அன்போடு இருளுக்கு இடம் அளித்து வழிவிடலாயிற்று. 'இனி உன் இராஜ்யம்தான். போ,

போய்ச் சுகித்திரு!' என்று கூறி விடை பெறுவதுபோல் இருந்தது.

தர்பாரியைச் சீதையிடமிருந்து வெகுதூரத்துக்கு வெகுதூரம் விரட்டிவிட்ட அதே தும்மல், இப்போது அடித்த அடியில் அவளை அவன் அருகில் கொண்டு வந்து நிறுத்தியது. சீதை நடுங்கிப் போனாள். தர்பாரி மூச்சிறைக்கக் குமைந்தான்.

இருட்டு நிலை பெற்றதும் பாலம், கிளப், தெரு ஆகியவற்றில் உள்ள பல்புகள் மட்டுமின்றிச் சிறு வியாபாரிகளின் கடைகளிலும் தள்ளு வண்டிகளிலும் 'முணுக் முணுக்'கென்று எரிந்த விளக்குகள்கூட நடுங்கலாயின.

அந்த நேரம் பார்த்துச் சுவரே பேசுவது போன்ற ஒரு குரல் வந்தது: ''தர்பாரி, நீங்கள் இது என்ன காரியம் செய்கிறீர்கள்?''

தர்பாரி தன் கைகளை அகற்றிக்கொண்டு, ''அப்படியானால் நீ என்னைக் காதலிக்கவில்லை என்று இதற்குப் பொருள் கொள்ளலாமா?'' என்றான்.

''காதலுக்கு இதுதான் பொருளா?''

''எனக்கு எல்லாம் தெரியும்!'' என்ற வண்ணம் எழுந்து நின்ற தர்பாரி தன் உடையைத் தட்டிக்கொண்டு நடக்கலானான். சீதை அவனைத் தடுக்க முயன்றாள். மன்றாடி வேண்டும் குரலில், ''நீங்கள் செய்வது நன்றாயிருக்கிறதா?'' என்றாள். மணற் பரப்பில் அமர்ந்திருந்த சீதை அப்படியே தர்பாரியின் கால்களைக் கட்டிக் கொண்டாள். அவனோ கோபம் பொங்கக் குறுமூச்சும் நெடு மூச்சும் விட்டுக்கொண் டிருந்தான்.

தர்பாரி ஓர் உதறலில் தன் கால்களை விடுவித்துக்கொண்டான். ''பெரிசாகத் தூய்மை கொண்டாடுகிறாளாம், தூய்மை! என்ன நினைத்துக்கொண் டிருக்கிறாள்?'' என்று குமுறினான்.

''நான் ஒன்றும் நினைக்கவில்லை!'' முழங்காலிலேயே ஊர்ந்து சீதை மறுபடியும் தர்பாரியின் கால்களைப் பற்றிக்கொண்டாள். ''நான் உங்களுக்கே உரியவள். என் ஒவ்வொரு நரம்பும்—நாளமும்—அணுவும்—கணுவும் உங்களுக்கே சொந்தம். ஆனால், நான் ஒரு விதவைத் தாயின் மகள். என்னைத் திருமணம் செய்து கொண்டு விடுங்கள். அப்புறம் . . . '' என்றாள்.

''திருமணம் கிருமணம் எல்லாம் இருக்கட்டும். நான் சொன்னால் சொன்னதுதான். அது போதாதா? மந்திரம் ஓதி அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து இதெல்லாம் அவசியமா? சட்ட

திட்டத்தில் மறைந்துகொள்வதுதான் முக்கியமா?'' தர்பாரி லால் சற்று நிறுத்திஞன், அவனுக்கு அவளிடம் இன்னும் நம்பிக்கை இருப்பதுபோல.

''தேவைதான், முக்கியந்தான்!'' என்று அழுதவண்ணமே கூறிஞள் சீதை: ''இந்த உலகத்தை நீங்களும் நானும் மட்டும் உருவாக்கவில்லே. சமூகம் . . .''

தர்பாரிக்கு இருந்த கடைசி நம்பிக்கையும் சிதைந்தது. ''இடையிலே ஒரு திரை போட்டு, நிபந்தனே விதிக்கும் காதலே நான் காதலாகவே நினேக்கவில்லே. உள்ளம் ஒன்றுபடுவது எத்தனே முக்கியமோ, அத்தனே முக்கியம் உடல் ஒன்றுபடுவதும். அதில் ஆண்டவனே வாசம் புரிகிருன். இப்படியாகச் சாஸ்திரங் களில் எழுதியிருக்கிறது!'' என்ருன்.

''எழுதியிருக்கலாம்!'' சீதை கூறிஞள்: ''எல்லாருமே உங்களேப்போல் இந்த விஷயத்தை ஒப்புக்கொண்டால் . . .''

''நான் யாரையும் பொருட்படுத்தவில்லே!'' தர்பாரி கோபத் தோடு கால்களேத் தரையில் அறைந்தான். அவை மண்ணில் புதைந்தன. அவற்றை மணலிலிருந்து எடுத்துக்கொண்டு வேகம் வேகமாக நடந்தான்.

சீதை பின்ஞல் பாய்ந்தாள், ''கேளுங்கள்!'' என்று கூவிய வாறே. இன்னும் தர்பாரி சுவரின் எல்லேயைத் தாண்டவில்லே. விரும்பிஞல் இன்னமும் அதன் மறைவில் உட்காரலாம், இருளேத் தழுவிக்கொள்ளலாம் . . .

இரண்டொரு பையன்கள் திறந்த வெளியில் வேடிக்கை பார்த்தவண்ணம் நின்றனர். அப்புறம் கடலே விற்பவன் வந்தான். அவன் சட்டியில் இருந்த நெருப்புத் தணல் கடற் காற்றுப் பட்டு அடிக்கொருதரம் 'பளிச், பளிச்'சென்று பிரகா சித்தது.

இந்தத் தடவை சீதை தர்பாரியின் கால்களே மட்டும் பிடிக்க வில்லே, தன் தலேயையும், வங்காளிக் கூந்தலேயும் அவன் கால் களில் புதைத்துக்கொண்டாள். ஈரக்கண்களும் உதடுகளுங்கூட அவன் கால்களே ஒற்றின. தர்பாரிக்குக் கால்கள் சுட்டன. விர்ரென்று ஏறிய உள் சூடு உடலே நடுங்க வைத்தது. கால்களே முத்தமிட்டு, கண்ணீரால் கழுவிச் சீதை சிறிது நிமிர்ந்து தர்பாரி யைப் பார்த்தாள்.

''நான் பனிக்கட்டியிஞலோ பாருங்கல்லிஞலோ ஆனவள் என்று நீங்கள் நினேக்கிறீர்கள்! உங்களில் உங்களோடு கரைய

என் மனமும் விழையவில்லையா? என்னோடு நீங்கள் ஒட்டி உறவாட முயலும்போது என் உடலும் உள்ளமும் படாத பாடுபடவில்லையா? ஆனால், ஆண்பிள்ளை நீங்கள்! உங்களுக்கு என்ன தெரியும் ஒரு பெண்ணின் துயரம்?''

இப்படிக் கூறியவள், ஓர் அறியாப் பயத்தினால் உள்ளம் நடுங்கியவாறே, ''இந்தத் துயரம் நீங்கள் தந்தது என்று நான் கூறவில்லை. ஆண்டவன் அருளியது இது! பகவான் பெண்களுக்குப் பெரும் அநீதி இழைத்துவிட்டான்'' என்றாள்.

''எனக்கு எல்லாம் தெரியும்!'' தர்பாரி தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றவாறே, ''ஆண்மகன் எதையும் பொறுப்பான். ஆனால், அவமானத்தைப் பொறுக்கமாட்டான்'' என்றான்.

''யாருக்கு அவமானம்?''

தர்பாரி பதில் கூறுவதை விடுத்துச் சீதையை ஓர் உதை உதைத்தான். அவள் பின்னால் போய் விழுந்தாள். தர்பாரி வேகமாக நடந்து வெளிச்சத்தை நோக்கிச் சென்றான்.

சீதை ஒருவகை அச்சத்தினால் நடுநடுங்கி நிலைகுலைந்து போனாள். தன் சின்னஞ்சிறு வாழ்க்கையில் அவள் இத்தகைய அச்சத்தை எதிர்கொண்டதில்லை. தன் தந்தை செத்தபோதுகூட அவள் இத்தகையதோர் அச்சத்துக்கு ஆளானதில்லை. அன்னையின் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அச்சம், துயரம் யாவற்றையும் அவள் மறந்துவிட்டாள். குத்தி வலிக்கும் கொப்புளத்தைச் சுற்றி இலேசாக விரல்களால் கோதிமுத்துக் குறுகுறுப்பு மூட்டினால், ஒருவகை இதம் கிடைப்பதாகத் தோன்றுமே, அப்படி அன்னை தலையைக் கோதித் தடவிவிட்ட போது அவள் துயரம் அனைத்தும் ஓடி மறைந்தன. ஆனால், இப்பொழுது? . . . அப்படியே மணலில் படுத்துச் சீதை விசிக்கலானாள். எத்தனை அடக்கினாலும் விசும்பல் ஒலி இலேசாக எழவே செய்தது. இடையில் இரண்டொரு தடவை அவள் தலையைத் தூக்கிச் சுற்றுச்சூழலைப் பார்த்துக்கொள்ளவும் செய்தாள், எங்கேயாவது யாராவது பார்க்கிறார்களோ என்று! ஆபத்தில் சிக்கிய பெண்ணைக் காக்க ஆணழகன் எவனாவது தோன்றுவானே, அதுபோல அவள் உதவிக்கு யாருமே வரவில்லை. எதிரே விளக்கின் ஒளி எதிரொளித்த இடத்தில் பளிச்சென்று ஏதோ ஒரு பொருள் தென்பட்டது. சீதை அதை எடுத்தாள். அது அவளிடமிருந்த அதே வெள்ளி டப்பிதான். அது

தான் எகிறிப் போய்க் கீழே விழுந்திருந்தது. இப்பொழுது அதில் பொடிக்குப் பதிலாக மணல் புகுந்திருந்தது.

தர்பாரி சீதையிடம் அன்பு பூண்டிருந்தான் என்பது உண்மையே. ஆனால், சீதையளவு அவன் காதலில் ஆழம் இல்லே. சீதை இந்த உலகில் தன் பெயரைப் பொருளுள்ளதாக ஆக்கப் பிறந்தவள் போலிருந்தது. தூரதாக மேலிருந்து யாராவது மோதிரத்தை விட்டெறியமாட்டார்களா என்று அசோகவனச் சீதையாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனால், ராமர் காலத்துக்கும் இந்தக் காலத்துக்கும் இடையே எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டிருந்தனவே. இப்போதெல்லாம் ஆங்கிலேய 'ஃபேன்' அல்லவா பழக்கத்துக்கு வந்திருந்தது! தர்பாரி அந்த வேடிக்கையைச் சுவைத்து மகிழ விரும்பினான்.

வீட்டு வராந்தாவுக்கு வலேத்தடுப்பு அடித்தாகிவிட்டது. மூன்று நாட்கள் நன்றாக வாட்டி எடுத்த பிறகு சீக்கியத் தச்சன் விடை கொண்டான். சுத்தமான வராந்தாவில் அமர்ந்து தர்பாரி வெற்றுப் பார்வையோடு சாலேத் திருப்பத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். சில சமயம் காயாம்பூ வர்ணம், சில சமயம் பாக்கு வர்ணம், சில சமயம் நெல்லேயொத்த பொன் நிறம், சில சமயம் காஷாய நிறம் என்று பல வர்ணங்கள் நடமாடிக்கொண்டிருந்தன. அருகில் தர்பாரியின் மருமான் மஹ்மூதா பன்வாரியா, நாணல் குச்சியையும் தகரத்தையும் கொண்டு செய்த, தகரம் எங்கே கையை வெட்டிவிடுமோ என்று பயப்படக்கூடிய, விகாரமான விளேயாட்டுப் பொருள் ஒன்றை வைத்து விளேயாடிக்கொண்டிருந்தான். ஒருவேளே அதனால்தானே என்னவோ சத்வந்தியா—கனீஸா, ஓடோடி வந்தாள். குழந்தையின் கையிலிருந்து அந்த விளேயாட்டுப் பொருளேப் பிடுங்கிக்கொண்டாள். குழந்தை அதையே திரும்பப் பெற அழுது பிடிவாதம் பிடிக்கத் தொடங்கியது.

''எதற்காகப் பிடுங்குகிறீர்கள் தமக்கையாரே? விட்டுவிடுங்கள்!'' என்றான் தர்பாரி.

''எல்லாம் எனக்குத் தெரியும். பேசாமல் இரு! எத்தனே தடவை தமக்கையாரே என்கிற மரியாதை வேண்டாம், அக்கா என்று கூப்பிடு, போதும் என்று கூறியிருக்கிறேன். கொஞ்சமாவது உறைத்தால்தானே?'' என்று காய்ந்தாள்.

''அது சரி, அக்கா! பேசாமல் இரு என்ருல் எப்படிப் பேசாமல் இருப்பது? விஷயத்துக்கு வராமல் வேறு எங்கோ போகிருயே? இவன் தொண்டை கிழியக் கத்துகிருனே. லார்ட் கிச்னர் கூட முழுக் கப்பலும் கவிழ்ந்தபோது இப்படி அழுது கன்னத்தில் கைவைத்துக்கொண் டிருக்கமாட்டான். கொடுத்துவிடு அவன் விளையாட்டுப் பொருளை!'' என்ருன் தர்பாரி மறுபடியும்.

''எப்படிக் கொடுக்கிறது? எங்கேயாவது கண்ணைக் கிண்ணைக் குத்திக்கொண்டால் . . . ?''

''எல்லாக் குழந்தைகளுந்தான் என்னத்தையெல்லாமோ வைத்துக்கொண்டு விளையாடுகின்றன! எத்தனை குழந்தைகள் கண்ணைக் குத்திக்கொண் டிருக்கின்றன?'' தர்பாரி விடவில்லை.

''இது குழந்தையாகவா இருக்கிறது? கோட்டானுக அல்லவா இருக்கிறது. என்ன அடம் பிடிக்கிறது, பாரு!''

''எல்லா அம்மாக்களுக்குமே இப்படித்தான் தன் குழந்தை கோட்டானுகத் தோணும்போலே!''

மஹ்மூதா பன்வாரியா வீடே தலையிலே விழுந்துவிட்டாற் போல வில்லாக வளைந்து வாய் கிழியும்படியாக அழுதுகொண் டிருந்தான். தர்பாரி மாடத்திலிருந்த ஜப்பானியப் பூனை பொம்மையை எடுத்துக் கொடுத்தான். அது சாவி கொடுத்ததும் ஓடும், வேடிக்கைகள் பல காட்டும். அதைப் பார்க்கப் பார்க்கக் குழந்தைகள் மட்டும் என்ன, பெரியவர்களுமே குழந்தைகளாகி மகிழ்வார்கள். ஆனுல், பிடுங்கிக்கொண்ட பொருளைப் பெற அடம் பிடிப்பதுதானே குழந்தைகளின் இயல்பு! குழந்தையின் அழுகையை நிறுத்தத் தர்பாரி முகத்தை இல்லாத கோணல்கள் எல்லாம் கோணிக்கொண்டான். 'காகா கூகூ' என்று வராத ஒலிகள் எல்லாம் எழுப்பிப் பார்த்தான். வாயில் விரலைவிட்டு அநுமான் உருவம் ஏற்ருன். அப்புறம் ஜானிவாக்கர், ஆகா போன்று கோணங்கிச் சேஷ்டைகள் பல செய்தான். இத்தனைக் கும் குழந்தை அழுகையை நிறுத்தவில்லை. தான் வைத்திருந்த விளையாட்டுப் பொருளே வேண்டுமென்று ஒரே குறியாக அழுது தீர்த்தது. ஆசை தீர ஓர் அறை வைக்கலாமா என்று தோன்றி யது தர்பாரிக்கு. அதன் ஒப்பாரி ஊரைக் கூட்டிவிடுமே என்ற பயம் மட்டும் இல்லாவிட்டால், எண்ணத்தைச் செயலாக்கியிருப் பான். அடியின் வேகத்தைக் குரலில் காட்டிச் சீறினுன்: ''எலே! இப்போ நீ அழுகையை நிறுத்துகிருயா, இல்லையா?''

''அழுதால் அழட்டும், விட்டுத் தள்ளு!'' என்று உள்ளே யிருந்து குரல் வந்தது, ஸாவேஹின் குரல்.

குழந்தை அழுதுகொண் டிருந்தது. கடைசியில் உள்ளே போன அக்கா திரும்பவும் வந்தாள், ''ஐயோ, ராமா!'' என்றவாறே.

'' 'ஐயோ அல்லாஹ்!' என்று சொல்லேன். எதற்காக ராமனை இழுக்கிறாய்?''

''பகவானுக்காகப் பேசாமல் இரேன்!''

''கடவுளுக்காக என்று சொன்னால் என்னவாம்!''

சத்வந்தியா—கனீஸா, குழந்தையின் கையிலிருந்து எப்படி விளையாட்டுப் பொருளைப் பிடுங்கிக்கொண்டு போனாளோ, அப்படியே திருப்பிக் கொண்டு வந்து தந்தாள். ''எடுத்துக் கோடா, அப்பா!'' என்று கூறிக் குழந்தையின் கையில் அதைத் திணித்தாள். அப்புறம் குழந்தையின் வருத்தத்தைக் காணச் சகியாதவள்போல், குழந்தையைத் தூக்கிக்கொண்டாள், மார்புறத் தழுவிக்கொண்டாள், உச்சியில் வைத்து ஆட்டினாள். பிறகு சட்டைத் தலைப்பினால் முகத்தைத் துடைத்தாள், மூக்கைத் துடைத்தாள். முத்தமிட்டுக் கொஞ்சினாள். அவள் சொல்வது போலவே கோபம் தணிந்தாள். அப்புறம் தன்னைத்தானே திட்டிக்கொண்டாள்:

''இந்த மாதிரி அம்மா இருக்கிறதைக் காட்டிலும் இறந்து விடுவது மேல்! பாவம், குழந்தையை எத்தனை அழவைத்து விட்டாள்!''

அப்புறம் தன் கணவனைப் பார்த்துப் பொரிந்து தள்ளினாள்: ''பாரேன், சுகமாக, சந்தோஷமாக உட்கார்ந்திருக்கிறார், துளிக்கூடச் சொரணை இல்லாமல்!''

சொரணையில்லாதவர் எழுந்து நின்றார். ஆனால், முகத்தில் சந்தோஷக் குறி தெரியவில்லை.

''இனிமேல் கை என்ன, கழுத்தை வெட்டிக்கொண்டால் கூடக் கவலை இல்லை!'' என்றான் தர்பாரி.

''வெட்டிக்கட்டுமே! கட்டிக்கொண்டு மாரடிக்கப் போகிறவள் நான். உங்களுக்கு இத்தனைகூட இது இருக்கப் போகிறதில்லை!'' என்றாள் அவள்.

''இருக்குமோ, இராதோ?'' தர்பாரி தொடர்ந்தான்: ''பசித்தால் புலியும் புல் தின்னுமாம். அதுபோல, அவசியம் என்று ஏற்பட்டால், அறியாதவன் செய்வதைத்தான் அறிவாளியும் செய்கிறான் என்பது வசனம். முன்னாடியே பிடுங்கி வைக்கிற

இந்த முட்டாள்தனத்தைச் செய்யாமல் இருக்கலாம் இல்லையா?''

''ஆமாம், நான் முட்டாள்தான். இல்லையென்று யார் சொன்னது?'' என்று கூறியவண்ணமே குழந்தையை எடுத்துப் போன தமக்கையின் குரல் ஒலித்தது: ''அம்மாவாகவும் இருந்து கொண்டு அறிவுடனும் இருப்பது என்பது தனி விஷயம்!''

அக்காவின் தோளில் தலையைச் சாய்த்துக்கொண்டு போக்கிரிப் பயல் மஹ்மூதா பன்வாரியா சிரித்தவாறு காணப்பட்டான். தனக்குள்ள ஆற்றலையும் பலத்தையும் நன்கு தெரிந்துவைத்திருந் தவன்போல.

அதே நேரம் அரோரா சினிமாவிலிருந்து வருகிற திருப்பத்தில் ஓர் ஆரஞ்சுக் கலர் இரண்டு மூன்று தடவை அசைந்தாடுவதுற் போலிருந்தது. தர்பாரி சட்டென்று தன் உடைகளைத் தட்டிக் கொட்டிச் சரிசெய்து கொண்டான். தலையில் தொப்பியை மாட்டிக்கொண்டு வெளியே புறப்பட்டு விட்டான்.

திருப்பத்தில் சீதை நின்றுகொண் டிருந்தாள். அவள் ஒரு முறை தர்பாரியைப் பார்த்தாள். அப்புறம் வேறு எங்கோ பார்க்கலானுள். அவள் கண்கள் கொஞ்சம் உள்ளே போயிருந்தன. இமைகள் இன்னும் கொஞ்சம் ஈரமாக இருந்தன.

''சொல்லுங்கோ? என்ன உத்தரவு?'' என்று கேட்ட வண்ணம் தர்பாரி அவளை நெருங்கினுன்.

சீதை ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவள் உள்ளூற நடுங்கு வதுபோலப் பட்டது தர்பாரிக்கு. தர்பாரி சிறிதுநேரம் அவளையே பார்த்துக்கொண் டிருந்தான். ''இப்படிப் பேசா விரதம் இருக்கிறதானுல் நான் திரும்பி . . .'' என்று கூறித் திரும்பலானுன்.

''கேளுங்கள்!'' சட்டென்று திரும்பிச் சீதை கூறினுள்: ''என்னை மன்னித்துவிடுங்கள்! அன்று நான் செய்தது பெருந் தவறுதான்!''

தர்பாரி நின்று அவள் பக்கம் பார்த்தான்:

''இனிச் செய்யமாட்டாயே?''

மாட்டேன் என்று கூறும் வகையில் சீதை தலை அசைத்தாள்.

''நான் கூப்பிடும்பொழுது என்னோடு வருவாயா?''

சீதையின் தலை சம்மதம் தெரிவிக்கிறுற்போல் ஆடியது. அவள் முகத்தைத் திருப்பிப் புடைவைத் தலைப்பால் கண்களைத்

துடைத்துக் கொண்டாள். தர்பாரியின் உடலில் இரத்த ஓட்டம் விர்ரென்று ஏறினாற்போலிருந்தது. அவன் தன் சொறசொறப்பான கையை நீட்டிச் சீதையின் மென்மையான கரங்களைப் பற்றிக்கொண்டான். ''நீ இப்படிப் பயந்து சாகிறாயே, சீதை! உன் இந்த நிலையைப் பார்க்கும்பொழுது, நான் என்னை எத்தனை மட்டமானவனாக நினைக்கிறேன், தெரியுமா?'' என்றான். சீதை இப்படித்தான் ஏதாவது அவன் வாயிலிருந்து வரவேண்டும் என்று விரும்பினாள்.

''ஏன்? ஏன் அப்படி நினைக்கணும்?'' என்றாள்.

தர்பாரியும் சீதையும் அன்று போன அதே பழைய இடத்துக்குப் போனார்கள். சிவாஜி பார்க்கில் சுவருக்குப் பின்னால் போய் உட்கார்ந்தார்கள். பொழுதும் நன்கு சாய்ந்துவிட்டது. அன்று போல் இன்று வானத்தில் மேகம் இல்லை; தொடுவானத்தின் வட்டத்திலிருந்து வான வீதிக்குச் செல்லும் கதிர்களைக் கண்ணாடியெனப் பிரதிபலித்துக் காட்ட, விண்ணின் வெளிச்சத்தை மண்ணில் திரும்ப விட்டெறிய. அதனால் இருட்டு புவியைச் சீக்கிரமே சூழ்ந்துகொண்டது. எதிரே மகாத்மா காந்தி நீச்சல் குளத்தைச் சுற்றித் தெரிந்த கம்பிக் கிராதிகள் கோடாகத் தெரிந்தன. அப்புறம் அவையும் அழிந்துவிட்டன.

தர்பாரியின் வளரும் காதல் உணர்வுப் பெருக்கத்துக்கு எதிரே சீதை நாணமே உருவாக உட்கார்ந்திருந்தாள். தர்பாரிக்கு ஆத்திரமாக வந்தது. ''ஏதாவது சிரித்துச் சிரித்துப் பேசேன்!'' என்று எரிந்து விழுந்தான். வேறு வழியின்றிச் சீதை சிரிக்கும்படியாயிற்று.

தர்பாரி சீதையின் இந்தப் போலிச் சிரிப்பைக் கேலி செய்யும் வகையில் 'நக்கல்' செய்தான். அதைக் கண்டு சீதை நிசமாகவே சிரித்துவிட்டாள். தர்பாரிக்குத் துணிவு பிறந்தது. ''நிசமாகவே உனக்கு என்மேல் நம்பிக்கை இல்லையா?'' என்று கேட்டான்.

''அப்படியில்லை.'' சீதை கூறினாள். ''நீங்கள் என்னைக் கல்யாணம் செய்து கொண்டாலுமே வெறுப்போடுதான் நோக்குவீர்கள். நான் இப்படி இருந்தேன் என்று நினைக்கும் பொழுது, தானாக வெறுப்பு ஏற்படத்தானே செய்யும்?''

''இல்லை, சீதை! நான் அப்படியெல்லாம் நினைக்க மாட்டேன்; ஒருநாளும் நினைக்கவே மாட்டேன்!''

அதேநேரம் சிலபேர் கையில் இரும்புக் கம்பிகளோடு அந்தப் பக்கம் வந்தார்கள். தர்பாரி துணுக்குற்றான். அவர்கள்

கம்பிகளை மணலில் குத்திக் குத்திப் பார்க்கத் தொடங்கவே தான் தர்பாரிக்குத் தைரியம் பிறந்தது. இரண்டொரு நாட்களுக்கு முன்பு கோணியில் கட்டிக்கொண்டு வந்து புதைத் திருந்த கடற்பொருளை அவர்கள் தேடிக்கொண் டிருந்தார்கள். கடல் பொங்கிக் கரையை அரித்து அப்பொருளைக் கபளீகரம் செய்வதற்கு முன்னால் எடுத்துச் சென்று உபயோகித்துவிடத் திட்டமிட்டிருந்தார்கள்.

தர்பாரியும் சீதையும் எழுந்து சற்று நகர்ந்து சுவருக்கு மறு கோடியில் போய் அமர்ந்தார்கள். திரும்பிப் பார்த்தால், சுவரின் மேல் பாத்திரம் துலக்கும் 'ரயா' மக்கள் உட்கார்ந்து சிரித்துப் பேசிக்கொண் டிருந்தார்கள். தர்பாரி அதைக் கண்டும் காணாதவன்போல் இருக்க முயன்றான். ஆனால் சீதை பயந்து நடுங்கினாள், வெட்கினாள், வேர்க்க விறுவிறுக்க விழித்தாள். அவள் தன்னை முழுவதும் தர்பாரியின் கையில் அர்ப்பணித்து விட்டாள். இன்று அவள் தனது என்ற எண்ணத்தையே அழித்துக் கொண்டுவிட்டாள். தன் உள்ளங் கவர்ந்தவனின் கோபத்தைத் தணிப்பதே இன்று அவள் குறி. அதற்காக அவள் எதுவும் செய்யச் சித்தமாயிருந்தாள்.

அப்போதுதான் சில விடலைகள் 'அலை பாயுது என் உள்ளம்' என்று பாடிக்கொண்டே வெகு அருகாக நடந்து சென்றார்கள். அப்புறம் ஒரு போலீஸ்காரன் வந்தான். தர்பாரிக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. எழுந்துவிட்டான். இரத்தம் கக்கும் விழிகளால் ஒருமுறை அக்கம்பக்கத்தைப் பார்த்தான். ஆங்கிலத்தில் பெரிதாக ஒரு வசவை உதிர்த்தான். பிறகு, ''வா, சீதை! ஜுஹுவுக்குப் போவோம்!'' என்றான்.

''ஜுஹுவுக்கா?''

''ஆமாம், எழுந்திரு. கேடல் ரோட்டில் டாக்ஸி பிடித்துக் கொள்ளுவோம்.''

சீதை பேசாமல் எழுந்து தர்பாரியைத் தொடர்ந்தாள். சீதையும் தர்பாரியும் ஜுஹுக் கடற்கரையில் தங்கள் இஷ்டத்துக்குச் சுற்ற முடியாது. ஏனெனில் அப்படிச் சுற்றுவது ஆபத்து. தினம் ஏதாவது விபரீத நிகழ்ச்சிகள் அங்கு நிகழ்ந்த வண்ணம் இருந்தன. சில நாட்களுக்கு முன்பு அங்கு ஒரு கொலையே நடந்தது. சில குண்டர்கள் ஒரு கணவன்—மனைவியை வெட்டிப் போட்டு வாழ்க்கைக் கடலின் மறு முனையில் எறிந்து விட்டார்கள்!

ஆனால் அன்று ஜும்ஹாவில் ஒரு ஹோட்டல், ஒரு காட்டேஜ் பாக்கியில்லாமல் நிரம்பி வழிந்தது. என்ன முயன்றும் இடம் கிடைக்கவில்லை.

ஒரு மணிநேரம் ஒன்றரை மணிநேரம் கழித்துத் தர்பாரியும் சீதையும் கோட்டையை நோக்கிச் சென்றுகொண் டிருந்தார்கள். வழி நெடுக, சீதை ஒன்று கேட்டால், தர்பாரி வேறு ஒன்று சொல்லிக்கொண்டே சென்றான், கேள்விக்கும் பதிலுக்கும் தொடர்பே இல்லாமல். பேச்சிலாவது தெளிவு இருந்ததா என்றால் அதுவும் இல்லை. போதைப் பொருளை விழுங்கி நாக்குத் தடித்துவிட்டவன்போல, வாய் நிறையப் புகையிலையைப் போட்டுக் குதப்பிக்கொண் டிருப்பவன்போலப் பேச்சுக்குப் பேச்சு குழறினான்.

டாக்ஸி ஹாஜி அலி வழியாக, நார்தேவுக்குள் புகுந்தது. ஆஸரா ஹவுஸ் வழியாக ஆர்ன்பி சாலையை அடைந்தது. ஆர்ன்பி சாலைக்கு இப்போது மாற்றுப் பெயர் மகாத்மா காந்தி ரோடு. ஒரு ஹோட்டலை அடைந்து தர்பாரி மானேஜரைக் கேட்டான்: ''ஏதாவது அறை வாடகைக்குக் கிடைக்குமா?''

மானேஜர் தர்பாரியைக் கூர்ந்து பார்த்தான். அவன் ஏதாவது செய்யத் தகாத செயல் செய்து வந்திருக்கவேண்டும் அல்லது செய்ய வந்திருக்கவேண்டும் என்று அவருக்குப் பட்டது! பின்னால் சீதை தரையையே நோக்கிய வண்ணம் விலவிலத்து நின்றுகொண் டிருந்தாள். இருவருமே தவறு செய்து பழக்கம் இல்லாதவர்கள். அநுபவம் பற்றாது. இரக்கமற்ற இயற்கையின் கையில் சிறைப்பட்டு, வெறி உந்தக் காதல் பித்துக்கொண்டு வந்திருந்தவர்கள். ''எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்று கேட்டார் மானேஜர்.

தர்பாரி சற்று யோசித்தவனாக ''ஔரங்காபாத்திலிருந்து'' என்றான்.

''அப்படியா?'' என்ற மானேஜர் ஒருமுறை சீதையைப் பார்த்தார். மறுமுறை கருநிழல் இழையோடும் தர்பாரியின் முகத்தைக் கூர்ந்து நோக்கினார். பிறகு, ''உங்கள் பெட்டி படுக்கைகள் எங்கே?'' என்று கேட்டார்.

''பெட்டி படுக்கை எதுவும் இல்லை!''

''மன்னிக்கணும்!'' மானேஜர் தர்பாரியைப் பார்த்த பார்வை, ஏதோ அசுத்தமான அசிங்கப் பொருளைப் பார்ப்பதுபோல் இருந்தது. ''எங்களிடம் அறை எதுவும் காலியில்லை!'' என்றார்.

''என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? இப்பொழுதுகூட டெலிபோனில் . . ?''

இதே நேரத்தில் பைரா, இருபத்தேழாம் நம்பர் ரூமுக்கு ஒரு டிரேயில் வேஃபர், பயத்தம்பருப்பு, சோடாபாட்டில், சாவி எல்லாம் எடுத்துப் போய்க்கொண்டிருந்தான். அவனே முந்திரிக் கொட்டையாக, ''இந்த ஹோட்டல் கண்ணியமும் மரியாதையும் உள்ளவர்களுக்குத்தான், சார்!'' என்றான்.

தர்பாரியினால் எதுவும் பேச முடியவில்லை. அவனுக்குத் தெரியும், அதுவும் நன்றாகத் தெரியும், 'இந்தப் பைராவின் கண்ணியம் ஒரு ரூபாய் 'டிப்'பில் அடக்கம். மதிப்புக்குரிய இந்த மானேஜரின் மரியாதை ஐந்து ரூபாய்க்குமேல் இல்லை'' என்று! இன்று பார்த்து இவர்கள் நேர்மைக்கும், கண்ணியத்துக்கும், மரியாதைக்கும், மதிப்புக்கும் தங்களையே வடிவமாக்கிக்கொள்ளுகிறார்கள் என்பதையும் அவன் அறிவான். இவர்களுடைய கண்ணியமும் மரியாதையும் ஒருபுறம் கிடக்கட்டும்; வாழ்க்கையில் எதையும் செய்வதற்கு ஒரு பயிற்சி வேண்டும் என்பது உறுதியாயிற்று. தன் பார்வையிலே தொழில் முறை தெரிந்த ஒருவனின் துணிச்சலையும் அச்சமின்மையையும் கொண்டு வர வேண்டும். வெட்கத்தைவிட்டுப் பழகத் தெரிந்திருக்கவேண்டும். அப்போது எதிராளியின் கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை எல்லாம் பொய்யாக முடியும், இருக்கும் இடம் தெரியாமல் ஓடி மறையும் என்பதும் அவனுக்குப் புலனாகியது. ஆனால் தர்பாரி மிகவும் பயங்கொள்ளி, பலவீனமான மனம் படைத்தவன். சொல்லப் போனால் பட்டை தீட்டப்படாத வைரம்!

திரும்பும்போது அவன் திட்டினான், ஆங்கிலத்தில். ஹோட்டல் நடத்துபவர்களுக்குக் கேட்கும்படியாகச் சொல்லவும் விரும்பினான்; சொல்லாமல் மறைக்கவும் விரும்பினான்.

''வா, சீதா! பிறகு எப்பொழுதாவது . . .'' என்றான் தர்பாரி.

இருவரும் டாக்ஸியில் அமர்ந்து வீட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

வாழ்க்கை சுவையற்றுச் சப்பிட்டுப் போயிற்று. தர்பாரி இத்தகைய தோல்வியை என்றும் கண்டதில்லை. அவன் பார்வையில் எத்தனையோ பேர் 'ஹீரோக்'கள் ஆனார்கள். எத்தனையோ ஹீரோக்கள் அவன் காலடியில் வந்து விழுந்தார்கள்.

இன்று அவனுக்கு எங்கும் போகும் எண்ணம் இல்லை. எந்த வித நிகழ்ச்சியும் கிடையாது. எதிலும் மனம் கொள்ளாமல் அவன் அலுவலகத்திலிருந்து சீக்கிரமாகவே வீடு திரும்பிவிட்டான்; களைத்துச் சளைத்து, அலுத்துச் சலித்து! அன்று மாலை அவன் எதிர்கொண்ட தோல்விக்கும் அவமானத்துக்கும் பிறகு அவனுக்கு ஏதோ ஒரு வகையில் ஆறுதல் கிடைத்தாற் போலிருந்தது. ஆனால் அது உண்மையில் ஆறுதல் இல்லை. இந்தத் தீ பிறக்கவே கூடாது. காமத்துக்குத் தீ என்று பெயரிட்டவர்கள் எத்தனை புத்திசாலிகள்! அதனால்தான் ஆன்றோர்கள் எண்ணத்துக்குப் பெருமதிப்புத் தருகிறார்கள். காம நோக்கே கூடாது! காமம் பிறக்கக்கூடாது. பிறந்துவிட்டால், மனிதன் குழந்தைகளை உதறி எறிவதுபோல் இதை உதறி எறிய முடியாது; கழுத்தை நெறித்துக் கொன்றும் போடமுடியாது. ஏனெனில் எப்படிப் பார்த்தாலும் இரண்டு வகையிலும் இதற்குத் தண்டனை சாவுதான்! இந்த மூளை எங்காவது ஒரு மூலையில் பேசாமல் படுத்து அடங்கிக் கிடக்கிறாற் போலிருக்கும். ஆனால், நீங்கள் எப்பொழுது நிராயுதபாணியாக, கையும் காலும் செயலற்று இருப்பீர்கள் என்று தருணம் பார்த்துக்கொண்டேயிருக்கும். உங்கள் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு மரணப் பிடியாகப் பிடித்து விடும். மரண தேவனே இதனிடந்தான் பாடம் கற்றிருக்கிறானோ என்று தோன்றும்படி செயலாற்றும்.

தர்பாரி அப்பொழுது வராந்தாவில் உட்கார்ந்து டான் பாஸ்கோவின் சுவரை ஒட்டினாற்போல் வளர்ந்திருந்த மரங்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். அதன் நிழலில் அந்தப் பகுதிவாழ் செல்வந்தர்களின் கார்கள் இளைப்பாறிக்கொண்டிருந்தன. இவற்றில் சில, வீட்டிலிருந்து அலுவலகத்துக்கும், அலுவலகத்திலிருந்து நேராக வீட்டுக்கும் வரும் பணக்காரத் தொழிலாளர்களுடையவை; மனைவியிடம் சண்டை பிடித்தே திருப்தியுறுகிறவர்கள் இவர்கள்! வேறு சில அங்கு நடமாடித் திரியும் நடத்தை கெட்ட பெண்களுக்கு வீடாகப் பயன்படுபவை. இவற்றின் டிரைவர்களுக்கு மாலையிலிருந்தே வண்டியைப் பளபளவென்று முகம் தெரியும்படியாக வைத்துக்கொள்வதற்காகச் சம்பளம் அழப்பட்டு வந்தது. பைரா நம்பர் 28 என்று கொள்ளலாம்.

தர்பாரி இழுத்துப் பறித்து அன்று ஹோட்டலில் கண்ட ஏமாற்றத்துக்குக் காரில் காணும் நம்பிக்கையோடு தொடர்பு கூட்டி முடி போட்டுப் பார்க்கும் முயற்சியில் ஈடுபட்டான். ஆனால் என்ன பயன்? அவன் நம்பிக்கைக்கு ஒளியூட்டக் கார் வேண்டுமே? அதற்கு எங்கே போவது? தந்தை கிரிதாரிலால் மேத்தா தம் காரின்மீது காற்றுக்கூடப் படக்கூடாது என்று பொத்திப் பொத்திப் பாதுகாப்பவர். அடுத்த பிறவியில் பாம் பாகிப் புதையல் காக்க எண்ணம் கொண்டிருந்தாரோ என்னவோ?

ஸாவேஹ் அதாவது சர்தாரிலால், மனைவி குழந்தை களுடன் தம் வீட்டுக்குப் போயிருந்தார். வீட்டில் இப்போது இருந்தது, ஒற்றை மரமாகக் குழந்தை குட்டிகளின்றி அண்ணி மட்டுந்தான். குழந்தையில்லாக் குறைக்கு அண்ணாவுக்கும் அவளுக்கும் எப்பொழுது பார்த்தாலும் தகராறு. ''உங்களிடம் தான் ஏதோ குறை'' என்பாள் அவள். அவர் அதையே திருப்பிப் படிப்பார், ''உன்னிடந்தான்'' என்று. ''நீங்கள் டாக்டரிடம் காட்டுங்களேன்'' என்பாள் அவள். ''நீதான் போய்ச் சோதித் துக்கொண்டு வாயேன்'' என்பார் அவர். பிறக்காத குழந்தைகள் ஏமாற்றத்தோடு இருவரையும் நோக்கும்; இருவருக்குமாகச் சேர்த்துத் தங்கள் தலையிலேயே அடித்துக்கொள்ளும்!

தர்பாரிக்கு ஒரேயடியாகப் 'போர்' ஆகிவிட்டது. இன்னும் கொஞ்சநேரம் இப்படியே உட்கார்ந்திருந்தால் அம்மா கல்யாணப் பேச்சுப் பேச வந்துவிடுவாள் என்பது அவனுக்குத் தெரியும். அவனே அவசரப்பட்டுத் திருமணம் புரிந்துகொள்ள விரும்பவில்லை. கொஞ்ச நாட்கள் வாழ்க்கையைப் பார்க்க விரும்பினான். என்றைக்காவது ஒருநாள் எல்லாருக்குந்தான் கல்யாணம் ஆகிவிடுகிறதே!

யாரோடு கல்யாணம்? சீதை சட்டென்று பாய்ந்து அவன் மூளையில் புகுந்தாள். சீதை பலவிதத்திலும் உகந்தவள்தான். இருந்தாலும் கல்யாணம் என்று வருகிறபொழுது . . .! ரொம்ப அடக்கம் அவள்! சங்கோசமும் ரொம்ப ரொம்ப. அழகுக்கும் ஒன்றும் குறைவில்லை. ஆனால் மனைவி . . . மனைவி என்று வருகிறபோது அது வேறு விஷயம். அவள் கொஞ்சம் துரு துருவென்று இருக்கவேண்டும். இப்படி அப்படி எட்டிப் பார்க்கவேண்டும். ஆண் பிள்ளை அவள் காதைப் பிடித்து, 'இதோ பார்' என்று சொல்லவேண்டும். அதோடு

சீதை ஒரு விதவைத் தாயின் பெண்; ஆண் பிள்ளையோடு ஒட்டிக் கொள்ளும்பொழுது கணவனோடு ஒட்டிக்கொள்ளுகிறாற்போல் இல்லை; தகப்பனோடு ஒட்டிக்கொள்ளுகிறாற்போல் இருக்கிறது. தந்தைப் பாசத்துக்கு ஏங்குகிறவளாயிருக்கும்! ஆமாம், நான் எங்கே போய் வாடகை வசூலித்துக்கொண்டு நிற்பேன்?

சிறிது நேரக் காதலுக்குச் சீதையைப் போல் சிறந்தவள் வேறு யாருமே இல்லை. என்ன உடல் வாகு! என்ன மேனி அழகு!

அவன் கண்களில் மிஸ்திரி தோன்றினாள்; கூடவே பப்பலும் தோன்றினான்.

மிஸ்திரி தொலைவிலிருந்தே 'சாமி' பக்கம் சுட்டிக் காட்டிய வாறு வந்துகொண் டிருந்தாள். பப்பலும் 'ஆங், ஊங்' என்று அவள் உக்கலில் கொம்மாளம் போட்டுக்கொண்டு வந்தான். இன்று பப்பல் குதித்த குதி பந்துக் குதி! தரையிலிருந்து எகிறி எகிறிக் குதிக்குமே, அதுபோல. மிஸ்திரிக்கு அவனைச் சமாளிப்பது சிரமமாகிவிட்டது.

இன்று பப்பல் ஆண்டவன் உடையோடு மட்டும் வரவில்லை, மனித உடையிலும் வந்தான். ஓர் அழுக்கு பனியனைப் போட் டிருந்தாள் மிஸ்திரி. அதற்குக் கீழே ஆண்டவன்—ஆண்டவனின் கைவண்ணந்தான்!

அருகில் வந்ததும் பப்பல் இரண்டு கைகளையும் இணைத்து ஏந்தினான். "போக்கிரிப் பயல்! நான் அவனுக்காகக் கையிலேயே தின்பண்டத்தை வைத்துக்கொண்டு காத்து நிற்கிறாற்போலக் குதிக்கிறான்! நான் உள்ளே போய்விட்டுத் திரும்பி வருகிற நேரமே அவனுக்குப் பொறுக்கவில்லை! அத்தனை அவசரக் குடுக்கை!"

தர்பாரி உள்ளே சென்று 'ஓமப்பொடி' எடுத்து வந்தான். அவனுக்கு ஓர் எண்ணம் எழுந்தது. மிஸ்திரி ஒரு பெண். பப்பல் அவளுக்குப் பிள்ளை. எத்தனை புனிதமான உறவு! ஏழைகளுக்கும் தகப்பன் உண்டு. ஆனால் அவன் பெயருக்கு மாத்திரம்தான்!

இந்த எண்ணத்தில், தர்பாரியின் மூளை வேகமாக இயங்கியது. அது ஒரு வட்டத்தில் சுற்றும்; சுற்றித் திரும்ப அதே இடத் துக்கு வரும். அப்புறம் அவன் எதிரே ஒரு திரை எழுந்தாற் போலிருந்தது. கண்கள் விரிந்து மூடின, யோசனைப் போக்குக்கு ஏற்ப. தர்பாரிலால் இருந்த இடத்திலிருந்தே பப்பலுக்கு ஓமப் பொடியைக் கொடுத்தான். ஏனென்று தெரியவில்லை, தர்பாரி லால் இன்று பப்பலை வாங்கிக்கொள்ளவில்லை. பப்பலைத் தூக்கிக்

கொள்ள வெட்கப்படுவது போல் இருந்தது. ஆனால் பப்பல் ரப்பற் பந்தாக, சுவரில் மோதித் திரும்ப வருமே, அதுபோல் தின்பண்டத்தைப் பெறாமலே தாயின்பக்கம் திரும்பிக்கொண்டான். அவனுக்கு ஓமப்பொடி வேண்டாம் என்பதில்லை. அது வேண்டித்தான் இருந்தது. அதோடு வானத்துச் சாம்ராஜ்யமும் வேண்டியிருந்தது! ஆம், தர்பாரி இன்று தன்னை ஏன் தூக்கிக் கொள்ள முன்வரவில்லை? பப்பல் வியப்பில் அலை பாய்ந்தான்.

"இன்று எத்தனை காசு சம்பாதித்திருக்கிறாய், மிஸ்திரி" தர்பாரி சிறிது வெட்கத்தோடுதான் மிஸ்திரியைக் கேட்டான்.

''ஒரு பதினாலு அணா!''

''பதினாலு அணா மட்டுந் தானா?''

''இன்று என் புருசன் நாக்பாடாவுக்குப் போய்விட்டான்!'' மிஸ்திரி கூச்சமின்றிக் கூறினாள்.

''உன் புருசனா?'' தர்பாரி வியப்பில் ஆழ்ந்து கேட்டான்! ''நீ இன்னொரு புருசனைச் சேர்த்துக்கொண்டு விட்டாயா, என்ன?''

மிஸ்திரி சிரித்தாள். பப்பலை இரண்டு கைகளிலும் தூக்கித் தர்பாரிலாலின் அத்தனை உயரத்துக்குக் காட்டி, ''இவன்தான் என் புருசன்; சம்பாதித்துப் போடுகிற புருசன்! இவனை இன்று இவன் சித்தி பார்வேயில் உள்ள சுண்ணாம்புக் காளவாய்க்கு எடுத்துச் சென்றிருந்தாள். இவனுக்கு இந்தப் பனியன் கொடுத்தாள். இந்தப் போக்கிரி இதைப் போட்டுக்கொள்ளவே மாட்டேன் என்கிறான். கழுத்தைக் கழுத்தை உதறுகிறான், இந்த பூமிச் சுமை முழுதையும் தூக்கி இவன் தோளில் வைத்து விட்டாற்போல!'' என்றாள்.

தர்பாரி சிரித்துக்கொண்டான். அவன் பப்பலை அப்போதும் தூக்கிக்கொள்ளவில்லை. பப்பல் தின்பண்டத்தை மறந்து சத்தம் போடலானான்.

''இப்படி வெற்றுடம்பாகவே இருக்கப் பழகிவிட்டால், பெரியவன் ஆனபின் என்ன செய்வான்?'' என்றாள் மிஸ்திரி.

''இவன் இப்படி இருப்பதே நன்றாயிருக்கிறது, மிஸ்திரி!'' பப்பல் எகிறி எகிறிக் குதித்தான். 'பொய்! நான் நன்றாயிருந்தால், நீ ஏன் என்னைத் தூக்கிக்கொள்ளவில்லை?' என்று கேட்பது போலிருந்தது. அவன் சத்தமும் பிடிவாதமும் இன்னும் அதிகமாயின. ''ஹோ ஹோ, . . .''

''பப்பல் உன்னோடு இருந்தால் எத்தனை சம்பாதிப்பாய் நீ?'' என்று கேட்டான் தர்பாரி.

''இவன்...'' மிஸ்திரி பப்பலைக் கீழே இறக்கிவிட்டாள். தூக்கி நின்றதில் அவள் கை கடுத்துவிட்டது. ''இவன் இருந்தால் மூன்றும் கிடைக்கும், நாலும் கிடைக்கும்!''

தர்பாரி தன் சட்டைப் பையிலிருந்து பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து மிஸ்திரியிடம் நீட்டினான்.

''இது என்ன, சாமி?'' மிஸ்திரியின் முகம் சிவந்துவிட்டது.

''இதை வாங்கிக்கொள்!'' தர்பாரி சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே அவசரப்படுத்தினான். ''சீக்கிரம்! வாங்கிக்கொள். யாராவது பார்த்துவிடப் போகிறார்கள்!''

மிஸ்திரி இங்கும் அங்கும் பார்த்தாள். அவள் முகம் இதற்குள் குங்குமமாகச் சிவந்துவிட்டது. அவள் சட்டென்று அந்தப் பத்து ரூபாய் நோட்டை வாங்கிக்கொண்டாள். சுற்றுமுற்றும் பார்த்த வண்ணம் இடுப்பில் செருகிக்கொண்டாள். ஆண்டு ஒன்றுக்கு மூன்று நான்கு முறை அபூர்வமாகக் கேட்கும் சொற்றொடரை எதிர்நோக்கி நின்றாள். ஆனால் மிஸ்திரியின் நிறம் மேலும் கறுத்துவிட்டது, தர்பாரியின் பேச்சைக் கேட்டபொழுது!

''எனக்கு இவனிடம் எவ்வளவு அன்பு தெரியுமா, மிஸ்திரி? இவனை—பப்பலை—நான் உயிராக நேசிக்கிறேன். ஒரு நாளைக்கு இவனை என்னிடம் நீ தருவாயானால்...''

மிஸ்திரிக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''என் இதயத்தோடு அணைத்து அன்பு செலுத்தி மகிழ்வேன். ஒரு தாயைப் போல—உன்னைப் போல—அன்பு செலுத்தி ஆனந்தப்படுவேன். எனக்கு இவன் உயிர்; உயிருக்கும் மேலாக இவனை நான் மதிக்கிறேன்!'' என்று கூறிய வண்ணம் தர்பாரி கைநீட்டிப் பப்பலை வாங்கிக்கொண்டான்.

பப்பலுக்கு ஒரே ஆனந்தம்! துள்ளிக் குதித்தான்! தர்பாரியின் மடிக்குத் தாவியதும், ஓமப்பொடிக்காக வேண்டிக் கழுத்தை இங்கும் அங்கும் வளைக்கலானான், கழுத்தை வளைத்துத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு உல்லாச நடை பயிலும் மயிலைப்போல. அப்புறம் அவனுடைய உருண்டு திரண்டு செழிப்பாக வளர்ந்திருந்த கைகள் சைக்கிள் விடுவதுபோல் வளைய வளைய வந்தன. தர்பாரி கொஞ்சம் காராப்பூந்தி எடுத்துப் பப்பலின் வாயில் போட்டான். தின்பண்டம் கிடைத்ததும் தாயின் கைக்குத் தினமும் பாய்ந்துவிடும் பப்பல் இன்று ஏனோ தர்பாரியின் கைகளிலேயே அமர்ந்து குறும்புகள் பல செய்தான். 'என்னைக் கீழே இறக்கிவிடு' என்பான் ஒருசமயம். 'என்னைப் பிடி, பிடித்து

மார்புறத் தழுவிக்கொள்' என்பான். இன்னொரு சமயம் இடையில் தன் தாயையும் பார்த்துக்கொள்வான். அப்புறம் தாயிடம் போவதற்குச் சிரித்துக்கொண்டே தாவுவான். அவள் கைநீட்டி ஏந்த வந்தால் முகத்தைத் தர்பாரியின் பக்கமாகத் திருப்பிக் கொண்டு விடுவான். முன்பு தர்பாரிக்குக் கோபமூட்டியதுபோல், இப்போது பெற்ற தாய்க்குக் கோபமூட்டி மகிழ்ந்தான்.

மிஸ்திரி திக்பிரமை பிடித்தவள்போல் நின்றாள். இருவரும் தந்தையும் மகனும்போல ஒட்டி உறவாடுவதைக் கண்டு திகைப்பும் தகாத நம்பிக்கையும் கொண்டு பிரமையில் உழன்றாள்.

''எங்கேயாவது உங்கள் உடையை நனைத்து விஞ்க்கி விடப் போகிறான்!''

''அதனால் என்ன?'' தர்பாரி தொடர்ந்தான்: ''குழந்தைகளின் ஒவ்வொரு செயலுமே அமுதமாக்கும்!''

மிஸ்திரியின் கண்கள் பனித்தன. முன்பு ஒருசமயம் வாழ்க்கையில் கிடைத்தற்கரிய பொருளாகச் சிறிது நேரத்துக்காவலும் புருசன் கிடைத்தது கண்டு மகிழ்ந்திருக்கிறாள். இப்போதோ தன் தனயனுக்கு ஒரு தகப்பன் கிடைத்துவிட்டான் என்று மகிழ்ச்சியில் ஆடிப் போனாள். முதற்பொருளைக் காட்டிலும் இரண்டாவது பொருள் மிகப் பெரியதல்லவா?

''நான் இவனுக்குத் தின்னத் தருவேன், பருகத் தருவேன், மிஸ்திரி! இம்மி துன்பம் தரமாட்டேன். நீ இரவு பத்துமணி அளவுக்கு இவனை வந்து வாங்கிச் செல்!'' என்றான் தர்பாரி.

''சரி!'' மிஸ்திரி தலை அசைத்தாள்.

மிஸ்திரி புறப்பட்டவள், மீண்டும் நின்றாள். தர்பாரியின் கையோடு விளையாடிக்கொண் டிருந்த குழந்தையைப் பார்த்தாள். அப்போது அவன் தர்பாரியின் மூடிய கையைத் திறக்கும் முயற்சியில் முனைந்திருந்தான். திறக்க முடியாமற் போகவே, எரிந்து விழுந்தான். மிஸ்திரி குரல் கொடுத்தாள். அவள் குரல் கேட்டு அவன் திரும்பிப் பார்த்தான். ஆனால் அவளிடம் வரும் முனைப்புக் காட்டவில்லை. இன்று அவனுக்கு எதுவுமே இலட்சியம் இல்லை. தந்தையும் இலட்சியம் இல்லை; தாயும் இலட்சியம் இல்லை!

மிஸ்திரி மீண்டும் நடந்தாள். ஆனால் மனம் அசையாமல் அங்கேயே தங்கிவிட்டது. நின்று மீண்டும் பார்க்க முயன்றாள். பப்பல் அழாமல் இருப்பான் என்று தோன்றவே, அவள் அங்கிருந்து விரைந்து வெளியேறி விட்டாள். சிறிது தூரம் சென்ற

தும் இடுப்பிலிருந்து பத்து ரூபாய் நோட்டை எடுத்தாள். அதை அவன் ஆவலோடு பார்த்த பார்வை, ஒரு மனைவி கணவனைப் பார்ப்பது போன்றிருந்தது.

தர்பாரி பப்பலைத் தூக்கிக்கொண்டு உள்ளே வந்தான். பப்பலுக்கு அறையில் உள்ள எல்லாப் பொருளின்மீதும் ஆர்வம் பொங்கியது. ஒவ்வொரு பொருளுமே அவனுக்குப் புதிதாக இருந்தது. ஒவ்வொரு பொருளையும் வாயில் போட்டுக்கொண்டு அவன் புது அநுபவம் பெற விழைந்தான். அவன் பெற விரும்பிய அநுபவத்துக்கு ஓர் எல்லை இல்லை; காண விழைந்த சுவைக்கும் அதே நிலை! அப்போது அவன் தாயார் உள்ளே வந்தாள். தர்பாரியின் கையில் குழந்தை ஒன்றைக் கண்டு வியந்தாள். மூக்கில் விரலை வைத்து, ''ஐயோ ராமா! இது என்ன?'' என்றாள்.

''பப்பல், அம்மா! மிஸ்திரியின் மகன்! எனக்கு இவனை ரொம்பப் பிடிக்கிறது!'' என்றான் தர்பாரி.

''இவன் அம்மா எங்கே?''

''போய்விட்டாள்! நான் சிறிதுநேரம் விளையாட இவனை இரவல் வாங்கிக்கொண் டிருக்கிறேன்... ஒரு முறை பெற்றுப் போட்டுவிட்டால், அப்புறம் அம்மாவுக்கு ஏது வேலை?'' தர்பாரி அம்மாவைப் பார்த்தவாறே பேசினான்.

''போடா, போ!'' அம்மா கூறினாள்: ''ஆறு ஏழு மாதந்தான் அம்மா தேவை. அப்புறம் தானாகவே உன்னைப் போன்ற காளைகள் ஆகிவிடுகிறார்கள்!''

''அது போகட்டும் அம்மா! நான் இவனைப் போத்தார் கல்லூரிக்கு எதிரேயுள்ள மைதானத்துக்கு எடுத்துச் செல்லப் போகிறேன். அங்கே பக்கத்தில்தான் ஜக்மோகன் புத்தகங்களைத் திருப்பிக் கொடுத்தாகவேண்டும். நீ இவனைக் கொஞ்சம் பிடியேன்!'' என்றான் தர்பாரி.

தாயார் முகத்தைச் சிணுங்கி, ''ஹா! இந்த அழுக்கையா? நான் கையால் தொடமாட்டேன்!'' என்று கூறிக் கையசைத்தாள்.

அண்ணி இந்தப் பேச்சின் தொடக்கத்திலேயே அங்கே வந்துவிட்டாள். ''இவ்வளவு ஆசை என்றால், ஒரு கல்யாணத்தைச் செய்துகொண்டு பெற்றுக் கொள்ளுகிறதுதானே?'' என்றாள்.

''ஊஹூம். எனக்குப் பிறருடையவைதான் பிடிக்கும்!'' அண்ணியைப் புண்படுத்துவதற்காகத் தர்பாரி குத்தலாகப் பேசினான்.

அண்ணி பெருமூச்சு விட்டாள்! ''ஆண்டவன் கொடுக்க வில்லையென்றால் அதற்கு யார் என்ன செய்வார்களாம்?''

தர்பாரி பப்பலைக் கீழே விட்டான். அவன் விட்ட இடத்துக்கு அருகில் ஜெர்மன் சில்வர்க் கரண்டி ஒன்று இருந்தது. அதன் மீது பப்பலின் கவனம் பாய்ந்தது. தர்பாரி உள்ளே போய் விட்டான். பப்பல் அந்தக் கரண்டியை வாயில் போட்டுக் கொண்டு சுவைத்தான். ஒருவேளை அவனுக்கு இன்னும் பல் முளைக்க இருந்ததோ, என்னவோ?

திடீரென்று பப்பலுக்குத் தான் தனிமையில் விடப்பெற்றது உறுத்தியது. அவன் தன் கைகளை முதலில் தர்பாரின் தாயிடமும், அப்புறம் அண்ணியிடமும் நீட்டினான். அம்மா 'சீசீ' என்ற வாறே உள்ளே போய்விட்டாள். அண்ணி ஒரு நிமிஷம் தயங்கி நின்றாள். பொங்கி நின்ற உள்ளுணர்வு உசுப்பிவிடவே, அவள் சட்டென்று தாவிப் பப்பலைத் தூக்கிக்கொண்டாள். அவனை மார்புறத் தழுவிக்கொண்டு ஆடவே தொடங்கினாள். தானே இன்பமும் அமைதியும் தரும் ஊஞ்சலில் படுத்திருக்கிறாற் போன்ற மகிழ்ச்சியில் மிதந்தாள் அவள். பப்பல் அவளுக்கு அழுக்காகவோ, அசிங்கமாகவோ தோன்றவில்லை. மனத்துக் குள்ளேயே அவள் பப்பலைக் குளிப்பாட்டிச் சீராட்டி ஒரு பிச்சைக்காரியின் மகனிலிருந்து இராணியின் மகனாக்கி ஆனந்தமுற்றாள். நூற்றுக்கணக்கில் பட்டும் பீதாம்பரமுமாகக் கற்பனை 'ஃபிராக்கு'கள் தைத்துப் போட்டு அழகு பார்த்தாள். இத்தனை அழகுக் குழந்தைக்குப் பெண்கள் உடை உடுத்தினால் தான் எடுப்பாயிருக்கும் என்று எண்ணமிட்டாள்.

உள்ளே போன தர்பாரி ஒரு சூட்கேஸை எடுத்தான். அதில் சில உடைகளை வைத்தான். அவற்றின்மீது சில புத்தகங்களை அடுக்கினான். பிறகு பட்டென்று சூட்கேஸை மூடினான். எடுத்துக் கொண்டு ஹாலுக்கு விரைந்தான்.

ஹாலில் வந்து பார்த்தால், பப்பல் எப்போதும்போல அண்ணி யின் மார்பில் தலையைப் புதைத்துக்கொண் டிருந்தான். தர்பாரி வந்ததும் அங்கிருந்து தலையை நிமிர்த்தி ஒரு வெற்றி வீரன் பாணியில் பார்த்தான். அடுத்த கணம் என்ன நினைத்துக் கொண்டானோ, அண்ணியிடமிருந்து கனகணக்காகக் கைநீட்டித் தர்பாரியிடம் வரப் பாய்ந்தான். தர்பாரி ஒரு கையில் பப்பலைத் தூக்கிக்கொண்டான். இன்னொரு கையில் சூட்கேஸை எடுத்துக்

கொண்டான். ''வருகிறேன், அண்ணி!'' என்று கூறி விடை பெற்ருன்.

தாதருக்குப் போய், ஒரு ரெடிமேட் கடையில் பப்பலுக் கென்று ஒரு சட்டையும் நிக்கரும் தர்பாரி வாங்கிக்கொண் டான். பப்பல் எப்படியோ சட்டையைப் போட்டுக்கொண்டு விட்டான். ஆனல் நிக்கர் போடும்பொழுது அழுது அடம் பிடித்துவிட்டான்; போட்ட கூச்சலில் ஊரையே கூட்டி விட்டான். நின்ற அத்தனை நேரமும் கால்களால் சைக்கிள் ஓட்டிவிட்டான். நிக்கர் போடவிடாமல் கீழே புரண்டு உருண் டான். தர்பாரி ஒரு கையால் பிடித்தால் இன்னொரு புறமாகக் கீழே சாய்ந்துவிடுவான். அவனை நேரில் நிறுத்திவைப்பது முடியாத காரியம் ஆயிற்று. 'நல்ல ஆள் ஐயா நீ! ஒரு குழந்தையைப் பிடிக்கத் தெரியவில்லையே!' என்று கேட்பது போலத் தலை தூக்கி வியப்போடு தர்பாரியை நோக்குவான்.

இப்படி நோக்கும்போது எதேச்சையாக அவன் கண்களில் ஒரு மின்சார பல்பு பட்டது. அதைத் தொடப் பாய்ந்தான். மின்சாரத்துக்குப் பயந்து தர்பாரி கையைத் தூக்கி மறைத்தான். அதற்குள் பப்பலின் கண்களில் மேஜை மின்சார விசிறி தட்டுப் பட்டுவிட்டது. அதன் வலைக் கம்பிக்குள் விரலை நுழைத்து விட்டான். கடைக்காரன் பாய்ந்து வந்து அவன் கையைத் தட்டிவிட்டான். இல்லாவிட்டால் ஐயாவின் விரல் பறந்திருக் கும். சட்டென்று கையைத் தட்டிய அதிர்ச்சியில் அவன் ஒப்பாரி வைக்கலானன். தர்பாரி அவன் அழுகையை நிறுத்த மடியில் தூக்கி வைத்துக்கொண்டான். குறை கூறும் முறையில் முதலில் தர்பாரியையும் பிறகு கடைக்காரனையும் மாறி மாறிப் பார்த் தான். அப்புறம் 'இவன் என்னை அடித்தான்!' என்பது போலக் கையைத் தூக்கிக் கடைக்காரனைக் குற்றவாளியாக்கிக் காட்டினன்.

டாக்ஸியில் உட்கார்ந்ததும் பப்பல் எரிச்சலுற்ருன். உண்மை யில் நிக்கர் போட்டிருந்தது அவனுக்கு என்னவோபோல் சிரம மாயிருந்தது. வாழ்க்கையில் இதுமாதிரி அவனை யாரும் கட்டிப் போட்டதில்லை. தர்பாரி அவனை ஆசனத்தில் உட்காரவைக்க அரும்பாடு பட்டான். ஆனல் அவனே வில்லாக வளைந்து விறைத்து நின்ருன். 'நீ வண்டியில் உட்காரு, நான் உன்மேல் உட்காருகிறேன்' என்று கூறுவதுபோல் இருந்தது. 'இல்லை, மக்கள் நடமாட்டம் உள்ள கடைத்தெருவுக்கு என்னை இட்டுச் செல்!'

என்று கூறுவதுபோல அடம் பிடித்தான். கடைசியில் மேலும் கீழும் எம்பிக் குதித்து எப்படியோ நிக்கரைக் கழற்றிவிட்டே மறு காரியம் பார்த்தான். அவன் குதித்த குதியில் தர்பாரிக்கு உடலைப் பிடித்து விட்டாற்போலாகியது! எந்தப் பெண்ணாலும் நிமிர்த்த முடியாத கூனைக் கணத்தில் நிமிர்த்திவிட்டாற்போல வலி எடுத்தது. நிக்கரைக் கழற்றியபின்தான் அவனுக்கு நிம்மதி ஏற்பட்டது. விசித்திரமான விடுதலை உணர்வில் அவன் திளைத்தான். ஓடும் காரின் ஜன்னல் அருகில் நின்று அவன் உலகத்தைப் பார்த்தான்; உலகத்துக்குத் தன்னைக் காட்டினான். அப்பொழுது அவனுக்கு ஏற்பட்ட பெருமித உணர்வு அபாரம்!

தர்பாரி, சீதையின் வீட்டை அடைந்தபோது அவள் வீட்டில் இல்லை. தர்பாரி தலையில் அடித்துக்கொண்டான். சீதை, பிரபாதேவியில் குமுதத்தைப் பார்க்கப் போயிருப்பதாக அவள் தாயார் சொன்னாள். பிரபாதேவிப் பகுதி அப்படியொன்றும் தொலைவில் இல்லை. ஆனால் குமுதத்தின் வீட்டை எப்படிக் கண்டு பிடிப்பது? விலாசம் கேட்டால், அவள் அம்மா, ''ஏன், என்ன வேலை அங்கே?'' என்று கேட்டுத் துளைத்தெடுப்பாள். அதனால் கேட்காமல் இருப்பது நல்லது என்று தோன்றியது அவனுக்கு.

அதற்கு மேலாக இன்னொரு கஷ்டம்! முதல் மாடியில் இருக்கிற ஸிந்திகள் நோட்டீஸ் கொடுத்துவிட்டதாக அம்மா சொல்லலானாள். நோட்டீஸ் கொடுத்துவிட்டால், அதற்கு அவன் என்ன செய்யமுடியும்? இப்போது அவன் இருந்த நிலைமை அவனுக்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டதே! சிறிதுநேரம் உட்கார்ந்து அன்னையின் கிழட்டுப் பேச்சைக் கேட்டுக்கொண் டிருந்தான். பப்பலைப்பற்றித் தன் மருமான் என்றும், ரொம்ப நல்லபிள்ளை யென்றும் சொன்னான். ஆனால் தாயாருக்கு அந்தப் பேச்சு சுவைக்கவில்லை. இருந்தாலும், ''ஏண்டா?'' என்று கேட்டு வைத்தாள். பப்பலும் ''ஊம்'' என்று பதில் சொல்லி வைத்தான். ஆனால் அதற்குமேல் அவள் பேச்சைத் தொடர வில்லை. பப்பலுக்கு அம்மாப் பேச்சு நினைவு இருந்தது. ஆனால் தாய்க்குப் பப்பலின் பேச்சு மறந்துவிட்டிருந்தது. அவள் மீண்டும் அழுகையைத் தொடர்ந்தாள்: ''ஒவ்வொரு வருஷமும் மராமத்துக்கு இத்தனை ரூபாய் செலவழிக்கவேண்டும் என்கிறது கமிட்டி. ஒருத்தர் வயிற்றுப்பாட்டைப் பார்க்கிறதா, மராமத்து வேலை செய்வதா? என்ன என்ன சட்டங்கள் எல்லாம் புதிதாய் வரு

கின்றன? காங்கிரஸ் ஆட்சிக்குப் போகும் காலம் வந்துவிட்டது! எட்டுக் கிரகம் சேரும்போது என்ன நடக்குமோ? நான் பிறந்த வீடு ஜகாதரிக்குப் போய்விடப் போகிறேன். ஆமாம், நீ எப்பொழுது கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாய்?''

கொஞ்ச நேரத்தில் தாயாருக்கும் அந்தப் பேச்சு அலுத்துப் போயிற்று. ''சீதை வருகிறாளோ, வரவில்லையோ! தெரியவில்லை. நீ டாக்ஸியில்தானே வந்திருக்கிறாய்? என்னைக் கொஞ்சம் மாஹிம்வரை கொண்டுவிடேன்'' என்றாள்.

''நான் மாஹிம் பக்கம் போகவில்லையே, அம்மா!''

''எங்கே போகிறாய்?''

''டவுன் பக்கம் போகிறேன்!''

''அதுவும் சரிதான்! எனக்குப் பரேல் பக்கத்திலும் கொஞ்சம் வேலை இருக்கிறது, ஊஞ்சல் வரப்போகிறது இல்லையா? அதற்குக் 'கொத்து' வாங்கவேண்டும். 'கொத்து' என்றால் என்ன தெரியுமா, உனக்கு?'' அம்மா ஆரம்பித்துவிட்டாள்.

தர்பாரி தலையில் அடித்துக்கொள்ளாத குறை. பப்பலும் துன்புறுத்தத் தொடங்கிவிட்டான், இருந்த இடத்தில் இராமல்! அதோடு டாக்ஸியில் மீட்டர் வேறு விஷம்போல் ஏறிக்கொண்டிருந்தது. அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. மனத்தால் புத்திக்கு இரண்டு போட்டுக்கொண்டு, ''புறப்படுங்கள், அம்மா! நான் உங்களைப் பரேலில் விட்டுப்போகிறேன். வழியில்தானே குமுதத்தின் வீடும் இருக்கிறது!'' என்றான்.

''ஆமாம்!'' தாயார் எழுந்தவண்ணம் கூறினாள்: ''இந்தப் பம்பாய்க் கடைத்தெருவின் தலையிலே தீயை வைக்க! நூறு தடவை போயிருக்கிறேன் அங்கே! நூறு தடவையும் வீட்டை மறந்துவிட்டேன்!''

''நூற்று ஓராவது தடவையும் மறந்துவிடலாம், வாருங்கள்!''

''ஆமாம், நீ சீதையை எங்கே அழைத்துக்கொண்டு போகப் போகிறாய்?''

''அக்கா வீட்டுக்கு! சொல்லியிருக்கிறேனே!''

''அவள் முஸல்மான் என்று கேள்விப்பட்டேனே!''

''என்ன சொல்கிறீர்கள், அம்மா!'' தர்பாரி சட்டென்று விழுகிற மலையைத் தாங்கிப் பிடிப்பவன் போலக் கூறினான். ஸத்வந்தி நார் என்பது முஸல்மான் பெண் பேராகவா இருக்கும்?

அம்மா, தர்பாரியை ஆட்டிப் படைக்க முற்படுவதற்கு முன்பாகவே, சீதை வந்துவிட்டாள். இளவேனிற் பருவத்தின் இனிய அலைகளெனச் சேலைத்தலைப்பு முழுதும் இலையும் பூவுமாக ஏந்தி வந்தாள். அவள் எலுமிச்சை நிறத்தில் நன்கு பெட்டி போட்ட ரவிக்கை உடல் பிடிக்க அணிந்திருந்தாள். சிறுமணி அரிசியை நிகர்த்த வண்ணத்தில் தைத்தறிப் புடைவை கட்டியிருந்தாள். அது உடலின் வளைவு சுளிவுகளையும், மேடு பள்ளங்களையும் புயல் வேகத்தில் அலை அலையாக அழகு மிளிர எடுத்துக் காட்டியது. அவளே இளவேனிற் பருவக் காற்று. மணம் கூட்டும் மலர்ச் சோலை. ஆனால் தர்பாரிக்கோ இலையுதிர் காலத்தின் தூதாகத் தோன்றியது. அவன் உள்ளத்து மலரும் இலையும் ஒவ்வொன்றாக வாடுவதுபோலும், வாடி விழுந்து புயலோடு பறப்பதுபோலும் தோன்றியது. கிளையில் தங்கிவிட்டவை மட்டும் காய்ந்து சருகாகி ஒன்றோடு ஒன்று உராய்ந்து உள்ளத்தைத் துடிக்கவும் வைத்தன.

சீதை வந்ததும் முதலில் பப்பலைப் பார்த்தாள். வியப்பால் விரிந்த விழிகளோடு, ''யாருடைய குழந்தை?'' என்று கேட்டாள். பிறகு பாய்ந்து குழந்தையின் அருகில் சென்றாள். ''என்ன அழகு! என்ன அழகு பப்லுபோல!'' என்றாள்.

தர்பாரி கேட்டான்: ''பப்பல்தான் இவன் பெயர். உனக்கு எப்படித் தெரிந்தது?''

''எனக்கு என்ன தெரியும்?'' சீதை கைதட்டிக் குழந்தையைத் தன்னிடம் அழைத்தவாறு கூறினாள்: ''ஒவ்வொரு குழந்தையின் உருவத்தைக் கொண்டே பெயரும் தெரிந்துவிடுமாக்கும். இது உங்களுக்குத் தெரியாதா?'' என்றாள்.

பப்பல் முதலில் சந்தேகத்தோடு சீதையைப் பார்த்தான். பிறகு புன்முறுவல் பூத்தான், பல ஆண்டுகளாகத் தெரிந்தவன் போல! அப்புறம் தராசு நிலைக்கு இரண்டு கைகளையும் தூக்கிக்கொண்டு சீதையிடம் தாவினான். சீதை அவனைத் தூக்கிக்கொண்டாள்; மார்புறத் தழுவிக்கொண்டாள். எல்லாப் பெண்களையும்போலச் சற்று ஆடினாள். உறவு உறுதியானதும் பப்பல் சிறிய அலமாரியில் இருந்த ஒரு கூடையைச் சுட்டிக் காட்டி, ''ஊ ஊ'' என்றான். 'அதில் எனக்கு ஏதாவது இருக்கிறதா?' என்று கேட்பது போலிருந்தது அவனது அந்த ஊமை ஜாடை.

தர்பாரியின் கண்களில் கனவுகள் கோத்து நின்றன. சீதை பார்த்தபோது அவளது பார்வையில் படுக்கையும் குழந்தை

களும் காணப்பட்டன. ஒருவேளை பப்பல் சீதையின் கண்கள் வழியே பிரதிபலித்துக்கொண் டிருந்தான் போலும்! தர்பாரி குரலில் சிறிது அவசரத்தைக் காட்டி, ''மணிக்கணக்காக உன்னை எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறேன். அக்கா கூப்பிட்டிருக் கிருள்!'' என்ருன். சீதை அம்மாவைப் பார்த்து, ''அம்மா . . .?'' என்ருள்.

''போய்வா, அம்மா!'' என்று அம்மா அநுமதி அளித்தாள்.

''சற்றுப் பொறுங்கள்! நான் இவனுக்குக் கொஞ்சம் பிஸ்கட். . .''

''எல்லாம் வாங்கிக்கொள்ளலாம் வா! காத்திருக்க எனக்கு நேரம் இல்லை!'' என்ருன் தர்பாரி. சீதை, பப்பலின் கன்னத்தை நிமிண்டிக்கொண்டே புறப்பட்டாள்.

''என் சமர்த்து பப்லு! என் குஞ்சு பப்லு! குண்டு பப்லு!''

சீதை மனத்தில் எவ்விதக் குழப்பமும் கஷ்டமும் இல்லாமல் புறப்பட்டு விட்டாள். வெளியே டாக்ஸியைப் பார்த்ததும், ''இதில் போவோமா?'' என்ருள்.

தர்பாரி தலை அசைத்தான். காத்துக் காத்து நிலைகொள்ளாமல் தவித்துக்கொண் டிருந்த டாக்ஸி டிரைவர் மனம் குளிர்ந்தான். பின்ஞல் பாய்ந்து அவன் டாக்ஸியின் கதவைத் திறந்து விட்டான். பப்பல், சீதை, தர்பாரி மூவரும் அமர்ந்தனர். எதேச்சையாகச் சீதையின் பார்வை சூட்கேஸின் மீது பதிந்தது. ஒரு சந்தேக நிழல் அவள் முகத்தில் ஓடியது: ''இந்தச் சூட்கேஸ்?''

''உம்.'' தர்பாரி 'உம்' கொட்டுவதோடு நிறுத்திக் கொண்டான்.

''அக்காள் வீட்டுக்குத்தானே போய்க்கொண்டிருக்கிறீர்கள்?''

''எங்கேயோ போகிறேன், உனக்கு என்ன?'' கோபம் கொப்பு ளிக்கும் பார்வையைச் சீதையின்மீது வீசி, ''நீ சொல்ல வில்லையா, எங்கே அழைத்துப் போனுலும் வருகிறேன் என்று?'' என்று கேட்டான்.

சீதைக்குச் சிறிது விளங்கிற்று. தர்பாரியின் முகத்தில் தோன்றும் உணர்வு, சூட்கேஸ், குழந்தை . . . அவள் பயந்து போய்ப் பப்பலைச் சீட்டில் பட்டென்று உட்கார வைத்தாள். மூக்கு விரிய, ''ஆமாம், சொன்னேன்!'' என்ருள். அதைத் தொடர்ந்து கூரிய பார்வை ஒன்றைத் தர்பாரியின்மீது வீசினுள். அப்புறம் பார்வையைத் தாழ்த்திக்கொண்டாள். அவளுக்குத்

தன்மேல் கலம் அழுக்குச் சேர்ந்து விட்டாற்போலத் தோன்றியது. புடைவைத் தலைப்பால் அவள் சிவந்துவிட்ட தன் முகத்தைத் துடைத்துக்கொண்டாள். தர்பாரி மோக மயக்கத்தில் மூழ்கிய பார்வையைச் சீதையின்மீது பாய்ச்சி, ''சீதா! அன்று போலவே நீ இன்றும் ஆரம்பித்துவிட்டாயே!'' என்று குமுறினான்.

சீதை பயந்துவிட்டாள். ''இல்லையே!'' என்றாள்.

டாக்ஸி ஹாஜி அலிக்கு அருகாகப் போய்க்கொண்டிருந்தது. கடல் பருவக்காற்றை எதிர்நோக்கிக் குமிறிக்கொண்டிருந்தது. எங்கும் ஒரே அழுக்கு, ஈரநைப்பு! தொலைவில் எங்கோ மழை பெய்யத் தொடங்கிவிட்டதுபோலும்! எண்ணற்ற ஓடைகளும் ஆறுகளும் கடலில் விழுந்து கலந்துகொண்டிருந்தன.

மீண்டும் அதே பயணம்—தார்தேவ், அப்பேரா ஹவுஸ், மகாத்மா காந்தி ரோடு, ஃப்ளோரா ஃபௌண்டன், அப்புறம் ஒரு ஹோட்டல். இன்றைய ஹோட்டல் அன்று போனது அல்ல.

எதிர்த்தாற்போல் ஒரு பைரா நின்றுகொண்டிருந்தான். தர்பாரி, சீதை, பப்பல்—மூவரையும் பார்த்ததும் பாய்ந்து வந்தான். மிகுந்த மரியாதையுடன் அவன் டாக்ஸிக் கதவைத் திறந்தான், தர்பாரி இறங்கினான். டாக்ஸிக்காரனுக்குப் பணம் கொடுத்தான். பிறகு பைராவுக்கு சூட்கேஸை இறக்குமாறு சாடை செய்தான். சீதை இறங்கினாள். அவள் கண்கள் தாழ்ந்திருந்தன. பப்பலைத் தன் இடுப்பில் தூக்கி வைத்துக்கொள்ள அவளுக்குச் சங்கோசமாயிருந்தது.

''தூக்கிக் கொள்!'' தர்பாரி பப்பலைச் சுட்டிக் காட்டிச் சொன்னான்: ''குழந்தையைத் தூக்குவது எப்போதும் பெண்கள்தான்!''

சீதை பரிதாபமாகப் பப்பலைப் பார்த்தாள். அவளுக்கு பப்பலைத் தூக்கிக்கொள்ளச் சட்டென்று மனம் வரவில்லை. ஆனால் தர்பாரிக்கும் அவன் கோபத்துக்கும் மிக மிகப் பயந்தாள். ஆணையும் ஆணின் கொடுமையையும் எண்ணிக் கலங்கினாள். அவள் வேறு வழியின்றிப் பப்பலைத் தூக்கிக்கொண்டாள். ஆனால் அவளால் அவன்மீது அன்போ பாசமோ செலுத்த முடியவில்லை. அவளுக்குச் சரிக்காத புளியேப்பம் வருகிறாற்போல் இருந்தது.

ஹோட்டல் மேலே இருந்தது. தர்பாரி அறை இருக்கிறதா என்றுகூடக் கேட்கவில்லை. இனி அதற்கு அவசியமும் இருப்பதாகத் தோன்றவில்லை. அவன் தன் பார்வையில் தொழில்

முறை தெரிந்தவனின் வெட்கம்கெட்டதனத்தைத் தேக்கி நின்றான். அதுகூட அந்த நேரத்துக்கு, அந்தச் சூழ்நிலைக்குத் தேவையில்லைதான்.

படிகளில் யாரோ டிரம் டிரம்மாக எண்ணெயும் நெய்யும் கொட்டியிருந்தாற்போலப் பிசுக்கு ஏறியிருப்பதைக் கண்டாள் சீதை. மேலே போவதற்காகக் கட்டியிருந்த கயிறு பலபேர் கைபட்டு ஒரே அழுக்காகியிருந்தது. கைவைக்கப் பிடிக்காமல் வாடிய மலர் வாசனை அவ்வட்டாரத்தையே நிறைத்தது.

கயிறில் கைவைக்காமலே சீதை தர்பாரிக்குப் பின்னால் மேலே சென்றாள்.

மானேஜர் மூவரையும் பார்வையைத் தூக்கிப் பார்த்தான். அவன் முகத்திலே விசித்திரமானதொரு புனிதம் பளிச்சிட்டது. அவன் சட்டென்று கௌண்டருக்குப் பின்னாலிருந்து எழுந்து வந்தான். இரு கைகளையும் அறைப் பக்கம் விரித்துக் காட்டி, ''வாங்க, சார்!'' என்றான். இன்று எல்லா அறைகளின் கதவுகளும் சீதைக்கும் தர்பாரிக்கும் திறந்திருந்தன.

''நாங்கள் பில்லிமோராவிலிருந்து வருகிறோம். இப்பொழுது 'டிரான்ஸிட்'டில் இருக்கிறோம், பயணம் புறப்பட்டிருக்கிறோம். இரவு பதினொரு மணிக்குப் புறப்படும் பஞ்சாப் மெயிலில் ஆக்ரா போகப் போகிறோம், தாஜ்மகல் பார்க்க. ஷாஜஹான் தன் காதலிக்காகக் கட்டியதாமே! உண்மையில் அவனுக்கு மும்தாஜிடம் அவ்வளவு அன்பு இல்லை. அன்பைக் காட்டிலும் குற்ற உணர்வுதான் அதிகமாயிருந்தது. ஏனென்றால், அவன் அவள்மூலம் பதினான்றோ பதினெட்டோ குழந்தைகளைப் பெற்றிருந்தான். தன் இந்தக் கொடுமைக்கு நிவாரணம் தேடியே . . .'' என்று தொடங்கினான் தர்பாரி. ஆனால் இந்தப் பேச்சு தேவைப் படாத பேச்சு. மானேஜர் எல்லாவற்றுக்கும் ''ஸார், ஸாரே'' போட்டு வந்தான். தேவைப்பட்டால் முகத்தில் சிரிப்பை வரவழைப்பான், தேவைக்கு அதிகமாகவே சிரிப்பான். தலையாட்டுவான், தலை குனிந்து குனிந்து வணக்கமும் செலுத்தினான்.

ரிஜிஸ்தரில் கையெழுத்திட்ட பின் தர்பாரி அறைக்கு வந்தான். பப்பலின் கையில் பிஸ்கட் இருப்பதைக் கண்டான்.

''இது யார் கொடுத்தது?''

''பைரா!'' என்றாள் சீதை.

''இந்த ஐஸ்கிரீம் குச்சி . . .?''

''பக்கத்து அறைக்காரர் கொடுத்துச் சென்றார்!''

பைரா குழந்தைக்காகக் கிண்ணத்தில் பால் கொண்டு வந்தான். பல நூற்றுண்டுகளாக வேலையே இல்லாமல் இருந்தது போலும், இன்று திடீரென்று ஏதோ வேலை கிடைத்துவிட்டது போலும், இனி அது தீராத வேலையாகத் தொடரும், ஓய்வே கிடைக்காதுபோலும், அவன் மகிழ்வதாகத் தோன்றியது. அவனுக்கு டிப்ஸ் வரும்படியோ, அழைப்போ பொருள் அற்றதாகப் பட்டுவிட்டது! முகத்தில் மகிழ்ச்சியும் கையில் பால் கிண்ணமுமாக அவன் நின்ற நிலை, நன்றியை எதிர் பார்த்து நிற்பதாகத் தோன்றவில்லை; நன்றிக் கடன்பட்டு நிற்பதாகத் தோன்றியது. கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்க அவன் அங்கேயே முளையடித்தாற்போல நிற்கத் திட்ட மிட்டு விட்டான்.

''நல்லது, பைரா!'' தர்பாரி சிறிதும் இரக்கமின்றி நன்றியே உருவான அந்தப் பைராவை விரட்டியடித்தான். ''நாங்கள் ரொம்பக் களைத்துப் போயிருக்கிறோம். எப்பவோ பயணம் புறப் பட்டது! கொஞ்சம் இளைப்பாறுகிறோம்'' என்றான்.

''சார்!'' பைரா தொடர்ந்தான்: ''ஏதாவது தேவைப்பட் டால் . . .''

தர்பாரி பட்டென்று கதவைச் சாத்தி உள்பக்கமாகத் தாழ்ப் பாளும் போட்டுக்கொண்டான். அவன் நிசமாகவே மிகவும் களைத்துப் போயிருந்தான். அவன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுப் படுக்கையில் போய் விழுந்தான். சீதை, பப்பலுக்குப் பால் புகட் டிக்கொண்டிருந்தாள். அது அவளுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. ஆனால் பிடிக்கவில்லை என்று எப்படிக் கூறுவது? சொன்னால் தப்பாகப் படுமே, ரொம்பத் தப்பாகி விடுமே!

பாலைக் கண்டுவிட்ட பரபரப்பில் பப்பல் பால் கிண்ணத்தைத் தட்டிவிட்டான். பால் கீழே கொட்டிவிட்டது.

''சுத்த மக்குப் பயல்! என்ன பரபரப்பு!''என்று கடிந்த சீதை கைக்குட்டையினால் முகத்தைத் துடைத்துவிட்டாள். அப்புறம் சுருணையைக் கொண்டு தரையைத் துடைத்தாள். அப்புறம் அவள் பப்பலைத் தொட்டதுதான் சாக்கு, சட்டென்று அவள் கையைப் பற்றிக்கொண்டு அவன் எழுந்துவிட்டான்.

சீதை உள்ளூற நடுங்கிக்கொண்டிருந்தாள். தர்பாரியும் வெட்கியதாகத் தோன்றியது.

''இந்த ஹோட்டல் அவ்வளவு ஒன்றும் நன்றாயில்லை!'' ஏதோ பேசவேண்டுமே என்பதற்காக அவன் சொல்லி வைத்தான்.

''நன்றாகத்தானே இருக்கிறது!'' என்று சீதையும் அலட்சிய மாகப் பதில் சொல்லி வைத்தாள்.

பிறகு தர்பாரி மூக்கைச் சிணுங்கிக்கொண்டு இப்படியும் அப்படியும் மோப்பம் பிடித்தான். ''ஏதோ நாற்றம் அடிக்க வில்லை?'' என்று கேட்டான். அதைத் தொடர்ந்து தன் நெற்றியிலிருந்து வேர்வைத் துளிகளை வழித்தெறிந்தான். ''இனி மேல் அவனை விடேன்!'' என்றான்.

சீதை பப்பலை உட்காரவைக்க முயன்றாள். ஆனால் அவன் விறைத்து நின்றான், உட்கார விரும்பாமல்.

தர்பாரி ஓர் 'ஆஷ் டிரே'யைப் பப்பலின் அருகில் கொண்டு வந்து வைத்தான். பப்பல் அதை ஏதோ விளையாட்டுப் பொருள் என்று எண்ணிப் பாய்ந்து எடுத்தான். அப்படியே உட்கார்ந்து விளையாடலானான். அவன் வேறு என்ன செய்வான்?

அதன் பின் தர்பாரி முன்னேறி அநுபவம் இல்லாதவனைப் போல அசிங்கமான முறையில் சீதையின் கையைப் பற்றித் தன் அசட்டுத்தனத்தைக் காட்டிக்கொண்டான்.

''கடவுளுக்காக வேண்டி . . .'' என்று கூறிய சீதை, பப்பலைச் சுட்டிக் காட்டினாள்.

ஆனால் தர்பாரியின் கண்களில் ஏதோ வெறி திரையாக மறைத்தது. அதனால் அவனுக்கு இதெல்லாம் கண்களில் பட வில்லை. தானும், தன்னோடு புத்தம் புதிய பசுமை மாறாத ஒரு பெண்ணும் இருப்பதாக மட்டுமே அவனுக்குத் தோன்றியது. அவன் வேகம் வேகமாக மூச்சு விடலானான். அவன் சீதையைச் சுற்றித் தன் கரங்களை வளைத்தான். அவை தோலும் சதையுமாகத் தோன்றவில்லை; மரக்கட்டைபோல் தோன்றியது. சீதையின் மென்மையான சதைப் பற்றுள்ள உடலில் போய்க் குத்துவ தாகப் பட்டன. சீதை எத்தகைய எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. தர்பாரியின் கரங்களில் நடுங்கிய அவளுக்குக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது; மூச்சை முட்டிக்கொண்டு வந்தது; அழுகை அழுகையாக வந்தது. இன்று அவளுமே தன் சுய உணர்வு மறந்து நின்றாள்.

பப்பல் பயந்து போய் இருவரையும் பார்த்தான்.

சீதை இன்னும் அழுதுகொண் டிருப்பதைக் கண்ட தர்பாரி, ''நீ என்னைக் காதலிக்கவில்லை என்பதுதானே இதற்குப் பொருள்?'' என்றான்.

''நான் உங்களைக் காதலிக்கவில்லையா? நான் உங்களை . . .''

பப்பல் 'ஆஷ் டிரே'யில் உள்ள சாம்பலை முகத்தில் பூசிக் கொண்டு, அந்தக் கரிப்பில் அழலானுன்.

''நிறுத்தடா!'' தர்பாரி வெறுப்பும் சினமும் கொப்புளிக்கக் கடிந்தான்.

சீதை நடுங்கிப் போனுள். அவள் வெளியே ஓடிவிட நினைத் தாள். ஆனுல் அவளுக்குக் கைகால்கள் எல்லாம் ஓய்ந்து போய்விட்டன.

தர்பாரியின் அதட்டலில் பயந்து பப்பல் அழுகைக் குரலை மேலும் உயர்த்திவிட்டான். தர்பாரி ஆத்திரம் தலைக்கேறப் பாய்ந்தான், கழுத்தைப் பிடித்து நெறித்து விடுவோன்போல்! ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே தோன்றும் இந்த அசிங்கக் குரலை ஒழித்துக் கட்ட முனைவதுபோல்! பப்பலின் அருகில் சென்றதும் ஓங்கி ஓர் அறை வைத்தான். பப்பல் துடிதுடித்துத் தொலைவில் போய் விழுந்தான்.

''வெட்கம் இல்லை . . .?'' எங்கிருந்தோ மிஸ்திரியின் குரல் வந்தது.

தர்பாரி திரும்பிப் பார்த்தான். மிஸ்திரி இல்லை, சீதை நின்று கொண்டிருந்தாள். அறியாத சக்தி ஒன்று வந்து விடவே, அவள் ஆடை குலையப் பப்பலின் அருகில் ஓடினுள். அப்படியே அவனைத் தூக்கி மார்புறத் தழுவிக்கொண்டாள். பப்பல் சீதையின் மார்பில் தலைபுதைத்து அழுதுகொண் டிருந்தான்; விசித்து விசித்து அழுதான். பிறகு அவன் தன் முகத்தைத் தூக்கிக் கேவியவாறே தர்பாரியைச் சுட்டிக் காட்டினுன். 'இவன் என்னை அடித்துவிட்டான்!' என்று முறையிடுவது போலிருந்தது அவனது அந்தச் செய்கை!

இத்தனை துல்லியமான உடையிலும், தன்னிடம் கலம் அழுக்குச் சேர்ந்திருக்கிறுற்போன்ற உணர்வு தர்பாரியைப் பற்றிக்கொண்டது. சீதையிடம் கூட அவனுக்கு அவ்வளவு வெட்கம் தோன்றவில்லை. பப்பலிடம் தான் தலைதூக்க முடியாது போலிருந்தது. ஆனுல் தான் நேர்மையானவன் என்று எண்ணிக்கொள்ள அவனிடம் இன்னும் எத்தனை எத்தனையோ தர்க்கங்கள் குவிந்தன.

தர்பாரி தன் தலையைச் சகதியிலிருந்து விடுவித்துக்கொண் டவன் போலத் தூக்கி உதறிக்கொண்டான். பிறகு பப்பலைப் பார்த்தான். அவனுல் சீதையைப் பார்க்கமுடியவில்லை.

ஏனெனில் அவள் ஆடை குலைந்திருந்தது. அந்த ஆடைக் குலைப்பை மறைக்க அவள் பப்பலை ஆடையாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தாள். அதோடு தர்பாரியைச் சுட்டெரித்து விடு பவள் போல வேறு பார்த்துக்கொண்டிருந்தாள். உலகத்தில் அவனைப் போன்ற கயவன் யாருமே கிடையாது. கயமையின் எல்லையையே கடந்துவிட்டான் என்பதுபோலப் பார்ப்பதாகவும் தோன்றியது. ஆனால் அவள் பார்வை வெறிச்சோடியிருந்தது. அவளால் எதையுமே சரிவரப் புரிந்துகொள்ள முடியவில்லை.

வெட்கம், வருத்தம், தாபம் எல்லாம் ஒருங்கே குமைய தர்பாரி தன் கையைப் பப்பல் பக்கம் நீட்டினன். தன் கைக்குள் அடங்கிய விஷயமாயிருந்தால், சீதை பப்பலை ஒரு நாளும் புனித மிழந்த அந்த அழுக்குக் கரங்களில் கொடுக்கவே மாட்டாள். ஆனல் அவள் என்ன செய்வாள், பாவம்! பப்பலே பறந்து விழுந்துகொண்டு தர்பாரியின் கைகளுக்குப் பாய்ந்து விட் டான். அழுத வண்ணமே முன்னுக்குப் பின் முரணகச் சீதை யைச் சுட்டிக் காட்டினன். இவள் என்னை அடித்துவிட்டாள் என்று கூறுவதுபோலிருந்தது. பலன், இப்போது தர்பாரிக்கும் ஒரு சாக்குக் கிடைக்கவில்லை; சீதைக்கும் கிடைக்கவில்லை.

''சீதா!'' தர்பாரி கூப்பிட்டான்.

சீதை எதுவும் பேசவில்லை. அவளால் அழவும் முடியவில்லை. அவள் சட்டென்று புடைவைத் தலைப்பை இழுத்துத் தன் உடலை நன்கு மூடிக்கொண்டாள்.

''சீதா!'' தர்பாரி தொடர்ந்தான்: ''நீ என்னை எப்போ தாகிலும் . . . எப்போதாகிலும் மன்னிப்பாயா?'' என்று கேட்டான். அப்புறம் அவள் மீது ஐயப் பார்வையை வீசி, ''நாம் முதலில் கல்யாணம் செய்துகொண்டு விடுவோம்!'' என்று முடித் தான்.

அப்புறம் அவன் தைரியமாகத் தனது இன்னெரு கையினல் சீதையை அணைத்துக்கொண்டான். சீதை, தர்பாரியின் விழி களைக் கூர்ந்து பார்த்தாள்; ஏதோ ஓர் உறுதியைக் கண்டாள். அப்புறம் அவளே பொறுமை யிழந்து தர்பாரியைக் கட்டிக் கொண்டாள். அவன் தோள்களில் தலையைப் புதைத்துக் குழந்தையைப்போல் அழலானுள். அவளுடைய கண்ணீரில் தர்பாரியின் கண்ணீரும் கலந்தன. அப்போதே இருவருடைய துன்பமும் ஒன்ருயின; இன்பமும் இணைந்தன.

அவர்கள் இருவரும் அழுவதைக் கண்ட பப்பல் தன் அழுகையை நிறுத்திக்கொண்டான். வியப்புடன் சீதையையும் தர்பாரியையும் மாறி மாறிப் பார்த்தான். பிறகு எதுவுமே நடக்காததுபோலக் கலகலவென்று சிரித்தான். அவன் பிஞ்சுக் கரங்கள் தின்பண்டம் வேண்டித் தர்பாரியின் மூடிய கைகளைத் திறப்பதில் முனைந்தன.

எல்லைக்கு அப்பால்

பஞ்சாப் மெயில் பிளாட்பாரத்திலிருந்து நத்தை வேகத்தில் புறப்பட்டது. வெகுநேரம் வரை மோகன் ஜாம் வைத்த கண் வாங்காமல் வண்டியையே பார்த்துக்கொண் டிருந்தான். கைத் தறிப் புடைவை கட்டிக் கண்ணுக்கு அழகாகக் காட்சியளித்த அவன் அன்பு மனைவி சுமித்திரா அத்தனை நேரமும் அவன் விழி களுக்கு விருந்தாகிக்கொண் டிருந்தாள். சுமித்திரா கம்பார்ட் மென்டின் கதவு அருகில் நின்றுகொண் டிருந்தாள். மோகன் ஒரு ஸ்டாலுக்குப் பக்கத்தில் நின்று கைக்குட்டையை ஆட்டி விடை அளித்தான்.

வண்டி புறப்படுவதற்குமுன் சுமித்திராவின் கண்கள் குள மாகிவிட்டன. சொற்கள் எப்போதும் போலப் பயனற்று விட்டன. ''வீட்டைக் கவனித்துக்கொள்ளுங்கள்!'', ''ஹோட் டலில் கண்டதைச் சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக்கொள்ளா தீர்கள்!'', ''வாரத்துக்கு இரண்டு கடிதம் கட்டாயம் எழுதுங்கள்!'' போன்ற போதனைச் சொற்கள் அனைத்தும் விழிகளின் பேச்சுக்கெதிரே ஊமை ஆயின. மோகன் ஜாம் போன்றவனின் மனத்தையே மென்மையாக்கிக் கசியவைத்தன. வீட்டுக்கு எஜமானி விடைபெறும் நேரத்தில் விழிவழிப் பேச்சா லேயே பல சம்மதங்கள் பெறும் சாமர்த்தியத்தைப் பெற்றிருக் கிறாள். அந்த நேரத்துக்கு ஒருவன் பொய் சொன்னாலுமே மகிழ்ந்து போகிறாள். ஆனால் சிலர் . . .மோகன் ஒன்றுமே கூற வில்லை. அவன் ஆரம்பத்தில் வேகமாகவும் பிறகு மெதுவாகவும் கைக்குட்டையை ஆட்டினான். இப்போதெல்லாம் இது ஒரு பழக்கமாகிவிட்டது. இருந்தாலும் நன்றாகத்தான் இருந்தது. 'மனம் எங்கே, எதற்காக, ஏன் துடிக்கிறது?' என்பது பார்வைக் குப் புலனாவதில்லை. ஆனால் கைக்குட்டை பார்வைக்கு மங்கி மறையும்வரையில் வண்டியில் போகிறவளுக்குத் தெரிகிறது!

இந்தப் பயணம் என்பது ஒரு பிதற்றல். எப்போதாவது எங்காவது போகவேண்டியிருந்தால் என் மனம் விழுந்து விடுகிறது. ஸ்டேஷனிலோ கூட்டம்! கேவலம் கூட்டம் காரண

மாகவே, மனிதன் தனியனாகிவிடுகிறான். முன்னே செல்வதற்காக வண்டி கொஞ்சம் பின் அடிக்கிறது. அப்புறம் ஓர் ஊதல் ஒலி . . . ஒரு குரல், ''அடேடே! வண்டி புறப்பட்டுவிட்டதே! என் பொருள்கள் தங்கிவிட்டனவே!'' என்று. கடைசியில் யாரும் யாருக்கும் வேண்டியவர்கள் அல்ல. இந்த உலகம் இருக்கிறதே . . . ! இந்த டிக்கெட்—கிக்கெட்டையெல்லாம் திருப்பித் தந்துவிட்டால் என்ன என்று ஒரு சமயம் மனம் எண்ணுகிறது. மனைவியிடம் நகராமுகவே இருந்தாலும் வீட்டில் போய் உட்கார்ந்துவிடுவோமே என்று நினைக்கிறது.

வாழ்க்கையில் வெற்றி என்பது இதுதான். வருத்தம் நிழலாடும் நேரத்திலும் மகிழ்ச்சி உணர்வுகள் உயிர் பெற்று ஊர்ந்து கொண்டே இருக்கவேண்டும். வண்டி புறப்பட்டதும் அவை பாய்ந்து எதிர்கொள்ளவேண்டும். அவற்றின் ஒளியில் வருத்த நிழல்கள் ஓடி ஒளியவேண்டும். முன்பு ஒருவரோடு இணைந்து நிகழ்ச்சிகள் அமைத்துக்கொண்டோம், இப்பொழுது அவர்கள் இல்லாமலே அமைத்துக்கொள்ளவேண்டும். அவ்வளவுதானே? இப்படி எதையும் எளிதாக எடுத்துக்கொள்ளவேண்டும் . . .

மோகன் ஒரு பெருமூச்சு விட்டான். 'விடு! இரண்டு மாதங்கள் விடுமுறை கிடைத்துவிட்டது!' பொருள் இல்லாமல் இருப்பதேகூட இருக்கிறதுபோலத்தான். சுமித்திரா திரும்பி வந்தால் நான் இல்லாத வாழ்க்கையின் பொருள் என்ன என்பதை ஒருமுறை நன்கு உணர்வாள். மீண்டும் கெட்டு வீணுவதற்கு அவள் உடல் நலம் பெற்றிருக்கும். அப்பொழுது அவள் என்னை எப்படி அணைத்துக்கொள்ளுவாள். எனக்குப் பதிலாக, 'நீ எங்கே போய்விட்டாய்?' என்று அவள் என்னைக் கேட்பாள்.

மோகன் விக்டோரியா டெர்மினஸ் பிளாட்பாரத்திலிருந்து வெளியே வரத் திரும்பினான். அப்போது வேறு ஒரு வண்டி பிளாட்பாரத்துக்குள் நுழைந்துகொண் டிருந்தது. மோகன் துணுக்குற்றான். சுமித்திரா அந்த வண்டியில் போய் இந்த வண்டியில் திரும்பிவிட்டது போலத் தோன்றியது அவனுக்கு. அப்பொழுது ஒரு பருத்த பெண்மணி கதவிடுக்கில் சிக்கி இறங்கத் தவிப்பதைக் கண்டான், கண்டு முறுவலித்தான். புறப்பட்டுவிட்டான். அவனுக்கு ரேடியோ கிளப் போகவேண்டியிருந்தது, சீட்டாட. 'ஃப்ளாஷ்' ஆடுவதில் வல்லவர்கள் பலருடன் அவனும் ஆடுவதுண்டு. இடையிடையே ராணிச் சீட்டில் உள்ள ராணிப்பொம்மை அவன் கண்களுக்கெதிரே உயிர் பெற்று வருவ

துண்டு. கடலில் தோன்றிக் கரையில் வீசும் புயலில், காட்டு இலந்தையின் கருஞ்சிவப்பு நிறம் கொண்ட அவளது புடவைத் தலைப்பு யாரையாவது சுருட்டி மடக்கி இழுத்துச் சென்றுவிடும். தலையைப் பிரிப்பதற்குள் புடவைக்குள் சுற்றியிருக்கும் உடல் ஒன்றுக்கு இரண்டாகத் தோன்றும்.

மோகன் போய்க்கொண்டிருந்தான். அவனையும் அறியாமலே அவனது இடக் கை விரலில், வீட்டுச் சாவியும் கார்ச் சாவியும் சுழன்றுகொண்டிருந்தன. வலக் கை பாண்ட் பைக்குள் பிளாட்பாரம் டிக்கெட்டைத் துழாவித் தேடிக்கொண்டிருந்தது. அப்போதுதான் அவன் பார்வை எதிர்த்தாற்போல் ஓடியது.

“அச்சி!” அவன் நின்று கூவினான்.

மோகனுக்கு அசலாவைத் தெரியும். அதற்காக நன்றாகத் தெரியும் என்று கூறிவிடமுடியாது. அசலாவின் கணவர் ராம் சத்தாரியை அவன் தன் வாழ்க்கையில் இரண்டொரு முறை கூடச் சந்தித்திருப்பானோ என்னவோ? ஆனால் அசலாவைப் பல முறை ‘மிஷ்பின்ன’ ஹோட்டலில் கண்டிருக்கிறான். அவள் தன் பெங்காலித் தோழி தேவியுடன் சைவ உணவு அருந்த வருவாள். ‘நமஸ்தே, வணக்கத்தை’த் தவிர மோகன் ஜாமுக்கும் அசலா சந்தாரிக்கும் இடையே ஏழெட்டு, அதிகம் போனால், பத்துப் பன்னிரண்டு வார்த்தைகள் பரிமாறிக் கொள்ளப்பட்டிருக்கலாம். அவற்றைக் கொண்டு, அவளும் கொலாபாவில் இருக்கிறாள் என்று தெரிந்துகொண்டிருந்தான். வித்தியாசம் என்னவென்றால் மோகன் ‘கஃப் பரே’டில் ஒரு நல்ல ‘ஃப்ளாட்’டில் இருந்தான். அசலா கார்மூயாவில் ஒரு பழைய கட்டிடத்தில் இருந்தாள்.

மோகன் அவளை அச்சி என்னும் செல்லப் பெயர் இட்டுக் கூப்பிடுவதில்லை. ஆனால் தேவி அவனுக்கு அவளை அறிமுகப்படுத்திய போது அந்தப் பெயரைத்தான் உபயோகப்படுத்தினாள். தேவியை மோகனுக்கு நன்றாகத் தெரியும். நீருக்கும் கற்கண்டுக்கும் உள்ள பகையைத் தேவி நன்கு அறிந்திருந்தாள். இருந்தாலும், வேற்று ஆடவர்களோடும் கலகலப்பாகப் பழகிக் கரைந்து உருக வாய்ப்புக் கிடைத்தால் விடமாட்டாள். அவளது சுதந்தர வாழ்வை ஒருவகை ஸர்பத்து என்று கூறலாம். வாழ்க்கையைக் கற்கண்டு கட்டியாக்கி இரவு முழுவதும் அதில் ஊறப் போட்டிருப்பாள். பொழுது விடிந்தால் நீர் ஏதோ தீச்சுவாலையில் ஆவியாகிப் பறந்துவிடும். கற்கண்டு கட்டிமட்டும் சட்டியின்

அடியில் தேங்கி நிற்குமே, அத்தகைய கற்கண்டு ஸர்பத்து அவள்! முன்னைக் காட்டிலும் தூய்மையும் தெளிவும் பளபளப்பும் பளிச்சிடும் அவளிடம்!

மோகனின் அழைப்பைக் கேட்டு அசலா திரும்பிப் பார்த்தாள். ''மோ'' என்றவள் சிறிதுநேரம் கழித்தே ''கன்'' என்று முடித்தாள்.

பிறகு அவள் தனது புடைவைத் தலைப்பினால், கண்களின் ஈரத்தை ஒத்தி எடுத்தாள். இப்போது அவள் முறுவலித்துக் கொண்டிருந்தாள். திடீரென்று யாரோ அவளுக்குத் தலையில் பொற்கிரீடம் சூட்டியதுபோல் இருந்தது. மோகனைச் சிறிது நெருங்கி வந்து, ''நீங்கள் இங்கே எங்கே?'' என்று கேட்டாள்.

''மனைவியை ரெயில் ஏற்ற வந்திருந்தேன்!'' என்றான் மோகன்: ''அவள் காஷ்மீர் போகிறாள்! குழந்தைகளுக்கு விடுமுறை விட்டாகிவிட்டதல்லவா? ஆமாம், நீங்கள்?''

''நானா?'' அவள் கலகலவென்று நகைத்தாள். உடனே சிரிப்பை அடக்கிக்கொண்டு மௌனமானாள். பிறகு சிறிது வெட்கத்தோடு, ''நான் அவரை வழி அனுப்ப வந்திருந்தேன்'' என்றாள்.

''ஓகோ!'' மோகனும் நகைத்தான். ஒரு பார்வை அசலாவின்மீது வீசிவிட்டு இன்னொரு வண்டியின் என்ஜினைப் பார்க்கலானான். அது புகையைக் கக்கியபடி நின்றுகொண்டிருந்தது. பிறகு அசலாவை நோக்கி, ''சத்கரி சாஹப் எங்கே போகிறார்?'' என்று கேட்டான்.

''தில்லிக்கு!''

''எப்பொழுது திரும்புவார்?''

''ஒரு வாரம், பத்து நாளில்!'' அசலா தொடர்ந்தாள்: ''ஏதோ கான்பிரன்ஸ் நடக்கிறதாம்!''

''ஒருவேளை இன்னும் அதிக நாள் பிடித்தாலும் பிடிக்கலாமோ?''

''பிடிக்கலாம்!''

அசலா தன் தலைமயிரை வாரிக்கொண்டாள். முன்பே படிய வாரிய தலைதான்! ஒரே ஒரு பின் மட்டும் சிறிது தளர்ந்து மேலே கிளப்பிக்கொண்டிருந்தது. அதை அசலா மெழுகுபோன்ற தன் மென்மையான கரங்களினால் அமுக்கி விட்டுக்கொண்டாள். அவளுக்குத் தன் கரங்கள் வெகு நேரமாக மேலே எழும்பியபடி இருந்திருக்கின்றன என்பது அப்புறமே

நினைவு வந்தது. மோகனின் விழிகள் அவளது உடல் முழுவதையும் வட்டமடித்துவிட்டு, சோளிக்கும் புடைவைக்கும் இடையே உள்ள இடத்தில் வந்து நிலைத்தன. சட்டென்று அவள் தன் கரங்களைத் தொங்கப் போட்டு, அத்தனை நேரமும் தெரிந்த தன் உடலின் அந்தப் பகுதியைப் புடைவையினுல் இழுத்து மூடிக்கொண்டாள்.

உடலின் இந்தப் பகுதியைத்தான் ஆங்கிலத்தில் 'மிடர்ஃப்' என்று கூறுகிறார்களோ என்று எண்ணினுன் மோகன். தேனீயைப் போல இந்தச் சொல் ஸ்டேஷனை விட்டு வெளியே வரும் வரையில் ரீங்காரமிட்டது: மிடர்ஃப்! மிடர்ஃப்! மிடர்ஃப்!...

மோகன் அதைத் தன் மூளையிலிருந்து வெளியேற்றவும் முயல வில்லை. எல்லாம் வீண். தேனீயின் அடம்பற்றி மோகன் நன்கு அறிவான். அடிக்கடி பறந்து வேறு எங்கோ போவது போலப் பாசாங்கு செய்யும். ஆனுல் புறப்பட்ட இடத்துக்கே திரும்பி வந்து உட்காரும். எரிந்து விழுந்து அதை அகற்ற முயன்ருல், மூக்கு உடைபடுவதுதான் மிச்சமாகும். தேனீ தன்னுலே தப்பிவிடும்!

வெளியிலே நல்ல உஷ்ணம். உடல் வேர்வையில் நனைந்து எண்ணெயில் குளித்துக்கொண் டிருந்தது. பிளவுஸ் மார்போடு ஒட்டிக்கொண்டுவிட்டது. காதுகளைத் துளைத்துப் போட்டுக் கொள்ளும் பொன் நகை அழகை எடுத்துக் காட்டுவதுபோல, வேர்வையில் நனைந்த பிளவுஸும் அழகைக் கூட்டியே காட்டியது. வேர்வைத் துளிகள் புடைவை, உள்பாவாடை இவற்றின் வழியே உள்ளாகப் பெருகிக் கால்களில் வழிந்துகொண் டிருந்தது. அட்டை ஊர்வதுபோலக் கசகச வென்றிருந்தது. ஸ்டேஷனில் உள்ள நடமாடும் தண்ணீர்ப் பந்தல் பின் தங்கி விட்டது. தாகம் அதிகமானதற்குக் காரணம் அது பின்தங்கி விட்டதாகக்கூட இருக்கலாம். வெளியே ஹால் மூலேயில் சிறிது இடம் இருந்தது. அங்கே மேல் கூரையிலே இரண்டு இலேகள் உள்ள விசிறி மிக மிக மெதுவாகச் சுழன்றுகொண் டிருந்தது. அதற்குக் கீழே ஒரு கிழவன் வாயைத் திறந்த வண்ணம் படுத்து உறங்கிக்கொண் டிருந்தான். பிணம் என்று அடையாளம் கண்டு கொள் வதற்காக நகரத்தின் சவக் கிடங்கில் போட்டிருக்கிருற்போலத் தோன்றினுன்.

மோகனும் அசலாவும் இரண்டொரு விஷயங்கள் பேசினுர்கள். அப்புறம் அவர்கள் பேச்சு நின்றுவிட்டது. இருவரும் பேச்சுக்கு

விஷயம் தேடி மூளைக்கு வேலை கொடுத்தார்கள். அதிகம் யோசனையில் இறங்கிவிட்டதால் எந்த விஷயமும் பிடிபடவில்லை. அசலா இரண்டு அடி முன் நடந்தாள். மோகன் பின்தொடர்ந் தான். அப்போதுதான், அசலாவுக்குத் தன் உடலின் பூரித்த அந்தப் பகுதி நினைவுக்கு வந்தது. பெண்கள் அதை அவலட்சணமாகக் கருதுகிறார்கள். ஆண்களோ அதுதான் லட்சணம் என்று எண்ணுகிறார்கள். எந்தப் பெண்ணும் அந்தப் பகுதியை இலவசமாகக் காட்ட விரும்புவதில்லை. ஒன்று பணம் வேண்டுவார்கள் அல்லது அன்பு வேண்டுவார்கள். அன்பு எப்போதுமே நிர்வாணமானது. அதற்கு உடை உடுத்திவிட் டால், அது அன்பாக இருப்பதில்லை. அசலா தன் உடலின் பின் பகுதியைப் புடைவைத் தலைப்பினால் இழுத்து மூடிக்கொண் டாள். விழிக் கணைகள் பின்னாலிருந்து அவள் உடலின் ஒவ்வோர் அணுவிலும் கணுவிலும் பார்க்கப்படுவதாகத் தோன்றியது.

''நல்லது மோகன்ஜி!'' அவள் திரும்பிக் கூறினாள்: ''நான் வீட்டுக்குப் போய் வருகிறேன்!''

''எப்படிப் போவீர்கள்?'' என்று கேட்டான் மோகன்.

''இப்படித்தான்!'' என்று கூறி அசலா சிறிது தூரத்துக்கு நடந்து காட்டினாள். பிறகு இருவரும் கடகட வென்று மடை வாய் திறந்தாற்போலச் சிரித்தார்கள். இந்தச் சிறு விஷயங்கள் காரணமாக இருவருக்கும் இடையே ஓர் ஒட்டுணர்வு பிறந்தது. ''நான் கேட்கிறேன், நீங்கள் வண்டி கொண்டுவரவில்லையா என்று!''

அசலா தலையசைத்துச் சொன்னாள்: ''எனக்கு டிரைவிங் வராது!''

''நான் இருக்கிறேன். இன்று கொஞ்ச நேரத்துக்கு என்னையே உங்கள் டிரைவராக நினைத்துக்கொள்ளுங்கள்!'' என்றான் மோகன்.

''சார்!'' அசலா சொன்னாள்: ''ஊஹூம், அது எப்படி முடியும்? நான்... நான் பஸ்ஸிலே போய்க்கொள்ளுகிறேன். உங்களுக்கு எதற்கு வீண் சிரமம்?''

'உங்களுக்கு எதற்கு வீண் சிரமம்?' என்ற சொற்கள் மிக சாமர்த்தியமானவை. இதன் மூலம் ஒருவன் ஒருவனுக்குச் சிரமம் தரவும் நினைக்கலாம் அல்லது ஆளைவிட்டால் போதும் என்று கத்தரித்துக்கொண்டு போகவும் முனையலாம். அவன் தன் னோடு, தான் இழுத்த இழுப்புக்கு எவ்வளவு தூரம் வருவான்

என்பதை ஆழம் பார்ப்பதற்கும் பயன்படுத்தலாம். இதே விஷயத்தை ஓர் ஆண் பிள்ளை சொன்னால் அது சாதாரண விஷயம். ஆனால் பெண் சொன்னால் அதன் முக்கியத்துவமே வேறு. 'நல்ல புளுகர்!', 'நான் செத்தேன்!' போன்ற சொற்கள் பெண்களின் வாயிலிருந்து புறப்படுவதுபோல!

''இதில் சிரமம் என்ன? நான் வீட்டுக்குத்தான் போகிறேன். அப்படியே வழியில் உங்களை இறக்கிவிட்டுப் போகிறேன்!'' என்றான் மோகன்.

ரேடியோ கிளப் மோகனின் மூளையிலிருந்து தானாகவே 'பிராட்காஸ்ட்' ஆகிவிட்டதுபோலும்! அதை மறந்தே போனான். சிறு தயக்கத்துக்குப் பின் அசலா சத்கரி, மோகன் ஜாமின் மோட்டாரில் ஏறி உட்கார்ந்தாள்.

வண்டி ஃப்ரீயர் ரோடு வழியாகச் சென்றது. கிராஸிங்கில் போலீஸ்காரன் உள்ளங் கையைக் காட்டவே, மோகன் காரை நிறுத்தும்படி ஆயிற்று. போலீஸ்காரனின் இந்த முத்திரையைக் கண்டால் மோகனுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வரும். வாய்க்குள்ளாகவே திட்டித் தீர்த்துவிடுவான். ஆனால் இன்று அதே கை ஏசுநாதரின் கைபோல அவனுக்குத் தோன்றியது, வரம் அருளும் தெய்வக் கரமாகப் பட்டது.

''தேவி எப்படி இருக்கிறாள்?'' மோகனுக்குப் பேச்சுக்கு விஷயம் கிடைத்துவிட்டது.

''அப்படியேதான் இருக்கிறாள்!'' என்றாள் அசலா.

''என்ன அர்த்தம்?'' மோகன் துணுக்குற்றுக் கேட்டான்: ''அவளை நல்ல பெண் என்றல்லவா நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன்!''

''நான் எப்பொழுது கெட்டவள் என்று சொன்னேன்?'' அசலா கேள்வியிலேயே சிரித்தாள்.

மோகன், அசலாவின் கேள்வி வலையில் வகையாக விழுந்துவிட்டான். அதிலிருந்து எப்படியாவது தப்பியோட வேண்டிச் சிறகடித்துப் பார்த்தான். வேர்வைத் துளிகள் அவன் நெற்றியில் முத்திட்டன. அசலா அவனிடமிருந்து தூர விலகிக் கதவோடு ஒட்டி உட்கார்ந்திருந்தாள், தப்பித் தவறித் துணிபட்டால் கூட ஏதாவது உறவு ஒட்டிக்கொண்டுவிடுமோ என்று! தன் வெட்கத்தைப் போக்கிக்கொள்வதற்காக, ''நீங்கள் ஏன் என்னிடமிருந்து இத்தனை விலகி உட்கார்ந்திருக்கிறீர்கள்?'' என்று மோகன் கேட்டான்.

''சும்மாத்தான்!'' என்ற அசலா சிரமப்பட்டு ஓர் அங்குலம் மோகன் பக்கம் நகர்ந்து வந்தாள். ''உங்களுக்குக் கியர் மாற்றச் சிரமம் இருக்கக்கூடாதே என்று எண்ணி. . .''

''மீண்டும் மீண்டும் சிரமப் பேச்சுத்தானு?''

இதற்குள் போலீஸ்காரன் வழி கொடுத்துவிட்டான். ஆனல் மோகனின் கார் அப்படியே நின்றது. போலீஸ்காரனின் ஊதல் ஒலியும், பின்னுல் நின்றுகொண்டிருந்த கார்களின் ஹார்ன் ஒலியும் சேர்ந்து முழங்கின. மோகன் அவசரம் அவசரமாக வண்டியைக் கியரில் போட்டான். பதற்றத்தில் சட்டென்று காலைக் 'கிளச்'சிலிருந்து எடுத்துவிட்டான். கார் ஓர் உலுக்கலுடன் முன்னேறியது; நில்லாமல் நின்றது. போலீஸ்காரனைத் தாண்டிய பிறகு, ''நீங்கள் இப்படித்தான் வண்டி ஓட்டுவீர்களா?'' என்று அசலா கேட்டாள்.

''இல்லை!'' மோகன் பதில் அளித்தான்: ''நான் வெகு அழகாக ஓட்டுவேன், வண்டி போகிறதா, நிற்கிறதா என்று கூடத் தெரியாமல். அவ்வளவு 'ஸ்மூத்' தாக. ஆனுல் இன்று. . .''

''இன்று என்ன ஆயிற்று?''

''என்ன ஆகும்? நீங்கள் இருந்தீர்களா. . .?''

மோகனும் அசலாவும் டவுன் ஹாலுக்கு எதிராகப் போய்க்கொண்டிருந்தார்கள். இன்று ஏதாவது விபத்து ஏற்படக் கூடாதா? ஏனே தெரியவில்லை, மோகனின் மனம் இப்படி வேண்டிக்கொண்டிருந்தது. ஒரு பஸ் வேகமாகப் போயிற்று. மோகன் அந்த விசித்திர ஆசையை உள்ளுக்குள்ளேயே அடக்கிக் கொள்ளும்படி ஆயிற்று. எதிரே டவுன் ஹால் பக்கம் போகும் படிகள் வழியாக, ஹாலைப் பார்த்தவண்ணம் மோகன், ''எத்தனை அழகு!'' என்ருன்.

எலிபின்ஸ்டன் சர்க்கிள் வழியாக இளமைப் பூரிப்பில் மதர்த்த மிக மிக அழகிய பெண் ஒருத்தி ஓர் இளைஞனின் கையோடு கைகோத்து ரிஜிஸ்தரார் அலுவலகத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாள். அவளுக்குத் திருமணம்போலும்! அவள் சிவந்த முகம் உட்கொதிப்பினுல் மேலும் சிவந்திருந்தது. அசலா மோகனைக் கேட்டாள்: ''உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது!''

''அழகு இடம் மாறியிருப்பதாக!'' மோகன் அசலாவைப் பார்த்துப் புன்னகை பூத்தான். அசலாதான் அதிக அழகு என்று சொல்கிறதுபோல் இருந்தது அவன் புன்னகை. அசலா

மகிழ்ந்து போனாள். ஒருத்தி வேறு என்ன செய்யமுடியும்? அவள் உண்மையில் மகிழ்ந்தாளா, மகிழ்ந்ததாகக் காட்டிக் கொண்டாளா, தெரியாது! "நான் அவ்வளவு அழகு எங்கே?'' என்றாள்.

மோகன் மீண்டும் ஒரு பார்வையை அசலாவின்மீது வீசினான், தான் சும்மாச் சொல்லவில்லை என்பதுபோல!

காமா ஹால், லெனவன் கேட் ஆகியவை தாண்டின. மோகனின் வண்டி இப்பொழுது ரீகல் சினிமாவின் சமீபமாகச் சென்றுகொண்டிருந்தது. எதிரே உள்ள சிலை மனமோகனுவின் சிலை. வாசனைப் பொருள் கடை வெகு ரம்யமாக இருந்தது. வண்டி 'காஸ்வே' தாண்டி ஸத்ய சதனுக்கு எதிரே நின்றது. அங்கேதான் அசலா இருந்தாள்.

அசலா மேலெழுந்த பார்வையாக இங்கும் அங்கும் பார்த்தாள். எதிரேயுள்ள தையற்காரரைத் தவிர வேறு யாரும் அசலா இன்னொருவன் காரிலிருந்து இறங்குவதைப் பார்க்கவில்லை. தையற்காரன் பார்த்தால் என்ன? ஓரளவு தெரிந்தவன் தானே அவன்? மோகனிடமும்தான் என்ன வெட்கம்? கதவைக் கன ஜோராகத் திறந்துகொண்டு அசலா வண்டியிலிருந்து இறங்கினாள். பிறகு சற்று நின்று, ''நல்லது மோகன்ஜி! உங்களுக்கு மிக மிக நன்றி!'' என்று கூறிப் புறப்பட்டுவிட்டாள்.

மோகன் வழக்கப்படி டிரைவரின் ஸிட்டில் உட்கார்ந்திருந்தான். ஒரு கால் உள்ளே இருந்தது. இன்னொரு கால் திறந்த கதவின் வழியே வெளியே. அவன் எழுந்து அசலாவுக்காகக் கதவை திறந்துவிட விரும்பினான். ஆனால் அவள் அதற்கு வாய்ப்பு அளிக்கவில்லை. சிறிது தொலைவு சென்றதும் அசலா ஏதோ நினைவு வந்தாற்போலச் சிறிது நின்றாள். ஏதோ சொல்ல நினைப்பதாகவும் தோன்றியது. சொல்லவேண்டாம் என்று அதை அடக்க முயல்வதாகவும் தோன்றியது. ஆனால் சில சமயம் உடல் உள்ளத்தை முந்திக்கொண்டுவிடுகிறதே! எனவே தன்னை யறியாமல் அவள் கூறினாள்: ''எப்போதாவது சௌகரியப் பட்டபொழுது வாருங்கள், மோகன்ஜி!''

மோகனின் பதிலை எதிர்பாராமலே அசலா வீட்டின் பக்கம் விரைந்துவிட்டாள். ''வரேன், வராமல் என்ன?'' என்று மோகன் கூறியதைக் காற்றுத்தான் கேட்டுக்கொண்டது.

மோகன் கெட்டிக்காரனாக இருப்பான் என்றே எண்ணினாள் அசலா. இவர் வீட்டில் இல்லாதபொழுது . . . எத்தனை சிரமமாயிருக்கிறது? இந்த அழைப்பு வெறும் உபசாரந்தானே?

மோகன் நிசமாகவே கெட்டிக்காரன்தான். இல்லாவிட்டால் அவன் மறுநாளே அசலாவின் வீடு தேடி வருவானு? அதுவும் தன் கணவர் ராம் சத்கரியின் நினைவே அசலாவின் மனத்தில் இல்லாத போது?

மோகன் ஜாம் அழைப்பு மணியை அழுத்திய வேகத்தில் அசலா பதறிப் போய் விழுந்தடித்துக்கொண்டு ஓடிவந்தாள், ராம் சத்கரி தான் மறுநாளே புஷ்பகவிமானத்தில் அமர்ந்துவந்துவிட்டாரோ என்ற நினைப்பில்! அதனுல் அவளுக்குத் தன் உடையைச் சீர் செய்து கொள்வதற்கு நேரமோ நினைப்போ இல்லை. கதவைத் திறந்து முகத்தைச் சிறிது வெளியே நீட்டிப் பார்த்தாள். சட்டென்று பின் நகர்ந்தவள், தனக்குள்ளேயே கூனிக் குறுகிப் போனுள். ''சற்று இருங்கள்!'' என்று கூறிவிட்டு ஒரே ஓட்டமாக உள்ளே ஓடினுள்.

மோகனுக்கு அத்தனை பொறுமை எங்கே இருந்தது? அவன் கீழேயிருந்து வரும்பொழுதே முதல் கியரைப் போட்டுக் கொண்டு வந்தவன்போல் வந்திருந்தான். அவன் கதவை இலேசாகத் தள்ளினுன், அது திறந்துகொண்டது. அடுத்த கணம் அவன் 'டிராயிங் ரூமில்' இருந்தான். தலையைத் திருப்பித் திருப்பி அறையில் உள்ள ஒவ்வொரு பொருளையும் உன்னிப்பாகக் கவனித்தான். அவனுக்குத் தலையிலும் ஒரு கண் இருந்ததோ, என்னவோ! குனிந்து நிமிர்ந்து பார்த்த பார்வை அப்படி எண்ண வைத்தது. அவன் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து அசலாவின் படுக்கையறை நன்கு தெரிந்தது.

பெண்ணுக்கும் வீட்டுக்கும் உள்ள வேறுபாடுதான் என்ன? குறைந்த பட்சம் கேட்டாவது பார்க்கவேண்டும்! கடைசியில் இதெல்லாம் என்ன? ஆனுல் மோகன் காலிலிருந்து தலைவரை பொங்கிக்கொண்டிருந்தான். அசலா பெரிய படுக்கையறையின் திறந்திருந்த கதவு வழியாகக் குறுகிக் கூச்சமே உருவாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தாள். ஆண்டவன் அவர்களைப் படைத்திருந்த விதமே அலாதி. அவள் உணர்ச்சிக் குவியல், அவள் கற்பனைப் பேருருவம். அவன் கண்களாகக் காட்சி அளித்தான். அவள் அழகு உடலாகத் தோற்றமளித்தாள். அசலா கட்டிலின் கால்மாட்டிலிருந்து புடைவையை எடுத்துச் சீக்கிரம் சீக்கிரமாக உள்பாவாடையின்மீது சுற்றிக்கொண்டிருந்தாள்.

மோகன் ஜாம் அங்கிருந்த வண்ணமே, ''மன்னிக்கணும்!'' என்றான். அசலாவும் அங்கிருந்த வண்ணமே, ''பரவாயில்லை!'' என்று பதில் அளித்தாள்.

டிராயிங் ரூமுக்கும் பெட் ரூமுக்கும் இடையே ஒரு சிறிய இடம் இருந்தது. அங்கே கண்ணாடிக் காபினெட்டுக்குள்ளே சிவ பெருமானின் படம் ஒன்று தொங்கியது. அதன்மேல் ஒரு பழைய வாடிய பூமாலை தொங்கிக்கொண்டிருந்தது. பக்கத்தில் குமாரி மேரியின் படம், குருநானக்கின் படம் ஆகியவை இருந்தன. அவற்றை ஒட்டினாற்போல் ஒரு காலண்டர். அதில் லீலா நிர்வாணமாக நின்றாள். ஓர் அரச அன்னப் பறவை அவளைத் தன் கால்களுக்கிடையிலே இடுக்கிக்கொண்டு, அலகைத் திறந்து அவள் தலைமயிரைக் கொத்திக்கொண்டிருந்தது.

அந்த ஒரு கணத்தில் மோகன் ஜாம் உலகத்தில் உள்ள அத்தனை பெண்களையும் பார்த்துத் தீர்த்துவிட்டான். சுமித்திராவைப் பார்த்தான், தேவியைப் பார்த்தான், ஜாஜா கியோபரைப் பார்த்தான். இன்னும் யார் யாரை எல்லாமோ பார்த்தான். ராதாவைக்கூடப் பார்த்தான். அவள் மோகனின் கூடப்பிறந்த தங்கை. பரேலியில் தன் வீவிங்க் மாஸ்டர் கணவருடன் வாழ்ந்து வந்தாள் அவள்.

மோகன் எப்போதுமே பெண்களை மாயையின் உருவமாகத் தான் பார்த்திருக்கிறான். அவர்கள் வெளியில் வேறாகவும் உள்ளில் மாறாகவுமே தோன்றியிருக்கிறார்கள். நன்மை—தீமை, பாவம்—புண்ணியம், அழகு—கோரம் என்று பல கலவையாகத்தான் காட்சியளித்திருக்கிறார்கள். ஆடைக்குள் நிறைந்த மதர்த்த உடலோடு தென்படுபவள் ஒல்லியாக ஒட்டிய சருகாகிப் போவாள்; ஆடைக்குள் ஒட்டிய சருகாகத் தோன்றுபவள், உள்ளுக்குள் பல வகையிலும் நிறைந்தவளாக விளங்குவாள். இதை மாயை என்று கூறுவதா, லீலை என்று கூறுவதா? உடல் கட்டும் நல்ல ஆரோக்கியமும் கொண்ட பெண்ணைக் கண்டு அஞ்சுவதும், எலும்புக்கூட்டை எளிதாக எண்ணி எள்ளி நகையாடுவதும் தவறாக முடியக்கூடும். இயலாமை இடம் பெயர்ந்துவிடும். 'ஆளைக் கண்டு மயங்காதே, ஊது காமாலை' என்னும் பழமொழி உடற்கட்டு விஷயத்திலும் பொருந்தும். 'மாங்கு, மாங்கு' என்று எத்தனைதான் விறகு வெட்டினாலும் கிடைக்கும் கூலி கால் வயிற்றுக்குப் பற்றாதே, அந்த நிலை வற்றிய உடல் விஷயத்திலும் படிப்பினை ஆகிவிடும்.

மாயை நம் வசத்தில் வந்துவிட்டதாக நாம் எண்ணினால் அது நம் அறிவையும் சாமர்த்தியத்தையும் தோல்வியுறச் செய்து விடும். நம் கைக்கு எட்டாது, நமது கருத்தை நெறித்துப் போட்டுவிடும் என்று நாம் எண்ணினால் நம் கிட்டவே வராது. இந்த மாயை என்பது என்னவோ? அடைந்த பின்னும் கிட்டாத மாயை என்று ஒன்று உண்டுபோலும்! இந்த உலகத்தில் இருந்து போகும்பொழுது நீங்கள் எதையும் அடையவில்லை. எல்லாரும் உங்களை அடைந்து விட்டார்கள் என்று தோன்றுவதும் உண்டு.

இப்படி மோகன் மாயை வசப்பட்டு உழலும் வேளையிலே அசலா கூந்தலையும் புடைவையையும் சரி செய்த வண்ணம் டிராயிங் ரூமுக்கு வந்தாள். அவள்தான் எத்தனை அழகாகத் தோற்றமளித்தாள்? மற்றொருத்தி என்பதனால் இப்படி இருக்குமா? இல்லை, இல்லை! முதலொருத்தியாகவே இருந்தாலும் அவள் அழகாகவேதான் தோற்றம் அளித்திருப்பாள். அவளிடம் ஏதோ ஒரு விசேஷம்—மற்றவர்களிடம் இல்லாத விசேஷம் இருந்தது. ஆனால் இப்படியே ஒவ்வொருவரைப் பற்றியுமே சொல்லலாமே! அவள் புருவங்களில் குழந்தைப் பருவத்தில் காயம் பட்டதனால் இலேசாக ஒரு கீறல் இருந்தது. அது மயிரின் சுதந்தரத்துக்குப் பங்கம் விளைவித்து இரண்டு பகுதிகளாகப் பிரித்துவிட்டிருந்தது. அந்தக் கீறலின் கவர்ச்சியில் முத்தமிட வேண்டும் என்ற ஆசை உதித்தது.

மோகனின் அருகில் வரும்பொழுது மீண்டும் கைகளைத் தூக்கி அசலா தன் கூந்தலைத் தூக்கி வாரிக்கொண்டாள். முன் நெற்றி மயிர் புடைத்துக் கொண்டு ஒரு கிரீடம், 'டியாரா' (Tiara) போலத் தோன்றியது. பொன்னும் வைரமும் வைத்து இழைத்த கிரீடங்கூட அதற்கு எதிர் நிற்கமுடியாது. அவள் தன் புடைவைத் தலைப்பினால் தனக்குத்தானே விசிறிக்கொண்டு வந்தாள்: ''உஷ்! இன்றைக்குத்தான் என்ன உஷ்ணம்?'' என்றாள்.

பிறகு வலப்புறம் கைநீட்டிச் சுவரில் இருந்த மின்விசிறி ஸ்விட்சைத் தட்டிவிட்டாள்.

''நானும் இதைத்தான் நினைத்துக்கொண் டிருந்தேன்!'' என்றான் மோகன்.

''எதை நினைத்துக்கொண் டிருந்தீர்கள்?'' அசலா மோகனின் மீது ஒரு முறை பார்வையை ஓட்டிக் கேட்டாள்.

"இன்றைக்கு இதென்ன இத்தனை வெயில் என்று?" என்றான் மோகன்.

மின் விசிறியிலிருந்து காற்று வந்ததும், மோகனுக்கும் அசலாவுக்கும் சிறிது நிம்மதியாயிற்று. நீண்ட மூச்சு விட்டவாறே எதிரும் புதிருமாக ஸோபாவில் உட்கார்ந்தார்கள். என்ன கொடுமை! ஒருவர் பக்கத்தில் இன்னொருவர் உட்காரக்கூட முடியாத கொடுமை! எல்லாமே எவ்வளவு இயற்கைக்கு விரோதமாகத் தோன்றின! ஒருவிதத்தில் இதுவும் சரிதான். உலகத்தில் உள்ள ஆண்களும் பெண்களும் இயற்கை வாழ்வு நடத்த முற்பட்டால் என்ன ஆகும்? ஆனால் ஆண்—பெண் இருவருமே முழுமை பெறாதவர்கள். அவர்கள் முழுமை...? உடலை விட்டுத் தள்ளுங்கள், சுட்டுத் தள்ளுங்கள்! உள்ளங்களை அடைவதற்கும் என்ன வழியா?

இதுபோன்ற உபசாரங்களிலேயே மனிதர்கள் ஒருவரைவிட்டு ஒருவர் மைல் கணக்கில் விலகிவிடுகிறார்கள். அப்புறம் விந்தையான இழுபறி நடக்கிறது. அறிமுகம் இன்றியே வந்ததும் கையைப் பற்றிக்கொள்கிறார்கள்! 'ஏன் முன்பே கூப்பிடவில்லை?' என்ற கேள்வி பிறக்கிறது. என்ன நினைக்கிறீர்கள்?...காதல் விளையாட்டிலே முதல் பார்வை, முதல் சொல், முதல் செயல் கடைசிவரையில் நிலைபெற்று விடுகின்றன. ஒரு நாள் தேவி ஒரு பெயிண்டரைப்பற்றிக் கூறிக்கொண்டிருந்தாள். அவள் அவனைக் காதலித்தாளாம். 'தாளாம்' இல்லை; இன்னும் காதலிக்கிறாள்.

"நான் அவனுக்கு எனது அனைத்தையும் அர்ப்பணிக்கத் தயாராயிருந்தேன். ஆனால் சிறிது இடம் கொடுத்ததுமே அவன் எவ்வளவு மட்டரகமாக நடந்துகொண்டு என் கையைப் பிடித்துவிட்டான், தெரியுமா? எனது சிறிய பெரிய இரகசியங்களையெல்லாம் தெரிந்துகொள்ளவும் முயன்றான். இப்படித்தான் நடந்துகொள்வதா? நானும் அதே மட்டரகத்தில் இறங்கி அவனைத் தடுத்துவிட்டேன். இப்போது நான் அவன் பின்னால் ஓடுகிறேன். அவனோ ஏதோ பிடிவாதத்தில் இறங்கிவிட்டான். என்ன கஷ்டகாலமோ, தெரியாது. அவன் அக்கிபாடாவில் ஏதோ ஒரு வேசியின் வீட்டுக்குப் போவதாகக் கேள்விப்பட்டேன்!" என்றாள்.

அசலாவுக்குக் குழந்தை ஏதும் இல்லை, கல்யாணமாகி ஐந்தாறு ஆண்டு ஆகியும்கூட. அவள் தாய்ப் பாசம் தலையெடுக்காமல்

அடங்கியே கிடந்தது. பதினைந்து பதினாறு வயதில் அவளுக்கு ஒரு வேலைக்காரி இருந்தாள். அசலாவின் சமிக்ஞை புரிந்து கொண்டு அவள் தேநீர் தயாரித்து எடுத்து வந்தாள். அப்புறம் ஒரு பிளேட்டில் 'கதம்பம்' எடுத்து வந்தாள். அசலா வீட்டி லேயே தயாரித்தது அது. அதில் பிஸ்தாப் பருப்பு நிறையப் போட்டிருந்தது. வேலைக்காரி, மோகனை 'இதற்குமுன் பார்த்த தாகத் தெரியவில்லையே' என்ற பாவனையில் பார்த்தாள். அப்புறம் சமையற்கட்டு வேலையைக் கவனிக்கப் போய்விட்டாள்.

''பெண் நல்லவளாகத் தோன்றுகிறாளே!'' கதம்பத்தை ஒரு வாய் அள்ளிப் போட்டுக்கொண்டே சொன்னான் மோகன்.

''ஆமாம்!'' அசலா உள்பக்கம் பார்வையை ஓடவிட்டு, ''வயது வந்த பெண்களை வேலைக்கு வீட்டில் வைத்துக்கொள்ளக் கூடாது!'' என்றாள்.

''ஏன்? ஏன் வைத்துக்கொள்ளக் கூடாது?''

''என்ன சொல்வது? எப்படிச் சொல்வது?'' அசலா சிரித் தாள்: ''தினம் யாராவது புதிது புதிதாக விடலைப் பிள்ளை வாசலில் வந்து நிற்கிறான்!''

இருவருமே இணைந்து சிரித்தனர். ''அதில் நானும் ஒருவனோ?'' என்றான் மோகன்.

அசலாவின் முகம் குப்பெனச் சிவந்தது. பார்வையைத் தாழ்த் திக் கோப்பையை ஸ்பூனினால் கலக்கியவாறே சொன்னாள்: ''உங்கள் விஷயம் வேறு!'' பிறகு பேச்சைத் தொடரும் முகமாக ''இந்தத் தடவை ராம் வந்ததும், உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். வெகு விந்தை மனிதர் அவர்'' என்றாள்.

''அப்படியானால் அதற்குமுன் நான் வரக்கூடாது என்று பொருளா?'' மோகன் சீண்டினான்.

''இல்லை, இல்லை!'' அசலா பதற்றமுற்று, ''நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வாருங்கள். இது உங்கள் வீடு!'' என்றாள்.

பிறகுதான், 'இதென்ன? இப்படிச் சொல்லிவிட்டோமே' என்று எண்ணினாள். பெண்ணாக இருப்பதே பேராபத்து! எந்த நேரமும் அவள் பயந்தே சாகவேண்டியிருக்கிறது. அதோடு அவள் ஒன்று சொன்னால் அதன் பொருளே வேறாகிவிடுகிறது.

அசலா தன் கணவர் ராம் சத்கரியைப்பற்றிப் பேச்சு எடுத்து விட்டாள், அவரைப்போல் நல்லவர் இந்த உலகத்திலேயே இல்லை என்பதுபோல! ஒரு ராமர் அயோத்தியில் அவதரித்தார். இன்னொரு ராமர் இப்பொழுது இருபதாம் நூற்றாண்டில் பிறந்

திருக்கிறார். கொலாபாவில் வாழ்கிறார் என்பதாக அவள் பேச்சு ஓடியது.

மோகன் ஜாமுக்கும் சுமித்திராவைப்பற்றிப் பேசுவதைத் தவிர வேறு வழி இல்லை என்று ஆகிவிட்டது. இருவருக்கும் இடையே இடைவெளி அதிகரித்தது. அதிகரித்த இடைவெளி அதிகரித்துக் கொண்டே போயிற்று. அவர்களை அறியாமலே ஒருவருக் கொருவர் விலகிப் போனாலும் நெருங்கி வர முயன்றுகொண் டிருந்தனர். சுமித்திரா மிக மிக நல்ல பெண் என்றும், உடல் நலக்குறைவுதான் வாழ்க்கை முழுவதிலும் துயரத்தின் முத்திரை யைப் பதித்துவிட்டது என்றும் மோகன் கூறினான்.

இதே நேரம் வேலைக்காரி கையைத் துடைத்துக்கொண்டு வந்தாள். ''அம்மா! நான் போய் வரட்டுமா?'' என்றாள்.

''வேண்டாம் வேண்டாம்!'' அசலா மோகனின் பக்கம் பார்த்தவாறே சொன்னாள்: ''போய்த் துணிமணிகளைத் துவை. குளியலறையில் போராகக் குவிந்து கிடக்கிறது பார்! போய் அதைக் கவனி!''

வேலைக்காரி முகத்தைப் 'புசுபுசு'வென்று வைத்துக்கொண்டு குளியலறைப் பக்கம் போனாள். அதைத் தவிர அவளுக்கு வேறு வழி?

மோகன் சுமித்திராவைப்பற்றிக் கூறிக்கொண் டிருந்தான்: 'பத்து ஆண்டுகளாக உன் வாழ்க்கையில் உறுதுணையாக இருந்த பெண்ணை, அவள் நோயாளியாகிவிட்டாள் என்பதற்காக உதறித் தள்ளிவிடலாமா? தனது இளமையின் பெரும்பகுதியை உன் பணியில் உன் இஷ்டத்துக்கு, உன் மகிழ்ச்சிக்குச் செல விட்டாள். அவள் உடல் நலக் கேட்டுக்குப் பொறுப்பாளியே நீ. நீயே உதறினால் . . .?' அவனால் இதை யோசித்தே பார்க்க முடியவில்லை!

மோகனின் கண்களில் நீர் பெருக்கெடுத்து வழியலாயிற்று.

அசலாவுக்கு என்ன தோன்றிற்றோ, தெரியவில்லை! பல ஆண்டு களாக அடங்கிக் கிடந்த ஏதோ ஒரு பொருள் பொங்கிப் பெருகியது. ''வேண்டாம், மோகன்ஜி, வேண்டாம்! சுமித்திரா சரியாகி விடுவாள்!'' என்று கூறிக்கொண்டே சட்டென்று அவனை நெருங்கினாள். தன் புடைவைத் தலைப்பால் அவன் கண் களைத் துடைத்தாள்.

மோகன் ஒரு புழுக்கத்தோடு எழுந்தான். ''நல்லது, நான் வருகிறேன்!'' என்று கூறிப் புறப்பட்டான்.

''உட்காருங்கள் கொஞ்சம்!'' அசலா மீண்டும் அதேபோன்று இருபொருள் தரும் வாக்கியத்தைச் சொன்னாள்.

ஆனால் மோகன் மறுத்துவிட்டான். அவன் சட்டென்று தன் கைக் கடிகாரத்தின்மீது பார்வையை ஓட்டி, ''நான் பதினொன்றரை மணிக்கு அஜ்வானி பேப்பர் மில்ஸில் இருக்க வேண்டும்!'' என்றான்.

மோகன் வேண்டும் பாவனையில் அசலாவைப் பார்த்தவாறு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான்.

அசலா எழுந்தாள். அவள் இதழ்க் கடையில் முறுவல் ஓடியது. படுக்கை அறைக்குச் சென்று அவள் தன் உடலையே உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரையில் பார்த்தாள். அவள் எப்படித் தோன்றினாள்? அவளுக்கே அவள் உருவம் பிடித்துப் போயிற்று. அந்தக் கிறக்கத்தோடு அவள் வேலைக்காரியிடம் சென்றாள். ''உன் ஜானி வரக்காணோமே!'' என்றாள்.

இதற்குப் பதில் அளிப்பதற்குப் பதிலாக, ''ஓர் ஐயா வந்திருந் தாரே, அவர் போய் விட்டாரா?'' என்று கேட்டாள் ரோஸி.

''ஊம்.'' அசலாவுக்குத்தான் எத்தனை நிம்மதியாக இருந்தது!

''நீ ஜானியோடு பீடம் பார்க்கப் போ!'' என்ற அசலா, ''நீ பார்க்கிற மற்றப் பையன்களைக் காட்டிலும் இவன்தான் எனக்கு எந்த விதத்திலும் பொருத்தமாகப் படுகிறான்!'' என்றாள்.

இதைக் கேட்டு ரோஸி மகிழ்ந்து போனாள்.

அசலாவுக்கும் மோகனுக்கும் இது ஐந்தாவதோ, ஆறாவதோ சந்திப்பு. இப்போதெல்லாம் அவள் டெய்லர், மற்றவர்கள் கண்களில் படாமல் மோகனின் வண்டியில் வந்து உட்காருவாள். இருவரும் மாலைக் காற்று வாங்க வெளியே போய்விடுவார்கள்.

இதற்கிடையில் மோகன், சுமித்திராவுக்கு வாரத்துக்கு ஒரு கடிதம் எழுதுவதற்குப் பதிலாக மூன்று நான்கு கடிதங்கள் எழுதலானான். ஒரு கடிதத்தில் அவன் அவளைக் கேலியேகூடச் செய்து எழுதினான்: 'நீ வராவிட்டால் நான் வேறு ஒருத்தியோடு காதல் புரியத் தொடங்கிவிடுவேனாக்கும்!' இப்படியாக அவன் சுமித்திராவின் கவலையைப் போக்கிவிட்டான்.

ஒரு நாள் மாலை புரேஜ் வழியாக அவன் கார் 'பேக் பே'க்கு அருகில் இருளில் போய் நின்றது. அசலாவும் அதற்குத் தடை சொல்லவில்லை. அன்று அவள் இடது புறத்தில் கதவோடு ஒட்டி

உட்காராமல் ஆசனத்தின் நடுவில் அமர்ந்திருந்தாள். மோகன் ஜாமின் கரங்கள் சீட்டில் அசலாவைச் சுற்றியிருந்தன. அசலா ஒரு கையினால் நியூட்ரெலில் இருந்த கியரை, முதல் இரண்டாவது கியருக்கு மாற்றிக்கொண்டிருந்தாள். அவள் வண்டி ஓட்ட முயற்சி செய்வதுபோலிருந்தது!

மோகன் அசலாவின் கைகளைப் பற்றிக்கொண்டான். தடுப்பது ஒருபுறம் இருக்க, அவளே மோகனின் கையை அமுக்கினாள். இருவரும் சில கணங்களுக்கு மௌனமாயினர். மௌனத்தைக் கலைக்க மோகனே பேசும்படியாயிற்று.

''சத்கரி எப்பொழுது வரப்போகிறார்?''

''இரண்டொரு நாளில் வந்து விடுவார்!''

''கான்பிரன்ஸ் நீண்டுவிட்டதோ?''

''கடவுளுக்குத்தான் வெளிச்சம்! இந்த ஆண்பிள்ளைகளைப் பற்றி யாருக்கு என்ன தெரியும்? எந்தக் காமக்கிழத்தியுடனாவது களியாட்டம் ஆடிக்கொண்டிருக்கலாம் அல்லவா?'' என்றாள் அசலா.

''என்ன பேச்சுப் பேசுகிறாய்?'' மோகன் அசலாவின் கையை உதறிவிட்டுக் கூறினான்: ''அவர்தான் உனக்குப் பகவான் ராமபிரான் ஆயிற்றே!''

''ராமபிரானாயிருந்தால் சீதையையும் கூட அழைத்துப் போயிருக்கமாட்டாரா?''

''சீதை காட்டுக்குப் போகலாம்; கான்பிரன்ஸுக்குப் போக முடியுமா?'' என்று கேட்டுச் சிரித்தான் மோகன். அப்புறம் அசலாவின் இடுப்பில் கைபோட்டு மோகன் அவளைத் தன் பக்கமாக இழுத்துக்கொண்டான். அசலா சிறிது தடுத்துப் பார்த்தாள். ஆனால் அடுத்த கணமே தன்னைத் தளர்த்திக்கொண்டு விட்டாள். பொதுவாகவே அவளுக்கு அப்போது ஒரு பிடிப்புத் தேவைப்பட்டது. ஏனென்றால் வண்டி பேக் பேயில் வந்து இருட்டில் நின்றபோது அவள் உள்ளுக்குள் நடுங்கினாள். அவள் நரம்புகளுக்கு ஒரு பற்றுக்கோடு தேவைப்பட்டது. அவள் கண்களை மூடிக்கொண்டு தனது தலையை மோகனின் மார்பில் சாய்த்துவிட்டாள்.

மோகன் அசலாவிடம் காதல் புரியத் தொடங்கும் நேரம்: ஓர் ஆள் வண்டியின் அருகில் வந்து குரல் கொடுத்தான்:

''இளநீர் வேண்டுமா?''

''வேண்டாம்!'' மோகன் அசலாவிடமிருந்து விலகிய வண்ணம் கூறினான். ஆனால் இளநீர் விற்பவன் அங்கேயே அப்படியே நிற்பதைக் காண அவனுக்கு ஆத்திரமாக வந்தது. ''சொன்னேனில்லையா, வேண்டாம் என்று!'' என்றவன், ''போகிறாயா இல்லையா?'' என்று கேட்டவண்ணம் அவனை அடிக்கப் போய் விட்டான்.

அசலா அவனைப் பின்னாலிருந்து பிடித்துக்கொண்டாள். ''என்ன காரியம் செய்கிறீர்கள்?'' என்றவள் பதற்றத்தோடு தன் ஆடையைச் சரிசெய்தவாறே கேட்டாள்: ''அவன் கையில் கத்தி இருப்பதைப் பார்க்கவில்லையா?''

''இருக்கட்டுமே!'' மோகன் அலட்சியமாகப் பதில் சொன்னான்.

இளநீர்க்காரன் மலையாளத்தில் ஏதோ முணுமுணுத்துவிட்டு அங்கிருந்து போய்விட்டான். சிறிது தொலைவில் கருங்கல்லிலான கட்டைச் சுவர்மீது அமர்ந்திருந்த ஒருவன் குரல் கொடுத்தான்: ''அநுபவி, ராசா, அநுபவி!''

மோகன் சிறிது விலகி உட்கார்ந்தான். அப்புறம் அசலாவைப் பார்த்து, ''வீட்டுக்குப் போவோம்!'' என்றான்.

''யார் வீட்டுக்கு?''

''என் . . . உன் . . . வீட்டுக்கு . . .ரோஸி அங்கு இருக்கமாட்டாளே!''

''இருக்கமாட்டாள். அவள் படம் பார்க்கப் போயிருக்கிறாள், தன் ஜானியுடன் . . .''

''அப்போ நல்லதாயிற்று!''

''ஊஹூம். வீட்டுக்குப் போய் நாம் என்ன செய்யப் போகிறோம்?''

உண்மையில் அசலாவுக்கு வீட்டில் உள்ள கண்ணாடி காபினெட்டும் அதில் வைத்திருந்த படங்களும் நினைவுக்கு வந்தன. அவள் தன் கணவனிடம் காதல் புரிவதாயிருந்தாலும், கதவைச் சாத்திவிடுவாள். அதற்குப் பிறகு கல்லில் உட்கார்ந்திருந்த ஊர் சுற்றி அங்கேயே இருக்கிறான், பார்த்துக்கொண்டிருக்கிறான் என்பதையும் மறந்து மோகன் அசலாவின் முகத்தில் முத்தமிட்டான். அவளிடம் முன்போல ஆத்ம சமர்ப்பண உணர்வு இல்லை. ''ஊஹூம், வேண்டாம்!'' என்று அவள் மெதுவாகச் சொன்னாள். அதில் எதிர்ப்பு உணர்ச்சி இருந்தாற் போலும் இருந்தது; இல்லை போலும் இருந்தது. மோகன் கை

நீட்டி அசலாவின் சிறிய பெரிய இரகசியங்களை அறிய முயன்ற போது, அவள் நிச்சயமாகத் துள்ளிக் குதித்து விலகிவிட்டாள். மோகனுக்கு அது பிடிக்கவில்லை. அவன் சிறிதுநேரம் பொறுத்திருந்து முழுமூச்சுடன் மீண்டும் படையெடுத்தான். ஆனால் அதற்குள் அசலா நல்ல வலுவான கோட்டைக்குள் தன்னைச் சிறைப்படுத்திக்கொண்டுவிட்டாள். அவள் கெஞ்சும் பாவனையில், ''வேண்டாம், இதுவே அதிகம்!'' என்றாள்.

''அசட்டுப் பிடிவாதம் வேண்டாம், அசலா!'' மோகன் சிறிது கோபம் காட்டிக் கூறினான்: ''அப்புறம் நீயும் தேவியைப்போல வருத்தப்படுவாய்!''

''இல்லை, மோகன்!'' அசலா அன்போடு ஊடல் காட்டிக் கூறினாள்: ''அன்பு என்றால் அதற்கு இதுதான் பொருளா?''

''என்ன பொருள் உண்டோ, அதை எனக்குப் புரியும்படி சொல்லேன்!''

''ஏன்? அண்ணன் தங்கை அன்பு இல்லையா?''

''இல்லாமல் என்ன?'' மோகன் தனது ஆண்பிள்ளைக் கோபத்தை அடக்கிக்கொண்டு சொன்னான். அவனுக்குப் பரேலில் வாழும் தன் தங்கை ராதாவின் நினைவு வந்தது.

''இந்த உறவை நாம் என்றென்றைக்கும் வைத்துக்கொள்ள முடியாது. இரண்டொரு நாட்களில் அவர் வந்துவிடுவார். ஒரு மாதம், ஒன்றரை மாதத்தில் சுமித்திராவும் வந்துவிடுவாள்!'' என்றாள் அசலா.

''உம்.''

''அண்ணன் தங்கை உறவு இருக்கிறதே, அதில் எந்தவிதமான அச்சமும் இல்லை, ஆபத்தும் இல்லை!''

''சரிதான்!'' மோகன் தன் நெற்றியில் முத்திட்டிருந்த வேர்வைத் துளிகளைத் துடைத்துக்கொண்டு, ''இன்று முதல் நான் உன்னைச் சகோதரியாக ஏற்பேன்!'' என்றான். அடுத்த நிமிஷம் வண்டி வாயு வேகத்தில் பறந்தது.

அசலா நடுங்கிப் போய்விட்டாள். அவள் தன் இரு கைகளாலும் மோகனின் இடது புஜத்தைப் பிடித்துக்கொண்டாள். தனது அழகிய கூந்தல் கிரீடத்தை அவன் தலையில் சாத்தி, ''உங்களுக்குக் கோபமா?'' என்றாள்.

''கோபமா? எதற்கு? அண்ணன் தங்கையை எங்கேயாவது கோபித்துக்கொள்வது உண்டா?'' என்று கேட்டான்.

அசலா சட்டென்று தன் தலையை மோகனின் தோளிலிருந்து எடுத்துக்கொண்டாள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் வண்டி 'ஸத்ய ஸதன்' வாசலில் போய் நின்றது. இன்று வண்டியின் கதவைத் திறக்க மோகன் சிறிதும் முயற்சி எடுக்கவில்லை. அசலா மனமின்றி இறங்கினாள். எதிரே இருந்த டெய்லர் மாஸ்டர் கூர்ந்து அவர்களைக் கவனித்தான். அக்கம்பக்கத்திலிருந்த வேறு சிலரும் பார்த்தார்கள். ஆனால், அசலாவுக்கு எவ்வித அச்சமோ நாணமோ தோன்றவில்லை. இன்று அவள் மோகனுக்கு நன்றிகூடச் சொல்லவில்லை. அவள் எல்லையற்ற கவலையில் மூழ்கியிருந்தாள். அவளை அறியாமலே அவள் உள்ளத்தின் அடித்தளத்தில் குழப்பமும் கவலையும் உதித்துவிட்டன. ஒன்றா, இரண்டா அவளுக்குத் தோன்றிய அச்சம்? ஆயிரம் ஆயிரம் அச்சங்கள் அவளை ஆட்டிப் படைக்கலாயின. அவற்றைப் பார்த்துத் தனித்து இனம் காண்பது இலேசான காரியமாகப் படவில்லை.

''இனி வருவீர்களா?'' என்று கேட்டாள்.

''வருவேன், கட்டாயம் வருவேன்! வராமல் என்ன?'' என்று கூறி மோகன் கலகலவென்று சிரித்தான். குழந்தையை அச்சுறுத்தலாம். ஆனால் அதுவும் ஒரளவுக்குத்தானே முடியும்? அதற்குப் பின் மோகன் 'டாட்டா' சொல்லிவிட்டுப் புறப்பட்டுவிட்டான். வீட்டுக்குத் திரும்பிய அசலாவின் தலையிலிருந்து எல்லாச் சுமைகளும் இறங்கிக் கனம் குறைந்து இலேசாகின!

அடுத்த நாளே சத்கரி ஊர் திரும்பிவிட்டார்.

அசலா அவரை அழைத்துவர ஸ்டேஷனுக்குப் போனவள் வியப்பில் ஆழ்ந்தாள். அவள் கணவர் மீசை வளர்த்திருந்தார்.

''இதென்ன?'' என்றாள் அசலா.

''சும்மாத்தான்!'' அவள் கணவர் சிரித்துக் கூறினார். காதல் பார்வையைக் கனிவுடன் வீசி, ''ஆசையாயிருந்தது!'' என்றார்.

பிறகு சூட்கேஸை ஒரு கூலியின் தலையில் வைத்துவிட்டு அசலாவின் அருகில் வந்தார். ''நன்றாயில்லையா?'' என்று கேட்டார்.

''இல்லை, நன்றாயில்லாமல் இல்லை. ஆனால், வேறு ஓர் ஆடவருடன் போகிறாற்போல் பிரமை தட்டுகிறது!'' அசலா புன்னகை தவழக் கூறினாள்.

ராம் சத்கரி சீண்டினான், ''நல்லதுதானே? ஒரே வாழ்க்கையில் இரண்டு ஆண் பிள்ளைகளைப் பார்க்கிற திருப்தி ஏற்படுமே!'' என்று.

'அசலா சிரிப்பாள், இந்தக் கேலித் துணுக்கை நன்கு ரசிப்பாள். பட்டென்று முதுகில் கையால் அடித்து, ''வெட்கமாயில்லை?'' என்று கேட்பாள்' என்று அவன் எண்ணினான். ஆனால் அசலா ஒன்றுமே சொல்லவில்லை. மாறாகக் கவலையின் நிழல் அவள் முகத்தில் இழையோடி ஒடியது. அவள் சத்கரியின் முகத்தில் எதையோ தேடுவதுபோல உன்னிப்பாய்ப் பார்த்தாள். மீசை வைத்திருந்ததனால் அவன் முன்னைக் காட்டிலும் அசடாகத் தோன்றினான். அப்படியொன்றும் தாறுமாறான எண்ணங்கள் ஓடவில்லை என்ற நம்பிக்கை அசலாவுக்கு ஏற்பட்டது. எனவே, அவள் காதல் மொழிகளில் இறங்கினாள். ஆனால் ராம் சத்கரியோ கான்பிரன்ஸில் நடந்த சண்டையைப்பற்றிப் பேசப் பிடித்துக் கொண்டுவிட்டான்.

வீடு போனபின் அசலா தன் கணவனின் பொருள்களைக்கூடச் சரிவர ஒழுங்குபடுத்தி வைக்கவிடவில்லை. ஒரு குழந்தையைப் போல முரண்டு பிடித்தாள். அவன் கையைப்பற்றிக் கரகர வென்று இழுத்துக்கொண்டு படுக்கை அறைக்குப் போனாள். அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். ராம் சத்கரிக்கு எதுவும் விளங்கவில்லை. பிரமித்து நின்று, ''பதினொரு நாட்கள்தானே ஆயிற்று?'' என்றான்.

ஆனால், அசலா அழுது புலம்பித் தீர்த்துவிட்டாள். அவளை அணைத்துச் சமாதானப்படுத்தியவாறு, ''நீ இப்படிப் பயந்து போய் விடுவாய் என்று எனக்கு என்ன தெரியும்?'' என்றான்.

''நான் இதெல்லாம் பயத்தினலா செய்துகொண்டிருக் கிறேன்?'' என்று கேட்டவாறு அசலா ஒரேயடியாக அவனை விட்டு அகன்று நின்றாள்.

''இல்லை அன்பினால்!'' என்று கூறி ராம் சத்கரி சிரித்தான். அசலாவை நெருங்கி அவளைத் தன் அரவணைப்பில் அணைத்து, ''எனக்குத் தெரியும், அசலா! நானும் உன்னை உன் அளவே நேசிக்கிறேன்'' என்றான்.

''அவ்வளவுதான்?''

''இல்லை, அதைக் காட்டிலும் அதிகமாக!''

''சுத்தப் பொய், என்னைக் காதலித்தால் இப்படி மீசை வைத் துக்கொள்வீர்களா?''

ராம் சத்கரி மீசை வைத்துக்கொண்டதே, யாரோ ஒரு பெண்ணைக் கவருவதற்காகத்தான் என்று அசலா எண்ணிவிட் டாள். இதை ராம் சத்கரி புரிந்துகொண்டான். அவன் அசலா

வின் உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுப்பதைக் காட்டிலும், தான் புரிந்துகொண்டு விட்டதில் மகிழ்ந்து போனான். காதற் பெருக் கோடு அவன் முகத்தை முன்னே நீட்டினான். அசலாவோ முகத்தைப் பின்புறமாகத் திருப்பிக்கொண்டாள். மறுநாளே இந்த மீசை கீசை எல்லாவற்றையும் எடுத்து விடுவதாக உறுதி கூறினான் சத்கரி. அவன் கூறிய வேகம், தன் மீசையை மட்டும் அல்ல; எங்கு மீசையைக் கண்டாலும் எடுத்துவிட்டே மறு காரியம் பார்ப்பான்போல் இருந்தது!

இரண்டு நாட்களுக்குப் பின் சொன்னால் சொன்னபடி மோகன் ஜாம் வந்தான். முதலில் அசலா நடுங்கிப் போனாள். அப்புறம் தன்னைச் சமாளித்துக்கொண்டு, தன் கணவன் ராம் சத்கரியிடம் விரைந்தாள். "நான் உங்களுக்குச் சொல்லவில்லையே! நான் எனக்கு ஓர் அண்ணனைத் தேடிக்கொண் டிருக்கிறேன்!" என்றாள்.

"அண்ணனைத் தேடிக்கொண்டாயா?" ராம் சத்கரி வியப்புத் தெரிவித்தான்.

"ஆமாம்!" என்ற அசலா, "அண்ணன்—தங்கை என்று உறவு கிடையாதா?" என்று கேட்டாள்.

இவ்வாறு கேட்டவாறே ராம் சத்கரியைப் பிடித்து இழுத்துக் கொண்டு டிராயிங் ரூமுக்கு வந்தாள், மோகன் ஜாமை அறி முகம் செய்து வைப்பதற்காக. இரண்டு ஆண் பிள்ளைகளும் ஒருவரை யொருவர் புரிந்துகொள்ளாமலே ஒப்புக்குச் சந்தித் தனர். ராம் சத்கரி, மோகன் ஜாமைச் சரியாக மரியாதை கொடுத்து உட்கார வைக்கவில்லை. தரவேண்டிய வரவேற்பு தர வில்லை என்றெல்லாம் சொல்லிவிடமுடியாது. அவன் செய்ய வேண்டிய உபசாரங்கள் அனைத்தும் செய்தான். ஆனால், மனிதன் எதுவும் புரியாமலே பழக்கத்தில் சில காரியங்களைச் செய்து விடுவது உண்டல்லவா? அப்படித்தான் இயங்கிச் செயல் புரிந்தான் அவன். அவனுடைய புன்னகையும் போலி! பெரு நகையும் போலி.

அசலாவோ மகிழ்ச்சியில் மாய்ந்தே போனாள். ஒருமுறை அண்ணன் என்று சொன்னபின், எல்லா வில்லங்கங்களிலிருந்தும் விடுதலை கிடைத்துவிட்டதாக இறுமாந்து போனாள். அவள் தேநீரும் கதம்பமும் மட்டும் கொண்டுவந்து வைக்கவில்லை; ரோஸியைக் கடைத்தெருவுக்கு விரட்டினாள், வேறு ஏதாவது இனிப்புப் பண்டம் வாங்கிவருவதற்காக. ராம் சத்கரி இதை

யெல்லாம் பொறுமையோடு அநுபவித்துக்கொண்டிருந்தான். ஆனால், ஒரு விஷயந்தான் அவனுக்கு விளங்கவில்லை. மோகன் ஜாம் வந்த பிறகு அசலா அவனையே அல்லவா மறந்துவிட்டிருந்தாள். அவன் யார்? அவள் கணவன்; அவள் அண்ணனுக்கு அத்திம்பேர்! அவனையும் மறந்து அண்ணனுக்கு விழுந்து விழுந்து உபசாரம் செய்வதென்றால் . . .? இப்படிச் செய்யும்பொழுது அசலா எப்படித் தன் வசம் இழந்துபோகிறாள்? ராம் சத்கரிக்கு இது விளங்காமல் இல்லை.

ஏதாவது எடுத்து வருவதற்காக அசலா உள்ளே சென்றால், இரண்டு பேரும் மேலெழுந்தவாரியாக ஏதாவது உபசார மொழிகள் இரண்டொன்று பேசிக் கடமை தீர்க்க முயன்றனர். ராம் சத்கரி கான்பிரன்ஸ் புகழ் பாடுவதில் ஈடுபட்டால், மோகன் ஜாம் 'ஷிப்மென்'டைப்பற்றிப் பேசி மகிழ்வான். இப்போதுதான் ஜப்பானிலிருந்து வந்ததாகப் பெருமை அடித்துக் கொள்ளுவான். இருந்தாலும் இருவருடைய பேச்சும் இடையிடையே கத்தரித்துப் போகும்.

அசலா உள்ளிருந்து வந்தபோது புடைவை மாற்றிக்கொண்டு வந்திருந்தாள். முன் நெற்றி மயிரைத் தூக்கி வாரி மறுபடியும் 'கிரௌனை'ச் சரி செய்திருந்தாள். அவளைத் தொடர்ந்து வந்த வாசனை அவளுக்கு முன்னால் வந்து குதித்தது.

''அண்ணி வரவில்லையா, அண்ணா?'' என்று கேட்டவள், ராம் சத்கரியின் பக்கம் திரும்பி, ''அவள் காஷ்மீர் போயிருக்கிறாள். நான் பார்த்ததில்லை. ஆனால், ரொம்ப நல்லவள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்'' என்றாள்.

''நல்லவளாகத்தான் இருப்பாள்!'' ராம் சத்கரி ஆமோதித்தான். பிறகு வியப்புக் கொப்புளிக்கும் பார்வையில், மோகன் ஜாமைப் பார்த்தான்.

எல்லாம் தின்ற பிறகு, ஒருவருக்கொருவர் கைகுலுக்கி விடை பெற்றுக்கொண்ட பின் மோகன் ஜாம் வெளியே வந்தான். ''இதோ வந்துவிட்டேன்!'' என்று கூறி அசலா அவனை வாசற்படிவரை வழி அனுப்ப வந்தாள். அப்புறம் என்ன நினைத்தாளோ, வாசற்படியையும் தாண்டிப் படியிறங்கிக் கீழேயும் போனாள். அவள் கணவனே விருந்தாளிக்கு விடை கொடுக்க, மரியாதைக்குத் தன் இருக்கையிலிருந்து எழுந்து நின்றதோடு சரி. பார்க்கப் போனால், அத்திம்பேர்—மைத்துனன் உறவில் மைத்துனனின் படி சிறியதுதானே?

படியிறங்கிக் கீழே தெருவுக்கு வருவதற்குள்ளாக அசலாவிடம் காதல் புரிய விழைந்தது மோகன் ஜாமின் மனம். அசலா தான் எவ்வளவு அழகாக இருந்தாள்? ஆனால், அவன் அவள் கையை மட்டுந்தான் பற்ற முடிந்தது. அன்போடு ஓர் அழுத்து அழுத்தி, ''அசலா! எப்போதாவது நீயும் என் வீட்டுக்கு வாயேன்!'' என்றான்.

''வருகிறேன்!'' என்றாள் அசலா: ''அவரையும் அழைத்து வருகிறேன்!''

அதற்குப் பின் அசலா வண்டிவரைக்கும் வந்தாள். மோகன் ஜாம் விடைபெறும்பொழுது, மோகன்—அசலா இருவருடைய விழிகளுமே நீர் சோரக் குளம் கட்டியிருந்தன.

அசலா அடுத்த கணம் அதே வேகத்தில் மேலே வந்தாள். ராம் சத்கரிக்கு யோசனைக்கே இடம் கொடாமல் அசலா கூறினாள்: ''பார்த்தீர்களா என் அண்ணனை! மிகமிக நல்லவர்; லட்சத்தில் ஒருவர்!''

ராம் சத்கரி தலையசைத்தான். இருந்தாலும் புருவம் நெறிந்திருந்தது, கோபத்துக்கு அடையாளமாக. திடீரென்று இப்படி ஓர் அண்ணன் எங்கிருந்து வந்து குதித்தான்? இவன் தேவை என்ன? ஒன்றுமே அவனுக்குப் புரியவில்லை. அதனால்தான் அவன் கேட்டான்: ''உண்மையில் உனக்கும் அவனுக்கும் அண்ணன் தங்கை உறவுதான் என்றால், 'நீங்கள், தாங்கள்' என்று மரியாதை கொடுத்துப் பேசுவானேன்? 'நீ வா, போ' என்று உரிமையோடு அழைப்பதுதானே?''

''என்ன பேச்சுப் பேசுகிறீர்கள், நீங்கள்? அண்ணனுக்கு மரியாதை கொடுப்பது தவறா?''

அப்புறம் அசலா மோகனின் புகழ் பாடத் தொடங்கிவிட்டாள். அவள் தேவியுடன் உலாவச் சென்றபோது சில கீழ்த்தர மக்கள் தங்களைத் தொடர்ந்ததையும், மோகன் ஜாமின் உதவியினாலேயே தப்ப முடிந்ததையும் கூறினாள். மோகன் ஜாம் மட்டும் அந்த நேரம் அங்கு இல்லாமல் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்குமோ என்ற ஐயப்பாட்டையும் எழுப்பினாள். அவனுடன் உள்ள உறவையும் தொடர்பையும் சப்பைக்கட்டுக் கட்டுவதற்காக அசலா இன்னும் எத்தனை எத்தனையோ பொய்களைச் சொல்லும்படி ஆயிற்று. தேவையில்லாத செயல். ஏனென்றால், உறவை உண்டுபண்ணியது ஆண்டவன் அல்ல; மனிதனே.

அதற்குப் பிறகு மோகன் ஜாம் இரண்டொரு தடவை வந்தான். அசலா அதேபோல வேறு வழியின்றித் தன்னிலேயே லயித்து ஆடிப் பாடி மகிழ்ந்தாள். மோகன் ஜாம் போன பிறகு ராம் சத்கரி வெகுநேரம் வரை பேசாமல் உட்கார்ந்திருந்தான். அவன் மௌனம் அவனுக்கே பொறுக்கவில்லை. எதிரே பிறையில் டிரான்ஸிஸ்டர் இருந்தது. அதை எடுத்து முள்ளை நகர்த்திய வண்ணம், ராம் சத்கரி அசலாவைக் கேட்டான்:

''டிரான்ஸிஸ்டர் என்று எதைச் சொல்லுகிறார்கள் தெரியுமா?''

''இதோ, எதிர்த்தாற்போல் இருப்பதைத்தான்!''

''இல்லை!'' ராம் சத்கரி சிறிது சினந்து சிறிது முறுவலித்துக் கூறினான்: ''ஸிஸ்டர் என்று சகோதரியைக் கூறுகிறோம். டிரான்ஸிஸ்டர் என்றால் உடன்பிறவாச் சகோதரி என்று பொருள். அப்படித்தான் வாடகைக்கு எடுத்திருக்கிறாய் இந்தச் சகோதரனை. அதனால்தான் இவ்வளவு கூச்சல் போடு கிறாய்!''

அசலாவுக்குப் பெருங்கோபம் வந்தது. ''என்ன பொருளில் பேசுகிறீர்கள்? சகோதர சகோதரி உறவுமுறையையே நீங்கள் சந்தேகிக்கிறீர்களா? அந்த உறவைக் கேலி செய்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

''நான் கூற வந்தது என்னவென்றால் . . .

''எனக்கு எல்லாம் தெரியும்!'' அசலா மூச்சிரைக்கக் கூறினாள்: ''நீங்கள் ஆண்பிள்ளைகள் அனைவருமே கயவர்கள். உங்கள் பார்வையில் அழுக்குத்தான் நிரம்பியிருக்கிறது. உலகத்தில் ஆணும்—பெண்ணும், கணவனும் மனைவியுமாகத்தான் சந்திக்க முடியுமா? உலகத்தில் . . . ''

அவளுக்குத் தொண்டையை அடைத்தது. அழுதவண்ணம் காபினெட்டுக்கெதிரே, பகவானின் படத்துக்கு அருகில் சென்று முழங்கால் மண்டியிட்டுக்கொண்டு உட்கார்ந்துவிட்டாள். ''கடவுளே! நான் ஏதாவது தீச்செயல் செய்திருந்தால், என் உடலில் புழு புழுத்து அழுகட்டும்; குஷ்டம் வந்து குறையட்டும்!'' என்று முறையிட்டாள்.

ராம் சத்கரிக்கு வருத்தமாகிவிட்டது. அதுவும் ஆண்டவனை அறைகூவி அல்லவா முறையிடுகிறாள்! அவன் பின்னால் சென்று அசலாவின் இரு தோள்களைப்பற்றித் தூக்கி நிறுத்த முயன்றான்.

ஆனால், அசலா உதறிய வேகத்தில் சுவரில் போய் மோதிக் கொண்டாள். தலையில் லேசாகச் சிராய்த்துவிட்டது. அசலா நல்ல உடல் உறுதி உள்ளவள். ராம் சத்கரி போன்ற ஒற்றை நாடியினால் அவளைச் சமாளிப்பது சிரமமாகிவிட்டது. அப்புறம் அவள் எழுந்து சென்று படுக்கையில் போய் விழுந்தாள்; உரக்க விசித்து அழலானாள்.

ராம் சத்கரி பச்சாத்தாபப்பட்டான். பச்சாத்தாபப்படும் ஆண்பிள்ளையின் முகம் போகும் போக்கு உங்களுக்குத் தெரியும் அல்லவா? அவனது அன்றைப் பொழுது முழுதும் கோபமுற்ற மனைவியைச் சமாதானப்படுத்துவதிலேயே கழிந்தது. என்றைக் கும் இல்லாத திருநாளாக அன்று மாலை 'முதோஸ்ரீ சபா'வில் விலாயத் கானின் சிதார் கேட்கப் போவதாக இருந்தான் அவன். அசலாவுக்குங்கூட டிக்கெட் வாங்கியிருந்தான். அதை அவன், அழகோடு கோபமும் கூடி எழில் கூட்டிய மனைவிக்கெதிரே கிழித்து எறிந்தான். அப்புறம் படுக்கையில் கிடந்த வீட்டுச் சிதாரின் இடுப்பில் கைவைத்து அதன் கலைந்த தந்திகளைச் சரி செய்யலானான். அவன் அதில் 'உஸ்தாத்'—நிபுணன் இல்லை யாதலால், இலேசில் ஒரு தந்தியைக்கூடச் சரி செய்து ஸ்வரம் கூட்ட முடியவில்லை. கடைசியில் தோல்வியைத் தழுவியவனாக, "நான் உன்மீது சந்தேகப்பட்டால் அசலா, பசுவைப் புசித்த பாவம் என்னைச் சாரும். நான் சொல்ல வந்தது என்னவென்றால், உனக்குத்தான் சொந்தச் சகோதரர்கள் இருக்கிறார்களே!" என்று கூறுவதோடு நிறுத்திக்கொண்டான்.

"எங்கே இருக்கிறார்கள்?" அசலா கேட்டாள்: "ஒருவன் கல்கத்தாவில் உட்கார்ந்திருக்கிறான். இன்னொருவன் விஜய வாடாவில் இருக்கிறான்!"

"கால்மாட்டில், தலைமாட்டில் உட்கார்ந்திருக்கணும் என்கிறாயா?"

"ஆமாம், அப்படித்தான் சொல்கிறேன்!" தலையை உறுதி யான முடிவோடு ஆட்டிக் கூறினாள் அசலா. "உங்களைத் தட்டிக் கேட்க ஓர் ஆள் . . . ?"

ராம் சத்கரிக்கு அப்பொழுதும் ஒன்றும் புரியவில்லை. இருந் தாலும் குரல் செத்துக் கூறினான்: "அப்புறம் உன் இஷ்டம்! நான் தேவை இல்லையோ என்று நினைக்கிறேன்" என்று முடித்தான்.

"நீங்கள் மீசை வைத்துக்கொண்டது மட்டும் தேவை யாக்கும்!"

ஒரு மாதம், ஒன்றரை மாதத்துக்கெல்லாம் சுமித்திரா வந்து விட்டாள். சுமித்திரா முன்னுக்கு இப்பொழுது உண்மையி லேயே நன்றாகத் தேறித் தோன்றினாள். குழந்தையின் உடல் நிலையும் முன்னைக் காட்டிலும் நன்றாக இருந்தது. அவன் காஷ்மீரி மொழியில் சில சொற்கள் கற்று வந்திருந்தான். சரி—தப்புப் பார்க்காமல் இஷ்டத்துக்குப் பேசி மகிழ்ந்தான். சுமித்திரா அவனை அடிக்கடி பிடித்து நிறுத்தி, ''டாடிக்கு இதைச் சொல்லு, டாடிக்கு அதைச் சொல்லு!'' என்று கூறுவாள். அந்தப் பொல்லாத பயலும் கற்று வந்ததைக் கடகடவென்று தன் மழலை மொழியில் ஒப்பித்து மகிழ்வான். அப்புறந்தான் அது காஷ்மீரி மொழியின் அசிங்கமான வசவுகள் என்று தெரிய வந்தது.

மோகன் ஜாம் அசலாவைப் போல் அசட்டுத்தனம் செய்ய வில்லை. சுமித்திராவுக்கு அவளை அறிமுகம் செய்து வைப்பதற்கு வெகு முன்பாகவே, தான் ஒரு தங்கைக்குத் தமையனான விவரத்தைச் சொன்னான்.

சுமித்திரா பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தாள். அவளுக்குத் தன் மோகனின்மீது அவ்வளவு நம்பிக்கை! அதைக் காட்டிலும் இப்படியும் கூறலாம். சில பெண்கள் ஆண்களின் அச்சமின்மையை யும் அலட்சியத்தையும் காமுறுவார்கள். வேறு சிலர் ஆண்களின் காதல் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத அளவுக்கு உடல் நலம் கெட்டிருப்பார்கள். எந்த நிலையிலும் சாவைக் காட்டிலும் வாழ்வையே பெரிதாக எண்ணி, 'ஆண்கள் எக்கேடு கெட்டுப் போகட்டும், நம்மைத் துன்புறுத்தாமல் இருந்தால் சரி!' என்றோ, 'ஆண்டவனுக்குப் பதில் சொல்லவேண்டியவர்கள் அவர்கள்; நாம் அல்ல' என்றோ சொல்லி மனச் சுமையை இறக்கிக்கொண்டு அதில் மகிழ்ச்சி காண முயல்வார்கள்.

ஆனால், இரவு நேரங்களில் தங்களுக்கே கேட்காத குரலில் அழுது புலம்பித் தீர்ப்பார்கள். இப்படிப்பட்டவர்களில் அவள் எவ்வகையோ?

''தேவை என்ன? உங்களுக்குத்தான் உடன் பிறந்த சகோதரி இருக்கிறாளே! உங்கள் அன்பை எல்லாம் அவளுக்குக் கொட்டிக் கொடுப்பதுதானே? அப்படி என்ன அன்பு, இன்னொருத்திமீது பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்துப் பாய?'' என்று கேட்ப தோடு விட்டுவிட்டாள் சுமித்திரா.

''அப்படித்தான்!'' மோகன் குரலில் கடுமையைத் தேக்கி விடை அளித்தான்.

சுமித்திரா அடங்கிவிட்டாள். உடல்நலம் கெடப்போவதோ, கெடப்போகிறது! இப்போதே அதற்கு இடம் அளிப்பானேன்? அவள் அந்தப் பேச்சை அப்படியே விட்டு, ''ராதா எப்படி இருக்கிறாள்?'' என்று கேட்டாள்.

''நான் அவளைப் பார்க்கவில்லை!''

''அட, ராமா! நான் போனதிலிருந்து உங்கள் தங்கையைக் கூடப் பார்க்கவில்லையா?''

''நேரமே கிடைக்கவில்லை!''

''அவர்களுமே வரவில்லையா? ராதாவும் கைலாசபதியும்!''

''வந்தார்களாம், இரண்டு மூன்று தடவை. நான்தான் வீட்டில் இல்லை!. . .''

'எப்படிப் பார்ப்பீர்களாம்? அவள் கூடப்பிறந்த சகோதரி, அந்த உறவு முறை கொண்டாடி அலைபவள் அல்லவே!'

சுமித்திரா சொல்லிக் காட்டத்தான் நினைத்தாள். ஆனால் ஏனோ அடக்கிக் கொண்டாள். அவள் உடல் நலம் இன்னும் முழுசாகச் சீரடையவில்லையே!

''. . .இருபத்து நான்காம் தேதி ரக்ஷாபந்தன் பண்டிகையல்லவா? அன்று போய்ப் பார்த்து வருகிறேன்!'' என்று மோகன் ஜாமே முடித்துவிட்டான்.

ரக்ஷாபந்தனத் தன்று மோகன் ஜாம் தன் தங்கை ராதாவின் வீட்டுக்குப் போனான். கூடச் சுமித்திராவும் இருந்தாள். பல ஆண்டுகளுக்குப் பின் சந்திப்பவள் போல ராதா பாய்ந்து வந்து வரவேற்றாள். அவளை ஆரத் தழுவி அன்பு செலுத்தியபோது மோகன் ஜாமுக்கு அவள் பெண், தான் ஆண் என்கிற உணர்வே சிறிதும் எழவில்லை. அவன் ராதாவின் கன்னத்தை முத்தமிட்டான்; தலையை அன்போடு தடவிக் கொடுத்தான். அவள் கண்கள் குளம் கட்டி முறையிடும் கண்ணீரைத் துடைத்தான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் ராதா வெகு உற்சாகத்துடன் எழுந்தாள். வலை பீரோவிலிருந்து தின்பண்டங்களைத் தட்டில் எடுத்து வந்தாள். பிறகு மனைப் பலகையைப் போட்டுத் தன் சகோதரனை உட்கார வைத்தாள். அவன் முகத்தைக் கிழக்குப் புறமாகத் திருப்பினாள். மோகனின் மகன் ஜாஜுவும் இன்னொரு பலகையை இழுத்துப் போட்டுக்கொண்டு அருகில் அமர்ந்தான், அஷ்டமிச் சந்திரனைப்போல.

''அடே!'' ராதா ஜாஜுவைப் பார்த்து, ''நீதான் முதலில் ராக்கீ (ரட்சை) கட்டிக்கொள்ளுவாயா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்!'' ஜாஜு பெரிதாகத் தலையசைத்தான்.

''முதலில் நான் அண்ணனுக்குத்தான் கட்டுவேன்!''

''ஊஹூம், முதலில் எனக்குக் கட்டு!''

''ஆண்டவன் கட்டளை இப்படித்தான்!'' ராதா அன்போடு கூறினாள்: ''நீ சாமியை வேண்டிக்கொள், உனக்கும் ஒரு குஞ்சுத் தங்கைப் பாப்பா பிறக்கணும் என்று! அவள் வருஷா வருஷம் உனக்கு ரட்சை கட்டுவாள்!''

இப்படி ராதா கூறியதும், ஜாஜு, மோகன், கைலாசபதி மூவருமே சுமித்திராவைப் பார்த்தார்கள். அவள் வெட்கிப் புடைவைத் தலைப்பில் முகத்தை மறைத்துக் கொண்டாள்.

ராதா, அண்ணன் மோகனின் கையில் ஒரு சாதாரண விலைக்கு வாங்கிய 'ராக்கீ'யைக் கட்டினாள். வாயில் இனிப்பைப் போட்டாள். மோகன் சட்டைப் பையிலிருந்து பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து ராதாவின் கையில் திணித்தான். ராதா அதை வாங்கிக் கண்களில் ஒற்றிக்கொண்டு வேண்டினாள்:

''இந்த நன்னாள் உடன் பிறந்த ஒவ்வொருத்திக்கும் கிடைக்கட்டும், பகவானே!''

அவள் கண்களில் அன்பும் நம்பிக்கையும் ஈரம் கட்டிப் பளிச்சிட்டன.

சுமித்திராவையும் குழந்தையையும் வீட்டில் விட்டு மோகன் ஜாம் அசலாவின் வீட்டுக்குப் போகப் புறப்பட்டான். அவன் சுமித்திராவை அன்று வேண்டாம், இன்னொரு நாள் அழைத்துப் போகலாம் என்று எண்ணினான். அதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. இந்தப் பெண்கள் பல விஷயங்களில், 'இப்படிச் செய், அப்படிச் செய்யாதே' என்றெல்லாம் ஏறுக்கு மாறாக ஏதாவது சொல்லித் தடுத்து விடுவார்கள் என்று எண்ணியதே காரணம். பெண்களின் பல காரியங்கள் ஆண்களின் அறிவுக்கு எட்டுவதில்லை. அதே போல ஆண்களின் பல செயல்கள் பெண்களுக்கும் புரிவதில்லை!

மோகன் கடைத் தெருவுக்குச் சென்று ஒரு துணிக்கடையில் நுழைந்தான். எத்தனையோ புடைவைகளை எடுத்துப் போட்டுப் பிரித்துப் பார்த்த பின்னர் அவனுக்கு ஒரு பனாரஸ் புடைவை பிடித்தது. அதில் சரிகை வேலைப்பாடு அற்புதமாகச் செய்யப்

பட்டிருந்தது. பேரம் பேசியதில் அதன் விலை முன்னூற்று இருபத்தைந்து என்று முடிவாயிற்று. மோகன் பணத்தைக் கொடுத்தான். அழகியதொரு கிஃப்ட் பேப்பரில் கட்டச் சொன்னான். உற்சாகத்தோடு அதை எடுத்துக்கொண்டு காஸ் வேயில் உள்ள சத்திய சதனுக்குப் புறப்பட்டான்.

அசலா தன் வீட்டில் அமர்ந்து கையில் கத்தரிக்கோலை எடுத்துக்கொண்டு ஏதோ வெட்டிக் கத்தரித்துக்கொண் டிருந்தாள். காலையில் தொடங்கிய வேலை இன்னும் முடிந்த பாடில்லை. ராம் சத்கரி ஜன்னல் அருகில் நின்றுகொண்டு சும்மாக் கடைத் தெருவைப் பார்த்துக்கொண் டிருந்தான். அதோடு கீழே டெய்லர் மாஸ்டரின் கடைக்கு வந்து போகும் வாடிக்கைக் கார்கள் மீது தன் சிகரெட் சாம்பலை உதிர்க்கும் முயற்சியில் ஈடு பட்டிருந்தான். அப்பொழுதுதான் மோகன் ஜாமின் கார் வந்து நின்றது.

பின்னால் நகர்ந்து ராம் சத்கரி குரல் கொடுத்தான்:

''அசலா!''

''என்ன?'' அசலா இனிய குரலில் கேட்டாள்.

''அவன் வந்திருக்கிறான்!''

''எவன்? அண்ணாவா?''

''அண்ணா இல்லை! மசலா!''

''மசலாவா?''

''ஆமாம், நீ அசலா. அவன் மசலா!''

இதற்குள் மோகன் வாசற்படியருகே வந்து அழைப்பு மணியை அடித்துவிட்டான். ரோஸியும் கதவைத் திறந்து விட்டாள்.

மோகன் அன்று வரமாட்டான் என்று எண்ணினான் ராம் சத்கரி. அவன் ராக்கீ கட்டிக்கொள்வதற்கு வந்து விட்டால், அப்புறம் குழம்புவதற்கு எதுவும் இல்லை. அப்புறம் எதையுமே சரியானபடி எடுத்துக்கொள்ளவேண்டியதுதான். தவறு கண்டு பிடிப்பதற்கு இடம் இல்லை. எண்ணியதற்கு மாறாக மோகன் வந்து விட்டான். அவனுக்காக அசலா காலையிலிருந்தே ஜிகினா, ஜரிகை என்று என்ன என்னவோ பொருள்கள் வாங்கி அழகான தொரு ராக்கீ தயார் செய்துகொண் டிருந்தாள். ராதா கட்டிய ரழைக்கு அணிகலனை பூ ராக்கீயை மோகன் எப்போதோ கழற்றி எறிந்துவிட்டான். இப்போது அவன் மணிக்கட்டில் ரதுவுமே இல்லை. மோகன் வந்ததும் அசலா எப்போதும்போல் பறந்து விழுந்துகொண்டு எழுந்தாள். டிராயிங் ரூமுக்கு ஓடி

வந்தாள். ஓர் அரசனை வரவேற்பது போல ராஜோபசாரம் செய்தாள்.

ராம் சத்கரி எப்போதும் போலப் புரிந்துகொண்டான்; புரிந்துகொள்ளாமல் தவிக்கவும் தவித்தான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் மோகன் ஜாம் கிழக்குப் புறம் முகத்தை வைத்துக்கொண்டு ஆசனப் பலகையில் அமர்ந்திருந் தான். சத்கரி சற்றுத் தள்ளி நின்று சிறிதும் ஈடுபாடே காட்டா மல் இக் காட்சியைப் பார்த்துக்கொண் டிருந்தான்.

அப்போதுதான் அசலா வந்தாள். அவள் பிடிப்பான சட்டையும் ஷல்வாரும் அணிந்திருந்தாள். கழுத்தில் வெங் காயத் தோலை நிகர்த்த ஒரு துப்பட்டா தொங்கிக்கொண் டிருந்தது. அதன் வழியே அசலாவின் கழுத்தும் மார்பகமும் வண்ணக் கலவையாக இந்திரஜாலம் புரிந்து கனகச்சிதமாகத் தோன்றின. சட்டையோ, மார்பகம், இடுப்பு, அதன் கீழுள்ள பகுதி ஆகியவற்றுக்கு எல்லைக்கோடு கட்டி எழில் பொங்க வைத்தது. அவள் கையில் ஒரு தட்டு. அதில் இனிப்பு, தங்க ரேக் ஒட்டித் தகதகாய்த்துக்கொண் டிருந்தது. அதன் ஒரு புறத்தில் ராக்கீ இருந்தது. அதன் குஞ்சலத்தில் உண்மையான முத்துக்களே கோக்கப்பட்டிருந்தன.

மோகன் வெகு துணிவோடு கையை நீட்டினான். அசலா மோகனின் மணிக்கட்டில் ராக்கீ கட்ட முற்பட்டபோது, அவள் கைகள் மகிழ்ச்சியில் நடுநடுங்குவதை ராம் சத்கரி தன் கண்களாலேயே கண்டான். பிறகு இனிப்புத் தின்பண்டத்துக் காக வாயைத் திறந்தான். அசலா அவன் வாயில் கலாகந்த் (பால் பருப்பி) போட்டாள். அப்புறம் மோகன் பரிசுப் பொட்ட ணத்தை அவிழ்த்தான். அதிலிருந்து புடைவையை எடுத்தான். அதன்மீது நூறு ரூபாய் நோட்டை வைத்தான். இரு பொருள் களையும் அசலாவிடம் நீட்டினான்.

ராம் சத்கரியின் விழிகள் சிறிது நேரத்துக்கு விரிந்தன. அப்புறம் பழையபடியே ஆகிவிட்டன.

ரக்ஷை கட்டும் இந்தச் சம்பிரதாயத்தை அநுஷ்டிக்கும்போது அசலாவும் பேசாமல் இருந்தாள்; மோகனும் பேசாமல் இருந் தான். இருவருடைய உடலிலும் திடீரென்று எங்கேயோ கை பட்டுவிட்டதனால் ஒரு மின்னொளி போலப் பாய்ந்தது. பிறகு அசலா மெதுவான குரலில், ''இந்த நன்னாள் மீண்டும் மீண்டும் வரட்டும், பகவானே!'' என்று வேண்டினாள். மோகன் அசலா

வின் விழிகளில் தன் விழிகளை மோத விட்டான். அவற்றில் நாணச் சிவப்பு இழையோடியது.

சிறிது நேரம் சும்மாப் பேசிக்கொண் டிருந்தபின் மோகன், ராம் சத்கரியுடன் கை குலுக்கினான். அசலாவுக்கு வணக்கம் தெரிவித்து விட்டுப் புறப்பட்டான். வாசற் கதவைத் தாண்டும் போது அவன் ஒரு பெருமூச்சு விட்டான். அப்புறம் படியிறங் கினான்.

அசலா எப்பொழுதும் போல அவனைக் கீழ் வரைக்கும் கொண்டுவிட நினைத்தாள். ஆனால் அவள் கால்கள் எழும்ப வில்லை; மறியல் செய்தன.

''நீ மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும், அசலா.'' ராம் சத்கரி கூறினான். ''இன்று நீ அண்ணனுக்கு ரட்சை கட்டியிருக் கிறாய்!''

''ஆமாம். ஆனால் இன்று காலையிலிருந்தே என் உடம்பு ஏனோ...''

''காலையிலிருந்து இத்தனை காரியத்தையும் இழுத்துப் போட் டுக்கொண்டு செய்தாய் அல்லவா? அதனால்தான்...''

அசலா தலையசைத்து விட்டாள். ராம் சத்கரி சற்று முன்னே சென்று, ''நீ உன் அண்ணன் கொடுத்த புடைவையை உடுத்திக் கொண்டு காட்டுவாயாக்கும் என்றல்லவா எண்ணினேன்!'' என்றான்.

அசலா ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவள் கண்கள் உள்ளே செருகிக் கொண்டன. அதைக் கண்டதும் ராம் சத்கரி சட்டென்று முன்னேறி அவளைத் தாங்கிப் பிடித்துக்கொண்டான். அப்புறம் அன்போடு, ''என்ன ஆகிவிட்டது என் அசலாவுக்கு?'' என்று கேட்டான்.

''ஒன்றும் இல்லை!'' அசலா மிகவும் மெல்லிய குரலில் சொன்னாள். அப்புறம் தன் கரங்களினால் ராம் சத்கரியைச் சுற்றி அணைத்துக்கொண்டு, ''என்னிடம் காதல் புரியுங்களேன்!'' என்றாள்.

ராம் சத்கரி அசலாவை மார்புறத் தழுவி இறுகக் கட்டிக் கொண்டான்.

''இன்னும்...'' என்றாள் அசலா.

அதற்குப் பின் அசலாவின் கண்கள் மூடியிருந்தன; வாய் திறந் திருந்தது. அதற்குள் மோகன் ஜாம், அசலா—ராம் சத்கரி இருவருடைய நினைவுகளிலிருந்தும் வெகுதூரத்துக்கு வெகு தூரம் போய்விட்டான்.

ஒரு சின்ன விஷயம்

"சரியாகப் புரிந்துகொண்டாய் அல்லவா? சின்ன விஷயந் தான் . . .'' என்றார் வழக்குரைஞர், சற்றுக் குனிந்து ஒல்லி யான இளைஞனைப் பார்த்து.

கோபால் சிங்கின் பரந்த முகம் மஞ்சள் பூசினாற்போல் இருந்தது. பொங்கிப் பூரிக்கும் காளைப் பருவம். அரும்பு கட்டிய தாடி மீசை கடுகு வெடித்தாற்போல் தோற்றம் அளித்தது. காதுப்புறத்திலிருந்து வேர்வை வாய்க்கால் கட்டி நீண்டு வழிந்துகொண் டிருந்தது. அடிக்கடி அதை உள்ளங்கைகளால் துடைத்துவிட்டுக்கொண் டிருந்தான் அவன். தன் களைத்துப் போன கண்களைப் பெருஞ்சுமைபோல் சிரமப்பட்டுத் தூக்கிப் பார்த்தான்.

அவன் விழிகளைக் கண்டு வழக்குரைஞரே நடுங்கிவிட்டார். பால் கிண்ணத்தில் பொன் இழை மலர்கள் நீந்துவதுபோல அவன் விழிகள் கோபத்தில் ஆடின. தூய ஆண்டவன் இந்த எழில் விழி மலர்களை எத்தனை இரவு கண் விழித்துப் படைத் திருப்பானோ?

''இல்லை, வக்கீல் ஐயா!'' கோபால் உயிரே போய்விட்டாற் போல் விசித்தான். அவன் தலை மேலும் தாழ்ந்தது. வீங்கிய இரப்பைகள் ததும்பும் கிண்ணங்கள்மீது கனத்த திரையெனப் படிந்தன.

''அட, என்னப்பா, இது! இந்தச் சின்ன விஷயம் கூடவா விளங்கவில்லை? ரக்கியோடு உனக்குத் தகாத தொடர்பு இருந்தது. நீங்கள் இரண்டு பேரும் இரவு . . .''

''இல்லை, இல்லை!'' கோபால் சிங் நிம்மதி இழந்து தலையை இப்படியும் அப்படியும் ஆட்டி அலைபாய்ந்தான். அவன் அறியா மல் அவன் கழுத்தில் விழுந்த சுருக்கிலிருந்து விடுவித்துக்கொள்ள முயல்பவன்போல, ''அப்படிச் சொல்லாதீர்கள் வக்கீல் ஐயா, அப்படிச் சொல்லாதீர்கள்!'' என்று கதறினான்.

''சர்தார்ஜி!'' வழக்குரைஞர் பலமாக மேஜைமீது ஒரு குத்து விட்டார். ''என் நேரத்தை ஏன் வீணாக்குகிறாய்? உன் மகன்

சாகத்தான் விரும்புகிறான். எந்த வக்கீலாலும் அவன் உயிரைக் காப்பாற்றமுடியாது'' என்றார்.

''வக்கீல் ஐயா . . .'' கோபால் சிங்கின் கிழட்டுத் தந்தை நெஞ்சைக் கனைத்துச் சரி செய்துகொண்டு, ''எனக்கு இருக்கிறது இந்த ஒரே பிள்ளைதான், ஐயா! எப்படியாவது இவன் உயிரைக் காப்பாற்றிவிடுங்கள் ஐயா!'' என்றான்.

''இதில் நான் என்ன செய்யமுடியும், சர்தார்ஜி? உனக்கு இருக்கிறது ஒரு பிள்ளைதான். ஆனால் அவன்தான் தூக்கில் தொங்கத் தீர்மானித்துவிட்டானே?''

''இவனுக்குத் தூக்குத் தண்டனை என்று ஆகிவிட்டால் . . .'' கிழட்டுச் சர்தார் புலம்பித் தீர்த்துவிட்டான்.

''நான் சொல்கிறபடி நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தால்தான் தூக்கிலிருந்து தப்பலாம். இந்தச் சின்ன விஷயம் இவனுக்கு எவ்வளவு சொன்னாலும் விளங்கமாட்டேன் என்கிறது. இவன் மண்டையிலே இருப்பது சாணியோ களிமண்ணோ, தெரியவில்லை! ரக்கிக்கும் இவனுக்கும் தொடர்பு உண்டு. ஜோகிந்தர் கையும் மெய்யுமாக இருவரையும் பிடித்துவிட்டான். ரத்த வெறி விர்ரென்று தலைக்கு ஏறிவிட்டது. ஆடு வெட்டும் அரிவாளைத் தூக்கிக்கொண்டு இருவர்மீதும் பாய்ந்துவிட்டான். இழுபறிச் சண்டையில் அரிவாள் திரும்பி ஜோகிந்தரையே காவு வாங்கிவிட்டது. அவன் அங்கேயே துடிதுடித்து இறந்தான். இப்படிச் சொன்னால்தான் . . .''

''இது பொய்! அரிவாள் என் கையில்தான் இருந்தது. நான் தான் ஜோகிந்தரைக் கொன்று போட . . .''

''திரும்பவும் அதே பழைய பல்லவியா? 'நான் பிடித்த முயலுக்கு மூன்று கால், நான் பிடித்த கோழிக்கு ஒரே கால்!' என்பதுபோல! சர்தார்ஜி! உன் மகன் வடிக்கட்டிய முதல்தர ...''

''கோபியா! என்னைப் பாரடா மகனே!'' கிழட்டுச் சர்தார் கெஞ்சினான்.

பையன் பயந்து மேலும் தலைகுனிந்தான். கிழட்டுத் தந்தையின் கண்கள் இறுகிய சேறாகத் தன் மனத்தைப் பற்றிக்கொண்டுவிடும். அப்புறம் என்னதான் முயன்றாலும் அதனிடமிருந்து விடுபட முடியாது என்பதை அவன் அறிந்திருந்தான். அதனால்தான் தன் விழிகளை ஒரேயடியாகத் தாழ்த்திக்கொண்டு விட்டான்.

வழக்குரைஞர் இரு கைகளாலும் தலையைப் பிடித்துக் கொண்டார். இதுபோன்ற பிரச்னை இன்றுவரை அவருக்கு

ஏற்பட்டதில்லை. அவர் ஒரு முரடர்; ஈவு இரக்கமற்றவர். காரியம் ஒன்றே கண்ணாயிருப்பவர். எத்தனையோ கொள்ளைக்காரர்களையும் கொலைகாரர்களையும் மூளை நோய்வாய்ப்பட்டவர்களையும் அவர் தூக்கு மேடையிலிருந்து இறக்கி வந்திருக்கிறார். எந்த வழக்கிலும் அவர் உணர்ச்சிக்கு இடம் அளித்ததில்லை. ஆனால் இந்தக் கிழட்டுச் சர்தாரையும் அவனது ஒடிசல் பையனையும் பார்த்து அவர் உள்ளத்தில் எங்கோ ஓர் இடத்தில் சரியான குத்து விழுந்துவிட்டது. அவர் நிலை குலைந்து போய்விட்டார்! கடவுள்தான் காப்பாற்றவேண்டும்! அந்தத் துக்கிரிப் பயலுக்குத்தான் என்ன அழகான மேனி! சந்தனச் செடி, சோப்பு மழை மணக்கும் மண்ணில் துடித்து வெடித்து வந்தாற்போலத் தோன்றியது.

''கோபால் சிங்! எப்போதாவது நீ தூக்கிடுவதைப் பார்த்திருக்கிறாயா?''

''இல்லையே!''

''தெரியுமா, குழந்தாய், தூக்குத் தண்டனை எவ்வளவு பயங்கரமானது என்று! விழிகள் பிதுங்கிக் கன்னத்தில் தொங்கும். நாக்கு வெளியே நீண்டு தொங்கும். கழுத்து முழும் நீளம் நீண்டுவிடும்!'' வழக்குரைஞர் அச்சுறுத்தும் உறுதியான குரலில் கோபாலைப் பயமுறுத்தினார். அவருக்கே முதுகில் செவிப்பூரான் ஊர்வதுபோலக் 'குறக்கிளி' வாங்கியது. கோபால் சிங்கின் உதடுகள் நீலம் பாரித்து நடுங்கின. பற்களில் உள்ளங்கையைப் பதித்து அழத் தொடங்கிவிட்டான். பால் கிண்ணத்தில் நீந்திய பொன் இழை மயிரின் அடி வேரே கலகலத்துவிட்டாற்போல் இருந்தது.

''பிள்ளைப் பிராயத்திலிருந்தே உனக்கு ரக்கியைத் தெரியுமா?'' வழக்குரைஞர் பேச்சைத் திசை திருப்பினார்.

''ஆம், ஐயா! இவனும் அவளும் மணல் வீடு கட்டிப் பிள்ளைப் பிராயத்தில் விளையாடியிருக்கிறார்கள் ஐயா!'' கிழட்டுச் சர்தார் தரையிலிருந்து ஒரு முழு உயரம் அளந்து, அந்த நாட்களில் அவர்கள் எவ்வளவு பெரியவர்கள் என்பதைக் காட்டினான்.

கோபாலின் முகத்தில் மென்மையான அந்தப் பிள்ளைப் பிராயம் பளிச்சிட்டது. வழக்குரைஞருக்கு மீண்டும் ஆண்டவனின் இயற்கை நினைவு வந்தது. தேவதைகள் எத்தனை முகங்களிலிருந்து சூதுவாது அறியாத குழவிப் பருவத்தைத் திருடி, இந்தப் பயலைப் படைப்பதில் செலவிட்டிருக்குமோ?

''இதன் பொருள் என்ன? பிள்ளைப் பிராயத்திலிருந்தே நீங்கள் ஒருவரையொருவர் விரும்பினீர்கள் என்பதுதானே?''

''குழந்தைகள் குரங்குகள்போல! விரும்புவதாவது, வேண்டுவதாவது? நிமிஷத்திலே நட்பு; நிமிஷத்திலே சண்டை. ஒரு நேரம் தோளில் கைபோட்டுக்கொண்டு பசும் புல்லில் மரவட்டைகளைத் தேடித் திரிவார்கள்; தட்டாரப் பூச்சியைத் தொடருவார்கள். இன்னொரு நேரம் ஒருவர் தலைமயிரை இன்னொருவர் பிடித்து உலுக்கிக்கொண்டு நிற்பார்கள். ரக்கி நல்ல ஊசி மிளகாய். யாரோடும் ஒரு நிமிஷங்கூட அவளுக்கு ஒத்துக் கொள்ளாது. கோபால் ஒருவன்தான் அவள் கொடுமைகளைப் பொறுத்து வந்தான். கிழட்டுப் பருவத்தில் பிறந்த பிள்ளை அல்லவா? அவன் மனமும் அதற்கு ஏற்பப் பெருமையும் முதுமையும் பெற்றிருந்தது. ரக்கி உதறித் தள்ளினால் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு அம்மா மடியிலே போய்ப் புகுந்து கொள்ளுவான். அவள் மனம் மாறி அவனைக் கூப்பிட்டால் திரும்பவும் ரக்கியிடம் ஓடிவிடுவான்!''

இன்னும் கொஞ்சம் பெரியவள் ஆனதும் மற்றப் பெண் குழந்தைகளோடு சேர்ந்து மண்டையோடு மண்டை முட்டிக் கொண்டு என்னதான் பேசுவாளோ, தெரியாது! ஒரேயடியாகக் கோபாலோடு பகைமை பாராட்டலானாள்.

''இந்த ஆண் பிள்ளைகளே ரொம்பக் கெட்டவர்கள்! அவர்கள் மனத்தில் கள்ளம் புகுந்திருக்கும்!'' ரக்கி கோபாலுக்குப் புரிய வைத்தாள்; அவனும் புரிந்துகொண்டான். அப்புறம் அவன் மனத்தில் கள்ளம் புகுந்து புழுவாக நெளியலாயிற்று. அதற்கு அப்புறம் ரக்கிக்கும் அந்தக் கள்ளத்தில் ஒரு சுவை ஏற்பட்டது. சில சமயம் கோபிப்பாள்; சில சமயம் தானாகவே ஒத்துப் போவாள்.

''பாரடா கோபி! நீ என்னிடம் எப்போதாவது காதல் கீதல் புரிந்தாயோ, அது நல்லதற்கில்லை. சித்தியிடம் சொல்லிச் செருப்பால் அடிப்பேன்; தலைப்பா எகிறிப் போய்விடும். ஜாக்கிரதை!'' என்பாள்.

''போடி பிசாசே! உன்னைப் போய்க் காதலிக்க என்னை என்ன வெறிநாய் கடித்திருக்கிறதா அல்லது பைத்தியம் பிடித்திருக்கிறதா?'' என்று கோபால் எகிறிப் பேசுவான்.

''அடப்பாவி! என்னிடம் என்ன குற்றம் குறை இருக்கிறதடா? நான் என்ன கறுப்பியா? நொண்டியா? இல்லை, ஒற்றைக்

கண்ணியா? என்னைக் காதலிக்கமாட்டேன் என்று ஒதுக்கித் தள்ள! சொல்லடா?'' மொலு மொலு வென்று அவனிடம் சண்டைக்குப் போய்விடுவாள்.

''என் இஷ்டம், காதலிப்பேன்; என் இஷ்டம், காதலிக்க மாட்டேன். நீ யார் கேட்க?'' கோபால் முறண்டு பிடிப்பான்.

''அஹஹஹ! பெரிதாக 'இஷ்டம்' பேச வந்துவிட்டாயோ? போடா, போ! தலையில் தீயை வைக்க!'' அவனை எரிந்து ஒதுக்கி விடுவாள். அப்புறம் பல நாட்கள் முகத்தைத் தூக்கிக்கொண்டு போய்விடுவாள். கோபாலுக்கு உலகமே இருண்டுவிடும். அவன் முகம் வெளிறிப் போய்ப் பித்தனைப்போல் இங்கும் அங்கும் அலைந்து திரிவான். அப்புறம் ரக்கியின் எந்த நரம்பு துடிக்குமோ, தெரியாது! விறைப்பை விட்டுத் தளர்ந்து விடுவாள்.

''ஐயோ, கோபி! நீ இன்றி நான் எப்படியடா உயிர் வாழ்வேன்? நான் விஷத்தைத் தின்று தூங்கிவிடப் போகிறேன்!'' என்பாள்.

கோபாலுடைய முகத்தில் பழைய பிரகாசம் பளிச்சிடும். அவளது சுட்டும் விழிச் சுடரைக் கண்டு திடுதிப்பென்று படம் எடுத்து ஆடத் தொடங்கி விடுவான்!

''நீ என்னடா நினைத்துக்கொண் டிருக்கிறாய்? ஜாக்கிரதை! இப்படி இளிக்கிற கண்ணோடு என்னைப் பார்த்தால், இளித்தால், ஆணையிட்டுச் சொல்கிறேன், உன் விழிகளைத் தோண்டி வைத்து விடுவேன்!'' இல்லாததற்கெல்லாம் எகிறிக் குதிக்கத் தொடங்குவாள்.

இந்த ஆண்டவனுந்தான் ஆண் பெண்களுக்கிடையில் என்ன விசித்திரமான புயலைக் கூட்டி வைத்திருக்கிறான்! ஒரு மிடறு அமுதம், ஒரு மிடறு நஞ்சு! ஒரு சமயம் கோபத்தில் காதல். இன்னொரு சமயம் காதலில் கோபம்! இரண்டிலும் ஓர் இன்பம், இரண்டிலும் ஒரு துன்பம்! என்ன கண்ணாமூச்சி!

''டேய் கோபி! நான் இங்கே குளித்துக்கொண் டிருக்கிறேன். நீ இன்னொரு பக்கம் பார்த்து உட்காரு. இந்தப் பக்கம் பார்த்தால், வாஹே குரு உன் கண்களை அவித்து விடுவார்!''

ஆனால், அவள் வார்த்தைகளை அப்படியே நம்பி முகத்தைத் திருப்பாமல், எழுந்து சென்று கருங்கல் மறைவுக்குச் சென்று விட்டான். ரக்கி அதைத் தப்பாக எடுத்துக்கொண்டுவிட்டாள்.

அவள் பெரிதாக ஏதோ கூச்சல் போடவே, அவளுக்கு என்னவோ ஏதோ என்று எண்ணி, அவளைக் காப்பாற்றுவதற்காகக் கோபால் நீரில் குதித்துவிட்டான். அவ்வளவுதான், வேலம் முள்ளாகக் குத்திவிட்டாள்! அவன் முகத்தையே பிருண்டித் தள்ளிவிட்டாள். அதோடு வாய்கொண்ட மட்டும் திட்டித் தீர்த்துவிட்டாள். அவன் தலைமயிரைப் பிடித்து உலுக்கி எடுத்துவிட்டாள். பாவம், அவன் எப்படியோ நீரில் மூழ்கிச் சாகாமல் பிழைத்தான்.

''நான் மூழ்கிச் செத்தால் உனக்கு என்னடா? பேசாமல் உன் வழியைப் பார்த்துக்கொண்டு போகிறதற்கு என்னடா? பன்றிப் பயலே, உனக்கும் எனக்கும் என்ன சொந்தம்?'' கோபால் சமாதானம் சொல்லப் போய் இப்படியெல்லாம் வாங்கிக் கட்டிக் கொண்டான். அவன் கோபித்துக்கொண்டு புறப்பட்டானோ, இல்லையோ! அவள் இறங்கி வந்துவிட்டாள்.

''போடா போ! போக்கிடம் கெட்டவனே! இப்போது நீ என்னைப் பார்த்துத் தொலைத்துவிட்டாய்! உன் துணியும் தான் நனைந்து போய்விட்டது! அதோ அந்தக் கல்லில் காயப் போட்டுவிட்டு நீயும் நன்றாகத் தேய்த்துக் குளி. உடல் நாற்றம் ஊரைக் கூட்டுகிறது. ஆனால் இதோ பார், இந்தப் பக்கம் வராதே! அடுத்தத் துறையில் போய்க் குளி!'' என்றாள்.

அடுத்தத் துறையில் யார் இருந்தார்கள்? சில சமயம் சில தொலைவுகள் அதிக ஆபத்தானவை. ஒளிவு மறைவு இல்லாத சில நெருக்கங்களில் ஆபத்து எவ்வளவோ குறைவு. ஷப்ராதி தண்ணீருக்கு வெளியே வெகு தொலைவில்தான் இருந்தான். அவன் பார்த்துவிட்டான்; பெருங் கூச்சல் போட்டான். ரக்கியின் அப்பனிடம் சென்று சரியாக 'வத்தி' வைத்துவிட்டான்.

பெரும் தகராறு நடந்தது. கோபால் தன் தலைமுடியில் மாட்டிக்கொண் டிருந்த ரக்கியின் மூக்குத்தியை விடுவிப்பதில் தான் முனைந்திருந்தான். ஆனால் ஷப்ராதி போட்ட கூச்சலில் ரக்கியின் மூக்கே அறுந்துவிடும்போல் ஆகிவிட்டது. ஊர் முழுவதும் கொல்லென்று ஆகிவிட்டது. ரக்கியின் குடிகாரத் தகப்பன் அவளைப் புரட்டி எடுத்துவிட்டான். தலைமயிரைப் பிடித்து இழுத்துப் போய்ப் பசியும் பட்டினியுமாக அறையில் அடைத்துவிட்டான்.

பயந்த பயத்தில் கோபால் சிங்குக்குக் குளிர் ஜுரம் கண்டு விட்டது. மறுநாளே அது டைபாய்டு ஆக உருமாறி உயிரையே ஊசலாட வைத்தது. இல்லாவிட்டால், பான்சிங், ஆடு வெட்டிக் கத்தியினால் அவன் கழுத்தையே சீவிப் போட்டிருப்பான்!

இரண்டு மாதங்கள் கோபால் மரணத்தோடு போராடினான். ரக்கிக்கும் ஜோகிந்தருக்கும் திருமணம் ஆன அன்று, வைத்தியர், கோபாலும் உயிர் பிழைத்தெழக்கூடும் என்ற நம்பிக்கையை அறவே ஒழித்துவிட்டார். அவர் கைவிட்டாலும் ஆண்டவன் கைவிடவில்லை. நாளடைவில் அவன் நடந்து வெயில் காயப் போகுமளவுக்குத் தேறினான். மக்களும் அதற்குள் குளத்தங் கரைச் சம்பவத்தை மறந்துவிட்டார்கள். பார்க்கப் போனால் கிராமத்து வரலாற்றில் இது ஒன்றும் நடைபெறக் கூடாதது நடந்துவிட்டது என்று சொல்லும் அளவுக்குப் பயங்கர விஷயமும் அல்ல.

''நோயிலிருந்து தேறிப் பிழைத்தெழுந்தபின் நீ ரக்கியின் திருமணத்தை நினைத்து வருந்தியிருக்கலாமோ?'' வழக்கறைஞர் கேட்டார். கோபால் யோசனையில் ஆழ்ந்தான். நோயிலிருந்து எழுந்தபின் அவன் வெகு நாட்கள்வரை நல்ல உணவுக்காக ஏங்கி நின்றான். வைத்தியரோ வெறுங் கஞ்சியைத் தவிர வேறு எதுவுமே கொடுக்கக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார். நாக்குச் செத்த நிலையில் அவன் ஊரையே விழுங்கி விட விரும்பினான். அப்புறம் உடல்நிலை நன்கு தேறவும், அவன் வேலைக்குப் போகலானான். ரக்கியோ சிங்காரித்துச் சீவி முடிந்து கொண்டு தோழிகளுடன் சிரித்துப் பேசி மகிழ்ந்தாள்; நகை நட்டுகளைக் காட்டிப் பெருமை அடித்துக்கொண்டாள். அவன் மனம் குமைந்தான். 'இந்தப் பெண்களே படுமோசம்!' என்று எண்ணியவன், 'நாலு நகை நட்டுகளையும் துணி மணி களையும் வாங்கிக் கொடுத்தால் அதில் மகிழ்ந்து அடிமையாகிப் போவார்கள்!' என்ற முடிவுக்கு வந்து இதயம் தேற்றிக் கொண்டான்.

கிரிதர கோபாலனை அலால்

கதி வேறு எனக்கில்லை.

எப்படி உருகி உருகிப் பாடினாள்?—ஐயோ கோபி! நீ இல்லாமல் நான் எப்படி வாழ்வேன் என்றாளே! அந்தக் கடன்காரி மூதேவி இப்போது நன்றாகத்தானே வாழ்ந்துகொண் டிருக்கிறாள்?

''போடா, போடா முட்டாளே! நீ எங்கிருந்தடா கிரிதரன் என்று சொல்லிக்கொண்டு வந்து உட்காருகிறாய்? நீ வெறும் கோபால்டா! எனக்கும் உனக்கும் ஓர் உறவும் இல்லையடா!''

ஒரு நாள் அவள், முறம் வாங்க வந்தவள், கோபாலைக் குத்திக் கிளறினாள். ஏனோ, கோபாலனின் கண்களில் நீர் கோத்து நின்றது. அவளோ கலகலவென்று கேலிச் சிரிப்பை உதிர்த்தாள்!

''ஐயோ, அம்மா! நான் செத்தேன், போ! எங்கேயாவது ஆண் பிள்ளைகள் அழுவதுண்டா? அழ அல்லவா வைப்பார்கள்!''

''ஜோகிந்தர் உன்னை வேண்டிய அளவு அழவைப்பான்!'' அவன் சினந்தான்.

''அழவைத்தால் அழுகிறேன். சிரிக்க வைத்தால் சிரிக்கிறேன். என் கணவன் ஆயிற்றே!''

ரக்கியின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை வைத்து அவளது சின்னச் சின்ன வெள்ளைப் பற்களை அரிசி மணிகளைப்போல் உதிர்த்துவிடலாமா என்று கோபாலுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. ஆனால், பெண்மீது கைவைக்க அவன் கற்றதில்லை. அவன் எழுந்து போக முனையவே, ரக்கி நடுங்கிவிட்டாள்.

''அரே கோபால்! கோபித்துக்கொண்டுவிட்டாயா? வேண்டாம் இந்தக் கோபம்!'' அவள் அவன் கால்களில் சிக்கிக்கொண்டாள்: ''ஐயோ! நீ நிசமாகக் கோபித்துக்கொண்டால், என் உயிரே போய்விடும். என் தலைமயிரைப் பிடித்து இழுத்து இரண்டு அறை வை. ஆனால், என்மீது கோபம் கொள்ளாதே! நீதான் எனக்கு எல்லாமே!'' அவள் குரல் கனக்கத் தொடர்ந்தாள்: ''கல்யாணம் ஆனது தனி விஷயம், என் அன்பே! எனக்கும் உனக்கும் உறவு பிறவி பிறவியாகத் தொடர்ந்து வருவது; நீ கிரிதர கோபால் இல்லை என்றால், வேறு யார்? பார், கோபி! எப்போதாவது ஏதாவது கஷ்டம் வந்தால் நான் உன்னைத்தான் கூப்பிடுவேன். அப்போது என்னைக் காப்பாற்றுவதற்காக நீ உன் சக்கரத்தைச் சுழற்றிக் கொண்டு வரவேண்டும். வருவாய் அல்லவா? வாக்குக் கொடு!''

கோபால் அவளை உதறிவிட்டு மேலே மாடியறைக்குப் போய்ப் படுத்துவிட்டான். அவன் ரக்கிக்கு உறுதிமொழி ஏதும் அளிக்கவில்லை. ஆனால், வாக்குறுதி அளிப்பதோ, அளிக்காததோ அவன் கைக்குட்பட்ட விஷயமாகவா இருந்தது?

அவள் வரும்போதெல்லாம் தன் கணவனின் புகழ் பாட லானாள்: ''ஐயோ ராமா! என்னிடம் அவருக்குத்தான் எத்தனை அன்பு, தெரியுமா?'' அவள் கண்களில் காதலைக் கனிமொழி யாகக் கருத்தைக் கவரும் வகையில் சிமிட்டும்பொழுது அவனுக்குப் பற்றிக்கொண்டு வரும்; மூக்குப் புசு புசு என்று வீங்கிச் சிவந்து போகும். அதைக் கண்டு அவள் கலகலவென நகைப்பாள்.

''டேய், கோபால்! என் கணவனை நீ கரிக்கிறாய்!'' அவள், அவன் கோபத்தைக் கிளறி விடுவாள்.

''அவன் உன்னைச் செருப்பால் அடிக்கும்பொழுது . . .?''

''செருப்பால் அடிக்கிறது மெய்தான்! ஆனால், கொஞ்சுகிற திலும் குறைவில்லையே!'' வெட்கம் கெட்ட வேசிகளைப்போல அவள் விழிகளை உருட்டிக் கூறுவாள்: ''எல்லாக் கணவர்களும் தான் தங்கள் மனைவிமார்களை அடிக்கிறார்கள். உன்னோடு கல்யாணம் ஆகியிருந்தால்கூட நீ அடிக்காமல் விட்டுவிடப் போகிறாயா? அவர்களைக் காட்டிலும் அதிகமாகவேகூட அடிப் பாய்!''

''அடிக்கக் கிடிக்க மாட்டேன்!''

''நிசமாகவா? அன்போடு ஒரு தட்டல்கூடத் தட்டமாட் டாயா?''

ஆனால், ரக்கியின் இந்தச் சிரிப்பெல்லாம் சில நாட்களுக்கே நிலைத்தது; அல்பாயுசாக முடிந்தது. ஓராண்டு முடிவதற்குள் ளாகவே, ஜோகிந்தர் நாட்கணக்கில் வீட்டுக்கு வராமல் இருக்க லானான். அப்படி வந்தாலும் போதையில் ஆடிப் போய் வரு வான். ரக்கியை அடிக்கிற அடியில் தெருவே விழித்துக்கொண்டு விடும். உயிரை வைத்து உடலைப் பிய்த்துவிடுவான். நாற்புற மிருந்தும் திட்டுக்கள் பறக்கும் சிறிதுநேரம். அப்புறம் மௌனம் நிலவும். மூன்று நான்கு நாட்களுக்கு ஒருமுறை தவறாமல் இந்த வேடிக்கை நடைபெற்று வந்தது. அப்புறம் தினசரி நிகழ்ச்சி ஆகிவிட்டது. இங்கு நள்ளிரவு கழியவேண்டியதுதான் தாமதம், அங்கு ரக்கியின் ஓலம் கேட்கும். தெரு மக்களும் சிறிது சிறிதாக இதற்குப் பழக்கப்பட்டுவிட்டார்கள். ஓலம் ஓங்கிப் பேராபத்தாகத் தோன்றினால் சிறிது நடுங்குவார்கள். ஆனால், கோபாலின் காதுகளில் ரக்கியின் இந்தக் கூப்பாடு கூரேறிப் பழுத்த கூரிய வேலெனப் பாயும். ரக்கியின் நகைகள் சிறுகச் சிறுக அவள் உடலிலிருந்து மறைந்து வந்தன. ஜோகிந்தரும்

வாரக் கணக்கில் வராமல் இருப்பான். பல வேலைகளுக்கு அவன் மாறிவிட்டான், எதுவும் நிரந்தரமின்றி. ரக்கி நோய்வாய்ப் பட்டாள். கருச்சிதைவு ஏற்பட்டுப் பெண்களுக்கே உரிய பல சிரமங்களுக்கு இலக்கானுள். அவள் வீட்டை விட்டு வெளியே வருவதைக்கூடக் குறைத்துக்கொண்டு விட்டாள்.

ஒரு கணவன் தன் மனைவியை அடித்துத் துன்புறுத்தினுலும், அவமானப்படுத்தி அவதூருகப் பேசினுலும் மக்கள் மனைவியைத் தான் குற்றவாளியாக எண்ணுகிருர்கள். ரக்கியிடம் இல்லாத பல குற்றங்கள் சுமத்தப்பட்டன. அவற்றை நேருக்கு நேரே கூடச் சொல்ல அவர்கள் தயங்கவில்லை.

ஒரு நாள் அவள் குளத்திலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தாள். வழியில் கோபாலைக் காணும் படி ஆயிற்று. அவள் ஆடைகள் அழுக்கேறிக் கிழிந்திருந்தன. கூந்தல் எண்ணெய் காணுமல் வறண்டிருந்தது. முகம் வெளிறிப் போயிருந்தது. அவள் வாளியைத் தூக்கிச் செல்லும்போது கால்கள் தள்ளாடித் தடுமாறின. கோபாலுக்கு இரத்தம் கொதித்தது. அவன் அவள் எதிரே போய் நின்றுன்.

''கோபி!'' அவள் ஆணவத்தோடு கூறினுள்: ''என் வழியை விடு!'' அவளுக்கு மூச்சு இறைத்துக்கொண்டிருந்தது. அப்படியும் அவள் பிடித்த வாளியைக் கீழே வைக்கவில்லை.

''நேற்று இரவு உன் கணவன் உன்னேடு அன்புமொழி பேசி யது உரக்கவே கேட்டதே!'' கோபால் கேலி கொப்புளிக்கக் கேட்டான்.

''உனக்கு என்ன? நீ யார் கேட்க?''

''நான் உனக்கு ஓர் உறவும் இல்லையா, ரக்கி?''

''இல்லை!'' ரக்கி பொங்கிவரும் கண்ணீரை அவன் பார்த்து விடக்கூடாதே என்பதற்காகக் கழுத்தைத் திருப்பிக்கொண் டாள்.

''கிரிதரும் இல்லை, கோபாலும் இல்லை. இல்லையா?''

''என்னைப் போகவிடு, கோபி!''

''என்னிடமே ஒளிக்கிருயே!''

''சொல்லிப் பயன்? யார் என்ன செய்துவிடமுடியும் அதற்கு?''

''நான் அந்தப் பாவிப் பயலின் கழுத்தை நெறித்து விடு வேன்.''

''ஐயோம்மா! நீ என்னைக் கைம்பெண்ணுக்கி விடுவாயா?''

''ஆமாம். என்ருல் உன் அலறலைக் கேட்கமுடியவில்லை.''

''உன் காதில் பஞ்சைத் திணித்துக்கொள்!''

''நான் அவன் தொண்டையில் கிருபாண் (கத்தி) பாய்ச்சி விடுவேன்!'' கோபால் கோபத்தில் கத்தினன்.

''ஐயோ, ராமா! நான் இனிமேல் கூச்சல் போடமாட்டேன். வாயில் பூட்டை மாட்டிக்கொண்டு விடுவேன்.''

''அப்படியும் நான் உன் குமுறலைக் கேட்டு விடுவேன்.''

''நான் கூப்பிட்டாலும் கூப்பிடாவிட்டாலும் கோபால் சக்கரத்தை எடுத்துக்கொண்டு வரத்தானே வேண்டும்!'' அவள் கல்லில் உட்கார்ந்து சிரிக்கலானாள். அப்புறம் வருத்தமே உருவானாள். ''அதிர்ஷ்டக்கட்டை, பாவம்! ஆசை நிறைவேற வில்லையென்றால் அவன்தான் என்ன செய்வான்? ஈவு இரக்க மில்லாத வேசி அவள். கோபம் வந்தால் பிடித்து வாசலில் தள்ளிவிட்டுத் தாழ்ப்பாளை அழுந்தப் போட்டுக்கொண்டு விடு கிறாள். அப்புறம் ஆண் பிள்ளை தன் கோபத்தை யார்மேல் காட்டுகிறதாம்?''

''இனி அவன் உன்மேல் கைவைத்தால், நான் அவன் சீட்டைக் கிழித்து விடுவேன், ஆமாம்!''

கோபத்தில் அவன் விருட்டென்று எழுந்து போகலானன். ரக்கி அவன் பாதங்களைப் பற்றிக்கொண்டாள். அவள் உடலின் வலு அனைத்தும் உருகிப் பெருகி நீராகிவிட்டது.

''கோபி!'' அவள் மெதுவாகக் குரல் எடுத்துக் கூப்பிட்டாள். கோபாலின் மனம் அலை பாய்ந்தது.

''என்ன?'' அவன் சினந்தான்.

''உன் உருவத்தைக் காணக் காண மனம் திளைக்கமாட்டேன் என்கிறது!'' அவள் பசித்த பார்வையை அவன்மீது பதித்து நின்றாள்.

''என்னைப் போக விடு, ரக்கி!'' கோபால் வேண்டினன்.

''இப்போது நீ எங்கே ஓடிப் போக முடியும், கோபி?'' அவன் கால்களைப் பற்றியிருந்த கைகளை எடுத்து அவள் தனது வெற்று மடியில் வைத்துக்கொண்டாள். சில நாட்களாகவே அது தணலாகத் தகித்துக்கொண் டிருந்தது. ''எனக்கும் உனக்கும் உள்ள உறவு இந்தக் கை, கால்களினுடையது அல்ல. இவை ஒடிந்து போகக்கூடியவை. உடலுக்கு அப்பாற்பட்ட உள்ளத்து உறவு. முடியுமானல் உன் உள்ளத்திலிருந்து ஒதுக்கி விட்டுப் போ. ஆனல், என் உள்ளத்திலிருந்து உன்னல் எப்படி விடுபட்டுப் போக முடியும்?'' என்று கேட்டாள்.

கோபால் சிங் முன்னே குனிந்து தலையை இப்படியும் அப்படியும் சிலுப்பிக்கொண்டான், ஏதோ குறுகிய துவாரத்துக்குள் தலையைக் கொடுத்துவிட்டு எடுக்கமுடியாமல் திணறுகிறவன் போல.

''குமாஸ்தா ஐயா! காதை நோண்டுவதிலிருந்து கொஞ்சம் அவகாசம் கிடைத்தால் போன விசாரணைக் கட்டை இப்படித் தள்ளுங்களேன்!'' என்றார் வக்கீல். பிறகு ஒரு பெருமூச்சைச் சாவகாசமாக வெளியேற்றிவிட்டு, ''சர்தார்ஜி! உங்கள் மகன் எதையும் காதில் வாங்கிக்கொள்வதில்லை என்று பிடிவாதமாக இருக்கிறான். ரக்கி இவனை வகையாக மாட்டி வைத்திருக்கிறாள் என்பதில் எள்ளளவும் சந்தேகமே இல்லை!'' என்றார்.

''இல்லை, வக்கீல் ஐயா, இல்லை!'' கோபால் மறுத்து மறுத்துக் களைத்துப் போய்விட்டான்.

''அடே தம்பி! எத்தனையோ ஆண் பிள்ளைகள் சாராயம் குடிக்கிறார்கள். பெண்டாட்டிகளைப் போட்டு அடிக்கிறார்கள். ஆனால் அதற்காக யாருடைய தூக்கமும் கலைவதில்லை!''

''ஆனால் அவள் அலறல் என்னைப் பைத்தியமாக்கிப் புரட்டிக் கொண்டிருந்தது வக்கீல் ஐயா! அதனால்தான் நான் ஜோகிந்தரைத் தீர்த்துக் கட்டிவிடுவது என்று சபதம் பூண்டேன். ஆனால் நான் பெரும் பயங்கொள்ளியாகப் போய்விட்டேன்!'' கோபால் தன் தலையை இரண்டு கைகளாலும் இறுகப் பிடித்துக் கொண்டான்

கதறும் குரல், கன்னங்கரிய இருளைப் பிய்த்துப் பிரித்து நாராக்கிக்கொண்டிருந்தது. மக்கள் பகல் முழுவதும் உழைத்த களைப்பில் அயர்ந்து போய் உறங்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால் ஓர் அதிர்ஷ்டக்கட்டை மட்டும் உறக்கம் கொள்ளாமல் விழித்துக்கொண்டிருந்தான்.

அவன் வாசற் கதவைத் தட்டினான். கதவு திறந்திருந்தது. எட்டிப் பார்த்தான். ஜோகிந்தர் ரக்கியைக் கட்டிலைச் சுற்றிச் சுற்றி விரட்டி அடித்துக்கொண்டிருந்தான். ரக்கியின் உடலில் ஒரு நூலிழைகூடப் பாக்கியில்லை. அவளது சந்தனம் போன்ற உடல் நீலம் பாரித்துப் போயிருந்தது, பாம்புகள் பல, படம் எடுத்துத் தீண்டினாற்போல. கோபாலைப் பார்த்து ஜோகிந்தர் கண்களைக் கொட்டினான்.

''நீ யார், தம்பி?'' அவன் அன்போடு கேட்டான்.

''இவளை அடிக்காதே!'' கோபால் வேண்டினான்.

''ஏன்?'' அவன் தப்பாக எடுத்துக்கொண்டுவிட்டான். ''நீ யாரடா சொல்வதற்கு? இவள் காதலனா?'' என்று சூடாகக் கேட்டான்.

''இல்லை!''

''அடே! நீ இவள் காதலன் இல்லையா? ஏன்? நீ ஏன் இவள் காதலன் இல்லை? நானும் இவள் காதலன் இல்லை. இவளிடம் வாடை அடிக்கிறது; வயிற்றைப் புரட்டுகிறது! துளிக்கூட வாசனையே இல்லை. வேறுமானால் நீ மோந்து பார் இவளை! டேய், நான் சொல்கிறதைக் கேள்டா! இவளை மோந்து பார் மேலே!''

''நீ குடி போதையில் இருக்கிறாய் ஜோகிந்தர்!''

''குடி போதைதானே, அப்பா! பரவாயில்லை! நீ இவளைக் காதலி! சுத்தக் கசமாலம் இது! அதுதான் இப்படி வாடை அடிக்கிறது! விடு தம்பி! நீ என் தம்பி, இவளை நீ காதலி! நான் சொல்கிறேன், கேளு!''

''உளறாதே! உன் பிதற்றலை நிறுத்து!'' கோபாலுக்கு ரத்தம் கொதித்தது. அவன் பாய்ந்து ஜோகிந்தரின் கழுத்தைப் பற்றினான்; படபடவென்று உதறினான். ஆனால் அவன் ஓர் அங்குலங்கூட அசையவில்லை. பாறையாக நின்று பெருஞ் சிரிப்புச் சிரித்துக்கொண் டிருந்தான். கோபாலோ ஈயைப்போல் 'மொய்' என்று மொய்த்துக்கொண் டிருந்தான். பிறகு ஜோகிந்தர் மெதுவாக ஈயை விரட்டுகிறாற்போல அவனைத் தள்ளிக் கதவைச் சாத்திக்கொண்டான். அப்புறம் அலறல் அதிகமாகியது. காற்றும் கனமழையும்போலக் கோபாலின் மூளையைச் சாடியது.

இந்த நாட்களில்தான் கோபாலுக்கு இந்தூரிலிருந்து சம்பந்தம் வந்தது. அவன் தன் தகப்பனுடன் பெண் பார்க்கப் போய் விட்டான். அங்கு நிர்மலின் புன்னகையைக் கண்டான். ரக்மியின் அலறலைக் கேட்கவில்லை. பரிசம் போட்டுவிட்டுத் திரும்பியதும், ஊரார் வாழ்த்துக் கூறி விசாரிக்க வந்தார்கள். ரக்கிக்குச் சந்தோஷம் தலை கால் புரியவில்லை. ஆடிப் பாடி மகிழ்ந்தான். அவனது மகிழ்ச்சியைக் கண்டு கோபாலும் அகமகிழ்ந்து போனான்.

''எப்படி?'' எல்லாரும் இங்கும் அங்கும் போனபிறகு, ரக்கி கோபாலேத் தனிமையில் கேட்டாள்.

''நல்லபடி!''

''நிர்மல் ராணியைப்பற்றிக் கேட்டால் 'நீ என்னவோ சொல்கிருயே! பருமன் இல்லேயே!''

''இல்லே, சரியாக அளவோடு இருக்கிருள்.''

''உயரமா, குட்டையா?''

''என் மோவாய்க்கு வருகிருள்!''

''ஓகோ! கைகால்கள்? சிவப்பா? சின்னவையா?''

''ரொம்பச் சிவப்பு இல்லே. சின்னதுதான்!''

''இடை? ஒல்லிதானே?''

''இப்பொழுது எனக்கு என்ன தெரியும், பருமனு, ஒலலியா என்று? நான் அளந்து பார்க்கவில்லேயே?''

''அட அசடே! இடை விளேயாட்டுத்தானே எதுவுமே? இன்னொரு முறை போகும்போது உடலே நன்முக அளவெடுத்து வா! பிடி இடையா, பொடி இடையா? பார்த்து வா!''

''சரி, உன் கணவனே அளந்து பார்த்தாயோ?''

''அதைப்பற்றி இப்பொழுது என்ன பேச்சு?'' அவள் கடிந்தாள்: ''நீ உன் விஷயத்தைச் சொல்லு! உனக்கு அவளேப் பிடித்திருக்கிறதா? அவளுக்கு உன்னேப் பிடித்திருக்கிறதா? பேசிப் பார்த்தாயா?''

கோபால் தலேயசைத்து முறுவலித்தான.

''ஒரே மகிழ்ச்சியாக இருந்திருக்குமே! என் கணவன் என்னிடம் காதல் மொழி பேசியபோது என் உயிர் முழுவதும் உதடுகளுக்கு வந்து விட்டது!''

''இப்போது காதலிக்கிறதில்லேயா?'' கோபால் கிண்டினன்.

''விடு அந்தப் பேச்சை! நான் வந்த வழி அப்படி! அதற்கு யாரை நொந்து கொள்வது?'' ரக்கி பெருமூச்சு விட்டாள்.

''கோபால் சிங்! ரக்கி, கோர்ட்டிலே, அவளுக்கும் உனக்கும் தகாத தொடர்பு இருந்ததாக வாக்குமூலம் தரத் தயாராக இருக்கிருள்!'' வழக்குரைஞர் மீண்டும் சொன்னர்.

''கீழ்ச்சாதிப் பயல் மகள்! பன்றிக்குப் பிறந்தவள்!'' கோபால் கொதித்து எழுந்தான்: ''பொய்! பாவி மகளே!'' தன்

அன்புக்கன்பான ரக்கியின் மீது இத்தனை பெரும் பாவக்கறை சுமத்தும் அந்த ரக்கியை வாயில் வந்தபடி திட்டலானுன்.

அலறல்கள் முன்னைக் காட்டிலும் அதிகமாகிப் பயங்கரமாக ஒலித்தன. இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு பேய்க் குரலாக உருவெடுக்கும், விசிப்பாக அடங்கும். அடங்குவதற்கு முன்பாகவே மீண்டும் குரலெடுத்துக் குமையும். கோபால் தூங்கும் நேரத்திலும் பயந்துகொண்டே இருப்பான், 'கண்களை மூடினுல் அலறல் கிளர்ந்தெழுமே! அலறல் கிளர்ந்தெழுந்தால் தூக்கம் கெட்டுப் போகுமே!' என்று! உறக்கத்திலும் உறக்கம் பிடிக்காத நிலை! சில சமயம் கதறலை எதிர்பார்த்து எதிர் பார்த்துப் பொழுது புலரும்வரை தூங்காமலே கூட இருந்து விடுவான். ஓலமும் கேட்காது, உறக்கமும் கொள்ளாது.

அன்று இரவு அவன் ஓர் உறுதியோடு ஆடு வெட்டும் கத்தியைப் பரணிலிருந்து இறக்கினுன். பாலத்துக் கருங்கல்லில் தேய்த்துத் தேய்த்துக் கூராக்கினுன்.

நள்ளிரவு தாண்டியும் ஓலக்குரல் கேட்கவில்லை. ஒருவேளை ஜோகிந்தரின் வேசி அன்று அவனிடம் இரக்கம் கொண்டிருந் தாளோ, என்னவோ? கோபால் சிங்குக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றியது. வீட்டில் வந்து படுத்துத் தூங்கிவிட்டான்.

முதல் குரல் அவன் காதுகளில் மோதியபோது, அவன் அதைப் பிரமை என்று ஒதுக்கிவிட்டான். கடந்த காலத்துப் பழைய ஓலத்தின் எதிரொலி என்று எண்ணி வாளாவிருந்தான். ஆனுல் தொடர்ச்சியாக அரைமணிக்கும் மேலாக ரக்கியின் கூக்குரல், கோபாலின் மூளையை ரம்பம்போல் அறுக்கவே, அவனுல் பொறுக்க முடியவில்லை. ஆடு வெட்டும் அரிவாளால் தன் தலையையே சீவிக் கொண்டுவிட்டால் எவ்வளவு நன்று யிருக்கும்! இந்த அவல ஓலத்திலிருந்து விடுதலை பெறலாமே!

அப்புறம் என்ன ஆயிற்று? எதுவுமே நினைவில்லை. ஆனுல் இது மட்டும் நினைவிருக்கிறது: ஜோகிந்தர் ரக்கியின் கூந்தலைப் பற்றி இழுத்துப் பழைய கந்தலைப் போல உதறிக்கொண் டிருந்தான். ரக்கியின் உடலில் நையப் புடைக்க அவளது தோலைத் தவிர வேறு எதுவும் இல்லை. மூக்கு உடைந்து ரத்தம் பெருகி மார்பகத்தின் மேடு—பள்ளங்கள் வழியே பாய்ந்து முழங்கால் களில் வழிந்துகொண் டிருந்தது. இனிமை பெருக்கும் இள

முகம் இருந்த இடத்தில் ரத்தமாகச் சிவந்த மாமிச பிண்டம் மட்டுமே இருந்தது. ஜோகிந்தர் அவள் தலையைக் கட்டில் காலில் மோதிக்கொண்டிருந்தான்.

ரக்கியின் வலது கை எலும்பு முறிந்து வெளியே நீண்டு தொங்கிக்கொண்டிருந்தது. ஒரு பிடிப்புக்காக அவள் தரையைப் பிடிக்கப் போனால், அவளது ஆடிப்போன அந்தக் கை மடிந்து போகும். எலும்பு மண்தரையில் புதைந்து போகும். அந்த மண்தரை கோபாலின் துடிக்கும் இதயமாகியது.

இந்தக் கடைசிச் சித்திரத்தை அவன் விழிகள் அப்படியே பதித்துக்கொண்டன; பாதுகாப்பாக மடக்கிச் சுருட்டிக் கொண்டன. தூக்குத் தண்டனைக்குப் பின் அவனை எரிக்க மூட்டப் படும் சிதைகூட அந்தச் சித்திரத்தையோ அதன் நிழலையோ எரித்துச் சாம்பலாக்க முடியாது.

அவன் கைகளில் உள்ள பத்து விரல்களும் ஆடு வெட்டும் பல அரிவாள்களாக உருப்பெற்றன. ஜோகிந்தரின் தலை அவனது காண்டாமிருகக் கழுத்திலிருந்து அழுகிய கொய்யாப்பழம் போலக் கழன்று கட்டிலுக்கு அடியில் விழுந்து உருண்டது. கோபால் ஓர் உதை கொடுத்து அந்தத் தலையை வெளியே எடுத்தான்; பந்தாடிப் புரட்டி எடுத்தான்.

கோபாலின் மூச்சு சுவாசப் பையிலேயே சிக்கிப் பொறுமியது. வழியும் பாற் கிண்ணத்தில் கருவிழிகள் ஓரம் கட்டின. பொன் இழை மலர்கள் கலங்கிக் களை இழந்தன.

''நான்தான் ஜோகிந்தரைக் கொன்றேன் ஐயா! எத்தனை பிறவி எடுத்தாலும் கொன்றுகொண்டே இருப்பேன்!'' என்றான் கோபால்.

வழக்குரைஞரின் விழிகள் தடுமாறித் தரையை நோக்கின.

கிழட்டுச் சர்தார்ஜியின் வயதில் இருபது ஆண்டுகள் உலர்ந்த சருகுகளைப்போல் உதிர்ந்தன. மார்பு விரிந்து பரந்தது.

''வக்கீல் ஐயா!'' அவன் குரலில் உறுதியும் நம்பிக்கையும் ஓங்கக் கூறினான்: ''என் மகன் கொடுத்த வாக்குமூலத்தை மாற்றத் தேவையில்லை.''

மணச் சேலை

பெண்கள் பகுதியில் இருந்த முக்கூடல் தாழ்வாரத்தில் அன்று தூய்மையான சமுக்காளம் விரிக்கப்பட்டிருந்தது. உடைந்து போன ஓடுகளின் இடுக்கு வழியாக வெயில் கோணல் மாணலாக வலை பின்னித் தாழ்வாரம் முழுவதிலும் சிதறிக் கிடந்தது. தெருப் பெண்கள் ஏதோ பெரிய நிகழ்ச்சியை எதிர் பார்ப்பவர்கள்போல் அச்சமும் மௌனமும் முகத்தில் தேக்கி அமர்ந்திருந்தனர். தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை 'எடுத்து விட்டு'க்கொண்டிருந்தனர். சிடுமூஞ்சி நோஞ்சல் குழந்தைகள் போதிய பால் கிடைக்காததனால் உறிஞ்சி உறிஞ்சிச் சலித்துப் போய் 'முறை வைக்க'த் தொடங்கிவிடும்.

''வேண்டாம் கண்ணு, வேண்டாம்.''

செய்நேர்த்தி இல்லாததனால் உடல் வற்றிப் போன தாய் மார்கள் குழந்தைகளை முழங்காலில் போட்டுக்கொண்டு காலை ஆட்டித் தூக்கித் தூக்கிப் போடுவார்கள், நெல் கலந்த அரிசியை முறத்தில் போட்டுப் புடைப்பதுபோல! குழந்தைகளும் 'ஊம்' கொட்டியவாறே அழுகையை நிறுத்தி உறங்கத் தொடங்கி விடும்.

இன்று எத்தனையோ நம்பிக்கை நிறைந்த கண்கள் கவலையில் மூழ்கிய குப்ராவின் தாய் முகத்தைப் பார்த்துக் கொண் டிருந்தன. அகல வாட்டில் 'தோம்பு'த் துணியின் இரு புறங்களை யும் இணைத்தாகிவிட்டது. ஆனால் வெள்ளைக் காடாத் துணியை அளவெடுத்து அளவாக வெட்ட யாருக்கும் துணிவு ஏற்பட வில்லை. வெட்டிச் சேர்க்கிற இந்தக் கலையில் குப்ராவின் அம்மா கைதேர்ந்தவள். அவளது உலர்ந்த கரங்கள் எத்தனை திருமணங்களுக்குப் பயன்பட்டுள்ளன, எத்தனை 'அறைக் குழந்தை'களுக்கு உதவியுள்ளன! பிறப்பைப் போலவே இறப்புக் கும் உதவியுள்ளன. அதாவது எத்தனை சவம் போர்த்தும் துணிகள் தயாரித்துள்ளன? வாங்கிய துணிகள் சிறிது குறைவா யிருந்துவிட்டால் போதும், என்ன முயன்றாலும் அவற்றை வெட்டித் தைக்க முடியாது. கடைசியில் சோர்ந்துபோய்க்

குப்ராவின் அம்மாவைத்தான் சரண் அடைய வேண்டியிருக்கும். குப்ராவின் அம்மா கிழிக்கும்போது கோணலாகிவிட்ட துணியை இழுத்து இழுத்துச் சரி செய்வாள். கஞ்சியின் மொறமொறப்பை நீக்குவாள். ஒரு சமயம் முக்கோணமாக மடிப்பாள், இன்னொரு சமயம் நான்காக மடிப்பாள். இப்படி மனத்துக்குள்ளேயே கத்தரிக்கோல் ஓட்டிக் கண்ணாலேயே அளந்து பார்த்து மகிழ்ந்து போவாள்; உதடுகள் புன்னகையை உதிர்க்கும்.

''கைக்கும் உடலுக்கும் இது கண்டு விடும். கழுத்துப்பட்டைக்கு என் மூட்டையிலிருந்து பார்த்து எடுத்துக்கொண்டால் போயிற்று!'' சிரமம் சட்டென்று எளிதாகிவிடும். துணியைக் கணக்காக வெட்டி ஒட்டுத் துணிகளையெல்லாம் ஒரு கட்டாகச் சுற்றிக் கையில் கொடுத்துவிடுவாள். ஆனால் அன்று வெள்ளைக் காடாத் துணி மிகவும் சிறியதாகப் போய்விட்டது. இன்று குப்ராவின் அம்மாவின் அளவு எல்லாம் எகிறிப் போய்விடும் என்றே எல்லாரும் எண்ணினர். எல்லாரும் மூச்சு விடுவதையே மறந்து அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர். குப்ராவின் அம்மா சிறிதும் அரற்றிக் கொள்ளவில்லை; தன் முகத்தில் கவலைக்கோடு ஏற்படவும் விடவில்லை. கால் கஜமே உள்ள காடாத் துண்டை அவள் தன் விழிகளாலேயே வெட்டினாள். சிவப்புத் தோம்பின் நிழல், சிறிது நீலமும் மஞ்சளும் இழைந்த அவள் மாநிற முகத்தில் உஷையின் ஒளியைத் தேக்கிப் பளிச்சிட்டது. தொய்ந்து வாடிய ஆழமான சுருக்கங்களும், அடர்ந்த காட்டில் தீப்பற்றினால், இருட்குகைகளும் பேரொளி பெற்றுத் துலங்குமே, அப்படி ஒளி வட்டம் கூட்டி நின்றன. அவள் முறுவல் கொப்பளிக்கக் கத்தரியைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

கூடியிருந்த பெண்கள் நிம்மதி பெற்றார்கள். நம்பிக்கையோடு நீண்ட மூச்சை வெளியேற்றினார்கள். அதே வேகத்தில் மடிக் குழந்தைகளையும் தரையில் இறக்கிவிட்டார்கள். குமரிகளின் கூரிய கழுகுப் பார்வை, ஊசிக் காதில் நூலைக் கோத்தது. திருமணமாகி அவ்வூருக்கு வந்திருந்த புதுமணப் பெண்கள் விரல்களில் தொப்பியை அணிந்துகொண்டார்கள். குப்ராவின் அம்மாவின் கைக் கத்தரி விர்விர்ரென்று இயங்கியது. தாழ்வாரத்தின் கடைக்கோடியில் கிடந்த கட்டிலில் கால்களைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த ஹமீதா,

உள்ளங்கையில் மோவாயைத் தேக்கி ஏதோ யோசித்துக்கொண்டிருந்தாள்.

மதிய உணவை முடித்துக்கொண்டு தன் அம்மா தாழ்வாரத்துக்கு வருவாள். தையல் வேலைக்கான பொருள்கள் வைத்திருக்கும் துணிப்பையை அவிழ்த்து வண்ண வண்ணத் துணிகளையெல்லாம் வலையென விரித்துப் போடுவாள். தொட்டி முற்றத்தில் அமர்ந்து பாத்திரங்கள் துலக்கும் குப்ரா ஓரக்கண்ணால் செக்கச் சிவந்த 'தோம்பு'களைப் பார்ப்பாள். அவளது நிறம் மண் அடித்தாற்போன்ற மஞ்சள் நிறமானாலும், நாணச் சிவப்பு ஒன்று அனிச்ச மலராகக் குழையும். வெள்ளியைப் பழிக்கும் ஜிகினா இழைகளைக் கண்டிலிருந்து பிரித்து முழம் போட்டுத் தொடைகளில் வேலைக்கு இலகுவாக மாட்டிக்கொள்ளும் போது அவளுடைய வாடிய முகம், விந்தை உணர்வுகள் பல காட்டித் தகதகத்து ஜிகினாவைப் பழிக்கும். ஆழமான அகழியை நிகர்த்த மடிப்புகளில் ஜிகினாக் கண்டுகளின் ஒளி நிழல் சிறு சிறு தீவர்த்திகளென ஒளி பாய்ச்சும். ஒவ்வொரு தையலுக்கும் சரிகை வேலைப்பாடு அசையும். அந்த அசைவில் ஒளி நிழல் காட்டும் தீவர்த்திகள் ஆடி நடுங்கும்.

வலை வேலைப்பாடு செய்த இந்தத் துப்பட்டாவுக்கு முன்னால் இன்னும் எத்தனை துப்பட்டாக்கள் உருவாயின, தைத்துத் தயார் செய்யப்பட்டன என்ற நினைவு இல்லை. அவை அனைத்தும் பிணமாகக் கனக்கும் பெரிய மரப்பெட்டிக்குள் அடக்கமாகிவிட்டன. ஜிகினா வேலை செய்த வலைக்கண்கள்கூடப் பளபளப்பிழந்து மங்கிவிட்டன. கங்கையும் யமுனையும் போன்று வெள்ளையும் கறுப்புமாகப் பின்னிய கரைகள்கூட நிறம் இழந்துவிட்டன. இருமுனைக் குஞ்ச வேலைப்பாடுகளுங்கூட வாடிக் களையிழந்துவிட்டன. ஆனால் குப்ராவுக்குத்தான் கல்யாண மாப்பிள்ளை வரவில்லை, கல்யாண ஊர்வலம் காணவில்லை. உடுத்திக்கொள்ளாமலேயே ஓர் உடை பழையதாகிவிட்டால், அதைப் புருஷன் வீட்டுக்குப் போகும்போது கொடுத்துக் கொள்ளலாம் என்று பத்திரப்படுத்தி விடுவார்கள். அப்புறம் புது நம்பிக்கையோடு புது உடை தயாரிக்கத் தொடங்கிவிடுவார்கள். புதிதாக யோசித்துப் பலவாறாகப் பார்த்துப் பார்த்துப் புதுப் பட்டுத் துணி தேர்ந்தெடுக்கப்படும். தாழ்வாரத்துப் பலகையில் சுத்தமான சமுக்காளம் விரிக்கப்படும். தெருப் பெண்கள் வாயில்

வெற்றிலையும், கையில் குழந்தையுமாகக் கால் கொலுசுகள் கணகணக்க வந்து கூடுவார்கள்.

''சின்னத் துணி கரைக்குக் கண்டுவிடும். உடைக்குத் துணி பற்றுதுபோலிருக்கிறதே!''

''ஏன் அத்தை! இதோ பார்! இந்தத் தோம்பு உடைக்கு வருமோ?''

அப்புறம் அத்தனை பேருடைய முகத்திலும் கவலை தோய்ந்து விடும். குப்ராவின் அன்னை பேசாமல், அக்கலையில் வல்லவளைப் போல், தன் விழி நாடாவினாலேயே துணியின் அகல நீளத்தை அளவெடுப்பாள். அந்த நேரத்தில் மற்றப் பெண்கள் தங்களுக் குள் துணி சிறுத்துவிட்டதைப்பற்றிக் கசமுசவென்று பேசுவார் கள்; அப்புறம் பெரிதாகக் கலகலவென்று நகைப்பார்கள்.

இந்தத் தருணத்தில் ரசனைமிகு துணிச்சல்காரப் பெண் ஒருத்தி சாந்தி முகூர்த்தப் பாடல், 'திரண்டு குளி'ப் பாடல், சம்பந்தி ஏசல் என்று எடுத்துவிடுவாள். நான்கு முழம் முன்னே கற்பனைச் சம்பந்தி அம்மாளைக் கொண்டு நிறுத்தி ஏசல் பாடத் தொடங்கி விடுவாள். வெட்கம் மானத்தை எல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு அசிங்கமும் ஆபாசமும் நிறைந்த கேலிச்சொற்களாக வாரி வீசுவார்கள். இதுபோன்ற சமயங்களில் கல்யாணமாகாத கன்னிப் பெண்களைத் தாழ்வாரத்துக்கு அப்பால், ஓட்டுவில்லை வேய்ந்த நடையில்போய்த் தலையைத் திரையிட்டு மூடிக்கொண்டு உட்காரச் சொல்லுவார்கள். தாழ்வாரத்தில் ஒரு புதிய கெக் கலிச் சிரிப்பு எழுந்தால், பாவம், அந்தப் பெண்கள் ஒரு பெருமூச்சு விட்டுத் தாபத்தை வெளியேற்ற முயல்வார்கள். 'அல்லாவே! இந்தச் சிரிப்பும் கொம்மாளமும் இந்தப் பேதைகளுக்கு எப்போது கிட்டுமோ?'

அந்தக் கேலியிலிருந்து வெகு தொலைவில், குப்ரா வெட்கமே வடிவமாகக் கொசுக்கள் வாழும் அறைக்குள் அடைந்து தலை குனிந்து உட்கார்ந்திருப்பாள். இதற்கிடையில் துணிவெட்டும் வேலை மிக இக்கட்டான நிலையை அடைந்திருக்கும். இப்படி வெட்ட வேண்டிய முக்கோணப் பூ அப்படி வெட்டப்பட்டு விட்டால்போதும், கூடியிருக்கும் பெண்களின் கருத்தும் பேச்சுமே மாறிவிடும். குப்ரா அச்சத்தோடு கதவு இடுக்கு வழியே எட்டிப்பார்ப்பாள்.

என்ன கஷ்டம்! ஆண்டவன் என்ன எண்ணிக்கொண் டிருக் கிறானோ? ஓர் உடையாவது சரியாக நிம்மதியாகத் தைத்து முடிந்த

பாடில்லை! முக்கோணப் பூ ஏறுமாருக வெட்டப்படுமானல், புதுச் சம்பந்தம் கொண்டு வந்திருக்கிருளே, 'பரியாரி'ப் பெண், அதில் தடங்கள் ஏற்படக் கூடுமாம். ஒன்று மாப்பிள்ளைக்கு வைப்பாட்டி வந்து சேருவாளாம். இல்லை, அவன் அம்மா நல்ல 'கிட்டி'யாகக் கட்டிப் போட்டுக் கஷ்டப்படுத்துவாளாம். தெரியாமல் அதைக் கரையில் இணைத்துத் தைத்துவிட்டால் 'மேஹர்' எழுதும்பொழுது பேச்சு முறிந்துவிடலாம். அப்படி நேரவில்லை என்ருல், வெண்கலக் கல் கட்டிலில் முதலிரவே கணவன் மனைவிக்கிடையே சண்டை வந்துவிட லாமாம். கூறையுடைத் தயாரிப்பதில் எத்தனை நுணுக்கம் வேண்டுமோ, அதைக் காட்டிலும் நுணுக்கம் வாய்ந்தது கூறை யுடைச் சகுனம். அம்மாவின் அத்தனை அநுபவமும் அறிவும் இந்த விஷயத்தில் எள்ளளவும் பயன்படாது. யார் கண்டது, சரியான நேரத்தில் கடுகத்தனை விஷயமும் மலையாகிப் போகலாமே! ஆண்டவன் பெயரில் 'பிஸ்மில்லாஹ்' கூறிய நாளிலிருந்தே, சொல்லப் போனல் பெண்ணைப் பெற்ற நாளி லிருந்தே, அம்மா கல்யாணத்துக்கு வேண்டிய காரியங்களைக் கவனிக்கலானுள். சிறு துண்டு மிகுந்தாலும், ஊசி நூல் வைக்கும் பெட்டிக்கோ, அத்தர் குப்பிக்கோ உறை தைத்துப் போடுவாள். குஜிலிப் பொட்டு, ஜிகினுப் பொட்டுகளை ஜாக்கிரதையாக எடுத்து வைப்பாள். பெண்ணுக்கு என்ன, கக்கிரி வெள்ளரி போன்று கிடுகிடுவென்று வளர்ந்து விடுவாள்! கல்யாணம் கார்த்திகை என்று வந்தால், இதெல்லாம் எத்தனையோ பயன் படுமே!

அப்பா இறந்தபின் இந்தக் கலையும் முறையுங்கூட இறந்து விட்டன. ஹமீதாவுக்குத் திடீரென்று தன் தந்தையின் நினைவு வந்தது. அப்பா எத்தனை ஒடிசலாக ஒல்லியாக இருந்தார்! உயரமோ மொஹர்ரம் கொடி மாதிரி. குனிந்தால் நிமிர்ந்து நிற்பது சிரமமாயிருந்தது. விடியற்காலையில் எழுந்து பல் துலக்க வேப்பங்குச்சி ஒடித்து வருவார். ஹமீதாவைத் தன் முழங்காலில் வைத்துக்கொண்டு என்னதான் யோசிப்பாரோ, தெரியாது! யோசனையில் வேப்பங்குச்சியைக் கடிக்கும்போது துரும்பு தொண்டைக்குள் போய்விடும். அது புரையேறி இருமல் வந்து விடும். ஹமீதா பயந்து போய் அவருடைய மடியிலிருந்து இறங்கி விடுவாள். அவர் இருமும் வேகத்தில் அவளைத் தூக்கித் தூக்கிப் போடும். அது அவளுக்குச் சிறிதும் பிடிக்காது. அவள் காட்டும்

சிறு கோபத்தைக் கண்டு மகிழ்ந்து அவர் சிரிக்கத் தொடங்குவார். சிரிப்பும் இருமலும் சேர்ந்து இதயத்தை உலுக்கி எடுத்துவிடும். கழுத்து வெட்டிய புறுப்போலத் துடிதுடித்துப் போவார். அப்புறம் . . .? அம்மா ஓடி வந்து அவருக்கு உதவுவாள். முதுகில் தட்டிக் கொடுப்பாள், தடவிக் கொடுப்பாள்.

''அட கடவுளே! இப்படியும் ஒரு சிரிப்பா?''

அம்மா பிடித்துவிட, அப்பா இருமிச் சிரித்துச் சிவந்த கண்களை உயரத் தூக்கிப் பரிதாபமாகச் சிரிப்பார். இருமல் நின்று போனாலும் வெகுநேரம்வரை மூச்சு வாங்கிக்கொண் டிருக்கும்.

''ஏதாவது மருந்துகிருந்து சாப்பிடக் கூடாதா? எத்தனை தடவை உங்களிடம் சொல்லியாயிற்று?''

''பெரிய ஆஸ்பத்திரி டாக்டர் ஊசி போட்டுக்கொள்ளச் சொல்கிறான். தினம் முக்கால் சேர் பால் குடிக்கச் சொல்கிறான். அரைவீசம் வெண்ணெயை விழுங்கச் சொல்கிறான்!''

''எருக்கை விட்டு அடிக்க அந்த டாக்டரின் மூஞ்சியிலே. இருமலுக்கு மருந்து வெண்ணெயா? சீதளம் இல்லையோ? சளியும் கோழையும் உண்டுபண்ணி விடாதா? யாராவது நல்ல ஹகீமிடம் காட்டுங்கள்!''

''காட்டுகிறேன்!''

அப்பா ஹுக்கா குடிக்கத் தொடங்கி விடுவார். உடல்நலம் சீருற்றாற்போலத் தோன்றும்.

''தீயை வைக்க அந்த ஹுக்காவிலே! நல்ல சாவுக் கிராக்கி வந்து சேர்ந்தது. அதனால்தானே இத்தனை இருமல்? வயசு வந்த பெண் ஒன்று வீட்டிலே இருக்கிறதே? அதுகண்ணில் படுகிறதா?''

அப்பாவின் கண்கள் குப்ராவின் வாலைப் பருவத்தை இரங்கிக் கெஞ்சும் பார்வையில் நோக்கும். குப்ரா பருவப் பெண்ணா? யார் சொன்னார்கள், பருவப் பெண் என்று! 'பிஸ்மில்லாஹ்!' அடி நாளிலிருந்தே அவள் தன்னைப் பருவப்பெண்ணாக எங்கே கண்டாள்? அவள் பூப்பெய்திய பேச்சைக் கேட்டே துணுக் குற்றுக் குன்றிவிட்டாளே! என்ன பருவம் வந்ததோ, யார் கண்டார்கள்? அவள் விழிகளில் குறும்பு தாண்டவமாடவில்லை; கன்னத்தோடு கூந்தல் உறவாடிக் குறுகுறுக்கவில்லை. உள்ளத்தில் புயல் வீசவில்லை. ஆவணி புரட்டாசி மாதத்து மேகங்களைக் கண்டு துள்ளிக் குதித்துக் களித்துக் காதலனோ, துணைவனோ வேண்டுமென்று வேண்டவில்லை. குனிந்து குனிந்து, பயந்து பயந்து ஓசைப்படாமல் பருவம் எப்போது அவள்மீது ஊர்ந்

ததோ, தெரியாது! அதேபோல வந்த சுவடு தெரியாமல் அவளை விட்டு எங்கே போயிற்று என்றும் தெரியாது. இனிக்கவேண்டிய யௌவனப் பருவம் உப்புக் கரித்தது; பிறகு கசக்கவும் கசந்தது.

அப்பா ஒரு நாள் வாசற்படியில் குப்புற விழுந்துவிட்டார். விழுந்தவரைத் தூக்கி நிறுத்த ஹகீம்—டாக்டர்களின் மருந்து பயன்படவில்லை. ஹமீதா இனிப்பு ரொட்டிக்குப் பிடிவாதம் பிடிப்பதை நிறுத்திக்கொண்டாள். குப்ராவுக்கு வரவேண்டிய பரிசங்கள் (பைசாம்) எங்கு வழி தவறிச் சென்றனவோ, யாருக்கும் விளங்கவில்லை. சாக்குத் திரைக்குள் ஒருத்தியின் யௌவனம் சடைசி அழுகை அழுதுகொண் டிருக்கிறது என்பதும், இன்னொருத்தியின் பருவம் பாம்பெனப் படம் எடுத்து நிற்கிறது என்பதும் யாருக்குமே கண்ணில் படவில்லை. ஆனால் அம்மாவின் பழக்கம் மட்டும் மாறவே இல்லை. அவள் முன்போலவே, தாழ்வாரத்தில் வண்ண வண்ணத் துணிகளை விரித்துப் பொம்மை விளையாட்டு விளையாடிக்கொண் டிருந்தாள். எப்படியோ குருவியாகச் சேர்த்து 'ஷப்ராத்'ப் பண்டிகையின் போது ஒரு கிரேப் துப்பட்டா ஏழரை ரூபாய்க்கு அவள் வாங்கியே விட்டாள். இப்பொழுது வாங்கவேண்டாம் என்று ஒத்திப் போட முடியாத நிலை. நடு மாமாவின் தந்தி வந்திருந்தது, அவருடைய பெரிய மகன் ராஹத், போலீஸ் பயிற்சி விஷயமாக அங்கு வரப் போகிறான் என்று! அம்மாவுக்குக் கைகால் ஓடவில்லை. மாமன் மகன் ராஹத் வரப்போகிறான் என்பதை நினைத்து அல்ல; வாசலில் கல்யாண ஊர்வலமே வந்து நின்றுவிட்டாற்போன்ற பிரமையில்! இன்னும் மணப் பெண்ணுக்கு வகிடு எடுத்து அதில் அலங்காரம் செய்யக் கொர்ணுத் தகடு கூடத் கத்தரித்து வைக்கவில்லையே! சந்திர—சூரியப் பிரமை வேறு தயார் செய்தாக வேண்டுமே என்பது போல! பதற்றத்தில் அவளுக்குப் பிராணனே போய் விட்டாற்போல் இருந்தது. உடனே, தான் உடன் பிறவாச் சகோதரி உறவு கொண்டாடிய பந்தோவின் அம்மாவுக்குச் சொல்லியனுப்பினாள்:

''அக்கா! இந்த நிமிஷமே நீ வரவில்லையென்றால், என் செத்த முழியைத்தான் பார்க்கமுடியும்!''

அப்புறம் அந்தச் சகோதரிகள் இருவரும் ஏதோ காதைக் கடித்துக்கொண்டார்கள். இடையிடையே, முற்றத்தில் உட்கார்ந்து அரிசி புடைத்துக் கொண்டிருந்த குப்ராவையும் பார்த்துக்கொண்டார்கள். அவர்களுடைய கசமுசப் பேச்சு

குப்ராவுக்குப் புரியாததோ தெரியாததோ அல்ல. அதே நேரத்தில் அவள் அம்மா காதில் போட்டிருந்த நான்கு குன்றிமணி எடையுள்ள காதணியைக் கழற்றித் தன் உடன் பிறவாத் தங்கையிடம் கொடுத்தாள். எப்படியாவது அன்று மாலைக்குள் ஒரு தோலா எடை வெள்ளி இழை, ஆறு குன்றிமணி அளவுக்கு குஜிலிப் பொட்டு, இடுப்புப் பட்டை தைக்கக் கால்கள், தோம்பு முதலியவை வாங்கி வருமாறு பணித்தாள். வெளிப்புறத்து அறையைக் கூட்டி மெழுகிச் சுத்தம் செய்து வைத்தாள். சிறிது சுண்ணும்பு வாங்கித் தெளித்துக் குப்ரா தன் கைகளாலேயே அறையைச் சீர்ப்படுத்திஞள். அறை பளிச்சென்று ஆகி விட்டது. ஆஞல் குப்ராவின் உள்ளங்கைத் தோல் உதிர்ந்து விட்டது. அன்று மாலை மசாலா அரைக்க உட்கார்ந்தபோது எரிந்த எரிச்சலில் அவளுக்குத் தலையைச் சுற்றிக்கொண்டு மயக்கமே வந்துவிட்டது.

இரவு முழுவதும் படுக்கையில் புரண்டு புரண்டே கழிந்தது. கை எரிச்சல் ஒரு காரணம். இன்னொரு காரணம், மறுநாள் காலை வண்டியில் ராஹத் வருகிருன் என்பது!

''என் அல்லாவே! ஆண்டவனே! இந்தத் தடவை என் அக்காவுக்கு அதிர்ஷ்டத்தைக் கொடு. உன் பள்ளிவாசலுக்கு வந்து நான் நூறு முறை 'ரக்அத்,' 'நஃபல்' தொழுகை நடத்தி நேர்த்தி செலுத்துகிறேன்!'' என்று ஹமீதா காலைத் தொழுகை நடத்தும்போது வேண்டிக்கொண்டாள்.

காலையில் ராஹத் வந்தபொழுது, குப்ரா கொசுக்கள் அடைந்து கிடக்கும் அறைக்குள் போய்ப் புகுந்துகொண்டாள். ராஹத் சேவையும் பரோட்டாவும் தின்று சிற்றுண்டியை முடித்துக்கொண்டு வாசற்புறத்து அறைக்குப் போன பிறகே வெளியே வருவோமா வேண்டாமா என்று புது மணப் பெண் போல் மெதுவாக எட்டிப் பார்த்து அறையிலிருந்து வெளியே வந்தாள் குப்ரா. வந்த கையோடு எச்சிற் பாண்டத்தைத் தூக்கிக் கொண்டாள்.

''கொடு, அக்கா! நான் கழுவிக்கொண்டு வருகிறேன்'' என்ருள் ஹமீதா குறும்பாக.

''வேண்டாம்!'' குப்ரா வெட்கத்திஞல் தலை குனிந்தாள்.

ஹமீதா சிணுங்கிக்கொண்டே இருந்தாள். அம்மா அதை ரசித்து முறுவலித்தவாறே கிரேப் துப்பட்டாவுக்குக் கரை வைத்துத் தைத்துக்கொண் டிருந்தாள். காதணி போன வழியே, மூக்குத்தி, வெள்ளிக் கொலுசு போன்றவையும் போயின. அவள் கைம்மை களைவதற்காக நடு மாமா செய்து போட்டிருந்த கைக்கு இரண்டு வளையல்களும் கூட அதே வழியைப் பின் பற்றின. தினமும் வீட்டில் உள்ளவர்கள் உப்புச் சப்பில்லாத உணவருந்தி, ராஹத்துக்கு மட்டும் விருந்து படைத்தார்கள். பரோட்டா பொரித்தல், இறைச்சி வறுத்தல், புலாவ் சமைத்தல் என்று திட்டம் வளர்ந்துகொண்டே இருந்தது. அவர்களோ வறட்டு ரொட்டியை விழுங்கமுடியாமல் விழுங்குவார்கள். அது தொண்டைக்குள் இறங்கத் தண்ணீரைப் பருகுவார்கள். ஆனால் வரப்போகிற மாப்பிள்ளைக்கு வகை வகையாக மாமிசம் சமைத்துப் போடுவார்கள்.

ஹமீதா முகத்தைத் தூக்கிக்கொண் டிருப்பதைக் கண்டு, ''காலம் கெட்டுக் கிடக்கிறதடி, குழந்தை!'' என்று தாயார் சமாதானப்படுத்துவாள். அதைத் தொடர்ந்து அவள் யோசனை ஓடும்:

'நாம் பட்டினி கிடந்து மாப்பிள்ளைக்கு ஊட்டமான உணவு படைத்துக்கொண் டிருக்கிறோம். அக்கா விடியற்காலையில் எழுந்து ஏதோ மந்திர யந்திரத்தைப்போல் செயற்படுகிறாள், துறுதுறுவென்று! வாய் கொப்புளித்து வெற்றுத் தண்ணீரைக் குடித்துவிட்டு, ராஹத்துக்காகப் பரோட்டா தயாரிக்கிறாள். பாலை ஒட்டக் காய்ச்சுகிறாள், பாலேடு கெட்டியாக வேண்டும் என்று! அவள் சக்திக்கு உட்பட்ட விஷயமாயிருந்தால் தன் சதையையே பரோட்டாவாக்கிப் போடுவாள்போல் இருக்கிறது. ஆமாம், ஏன் போடமாட்டாள்? கடைசியில் என்றைக்காவது ஒரு நாள் அவன் அவளுக்குச் சொந்தமாகப் போகிறானே! அவன் சம்பாதிப்பதையெல்லாம் அவள் கையில் கொண்டு வந்து அல்லவா வைப்பான்! பலன் தரக்கூடிய செடி என்றால் யார்தான் நீர் பாய்ச்சமாட்டார்கள்? அது பூத்துக் குலுங்கி, பிஞ்சு வைத்துக் காய்த்துப் பருத்துப் பெருஞ்சுமை தாங்காமல் கிளை தானாகத் தாழ்ந்து பலன் தரும்போது, இன்று கேலி செய்து திரிகிறவர்களின் முகத்தில் எல்லாம் செருப்பால் அடித்தாற் போல் இருக்காதா?' இப்படி எண்ணம் எழும்போது அக்காவின் வாடிய முகத்தில் மங்களமான மகிழ்ச்சிப் பூத்துக்

குலுங்குவது போலத் தோன்றும். செவிகளில் மங்கள இசை ஒலிக்கும்.

அவள் ராஹத்தின் அறையைப் பெருக்கி மெழுகுவாள். அவன் துணிமணிகளை அன்போடு எடுத்து தட்டிக் கொட்டி மடித்து வைப்பாள். அவை அப்பொழுது ஏதோ சொல்வதுபோல் இருக்கும். அவள், அவனுடைய எலி செத்த நாற்றம் அடிக்கும் காலுறை, வேட்டி, கருவாட்டு நாற்றம் ஊரைக் கூட்டும் பனியன், மூக்குச் சளி சிந்திச் சிந்திக் கனத்திருக்கும் கைக்குட்டை எல்லாவற்றையும் கன அக்கறையோடு சுத்தம் செய்வாள். எண்ணெய்ப் பிசுக்கு ஏறி இருக்கும் தலையணை உறையை வெளுத்து 'ஸ்வீட் டிரீம்' பொறிப்பாள். ஆனால் விஷயம் இத்தோடு அடங்கிப் போகவில்லை. ராஹத் காலையில் முட்டையும் பரோட்டாவும் வயிறு முட்டத் தின்றுவிட்டுப் போவான். மாலையில் இறைச்சி மசியலை ஒரு கை பார்த்துவிட்டு உறங்கிப் போவான். அம்மாவுக்கு உடன்பிறவாச் சகோதரி, கசமுசவென்று காதைக் கடிப்பாள்.

''ரொம்ப வெட்கப்படுகிறான் பிள்ளை!'' என்பாள் அம்மா, உண்மை நிலையை மறைத்து.

''அது சரி, இருந்தாலும் நடை, உடை போக்கிலிருந்து, கண்ணிலிருந்து ஏதாவது தெரியவேண்டுமே!''

''வேண்டாம் அம்மா, இந்தக் கண் அடிக்கிற உத்தியோகம் என் பெண்ணுக்கு! ஆண்டவன் சாட்சியாகச் சொல்கிறேன், அவள் புடைவைத் தலைப்பைக் கூட யாரும் பார்த்திருக்க முடியாது!''

அம்மா பெருமையோடு சொல்வாள்; அம்மாவுக்கு உறவு முறைச் சித்தி என் உயிரை வாங்க வந்துவிடுவாள்.

''ஐயோ! நான் என்ன பண்ணுவேன், சித்தி?''

''ராஹத் மியானோடு பேசிப் பார்க்கிறதுதானேடி, அறிவு கெட்ட முண்டமே!''

''அப்பாடியோவ்! எனக்கு வெட்கமாயிருக்கிறது, அம்மா! இன்னொன்று, அவரைப் பார்த்தாலே எனக்குப் பயமாயிருக்கிறது!''

''ஆமாம். அவன் அப்படியே உன்னைக் கிழித்துத் தின்றுவிடுவான் பாரு!'' அம்மா சிடுசிடுத்துக் கூறுவாள்.

''மாட்டார். இருந்தாலும்!'' எனக்குப் பதில் சொல்ல வராது, வாய் அடைத்துவிடும்.

அப்புறம் இரகசிய ஆலோசனை நடந்தது. மிகுந்த யோசனைக்குப் பிறகு பிண்ணாக்குப் பொரியல் தயாரிக்கப் பட்டது, அக்காள் புருசனாகப் போகிறவரைப் பரிகாசம் செய்வதற்காக. அன்று அக்காவே கூடப் பலமுறை சிரித்து விட்டாள் என்றால் . . .!

மெதுவாகச் சொன்னாள்: ''இதோ பார், சிரித்துச் சிரித்து வைக்காதே! அப்புறம் வேடிக்கை அவ்வளவும் வீணாகப் போய் விடும்!''

''நான் சிரிக்கமாட்டேன்!'' அவளுக்கு வாக்குறுதி அளித்தேன்.

''உணவு அருந்துங்கள்!'' என்று மனை போட்டு உணவுத் தட்டை எதிரே வைத்துக் கூறினேன்.

மனைக்குப் பக்கத்தில் வைத்திருந்த லோட்டாவை எடுத்துக் கைகழுவியவாறே ராஹத் என்னைப் பார்த்தான். நான் ஓட்டம் பிடித்தேன். என் மனசு படபடவென்று அடித்துக்கொண்டது.

''அட கடவுளே! என்ன குறும்புக் கண்கள் அந்தப் பொல்லாத மனிதருக்கு!''

''அடி மக்குப் பெண்ணே! அவன் முகத்தை எப்படி வைத்துக் கொள்ளுகிறான், பாரு! அடி, கெடுத்து விட்டாயே, வேடிக்கைகளையெல்லாம்!''

அம்மா என்னைப் பிடித்துத் தள்ளினாள். நான் அசைந்து கொடுக்கவில்லை.

அம்மா ஒரு முறை என்னைப் பார்த்தாள். அவள் பார்வையில் வேண்டுகோள் இருந்தது; திருமணம் ஆகாமலே திரும்பிப் போகிற பிள்ளை வீட்டாரைக் காண்பது போன்ற குமைச்சல் இருந்தது. பழசாகிப்போய்விட்ட திருமணத்துக்கான உடையைக் காணும் வாட்டமும் வருத்தமும் தேங்கி நின்றன. நான் தலைகுனிந்த வண்ணம் போய்த் தூணில் சாய்ந்து நின்று கொண்டேன்.

ராஹத் மௌனமாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். என் புறம் பார்க்கவே இல்லை. பிண்ணாக்குப் பொரியல் தின்பதைப் பார்த்து அவரை நான் கேலி செய்திருக்கவேண்டும். கலகலவென்று நகைத்து, ''பலே, பலே! மாப்பிள்ளை சார் . . . பிண்ணாக்குச் சாப்பிடுகிறீர்களா?'' என்று கேட்டிருக்க வேண்டும். ஆனால் யாரோ என் குரல்வளையைப் பிடித்து அழுத்தினாற்போல் இருந்தது.

அம்மா என்மேல் எரிந்து விழுந்து திரும்ப அழைத்தாள். வாய்க்குள்ளாகவே திட்டித் தீர்த்தாள். நான் அவரிடம் போய் என்ன சொல்வது? அவர்தான் பிண்ணாக்கையும் சுவைத்துச் சாப்பிட்டுக்கொண் டிருந்தாரே! அந்தப் பாவி என்னையுமே தின்றுவிட்டால் . . .?

''ராஹத் அண்ணா! பொரியல் பிடித்ததா?''

அம்மா சொல்லிக் கொடுத்ததன்பேரில் நான் கேட்கும்படி ஆயிற்று!

ஆனால் பதில் இல்லை!

''சொல்லுங்களேன்!''

''அடி, போய்ச் சரியாகக் கேளடி!'' அம்மா சாடினாள்.

''நீங்கள் தந்ததை நான் சாப்பிட்டு விட்டேன். சுவையாகத்தானே இருக்கணும்!'' என்றார் அவர்.

''அட, சுத்தக் காட்டாளாகப் போய் விட்டாயே!'' அம்மாவுக்குப் பொறுக்கவில்லை. தானே கேட்டுவிட்டாள்: ''உனக்கு என்ன பொரியல் என்று ஏதும் தெரியவில்லையா? பிண்ணாக்குப் பொரியலை இப்படிச் சுவைத்துச் சாப்பிட்டு விட்டாயே!''

''பிண்ணாக்கா? ஆமாம், தினம் வேறு எதனாலே செய்கிறீர்களாம்? எனக்குப் பழகிப் போய்விட்டது. பிண்ணாக்கும் தவிடும் தின்ன!'' என்று அலட்சியமாகச் சொன்னார் ராஹத்.

அம்மாவுக்கு முகம் தொங்கிப் போயிற்று. அக்காவின் தாழ்ந்த இமைகள் அப்புறம் நிமிரவே இல்லை. மறு நாள் அக்கா இரண்டு மடங்கு தையல் வேலை செய்தாள். நான் மாலை உணவு எடுத்துப் போனேன்.

''இன்றைக்கு என்ன கொண்டுவந்திருக்கிறீர்கள் சொல்லுங்கள்! இன்றைக்கு முறை மரத்தூள் பிட்டாக இருக்கணுமே!'' என்றார் அவர்.

''எங்கள் கைச்சமையல் உங்களுக்குப் பிடிக்கவில்லையோ?'' நான் எரிச்சலுடன் கேட்டேன்.

''அதற்காகச் சொல்லவில்லை! கொஞ்சம் வேடிக்கையாகத் தோன்றுகிறது. ஒருவேளை பிண்ணாக்குப் பொரியல். இன்னொரு சமயம் தவிட்டுக் கறி—இதெல்லாம் . . .''

எனக்கு உடலையும் உள்ளத்தையும் பற்றி யெரிந்தது. நாங்கள் வரட்டு ரொட்டியைத் தின்றுகொண்டு அவருக்கு யானைத் தீனி போடுகிறோம். நெய் தடவிய பரோட்டவாக வயிற்றில்

திணிக்கிறோம். அக்காவுக்கு அரைச்சேர் நன்னாரி வேர்க் கஷாயம் கிடையாது. அவருக்குப் பாலும் பாலேடுமாகக் கொடுக்கிறோம்! நான் பொருமிக்கொண்டு வந்துவிட்டேன்.

ஆனாலும் அம்மாவின் உடன்பிறவாச் சகோதரி சொன்ன மருந்து பலன் அளித்துவிட்டது. ராஹத் பெரும்பாலான பொழுதை வீட்டிலேயே செலவழிக்கலானான். அக்கா அடுப்படியே கதியாகக் கிடப்பாள். அம்மா திருமண உடை தயாரிப்பதில் பொழுதைச் செலவிடுவாள். ராஹத்தின் தீய விழிகள் கூரிய அம்பாகி என் உள்ளத்தைத் துளைக்கும். ஒன்றும் இல்லாததற்கெல்லாம் அர்த்தமில்லாத பேச்சு, பேச்சு; பேச்சு! சாப்பிடும் போது, தண்ணீர் வேண்டும், உப்பு வேண்டும் என்று ஏதாவது சாக்குச் சொல்லிக் கூப்பிட்ட வண்ணம் இருப்பார். அதைத் தொடர்ந்து உருப்படாத வம்பு! நான் அலுத்துச் சலித்து அக்காவிடம் போய் உட்காருவேன். 'யார் ஆட்டுக்கு யார் தீனியும் புல்லும் போடுவது?' என்று அவனிடம் கேட்டுவிடலாமா என்று ஒவ்வொரு சமயம் தோன்றும். 'அடி அக்கா! என்னால் உன் காலைக்கு மூக்குக்குத்திப் பழக்கமுடியாது என்று சொல்லி விடுவோமா என்று எண்ணுவேன். ஆனால் அக்காவின் சிடுக்கு விழுந்த தலைமயிரில் அடுப்புச் சாம்பல் பறந்திருப்பதைப் பார்த்தால், இல்லை, இல்லை, அது அடுப்புச் சாம்பல் இல்லை! எனக்குக் குலை நடுக்கம் எடுத்துவிடும்—அவள் நரைமயிரைக் கூந்தலுக்குள் அழுத்தி மூடி அமுக்கிவிட்டேன். கட்டையிலே போகிற மண்டைச் சளி வந்தாலும் வந்தது, பாவம், அக்காவின் தலைமயிர் குப்பென நரைக்க அல்லவா ஆரம்பித்து விட்டது!'

ராஹத் மீண்டும் ஏதோ சாக்கிட்டுக் கூப்பிட்டான்.

''உம்!'' எனக்குப் பற்றிக்கொண்டு வந்தது. அக்கா வெட்டிய பெட்டைக் கோழிபோலக் கழுத்தைத் திருப்பி என்னை விழித்துப் பார்த்தாள். அதனால் வேறு வழியின்றி நான் போகும்படியாயிற்று.

''அக்காவுக்கு என்மேலே கோபமா?'' ராஹத் தண்ணீர்க் கோப்பையை வாங்கிக்கொள்ளும் சாக்கில் என் கையைப் பற்றிக் கொண்டார். எனக்கு மூச்சே நின்றுவிடும்போல் ஆகிவிட்டது. நான் கையை உதறிக்கொண்டு ஓட்டமாக ஓடினேன்.

''என்ன சொன்னார்?'' அக்கா வெட்கம் மீதூரக் குரல் தழுதழுத்துக் கேட்டாள். நான் பேசாமல் அவள் முகத்தையே பார்க்கலானேன். நான் என்ன சொல்லுவது?

''யார் சமைத்தது என்று கேட்டார். ஆகா! சாப்பிட்டுக் கொண்டே இருக்கணும் என்று தோன்றுகிறது. சமைத்தவளின் கையைச் சாப்பிட—இல்லை, இல்லை, முத்தமிடணும் என்று தோன்றுகிறது!'' என்று சொல்லத் தொடங்கினேன். மஞ்சளும் தனியாவும் அரைத்து அரைத்து அந்த வாசனை ஏறிச் சொற சொறப்பாகிவிட்ட அக்காவின் கையை எடுத்து நான் என் கன்னத்தில் வைத்துக்கொண்டேன். எனக்குக் கண்ணீர் வந்தது.

''இந்தக் கைகள் . . .'' நான் யோசிக்கலானேன். 'காலையும் மாலையும் வேலை வேலை என்று கூலியில்லா வேலைக்கு மாரடிக்கும் இந்தக் கைகளுக்கு எப்போதாவது விடிவு காலம் வருமா? இவற்றை ஏற்றுக்கொள்ள ஒருவன் வருவானா, மாட்டானா? இந்தக் கைகளை ஒருவன் அன்போடு முத்தமிடுவானா, மாட்டானா? இவற்றில் மருதாணி இட்டு மணம் நடைபெறுமா, பெருதா? இவை தேனிலவு கண்டு மணக்குமா, மணக்காதா?' எனக்கு வீறிட்டுக் கதறவேண்டும் போலிருந்தது.

''இன்னும் என்ன சொன்னர்?''

அக்காவின் கைகள்தான் சொற சொறப்பாக இருந்தனவே ஒழியக் குரல் இனிமை . . . இனிமை என்ருல் என்ன இனிமை? இந்த ராஹுத்துக்கு மட்டும் காதுகள் இருந்தால் . . . ஆனல் இந்த ராஹுத்துக்குக் காது இல்லை; மூக்கு இல்லை. நாகம்போன்று வயிறு மட்டுந்தான் இருந்தது.

''இன்னும் என்ன சொன்னரா? உன் அக்காவை 'இத்தனை வேலை செய்யச் சொல்லாதே! கஷாயம்—கிஷாயம் குடித்து உடம்பைப் பார்த்துக்கொள்ளச் சொல்!' என்ருர்.''

''போடி, புளுகுண்ணி!''

''பேஷ்! நானு புளுகுண்ணி! உன்னுடைய இவர் . . .!''

''பேசாதேடீ சவமே!'' அவள் என் வாயைப் பொத்தி விட்டாள்.

''இதோ பார்! ஸ்வெட்டர் பின்னியாகிவிட்டது. இதை அவருக்குக் கொடுத்துவிட்டுவா! ஆனல் என்மேல் ஆணை, என் பெயரை இழுக்காதே'' என்ருள் அக்கா.

'வேண்டாம், அக்கா! அவருக்கு ஸ்வெட்டர் வேண்டாம் அக்கா! பிடியளவு இருக்கும் உன் எலும்புகளுக்குத்தான்

ஸ்வெட்டர் தேவை' என்று நான் சொல்ல நினைத்தேன். ஆனால் சொல்ல முடியவில்லை.

''ஏன் அக்கா! நீ போட்டுக்கொள்ளமாட்டாயா?''

''எனக்கு எதற்கடி ஸ்வெட்டர்? அதுப்படிதான் கணகண வென்றிருக்கிறதே!''

ஸ்வெட்டரைப் பார்த்துவிட்டு ராஜூத் தன் ஒரு புருவத்தைக் குறும்பாக நெறித்து, ''இந்த ஸ்வெட்டர் நீங்கள் தயாரித்ததா?'' என்று கேட்டார்.

''இல்லை!''

''அப்படியானால் நான் போட்டுக்கொள்ளமாட்டேன்!''

அவன் முகத்தைப் பிறாண்டி எடுத்துவிடலாமா என்று தோன்றியது எனக்கு. 'கீழ்ச் சாதிக் களிமண்! மூளையிலே ஏதாவது இருந்தால் அல்லவா? கண் உறங்கும்போதும், கண் விழிக்கும்போதும் உனக்கே அடிமை செய்யும் கைகள் பின்னியவையடா! ஸ்வெட்டர் பின்னுகிறபோது போட்ட ஒவ்வொரு சுருக்கும் அந்த அதிர்ஷ்டம் கெட்டவளின் ஆசைகளின் கழுத்தில் போட்ட சுருக்காகி விட்டதடா! உனக்கு இதமாக விசிறி இன்பம் சேர்க்கப் பிறந்த கைகள் பின்னியவை. அறுந்த பொத்தான்களையும், கிழிந்த தலைப்புகளையும் தைத்துத் தர ஏற்பட்ட கைகள் அவை. அவற்றைப் பற்றிக்கொள்ளடா கழுதை! பெரும் பெரும் புயல்களையும் அலைகளையும் சமாளித்து உன் வாழ்க்கையென்ற படகைப் பத்திரமாகக் கரை சேர்க்க வல்ல துடுப்புகள் அவை. அவற்றுக்குச் சிதார் வாசிக்க வராது. பரத நாட்டியம், மணிபுரி முத்திரை காட்ட வராது. அவற்றுக்குப் பியானோவில் நடனம் புரியச் சொல்லித் தரப்படவில்லை. அவற்றுக்கு மலரோடு விளையாடும் பாக்கியங்கூடக் கிட்டவில்லை. இந்தக் கைகள் உன் உடலுக்குக் கொழுப்பு ஏற்றுவதற்காகக் காலையிலிருந்து மாலைவரை மாடாக உழைக்கின்றன. பின்னல் வேலை, தையல் வேலை புரிகின்றன. சவுக்காரத்திலும் சோடாவிலும் மூழ்கி அணைகின்றன. அடுப்புச் சூட்டைப் பொறுத்துக் கொள்கின்றன. உன் அழுக்கைத் துவைத்துத் தூயதாக்குகின்றன. நீ பளிச்சென்று வெளியே நடமாடி மினுக்க உதவுகின்றன. உழைத்து உழைத்துக் கைகள் காய்த்துக் கறடு தட்டிவிட்டன. அவற்றில் வளையல் ஒலி கூடக் கேட்டதில்லை. அவற்றை யாரும் அன்போடு பற்றியதில்லை!'

இப்படிச் சொல்லவேண்டும் என்று சிந்தனை ஓடியதே ஒழிய நான் வாய் திறந்து சொல்லவில்லை. என் புதுத் தோழிகள் பலர் சேர்ந்து என் மூளையைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிவிட்டதாக அம்மா கூறுகிறுன்: ''எனக்கு என்னவோ புதுப்புது விஷயங்கள் சொல்லு. எத்தனையோ பயங்கரமான சாவு விஷயங்க, பட்டினி விஷயங்க, பஞ்சப் பேச்சுகள் என்று! துடிக்கும் உள்ளங்கள் சடக்கென்று நின்றுவிடக்கூடிய விஷயங்கள் சொல்லுகிறுர்க ளாம்!''

''இந்த ஸ்வெட்டரை நீங்களே போட்டுக்கொள்ளுங்கள்! உங்கள் சட்டை ரொம்ப மெல்லியது, உடல் தெரியும் அள வுக்கு!''

காட்டுப் பூனைபோல நான் அவன் முகம், மூக்கு, கழுத்து, தலை எல்லாவற்றையும் பிறுண்டிவிட்டேன். அப்புறம் என் கட்டிலில் போய் விழுந்தேன்.

அக்கா கடைசி ரொட்டியை விண்டு போட்டுக்கொண்டு சீக்கிரம் சீக்கிரமாகக் கைகழுவிக்கொண்டு, தலைப்பில் ஈரக் கையைத் துடைத்தவண்ணம் என் அருகில் வந்தாள்.

''என்ன சொன்னுர்?'' அவளுக்குப் பொறுக்கவில்லை, துடிக்கும் உள்ளத்துடன் கேட்டுவிட்டாள்.

''அக்கா! ராஹத் அண்ணு ரொம்பக் கெட்டவர்!'' இன்று எல்லாவற்றையும் விண்டு வைத்துவிடுவது என்று நான் எண்ணி னேன்.

''ஏன்?'' அவள் முறுவலித்தாள்.

''எனக்கு நல்லவராகத் தோன்றவில்லை. இதோ பார்! என் வளையல்கள் எல்லாம் உடைந்துவிட்டன!'' நான் நடுங்கியவாறே கூறினேன்.

''அப்படியானுல் துடுக்குக்காரர்தான்!'' காதலும் நாணமும் கலந்த குரலில் அவள் கூறினுள்.

''அக்கா! இந்த ராஹத் நல்லவர் இல்லை!'' நான் தணலாகிக் கூறினேன்: ''இன்று அம்மாவிடம் சொல்லிவிடப் போகிறேன்!''

''என்ன ஆயிற்று?'' அம்மா தொழுகைத் துணி விரித்த வண்ணம் கேட்டாள்.

''என் வளையல்களைப் பார்த்தீர்களா, அம்மா!''

''ராஹத் உடைத்துவிட்டானு?'' அம்மா மகிழ்ச்சி பொங்கக் கேட்டாள்.

''ஆமாம்!''

''நன்றாக வேண்டும் உனக்கு! நீ அவனை மிகவும் துன்புறுத்துகிறாய்; கண்களில் விரலைவிட்டு ஆட்டுகிறாய்! செய்கிறதையும் செய்துவிட்டுக் கூப்பாடு போடுவானேன்? பயந்து சாவானேன்? நீ என்ன மெழுகுப் பொம்மையா, கை வைத்ததும் கரைந்து போக!'' என்றவள் அன்போடு முத்தம் கொடுத்துக் கூறினாள்: ''நாலாவது நாள் காப்புக் களைகிறபொழுதுநீ நன்றாகப் பழி வாங்கிவிடு! ஆயுள் முழுவதும் நினைவிருக்கும்படியாக உன் ஆசை தீர ஆளைப் புரட்டி எடுத்துவிடு!''

இப்படிச் சொன்ன அம்மா ஏதோ கணக்குப் போட்டு ஏதோ முடிவுக்கு வந்தாள்.

உடன்பிறவாச் சகோதரியைத் தருவித்து ஆலோசனை சபை கூட்டினாள். எல்லாமே சரியாக நடக்கிறது என்று நம்பி அதைப் பற்றிக் கற்பனையில் இறங்கி மகிழ்ச்சி பரிமாறிக்கொள்ளப் பட்டது.

''அடியே! என்ன இருந்தாலும் நீ ரொம்ப அமுக்கம். இப்படி இருக்கக்கூடாது. நான் என் சகோதரி புருஷர்களை எப்படி யெல்லாம் ஆட்டிப் படைத்து அயர வைத்தேன், தெரியுமா?'' அம்மாவின் உடன்பிறவாச் சகோதரி கூறினாள்.

அதைத் தொடர்ந்து அத்திம்பேர்களைச் சீண்டி வேடிக்கைப் பார்க்கும் வழிவகைகளைச் சொன்னாள். தன் சகோதரிகளின் கணவன்மார்களை எப்படிச் சீண்டி, வகையாகக் குறிவைத்து அவள் எப்படி வழிக்குக் கொண்டுவந்து திருமணத்தை முடித்து வைத்தாள் என்னும் பிரதாபத்தை இழுத்துவிட்டாள். அவர்களுடைய வாழ்க்கைப் படகு கரையேறக்கூடிய தருணங்கள் எல்லாம் கைநழுவிய பின், அவள் முயன்று முடித்து வைத்தாளாம். அவர்களில் ஒருவர் ஹகீம்ஜி. அவரைப் பெண் குழந்தைகள் நிமிண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பார்களாம். அவருக்கு வெட்கமாகிவிடுமாம். அந்த வெட்கத்தில் உடல் முழுவதும் உதறல் எடுத்து நடுங்குமாம். பெண்கள் செய்த வைத்தியத்தில் ஹகீம்ஜி ஒரு நாள் மாமாவைக் கூப்பிட்டு, ''என்னை உங்கள் அடிமையாக்கிக்கொண்டு விடுங்கள்!'' என்று கூறிவிட்டாராம்.

இன்னொருவர் வைசிராய் அலுவலகத்தில் குமாஸ்தா. அவர் வெளியே வந்திருக்கிறார் என்று தெரிந்தால் போதும், பெண்கள் சூழ்ந்து அவரைச் சீண்டுவார்களாம். ஒரு சமயம் வெற்றிலை பீடாவில் மிளகாய்ப் பொடியை நிரப்பி அனுப்பிவைத்தார்க

ளாம். இன்ெனாரு சமயம் சேவையில் உப்பை ஒரேயடியாக அதிகமாய்ப் போட்டுத் தின்ன வைத்தார்களாம்.

''அப்புறம் என்ன? அவர் தினம் வர ஆரம்பித்துவிட்டார்! விடாது புயல் அடித்தாலும் அடாது மழை பெய்தாலும் நாடகம் நடந்தே தீரும் என்பதுபோல அவர் வராத நாட்களே கிடையாது. கடைசியில் ஒரு நாள் அவராகவே சொல்லி அனுப்பி விட்டார், தமக்குத் தெரிந்தவர் ஒருவர் மூலமாக, அவர் வீட்டில் திருமணம் செய்து வைத்துவிடு என்று! 'யாரை?' என்று கேட்டதற்கு, 'யாரோடு வேண்டுமானாலும் செய்து வைத்துவிடு' என்று கூறிவிட்டார். அப்படிச் சொக்குப் பொடி போட்டு மயக்கிவிட்டேனாக்கும்! ஆண்டவன் சாட்சியாக நான் பொய் சொல்லவில்லை என்றால், பெரிய அக்கா முகம் எப்படி இருக்கும், தெரியுமோ? விளக்கெண்ணெய் குடித்தவள் போல் இருக்கும். சின்ன அக்கா அவளுக்கு இளப்பம்! ஒரு கண் கிழக்கே பார்த்தால் இன்னொரு கண் மேற்கே பார்க்கும். பதினைந்து தோலா பொன்னும், போதாதற்குக் கலெக்டர் ஆபீசிலே அவளுக்கு வேலையும் வாங்கிக் கொடுத்தார் அப்பா!'' என்றாள்.

''பதினைந்து தோலா பொன்னும், பெரிய ஆபீசிலே வேலையும் இருந்தால், எந்தக் குருட்டுக்குமே மாப்பிள்ளை கிடைப்பதில் என்ன சிரமம்?'' அம்மா பெருமூச்சுவிட்டுக் கேட்டாள்.

''அப்படிச் சொல்ல முடியுமா? இந்தக் காலத்துப் பிள்ளைகளின் மனசு, தட்டிலே வைத்திருக்கிற உருண்டைக் கத்திரிப் பிஞ்சாக்கும்! எந்தப் பக்கம் சாய்க்கிறாயோ, அந்தப் பக்கம் உருண்டு போய்விடும்!''

''ஆனால், ராஹத் கத்திரிப்பிஞ்சு இல்லை, நல்ல மலைப்பிஞ்சு! நட்டை இப்படி அப்படி நகர்த்தினால் நம் தலைக்குத்தான் ஆபத்து!''

அப்படியும் நான் அக்காவைத்தான் பார்த்தேன். அவள் பேசாமல் இடைகழியில் அமர்ந்து ரொட்டிக்கு மாப் பிசைந்து கொண் டிருந்தாள்; நடந்த பேச்சையும் கேட்டுக்கொண் டிருந் தாள். அவள் சம்மந்தப்பட்ட விஷயமாயிருந்தால், பூமியின் இதயத்தைப் பிளந்துகொண்டு கன்னி கழியாமலே அடக்க மாகியிருப்பாள்!

என் அக்கா ஓர் ஆணுக்காக ஏங்கித் தவித்தாளா? இல்லவே இல்லை! அந்தப் பசியின் பெயரைக் கேட்டே அவள் குலைநடுங்கிப் போயிருக்கிறாள். ஓர் ஆண் மகனின் கற்பனை அவள் மனத்தில்

ஓர் ஆவலை உசுப்பிய வண்ணம் ஏற்பட்டதே இல்லை. உணவு-உடையின் பிரச்னையாகவே முளைத்தது! அவள் ஒரு விதவையின் இதயச் சுமையாக இருந்தாள். அந்தச் சுமையை எப்படியாவது உருட்டித் தள்ளிவிடவேண்டும் என்ற ஓர் எண்ணந்தான் அவளுக்கு என்ன, எல்லாருக்குமே!

ஆனால், ஜாடை மாடையினாலோ, சுசமுசப் பேச்சினாலோ ராஹத் மியானும் அசைந்து கொடுக்கவில்லை. அவர்கள் வீட்டிலிருந்து பெண் கேட்டுப் பரிசமும் வரவில்லை. இப்படியெல்லாம் ஒரு வழி பிறக்காமற் போகவே, அம்மா அலுத்துச் சலித்துப் போனாள். கால் வெள்ளிக் காப்பை அடகு வைத்து வினை தீர்த்தானுக்கு வேண்டிக்கொண்டு பூசைகள் பல செய்தாள். பகல் முழுவதும் தெருப் பெண்கள் வீட்டு முற்றத்தில் கொட்டம் அடித்தனர். அக்கா வெட்கப்பட்டுக்கொண்டு கொசுக்கள் அடைந்து கிடக்கும் அறையைச் சரண் அடைந்தாள், தன் இரத்தத்தின் கடைசிச் சொட்டையும் கொசுக்களுக்கு உறிஞ்சக் கொடுப்பவள்போல!

அம்மா மூன்று வாசல் தாழ்வாரத்தில் அமர்ந்து திருமண உடைக்குக் கடைசித் தையல் போட்டுக்கொண் டிருந்தாள். இன்று அவள் முகத்தில் எத்தனையோ கட்டங்களைத் தாண்டி வந்த ஆயாசக் குறிகள் ஆர்வம் கொண்டு மின்னின. இன்று வினைகள் அத்தனையும் அறுந்து போகும். கஷ்டங்கள் எல்லாம் விலகிப் போகும். இந்தக் கட்டத்தைத் தாண்டிவிட்டால் அப்புறம் கஷ்டமே இராது, வினைதீர்ப்பவனின் புண்ணியத்திலே! அவளது சுருக்கங்களில் இன்று மீண்டும் தீவர்த்திகள் ஒளி பாய்ச்சின. அக்காவின் தோழிகள் அவளைக் கேலி செய்து கொண் டிருந்தார்கள். அவளது உடலில் மிகுந்து ஓடிய இரத்தத்துக்கு ஒரு சூடு ஏற்ற முயன்றுகொண் டிருந்தார்கள்.

இன்று பல நாட்களாகியும் அவள் ஜுரம் இறங்கியபாடில்லை. எரிந்து எரிந்து உயிர்விடும் விளக்குப் போல் அவள் முகம் ஒரு சமயம் பளிச்சிடும், ஒரு சமயம் அவிந்து போகும்! கைச்சாடை காட்டி அவள் என்னை அருகில் அழைத்தாள். தனது ஆடைத் தலைப்பை அகற்றிப் பூசைத் தட்டை என்னிடம் தந்தாள்.

''மௌல்வி சாஹப் மந்திரம் ஓதி ஊதித் தந்திருக்கிறார்!'' சுரத்தில் சூடேறிவிட்ட அவள் மூச்சுக் காற்று என் காதில் சுட்டது.

தட்டை வாங்கிக்கொண்டு நான் யோசிக்கலானேன்: 'மௌல்வி சாஹப் மந்திரம் ஓதித் தந்திருக்கிறார். இந்தப் புனித நிவேதனப் பொருளும் ராஹத்தின் கோட்டை அடுப்புப் போன்ற வயிற்றுக்கு விறகு ஆகவேண்டும்போலும்! இந்தக் கோட்டை அடுப்பு ஆறு மாத காலமாக எங்கள் இரத்தத் திவலைகளின் உழைப்பால் சூடு குறையாமல் வைக்கப்பட்டிருக்கிறது. மந்திர மோதிய இந்தக் காணிக்கைப் பொருள் எண்ணிய எண்ணத்தை நிறைவேற்றப் போகிறதாம்! என்ன விந்தை!'

என் காதுகளில் மங்கள வாத்தியங்கள் முழங்கின. நான் மாடி யேறி ஓடி மாப்பிள்ளை ஊர்வலத்தைப் பார்க்கப் போய்க்கொண் டிருக்கிறேன். மணமகனின் முகத்தில் நீண்ட மலர்த்திரை தொங்கிக்கொண் டிருக்கிறது. அது குதிரையின் பிடரியில் போய் இடிக்கிறது. திருமணத்துக்கு அங்கமான சிவப்பு வளையல்கள் தரித்துக்கொண்டு, மலர்களைச் சுமந்துகொண்டு, நாணத்தினால் சிவந்து சோர்ந்து அடிமேல் அடி எடுத்து வைத்து அக்கா திருமண மண்டபத்துக்கு வந்துகொண்டிருக்கிறாள். திருமணத்துக்கென்று பிரத்தியேகமாகத் தயாரித்த உடையின் பொன்னிழைகள் பளபளக்கக் கண்களைப் பறிக்கின்றன. அம்மாவின் முகம் மலர்ந்திருக்கிறது. அக்காவின் வெட்கச் சுமையினால் தாழ்ந்த கண்கள் ஒருமுறை எழும்புகின்றன. நன்றியுணர்வினால் பெருகும் கண்ணீர், முகத்தை அலங்கரித்த ஜிகினாப் பொடியை நனைத்துக் கண்ணாடி முத்துகள்போல் பல வண்ண ஜாலங்கள் புரிகின்றன.

'இதெல்லாம் உன் அன்பின் பலன்!' அக்காவின் மௌனம் பேசுகிறது.

ஹமீதாவுக்குத் தொண்டையைத் தொண்டையை அடைத் தது!

''போய் வாடி, என் கண்ணு!'' அக்கா அவள் மயக்கத்தைக் கலைத்து எழுப்பினாள். அவள் துணுக்குற்று மேலாக்கின் தலைப்பி னால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, வாசற்புறத்து அறையை நோக்கி நடந்தாள்.

''இது . . . இது பிரசாதம்!'' அவள் பொங்கும் உள்ளத்தை அடக்கிக்கொண்டு கூறினாள். அவள் கால்கள் நடுங்கிக்கொண் டிருந்தன, பாம்புப் புற்றில் காலை வைத்துவிட்டதுபோல! மலை நகர்ந்தது. ராஹத் வாயைத் திறந்தான். அவள் ஓர் அடி பின்

நகர்ந்தாள். ஆனால், எங்கோ தொலைவில் 'பராத்' மாப்பிள்ளை ஊர்வலத்தின் 'ஷஹ்னாயி' வீறிட்டு அலறியது, யாரோ அவற்றின் கழுத்தைத் திருகிவிட்டாற்போல! நடுங்கும் கைகளுடன் அவள் பிரசாதத்திலிருந்து ஒரு கவளத்தை எடுத்து ராஹத்தின் வாயில் போட நீட்டினாள். அப்போது ஓர் உதறலில் அவளது கை மலைக் குகைக்குள் போய்விட்டது. போயிற்று, போயிற்று! இருட்குகையின் அடிவரை போய்விட்டது! ஒரு பெரும் பாறை உருண்டு அவள் அலறலை எழும்பவிடாமல், அவளின் கழுத்தையே பிடித்து நெறித்துவிட்டாற்போல் இருந்தது!

பிரசாதத் தட்டு கையிலிருந்து நழுவி லாந்தரின்மேல் போய் விழுந்தது. லாந்தர் பூமியில் விழுந்து இரண்டொரு நீள் மூச்சு விட்டது. அப்படியே அணைந்தும் போயிற்று. வெளியே முற்றத்தில் தெருப் பெண்கள் வினைதீர்ப்பவனின் புகழ் பாடிக்கொண்டிருந்தனர்.

காலை வண்டியில் இத்தனை நாட்கள் விருந்தினராக வைத்துக் கொண்டதற்கு நன்றி தெரிவித்துவிட்டுத் தன் ஊருக்குப் புறப்பட்டுவிட்டான் ராஹத். அவன் திருமணத்துக்குத் தேதி வைத்துவிட்டார்கள். அதனால் அவனுக்கு அத்தனை அவசரம். அதற்குப் பின் அந்த வீட்டில் முட்டைகள் வேகவைக்கப்படவில்லை; பரோட்டாக்கள் சுடப்படவில்லை; ஸ்வெட்டர்களும் பின்னப்படவில்லை. உள்ளுக்குள் யாருக்கும் தெரியாமல் அக்காவை வெகுநாட்களாகவே துரத்தி வந்த க்ஷயரோகம், தருணம் பார்த்து ஒரே அமுக்கலாக அமுக்கிவிட்டது. அவள் தலை குனிந்து தன் ஈடேறாத ஆசைகளோடு தன்னையும் அதனிடம் ஒப்படைத்துவிட்டாள்.

அப்புறம்! அதே முக்கூடத் தாழ்வாரத்தில் தூய்மையான சமுக்காளம் விரிக்கப்பட்டது. தெருப் பெண்கள்—மருமகப் பெண்கள் எல்லாரும் கூடினர். சவத்துக்குப் போர்த்தும் சல்லாத்துணி, மரணம் விரிக்கும் சேலைத் தலைப்பாக அம்மாவின் முன்னே விரிந்தது. பொறுக்க முடியாத துயரத்தில் அவள் முகம் அலை பாய்ந்து கொண்டிருந்தது. இடக் கண் வேறு துடித்துக்கொண்டிருந்தது. சூன்யம் ஓடிய கன்னத்தின் பள்ளத்

தாக்குகள் பரபரத்துக்கொண்டிருந்தன. அவள் முகத்தில் பயங்கர மரண அமைதி நிலவியிருந்தது.

சவத்துணியின் கோணலை இழுத்துச் சரிப்படுத்தி அவள் அதை நான்காக மடித்தாள். அவள் மனத்தில் எண்ணற்ற கத்திரிகள் பாய்ந்து இதயத்தைத் தாறுமாறுகக் கிழித்தன. இன்று அவள் முகத்தில் பயங்கர அமைதி! தீர்மானமான மரண அமைதி நிலவியிருந்தது. மற்றத் திருமண உடைகளைப்போல், இதைப் பெட்டியில் மடித்துப் போடவேண்டிய தேவை ஏற்படாது என்ற உறுதி காரணமாயிருக்குமோ, அந்த மன அமைதிக்கு?

திடீரென்று முக்கூடத் தாழ்வாரத்தில் அமர்ந்திருந்த பெண்கள் அனைவரும் மைனுவைப் போலக் கிறீச்சிட்டார்கள். ஹமீதா கடந்த கால எண்ணங்களைத் தூர விட்டெறிந்துவிட்டு அவர்களோடு போய்க் கலந்துகொண்டாள். சிவப்புத் தோம்பில் வெள்ளைக் காடாவின் அடையாளம்! அதன் சிவப்பில் ஏதும் அறியாத எத்தனை மணப் பெண்களின் ஆசைகள் தைக்கப் பட்டிருக்கின்றனவோ, யார் கண்டார்கள்? அதன் வெள்ளையில் தங்கள் ஆசைகள் ஈடேருத எத்தனை கன்னிப் பெண்களின் சவத் துணிகளின் வெண்மை ஏறி இப்படிக் காட்சி தருகின்றனவோ? இவற்றையெல்லாம் கணித்து யார் கூறமுடியும்?

பிறகு எல்லாரும் சட்டென்று மௌனமே உருவானுர்கள். அம்மா கடைசித் தையலைப் போட்டு நூலை அறுத்துவிட்டாள். இரண்டு பெரிய கண்ணீர்த் துளிகள் அவளுடைய பஞ்சுபோன்ற மிருதுவான கன்னங்களில் உருண்டோடின. அவள் முகச் சுருக்கத்திலிருந்து ஒளிக்கதிர்கள் புறப்பட்டுப் புன்னகை பூத்தன. குப்ராவின் திருமணத் துணி தயார்! இனி எந்தக் கணத்திலும் ஷஹ்னுயீ வாசிக்கலாம் என்ற உறுதி அவற்றுக்கு ஏற்பட்டு விட்டதுபோலும்.

அமரவல்லி

பெரிய மாமியின் சவத்துக்குப் போர்த்தியிருந்த துணிகூட அழுக்காகி இராது. ஷுஜாகத் மாமூவுக்கு இரண்டாம் கல்யாணம் செய்து வைத்துவிடவேண்டும் என்ற கவலை குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரையுமே பிடித்துக்கொண்டது. உட்கார்ந்தாலும் எழுந்தாலும் மணமகள் தேடுவதில்தான் மனம் சென்றது. உணவை முடித்துக்கொண்டு உட்கார்ந்தால், பெண்களிடையே திருமணப் பேச்சு எழும். எந்தப் பெண்ணுக்கும், எந்தப் பையனுக்கும் முடி போடலாம். பரிசமோ வரதட்சணையோ என்ன ஆகும் என்றெல்லாம் பேசுவார்கள். அப்பொழுது மாமாவுக்கும் எந்தப் பெண்ணை முடிக்கலாம் என்று யோசனை செய்வார்கள்.

''அடியே! அந்தப் பெண் பாதிமா எப்படி?''

''ஏண்டி! உன் மூளை இப்படிப் போகிறது? அந்தப் பெண்ணின் மாமியார் காதிலே விழுந்தால், உன் மூக்கையும் நாக்கையும் அறுத்து உன் கையிலேயே கொடுத்துவிடுவாள். காளையாட்டம் இருந்த மகன் செத்ததுமே அவள் மருமகளைப் பாம்புபோலச் சுற்றிப் பாதுகாக்கத் தொடங்கிவிட்டாள். அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி, மருமகளை வீட்டு வாசற்படி இறங்கவிடவில்லை. அந்தக் கடன்காரியின் பிறந்த வீட்டிலே எந்தப் பாவியாவது உயிரோடு இருந்தால், போக்குவரத்து இருக்கும். அதற்குந்தான் வழி இல்லையே!''

''அவள் எதற்கடி? சுஜ்ஜன் அண்ணனுக்குக் கன்னிப் பெண் கிடைப்பாள்! எச்சிற் பாண்டம் எதற்கு? எத்தனையோ பேர் நான் நீ என்று போட்டி போட்டுக்கொண்டு பெண் தர வருவார்கள். நாற்பது வயது ஆனாற்போலக்கூடத் தோன்றவில்லை'' என்றாள் அஸ்கரி பேகம்.

''ஊயீ! அல்லா நல்லதே செய்யட்டும். அத்தை! பத்து வருஷத்தை முழுசாக விழுங்கிவிட்டாயே! வருகிற காலீ (சூன்ய) மாதத்துக்கு ஐம்பது நிறைந்து . . .''

''அல்லாஹ்!'' பாவம், இந்தியாஜி அத்தை வாய் தவறி வார்த்தையை விட்டு விட்டு வருந்தினாள். ஷுஜாகத் மாமூவின்

ஐந்து சகோதரிகள் ஒருபுறம், அப்பாவி இந்தியாஜி அத்தை ஒருபுறம். 'மாஷா அல்லாஹ்!' ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும். ஐந்து சகோதரிகளுக்கும் நாக்கு முழ நீளம்; நரம்பும் கிடையாது. வாய்க்கு வந்ததைப் பேசித் தீர்த்துவிடுவார்கள். வம்பு என்றால் ஐந்து பேரும் ஒன்றாகச் சேர்ந்து தாக்கத் தொடங்கி விடுவார்கள். முகலானி—பட்டானி போன்ற வீரப் பெண் மணிகள்கூடக் களத்தில் நின்று பொருதமுடியாது. அப்படி யிருக்கும்பொழுது ஷேரானிகளும் ஸையதானிகளும் எந்த மூலைக்கு? பெரும்புள்ளிகளே வாலைச் சுருட்டிக்கொண்டு போக வேண்டுமென்றால், மற்றவர்களைப்பற்றிக் கேட்பானேன்?

ஆனால், இந்தியாஜி அத்தையும் இலேசுப்பட்டவள் அல்ல; அந்த ஐந்து பாண்டவர்களுக்கு ஒருத்தியே நூறு கௌரவர்க ளாகிவிடுவாள்! அவளிடமிருந்த பயங்கர ஆயுதம் விர்ரென்று துளைக்கும் துரப்பணத்தின் கூரியமுனையை நிகர்த்த நாக்குத் தான்! அவள் பேச ஆரம்பித்துவிட்டால், 'மிஷின் கன்'னிலிருந்து குண்டுகள் ஒரு காது வழியாக நுழைந்து இன்னொரு காது வழியாக விருட்டென்று வெளியேறுகிறாற்போல் இருக்கும்! யாருடனாவது அவளுக்குத் தகராறு என்றால், ஒரு நிமிஷத்தில் ஊர் முழுவதும் அந்தச் செய்தி காட்டுத் தீயாகப் பரவி விடும். இந்தியாஜி அத்தையின் போர்க்கோலத்தைக் கண்டு மகிழ ஊர்ப் பெண்கள் அத்தனை பேரும் கோட்டை தாண்டி, கூரை தாண்டி ஸ்தலத்துக்கே விரைந்து வருவார்கள்; கூச்சல் போட்டு ஊரையே கூட்டுவார்கள்!

ஐந்து சகோதரிகளும் சாடிய சாடலில் இந்தியாஜி அத்தை பாவம், மூக்கு உடைபட்டுப் போனாள். அவளுடைய நடுப்பெண் கோரி கானம் இதுவரை கன்னியாகவே இருந்தாள். முப்பத் தாறாவது வயது அவள் மார்பகத்தில் உறங்கிக்கொண்டிருந்தது. ஆயினும் அவளுக்கு ஒரு வழிவகை காணும் வழி கண்ணுக் கெட்டிய தூரம்வரை இருப்பதாகத் தோன்றவில்லை. கல்யாணம் ஆகாத பிள்ளைகளோ கிடைக்கவில்லை. கல்யாணம் ஆனவர் களோ மனைவியை இழந்து நிற்கவில்லை. முன் நாட்களில் ஒவ்வோர் ஆண் பிள்ளையும் மூன்று நான்கு பெண்களைக் கரை யேற்றும் புண்ணியத்தைக் கட்டிக்கொண்டிருந்தான். ஆனால் இந்த ஆஸ்பத்திரிகளும் டாக்டர்களும் வந்ததிலிருந்து மனைவி மார்கள் இறப்பதில்லை என்றே உறுதி பூண்டுவிட்டார்கள்! யாரைப் பார்த்தாலும் பரலோகத்துப் படுக்கையைச் சுருட்டு

கிறார்களே ஒழிய இந்த உலகத்துப் படுக்கையைச் சுருட்டுவ தாயில்லை. பெரிய மாமி நோய்ப் படுக்கையில் விழுந்தபோது இந்தியாஜி அத்தை ஒரு கணக்குப் போட்டாள். ஆனால் இரண்டாம் கல்யாணத்துக்கும் வலை விரித்தாகவேண்டும் என்பது அவள் மூளைக்கு எட்டாமற் போய்விட்டது.

ஷுஜாகத் மாமூவின் வயதுப் பிரச்னை மிக இக்கட்டான நிலையில் கொண்டு போய் நிறுத்திவிட்டது. கமர் ஆராவுக்கும் நூர் சித்திக்கும் அவர் இன்னும் சின்னக் குழந்தைதான். அதனால் அவர்கள் பயந்து பயந்து வருஷங்களை எண்ணிக் குழப்பம் செய்து விடுவார்கள். ஏனென்றால் அவருடைய உண்மை வயது தெரிந்து விட்டால் சித்திகளின் வயதும் கூடிவிடும். எனவே, ஐந்து சகோதரிகளும் தனித்தனியாகத் தங்கள் முறையில் தாக்கத் தொடங்கினார்கள். உடனே அவர்கள் இந்தியாஜி அத்தையின் பேத்தி புருஷனைப்பற்றிப் பேச்செடுத்தார்கள். அவன் பெயரை எடுத்துவிட்டால் போதும், அத்தைக்கு வலிக்கிற நரம்பைச் சுண்டிவிட்டாற் போலாகிவிடும். ஏனென்றால் அவள் பேத்திக்கு ஒரு சக்களத்தியைக் கொண்டு வந்து சேர்த்துக்கொண் டிருந் தான்.

ஆனால் அத்தையும் சரியான முகலாணி. அவள் அப்பா போர்ப் படையில் எழுத்தராயிருந்தார். இந்தச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சுவாளா? அடிதான் வாங்குவாளா? உடனே சிலம்பம் அடித்துத் தாக்குதலை மண் கவ்வ வைத்துவிட்டாள். ஷாஹ்ஜாதி பேகமின் பேத்தியைச் சந்திக்கு இழுத்தாள். அவள் எல்லாருக் கும் தெரியும்படியாகக் குடும்பப் பெருமையைக் குலைப்பதாக அவள் கருதினாள். ஏனென்றால் அவள் தினமும் பல்லக்கில் அமர்ந்து தன்கோட்டிலுள்ள பள்ளிக்குப் படிக்கப் போய் வந்தாள். அந்தக் காலத்தில் பள்ளிக்கூடம் போவதே தவறாகக் கருதப்பட்டது. இந்தக் காலத்தில் திரைப்படங்களில் ஆடிப் பாடி நடிப்பதைத் தவறாக எண்ணவில்லையா? அதுபோல!

ஷுஜாகத் மாமூ ரொம்ப நல்ல மனிதர். கம்பீரமான மேனி. ஒற்றை நாடி உடல். நடுத்தரமான உயரம். இந்தியாஜி அத்தை, அவர் தலைக்குச் சாயம் போட்டுக்கொள்வதாகக் கூறி அவர் சாயத்தை வெளுக்க முயல்வதுண்டு. ஆனால் இன்றுவரை யாரும் அவர் தலையில் ஒரு நரை மயிரைக்கூடக் கண்டதில்லை. அவர் எப்போது சாயம் போட்டுக்கொள்ளத் தொடங்கியிருப் பார் என்று கண்டு கூறுவதே யாருக்கும் சிரமமாக இருந்தது.

பார்வைக்கு அவர் இளைஞராகவே தோன்றுவார். நிஜமாக நாற்பதுகூடச் சொல்லமுடியாது. பல இடங்களிலிருந்தும் அவரது 'பைகாமை' எதிர்பார்ப்பவர்கள் பெருகிவிடவே, அந்தப் பொறுப்பை அவர்தம் சகோதரிகளின்மீது சுமத்தி விட்டார். ஆனால் ஓர் எச்சரிக்கை மட்டும் செய்து வைத்தார். பெண் பார்ப்பதற்கு, அவள் பெண்ணோ என்று கூறுமளவுக்குச் சிறியவளாக இருக்கக்கூடாது. அதே நேரத்தில் அம்மாவோ என்று சந்தேகிக்கும் அளவுக்குப் பெரியவளாகவும் இருக்கக் கூடாது என்றார்.

எங்கெல்லாமோ தேடிச் சலித்ததில் ருக்ஸானா பேகமுக்கு அதிர்ஷ்டம் அடித்தது.

ஐயே! பெயரைப் பாரு, பெயரை! பயமுறுத்துகிறாற்போல!

இந்தியாஜி அத்தைக்குவேறு எதுவும் கிடைக்காமற் போகவே, பெயரை எடுத்துக்கொண்டு அதற்கு நூறு 'நொசுக்கு'ச் சொல்ல ஆரம்பித்துவிட்டாள். ஆனால் ஐந்து சகோதரிகளும் மொலுமொலுவென்று சண்டைக்கு வந்துவிட்டார்கள். அதனால் அவள் பேச்சு எடுபடவில்லை.

''பெண் பதினாறு வயதுக்கு ஒரு நாள் குறைந்தாலும், ஒரு நாள் அதிகப்பட்டுவிட்டாலும், காலையிலே நூறு செருப்படி, மாலையிலே நூறு செருப்படி கொடு! அதற்கும் மேலோ ஹுக்கா தண்ணீரை . . .''

ஆனால் அவள் பேச்சை யாரும் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. அவள் தன் கோரி பேகமின் படகைக் கரை சேர்ப்பதற்காக என்னவெல்லாமோ கஜகர்ணம் போட்டுப் பார்த்தாள். ஜபம் சாயவில்லை.

ருக்ஸானா பேகம், பார்த்தால் பார்த்துக்கொண்டே இருக்கும் படியாக அவ்வளவு அழகாக இருந்தாள். வெட்கத்துடன் ஓடி ஒளியும் முதல் நாள் சந்திரனை யாரோ எப்படியோ கொண்டு வந்து நிறுத்தினாற்போல் இருந்தாள். அவள் அழகைப் பார்க்கப் பார்க்க மனசுக்குத் திருப்தியே ஏற்படாது. நிறுத்தால், ஐந்துக்குமேல் ஆறுவது பூப்போட்டால் தட்டு ஏறிவிடும். நிறம் எப்படி? புடம் போட்ட பொன் தோற்றுவிடும். உடலில் எங்கும் பெயருக்குக்கூட எலும்பைக் காணோம். நல்ல கெட்டியான மைதாவை உருட்டிப் பிசைந்து, பசு வெண்ணெயையும் குழைத்துச் சமைத்தாற்போன்ற தோற்றம். அவளிடம் காணப் பட்ட பெண்மையோ பரம அற்புதம். அழகிற் சிறந்த பத்துப்

பெண்களின் சாரத்தைப் பிழிந்து அவள் உடலுக்குள்ளே செலுத்தி எழில் கூட்டிச் சமைத்துவிட்டாற்போல! ஆவி பறக்கும் சூடு, அப்போதுதான் எடுத்தாற்போல! சூடே ருசி, சிவப்பே வளர்ச்சி இல்லையா?

அத்தை சொன்னாற்போல் பதினாறே வயதாகக்கூட இருக்கலாம். ஆனால் பத்தொன்பது இருபது வயதுக்குள்ள வளர்ச்சியும் மதர்ப்பும் இருந்தன. சகோதரிகள் மாமூவுக்கு இருபத்தைந்து நடப்பதாகத்தான் சொன்னார்கள். அவருக்குச் சிறிது சங்கோசமாகத்தான் இருந்தது. இருந்தாலும் அதைக் கவனித்ததுபோலக் காட்டிக்கொள்ளவில்லை. வயதுக் குறைவாக இருப்பது அப்படி ஒன்றும் பெரிய குற்றம் இல்லையே!

பெரிய கஷ்டம் ஒன்று என்னவென்றால், அவள் ஏழை வீட்டுச் சுமை. அதனால் இரண்டு தரப்புச் செலவும் மாமூவின் தலையில் விழுந்தது. ருக்ஸானா மாமி மணமாகி வந்த பின்னர், அவளைப் பார்த்து மாமூவுக்கு வேர்த்து விறுவிறுத்துவிட்டது.

''அக்கா! இவள் ரொம்பக் குழந்தையாக இருக்கிறாளே?'' என்றார் மாமூ சினந்து.

''அல்லா எல்லாம் நல்லதே செய்வான், தம்பி! எந்தப் பொருளையும் பார்த்து வாங்கணும். எண்ணெயைப் பார்க்கணும்; அதன் தன்மையைப் பார்க்கணும். இருபது ஆனாலும், அறுபது ஆனாலும் ஆண் பிள்ளை ஒரேமாதிரிதான். ஆனால் பெண்தான் இருபது வயதிலேயே பாட்டியாகிப் போய்விடுவாள்! இரண்டு மூன்று குழந்தைகளையும் பெற்றெடுத்தால் அப்புறம் கேட்கவே வேண்டாம். அம்மா சாயம் அறவே இறங்கிப் போகும். மலம் எடுத்து, மூத்திரம் துடைத்துச் சிச்ருஷை செய்வதற்குள் அலங்கார ஆசை அலங்கோலமாகிவிடும்; மேனி மினுமினுப்பும் பறந்து போகும்! மோதிரம் மாதிரி இந்த இடை சிறுத்திராது. இந்தப் புஜங்களுக்கும் அந்த மென்மை இராது. கூடிய விரைவில் இவள் உனக்கு ஏற்ற மனைவி ஆகவில்லை என்றால், என்னைக் கேள்! எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் தா! இன்னும் பத்தே வருஷத்தில் இவள் பெரிய அண்ணி மாதிரி ஆகிவிடுவாள். என்ன நான் சொல்கிறது?''

''அப்புறம் நாம், நம் தம்பிக்குப் பன்னிரண்டரை வயசுப் பெண்ணைக் கொண்டு வருவோம்!'' என்றாள் நூர் சித்தி.

''உஷ்!'' மாமூ வெட்கிப் போனார்.

''இரண்டாவது மனைவி இருப்பதில்லை என்பதற்காகவா மூன்றுவது?'' என்று கேட்டாள் ஷபீஹ்ற பேகம்.

''என்ன உளறுகிறுய் நீ?''

''ஆமாம், தம்பி! பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேம். இரண்டாமவள் தங்குவதில்லையாம். மூன்றுமவளுக்குப் பலியாகி விடுவாளாம். அதனுல்தான் பழைய காலத்தில் மக்கள் இரண்டாவது கல்யாணத்தை ஒரு பொம்மையோடு செய்து வைப்பார்களாம். அப்புறம் வருகிற மருமகள் மூன்றுவது என்று கணக்காம்!''

சகோதரிகள் புரியவைத்தனர். மாமூவும் புரிந்துகொண்டார். அப்புறம் கூடிய விரைவில் ருக்ஸானு பேகமும் புரிந்துகொண்டாள். இரண்டு மூன்று ஆண்டுகள் நல்ல உணவு, துணிமணி, கட்டிய புருஷனின் அபரிமிதமான அன்பு எல்லாம் கிடைத்தன. ஏதோ மாய மந்திர சக்தி முதல்நாள் சந்திரனைச் சதுர்த்தசி சந்திரனுக்கிக் காட்டியது. அந்தச் சந்திரனின் நிலவொளியிலே பார்ப்பவர்களின் கண்களில் போதை ஏறின. ஒவ்வொரு கணு விலும் கதிர்கள் வெடித்து ஒளி பாய்ச்சினுற்போன்ற பிரமை! ஷுஜாகத் மாமூ தலைக்கேறிய போதையில் தம்மையே மறந்து விட்டார். விரைவிலேயே பென்ஷன் கிடைக்கப் போவதாக இருந்தது ஒரு விதத்தில் நல்லதாகப் போயிற்று. இல்லாவிட்டால் தினம் தினம் அலுவலகத்துக்கு மட்டம் போட்டுவிட்டு இன்ப வாரிதியில் திளைப்பது என்ற தீர்மானந்தான்!

சகோதரிமார்களுக்கு இருந்து இருந்து ஒரே சகோதரன். பெரிய மாமியை அவள் வீட்டுக்கு மருமகளாக வந்த நாளி லிருந்தே பிடிக்காமற் போய்விட்டது. அதற்காக அவள் புருவத்தை வில்லாக வளைக்கவில்லை. உயிருடன் இருந்தவரையில் ஒரு முறையாவது அவரைப் பார்க்கமாட்டோமா என்று ஏங்கித் தவித்துக்கொண் டிருந்தாள். ஆண்டவன் குழந்தை குட்டிகளைத் தரவில்லை. அவை இருந்தாலாவது ஓரளவு மனம் மகிழ்ந் திருக்கும். அருமைத் தம்பியின் முகத்தைப் பார்க்காவிட்டால், சகோதரிகளுக்குச் சாப்பாடே வேண்டியிராது. அதனுல் அலு வலகத்திலிருந்து நேரே யாராவது ஒரு சகோதரியின் வீட்டுக்குப் போவார். இரவுச் சாப்பாட்டை அங்கேயே முடித்துக்கொண்டு வீடு திரும்புவார். இருந்தாலும் தினமும் உணவுக்கு விரிப்பு விரித்து இரவு வெகுநேரம் வரை அவரை எதிர்பார்த்தவண்ணம் வழிமேல் விழி வைத்தவாறு பெரிய மாமி உட்கார்ந்திருப்பாள்.

என்றைக்காவது தற்செயலாக அவர் உணவு அருந்த வந்து விட்டால் அவளுக்கு வாழ்வின்பம் அனைத்துமே கிட்டிவிட்டாற் போன்ற புளகம் ஏற்படும். நாள் தவறினாலும் தவறலாம், சகோதரிகளின் வீடுகளில் சந்தடிக்குக் குறைவிராது. பெயரன வுக்குச் சகோதரிமார்கள் அண்ணியைத் தங்கள் வீட்டுக்கு அழைப்பது உண்டு. ஆனால் பாவம், அவளுக்கு இங்கும் அந்நிய மாகத் தோன்றும், அங்கும் அந்நியமாகத் தோன்றும். எல் லாருமே கூப்பிடுவதை நிறுத்திக்கொண்டு விட்டனர். ஷுஜாகத் மாமூ எப்போது நான்கு நண்பர்களுக்கு விருந்து வைத்தா லும் அல்லது ஆடல் பாடல்களுக்கு ஏற்பாடு செய்தாலும் அவர் மனைவிக்கு எதுவுமே விவரம் தெரியாது. சகோதரிகள் எல்லா ஏற்பாடுகளையும் கவனித்துக்கொண்டு விடுவார்கள். அவர்கள் கையில் தான் அவர் பணமும் கொடுப்பார்.

கணவனைத் தன் வசப்படுத்துவதற்கு ஒருவழி இருக்கிறது என்று யாரோ மாமிக்கு யோசனை கூறியிருக்கிறார்கள். பிறர் வீட்டுச் சாப்பாடு அவர் வாய்க்கு வழங்காமல் போய்விடவேண்டும், அப்படி ஓர் உணவை நீ படைத்தால் அவர் நீ இழுத்த இழுப்புக்கு வருவார் என்று சொல்லிவிட்டார்கள். மாமி சமையற்கலைப் புத்தகங்களாக வாங்கிக் குவித்தாள். பூண்டு ரசம், பாதாம் முரப்பா, கோழிப் பொரியல், மீன் துவட்டல் என்று என்ன என்னவோ, விதம் விதமாகச் சமைத்தாள். அவற்றைச் சாப்பிட்ட மாமூ, அவள் விஷம் கொடுத்துக் கொன்று போட நினைக்கிறாள் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

மாமி இரத்தம் இரத்தமாகக் காரி உமிழ்ந்து செத்துப் போனாள்.

ஆனால் இந்தப் புதிய மனைவியிடம் என்ன மந்திரசக்தி, மாய சக்தி இருந்ததோ, தெரியவில்லை! அவள் இழுத்த இழுப்புக்கு வந்தார்; ஆட்டிய ஆட்டத்துக்கு ஆடினார். வீட்டை விட்டு எங்கும் போவதும் இல்லை; வருவதும் இல்லை. பிறர் வந்தாலும் பிடிப்பதில்லை. கணவன் மனைவியின் ஏகாந்தம் இன்பப் பூங்கா வாகக் கொள்ளை இன்பம் தந்தது. விரல் சொடுக்குகிற நேரத்திலே வில்லில் இருந்து புறப்படுகிற கூரிய அம்புபோல, ஈவு இரக்கமின்றிப் போய்விட்டானே! சகோதரிமார்களுக்கு உலகமே பாழ்த்தாற்போன்று இருந்தது. தன் காலில் தானே கோடரியைப் போட்டுக்கொண்ட கதையாகிவிட்டது. பேசா மல் கோரி பேகத்தைக் கல்யாணம் செய்து வைத்திருந்தால்,

அண்ணன் இப்படிக் கையை விட்டுப் போயிருக்கமாட்டானே! இப்படிப் பலவாறாக வருந்தினார்.

''அண்ணி! அண்ணனை எவ்வளவு நாட்கள்தான் இப்படித் தலைப்பிலே முடிந்து வைத்துக்கொண் டிருப்பாய்? அவன் ஆண் பிள்ளை. பால்மணம் மாறாத பச்சைக் குழந்தையில்லை, எப் பொழுது பார்த்தாலும் மடியிலே போட்டுக்கொண்டு 'எடுத்து விட்டு'க் கொண்டிருப்பதற்கு!''

எப்படியெல்லாமோ கேலி செய்வார்கள். மருமகளோ எதற் கும் 'கிக்கி' என்று சிரித்துக்கொண்டே இருந்தாள். ஷுஜாகத் மாமூ ஆந்தைபோல ஜடமாகிப் பார்த்துக்கொண்டே இருப் பார். ஆமாம், அவள் அவருடைய மனைவி; அடுத்த வீட்டு, பக்கத்து வீட்டுப் பெண் பிள்ளை இல்லையே! அதனால் பார்த்து விட்டுப் போகிறார் புங்கங்கொட்டை போல!. . .

மாமூ பழைய மாமூவாக இல்லை. என்ன பாட்டு, என்ன கூத்து! கையைப் பிடித்தவள் கைப்பாவையாக்கி ஆட்டுகிறாள், அவரும் ஆடிக்கொண் டிருக்கிறார்!

'இந்த ஆட்டம்பாட்டம் எல்லாம் என்ன, கொஞ்ச நாளைக்கு! வயிற்றில் ஒரு பூச்சி வைத்தால், இந்தப் புது மணப்பெண் வேஷம் தீர்ந்தது. ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்! என்றைக்காவது ஒரு நாள் தம்பி வழிக்கு வந்துதானே ஆக வேண்டும்!' இப்படி மனத்தைச் சமாதானப்படுத்திக்கொண் டார்கள்.

ஆண்டவன் அருளில் ருக்ஸானா பேகம் கருத்தரித்தாள். ஆனால் அட, ஆண்டவனே! இது என்ன, மசக்கை கிசக்கை இல்லை, வாந்தி இல்லை, வயிற்றுப் புரட்டல் இல்லை! முகத்திலே அழகு மெருகிடுகிறது; மேனி கொழிக்கிறது! துளிக் கூட மசமசப்பையே காணோமே! புது மணப்பெண்களிடம் காணும் அதே குறும்பு! அதே தளுக்கு மினுக்கு! பார்க்கப் போனால் இன்னும் கூடியிருக்கிறதே!—மாமூவினால் தன்னை அடக்க முடியவில்லை. கண்ணுக்குள்ளே வைத்துக் கண்ணாகக் கொண்டாடுகிறார். இதயத்தை எடுத்து அவள் காலடியிலே வைத்துக் களிக்கிறார். அவளைத் தலையிலே தூக்கி வைத்துக் கொண்டு குதிக்கிறார். உள்ளம் புகுந்து, உடல் புகுந்து அவள் மூளையையுமே ஆக்கிரமித்துக்கொண்டு விட்டாள்.

முழு மாதங்கள் ஆன பிறகும் ருக்ஸானா மாமியின் அழகுக்குக் குறைவு ஏற்படவில்லை. வயிறு வளர்ந்து உடல் விரிந்தாலும்

கட்டுக் குலேயவில்லே. முகத்தில் சந்திர ஒளி கூடியே நின்றது. கால்களில் வீக்கம் இல்லே; கண்களில் கருவட்டம் இல்லே. நடமாடுவதிலும் சிரமம் இல்லே. பிரசவம் ஆகி அறைக்குளி முடிந்த பிறகு சட்டென்று எழுந்து விட்டாள். இடுப்பு மயிரிழை பருக்க வேண்டுமே, ஊஹூம்! கன்னிப் பெண்களேப்போலவே கன நளினமான உடல் கட்டு! பிரசவத்துக்குப் பிறகு தலேமயிர் கொட்டிப் போகுமே, இங்கே அதற்கு நேர்மாறு! கருகருவென்று வளர்ந்து தலேகுளித்துக் கழுவுவது பெரும்பாடாகி விட்டது.

ஆனல், மாமிக்குப் பதிலாக மாமூ கொஞ்சம் தளர்ந்து விட்டார், அவரே குழந்தையைப் பிரசவித்தாற்போல! சிறிது வயது தெரிந்தது. கன்னத்துக் கோடுகள் சிறிது கனத்துத் தெரிந்தன. தலேமயிர் முன்னேக் காட்டிலும் வெளுத்துவிட்டது. தாடியை மட்டும் அன்றுடம் மழிக்கவில்லே, எல்லாம் முகம் முழுவதும் வெள்ளே வெள்ளேயாக எரும்பு முட்டைகளேப் போல் தோற்றம் அளித்திருக்கும்!

இரண்டு ஆண்டுகளுக்குப் பின் பெண் குழந்தை பிறந்தது. மாமூவின் தொந்தி மேலும் முன்னுக்கு வந்தது. கண்களுக்குக் கீழே சதை தொங்கியது. கீழ்க் கடைவாய்ப் பல் ஒன்றில் வலி பொறுக்க முடியாமற் போய்விட்டது. வேறு வழியின்றி அதைப் பிடுங்கி எறிந்தார். அது கட்டடத்தையே கலகலக்க வைத்து விட்டது. வரிசையாக எல்லாப் பற்களும் போயின!

அந்த நாளில்தான் மாமிக்கு அறிவுப் பல் முளேத்துக்கொண்டிருந்தது.

ஷோஜாகத் மாமூவின் பொய்ப் பற்களின் கட்டடம் நிஜப் பற்களேவிட அழகாயிருந்தது. அதற்காக வயது குறைந்து தோன்றவில்லேயா? அந்தக் குற்றம் மண்டைச் சளியின் தலேயிலே சுமந்தது.

இந்தியாஜி அத்தையின் கணக்குப்படி ருக்ஸாளு மாமிக்கு வயது இருபத்தாறு. இப்போதும் எப்பொழுதாவது குழந்தைகளுடன் கொம்மாளம் அடிக்கும் மனப்பாங்கு வந்துவிட்டால், மார்க்கண்டேய வயது பதினறுக்கே திரும்பிவிடுவாள்! பல ஆண்டுகளாக அவளுக்கு வயது கூடுவதே நின்று விட்டது. வயது நின்ற இடத்தைவிட்டு நகராத சண்டிக் குதிரையாகி, முளேயடித்தாற் போல நின்று முன்னேற மறுப்பது போலவே தோன்றியது! நாத்திகளின் உள்ளத்தை இது அரமாக அறுத்தது.

பொதுவாகவே களைத்துச் சலித்துப் போனால், இளைஞர்களின் இந்தத் தளுக்கு மினுக்கு குதிரையைப்போல் உதைத்து முதிய வர்களின் உள்ளத்தைப் புண்ணாக்கும். ஆனால் ருக்ஸானா மாமியோ அவர்களுக்கு நம்பிக்கைத் துரோகமே செய்துகொண் டிருந்தாள். நாளுக்கு நாள் சிறியவளாகப் போவது ஒருபுறம் இருக்கட்டும், கணவனையே கண்கண்ட தெய்வமாகக் கொண்டு அவனுக்குப் பணிவிடை செய்து நல்லது பொல்லாததைக் கவனித்துப் பதவிசாக நடந்துகொள்வதுதானே ஒரு பெண் ணுக்கு அழகு; பெருமை; பண்பு! அதை விட்டு அவன் களைத்துச் சலித்து உட்கார்ந்திருக்கும்போது ஒரு பெண் கோழிகளைத் துரத்திக்கொண்டு சிறு சிட்டுப் போல் ஓடினால் அதை என்ன வென்பது?

''ஏய் அண்ணி! உனக்கு ஆண்டவன்தான் நல்ல அறிவைக் கொடுக்கணும். தலை கால் தெரியாமல் குழந்தைகளைப் போலக் கொம்மாளம் போட்டுக்கொண்டு இப்படிக் கோழிகளின் பின்னால் ஓடுகிறாயே, இது நன்றாயிருக்கிறதா?''

''என்ன செய்கிறது, சித்தி! இந்தக் கட்டையிலே போகிற பூனை. . .''

''ஐயையோ! இதைக் கேளடி, அம்மா! ஏண்டியம்மா! உனக்கு எப்போதிலிருந்து நான் சித்தியானேன்? சுஜ்ஜன் அண்ணா என்னைக் காட்டிலும் நாலு வயசு பெரியவன். மாஷா அல்லாஹ்! ஆண்டவன் துக்கிரிப் பார்வையிலிருந்து காப்பாற்று வாராக! அண்ணா அப்பாவுக்குச் சமம். அப்படிப் பார்க்கப் போனால் நீ எனக்குப் பெரியவள். ஜாக்கிரதை! இனிமேல் நீ என்னைச் சித்தி கித்தி என்று சொன்னாய், பார்த்துக்கொள்!''

''சரி, அத். . .தை!'' உதட்டைக் கடித்துக்கொண்டாள் ருக்ஸானா. திருமணத்துக்கு முன்னால் ருக்ஸானா மாமியின் அம்மா, அந்த அண்ணாவுக்குத் தங்கையை 'ஒரு பாயில் படுக்கும் தன் தங்கை'யாக—ஓர் உடையையே மாற்றிக் கட்டிக்கொள்ளும் உடன்பிறவாச் சகோதரியாகக் கூறியது உண்டு.

அன்றொரு நாள் ஷுஜாகத் மாமூவைத் தன் அடிமையாக்கிக் கொண்ட அந்த அழகும், இளம் வயதும் இன்று கண்களை உறுத் தும் துரும்புகளாகி விட்டன. நொண்டிக் குழந்தை மற்றக் குழந்தைகளுடன் ஓட முடியாத நிலையில், 'நீ என்னை ஏமாற்றி

விட்டாய்!' என்று சினந்து கடியுமே, அதுபோல அவர் உள்ளம் புழுங்கினர். ஏன் புழுங்கமாட்டார்? மாமிதான் அவரை ஏமாற்றிக் கொண்டிருந்தாளே, நாளுக்கு நாள் சிறு பிள்ளை யாகத் தோற்றம் அளித்து! அது அவள் குற்றம் இல்லையோ? சின்னஞ்சிறு சிறுமிகள்போல் அவள் ஓடி ஆடிச் சிரித்தால், அவருக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வரும். இதயம் எரிந்து கரியாகிவிடும்.

''எவனை மயக்குவதற்காக இப்படி ஆட்டம் போடுகிருய்?'' அவர் நஞ்சை உமிழ்வார்: ''போய் ஒரு நல்ல கட்டிளங்காளை யாகப் பார்த்து ஒருவனைப் பிடித்துக்கொள்!''

மாமி முதலில் சிரித்து மழுப்புவாள். அப்புறம் வெட்கம் குமிழியிடச் சிவந்துபோவாள். அதைக் காண மாமாவுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டுவரும். கையாலாகத்தனத்தை மறைத்துப் பெரும் பெரும் குற்றமாகச் சுமத்துவார்.

''இன்னுரோடு கண் அடித்துக்கொண்டு நிற்கிருய். . . டிமாகே யுடன் உனக்கு என்ன பேச்சு?''

மாமி நிலைகுலைந்து போவாள். அவள் கண்களிலிருந்து பெரும் பெரும் துளிகளாகக் கண்ணீர் சிதறித் தெறிக்கும். கொடியில் இருக்கும் துப்பட்டாவை இழுத்துத் தன் உடலை நன்ருகப் போர்த்திக் கொள்ளுவாள். அப்புறம் தலை குனிந்தவாறே அறைக்குள் போய்ப் புகுந்து கொள்ளுவாள்.

மாமாவுக்கு இதயம் வெடித்துவிடும். காலடியிலிருந்து தரை நழுவிப் போவது போலத் தோன்றும். மறுநிமிஷம் மாமியின் காலடிகளில் போய் விழுந்து அவள் பாதங்களை முத்தமிடுவார்; தம் தலையைப் பிய்த்துக்கொள்ளுவார். கெஞ்சுவார்; கதறுவார். அழுவார்; அடம் பிடிப்பார்.

''நான் கயவன், பாவி! ஆசைதீர என்னைச் செருப்பால் அடி. பட்டுக்கொள்ளுகிறேன். என் உயிரே, என் இன்னுயிரே! என் இதய ராணியே! என் அரசியே. . .''

ருக்ஸானு மாமி அவர் கழுத்தில் தனது மென்கரங்களைப் போட்டு அழுது புலம்பித் தீர்த்துவிடுவாள்.

''உன் காதலுக்கு ஏங்கித் தவிக்கும் அடிமை நான். என் உயிரே! பொறுமையும் துவேஷமும் காட்டி நான் எரிந்து சாம்ப லாகிக் கொண்டிருக்கிறேன். நீ குழந்தையை மடியில் வைத்துக் கொண் டிருக்கிறதைப் பார்த்தால், என் இரத்தம் கொதிக் கிறது! . . . என் இடத்தைப் பிடித்துக்கொண்ட அந்தப் பயல்

கழுத்தைத் திருகிப் போட்டு விடலாமா என்று தோன்று கிறது!. . . என்னை மன்னித்துவிடு இன்னுயிரே!''

அவள் உடனே மன்னித்து விடுவாள். அதுவும் எப்படி? ஷுஜாகத் மாமூவின் கண்களின் வெள்ளை விழிகளில் ஊதா நிறம் ஏறிவிடும். அப்புறம் களைத்துப் போன கழுதையாக வெகு நேரம் அவருக்கு மூச்சிரைக்கும்.

பின் அவர் மன்னிப்புக் கோரமுடியாத நாட்களும் வந்தன. பல நாட்கள் அவர் கோபித்துக்கொண்டு மாமியின் பக்கமே எட்டிப் பார்க்க மாட்டார். சகோதரிகளுக்கு நம்பிக்கை பிறக்கும்.

''அண்ணு அண்ணியைக் குமையவைத்துக் குமையவைத்துக் கொல்லுகிறுர். தினம் பொழுது விடிந்தால், பொழுது போனல் சண்டைதான், சச்சரவுதான்! ஒருத்தி எத்தனை நாட்கள்தான் தலைதெறிக்க ஆட முடியும்?''

மாமி யாருக்கும் தெரியாமல் மணிக்கணக்காக அழுவாள். நீர் நிறைந்த கண்களில் சிவப்புக்கோடுகள் தோன்றி இன்னும் கொடுமை புரியும். பொன்னிறமான முகம் வெளுத்துத் தோற்றம் அளிக்கும், பொன்னில் வெள்ளியைக் கலந்து தட்டான் ஏமாற்றி விட்டதுபோல! உலர்ந்து சுவையற்றுப் போன உதடுகள்! நெற்றியோடு நெற்றியாக ஒட்டிய ஒரு கூந்தல் கொத்து!—இப்படியாக அவள் உருவத்தைக் காண்பவர்கள் வருந்துவார்கள், எப்படி இருந்தவள் எப்படி ஆகிவிட்டாள் என்று! துயரமே உருவான அழகைக் கண்டு மாமூ மேலும் தொய்ந்து தொங்கிப் போவார். விழிகளின் வெறுமை மேலும் எடுத்துக்காட்டும்.

ஒரு கொடி—அமரவல்லி என்று! பச்சைப் பாம்பு போலத் தண்டு இருக்கும். வேர் இராது. இந்தப் பச்சைத் தண்டுகளை எடுத்து எந்தப் பச்சைமரத்தில் போட்டாலும் சரி, இந்தக் கொடிகள் அதன் சாற்றை உறிஞ்சி உறிஞ்சிக் குடித்துவிடும். இந்தக் கொடிகள் வளர வளர மரங்கள் வாடி உலர்ந்து விடும்.

ருக்ஸானு பேகத்தின் உடற் பூங்கா மலர மலர மாமூ உலர்ந்து சருகு உதிர்ந்து போனுர். சகோதரிகள் தலையோடு தலை முட்டிக் கொண்டு ரகசியம் பேசுவார்கள். நாளுக்கு நாள் சரியும் சகோதரனின் உடல் ஆரோக்கியத்தைக் கண்டு வயிற்றில் புளி கரைக்கும். இளைத்துத் துரும்பாகிப் போயிருந்தார். அதோடு கீல் வாயு வேறு, காலைக் கையை மடக்க முடியாமல். இருமலும் சளியும் வேறு உயிருக்குச் சத்துருவாக வதைத்து எடுத்தன.

தலைக்குச் சாயம்போடுவது ஒத்துக்கொள்ளவில்லை என்று டாக்டர்கள் சொன்னார்கள். அதனால் வேறு வழியின்றிச் சாயத்தை நிறுத்தி மருதாணி இட்டுக்கொள்ளத் தொடங்கினார்.

இங்கு ருக்ஸானா பாவம், ஒவ்வொருவரிடமும் தலை நரைக்க மருந்து கேட்டுக்கொண்டு திரிந்தாள். வாசனைத் தைலம் தடவினால் சீக்கிரம் நரைத்துவிடும் என்று யாரோ சொன்னார்கள். ருக்ஸானா அத்தருக்குள்ளேயே தலையைக் கொடுத்து விட்டாள். உயர்ந்த அத்தரின் நெடி மூக்கைத் துளைக்கவே, மாமூ அந்த வாசனையை அமுக்கி நாற்றத்தைத் தூக்கிக் காட்டும் வசவுகளாகப் பொரிந்து தள்ளி மாமியின்மீது களங்கம் சுமத்தினார். குழந்தைகள் மட்டும் இல்லையென்றால், மாமி கிணற்றில் குதித்திருப்பாள். அவள் தடவிய அத்தரில், தலைமயிர் வெளுப்பதற்குப் பதிலாகக் கருகருவென்று வளர்ந்து வெல்வெட்டென வழுவழுப்பாகியது.

மாமியின் இளமையை முறிக்க மாமூ யூனானி ஹகீம்களிடம் சகலவிதமான லேகியங்கள், புஷ்டி தரும் பஸ்பங்கள், நெய்கள் என்று வாங்கிச் சாப்பிட்டுப் பார்த்துவிட்டார். சில நாட்களுக்கு ஓடுகிற இளமை நிற்பதுபோலத் தோன்றியது. முறுக்கும் மிடுக்கும் திரும்பி வந்தன. மாமி உலகத்து மோசடி வித்தைகளையோ சூழ்ச்சிகளையோ கற்கவில்லை. தானாக வளருகிற கொடி அல்லவா! அவளுக்கு யாரும் நுணுக்கங்களைச் சொல்லித் தரவும் இல்லை. இருபத்தெட்டு வயதாகியும் பதினெட்டு வருடத்து அநுபவமின்மையும் அறியாமையும் அவளை ஆட்கொண்டிருந்தன.

மோட்டாரை அதிகம் ஓட்டினால் இயந்திரம் எரிந்து பொசுங்கி விடும். மருந்துகள் எதிராக வேலை செய்யவே ஷாஜாகத் மாமூ இடிந்துபோய் விட்டார்! முதுமை ஒரேயடியாக ஆளை அமுக்கியது. அவர் உடலுக்கும் மூளைக்கும் இத்தனை வேலை கொடுக்காமல் இருந்தால், அறுபத்திரண்டு வயதுக்குள்ளே, இப்படிச் சீர் கெட்டிருக்கமாட்டார். இப்போது அவர் தம் வயதுக்கும் மீறிய மூப்புற்றுத் தோன்றினார்.

சகோதரிகள் விம்மி விம்மி அழுதார்கள். டாக்டர்கள், ஹகீம்கள் எல்லாரும் கை விரித்துவிட்டார்கள். மக்கள் மீண்டும் இழந்த வாலிபத்தைத் திரும்பப் பெற எத்தனை மருந்து மாயங்கள் சொன்னார்கள். ஆனால், வயதுக்கு முன்பே

முதுமையைப் பெற மருந்து சொல்லத் தெரியாமல் விழித்தார்கள். சொல்ல முடிந்திருந்தால் மாமிக்குக் கொடுத்துப் பார்த்திருக்கலாம். என்றென்றும் இளமையைத் தரக்கூடிய பூதமோ, ஆவியோ அவளைப் பற்றி இருக்கவேண்டும் என்று தோன்றியது. அதனால்தான் அவள் இளமை குன்றும் நினைப்பே இல்லாமல் வளர்ந்தது. தாயத்துகளும் முடிகளும் தோல்வியைத் தழுவின. மந்திரமும் மாயங்களும் மண்ணைக் கவ்வின.

அமரவல்லி படர்ந்துகொண்டே போயிற்று.

ஆலமரம் உலர்ந்துகொண்டே வந்தது.

ஓவியமாக இருந்தால் கிழித்துப் போட்டுவிடலாம். சிலையாக இருந்தால் தூக்கிப் போட்டுச் சில்லுச் சில்லாக உடைத்து விடலாம். அல்லாவின் கையினால் செய்த இந்த மண் பொம்மையோ அழகாகவும் இருந்தது; உயிர் உள்ளதாகவும் இருந்தது. அதன் ஒவ்வொரு மூச்சிலும் இளமைச் சூடு மணத்துக்கொண் டிருந்தது. யார் என்ன செய்யமுடியும்? இப்படிக் கதிரவனெனச் சூடேற்றிக்கொண் டிருந்த அந்த மேனியழகை இறக்கிக் குலைக்க ஒரே வழிதான் தென்பட்டது. உண்ணும் உணவில் கைவைத்து வயிற்றில் அடித்தால்தான் பலன் அளிக்கும் என்று தோன்றியது. நெய், இறைச்சி, முட்டை, பால் எல்லாம் நிறுத்தியாகிவிட்டது. ஷுஜாகத் மாமூவின் சீரணசக்தி குன்றி விடவே, மாமி குழந்தைகளுக்கு மட்டுமே இறைச்சி தருவித்தாள். எப்போதாவது அவள் ஒரு கவளம் ருசி பார்த்தால் அதுவே பெரிது. இப்போது அதையும் நிறுத்திப் பத்திய உணவு உட்கொள்ளத் தொடங்கிவிட்டாள். ஆண்டவன் மனம் வைத்தால், முதுமை அவளைப் பற்றிக்கொள்ளக்கூடும் என்ற நம்பிக்கை எல்லாருக்குமே பிறந்தது.

''ஏ அண்ணி! இதென்ன துள்ளித் திரியும் சிறுமிகளைப்போல் ஷல்வார் கமீஸ் போட்டுக்கொண் டிருக்கிறாய்? இதைப் போட்டுக்கொண்டால், இன்னும் சின்னவளாய் போய் விடுகிறாய்!'' என்று நாத்திகள் கூறினார்கள்: ''பெரிய கனமான உடைகள் உடுத்து. அப்போதுதான் வயதுக்கேற்ற ஆகிருதி தெரியும்.''

முமானி தைத்த மேலங்கியும் தொள தொளவென்ற பைஜாமாவும் போட்டுக்கொண்டாள்.

''எந்தக் காதலனிடமாவது போவதற்கு ஏற்பாடா?'' மாமூ ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார். மாமி உடைக்குள்ளேயே பயந்து நடுநடுங்கிப் போனாள்.

''அடியே! இரண்டொரு முறை மட்டும் நமாஸ் படிக்கிறாய்? ஐந்து முறையும் நமாஸ் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளு!''

மாமி ஐந்து நேரங்களிலும் தொழுகை நடத்தத் தொடங்கி விட்டாள். மாமூவுக்கு முன்னைப்போல் தூக்கம் வருவதில்லை. அவரைப்போலவே தூக்கமும் கிழக்கேட்டானைக் கொட்டுக் கொட்டென்று விழித்துக்கொண் டிருந்தது. நள்ளிரவு நமாஸ் (தஹஜ்ஜரத்) படிக்க அவள் அந்த நேரம்வரை கண் விழிக்க வேண்டியிருந்தது.

''நான் சாவதற்காக 'நஃபல்' (பிரார்த்தனை) செய்கிறாயா?'' என்று புலம்பாத தோஷமாகக் கேட்பார் மாமூ.

முன்பே அவள் ஒல்லி. பட்டினியும் பத்தியமும் அவளை மேலும் ஒல்லியாக்கின. நெய், இறைச்சியைத் தள்ளியதும் அவள் நிறம் இன்னும் மெருகிட்டது. உடல் தோல் துலாம் பரமாகிப் பளிச்சிட்டது. இந்தப் பக்கத்துக்கு அந்தப் பக்கம் கண்ணாடியாக தெரிந்தது. முகத்திலேதான் என்ன களை, என்ன களை! முன்பெல்லாம் பார்க்கிறவர்களுக்கெல்லாம் வாய் கொள்ளாமல் உமிழ்நீர் ஊறியது. இப்பொழுது என்னடாவென்றால், அவள் காலடியில் போய்த் தலையை மோதிக்கொள்ளவேண்டும் என்றே தோன்றியது. விடியற்காலையில் ஃபஜர் (காலை நமாஸ்) படித்தபின் குரான் ஓதுவாள். அப்போது அவள் முகத்தில் ஹஜ்ரத் மரியம்மன் புனிதம் நல்கும் உருவமும், பாதிமா—ஜோஹ்ராவின் தூய்மையும் ஒளிவிடும். அவள் இன்னும் சிறு பிராயத்தினளாக, கன்னி கழியாதவளாகவே தோற்றம் அளிப்பாள்.

மாமூவின் கல்லறை நாளுக்கு நாள் நெருங்கி வருவதாகவே தோன்றியது. அவர் வாய் நிறைய வசவுகளாகவே உமிழ்வார். மருமகன்கள், சகோதரர் பிள்ளைகள் இவர்களுக்கு அடுத்தபடியாகப் பேய் பிசாசுகளையும் தேவதைகளையும் உசுப்பி விட்டுக் கொண்டிருப்பதாகக் குற்றம் சாட்டிக் கடிந்துகொள்ளுவார். மண்டல நோன்பு இருந்து, பட்டினி கிடந்து, தனிமையில் சாதனை புரிந்து பேய்—பிசாசுகளை வசப்படுத்துவதாகவும், அவற்றின் உதவியினால் மந்திர மூலிகைகள் வருவித்துச் சாப்பிடுவதாகவும், அதனால்தான் இளமைக் கருக்கு அழியவில்லை என்றும் சாடுவார்.

சாயத்துக்கு அடுத்தபடி இப்போது மருதாணியும் மாமூவுக்கு ஒத்துக்கொள்ளாமல் போய்விட்டது. மருதாணி தடவிக்கொண்

டால், இருமலும் தும்மலும் வரலாயின. அவருக்கே மருதாணியைக் கண்டால் ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. ருக்ஸானு மாமி அவர் தலைமயிருக்கு மருதாணிப் பற்றுப் போடுவாள். எத்தனைதான் வேண்டாமென்று நினைத்தாலும், அவள் கையில் அது அழகாகப் பற்றிக்கொள்ளும். செக்கச்செவேல் என்று விளக்குச் சுடர்போல ஒளி வரும். ஆனல், அவருக்கு மருதாணி அப்படிப் பற்ருது. அவள் கையைப் பார்த்தால், ஷுஜாகத் மாமூவுக்கு அவள் கையில் மருதாணி பற்றியிருப்பதாகத் தோன்ருது. அவருடைய உள்ளத்து இரத்தத்தில் அவள் தன் கைகளைத் தோய்த்து எடுத்திருப்பதாகவே தோன்றும். அந்தக் கரங்களை இதழ் விரிக்காத மல்லிகை மொட்டுக்கள் என்று கூறி மகிழ்ந்து ஒரு காலத்தில் அவர் முத்தமிட்டிருக்கிருர்; கண்களில் ஒற்றிக் கொண்டிருக்கிருர். ஆனல், இன்று அவை தன் வேட்டையின் மீது பாயும் பருந்தின் கொலைகாரப் பாதங்களாகி அவருடைய கண்களையே குத்த வருவதுபோலத் தோன்றின.

இரத்த சுத்திக்காக அவள் மூலிகைகள் அரைத்துக் கஷாயம் போட்டுக் கொடுப்பாள். அவருக்கு தரையில் வேரை இழைக்க இழைக்க அவள் சந்தனமென மணங் கமழ்வாள்.

சகோதரிகள் வீட்டிலிருந்து சகோதரனுக்காகக் கஞ்சி போட்டுக்கொண்டு வருவார்கள். அண்ணி எங்காவது விஷத்தைக் கொடுத்து விடுவாளோ என்று தங்கள் கையினுல் பக்கத்திலிருந்து சாப்பிட வைப்பார்கள். அப்படியும் அவர் உடல் இன்னும் மெலிந்து வந்தது. போதாக்குறைக்குப் பழைய மூலரோகம் தலையெடுத்தது. கொஞ்ச நஞ்சம் இருந்த இரத்தமும் போய் விட்டது. தின்ற தாதுபுஷ்டி மருந்து தன் வேலையைக் காட்டலாயிற்று. அது புகழ் பெற்ற ஹகீமின் மேற்பார்வையில் பல நூறு ரூபாய்கள் செலவு செய்யப்பட்டுத் தயாரிக்கப்பட்டது. அரச குடும்பத்துக்கு மட்டுமே கட்டுபடியாகக்கூடிய மருந்து அது! செத்தவன் தின்ருலும் எழுந்து உட்கார்ந்து விடுவான். அத்தனை வலுவான மருந்து. ஆனல், மாமூவின் உடல் முழுவதும் பச்சை குத்தினற்போலக் கொப்புளங்களாகி விட்டது.

மாமி பாவம், வெண்ணெயை ஒருமுறைக்கு நூறு முறையாக நீரில் கழுவி, அதில் கந்தகம் பொடித்துப் பல மூலிகைகள் இடித்துக் குழைத்துக் களிம்பு தயாரிப்பாள். பற்றுக்குமேல் பற்ருகப் போடுவாள். தவலை தவலையாக வேப்பந்தழை ஒடித்துப் போட்டு வெந்நீர் காய்ச்சுவாள். காலையும் மாலையும் சீழை

யும் இரத்தத்தையும் கழுவுவாள். அவற்றில் சில கொப்புளங்கள் புறையோடி ஆறாப்புண்களாகி விட்டன; அவை மாமூவைச் சிறுகச் சிறுக விழுங்கிக்கொண் டிருந்தன.

ஒரு நாள் இந்த உபத்திரவம் மிகவும் அதிகமாகி மாமூ கிழித்த நாராகக் கிடந்தார். சகோதரிகள் அமர்ந்து அண்ணிக்கு வசை புராணம் பாடிக்கொண் டிருந்தார்கள். இந்தச் சமயம் பார்த்து நிஜ்ஜிக் கிழவி எங்கிருந்துதான் வந்து தொலைந்தாளோ, கடவுளுக்குத்தான் வெளிச்சம்! முதலில் ஷாஜாகத் மாமூவைத் தாத்தா என்று நினைத்து அவரிடம் பழங்கதைகளை எடுத்துவிட்டாள். ஒரு காலத்தில் தாத்தா அவளிடம் அன்பும் ஆசையும் வைத்திருந்தார். ஆனால், அவள் ஆசை நிறைவேறாமலே ஏமாந்திருக்கிறாள். தாத்தா செத்து இருபது ஆண்டுகள் ஓடிவிட்டன. இப்போது கிழவி பீளை சாய்ந்த கண்களில் பழைய கனவுகளைத் தேக்கி உறவு கொண்டாட முனைந்திருக்கிறாள். வெகுநேரப் பிரயாசைக்குப் பின் மாமூவின் உண்மை உறவைப் புரிந்துகொண்டவள் செத்துப் போன மாமியை நினைத்து ஒப்பாரி வைத்துப் பிலாக்கணம் பாடத் தொடங்கிவிட்டாள்.

''இதென்ன, வயது காலத்திலே இந்தப் பரிசு வேறு வழங்கிப் போயிருக்கிறாளா?'' திடீரென்று அவள் பார்வை மாமியின்மீது விழுந்தது. மாமி முற்றத்தில் புறாக்களுக்குத் தீனி போட்டுக் கொண்டிருந்தாள். அவள் கழுத்தைச் சாய்த்து அமர்ந்திருந்த முறையே அழகாயிருந்தது, படம் எடுக்கலாம்போல! புறாக்கள் தானிய மணிகளைக் கொத்தும்போது அவளுடைய பளிங்கு போன்ற உள்ளங்கையைக் 'கிசு கிசு' பண்ணிக்கொண் டிருந்தன. வேண்டாமென்று அடக்கினாலும் அவளால் வருகிற சிரிப்பை அடக்கமுடியவில்லை. அந்தச் சிரிப்பு மேலும் அவள் அழகை வளப்படுத்திக் காட்டியது.

''ஐயோ! நான் செத்தேன்!'' கிழவி தனது முகத்தைச் சப்பாத்தியாக்கி மாமியின் பக்கம் திரும்பி, இருந்த இடத்திலிருந்தே திருஷ்டி கழித்து, இரண்டு கை, பத்து விரல்களையும் நெற்றிப் பொட்டில் அழுத்திப் 'படக், படக்' என்று சொடுக்கிக்கொண்டாள்.

''ஆண்டவன் துக்கிரிப் பார்வையிலிருந்து உன்னைக் காப்பாற்றட்டும்! குழந்தை சந்தரபிம்பம். உடல் முழுவதும் பருவம் செழித்துக் கொழிக்கிறது! இதோ பார் அப்பா!'' அவள் ஏதோ யோசனை கூறுவதற்காக மாமூவின் அருகில் ஊர்ந்து சென்றாள்.

''வியாபாரிகளின் நடுப்பிள்ளை இருக்கிறானே, அவன் வெளி நாடு சென்று பரீட்சை கொடுத்துத் தேறி வந்திருக்கிறான். ஆண்டவன் சாட்சியாகச் சொல்கிறேன், சந்திர—சூரிய ஜோடி யாக இருக்கும்!''

ஒரு காலத்தில் கிழவி 'கூட்டிக் கொடுக்கும்' தொழிலில் வல்லவளாயிருந்தவள். இப்பொழுது அவள் வியாபாரம் படுத்துவிட்டது. முடி நரைத்துக் கை கால் ஓய்ந்துவிடவே, கை ஏந்திப் பிச்சை எடுத்து வாழ்நாளை ஓட்டலானாள்.

சிறிது நேரம் வரை யாருக்குமே இந்தக் கிழப்பிணம் என்ன உளறுகிறது என்று புரியவில்லை. வியாபாரிகளின் நடுப் பையன்—வெளிநாடு போய்ப் பரீட்சை கொடுத்து வந்தவன்— எல்லாருடைய விழிகளிலும் வட்டமிட்டான். இந்தப் பொல்லாக் கிழவி ருக்ஸானா மாமிக்குச் சம்பந்தம் தேடுவதில் முனைந்திருக்கிறாள் என்று யாருக்குமே விளங்கவில்லை.

''இமாம் ஹுஸேன்மீது ஆணை! எனக்கு ஒரு ஜோடி பொன் வளையல் தருவதாயிருந்தால், நான் பேசிப் பார்க்கிறேன்!''

விஷயம் விளங்கியதும் எல்லாருக்கும் மானமே பறிபோய் விட்டது. குளவிக் கூட்டிலே கையைவிட்ட கதையாகக் கிழவியை எல்லாரும் நாலா பக்கத்திலிருந்தும் கொட்டித் தீர்த்துவிட்டார்கள். பல முனைகளிலிருந்தும் பீரங்கித் தாக்குதல் தான் கிழவிக்கு!

''செத்துச் சுடுகாடு தெரியாத எனக்கு இது எப்படித் தெரியும்?'' கிழவி கால்களில் செருப்பை மாட்டிக்கொண்டு பாய்ந்துவிட்டாள், தலைதப்பினால் போதும் என்று! போகிற போக்கில் மாமூவின் மரண நிழல் ஆடும் முகத்தை ஓர் ஐயப் பார்வையோடு பார்த்தாள். ''முகத்திலே என்ன வாலிபக் களை சொட்டுகிறது!'' என்று சொன்னவள் அப்புறம் அங்கு நிற்க வில்லை.

அன்று ஷுஜாகத் மாமூ குரானை எடுத்து எல்லாருக்கும் எதிரில் சத்தியமே செய்துவிட்டார், ''இந்த இரண்டு குழந்தை களும் என்னுடையவை அல்ல. அக்கம்பக்கத்தாரின் அருட் பார்வையின் பலனே. ருக்ஸானா பேகம் ஒளிந்து ஒளிந்து அவர் களைப் பார்த்ததனால் வந்த வினை!'' என்று!

அன்று இரவு அவர் அழுதுகொண் டிருநதார்; புலம்பிக் கொண்டிருந்தார். தீப்படுக்கையில் படுத்திருப்பவர்போலப் புரண்டு புரண்டு துடித்துக்கொண் டிருந்தார். அன்று இரவு

அவருக்குப் பெரிய மாமியின் நினைவு வந்தது. அவள் கூந்தல் காலமில்லாக் காலத்திலேயே குப்பென நரைத்துப் போயிருந்தது. அவள் இளமை கண்ணீரிலேயே கரைந்து போயிருந்தது; மண வாழ்க்கை மரித்துப் போயிருந்தது. அப்படியும் அவள் நேர்மையின் வடிவமாக, நன்றியின் உருவமாகத் திகழ்ந்தாள். அவளைப் போல் சாதுவை எங்கே தேடினாலும் காணமுடியாது. அவருடைய முதுமையையும் அவளே கேட்டுப் பெற்றுக்கொண்டதுபோலக் கிழடு தட்டிப் போயிருந்தாள். உயர்குலத்துக் கற்புக்கரசியாக அவள் சொர்க்கம் புகுந்தாள். இன்று அவள் உயிருடன் இருந்தால், இந்த வேதனை, இந்த எரிச்சல், இந்த வெள்ளை வேர்விட்ட மருதாணி பூசிய தலைமயிர், இந்தப் புரையோடிய புண்கள், இந்தத் தனிமை—எல்லாவற்றையும் பங்கு போட்டு அநுபவித்திருப்பாள். இந்த முதுமை நம்மை இப்படித் தகித்துச் சுட்டிருக்காது. இருவரும் இணைந்தே கிழவர்களாகியிருப்போம். ஒருவர் துயரத்தை மற்றவர் புரிந்துகொண்டிருப்போம், ஒருவருக்கொருவர் துணை நின்றிருப்போம்!

அமரவல்லி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டே போயிற்று. ஆலமரத்தின் அடிப்பாகம் பொந்தாயிற்று. கிளைகள் ஊசலாடின. இலைகள் உதிர்ந்தன... கொடி, பக்கத்துப் பசுமை போர்த்த மரத்தில் ஏறிவிட்டது.

தன்னைத்தானே வறுத்து எரித்துக்கொள்ளும் எத்தகைய சூழ்நிலை! ஷூஜாகத் மாமூவின் சவம் முற்றத்தில் கிடத்தப்பட்டிருந்தது. அந்திம யாத்திரைக்கான ஏற்பாடுகள் முடிந்துவிட்டன. சகோதரிகள் மார்பில் அடித்துக்கொண்டு ஒப்பாரி வைத்து அழுது தீர்த்தார்கள். மாமூ தம் சொத்து முழுவதையும் சகோதரிகளுக்கு எழுதிவைத்துவிட்டே கண்களை மூடினார்.

ருக்ஸானி மாமி எல்லாரிடமிருந்தும் ஒதுங்கித் தனியாக வாசற்புறத்தில் உட்கார்ந்திருந்தாள். இத்தனை அழகும் இளம் வயதும் கொண்ட கைம்மைத் துயரத்தில் தோய்ந்த பெண்ணை இதுவரை பார்த்ததில்லை என்று பார்த்தவர்கள் பேசிக்கொண்டார்கள்.

வெள்ளையுடையில் அவள் ஒரு விந்தையான மனமோகன உருவத்தில் காட்சி தந்தாள். அழுது அழுது அவள் கண்கள் போதையேறிய விழிகளெனக் கனத்திருந்தன. மஞ்சள் நிற முகம் புஷ்பராகக் கல்லெனப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. துக்கம்

விசாரிக்க வந்தவர்கள் அனைவரும், எல்லாவற்றையும் மறந்து இரக்கத்துக்கு இலக்கான அவளையே பார்க்கலாயினர். இறந்தவனின் அதிர்ஷ்டத்தை நினைத்துப் பார்க்கப் பார்க்க அவர்களுக்குப் பொறாமையே மேலோங்கியது.

மாமியின் முகத்திலே இயலாமையும் நாதியற்ற தன்மையும் கலந்த சவக் களை தாண்டவமாடியது. அச்சமும் விசனமும் அவள் முகத்தில் ஆழப் பதிந்து கபடு சூதே இல்லாதவள் என்று எடுத்துக் காட்டிக்கொண் டிருந்தன.

இரு குழந்தைகளும் அவள் அருகில் அவளை ஒட்டினாற்போல் உட்கார்ந்திருந்தன. அவள் அவற்றுக்குத் தமக்கையாகத்தான் தோன்றினாள்.

அவள் மௌனமே உருவாக உட்கார்ந்திருந்தாள். படைப்புத் தொழிலை மேற்கொண்ட கைதேர்ந்த சிற்பி தனது இணையற்ற தூரிகையினால் கபடமின்மைக்கு ஓர் ஓவியம் தீட்டி வைத்தது போல் இருந்தது அவளது அந்த அமர்ந்த சித்திரம்.

இரண்டு கைகள்

ராமாவதார் ராணுவத்திலிருந்து திரும்பி வருவதாயிருந்தான். வயதான தோட்டிச்சி அவன் கடிதத்தைப் படிக்கச் சொல்லிக் கேட்பதற்காக அப்பாவிடம் வந்திருந்தாள். ராமாவதாருக்கு விடுமுறை கிடைத்து விட்டது. போர் முடிந்து விட்டதல்லவா? அதனால்தான் மூன்று ஆண்டுகள் கழித்து ராமாவதார் ஊருக்கு வந்துகொண் டிருந்தான். கிழட்டுத் தோட்டிச்சியின் பீளை சாய்ந்த கண்களில் கண்ணீர் பளிச்சிட்டது. நன்றியறிவோடு அவள் ஓடி ஓடி ஒவ்வொருவருடைய காலையும் தொட்டுத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். இந்தக் கால்களுக்கு உடையவர்கள்தான் அவளுடைய ஒரே பிள்ளையைப் போர்க் களத்திலிருந்து நல்லபடியாகக் கொண்டுவந்து சேர்த்ததாக அவளுக்கு நினைப்பு!

கிழவிக்கு வயது ஐம்பது இருக்கலாம். ஆனால் பார்ப்பதற்கு எழுபது ஆனாற்போல் இருந்தது. அரையும்குறையுமாகப் பத்துப் பன்னிரண்டு குழந்தைகளைப் பெற்றவள் அவள். அவர்களில் ராமாவதார் மட்டுந்தான் எத்தனையோ வேண்டுதல்களுக்கும் நேர்த்திக்கும் பிறகு உயிர் பிழைத்திருந்தான். அவனுக்குத் திருமணமாகி ஓராண்டு முடிவதற்குள்ளாகவே போர்முனையிலிருந்து அழைப்பு வந்துவிட்டது. கிழவி கூச்சல் போட்டு ஊரைக் கூட்டினாள். ஆனால் பயன்? அவள் எண்ணம் ஏதும் பலிக்கவில்லை. ஆனால் ராமாவதார் சீருடை அணிந்து கடைசியாக அவள் கால்களைத் தொட வந்தபோது, அவனுடைய உடை மிடுக்கைக் கண்டு கிழவி மகிழ்ந்து போனாள். அவன் பெரிய கர்னல் ஆகிவிட்டதாகவே எண்ணி இறுமாந்து போனாள்.

அலுவலர்களும் சிப்பந்திகளும் சிரித்துக்கொண் டிருந்தார்கள், மனத்துக்குள். ராமாவதார் வந்த பிறகு பெரிய நாடகம் ஒன்று நடக்கும் என்ற நம்பிக்கையில், அவன் வரும் நாளை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தார்கள். ராமாவதார் படைக்குப் பீரங்கி துப்பாக்கி சுடப் போகவில்லை. போர்வீரர்களின் மலஜலம்

எடுக்கத்தான் போயிருந்தான். இருந்தாலும் பழகிப் பழகி அவனுக்கும் போர்வீரனின் துடுக்கும் மிடுக்கும் வராமல் போகுமா? காக்கி உடை அணிந்தபின் அவனால் ஒரு நாளும் பழைய 'ராமாவதாராக' இருக்க முடியாது. கோரியின் கெட்ட நடத்தையைப்பற்றிக் கேட்டால் அவனது இளம் இரத்தம் அவமானத்தினால் கொதித்துச் சுண்டவே செய்யும். இப்படி அவர்கள் எண்ணம் ஓடியது.

கல்யாணமாகி வந்த புதிதில் என்ன அடக்கமாக இருந்தாள் கோரி! ராமாவதார் இருந்தவரையில் முழு நீளத்துக்கு முகத் திரையைத் தொங்க விட்டுக்கொண்டிருந்தாள். யாருமே அவள் முகத்தின் உருவத்தையோ நிறத்தையோ பார்த்ததில்லை. கணவன் போர்முனைக்குப் புறப்பட்டுச் சென்றபோது அவள் விம்மி விம்மி அழுதாள், அவளுடைய நெற்றிக் குங்குமம் என்றென்றைக்குமே அழிந்து விட்டாற்போல. கொஞ்ச நாட்கள் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகத் தலைகுனிந்த வண்ணம் கழிவுப் பொருள் கூடையைச் சுமந்து சென்றாள். பிறகு சிறுகச் சிறுக அவளுடைய முகத்திரையின் நீளம் குறையலாயிற்று.

இது எல்லாம் இளவேனிற்காலம் காட்டும் கோல விளையாட்டு என்று சிலர் எண்ணினர். வேறு சிலரோ வெளிப்படையாகக் கோடிட்டுப் பெயர் சூட்டினர், நடத்தை கெட்டவள் என்று! ராமாவதார் போனதிலிருந்தே பிடித்தது சனியன். அந்த வெட்கம் கெட்ட பெண் எந்த நேரமும் 'ஹிஹி' என இளிப்பாள். எந்த நேரமும் தளுக்கி மினுக்கி நடப்பாள். இடுப்பில் அழுக்குக் கூடையைத் தூக்கிக்கொண்டு, வெண்கலக் காப்பு 'கணகணக்க' அவள் எந்தப் பக்கம் போனாலும் மக்கள் தன் நினைவு அழிந்து பார்ப்பார்கள். வண்ணான் கையில் இருக்கும் சவுக்காரக் கட்டி வழுக்கித் தொட்டிக்குள் விழுந்துவிடும். சமையற்காரனின் கண்கள் இருப்புச் சட்டியில் கருகிக் கொண்டிருக்கும் ரொட்டியைக் கவனிக்க மறந்துவிடும். தண்ணீர் சேந்துபவனின் வாளி கிணற்றுக்குள் கீழே கீழே போய்க் கொண்டே இருக்கும். வில்லைச் சேவகனின் தலைப்பா தளர்ந்து கழுத்தில் தொங்கும். அந்தக் குறும்புக்காரி இத்தனைக்கும் செய்வது ஒரு சின்னக் காரியந்தான். முகத் திரைக்குள்ளிருந்தே விழிக்கணையை வீசிவிட்டு ஒன்றுமே தெரியாதவள்போலப் போய்விடுவாள். சிப்பந்திகள் அனைவரும் அந்த நேரத்துக்கு உயிரற்ற பிணமாகி விழி கொட்டாமல் பார்த்துக்கொண்டே

இருப்பார்கள். பிறகு சட்டென்று துணுக்குற்று விழித்துத் தன் நிலைக்கு வந்து, பிறர் நிலையைப் பார்த்துப் பரிகசிக்கத் தொடங்கி விடுவார்கள்.

வண்ணாத்தி கோபத்தில் கஞ்சிக் கலயத்தை உருட்டி விடுவாள். வில்லைச் சேவகனின் மனைவி மடியில் படுத்துப் பால் குடித்துக் கொண்டிருக்கும் குழந்தையைக் காரணமின்றி ஓங்கி ஓர் அறை வைத்துக் கீழே இழுத்துப் போடுவாள். சமையற்காரரின் மூன்றாவது மனைவிக்கு ஹிஸ்டீரியா வலிப்பு வந்துவிடும்.

பெயருக்குத்தான் கோரி. அதாவது சிவப்பி. ஆனால் நிறத்தில் அட்டைக் கரி. தோசைக் கல்லைத் திருப்பிப் போட்டு, சமைக்கத் தெரியாதவள். கருகிய பரோட்டா போன்ற கறுப்பி. அகன்ற துருத்திய மூக்கு, பரந்து விரிந்த உதடுகள். பல் துலக்கும் பழக்கம் ஏதோ ஏழேழு பிறவிகளாக இல்லாதது போன்ற ஊத்தைப் பற்கள். காலைக்கு மை தீற்றுவதுபோலக் கலம் மையைத் தீற்றியும் வலப் புறத்து ஒன்றரைக் கண் பார்வையை மறைக்க முடியவில்லை. ஆயினும் அந்தக் கோணல் பார்வையினாலேயே விஷம் தோய்ந்த கணைகளை வீசுவாள். குறி தப்பாமல் பட வேண்டிய இடத்தில் படும். இடை துடியோ கொடியோ இல்லை; நல்ல பிடி இடை. எச்சிற் பண்டங்கள் தின்று தின்று சாட்டெருமையெனக் கொழுத்திருந்தாள். பெரிய எருமையின் குளம்புகளை நிகர்த்த கால்கள். அவள் போகும் இடங்களுக் கெல்லாம் கடுகெண்ணெயின் சிக்கு நாற்றமும் கூடவே வரும். ஆனால் குரல் குயிலையே நாணச் செய்யும். நாள் கிழமை பண்டிகைகளில் அவளும் ஆடிப் பாடுவாள். மற்றவர்கள் குரலை அடக்கி அவள் குரல்தான் மேலெழுந்து ஒலிக்கும்.

கிழட்டுத் தோட்டிச்சி—அதாவது அவள் மாமியார் மகன் போன பிறகு அவள்மீது இல்லாத பல சந்தேகங்கள் பட ஆரம்பித்தாள். நினைத்தால் ஒரு பாட்டம் அவள்மீது வசைமாரி பொழிவாள். அவளைக் கண்காணிப்பதற்காக அவள் பின்னாலேயே போவாள். ஆனால் கிழவிக்கு இப்போது மிகவும் தள்ளவில்லை. தளர்ந்து விட்டாள். நாற்பது ஆண்டுகள் கழிவுப் பொருள்கள் தூக்கியதன் பலன், அவள் இடுப்பு ஒரு பக்கம் நொடிந்து அப்படியே நிரந்தரமாகச் சாய்ந்து விட்டது. எங்கள் குடும்பத்துக்குப் பழகிய தோட்டிச்சி அவள். எங்கள் நஞ்சுக் கொடிகளைக் கொண்டு போய்ப் புதைத்தவளே அவள்தான். அம்மாவுக்கு வலி எடுத்தால் உடனே அவள் வீட்டு வாசற்படியில்

வந்து உட்கார்ந்து விடுவாள். சிற் சில சமயம் லேடி டாக்டர்களுக்குக்கூடப் பயன்படக்கூடிய பல யோசனைகள் கூறுவாள். மந்திரம்—மாயம், யந்திரம்—தந்திரம், தாயத்து—கயத்து என்று எல்லாமே கொண்டு வந்து கட்டுவாள். எங்கள் வீட்டில் அவளுக்குப் பெரியவர்களுக்குரிய ஒரு மரியாதை இருந்தது.

இத்தனை பிரியமான தோட்டிச்சியின் மருமகள் திடீரென்று கண்ணில் விழுந்து துரும்பாகி விட்டாள். சேவகன் மனைவி, சமையற்காரனின் மனைவி ஆகியவர்கள் விஷயம் ஒரு புறம் இருக்கட்டும். எங்கள் நல்ல குணம் படைத்த அண்ணிகள்கூட அவள் தளுக்கு மினுக்கைக் கண்டு ஐயப்படத் தொடங்கி விட்டனர். அவர்களுடைய கணவன்மார்கள் இருக்கும்போது அறையைக் கூட்டிப் பெருக்க அவள் உள்ளே போனால் ே ாதும், பால் குடிக்கும் குழந்தைகளை மார்பிலிருந்து பிடுங்கி எறிந்து அழ அழப் போட்டு விட்டு அலறிப் புடைத்துக்கொண்டு அந்த அறைக்கு ஓடுவார்கள்; அந்த மூதேவி அவர்களுடைய கணவன்மார்களுக்கு ஏதாவது சொக்குப் பொடி போட்டு விடுவாள் என்ற அச்சத்தில்!

கோரியும் என்ன, சாதாரணமானவளா? அவிழ்த்து விட்ட நீண்ட நீண்ட கொம்புகளை உடைய முட்டும் காளையென வளைய வந்தாள். வீட்டுப் பெண்மணிகள் கண்ணுடிப் பாத்திரங்கள் போன்ற தங்கள் கணவன்மார்களை இரு கைகளாலும் சேர்த்து அணைத்துப் பாதுகாக்க முயன்றனர். அப்படியும் நிலை இசைகேடாகத் தோன்றவே, வீட்டு வேலைக்காரர்களின் மனைவிமார்கள் ஓர் ஒழுங்குமுறையான பிரதிநிதிக் குழுவாக உருமாறி அம்மாவின் நீதிமன்றத்துக்கு நியாயம் கோரி வந்தனர். நிகழக்கூடிய விபத்துகளைப்பற்றியும் அதனுல் ஏற்படக்கூடிய விளைவுகளைப்பற்றியும் பலத்த வாக்குவாதங்கள் நடைபெற்றன. கணவன்மார் பாதுகாப்புக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. அண்ணிமார்கள் அதற்குப் பெரும்பான்மை ஆதரவு தேடித் தாங்களும் தங்கள் மேலான வாக்குகளை அளித்தனர். அந்தக் கமிட்டியின் மாண்புமிகு தலைமைப் பொறுப்பு அம்மாவிடம் ஒப்படைக்கப்பட்டது! பெண்மணிகள் அனைவரும் தங்கள் பதவிக்கும் மரியாதைக்கும் ஏற்ப, கட்டாந்தரை, மனைப்பலகை, கட்டில், கட்டில் விளிம்பு என்று இன்று ஒரு முடிவுக்கு வந்து விடுவது என்ற உறுதிப்பாட்டுடன் உட்கார்ந்தனர். எல்லாருக்கும் வெற்றிலை பாக்கு வழங்கப்பட்டது. கிழவி வரவழைக்கப் பட்டாள். குழந்தைகளின் வாயில் பாலை வார்த்து அக்கூட்டத்

தில் அமைதி காக்கப்பட்டது. வழக்குத் தொடங்கியது. எங்கள் அம்மா அதிகார தோரணையில் தொடங்கினாள்.

''ஏண்டி பிசாசே! உன் மூதி மருமகளைக் கட்டவிழ்த்து விட்டாயா? எங்கள் இதயத்தில் இரும்பைக் காய்ச்சி ஊற்றுவதாக எண்ணமாடி? எங்கள் முகத்திலே கரியைப் பூசத் தீர்மானித்து விட்டாயா?''

கிழவி குமுறிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அம்மாவின் வாயிலிருந்து இப்படிப் பேச்சுக் கேட்டதும் கொட்டி விட்டாள்:

''நான் என்ன செய்வேன், பெரியம்மா? அந்தப் பாவியைப் பிடித்துப் பேயாக அறைந்து பார்த்தேன். சோறு போடாமல் பட்டினி போட்டுப் பார்த்தேன். ஆனால் அந்த முண்டை எனக்கு அடங்குகிறவளாக இல்லையே!''

''அவளுக்குச் சோற்றுக்கு ஒரு பஞ்சமா, என்ன?'' சமையற்காரனின் மனைவி நல்ல கல்லாகத் தூக்கிப் போட்டாள். ஸஹாரன்புரைச் சேர்ந்த பரம்பரைச் சமையல்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள் அவள். பற்றுக்குறைக்கு மூன்றாவது மனைவி வேறு! ஆண்டவன்தான் காப்பாற்றணும். என்ன கோபம், என்ன வேகம்! அப்புறம் சேவகன் மனைவி, தோட்டக்காரி, வண்ணாத்தி ஒவ்வொருவரும் வழக்கைப் பெரிதாக, பயங்கரமாக ஜோடித்து விட்டார்கள். பாவம், தோட்டிச்சி! வாய் பேசாமல் உட்கார்ந்து எல்லாருடைய வசவையும் வாங்கிக் கட்டிக்கொண்டாள். அதே நேரத்தில் சுவாரசியமாகத் தன் சொறி பிடித்த காலைச் சொறிந்து விட்டுக் கொண்டாள்.

''பெரியம்மா! நீ சொல்கிறபடி செய்வதற்கு எனக்குத் தடையில்லை. நான் என்ன செய்ய? அந்த முண்டையின் கழுத்தைப் பிடித்து நெறித்துப் போடட்டுமா?'' என்று கேட்டாள்.

கழுத்தை நெறித்துப் போடுவது என்ற அழகான கருத்தைச் செவிமடுத்தபொழுது, எல்லாப் பெண்மணிகளின் மனத்திலும் மகிழ்ச்சி பொங்கினாற்போலத் தோன்றியது. ஆனால் எல்லாரும் கிழவியின்மீது அநுதாபத்தைப் பொழியத் தொடங்கிவிட்டனர்.

''அந்தப் பிணத்தைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பித் தொலைத்து விடேன்!'' அம்மா அபிப்பிராயம் தெரிவித்தாள்.

''ஏன் பெரியம்மா! எங்கேயாவது அப்படிச் செய்ய முடியுமா?''

இப்படிக் கேட்ட கிழவி விஷயத்தை விளக்கினாள்: மருமகள் இலவசமாகக் கிடைத்துவிடுவதில்லை. வாழ்நாள் முழுவதும்

சம்பாதித்த பணத்தை விள்ளாமல் விரியாமல் இருநூறு ரூபாயைக் கொட்டி அழுதிருக்கிறேன், இந்தச் சிறுக்கியை மகனுக்குக் கல்யாணம் கட்டிவர. இந்த ரூபாய்க்கு இரண்டு பசுமாடு வாங்கிப் போட்டிருக்கலாம், குடம் குடமாகப் பாலாவது கொடுத்திருக்கும். ஆனால் இந்தக் கடன்காரி இரண்டு உதைதான் கொடுக்கிறாள்! இவளைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பிவிட்டால், இவள் அப்பன் உடனே இன்னொரு தோட்டியின் கையிலே பிடித்துக் கொடுத்துப் பணம் கறந்துவிடுவான். மகன் படுக்கைக்கு அழகு செய்கிறவள் மட்டும் இல்லை அம்மா, மருமகள்! இரண்டு கைகள் உள்ளவள்; நூறு ஆள் வேலையை ஒருத்தியாகச் செய்கிறாள்.

ராமாவதார் போனபிறகு, கிழவியினால் முன்போல் அவ்வளவு வேலை செய்ய முடியவில்லை. அவளுடைய முதுமை மருமகளின் இரண்டு கைகளையும் நம்பித்தான் ஓடிக்கொண் டிருந்தது.

பெண்மணிகள் அப்படி ஒன்றும் அறியாதவர்கள் அல்ல. விஷயம் சமூகப் பழக்க வழக்கங்களையெல்லாம் தாண்டிப் பொருளாதார உண்மையில் போய் நின்றது. கிழவிக்கு நிசமாகவே மருமகள் தவிர்க்க முடியாத வகையில் தேவைப் பட்டாள். இருநூறு ரூபாய்ப் பொருளைச் சட்டென்று உதறித் தள்ள யாருக்குத்தான் மனசு வரும்? இந்த இருநூறையும் தவிரத் திருமணச் செலவுக்காக வட்டிக்குப் பணம் வாங்கிச் சுற்றம் சூழலுக்கு விருந்து வைத்தது, புரோகிதர்களுக்குப் படைத்தது, சாமிக்கு நேர்ந்துகொண்டது என்று இன்னும் என்ன என்னவோ! இப்படிச் செலவு செய்த பணம் எங்கிருந்து திரும்பி வரும்? ராமாவதாருக்குக் கிடைத்த சம்பளம் அவ்வளவும் கடனுக்கு ஈடாகப் போய்க்கொண் டிருந்தது. இவளைப்போல் உடல் கட்டும் நலமும் உள்ள மருமகள் இப்பொழுது நானூறு ரூபாய் கொடுத்தாலும் கிடைக்கமாட்டாளே! இந்த வீடு முழுதையும் துப்புரவு செய்த பிறகு, பக்கத்தில் இருக்கிற இன்னும் நான் கைந்து வீடுகளுக்கும் சென்று வேலை செய்து வருகிறாளே! என்ன இருந்தாலும் இந்தச் சிறுக்கிக்கு வேலையிலே ஒரு கண்; கெட்டிக்காரி!

இருந்தாலும் அம்மா இறுதி எச்சரிக்கை விடுத்தாள்: "இந்தக் கள்ளிக்குக் கூடியவரையில் ஒரு வழி செய்யவில்லை என்றால், இந்த வீட்டுக் காம்பவுண்டுக்குள் இருக்க விடமுடியாது!" என்பதுதான் அந்த எச்சரிக்கை!

கிழவி குய்யோ முறையோ என்று கூப்பாடு போட்டாள். அப்புறம் வீட்டுக்குப் போய் மருமகளை வாயில் வந்தபடி எல்லாம் திட்டினாள். கூந்தலைப் பிடித்து உலுக்கிக் கண் மண் தெரியாமல் அடித்தாள். மருமகள் அவளுடைய பணத்தில் விலைக்கு வாங்கப்பட்டவள்தானே? அத்தனை அடிகளையும் பட்டுக் கொண்டாள்; முணுமுணுத்தாள்; கடுகடுத்தாள். மறுநாள் அவ்வளவுக்கும் சேர்த்துப் பழிவாங்கிக்கொண்டாள். யார் யார், எப்படி எப்படி என்று குற்றங் குறைகளை விண்டு வைத்து விட்டாள். சமையற்காரன், தண்ணீர் கொண்டுவருபவன், வண்ணான், சேவகன்—எல்லாருமே தங்கள் மனைவிமார்களை ஆசை தீர நையப்புடைத்தார்கள். கிழவியின் மருமகள் விஷயமாக எனது நாகரிக அண்ணிகளுக்கும் அண்ணன்மார் களுக்கும் இடையேகூடப் பெரும் பிளவு ஏற்பட்டது. அண்ணி களின் பிறந்த வீடுகளுக்குத் தந்திகளே பறந்தன. இப்படியாகக் கிழவியின் மருமகள் இன்பம் விளையாடிய இடத்தில் நெருஞ்சில் முள்ளாக நெருடத் தொடங்கிவிட்டாள். குளவிக் கூட்டில் கை வைத்த கதைதான்.

ஆனால் இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம் கிழவியின் கணவ னுக்குத் தம்பி பிள்ளை ரதீராம் தன் பெரியம்மாவைப் பார்த்துப் போவதற்காக வந்தான். வந்தவன் அங்கேயே தங்கி விட்டான். இரண்டு மூன்று வீடுகளில் புதிதாக வேலை வரவே, அவன் அதைப் பார்த்துக்கொண்டான். அவன் தன் ஊரில் ஒன்றும் வேலையின்றியே சுற்றித் திரிந்துகொண் டிருந்தான். அவன் மனைவி இன்னும் 'பெரியவள்' ஆகவில்லை. அதனால் குடும்பம் நடத்தக் கணவன் வீட்டுக்கு வரவில்லை.

ரதீராம் வந்ததும் பருவம் உருண்டு புரண்டு முற்றும் மாறி விட்டது, அடர்த்தியான கரிய மேகங்கள் காற்றில் அலை பாய்ந்து சிதறிவிடுவதுபோல! மருமகளின் சிரிப்பொலி அடங்கி விட்டது. வெண்கலக் காப்புகள் ஊமையாயின. உயரப் பறக்கும் பலூன் காற்று வெளியேறியபின் எப்படி இருக்கும் இடம் தெரியாமல் ஊசலாடுமோ, அப்படி மருமகளின் முகத் திரை உயர உயரப் பறப்பதை நிறுத்திக்கொண்டு, தாழ்ந்து தாழ்ந்து வந்தது. அவள் மூக்கணாங் கயிறு இல்லாத காளை யெனத் திரிந்ததை விட்டு விட்டு நாணமே உருவான மருமகளாக நடந்துகொள்ளலானாள். சிப்பந்திகளின் மனைவிமார்கள் அத்தனை பேருக்கும் நிம்மதியாயிற்று. நீண்ட மூச்சின் மூலம் அதைக்

காட்டிக்கொண்டனர். யாராவது பிற ஆண் பிள்ளைகள் சீண்டினால், அவள் தொட்டாற் சுருங்கியைப்போலச் சுருங்கிப் போவாள். அதையும் மீறி வாலாட்டிக் கண்ணைச் சிமிட்டித் தொந்தரவு செய்தால், தன் ஒற்றைக் கண்ணைக் கோணலாக்கி ரதீராமைப் பார்ப்பாள். உடனே அவன் கையைச் சொறிந்து கொண்டு எதிரே வந்து நின்றுகொள்வான். கிழவி சாந்தமாக வாசலில் உட்கார்ந்து பாதி திறந்தும் பாதி மூடியும் இருக்கும் தன் கண்களால் இந்த இன்பியல் நாடகத்தைக் கண்டு இன்புறுவாள். அந்த மகிழ்ச்சியைப் பிரதிபலிப்பதேபோல் 'குட்குடி' என்னும் ஹுக்கா 'குட், குட்' என்று ஒலிக்கும். நாற்புறமும் நிலவிய அமைதி, கொப்புளத்துச் சீழ் எல்லாம் வெளியேறிப் புண் ஆறிவிட்டாற் போன்றதொரு நிம்மதியைத் தந்தது.

ஆனால் இப்போது கிழவியின் மருமகளுக்கெதிராகப் புதியதொரு போர்முனை உருவாகியது. அதில் ஆண் சிப்பந்திகள் அத்தனை பேரும் கலந்துகொண்டனர். இல்லாததற்கெல்லாம் அவளுக்குப் பரோட்டாவாகச் செய்துகொடுத்துக்கொண்டிருந்த சமையற்காரன், தேய்க்கும் பாத்திரத்தில் பற்றுப் போகவில்லை என்பதற்காக அவளைத் திட்டலானான். வண்ணான், தான் கஞ்சி போட்டுத் துணிகளைக் கயிற்றில் உலர்த்தும் நேரத்தில்தான் அந்தக் கோணபுத்திக்காரி தூசியைக் கிளப்பிவிடுகிறாள் என்று குறை கூறினான். சேவகன் ஒரு நாளைக்குப் பத்து முறை கூட்டினாலும் ஆண்கள் அமரும் ஹாலில் அழுக்கு அழுக்காகவே இருக்கிறது என்று அழுதான். அவள் கை கழுவுவதற்காகத் தண்ணீரைத் தயாராக ஏந்தி நிற்கும் தண்ணீர் கொண்டுவருபவன், முற்றத்தில் தண்ணீர் தெளிக்குமாறு அவள் மணிக்கணக்கில் முறையிட்டாலும், காதில் விழாதவன்போல் போய்க்கொண்டிருந்தான். அவள் உலர்ந்த தரையில் பெருக்கவேண்டும். தூசி பறக்கிறது என்று குற்றம் சாட்டிச் சேவகன் அவளைத் திட்ட வேண்டும் என்ற எண்ணமே காரணம்.

ஆனால் கிழவியின் மருமகள் எல்லாருடைய வசவு திட்டுகளையும் ஒரு காதால் கேட்டு இன்னொரு காதால் விட்டுவிடுவாள். ஆனால் மாமியாரிடம் போய் என்ன சொல்வாளோ, தெரியாது! அவள் எல்லாரிடமும் 'மொல்லு மொல்லு' என்று சண்டைக்கு வந்து மூளையைப் புரட்டி எடுத்துவிடுவாள்.

அவளுடைய பார்வைக்கு மருமகள் இப்பொழுது தூயவளாக வும் நல்லவளாகவும் தோன்றினாள்.

ஒரு நாள் தாடிக்கார மேஸ்திரி கையைக் கட்டிக்கொண்டு அப்பாவிடம் வந்து நின்றார். அவர்தான் எல்லாப் பணியாளர் களுக்கும் மேஸ்திரி. அதோடு அப்பாவின் முக்கிய ஆலோசகர் களில் ஒருவர். ரதீராமுக்கும் கிழவியின் மருமகளுக்கும் உள்ள தகாத தொடர்பை எடுத்துக் கூறிச் சிப்பந்திகளிடையே என்ன என்ன அசிங்கமான நிலையை உண்டுபண்ணுகிறது என்று கூறி ஒருபாட்டம் அழுது தீர்த்தான். அப்பா வழக்கைச் செஷன்ஸுக்கு ஒப்படைத்தார். அதாவது அம்மாவைக் கவனித்து ஆவன செய்யச் சொன்னார். பெண்கள் குழு மீண்டும் கூடியது. கிழவியைக் கூப்பிட்டு அவளைப் பிய்த்துப் பிரியைக் கட்டி இழுத்தது.

''அடி, பாவி! உனக்குத் தெரியுமாடி, நடத்தை கெட்ட உன் மருமகள் என்ன கூத்து காட்டுகிறாள் என்று?'' என்று கேட்டாள் அம்மா.

கிழவி விழிகள் பளிச்சிட வெறித்துப் பார்த்தாள், யாரைப் பற்றிப் பேசுகிறார்கள் என்று ஏதும் தெரியாதவள்போல. எனவே, அவளுக்கு விளக்கமாக விவரம் கூறப்பட்டது. ''உன் மருமகளுக்கும் ரதீராமுக்கும் தகாத தொடர்பு எல்லை மீறிப் போய்விட்டது. இருவரையும் அசிங்கமான நிலையில் பார்த்த நேர்முகச் சாட்சிகளே இருக்கிறார்கள். இனியாவது விஷயத்தை முற்றவிடாமல் பார்த்துக்கொள்!'' என்று சொன்னபொழுது, கிழவி அவள் நலம் விரும்புபவர்களுக்கு நன்றி தெரிவிப்பது போக, அவர்களிடமே முறண்டு கொண்டு விட்டாள். ஒரே கூப்பாடு போட்டு, ''ராமாவதார் மட்டும் இப்போது இங்கே இருந்தால், நிரபராதியான மருமகள்மீது இப்படிக் கதை சுமத்துபவர்களுக்குச் சரியான பாடம் கற்பித்திருப்பான். மருமகள் பாவம், ராமாவதாரின் நினைவில் கண்ணீர் பெருக்கிக்கொண்டிருக்கிறாள். வேலை வெட்டிகளும் உயிரை விட்டுச் செய்கிறாள். யாருக்கும் குறை வைப்பதில்லை. அவள் பிறரைப் பரிகசிப்பதும் இல்லை, கோள் சொல்வதும் இல்லை. அவள் உண்டு, அவள் காரியம் உண்டு என்றிருக்கிறாள். ஜனங் கள் வீணாக அவளிடம் இப்படிப் பகை பாராட்டுகிறார்களே! அடுக்குமா?'' என்று கேட்டாள்.

அப்புறம் அவளுக்குப் பொறுக்கவில்லை. உரக்கக் குரல் எடுத்து அழத் தொடங்கிவிட்டாள். எல்லாருக்கும் அவளை ஓயச் சொன்னால் போதும் என்றாகிவிட்டது. என்னவோ சொல்லிச் சமாதானப்படுத்திப் பார்த்தார்கள். உலகம் முழுவதுமே அவள் உயிருக்குச் சத்துருவாகிவிட்டதுபோல் துக்கம் கொண்டாடத் தொடங்கிவிட்டாள்.

கிழவியும் அவள் மருமகளும் யாருக்கு என்ன தீங்கு இழைத்தார்கள்? அவர்கள் யார் பேச்சுக்கும் போகிறதும் இல்லை; வருகிறதும் இல்லை. அவளுக்கு எல்லாருடைய இரகசியங்களும் தெரியும். இன்றுவரை அவள் யாருடைய வண்டவாளத்தையும் உடைக்கவில்லை. பிறருடைய கிழிசலில் காலை விடவேண்டிய அவசியம் அவளுக்கு இல்லை. பெயருக்குத்தான் பெரிய வீடுகள்! புழக்கடையிலே என்ன நடக்கிறது என்று அவளுக்குத் தெரியாதா? தோட்டிச்சியிடம் யாரும் தன் அழுக்கை ஒளிக்க முடியாது. இந்தக் கிழட்டுக் கைகள் எத்தனையோ பெரியவர்களுடைய பாவங்களைக் குழி தோண்டிப் புதைத்திருக்கின்றன! இரண்டு கைகளும் நினைத்தால், பேரரசிகளின் சிங்காதனத்தையே புரட்டி உருட்டி விடமுடியும். ஆனால் அதற்குத் தேவையில்லை. அவளுக்கு யாரிடமும் பகைமை கிடையாது. அவள் கழுத்துக்கு யாராவது கத்தி வைத்தால் ஒருவேளை தவறு நேரலாமோ, என்னவோ? ஆனால் பொதுவாக அவள் தனக்குத் தெரிந்த பிறருடைய இரகசியங்களைத் தன் கிழட்டு இதயத்திலிருந்து வெளியே விடவே மாட்டாள்!

அவளது கோபத்தைக் கண்டதும், கத்தி பிடித்த கைகள் சட்டென்று தளர்ந்துவிட்டன. பெண்கள் அனைவரும் அவள் கட்சி மாறி விட்டார்கள். கிழவியின் மருமகள் என்ன செய்தால் என்ன, எக்கேடு கெட்டுப் போனால் என்ன, அவர்களுடைய கோட்டையல்லவா பழுதுபடாமல் பாதுகாக்கப்படவேண்டியிருந்தது! அப்படியிருக்கும்பொழுது குறையாவது, குற்றமாவது, முறையீடாவது, மண்ணாங்கட்டியாவது? அப்புறம் சில நாட்களுக்குக் கிழவியின் மருமகளுடைய காதல் நாடகப் பேச்சுக் குறைந்துவிட்டது. மக்கள் தங்கள் இயல்புக்கேற்ப அதை மறக்கக்கூட ஆரம்பித்துவிட்டனர். ஆனால் எங்கோ ஏதோ தவறு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளக்கூடியவர்கள் புரிந்து கொண்டுவிட்டார்கள். மருமகளின் பருத்த உடலால் அதிக நாட்கள் உண்மையை மறைக்கமுடியவில்லை. பருப்பில்

கறுப்பு இருந்தால் தெரியாமல் போய்விடுமா? புரிந்து கொண்டவர்கள் கிழவியைக் கூப்பிட்டுப் புரியவைக்க முயன்றார் கள். ஆனால் இந்தப் புது நிலவரத்தைச் சமாளிக்கக் கிழவி ஒரு வழி கண்டுபிடித்துவிட்டாள். காது மந்தமாகி விட்டதுபோலப் பாசாங்கு செய்தாள். அதற்குப்பின் கட்டிலே கதி என்று படுத்து மருமகளையும் ரதீராமையும் அதிகாரம் செலுத்தியே வேலை வாங்கினாள். ஒரு சமயம் இருமுவாள்; ஒரு சமயம் தும்முவாள். வெளியே சென்று வெயில் காய உட்காருவாள். இருவரும் அவளைப் பட்டத்து ராணியாக்கிப் பணிவிடை புரிந்து மகிழ்வித்தனர்.

நல்ல பெண்கள் அவளுக்கு நிரம்பச் சொன்னார்கள். ''ரதீராமின் முகத்தில் கரியைப் பூசி அனுப்பு. ராமாவதார் வருவதற்கு முன்னாடி மருமகளுக்கு ஏதாவது மருந்து மாயம் செய்யும் வழியைப் பார்!'' என்றார்கள். கிழவியே இந்தக் கலையில் கைதேர்ந்தவள். இரண்டே நாட்களில் சரி செய்து விடமுடியும். ஆனால் கிழவி வேண்டுமென்றே ஒன்றும் செய்ய வில்லை. அவள் என்ன கணக்குப் போட்டாளோ? அவள் என்ன என்னவோ குறைகளை எடுத்துவிட்டாள். 'முழங்கால் வலி முன்னைவிட அதிகமாகிவிட்டது. பெரிய பெரிய வீடு களில் ஜனங்கள் வாயு பதார்த்தங்களைத் தின்கிறார்கள்! சில சில வீடுகளில் மிகவும் பேதியாகிறது!' இப்படி ஏதாவது பேசி, அவர் கள் பேச்சைத் தொடரவிடாமல் அடித்தாள். ஒன்றும் தோன்றாமல் அவர்கள் எரிந்து அவிந்து போனார்கள்.

மருமகளும் எல்லாரையும் போல ஒரு பெண்தான். ஏதும் அறியாதவள், சாது. பெரிய பெரிய நாகரிகப் பெண்களே தவறு இழைத்து விடுகிறார்களே! ஆனால் அந்தப் பெரிய வீடு களில் மரியாதை மட்டும் பார்க்கும் மாமியார்கள் இப்படிக் காதில் எண்ணெயை விட்டுக்கொண்டு பேசாமல் உட்கார்ந் திருக்க மாட்டார்கள். ஆனால் இந்தக் கிழவிக்கு மட்டும் புத்தி ஏன் இப்படிப் போய்விட்டது? எந்தச் சனியனை அவள் பெரிய வீடு களின் குப்பைக்கு அடியில் யாருக்கும் தெரியாமல் மறைத்துப் புதைத்துவிட முடியுமோ, அதை ஏன் இப்படிக் கண்களை மூடிக் கொண்டு வளர விட்டுக்கொண் டிருக்கிறாள்? அதுதான் யாருக்கும் புரியாத புதிராக இருந்தது.

ஆயினும் ராமாவதாரின் வருகைக்காகக் காத்திருப்பவள்போல் அவள் எப்பொழுது பார்த்தாலும் வார்த்தைக்கு வார்த்தை,

பேச்சுக்குப் பேச்சு ''வரட்டும் ராமாவதார்! உன் எலும்பு—நரம்புகளையெல்லாம் கூழாக்கிவிடச் சொல்லுகிறேன்?'' என்று மிரட்டிப் பயமுறுத்திக்கொண்டிருந்தாள்.

ராமாவதார் ராணுவத்திலிருந்து உயிரோடு வந்துகொண்டிருந்தான். சுற்றுச் சூழலே மூச்சை அடக்கிக்கொண்டு அவன் வருகையை எதிர்நோக்கியது. மக்கள் ஒரு மாபெரும் போரையே எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், மருமகள் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றதும் எல்லாருக்கும் குலைநடுக்கமே எடுத்துவிட்டது. கிழவி அவளுக்கு விஷத்தைக் கொடுப்பதற்குப் பதிலாக மகிழ்ச்சியில் மிதந்து கொண்டிருந்தாள். ராமாவதார் ஊரைவிட்டுப்போய் இரண்டு ஆண்டுகள் கழித்துப் பேரன் பிறந்திருந்தான் அவளுக்கு. அதைக் கண்டு அவள் சிறிதும் வியக்கவில்லை.

வீடு வீடாகச் சென்று பழங்கந்தல் துணிகளும், புது வாழ்த்துக்களுமாகக் குவிக்க முற்பட்டாள். அவள் நன்மையை நாடுபவர்கள் கணக்குப் போட்டு, பிறந்திருக்கும் குழந்தை ராமாவதாருடையதாக இருக்கமுடியாது என்று எத்தனையோ விளக்கிச் சொன்னார்கள். ஆனால் கிழவி எல்லாம் தெரிந்தும் மறுத்து விட்டாள். ''ஆடி மாதம் ராமாவதார் போர் முனைக்குப் போனான். கிழவி மஞ்சள் மாளிகையில் புது மாதிரியான இங்கிலிஷ் கக்கூஸில் விழுந்து எழுந்தபோது சித்திரை மாதம். ஆனி மாதம் கிழவி காங்கைக் காற்றிலே சிக்கிக் கொண்டாள். மயிரிழையிலே தப்பிப் பிழைத்தாள். அப்புறம் அவள் முழங்கால்களில் முடக்கு வாயு வந்து வலி அதிகமாகிவிட்டது. வைத்தியர் மகா அக்கிரமக்காரர்! மருந்தில் சாக்குக் கட்டித் தூளையும் அல்லவா சேர்த்துக் கொடுத்துவிட்டார்!'' அப்புறம் அவள் நிஜக் கேள்வியிலிருந்து வெகுதூரம் போய்விடுவாள். கிராமப்புறத்து முட்டாள் பெண்களைப் போல முன்னுக்குப்பின் முரணாக ஏதாவது உளறிய வண்ணம் இருப்பாள். பொல்லாத கிழவிக்குச் சொல்லவேண்டிய விஷயத்தைச் சொல்லிச் சரியாகப் புரியவைக்கும் திராணி யாருடைய மூளைக்குமே இல்லை. எத்தனை சொன்னாலும் புரிந்துகொள்வதில்லை என்று தீர்மானித்தவளை என்ன சொல்லி, எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது?

பிள்ளை பிறந்ததும் அவள் ராமாவதாருக்குக் கடிதம் போட்டாள். ''ராமாவதாருக்கு அன்பு முத்தத்துக்குப் பின் தெரிவிப்

பது யாதெனில், இங்கு யாவரும் நலம். உன் நலத்துக்கு ஆண்டவனை வேண்டுகிறோம். உன் வீட்டில் ஆண் பிள்ளை பிறந்திருக்கிறது. இந்தக் கடிதத்தைத் தந்தியாகப் பாவித்து உடனே புறப்பட்டு வரவும்!'' என்று அதில் எழுதச் செய்தாள்.

ராமாவதார் செய்தி அறிந்து கோபம் கொள்வான் என்று எல்லாரும் எண்ணினர். ஆனால், பிள்ளைக்குக் காலுறையும் பனியனும் வாங்கி வருவதாக அவன் மகிழ்ச்சிக் கடிதம் எழுதி விடவே, எல்லாருடைய நம்பிக்கையிலும் பெரும் பனி பெய்து விட்டது.

போர் முடிந்துவிட்டது. ராமாவதார் திரும்பப் போகிறான், வீட்டுக்கு. கிழவி பேரனை முழங்காலில் படுக்க வைத்துக் கட்டிலில் அமர்ந்து ராஜரீகம் செய்துகொண்டிருந்தாள். வீடுகளில் வேலைகள் அனைத்தும் சட்டுப்புட்டென்று நடந்துவந்தன. காலத்தில் பணம் கடன் கொடுத்தவனுக்கு வட்டி போய்ச் சேர்ந்துகொண்டிருந்தது. பேரன் முழங்காலில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான். இதைக் காட்டிலும் முதுமை அழகு வேறு எது இருக்க முடியும்?

''ராமாவதார் வருவான், வந்தபின் உண்மை நிலவரம் அவனுக்கு விளங்கும். அப்பொழுது அவன் என்ன செய்கிறான் பார்ப்போம்!'' என்று மக்கள் எண்ணினார்கள்.

இப்போது ராமாவதார் போரில் வெற்றிசூடித் திரும்புகிறான். என்ன இருந்தாலும் அவன் போர்வீரன்! இரத்தம் கொதிக்காமல் இராது. மக்களின் மனம் அடித்துக்கொண்டது. கிழவியின் மருமகள் குறுகிய பார்வை கொண்டவளாக இருந்துவிட்டதால் சிப்பந்திகள் குழாம் சுவாரசியம் குன்றிச் சோர்ந்து போயிருந்தது! இரண்டு மூன்று கொலை விழும்; மூக்கறுப்பட்டுப் போகும் என்ற எண்ணம் எழவே, அவர்கள் நம்பிக்கை மீண்டும் முளைவிட்டது.

ராமாவதார் திரும்பியபோது, பிள்ளைக்கு ஒரு வயது இருக்கும். சிப்பந்திகளிடையே சுறுசுறுப்பும் விறுவிறுப்பும் ஏற்பட்டன. சமையற்காரன் ஆசை தீரச் சண்டையைக் கண்டு களிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தில், உலைநீர் சீக்கிரம் கொதித்துவிடக்

கூடாதே என்று பானை நிறையத் தண்ணீரை ஊற்றி வைத்தான்; விறகையும் வெளியே இழுத்துவிட்டான். வண்ணான் கஞ்சிப் பாத்திரத்தை இறக்கிக் கைப்பிடிச் சுவரின்மேல் வைத்தான். நீர் கொண்டு வருபவன் தண்ணீர்ச் சாலைக் கிணற்றுக்கருகிலேயே கடாசிவிட்டு வந்தான்.

ராமாவதாரைப் பார்த்ததும் கிழவி முதலில் அவள் இடுப்பைப் பிடித்துக்கொண்டு கதறித் தீர்த்துவிட்டாள். ஆனால், அடுத்த கணமே பல்லைக் காட்டியவாறு ராமாவதாரின் மடியில் பிள்ளையைப் போட்டாள். அதைத் தொடர்ந்து அழுதே அறியாதவள் போல் சிரித்தாள்.

ராமாவதார் பிள்ளையைப் பார்த்து, அவன்தான் அதன் தகப்பனே என்னும் அளவுக்கு வெட்கிப் போனான். அப்புறம் சட்டுப்புட்டென்று பெட்டியைத் திறந்து பொருள்களை எடுக்கலானான். வாளோ, கத்தியோ எடுப்பதாக மக்கள் எண்ணினார்கள். ஆனால், அவன் சிவப்புப் பனியனும் மஞ்சள் காலுறையும் எடுத்தபோது வேடிக்கை பார்க்கக் கூடியிருந்த அத்தனை பேரும் தங்கள் ஆண்மைக்குச் சவுக்கடி கொடுப்பதுபோன்று துடித்துப் போனார்கள்.

''தத்தேரே கீ! இவன் பெரிய போர்வீரனாக்கும்! ஆண்மை சிறிதும் இல்லாத அலிப்பயல்!''

மருமகள் கூனிக் குறுகிப் புது மணப்பெண்ணைப்போல் நின்றாள். வெண்கலத் தட்டில் நீர் நிரப்பி ராமாவதாரின் நாற்றமெடுத்த இராணுவ பூட்ஸை அவிழ்த்தாள். அவன் காலைக் கழுவி அந்த நீரை அருந்தினாள்.

மக்கள் ராமாவதாருக்கு விஷயத்தை விளக்கினார்கள். கேலி செய்தார்கள். முட்டாள் என்று பட்டம் சூட்டினார்கள். அவன் முட்டாளைப்போலவே பற்களைக் காட்டிச் சிரித்தான். தனக்கு அவர்கள் பேச்சு விளங்கவில்லை என்பதாக நகைத்தான்.

ரதீராமுக்கு மனைவி பெரியவளாகி வீட்டுக்கு வர இருந்தாள். எனவே, அவன் ஊருக்குப் போய்விட்டான்.

ராமாவதாரின் இந்தச் செயலைக் கண்டு மக்களுக்கு வியப்பைக் காட்டிலும் கோபந்தான் அதிகம் வந்தது. எங்கள் அப்பா பொதுவாக வேலைக்காரர்கள் விஷயத்தில் அக்கறை காட்டுவதில்லை. அவருக்கே எரிச்சலாக வந்தது. தமது சட்ட அறிவு அவ்வளவையும் பணயம் வைத்து ராமாவதாருக்கு எப்படியாவது விஷயத்தைப் புரியவைத்துவிடுவது என்று முனைந்தார்.

"ஏண்டா? நீ மூன்றுண்டுகள் கழித்துத்தானே திரும்பி வந்திருக்கிருய்?''

''சரியாகத் தெரியவில்லேங்க, எசமான்! ஏறத்தாழ அத்தனை வருஷம் இருக்கலாமுங்க!''

''உன் பிள்ளேக்கு ஒரு வயசு இருக்குமா?''

''அவ்வளவுதானுங்க இருக்கும்! ஆனுல் பயல் பொல்லாதவன் எசமான்!''

ராமாவதாருக்கு வெட்கமாகப் போய்விட்டது.

''எலே, கணக்குப் போட்டுப் பாருடாலே!''

''கணக்கா? எப்படிப் போடுகிறதுங்க, எசமான்?'' ராமாவதார் மிகவும் சன்னமான குரலில் கேட்டான்.

''அடே, மூளே கெட்டவனே! இது எப்படியடா நடக்க முடியும்?''

''எனக்கு என்ன தெரியும், எசமான்! ஆண்டவன் தந்தது!''

''ஆண்டவன் தந்ததா? உன் தலே! . . . இந்தப் பிள்ளை உன்னுடையதாக இருக்க முடியாதடா!''

அப்பா அவனை நாற்புறமும் வளைத்து மடக்கிப் போட்டு அந்தக் குழந்தை 'பாவக் குழந்தை' என்பதை நம்ப வைத்துவிட வேண்டும் என்று அரும்பாடுபட்டார். அவனும் நம்பிவிடுவான்போல் இருந்தது. அப்புறம் அவன் மெலிந்த குரலில் முட்டாள் போலப் பேசினுன்:

''நான் என்ன செய்கிறது, எசமான்? அந்தப் பாவிப் பொம்பிள்ளையைச் செம்மை வாங்கு வாங்கிவிட்டேன்!'' அவன் கோபம் குமுறக் கூறினுன்.

''சுத்த மக்குடா நீ. உனக்கு மூளேயே இல்லே! அந்தத் துக்கிரிப் பெண்ணை வீட்டைவிட்டு அடித்து விரட்டுடா!''

''இல்லே, எசமான்! அப்படி எங்கேயாவது நடக்க முடியுமா?'' ராமாவதார் கெஞ்சினுன்.

''ஏன் முடியாது?''

''எசமான்! புதிசாப் பரிசம் போடுகிறதென்ருல் இருநூறு முன்னூறு ரூபாய் வேண்டியிருக்குமே! அதற்கு நான் எங்கே போவேன்? அப்புறம் நட்பு, சுற்றத்துக்கு விருந்து வைக்க வேறு செலவுக்குப் பணம் வேண்டியிருக்குமே! அதற்கு என்ன செய்வது?''

''ஏண்டா! எதற்கடா சுற்றம் சூழலுக்கு விருந்து வைக்க வேணும்? மனைவியின் மோசச் செயலுக்கு நீ தண்டம் அழணுமோ? இது எந்த ஊர் நியாயமடா?''

''அது எனக்குத் தெரியாது, எசமான்! எங்களிலே இப்படித் தான் நடக்கிறது!''

''ஆனால், உன் பிள்ளை இல்லை ராமாவதார்! அந்தக் காலிப் பயல் ரதீராமுடையது!'' அப்பா சினந்து கூறினார்.

''அதனாலே என்னங்க எசமான்? எனக்குத் தம்பி ஆகணும் ரதீராம்; அந்நியம் இல்லேங்க! எங்க ரத்தமுங்க!''

''முட்டாள் என்றால் சாதாரண முட்டாள் அல்லடா நீ! அறிவு உனக்கு உலக்கைக் கொழுந்துடா!'' அப்பா ஆத்திரத்தில் உறுமினார்.

''எசமான்! பையன் பெரியவன் ஆகிவிட்டால், தன் காரியத்தைப் பார்த்துக்கொள்ளுவான்!'' ராமாவதார் கெஞ்சி அவருக்குப் புரியவைக்க முயன்றான்: ''அவன் இரண்டு கைகொடுத்தால், வயசு காலத்திலே உதவியாயிருக்கும்; கரை சேர்ந்து விடலாம்!''

ராமாவதார் வெட்கத்தோடு தலைகுனிந்தான். அவன் தலை குனிந்தபோது, அப்பாவின் தலையும் அப்படி ஏன் குனிய வேண்டும்? அவர் மேஜையின்மீது இலட்சக்கணக்கான, கோடிக் கணக்கான கைகள் குவிந்தன. இந்தக் கைகளுக்குப் பாவமும் இல்லை; புண்ணியமும் இல்லை. அவை உயிருள்ள கைகள்! உலகத்தின் முகத்தில் படியும் அழுக்கைக் கழுவும் கரங்கள்! முதுமைச் சுமையைத் தூக்கும் கரங்கள்!

இந்தச் சின்னஞ்சிறு கரங்கள், மண்ணில் அளைந்த கரிய சிறிய கரங்கள்தான் புவியன்னையின் வகிட்டில் குங்குமம் அணிவித்து அழகு செய்யும் அற்புதக் கரங்கள்!

பச்சோ அத்தை

நான் முதல் முதலாக அவளைப் பார்த்தபோது, அவள் ரஹ்மான் அண்ணன் வீட்டு முதல் மாடியில் ஜன்னலண்டை அமர்ந்து நீளம் நீளமாகத் திட்டுக்களையும் வசவுகளையும் சேர்த்துச் சாடிக்கொண் டிருந்தாள். அதோடு சா ப மு ம் கொடுத்துக்கொண் டிருந்தாள். இந்த ஜன்னல் எங்கள் வீட்டு முற்றத்தின் பக்கமாகத் திறப்பது. சட்டப்படி அதைச் சாத்தியே வைத்திருந்தோம். ஏனென்றால் பர்தாப் பெண்களைப் பார்க்க நேரிட்டுவிடுமோ என்ற பயம். ரஹ்மான் அண்ணன் வேசிகளின் மேஸ்திரியாகப் பணியாற்றி வந்தார். ஏதாவது கல்யாணம் கார்த்திகை, சுன்னத் கல்யாணம் படிக்கவைத்தல் ஆகிய எந்தச் சடங்காயிருந்தாலும் ரஹ்மான் அண்ணன் கூடவோ குறைச்சலோ வேசிகளைத் தருவித்து நிறக்கச் செய்து விடுவார். ஏழையிலும் ஏழையின் வீடாக இருந்தாலும் வஹீதர் ஜான், முஷ்தரீ பாயி, அன்வரீ கஹர்வா வந்து ஆடிப் போவார்கள்.

ஆனால் தெருப் பெண்களை அவர் அம்மாவாகவோ, சகோதரிக ளாகவோதான் கருதிவந்தார். அவருடைய தம்பி புந்துவும் கேந்தாவும் தினமும் கண்களுக்குக் கடிவாளம் போடாமல் யாரையாவது எட்டிக் கிட்டிப் பார்த்து வைத்து, அதன் தொடர் பாக மண்டை உடைகிறவரைக்கும் இறங்கிவிடுவார்கள். ரஹ்மான் அண்ணனுக்கும் தெரு மக்களிடம் அவ்வளவாக நல்ல பெயர் கிடையாது. மனைவி உயிருடன் இருந்த காலத்திலேயே அவர் தம் மைத்துனியோடு உறவு கொண்டாடிவிட்டார். அந்த அநாதை மைத்துனிக்கு அவருடைய மனைவியை விட்டால், உறவு முறை கொண்டாட வேறு யாரும் இல்லை. எனவேதான், தமக்கையின் வீட்டில் வந்து தங்கினாள். அவள் குழந்தைகளைக் கவனித்துக்கொண்டாள். பால் கொடுக்காத குறை! மலஜலம் எடுத்தெறிவது முதற்கொண்டு எல்லாம் அவளே செய்து வந்தாள். எவளோ ஒருத்தி, குருவிக்கு மூக்கில் வேர்த்த கதையாக, தமக்கையின் குழந்தையை அவளே 'எடுத்து

விடு'வதைப் பார்த்துவிட்டாள். இரகசியம் அம்பலமாகிவிட்டது. குழந்தைகளில் பாதிக்குமேல் சித்தியை உறித்துவைத்திருந்தன என்பதும் தெரியவந்தது. வீட்டில் ரஹ்மானின் மனைவி, தன் தங்கையை எப்படியெல்லாம் சாடினாளோ தெரியாது. ஆனால் பஞ்சாயத்து வரைக்கும் வழக்கைக் கொண்டு போகவில்லை. 'கன்னிப் பெண்ணை வாயில் வந்தபடி ஏசினால் அவர்களுடைய கண்கள் அவிந்து போகும்!' என்று கூறிவந்தாள். அதோடு அவளுக்கு வரன் தேடி இளைத்துப் போனாள். பூச்சி வைத்துப் பழசாகிப் போன சதைப் பிண்டத்துக்கு எங்கிருந்து வரன் குதிரும்? ஒரு கண்ணில் பெரிய சோழி அளவுக்குப் பூ விழுந் திருந்தது. காலும் ஒன்று சிறிது குட்டை. இடுப்புக்குக் கீழே அழுத்தம் கொடுத்து விந்தி விந்தி நடந்தாள்.

தெரு மக்கள் அனைவரும் விந்தையான வகையிலே அந்தக் குடும்பத்தைத் தள்ளி வைத்திருந்தார்கள். ரஹ்மான் அண்ணனிடம் ஏதாவது வேலைவாங்க வேண்டுமென்றால், தலையில் இரண்டு போட்டு அதிகாரத் தோரணையில் வாங்கிக்கொள்ளுவார்கள். தெருவில் வசிக்க அனுமதி கொடுத்திருந்ததே பெரிய விஷயமாயிற்றே. ரஹ்மான் இதைக் கிடைத்தற்கரிய பெரும் பாக்கியமாகக் கருதி வந்தார்.

இதனால்தான் அவள் எப்போதும் ரஹ்மான் அண்ணன் பகுதி ஜன்னலில் போய் உட்கார்ந்துகொண்டு நீட்டி முழக்கித் திட்டித் தீர்ப்பாள். ஏனென்றால், தெருவில் உள்ள மற்றவர்களுக்கு அப்பாவிடம் சிறிது அச்சம்; அடங்கிப் போவார்கள். மாஜிஸ்திரேட்டிடம் போய் யாராவது விரோதத்தை விலைக்கு வாங்கிக்கொள்வார்களா? எங்களுக்கு ஒரே உடன்பிறந்த அத்தை பாதுஷாஹீ கானம் என்பதும், அவள் நீட்டி முழக்கித் திட்டும் அத்தனை திட்டுகளும் எங்கள் குடும்பத்துக்கே சொந்தம் என்பதும் அன்றுதான் எனக்கு முதல் முதலாகத் தெரிந்தது.

அம்மாவின் முகம் பேய் அறைந்தாற்போல் இருந்தது. அவள் உள்ளே அறைக்குள் சென்று அச்சத்தோடு ஒடுங்கி உட்கார்ந்து விட்டாள், பச்சோ அத்தையின் குரலே இடியாகித் தன்னைத் தாக்கிவிடுமோ என்று பயப்படுபவள்போல. ஐந்தாறு மாதங்களுக்கு ஒருதரம் இப்படித்தான் பாதுஷாஹீ கானம், ரஹ்மான் அண்ணன் வீட்டு ஜன்னலில் அமர்ந்து கமறுவாள்; உறுமுவாள். அப்பா அங்கிருந்து சற்றுத் தள்ளி மறைந்து உட்கார்ந்து சாய்வு நாற்காலியில் ஆனந்தமாக நீண்டு படுத்துச் செய்தித் தாள்

படித்துக்கொண்டிருப்பார். சில சமயம் தருணம் பார்த்து யாராவது குழந்தைகளைக் கொண்டு அத்தையின் ஆத்திரத்தைக் கிளறிவிடும் பதிலாகச் சொல்ல வைப்பார். பாதுஷாஹீ அத்தை பட்டாசாக வெடித்துத் தீப்பொறிகளாகக் கக்கிவிடுவாள். நாங்கள் எல்லாரும், வேடிக்கை விளையாட்டு, படிக்கிறது, எழுதுகிறது எல்லாவற்றையும் விட்டுவிட்டு முற்றத்தில் தனித் தனிக் குழுவாகக் கூடிவிடுவோம். ஆசை அத்தையின் வசவுகளை ஆசைதீரக் கேட்போம். அவள் உட்கார்ந்திருக்கும் ஜன்னலை அவளுடைய ஆகிருதியான உடலே முழுசாக நிறைத்திருக்கும். அவளுடைய உருவம், நிறம் எல்லாம் தத்ரூபம் அப்பா அச்சு. அவர்தான் மீசையை எடுத்துவிட்டுத் துப்பட்டா போர்த்திக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாரோ என்று தோன்றும். அத்தனை வசவுகளும் திட்டுகளும் கேட்டாலும் நாங்கள் அத்தையைத் தைரியமாக உற்றுப் பார்ப்போம்.

ஐந்தரை அடி உயரம், நான்கு அங்குல அகலத்துக்கு மணிக் கட்டு, சிங்கத்தை நிகர்த்த நாடை, வெள்ளைக் கொக்கு நிறக் கூந்தல், பெரிய தொண்டை, வாச்சி வாச்சியான பற்கள், அழுத்தமான மோவாய்—குரலுந்தான் என்ன, அப்பாவைக் காட்டிலும் ஒரு நூல்தான் ஏறத்தாழ இருக்கும்.

பாதுஷாஹீ அத்தை எப்போதும் வெள்ளையுடைதான் அணிவாள். அத்தையின் கணவர் மசூத் அலி தோட்டிப் பெண்ணை வளைய வர ஆரம்பித்ததிலிருந்து, அத்தை அம்மிக் குழவியை எடுத்துப் படபடவென்று எல்லா வளையல்களையும் உடைத்துப் போட்டாள். வண்ணத் துப்பட்டா அணிவதையும் நிறுத்திவிட்டாள். அன்றுமுதல் அவள் தன்னைப் பொறுத்த வரையில் அவரை இறந்தவராகவே தீர்மானித்துவிட்டாள். 'சவம்' என்றே கூறிவந்தாள். அதோடு தோட்டிச்சியைத் தொட்ட கையால் ஒருநாளும் தன் உடலைத் தீண்டவே விடவில்லை.

இந்த நிகழ்ச்சி நல்ல வாலைப் பருவத்தில் நடந்தது. அது முதல் அவள் கைம்மை எய்திவிட்டாற்போலவே நடந்து கொண்டாள். எங்கள் அத்தை புருஷன் எங்கள் அம்மாவுக்குச் சிற்றப்பா ஆகவேண்டும். அது என்ன குழப்பமோ, புரியவில்லை! என் அப்பா, என் அம்மாவுக்கே சிற்றப்பா ஆகணும். கல்யாணத்துக்கு முன், அம்மா சின்னவளாயிருந்தபொழுது, அப்பாவைப் பார்த்துவிட்டால், பயத்தில் அங்கேயே

'ஒன்றுக்கு' இருந்துவிடுவாளாம். அந்தப் பயங்கர ராட்சத ஞேடுதான் அவளுக்குத் திருமணம் நடக்கப்போகிறது என்ற அதிர்ச்சி தரும் செய்தியைக் கேட்டு அயர்ந்துபோய் அவள் தன் அப்பாவைப் பெற்ற பாட்டி—அதாவது அப்பாவுக்கு அத்தை யின் வெற்றிலைச் செல்லத்திலிருந்து அபினியைத் திருடித் தின்று விட்டாளாம். அவள் தின்ற அபினி அதிகம் இல்லாததனுல், சில நாட்கள் புரண்டுவிட்டு எழுந்துவிட்டாள், சாவைச் சாகடித்து விட்டு. அப்போது அப்பா அலிகட் காலேஜில் படித்துக் கொண்டிருந்தாராம். அவளுக்கு உடல் நலம் இல்லை என்னும் செய்தியைக் கேட்டவர் பரீட்சைகளையெல்லாம் விட்டு விட்டு ஓடி வந்துவிட்டார். ரொம்பச் சிரமப்பட்டு, எங்கள் அம்மாவைப் பெற்ற தாத்தா—அவர் அப்பாவுக்கு அத்தை பிள்ளை ஆகனும்—பற்ருக்குறைக்கு இரண்டு பேரும் இணை பிரியாத நண்பர்கள் வேறு—எப்படியெல்லாமோ ஆறுதல் வார்த்தைகள் சொல்லிச் சமாதானப்படுத்தித் திரும்பவும் பரீட்சை எழுத அனுப்பிவைத்தாராம். வந்து தங்கியிருந்த நேரத்திலே அவர் பசியும் தாகமுமாக அலைபாய்ந்துகொண் டிருந் தாரே தவிரப் பச்சைத் தண்ணீர் பல்லில் ஊற்றவில்லை. பாதி திறந்தும் பாதி திறக்காமலும் இருந்த கண்களோடு, எங்கள் அம்மா அவருடைய நீண்டு பரந்து விழுந்த நிழல் திரைக்குப் பின்னல் நிம்மதி இழந்து துடிப்பதை எப்படியோ கண்டு விட்டாள்.

''உம்ராவ் அண்ணு! இவளுக்கு ஏதாவது நடந்து விட்டால் . . . ?''

ராட்சதன் குரலில் இத்தனை நடுக்கமா?

தாத்தா விழுந்து விழுந்து சிரித்தார்: ''தம்பி, நம்பு! ஒன்றும் நடக்காது. கவலைப்படாதே!'' என்ருர்.

அன்றுதான் ஏதும் அறியாக் குழந்தையாக இருந்த எங்கள் அம்மா திடுதிப்பென்று எல்லாம் தெரிந்த மாதரசியானுள். அவள் உள்ளத்திலிருந்து அந்த ராட்சத மனிதனிடம் அவள் கொண்டிருந்த அச்சம் பட்டென விலகியது. எங்கள் பாதுஷாஹுீ அத்தையைப் பொறுத்தவரையில் எங்கள் அம்மா ஒரு பெரிய மாயாஜால மந்திரக்காரி. அவள் அண்ணனைச் சொக்குப் பொடி போட்டு மயக்கிவிட்டதாகக் கூறுவாள். 'கல்யாணத் துக்கு முன்பே, அண்ணனேடு அவளுக்குத் தொடர்பு ஏற்பட்டு வயிறு விழுந்தது!' என்னும் இரகசியத்தையும் விவரிப்பாள்.

எங்கள் அம்மா தனது வயது வந்த குழந்தைகளுக்கெதிரே இந்த வசவுகளைக் கேட்டுப் பிழியப் பிழிய அழுவாள். எங்களுக்கு அவள் அடித்த அடிகள் எல்லாம் மறந்துபோகும்; அவளிடம் அன்பே பொங்கிப் பெருகும். ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகளைக் கேட்டு அப்பாவின் கம்பீரமான விழிகளில்கூட விஷமம் விளையாடத் தொடங்கும்; கடந்தகால நினைவுகள் எல்லாம் களிநடம் புரியத் தொடங்கும். அவர் மிகவும் அன்போடு கடைக்குட்டித் தம்பியை அருகில் அழைத்துக் கேள்வி கேட்க வைப்பார்:

''ஏன் அத்தை! இன்று என்ன தின்றுவிட்டு வந்திருக்கிறாய்?''

''உங்கள் அம்மாவின் ஈரல்!''

அர்த்தமில்லாத இந்த பதிலை அளித்துவிட்டு அத்தையே எரிந்து பொசுங்கிப் போவாள். அப்பா அதற்குப் பதில் சொல்லவைப்பார்: ''அடியே அத்தை! அதனால்தான் வாயிலே குழிப்புண் வந்துவிட்டது. பேதிக்குச் சாப்பிடு, பேதிக்கு!''

அதைக் கேட்டதுதான் தாமதம். என் சின்னத் தம்பியைச் சாக வைத்து, அவன் சடலத்தைக் காக்கை கழுகுகளுக்கு விருந்து வைத்து, அவனுக்கென்று பிறக்காத மனைவியைப் பிறக்க வைத்து, அவனைக் காதல் கனவுகள் பல காணவிட்டு, பிரித்து அழவிட்டுக் கடைசியில் கைம்மையுற ஆசீர்வாதம் செய்வாள். எங்கள் அம்மா காதுகளில் விரல்களை விட்டுக்கொண்டு ஏதோ ஜபத்தை முணுமுணுப்பாள்:

''நீர் நீ, நெருப்பு நீ

நீள் வினையறுப்பாய் நீ, நீ!''

அப்புறமும் அப்பா சும்மா இருக்கமாட்டார்; நிமிண்டி விடுவார்.

தம்பி கேட்பான்: ''பாதுஷாஹீ அத்தை! தோட்டி அத்தை நலந்தானா?''

அத்தை ஜன்னல் வழியாகக் கீழே குதித்துவிட்டால் . . . எங்களைக் கிலி பற்றிக்கொள்ளும்.

''போடா, போ! நச்சரவம்! என் வழிக்கு வராதே, என் வாயிலே விழாதே! செருப்புக் காலாலேயே நசுக்கிவிடுவேன் நசுக்கி! அந்தக் கிழக்கோட்டான் உள்ளே உட்கார்ந்துகொண்டு குஞ்சு குளுவான்களுக்கெல்லாம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருக்கிறானாக்கும்! முகலாயனுக்குப் பிறந்தவன் என்றால், எதிரே வந்து பேசச் சொல்...''

''ஏ ரஹ்மான் அண்ணே! ஏ ரஹ்மான் அண்ணே! இந்த வெறிபிடித்த நாய்க்கு ஏன் விஷம் வைக்கமாட்டேன் என்கிறாய்?''

அப்பா சொல்லிக் கொடுப்பதைக் கடைக்குட்டித்|தம்பி பயந்து பயந்தே கூறுவான். பார்க்கப் போனால் அவன் பயப்படத் தேவையில்லை. ஏனென்றால், எல்லாருக்குமே தெரியும், குரல் மட்டுந்தான் அவனுடையது, சொல் அத்தனையும் அப்பாவுடையது என்று! அதனால் பாவம் சீவம் எல்லாம் தம்பியைத் தீண்டாது. அவன் உயிருக்கு உலை வைக்காது. இருந்தாலும் அப்பாவைப்போலவே இருக்கிற அத்தைக்கு எதிராக ஒன்று கூறும்பொழுது யாருக்குமே வேர்த்து விறுவிறுக்கவே செய்தது.

எங்கள் அப்பாவைப் பெற்ற தாத்தா வீட்டாருக்கும், அம்மாவைப் பெற்ற தாத்தா வீட்டாருக்கும் இடையில்தான் எத்தனை பெரிய வித்தியாசம், மலையையும் மடுவையும்போல! மண்ணையும் வானையும்போல! அம்மாவைப் பெற்ற தாத்தா வீடு ஹகீம்களின் தெருவில் இருந்தது. அப்பாவைப் பெற்ற தாத்தா வீடு வண்டிக்காரர்கள் வாழும் பகுதியில் இருந்தது. தாயைப் பெற்ற தாத்தா வீட்டார்கள் நல்லிதயம் கொண்ட சிஷ்தீ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். முகலாய மன்னர்கள் அவர்களுக்கு முர்ஷித் (குருமார்) பட்டம் கொடுத்து முக்தி வழியை உணர்ந்தார்கள். இந்தியாவில் குடியேறி எத்தனையோ காலம் ஓடி விட்டது. பழைய பெருமை மங்கிவிட்டது. மூக்கும் விழியும் கூட மாறிப்போய் மென்மையடைந்துவிட்டன. இயல்புகள் 'கூடத் தணிந்துவிட்டன.

தந்தையைப் பெற்ற தாத்தா வீட்டார்களோ எல்லாருக்கும் கடைசிக் கூட்டத்தோடு வந்தவர்கள். மனத்தளவில் அவர்கள் தங்களை இன்னும் குதிரை சவாரி செய்பவர்களாகவே எண்ணிக்கொண்டிருந்தார்கள். இரத்தத்தில் எரிமலைக் குழம்பு ஓடிக்கொண்டிருந்தது. நிமிர்த்திப் பிடித்த வாளைப் போன்ற உருவம், நிறம். சிவந்த பறங்கியர்களைப் போன்ற முகம். கொரில்லாக்களைப் போன்று வாட்டசாட்டமான உடல். சிங்கத்தைப் போன்று கர்ஜிக்கும் குரல்! பலகை பலகையாகக் கைகால்கள்!

தாயைப் பெற்ற தாய்வீட்டார்களோ மென்மையான கை கால்கள் படைத்தவர்கள். கவியுள்ளம் படைத்தவர்கள். இனிமையும் மென்மையும் குழையும் குரலில் பேசுபவர்கள்.

பெரும்பாலானவர்கள் ஹகீம், ஆலிம், மௌல்வியாக இருந்த வர்கள். அதாவது வைத்தியர், ஆசிரியர், மத குருவாக வாழ்ந்தவர்கள். தெருவுக்குப் பெயரே ஹகீம்களின் தெரு என்று ஆகிவிட்டது. சிலர் தொழில், வியாபாரத்தில் அக்கறை எடுத்துக் கொண்டு அதில் பங்குகொண்டவர்கள். சால்வைகள், துணி மணிகள், பொன்—வெள்ளி போன்ற வியாபாரங்களில் ஈடுபட்டிருந்தார்கள். அத்தர் மருந்து போன்ற பொருள்கள் விற்போரும் உண்டு. தந்தையைப் பெற்ற தாத்தா வீட்டார்கள் இப்படிப்பட்டவர்களைக் கறிகாய் வியாபாரிகள், கசாப்புக் கடைக்காரர்கள் என்றே கூறிவந்தனர். ஏனென்றால் அவர்கள் பெரும்பாலும் இராணுவத்தில் சேர்ந்திருந்தார்கள். அடி தடியில் உள்ள ஆர்வம் அவர்களுக்கு இன்னும் அடங்கியபாடில்லை. குத்துச் சண்டை, குஸ்திச் சண்டை, கத்தி வீசுவது, சிலம்பம் பழகுவது, தண்டால் எடுப்பது போன்ற பயில்வானின் தொழில் களில் அதிக நாட்டம் காட்டினர். எங்கள் தாயைப் பெற்ற தாத்தா வீட்டார்களுக்குத் தாயக்கட்டம், வெட்டுப்புலி, பதினைந்து புள்ளிக்கட்டம் இவற்றில் ஈடுபாடு அதிகம். அதெல் லாம் ஆண்மையற்ற அலிகளின் விளையாட்டு என்பது இவர்கள் எண்ணம்.

எரிமலை வெடித்தால் தீக்குழம்பு, பள்ளத்தாக்கில் பெருகி வழியும் என்பார்கள். எங்கள் தந்தையைப் பெற்ற தாத்தா வீட்டார்கள், தாயைப் பெற்ற தாத்தா வீட்டார்களிடம் தங்களுக்குத் தாங்களே ஈர்க்கப்பட்டு வந்ததற்குக் காரணம் ஒரு வேளை இதுதானோ என்னவோ? மேட்டிலிருந்து பள்ளத்துக்குப் பாய்வதுதானே நீரின் இயல்புகூட! இந்த இணைப்பை யார் எப்போது ஏற்படுத்தினார்கள் என்பது வம்ச விருட்சத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் எனக்குச் சரியாக நினைவு இல்லை. என் தாத்தா இந்தியாவில் பிறக்கவில்லை. பாட்டிகள்கூட அதே வம்சத்தைச் சேர்ந்தவர்கள்தான். ஆனால் ஒரு சிறு தங்கை மட்டும் கல்யாணம் ஆகாமல் இருந்தாள். அவளை ஏன்தான் ஷேக்குகளின் குடும்பத்தில் கட்டிக்கொடுத்தார்களோ, தெரி யாது. ஒருவேளை எங்க அம்மாவுக்கு அப்பாவைப் பெற்ற தாத்தா, எனக்கு அப்பாவைப் பெற்ற தாத்தாவின் மேலே ஏதாவது மந்திரம் கிந்திரம் போட்டிருக்கலாம். அவர் தம் சகோதரி பாதுஷாஹீ அத்தை சொல்வதுபோல் கறிகாய்க் கடைக்காரனுக்கோ கசாப்புக் கடைக்காரனுக்கோ கொடுத்

திருக்கலாம். இறந்துபோன தன் கணவனைத் திட்டும்போ தெல்லாம், அவள் தன் தந்தைக்குப் புதைகுழியில் நிம்மதியே ஏற்படக்கூடாது என்று சாபம் கொடுப்பாள். அவர் தாம் சுக்தாயி குடும்பத்தின் பரம்பரைப் பெருமைக்குக் குழி தோண்டிப் புதைத்தவர் என்பது அவள் எண்ணம்.

என் சித்திக்கு மூன்று சகோதரர்கள் இருந்தார்கள். எங்கள் பெரியப்பா, எங்கள் அப்பா, எங்கள் சிற்றப்பா! முதல் இருவரும் அவளைவிடப் பெரியவர்கள். சிற்றப்பா எல்லாருக்கும் சின்னவர். மூன்று சகோதரர்களுக்கும் அருமந்தத் தங்கை அவள் ஒருத்தி தான். அவள் மிகவும் பிடிவாதக்காரி; முன் கோபக்காரி. அவள் அண்ணன்—தம்பி மூவர்மீதும் அதிகாரம் செலுத்து வாள். சண்டை மூட்டிவிட்டு வேடிக்கை பார்ப்பாள். பெய ருக்குத்தான் பெண் பிள்ளையே ஒழிய ஆண் பிள்ளையாக வளர்ந் தவள். குதிரைச் சவாரி, அம்பு வித்தை, வாள் வித்தை, வேல் வித்தை எல்லாமே அவளுக்குப் பழக்கம் உண்டு. உடல் பருத்துப் பூதாகாரமாகத் தோன்றினாலும் நடக்கும்போது பயில்வான் களைப்போல் மார்பு நிமிர்த்தியே நடப்பாள். மார்பும் என்ன, நாலு பெண்கள் அளவுக்கு இருந்தது!

அப்பா வேடிக்கையாக அம்மாவைக் கிளறுவார்:

''பாதுஷாஹீ பேகத்தோடு குஸ்தி போடுகிறாயா?''

''ஐயோடி!'' அறிவாற்றல் மிகுந்த ஆலிம் ஃபாஜிலின் மகள் எங்கள் அம்மா. காதுகளை இரு கைகளாலும் பொத்திக் கொண்டே கூறுவாள். ஆனால் அதற்குள் அப்பா கடைக்குட்டித் தம்பிமூலம் அத்தைக்கு அறைகூவல் விட்டு விடுவார்:

''அத்தை! எங்கள் அம்மாவோடு குஸ்திக்கு வருகிறாயா?''

''ஊம், கூப்பிடு உங்கள் அம்மாவை! கை தட்டிக்கொண்டு, தொடை தட்டிக்கொண்டு வரட்டும். அவளைப் போட்டுப் புரட்டி எடுக்கவில்லை என்றால், நான் மிர்ஜா கரீம் பேகின் மகள் இல்லை! அப்பன் இரத்தம்தான் ஓடுகிறது என்றால், வரச்சொல்லு அந்த முல்லா மகளை!''

எங்கள் அம்மா லக்னோ தயாரிப்பான 'தொள தொள'ப் பைஜாமாவைச் சுருட்டிக்கொண்டு மூலையில் போய்ப் பதுங்கி உட்காருவாள்.

''ஏன், பாதுஷாஹீ அத்தை! அப்பாவழித் தாத்தாவுக்குச் சுட்டுப் போட்டால்கூடப் படிப்பு வராதாமே, அத்தனை முட்டா

ளாமே! அம்மாவழித் தாத்தாதானே அவருக்கு 'அனா ஆவன்னா' சொல்லிக் கொடுத்தார்?''

எங்கள் அப்பாவழி முப்பாட்டனுக்கு அம்மாவழித் தாத்தா எப்போதோ ஏதாவது கொஞ்சம் சொல்லிக் கொடுத்திருக்கலாமோ, என்னவோ? அப்பா அத்தையை உசுப்பிவிடுவதற்காகச் சுற்றி வளைத்து வெட்டிக்கொட்டி இப்படி ஏதாவது சொல்ல வைப்பார்!

''அந்த மூத்திரக்கட்டி மண்ணாங்கட்டியாவது, எங்கள் தாத்தாவுக்குச் சொல்லிக் கொடுக்கவாவது? அழகுதான், போ! ஏதோ கல்லறைக் காவல் புரிந்துகொண்டு நின்றது. நாங்கள் போட்ட சாய்க்கரியிலே வளர்ந்தது!'' ஸலீம் சிஷ்தீக்கும் அக்பர் பாதுஷாவுக்கும் உள்ள உறவைப் பிடித்துக்கொண்டு போடப்பட்ட கணக்கு இது! நாங்கள் அதாவது சுக்தாயி வம்சத்தினர், அக்பர் பாதுஷாவின் பரம்பரையில் வந்தவர்கள். எங்கள் அம்மா வழித் தாத்தா வீட்டுக்காரர்கள் ஸலீம் சிஷ்தீயின் வழிவந்தவர்கள். அவரைத் தாமே பாதுஷா தங்கள் குடும்பத்துக்குப் 'பீரோ முர்ஷித்' (குருமார்) ஆக ஏற்றுக்கொண்டார்.

அத்தைக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வரும். ''மண்ணாங்கட்டி! பீரோ முர்ஷிதாம், அதன் வாலாம்! விளக்குமாற்றுக் கட்டைக்குப் பட்டுக்குஞ்சலமாம்! மயானம் காத்தவனுக்குப் பெருமையைப் பாரு, பெருமையை!'' என்பாள்.

அவளுக்கு மூன்று சகோதரர்கள்; அத்தனை பேரிடமும் சண்டை. அவளுக்குக் கோபம் வந்துவிட்டால் மூன்று பேரையுமே பிய்த்துப் பிரியைக் கட்டிவிடுவாள். எல்லாருக்கும் பெரிய அண்ணா துறவியுள்ளம் கொண்டவர். பிச்சைக்காரன், பக்கிரி என்ற அடைமொழிகளால் அவருக்கு வெறுப்போடு அர்ச்சனை செய்வாள். எங்கள் அப்பாவுக்கு அரசாங்க உத்தியோகம். அவரை நன்றிகெட்ட துரோகி, ஆங்கிலேயர்கள் அடிவருடி, அடிமை என்றெல்லாம் சாடுவாள். ஏனென்றால் முகலாய சாம்ராஜ்யத்துக்கு முடிவு கட்டியவர்கள் இந்த ஆங்கிலேயர்கள் தானே? அவர்கள் இன்று அப்படிச் செய்யாவிட்டால், வெறும் பருப்புக் கஞ்சியோ கூழோ குடித்து வயிறு வளர்த்துச் செத்தொழிந்தானே ஒரு சேணியன்—அதாவது என் அத்தை புருஷன்—அவனுக்கு வாழ்க்கைப்பட்டு மாரடிக்கிறதைக் காட்டிலும் செங்கோட்டைக்குச் சிங்காரமாக ஜேபுன்னீஸாவைப்போல் ரோஜா அத்தரில் குளித்து ஏதோ ஒரு நாட்டுச் சக்கரவர்த்தியின்

பட்டத்து அரசியாக அமர்ந்திருக்கலாமே! அந்த ஆசைதான் அவளை அப்படிச் சாடவைத்தது. மூன்றும் சகோதரன், அதாவது எங்கள் சிற்றப்பா முதல் நம்பர் போக்கிரி. காவல் துறையினர், அவர் இருக்கிறாரா என்று பார்த்து ஆஜர் புத்தகத்தில் பதிவு செய்துகொண்டு போக மாஜிஸ்திரேட் வீட்டுக்கு வருவார்கள், பெரும் தொடை நடுங்கிகளாக. அவர் எத்தனையோ கொலைகள் புரிந்தவர்; கொள்ளைகள் அடித்தவர். குடி கூத்தியில் அவருக்கு இணை அவர்தாம். அத்தை அவனைக் 'கொள்ளைக்காரா' என்று தான் கூப்பிடுவாள். அவருடைய நடவடிக்கைகளை வைத்துப் பார்க்கும்போது அது வெறும் பிசுபிசுத்த பயனற்ற சொல் தான்!

ஆனால் இறந்துபோன தன் கணவனிடம் கோபம் வரும் போது அவள் பேசிய முறையே அலாதிதான். ''ஏ, கரி மூஞ்சி! நாதியற்ற அநாதை என்று என்னை எண்ணிவிடாதே! மூன்று உடன் பிறந்தவர்களுக்கு நான் ஒரே ஆசைத் தங்கை. அவர்களுக்குச் செய்தி எட்டியதோ, உனக்கு இந்த உலகமும் கிடையாது, அந்த உலகமும் கிடையாது! அப்படிப் புரட்டி எடுத்துவிடுவார்கள். வேறு ஒருவரும் வேண்டாம், சின்னவன் காதிலே விழுந்தால் போதும், கண்மூடிக் கண் திறக்கும் நேரத் தில் உன் குடலைப் பிடுங்கி உன் கையிலேயே கொடுத்துவிடுவான். அவன் பெரிய கொள்ளைக்காரன், தெரிந்துகொள்! அவனிட மிருந்து எப்படியோ தப்பினால், இரண்டாமவன் விடமாட்டான். அவன் மாஜிஸ்திரேட், உன்னைச் சிறையிலே பிடித்துப் போட்டு நாற அடித்துவிடுவான். வாழ்நாள் முழுவதும் செக்கு இழுக்க வைத்துவிடுவான். அவனிடமிருந்தும் தப்பிவிட்டதாக வைத்துக் கொள், எல்லாருக்கும் மூத்தவன் இருக்கிறானே, அவன் அல்லா வுக்கு நிரம்ப வேண்டியவன். உனக்குப் பரலோகம் கிடைக் காமல் அடித்து உன்னை மண்ணோடு மண்ணாக மடியச் செய்து விடுவான், தெரிந்துகொள். நான் முகலாயப் பெண். உன் அம்மாவைப்போல் ஷேக் இனத்துப் பெண் இல்லை!''

ஆனால் எங்கள் அத்தை புருஷனுக்கு நன்றாகத் தெரியும், மூன்று சகோதரர்களின் அநுதாபமும் அவர் பக்கந்தான் என்று! அதனால் உட்கார்ந்து சிரித்துக்கொண்டே இருப்பார். அதுவும் என்ன சிரிப்பு! இனிப்பில் விஷத்தைக் கலந்திருக்கும் விஷமச் சிரிப்பு! அதன் உதவி கொண்டுதானே என் அம்மா வீட்டார்கள்,

அப்பா வீட்டார்களைப் பல ஆண்டுகளாகப் பொசுக்கி எரித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒவ்வோர் ஈத்—பக்ரீதுக்கும் எங்கள் அப்பா, பிள்ளைகளை எல்லாம் அழைத்துக்கொண்டு ஈத்காஹ் பள்ளி வாசலிலிருந்து நேரே அத்தையம்மா வீட்டுக்கு வசவும் திட்டும் வாங்கிக் கட்டிக் கொண்டு வரப் போவார். அவள் உடனே அறைக்குள் ஓடி ஒளிந்து கொள்ளுவாள். அங்கிருந்தபடியே எங்கள் மாயமந்திரக் காரி அம்மாவையும், கொள்ளைக்கார மாமாக்களையும் திட்டித் தீர்ப்பாள். இதற்கிடையில், மறக்காமல் வேலைக்காரன் கையில் சேவை கொடுத்து அனுப்புவாள். ஆனால் பக்கத்து வீட்டி லிருந்து வந்தது என்று ஏனோ பொய் சொல்லுவாள்.

''இதில் விஷம் கிஷம் கலக்கவில்லையே?'' அத்தையைக் கிண்டி விட்டு வேடிக்கைப் பார்ப்பதற்காக அப்பா இப்படி ஒரு கேள்வி யைத் தூக்கிப் போடுவார். தாய் வீட்டுக் குப்பை கூளங்களை உதறிப் போட்டு அத்தையை மூச்சுத் திணற அடித்துவிடுவார்.

சேவை சாப்பிட்டபின் அப்பா அத்தைக்கு ஈத் பணம் கொடுப் பார். அத்தை அதைத் தரையில் விட்டெறிந்து, ''உன் மைத்துனன்மார்களுக்குக் கொடு. அவர்கள்தான் உன் ரொட்டி தின்று வளர்ந்தவர்கள்!'' என்பாள்.

அப்பா பேசாமல் திரும்பிவிடுவார். இருந்தாலும் அவருக்குத் தெரியும், பாதுஷாஹீ அத்தை அவர்கள் போனபின் அந்த ரூபாய்களை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு மணிக் கணக்கில் அழுதுகொண் டிருப்பாள் என்று! அண்ணாவின் குழந்தைகளை மறைவில் அழைத்து அத்தையும் ஈத் பரிசு தந்தே அனுப்புவாள், ஓர் எச்சரிக்கையுடன்!

''அடே பாவிப் பசங்களா! அப்பா அம்மாவுக்குச் சொன்னால் தெரியுமா சேதி? சதையைத் துண்டு துண்டாக வெட்டி நாய்க்குப் போட்டுவிடுவேன்!''

பையன்களுக்கு ஈத் பரிசாக எத்தனை கிடைத்தது என்று அப்பா அம்மாவுக்குத் தெரியாமற்போகாது. எந்த ஈத் பண்டிகையின்போதாவது, ஏதாவது காரணத்தினால், அப்பா, அத்தை வீட்டுக்குப் போகமுடியாமற் போய்விட்டால், அழைப் புக்குமேல் அழைப்பாக வரும்.

''நுஸ்ரத் கானம் விதவையாகிவிட்டாளா? நல்லதாகப் போயிற்று. என் மனசு இப்பொழுதுதான் குளிர்ந்தது!''

தனக்கு நிம்மதி ஏற்பட்டுவிட்டாற்போல் பேசுபவளுக்கு நிம்மதியே ஏற்படாது. தூதுக்குமேல் தூதாக அனுப்புவாள். கடைசியில், அவளே ரஹ்மான் அண்ணனின் வீட்டுக்கு வந்து உட்கார்ந்துகொண்டு வெளியில் தலை நீட்ட முடியாமல் வசை மாரி பொழிந்து தீர்ப்பாள்.

ஒரு நாள் ஈத் பணியாரத்தைச் சாப்பிட்டுக்கொண் டிருந்த போது, ஏதோ சூட்டினுல் அப்பாவுக்கு வயிற்றைப் புரட்டியது. வாந்தியும் எடுத்துவிட்டார்.

''ஏ பாதுஷாஹீ கானம்! சொன்னது கேட்டதையெல்லாம் மன்னித்துவிடு! நான் செத்தேன்!'' அப்பா கரகரத்த குரலில் ஓலமிட்டார். அத்தை செய்யும் வகை ஏதும் அறியாமல் முகத் திரையையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு மார்பில் அடித்துக் கொண்டே அப்பாவிடம் ஓடிவந்தாள். அப்பா குறும்பாகச் சிரிப்பதைக் கண்டதும், வந்த அதே வேகத்தில் வைதுகொண்டே திரும்பிவிட்டாள்.

''நீ ஓடோடி வந்ததனுலே, பாதுஷாஹீ கானம், மரணதேவன் மிரண்டுபோய் ஓடிவிட்டான்! இல்லாவிட்டால் இன்று நான் தீர்ந்திருக்க வேண்டியவன்தான்!'' என்றுர் அப்பா.

அத்தை திட்டிய திட்டுக்கள் எத்தனை என்று கணக்கிட்டுக் கூற முடியாது. அண்ணனுக்கு ஆபத்து எதுவும் இல்லை என்பதை உறுதியாக அறிந்ததும், ''அப்பா மனசு வைத்தால், தலையிலே இடி விழும்! சாக்கடையில் விழுந்து உயிரைவிடுவாய்! உன் சவத்துக்குத் தோள் கொடுக்க ஒருத்தன்கூட உயிரோடு இருக்க மாட்டான்!'' என்று பலவாறு அடுக்கினுள், பிடி, சாபம் என்பதுபோல.

அப்பா அவளுடைய கோபத் தீயை இன்னும் வளர்க்கவேண்டி இரண்டு ரூபாய் அனுப்பி வைத்தார்.

''நம் குப்பத்துத் தோட்டிச்சிகள் திட்டினுல் அவர்களுக்கு ஏதாவது இனும் தரவேண்டுமே!''

அத்தை வருகிற ஆத்திரத்தில் கூறிவிடுவாள், ''பேஷாக இனும் கொடு, உன் அம்மாவுக்கும் சகோதரிகளுக்கும்!'' என்று! அப்புறம் வாய் தவறி வந்ததற்காகத் தன் முகத்தில் அடித்துக் கொள்ளுவாள், தனக்குத்தானே சொல்லிக்கொள்ளுவாள்: ''அடியே! அடி மாண்டு போகிற பாதுஷாஹீ! உன் முகத்தில்

நீயே கரியைப் பூசிக்கொள்ளுகிறுயேடி! உன் சாவை நீயே வரவழைத்துக் கொள்ளுகிறுயேடி!''

அத்தைக்கு உண்மையில் யாரிடமாவது பகை என்றுல், அது அண்ணனிடந்தான். அண்ணன் பெயரைக் கேட்டாலே அவ ளுக்கு ஆத்திரம் நெருப்பாகப் பற்றிக்கொண்டு வரும். அப்பா வராமல் அம்மாவை மட்டும் எங்கேயாவது பார்த்துவிட்டால், ஆரத் தழுவி அன்பு செலுத்துவாள். 'நச்சோ, நச்சோ!' என்று அடிக்கொருதரம் ஆசையோடு கூப்பிடுவாள். 'குழந்தை கள் நலமா?' என்று நலம் விசாரிப்பாள். அந்த நேரத்துக்கு அவளுக்கு மறந்தே போய்விடும், இந்தக் குழந்தைகள் அனைத்தும் சாதிகெட்ட அதே அண்ணனுடையதுதான் என்பது! பிறந்த நாள் முதல் அவனை எப்படிக் கரித்துக் கொட்டித் திட்டிக் கொண்டிருக்கிறுள்? கடைசி மூச்சுவரை திட்டித் தீர்ப்பது என்று உறுதிகொண்டிருக்கிறுள். என்ன வேடிக்கையோ இது! அண்ணன் வேண்டியிருக்கவில்லை; ஆனுல் அவன் குழந்தைகள் வேண்டியிருக்கின்றன.

அம்மா, அத்தைக்கு உறவு முறையில் அண்ணன் மகள்கூட. என்ன குழப்பமோ தாய்வழி—தந்தைவழி உறவிலே என் அம்மாவுக்கு நானே தங்கையாகவும்கூட ஆனேன். இந்த மாதிரி உறவு பார்க்கப் போனுல் என் அப்பா, எனக்குத் தமக்கை புருஷ னும் ஆனுர். என் தந்தைவழியினருக்கு, என் தாய்வழியினர் கொடுத்த துயரங்கள் கொஞ்சமா, நஞ்சமா? என் அத்தை பெண் மஸ்ஸரத் கானம் எங்கள் ஜபர் மாமாவிடம் உள்ளத்தைப் பறி கொடுத்தபோது படு அனர்த்தமாகிவிட்டது.

என் அம்மாவுக்குத் தந்தைவழிப் பாட்டி—அதாவது அப்பா வுக்கு அத்தை கடைசி நாட்களை எண்ணிக்கொண் டிருந்த போது, அவளைக் கவனிப்பதற்காக இருதரப்பு ஜனங்களும் கூடினர். எங்கள் மாமாவும் தன் தந்தைவழிப் பாட்டியைக் காண்பதற்காகப் போனுர். மஸ்ஸரத் கானமும் தன் அம்மா வுடன் அவள் அத்தையைப் பார்ப்பதற்காக வந்து சேர்ந்தாள்.

பாதுஷாஹீ அத்தையைப் பொறுத்தவரையில், அவளுக்கு அச்சமோ ஐயமோ தலையெடுக்கவில்லை. எனது தாய்வழி வீட்டார் விஷயத்தில் அவள் தன் குழந்தைகளின் உள்ளத்தில் எடுக்க எடுக்கக் குறையாத வெறுப்பைக் கிட்டித்து நிரப்பியிருந் தாள். எனவேதான் அத்தனை உறுதி. அதோடு பதினைந்து

வயதுகூட நிரம்பாத மஸ்ஸரத் கானத்துக்கு அப்படி என்ன பிரமாத வயது? இன்னுங்கூட அம்மாவின் மடியில்தான் படுத்திருந்தாள். அதனுல் அவளுக்குத் தான் பால் குடிக்கிற குழந்தையாகத்தான் தோன்றியது.

என் மாமா தனது இனிக்கும் கருந்திராக்ஷை விழிகளால் மஸ்ஸரத் ஜஹானின் துடி இடை உடலைத் தலையிலிருந்து கால்வரை அளந்தபோது, அவள் நின்றது நின்றபடியே மெய்ச் சிலிர்த்துவிட்டாள்.

நாள் முழுவதும் வயதிற் பெரியவர்கள் நோயாளிக்குப் பணிவிடை புரிந்து அலுத்துச் சலித்து உறங்கிவிட்டால், அந்தப் பணியை இளம் உள்ளங்கள் அலுத்துச் சலித்துக்கொள்ளாமல் ஏற்றன. பெரியவர்களுக்கு அடங்கிய பிள்ளைகள் என்று பெயரும் பெற்றன. இருவரும் நோயாளியின் தலைமாட்டில் உட்கார்ந்து கண்கொட்டாமல் பார்த்துக்கொள்வார்கள். நோயாளியை அல்ல; தங்களைத்தானே? மஸ்ஸரத் ஜஹான் பனிக்கட்டியில் நனைத்த துணியை பெரிய அத்தையின் நெற்றியில் மாற்றிப் போடுவதற்காகக் கையை நீட்டுவாள். ஜபர் மாமாவின் கை அவளுக்கு முன்னடியே அங்கு நிற்கும். காதும் காதும் வைத்தாற் போலக் கண்ணும் கையும் பணியா விடை புரிந்த நேரத்திலே . . .

மறுநாள் பெரிய அத்தை பட்டென்று கண்களைத் திறந்துவிட்டாள். எப்படியோ சிரமப்பட்டுக் களைப்பையும் நடுக்கத்தையும் பொருட்படுத்தாமல் தலையணையின் உதவிகொண்டு எழுந்து உட்கார்ந்தாள். உட்கார்ந்ததும் குடும்பத்துக்குப் பொறுப்பானவர்களைக் கூப்பிட்டாள். எல்லாரும் கூடியதும், ''காஜியைக் கூப்பிடு!'' என்ருள்.

கிழவி காஜியை ஏன் கூப்பிடச் சொல்லுகிருள்? கடைசிக் காலத்தில் கல்யாணம் செய்துகொள்ளப் போகிருளா? புரியாமல் விழித்தனர். ஆனுல், யாருக்கும் மூச்சுப் பிரியத் துணிவில்லை.

''இரண்டு பேருக்கும் 'நிகாஹ்' படித்து வை!''

எந்த இரண்டு பேருக்கும்? கூடியிருந்தவர்களுக்குத் தலையைச் சுற்றியது. ஆனுல், இங்கே மஸ்ஸரத் ஜஹான் மூர்ச்சையுற்றுப் பட்டென்று கீழே விழுந்தாள். அங்கே ஜபர் மாமா பைத்தியம் பிடித்தாற்போல் எழுந்து வெளியே ஓடினுர். திருடர்கள் பிடிபட்டனர். 'நிகாஹ்' நிறைவேறிவிட்டது. பாதுஷாஹீ அத்தை திக்பிரமை பிடித்தவள்போல் வாய் அடைத்துப் போனுள்.

பயங்கரமாக எதுவும் நடந்துவிடவில்லை. இரண்டு பேரும் கைகளைத்தான் பிடித்திருந்தார்கள் என்றாலும், பெரிய அத்தைக்கு அதுவே பெரிதாக இருந்தது. பிடித்த கையைப் பிடித்து இணைத்துவிட்டாள்.

பாதுஷாஹீ அத்தைக்கு ஏற்பட்ட வீராவேசத்திலே குதிரை இல்லாமலே குதிரை ஏறினாள். வாள் இல்லாமலே வீரப்போர் புரிந்து பிணங்களுக்குமேல் பிணங்களாகக் குவித்துத் தள்ளினாள். நின்ற இடத்திலிருந்தே பெண்ணையும் மருமகனையும் விரட்டி யடித்துவிட்டாள். வேறு வழியின்றி அப்பா, மணமக்களைத் தம் வீட்டுக்கு அழைத்துவந்தார். அம்மா சந்திரனைப் பழிக்கும் அண்ணியைக் கண்டு அகமகிழ்ந்து போனாள். வெகு விமரிசை யாகச் சாந்தி இரவு முடிந்து 'வலீமா' விருந்து வைக்கப் பட்டது.

பாதுஷாஹீ அத்தை அன்று முதல் பெரிய அத்தையின் முகத் தைப் பார்க்கவில்லை. அண்ணாேடுகூடப் 'பர்தா' முறை யைக் கடைப்பிடித்தாள். கணவனோடுதான் அடிநாளிலிருந்தே ஒத்துக்கொள்ளவில்லை. உலகத்தினிடமே முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ஒரே ஒரு விஷயந்தான் அவள் மனத்திலும் மூளை யிலும் விர்ரென்று ஏறிக்கொண்டே போயிற்று. வாழ்க்கையே பாம்பாகிப் படம் எடுத்துக் கடிக்கலாயிற்று.

''அந்தக் கிழம் தன் பேரனுக்கு என் பெண்ணை முடித்துப் போடுவதற்காக வலை விரித்து நாடகமாடிவிட்டதே!''

எப்போது பார்த்தாலும் இதையே சொல்லிக்கொண்டிருந் தாள் அத்தை. ஏனென்றால், இந்த நிகழ்ச்சிக்குப் பின் கிழவி உண்மையில் இருபது ஆண்டுகள் உயிரோடு இருந்தாள். அத்தை சொல்வது சரிதானோ, என்னவோ? யாருக்குத் தெரியும்?

சாகிற அளவுக்கும் அண்ணன் தங்கையிடம் ஒற்றுமையே ஏற்படவில்லை.

அப்பாவை நான்காவது முறையாகப் பாரிச வாயு தாக்கியது. இந்தத் தடவை ஆளை உயிரோடு விட்டு வைக்காது என்று தோன்றவே, அப்பா பாதுஷாஹீ அத்தைக்குச் சொல்லி அனுப்பினார்:

''பாதுஷாஹீ கானம்! என் இறுதி நாள் நெருங்கிவிட்டது. உள்ளத்து ஆசையை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்றால், உடனே புறப்பட்டு வா!''

அந்தச் செய்தியில் என்ன அம்பு எங்கு ஒளிந்திருந்ததோ? அண்ணு விட்ட அந்தச் சொல் அம்பு, தங்கையின் உள்ளத்தில் தராசு முள்ளெனத் தைத்துக் கொக்கிப் போட்டு இழுத்து விட்டது. தளர்ந்த தன் மார்பில் 'பொட்டுப் பொட்டு' என்று போட்டுக்கொண்டு, வெள்ளை மலை ஒன்று பூகம்பத்தில் பறந்து வருகிறுற்போல், பாதுஷாஹீ கானம் வந்துசேர்ந்தாள். பல்லாண்டுகளாகப் படி ஏருத கால்கள் இன்று ஏறி வந்தன.

''பாதுஷாஹீ! உன் ஆசீர்வாதம் நிறைவேறுகிறது!'' அத்தனை கஷ்டத்திலும் அப்பா சிரித்தார். அவருடைய கண்களில் அதே இளமை பளிச்சிட்டது.

பாதுஷாஹீ அத்தை அத்தனை நரையிலும் அவருக்குச் சின்னஞ் சிறு 'பச்சோ'வாகத்தான் தோன்றினுள். பிள்ளைப் பருவத்தில் முறண்டு பிடித்துத் தன் சொல்லையே நிறைவேற்றிக்கொண்டவளாயிற்றே! சிங்கத்தை நிகர்த்த அவளது பொல்லாக் கண்கள் ஆட்டுக்குட்டியின் பேதை விழிகளைப்போலப் பயந்து கலங்கிப் போயிருந்தன. பெரிய பெரிய கண்ணீர்த் துளிகளாக அவளது சலவைக்கல் போன்ற கன்னங்களில் வழிந்துகொண் டிருந்தன.

''என்னைத் திட்டு, பச்சோக் கண்ணு!'' அப்பா அன்போடு கூறினுர். என் அம்மாவும் விசித்தவாறே பாதுஷாஹீ சித்தியிடம் வசவுப் பிச்சைக்குக் கையேந்தி நின்றாள்.

''யா அல்லாஹ்! யா அல்லாஹ்!'' அவள் கர்ஜனை புரியத்தான் நினைத்தாள். ஆனுல் நடுநடுங்கிப் போனுள். ''யா—யா—யா—அல்லாஹ்! என் வயதை என் அண்ணனுக்குக் கொடேன். யா—மௌலா! என் தெய்வமே! ரசூலே! எனக்குப் பிச்சை . . .'' பாடம் நினைவுக்கு வராத குழந்தையைப்போல் எரிந்து விழுந்து அழத் தொடங்கிவிட்டாள்.

எல்லாருடைய முகங்களும் வெளிறிவிட்டன. அப்பாவின் கால்கள் உணர்வற்று ஒய்ந்து தொய்ந்தன. ஆண்டவனே! இன்று ஏன் அத்தையின் வாயிலிருந்து அண்ணனுக்கு ஒரு வசவு கூடக் கிட்டவில்லை?

அவள் வசவுகளைக் கேட்டு என்றும் சிரிப்பதுபோல், அப்பா அன்றும் சிரித்துக்கொண் டிருந்தார்!

உண்மை! உடன்பிறந்தவளின் திட்டுகள் உடன்பிறந்தவர்களைப் பாதிப்பதில்லை! அவை அன்னையின் பாலில் ஊறியவை.